صدقہ فطر

லயம் தப்பிய இதயம்

நகரத்திற்கு தொலைவில் ஆளரவமில்லாத இடம். டும் பள்ளமுமாய் கரடுமுரடாய் இருந்த மையப் பகுதி லிருந்து ஒரு மண்சாலை சம தளமாய் இருந்த லையை நோக்கி நீண்டு போயிற்று. ஊரெல்லையாய் ந்ததாலும் அங்கிருந்து நேஷனல் ஹைவே தொலை இருந்ததாலும் ஜனசஞ்சாரமே இல்லை.

த்த பரந்த வெளியில் வேகமாய் வீசிக் கொண்டிருந்த று விர்ரென்ற ஓசையுடன் மண்சாலையில் இருந்த யை ஒரேயடியாய் கிளப்பிவிட்டு, அலை அலையாய் ந்து சேர்ந்து மறைந்தது. காற்றின் அழைப்பிற்கு ரம் கனவுகளுடன்- கோடானுகோடி ஆசைகளுடன் தோஷமாய் பறந்த மண், அந்த வேகத்தைப் பிடிக்க யாமல் தன் ஆசைகளைத் தூண்டிவிட்டு தையின்றி ாய் மறைந்துவிட்ட காற்றைப் பார்த்து நிராசையுடன் ல்லாச் சிதறிப் போய் செய்வதறியாது மெல்ல பூமியில் ந்தன. அங்கிருந்த மரங்களும், கற்களும், பூண்டு நிசப்தமாய் இக்காட்சியைப் பார்த்துக் கொண்டு தன.

அச்சமயத்தில் எங்கிருந்தோ தொலை தூரத்திலிருந்து ங்கற்கள் 'பட் பட்' என்று உடைந்த சப்தம் கள் அதிரும்படியாய் கேட்டது. தன்னை டைனமேட்

லைத்துப் பிளந்ததால் இயற்கையே அலறிய அலறல்
ாய் இருந்தது அந்த ஓசை! திரும்பவும் எங்கும் நி
இந்த உலகத்தில் அதுபோல எத்தனை குரல்க
தடலை ஆதரவில்லாமல் கத்திவிட்டு, தமக்கு நீதி கி
காது, இனி லாபமில்லை என்று தெரிந்து மௌன
இருந்து கொண்டிருக்கின்றனவோ?

ஒரு வினாடி காற்றும் ஸ்தம்பித்துப் போய்,
குறும்புத்தனத்தையும் வேகத்தையும் நிறுத்தி
மௌனமாய் இருந்தது. கொஞ்ச நேரம் நின்றுவிட்
திரும்பவும் தன் ஓசையையும் வேகத்தையுட
கொண்டது. அங்கிருந்த மரங்களையும் புதர்களை
தாக்கிவிட்டு, கிச்சுக்கிச்சு மூட்டினாற்போல் குறு
தனத்தைத் தொடங்கி விட்டது.

காதலன் கையைக் கன்னத்தில் தட்டியதுமே உட
புல்லரித்துப் போன பெண்ணைப் போல, ஒரு கூ
செடியின் மலர்கள் லேசான நடுக்கத்துடன் அ
தாடின. அங்கிருந்த சூழ்நிலை இது இயற்கை
ஏகாந்தமான இடம் என்று எடுத்துக்காட்டுவ
போலிருந்தது.

அதற்குள் தொலைவிலிருந்து மெல்ல சப்தம் கேட்ட
பர்...ர்...ர்... என்று நெருங்கி வந்து கொண்டி
இஞ்ஜின ஓசை. தொலைவில் புள்ளியைப் போ
தெனபட்டு, உயரமான இடத்திலிருந்து மெல்ல கீ
இறக்கத்தை நோக்கி காதுகளைப் பிளக்கும்படி
சப்தத்துடன வந்து கொண்டிருந்த அந்த சப்தம்—
ஸ்கூட்டருடையது!

ஸ்கூட்டரின் மீது ஒரு இருபது வயதுப் பெ
உட்கார்ந்திருந்தாள். ஜீன்ஸ் உடுத்திக் கொ
வெள்ளை நிறத்தில் டாப்ஸ் போட்டுக் கொண்டு, கு
யாய் கத்தரித்து விட்டுக் கொண்டிருந்த கூந்தலை
சேர்த்துக் கட்டிக் கொண்டிருந்தாள். முகத்திற்கு
நிறத்தில் கூலிங் கிளாஸ்கள்.

மேடும் பள்ளமுமாய் இருந்த சாலையில் வந்து
கொண்டிருந்த போதிலும் வாகனத்தின் வேகத்
குறைக்காத அவள் தோரணையை பார்த்தால் ஓ
ஓட்டுவதில் அவளுக்கிருந்த திறமை நன்கு புலப்பட்டது.
குண்டுங் குழியுமான வழிகளைப் பற்றிச் சற்றும் லட்சியம்
பண்ணாமல் அப்படியும் இப்படியும் வாகனத்தைத்
திருப்பிக் கொண்டே வந்து கொண்டிருந்த அந்தப்
பெண்ணிற்கு இந்த உலகத்தில் 'ஜாக்கிரதை' என்ற
பதத்தின் பேரில் நம்பிக்கை இருந்ததாய் தோன்றவில்லை.
அதற்குள் அவள் சொன்னதைக் கேட்டுக் கொண்டே
விசுவாசமான நாயைப் போல வந்து கொண்டிருந்த
அந்த ஸ்கூட்டருக்கு என்னவாயிற்றோ தெரியாது—
வலியோடு வீலென்று அலறினாற் போல பட்பட் என்ற
ஓசையை எழுப்பிவிட்டு நின்று போய் விட்டது.

அப்பெண் ஸ்கூட்டரை விட்டு இறங்கி பரிசோதித்து
விட்டு, சரிபண்ணி ஸ்டார்ட் பண்ணப் போனாள்.
கர்...ர்...ரென்று முனகிற்றே தவிர ஸ்கூட்டர் நகரவில்லை.
அவள் ஒரு முறை சுற்றிலும் பார்த்தாள். லாபமில்லை.
ற்றுப்புறத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஜன
நடமாட்டமே இல்லை. ஹைவேக்குப் போக வேண்டு
மென்றாலும் இரண்டு மூன்று கிலோ மீட்டர் தூரம்.
தும்பி தந்தை இருந்த கற்களைப் பிளக்கும் க்வாரியிடம்
போய்ச் சேர வேண்டுமானால் மூன்று கிலோ மீட்டர்கள்
நடந்தள்ளிக் கொண்டு போக வேண்டும். வெயில்
கரமாய் இருந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டே
வினாடி என்ன செய்வது என்று புரியாமல் யோசனை
டன் பார்த்தாள்.

காற்று ஊளை சப்தமிட்டுக் கொண்டிருந்தது. அவள்
சங்கள் காற்றிற்கு அலைப்புண்டன. ஸ்கூட்டர் மீது
யை வைத்துக் கொண்டு, ஒற்றைக்காலில் உடம்பின்
லையெல்லாம் சுமந்து நின்றபடி, இடுப்பில் ஒரு
யை வைத்துக் கொண்டு திரும்பவும் சுற்றுமுற்றும்

பார்த்தாள். கொஞ்சமும் நம்பிக்கை பிறக்கவில்லை. தந்தை இன்னும் மூன்று நான்கு மணி நேரங்கழித்துதான் இந்தப் பக்கம் வருவார். அதுவரை தன் கதி என்ன? யாராவது புண்ணியவான்கள் இந்தப் பக்கமாய் வந்தால் தான் உண்டு. அதுவரை இந்த வனவாசந்தானா? என்றெண்ணிக் கொண்டாள் காலையில் தாய் மீது கோபித்துக் கொண்டு சிற்றுண்டி கூட சாப்பிடாமல் வந்து விட்டாள். பசிவேறு வயிற்றைக் குடைந்து கொண்டிருந்தது. இப்பொழுது என்ன பண்ணுவது? தாகமும் எடுத்தது. இப்பகுதியிலோ குன்றுகளையும் குட்டைகளையும், கற்களையும் புதர்களையும் தவிர வேறெதுவும் இல்லை.

அப்பெண்ணிற்கு அந்த நிசப்தம் என்னவோ செய்தது. காலையில் எழுந்ததுமே தாய் வேலையாட்களை கடிந்து கொள்ளும் கூச்சல்கள், ரேடியோ சப்தம், நாய்களின் குரைப்புக்கள், கல் லாரியில் கிளாஸ்மேட்டுகளின் சிரிப்புக்கள், தெருக்களில் வாகனங்களின் இரைச்சல்கள் இவற்றிற்கிடையே பழக்கப்பட்டிருந்த அவளுக்கு இவ்வளவு நிசப்தத்தை பார்ப்பது இதுதான் முதலை.

அந்த நிசப்தம் மெல்ல மெல்ல அவள் இதயத்தை பயத்தைத் தோற்றுவிக்கத் தொடங்கிற்று.

இங்கே இந்தச் சமயத்தில் யாராவது திருடர்கள் வந்து விட்டால்?

தன் உடம்பிலிருந்த ஆபரணங்களை ஒரு முறை பார்த்துக் கொண்டாள். காதுகளில் வளையங்களையும் கழுத்தில் மெல்லிய சங்கிலியையும் தவிர வேறில்லை. நகைகளைப் பற்றி அவளுக்குக் கவலையில்லை. கேட்டதுமே கழற்றிக் கொடுத்து விடுவாள். அவை போய் விட்டாலும் அவளுக்குக் கலையில்லை. தாயின் [illegible] நான்கு பேங்குகளில் நான்கு லாக்கர்கள் நிறைய [illegible]

[illegible]ம்பி வழிந்து கொண்டிருக்கின்றன. அவளுக்கு அந்தக் [illegible]னிமையும் நிசப்தமும் வெறுப்பைத் தோற்றுவித்துக் [illegible]காண்டிருந்தன.

இங்கே நிற்பதைவிட நடப்பதே மேல் என்று தோன்[illegible]ற்று. திரும்பவும் ஒருமுறை ஸ்கூட்டரை சரிபண்ணைக் [illegible]னித்தாள். அதற்குள் திடீரென்று காற்று பலமாய் [illegible]சி று. உடனே புழுதி மேலே பறந்தது.

"ஓ! ஓ! சனியன் பிடித்த மண் புழுதி!" அவள் [illegible]மிர்ந்து உடம்பில் படிந்த புழுதியை அருவருப்புடன் [illegible]ட்டி விட்டுக் கொண்டாள்.

புகையாய் ஒன்றுகூடிய புழுதி மெல்ல மெல்ல மாய [illegible]மாயிற்று.

"உடையெல்லாம் பாழாகிவிட்டது, சனியன்..." [illegible]ன்று வாய் விட்டுச் சொல்லிக் கொண்டே போன [illegible]அப்பெண் சட்டென்று எஞ்சிய வார்த்தைகள் தொண்டைக் [illegible]ழியிலேயே அடைப்பட்டுப் போக அப்படியே நின்றுவிட் [illegible]டாள். புழுதிகள் முற்றிலுமாய் அடங்கி முடிந்தபோது எதிரே ஒரு ஆள் நின்று கொண்டிருந்ததைப் பார்த் தாள். அவன் கேசங்கள் வாழ்நாளில் என்றுமே எண்ணெய்ப் பசையைக் கண்டிராதது போல பரட்டைத் தலையாய் இருந்தது; முகத்தில் தாறுமாறாய் வந்து படிந்து கொண்டிருந்தது.

தாடியில் புழுதியும் தூசியும் படிந்திருந்தன.

உடைகளில் மண்ணும் சேறும் ஒட்டிக் கொண்டி [illegible]ந்ததோடில்லாமல் பலவிடங்களில் கிழிந்து சதையாய் [illegible]காங்கிக் கொண்டிருந்தது

கண்கள் சிவந்திருந்தன. ஆள் தேய்ந்து மாய்ந்து [illegible]ய் எலும்புக் கூடாய் இருந்தான்.

அப்பெண் திடீரென்று தனக்கு முன்னால் வந்து [illegible]தான்றிய அந்த உருவத்தைப் பார்த்து விட்டு விலென்று

அலறப் போனவள்— கத்தலைத் தொண்டையிலே அடக்கிக் கொண்டுவிட்டாள்.

அவன் பைத்தியக்காரனா, கொலைகாரனா அல்லது திருடனா என்று தெரியவில்லை.

அவள் உடனே சிரிப்பை வலிய வரவழைத்துக் கொண்டு, தைரியத்தைக் காட்டிக் கொண்டே— ''இதுல்லாம் இது ஸ்டார்ட் ஆக மாட்டேங்குது'' என்றாள்.

அவன் ஒரு வினாடி அந்தப் பெண்ணையும் ஸ்கூட்டரையும் மாறி மாறிப் பார்த்தான். பிறகு குனிந்து அதை சரிபண்ணத் தொடங்கினான்.

அவன் சரி பண்ணுகிறானோ அல்லது இன்னும் அதைப் பாழடித்துக் கொண்டிருக்கிறானோ என்று தெரியவில்லை அவளுக்கு.

அவளுக்கு அங்கிருந்த பாறாங்கல்லைத் தூக்கி அவன் தலையில் போட்டுப் பிளந்து விடவேண்டும் போல ஆத்திரமாய் இருந்தது.

அவனோ சரியாய் இல்லை. தன்னை ஏதாவது பண்ணிவிட்டால்?

அவனைப் பார்த்தால் அருவருப்பாய் இருந்தது அவளுக்கு. அவனிடமிருந்து வந்த அந்த நாற்றம் அவளுக்குக் குமட்டலெடுத்தது.

அவன் ஸ்கூட்டர் ஓயர்களைப் பிடுங்கி அவற்றை ஊதி சரிபண்ணித் திரும்பவும் பொறுத்திக் கொண்டிருந்தான். அவள் தன் ஸ்கூட்டரேயில்லை, தன் உயிரே அவனிடத்தில் சிக்கிக் கொண்டு விட்டாற்போல பயந்துபோனாள். தூ... இங்கிருந்து தப்புவது எப்படி?

அவன் சரிபண்ணி விட்டு ஸ்கூட்டர் ஹேண்டிலைப் பிடித்துக் கொண்டு காலால் ஒரு தள்ளுத் தள்ளினான். அவன் வலது கையில் நடுவிரலுக்குக் கீழே ஒரு மச்சம்

திருந்தது. அவனுக்கு பலம் போதவில்லை. திரும்பவும் ள்ளினான். அது உடனே பர்ர்... என்று சப்தமிட்டது. ின்னொருமுறை தள்ளினான். இம்முறை சமர்த்தாய் ஸ்டார்ட் ஆகிவிட்டது.

அப்பெண்ணிற்குச் சொல்ல முடியாத மகிழ்ச்சி! தைரியத்தைப் பூசிக்கொண்டு சிரித்தபடியே— ''தாங்க்யூ! தாங்க்யு வெரிமச்! தெய்வமாய் வந்து உதவி பண்ணினீங்க.'' என்று அவனைப் புகழ்ந்து தள்ளினாள். சில சமயங்களில் புகழ்ச்சி நன்றாய் வேலை செய்யும் என்று ராமேஸ்வரி ஆண்ட்டி அடிக்கடிச் சொல்லுவாள்.

அப்பெண் ஸ்கூட்டரில் ஏறி உட்கார்ந்துகொண்டு ஸ்டார்ட் பண்ணியபோது அவன் உடனே அதன் மேல் கையை வைத்துத் தடுத்து நிறுத்தினான்.

''ஏய்! கிளம்பிட்டாயே! பலே ஆள்தான்!'' அவன் குரல் காட்டில் சிங்கம் கர்ஜித்தாற் போலிருந்தது.

அவள் திருதிருவென்று விழித்தாள். அவள் கண்கள் ஆபத்தை எடை போட்டது. ஸ்கூட்டரை அவன் மேல் ஏற்றி மோதித் தள்ளிவிடலாமா என்றெண்ணினாள். லாபமில்லை. துரதிர்ஷ்டவசமாய் அது திரும்பவும் நாற்றம்நின்று போய் விட்டால் இவன் தன்னைக் கொன்று போட்டு விடுவான். இதென்ன கண்கள்? ஏன் அப்படி இருக்கின்றன? இப்படிக் கண்களை இடுக்கிக் கொண்டு பார்க்கிறானே, ஏன்?

இவன் தன்னை ஏதாவது பண்ணி விட்டால்? அவள் மனம் மின்னல் வேகத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. அவனைப் பார்த்தால் அலுவலுக்கு வாந்தி வரும் போல வயிற்றைப் பிசைந்தெடுத்தது. முந்தா நாள் ஐந்து நட்சத்திர ஓட்டலில் பிரசன்னா தன்னை அவ்வளவு நேர்த்தியான படுக்கைக்கு வரும்படி சொல்லி அழைத்தபோது திருமணம் ஆகவேண்டும் முதலில் என்று நீதி போதனை

பண்ணினாள். இந்த அவலட்சணத்தைத் தனக்கு எழுதி வைத்திருந்ததாலா?

அவன் குரல் திரும்பவும் கேட்டது.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? ரிப்பேர் பண்ணி தெரியும். பணம் தரத் தெரியாதோ?'' அந்த வார்த்தை கன்னத்தில் அறைந்தாற் போலிருந்தது.

''பணமா?'' அப் பெண்ணின் முகத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டது. இவன் விரும்பியது பணந்தானா? இ நிமிஷத்தில் தன்னால் முடியாதே தவிர, முடிந்திருந்த தன் சொத்துக்கள் அத்தனையையும், தன் பாட்டி பெயரில் தனியாய். எழுதித் தந்திருந்த அரை ஏக்கர் தையும் சேர்த்து அவனுக்குத் தந்து விட்டிருப்பாள். நாற்றமடிக்கும் ஆள் தன் உடம்பில் கை வைக்காமல் தால் அதுவே போதும்.

அவள் உடனே பர்ஸைத் திறந்து, ''ஏன் தரமாட்டே பணம்? நிறையவே தருவேன். நீங்கள் தெய்வம் என்னிட்டேனில்லையா? தெய்வம் பணம் வாங்கி மான்னு...''என்று ஏதோ சொல்லிக்கொண்டே போனா அவன் அதொன்றையும் காதில் போட்டுக் கொள்ளா னாய் பர்ஸையே பார்த்துக் கொண்டிருந்தான். பர் பார்த்ததுமே அவனுக்கு விரும்பிய தெய்வம் பிரத்ய மானாற் போல கண்கள் மின்னின. சரேலென்று அ மீது பாய்து பறித்துக் கொண்டாற் போல கண் மூ திறப்பதற்குள் அதைப் பிடுங்கிக் கொண்டு விட்டான்.

அது கைக்கு கிடைத்ததுமே சட்டென்று இரண்டடி பின்னுக்குப் போய் பர்ஸைத் திறந்தான். அவன் கைக்குப் பத்து ரூபாய் நோட் ஒன்று வந்தது. அதை அவன் கண்கள் ஆர்வத்துடன் பார்த்தன. மளமளவென்று பர்சை கால பண்ணினான். ஆனால் அவற்றிலிருந்து என்னென்னவோ காகிதங்களும் ரசீதுகளும் இரண்டு ரூபாய் நோட் ஒன்

யும் தவிர வேறெதுவுமே வெளிவரவில்லை. ஒரு விநாடி அவன் சலனமில்லாமல் நின்றான்.

முகத்தில் கோபம் படமெடுத்த பாம்பைப் போலகுப் பென்று வெளிப்பட்டது. கண்களில் ஏமாற்றம்.

''ஏய்'' கத்திக் கொண்டு திரும்பினான்.

அதற்குள் அந்தப் பெண் ஸ்கூட்டரில் தொலைவில் போய்க் கொண்டிருந்ததைப் பார்த்தான்.

''ஏய்! ஏய்! உன்னைக் கொன்று போட்டு விடுகி றேன். என்னை மோசம் பண்ணிட்டாய். நில்'' என்று கையை ஓங்கிக் கொண்டே, துரத்திக் கொண்டு வந்தான். அடுத்த நிமிஷம் கல் தடுக்கிக் குப்புற விழுந்தான்.

மண்ணில் குப்புற விழுந்து விட்ட அவனால் சட்டென்று எழுந்திருக்க முடியவில்லை.

முன்னால் ஸ்கூட்டரில் போய்க் கொண்டிருந்த அவள் தலையைத் திருப்பிப் பார்த்தாள்.

அவன் குப்புற விழுந்து விட்டான். ஓடி வந்து கொண்டிருக்கவில்லை. 'அம்மாடா'- என்று நிம்மதியாய் மூச்சு விட்டுக் கொண்டாள். மறுபடியும் திரும்பிப் பார்த் தாள். அவனுக்கு மண் தொண்டைக்குள் போய்விட்டது போலிருந்தது. கொல், கொல்லென்று இருமிக் கொண் டிருந்தான். அவள் அதிர்ஷ்டம்! அவனால் எழுந்திருக்க முடியவில்லை.

அவள் ஏறிய ஸ்கூட்டர் அங்கிருந்து விர்ரென்று கிளம்பி, கற்களையும் புதர்களையும் மேடு பள்ளங்களை யும், மரங்களையும் லட்சியம் பண்ணாமல் நேஷனல் ஹைவேயை நோக்கிப் பறக்கத் தொடங்கிற்று.

ஹைவேயிற்கு வந்ததுமே ஹாரனை அடித்துக் கொண்டு எதிரும் புதிருமாய் பறந்து கொண்டிருந்த கார்களையும், லாரிகளையும், புல்வண்டிகளையும், பால்

வேன்களையும் பார்த்த பிறகு அவளுக்கு உயிர் திரும்பி வந்தது. அவர்கள் எல்லோரும் தனக்கு நண்பர்கள் என்றார்போல் மகிழ்ச்சி அடைந்து போனாள். கழுத்திலிருந்தும் கன்னங்களிலிருந்தும் வழிந்து கொண்டிருந்த வியர்வைகளை கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள். மனிதன் எதிராளியோடு பேசாவிட்டாலும் அவ்வாறு தென்பட்டு ஒரு துணை போல இருப்பதே எவ்வளவு முக்கியமானதாய் இருக்கிறது என்றெண்ணிக் கொண்டாள்.

அவள் ஸ்கூட்டரைக் கொண்டு வந்து ஒரு கூல் டிரிங்க் ஷாப்பிற்கு முன்னால் நிறுத்தினாள். இறங்கி வந்து 'கோல்ட் ஸ்பாட்' என்று கேட்டு வாங்கிக் கொண்டு கடகடவென்று குடித்து லிட்டாள். அதற்குள் கொஞ்சம் உயிர் வந்தார் போலிருந்தது அங்கிருந்த கடைப்பையன் போனில் பேசிக் கொண்டிருந்தான். அவன் போனை வைக்கும் வரைக்கும் காத்துக் கொண்டிருந்தாள். அவன் போனை வைத்ததுமே—

"எக்ஸ்யூஸ் மீ, ஒரு போன் பண்ணிக்கறேன், ரொம்ப அர்ஜென்ட்" என்றாள். அவன் நீட்டினான்.

அவள் உடனே நம்பரைச் சுழற்றினாள்.

மறுமுனையில் குரல் கேட்டதும்— "ஹலோ ஆன்ட்டி, நான் ராதிகா பேசுகிறேன். பிரேமா இருக்கிறாளா? லெரிகுட், கொஞ்சம் அர்ஜென்ட்டாய் போன் கிட்டே வரச்சொல்லுங்க— ஆன்ட்டீ, ப்ளீஸ், ரொம்ப அர்ஜென்ட் ஆன்ட்டி."

மறுமுனையில் பிரேமா போனிடம் வருவதற்குள் ராதிகா விரல்களால் அங்கிருந்த மேஜை மேல் டொக் டொக்கென்று தாளம் போடத் தொடங்கினாள். ஒரு முறை பாதங்களைத் தூக்கி நுனி விரல்களின் மேல் நின்று விட்டுத் திரும்பவும் தரையில் வைத்துக் கொண்டாள். கத்தரிக்கப்பட்டுத் தொங்கிக் கொண்டிருந்த தலை

முடியைத் நீவிவிட்டுக் கொண்டாள். விரல்நகங்களைப் பார்த்துக் கொண்டாள்.

மறுமுனையில் சிநேகிதியின் குரலைக் கேட்டதுமே— "ஹாய் பிரேம்! நான் ஊரெல்லையிலிருந்து பேசுகிறேன். நான் இன்றைக்கு எங்கள் க்வாரியிலிருந்து வந்துட்டிருந்த போது வழியில்— மைகாட்—" ஒரு வினாடி பேச்சை நிறுத்தி விட்டுக் கண்களை முடிக்கொண்டாள். "அடடா! என்னத்தைச் சொல்வேன்? ஒரு த்ரில்லிங் அனுபவம்! உனக்குத்தான் தெரியுமே, க்வாரியிலிருந்து திரும்பி வரும் வழியெல்லாம் ஒரே கல்லும் மண்ணுந்தானே இருக்கும். அங்கே வந்துட்டிருந்தபோது ஒருத்தன் எதிர்ப்பட்டான். தாடி மீசையெல்லாம் புழுதி! கண்கள், துப்பாக்கி குண்டுகளைப் போல பளபளத்துக் கொண்டிருந்தன. நான் ஸ்கூட்டரில் வந்துட்டிருந்தபோது குறுக்கே வந்து நின்று கைநீட்டித் தடுத்தான் போகவிடாமல் எனக்காபயம்? ஷட் அப்! சில்லியாய் பேசாதே! எனக்கென்ன பயம்? எவ்வளவு ஹேண்ட்சம்மாய் இருந்தான் தெரியுமா? ரஸ்டிக்காய் இருந்தான். உயரமும் பருமனுமான ஆஜானுபாகுவான உடற்கட்டு! என்னால் கண்ணைத் திருப்பிக் கொள்ள முடியலைன்னால் நம்பு! அவன் அப்படி நின்றதிலேயே எவ்வளவு ராஜகம்பீரம் தெரியுமா? க்ளிண்ட்யீஸ்ட்வுட் பழைய சினிமாக்களில் இருந்தாற்போல! ஒல்லியான நீண்ட முகத்தோடு, அதே முகவெட்டு! உம், நிஜமாய்! எங்கம்மா மேல் ஆணையிட்டுச் சொல்றேன். நான் சொன்னதெல்லாம் பொய்யாயிருந்தால் என் கண் போயிடும். என் ஸ்கூட்டரை நிறுத்தி விட்டு "பர்சை எடு" என்றான். நான் எடுத்தேன். அதில் பணம் அதிகமாய் இல்லை. உனக்குத்தான் தெரியுமே இப்போதெல்லாம் எங்க மம்மி வீட்டிலிருக்கிற பணத்தையெல்லாம் அந்த பரமேஸ்வரி ஆன்ட்டியோடு சேர்ந்து சுற்றிட்டு எப்படி செலவழிச்சுட்டிருக்காங்கன்னு! எப்பவும் என் பர்சில் பணமே இல்லாமல் ஒட்டப் பிடுங்கிக் கொண்டு விடுவாங்க... நான் ஆத்திரத்தோடேயே பர்சை எடுத்துத் தந்தேன். அதில்

பணம் அதிகமாய் இருக்காதோன்னு பயந்து மளமளன்னு என் கழுத்தில், காதில் இருக்கிற நகைகளையெல்லாம் அவிழ்த்துத் தந்துட்டேன். எனக்கு அவனை எவ்வளவு பிடித்துப் போயிடுத்து தெரியுமா? 'எடுத்துக்குங்க, இதை மட்டுமேயில்லை, என் உயிரையே வேண்டுமானாலும் தரேன்' என்று சொல்லிவிடலாமான்னு நினைத்தேன். நோ பிரேமா, பயமே ஏற்படலை. உனக்குத் தெரியாது ஒரு வினாடி அவனைப் பார்த்ததுமே ஒரு மின்சாரம் என் உடம்பில் பாய்ந்தாற்போலிருக்கவே, எவ்வளவு சந்தோஷம் ஏற்பட்டது தெரியுமா? இப்படி உண்மையாய் எப்படிப் பேசிட்டிருக்கேனோ அசல் அதே போலவே பேசினேன். எங்கப்பா மேல் ஆணை! அவன் எடுத்துக்கவில்லை, அவற்றைப் பார்த்துவிட்டு பக்கென்றுச் சிரித்து விட்டான் அவன்.

''என்னைப் பார்த்தால் உனக்கு பயமாயில்லையா?'' என்று கேட்டான்.

''இல்லை'' என்றேன்.

அவன் புகழ்ச்சியோடு பார்த்தான்.

''ஐ கங்கிராஜீலேட் யூ'' என்றான்.

அதற்குள் பக்கத்திலிருந்து கல் ஒன்று உருண்டு சப்தம் கேட்டது. அவன் சட்டென்று ஜீபியிலிருந்து துப்பாக்கியை மின்னல் வேகத்தில் வெளியே எடுத்து பிடித்துக் கொண்டே அந்தப் பக்கமாய் திரும்பினான். அது வெறும் கல்தான் என்றும் அங்கிருந்து யாருமே வில்லை என்றும் தெரிந்துக்கொண்டதுமே துப்பாக்கியைத் திரும்பவும் ஜீபியில் வைத்துக்கொண்டு விட்டான். என்னைப் பார்த்து முறுவலுடன் ''கோ எங் லேடி'' என்றான். நான் வந்து விட்டேன். ஆங்! ஆம் எக்ஸாட்லி யு ஆர் கரெக்ட்! எங்கேயாவது ராஜஸ்தானிலிருந்து வந்த திருடனாய் இருக்கவேண்டும். ஹனி

தினந்தோறும் ஏதோ திருட்டு நடப்பதாய் பேப்பர்களில் வந்துட்டேதானே இருக்கு! அப்பப்பா! சிவப்பாய், உயரமாய், எவ்வளவு அழகான பெர்சனாலிடி தெரியுமா? இன்னும் என் கண்களுக்கு முன்னால் அதே உருவந்தான் வந்துட்டிருக்கு! ஆஹா! என்னமாய் சிரித்தான்! நீ மட்டும் அவனைப் பார்த்திருந்தால் அவனைத்தவிர வேறு யாரையும் கல்யாணம் பண்ணிக்கமாட்டேன்னு சபதம் பண்ணிட்டிருப்பாய். இந்த அனுபவம் இருக்குபாரு, இதை எவ்வளவு சொன்னாலும் குறைவாய்தான் இருக்கு. அவங்கவங்க அனுபவித்துப் பார்த்தால் தான் புரியும். பிரேம், நீ மணிக்கு போன் பண்ணிச் சொல்லு. உம், இப்பவே! ரூபாவுக்கும் கல்யாணிக்கும் கூட ரிங் பண்ணிவிடு. ஆங், ஒரு விஷயம். எல்லோரிடமும் சரியாய் மாலை நாலரை மணிக்கு ஓட்டல் 'நந்தினி'யில் வந்து சேரச்சொல்லிடு. வி வில் செலபிரேட் திஸ் அகேஷன்! நோ...இப்ப என்னால் உன்னிடம் வரமுடியாது. எங்க மம்மி எனக்கு ஒரு வேலை கொடுத்திருக்காங்க. ''ஹனி முற்றோர் அரவணைப்பு இல்லம்'' என்று ஏதோ இருக்காமே, அங்கே போய் ஏதோ விவரங்களைக் கேட்டு எழுதிட்டு வரணுமாம். சாயந்திரம் ராமேஸ்வரி ஆண்ட்டி எங்க வீட்டுக்கு டின்னருக்கு வரப்போறாங்களாம். எங்க மம்மி எங்க வீட்டையே ஒரு சமூகநல ஆபீஸாய் மாற்றிட்டாங்கன்னால் நம்பு. ஒரே உபத்திரவம். செத்துட்டிருக்கேன். போர்! மம்மி, அந்த வேலைகளையெல்லாம் என்னைப் பண்ணச்சொல்லி உயிரை எடுத்துட்டிருக்காங்க. ஓ கே நான் அரவணைப்பு இல்லத்திற்குப் போயிட்டு அந்தக் காகிதங்களை மம்மியிடம் தந்துவிட்டு ஓட்டலுக்குத் திரும்பி வந்துவிடுகிறேன். எஸ்! இந்த ராதிகாவுக்கு டயம் என்றால் டயமதான்! வாக்குத்தத்துட்டால் வாக்குதான்! உனக்குத்தான் தெரியுமே? நான் வரும்போது நீங்கள் அங்கே இல்லாவிட்டால் கொன்று போட்டுவிடுவேன், ஜாக்கிரதை! ஓ, கே! பை! சீயூ'' என்று போனை வைத்து விட்டாள்.

போனிற்கருகில் உட்கார்ந்து கொண்டிருந்த இளைஞன் விநோதமாய் பார்த்துக்கொண்டிருந்தான். ராதிகா போனை வைத்துவிட்டு பர்ஸிற்காக ஜேபியில் கையை வைத்தாள். உடனே ஷாக் அடித்தாற்போல பார்த்தாள். அப்பொழுதுதான் அந்த பைத்தியக் காரனுக்கு பர்சைத் தந்துவிட்டது ஞாபகத்திற்கு தொடங்கிற்று. இப்பொழுது என்ன பண்ணுவது? குளிர் பானத்தைக் குடித்துவிடடாள். போனும் பண்ணி விட்டாள். இவர்களுக்குப் பணம் தர வேண்டுமே! அவள் முகம் வெலவெலத்து விட்டது. ஆனால் சட்டென்று சமாளித்துக் கொண்டாள். மனதில் தோன்றிய பதற்றத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் பெண்மையான சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு—''ஒரு சின்ன பேப்பர் தர முடியுமா?'' என்று கேட்டாள்.

அவ்விளைஞன் அந்தக் காரியத்தைப் பண்ணுவது தனக்கு மிகப்பிரியமானது என்றாற்போல பேப்பரைக் கொண்டு வந்து தந்தான். ராதிகா மளமளவென்று அதில் ஒரு கார் நெம்பரைக் கிறுக்கினாள். அதை அவனிடம் தந்துவிட்டு—''சாரீ, என்னிடம் பணம் இல்லை. இன்னும் ஒரு மணி நேரத்திலோ, அல்லது சாயந்திரத்திலோ இந்த நம்பருடைய கார் ஒன்று இந்தப் பக்கமாய் வரும். நிறுத்திப் பணத்தை வசூல் பண்ணிக்குங்க.'' காகிதத்தை அவன் மீது போட்டுவிட்டு மளமளவென்று சொல்லிக்கொண்டே ஓட்டமாய் போய் ஸ்கூட்டரை மிதித்து ஸ்டார்ட் பண்ணி, விர்ரென்று போய் விட்டாள்.

''ஏய்— ஏய்'' என்று ஓடிவந்தான் அவ்விளைஞன். ஒரு பெரியவர் ''என்னடா?'' என்று கேட்டார். அவன் நடத்ததைச் சொன்னான்.

அவர் அக்காகிதத்தைப் பார்த்தார். ''ஓ! இந்தக் காரா? அப்படீன்னால் நம்ப பணம் எங்கேயும் போயிடாது இந்தக் கார் கஜானன் கார். அவர்

க்வாரிக்கு இந்தப் பக்கமாய்தான் போகணும், வரணும், வேறு வழியில்லை''

''அந்தப் பொண்ணு...'' இளைஞன் தயக்கத்தோடு பார்த்தான்.

''அவர் மகள். அவர் எவ்வளவு நிதானமான மனுஷரோ பொண்ணு அத்தனைக்கத்தனை ராட்சசி. பாவம், அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. மகள் இங்கிலீஷில் பேசுவதைப் பார்த்துட்டால் அவருக்குச் சொல்ல முடியாத சந்தோஷம். மகளுக்குத் தாயின் குணந்தான் வந்திருக்கு. வாய் நீளம்!'' என்றார்.



ராதிகா ஓட்டிக் கொண்டிருந்த கார் தி. நகரில் ஒரு சந்திற்குள் இருந்த பழைய பங்களாவிற்கு முன்னால் வந்து நின்றது. அக்கட்டிடத்தை வெளியேயிருந்து பார்க்கும் போது சுண்ணாம்பு பூச்சுக்கள் பெயர்ந்து, நிறம் வெளுத்து, ஆங்காங்கு மழை நீர் ஒழுகியதற்கு அடையாளமாய் பாசி பிடித்தப் பச்சை நிறக் கோடுகளுடன் பாழடைந்த கட்டிடத்தைப் போலிருந்தது. அதன் காம்பௌண்டு சுவர்கள் ஆங்காங்கு பெயர்ந்து விழுந்திருந்தன. மரக் கேட்டிற்குக் குறுக்காய் இருந்த சட்டம் நழுவி ஓட்டையாய் தென்பட்டது. கேட்டிற்குப் 'க்கத்திலேயே காம்பவுண்டுச் சுவற்றின் மேல் உயரமாயிருந்த போர்டின் மீது 'அரவணைப்பு இல்லம்' என்ற எழுத்துக்கள் தென்பட்டன.

ராதிகா ஸ்கூட்டரை நிறுத்தி விட்டுப் பூட்டி கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள். கேட்டிலிருந்து எதிரே தென்பட்ட அந்தக் கட்டிடம் வரையிலும் செங்குத்தான செங்கற்களைப் பதித்திருந்தார்கள். அவற்றிற்கு எப்பொழுதோ அடித்தச் சுண்ணாம்பு நிறம் மங்கிப் போயிருந்தது. அவற்றிற்குப் பக்கத்திலேயே கதவு, மஞ்சள், வெள்ளை போன்ற பல நிறங்களில் சாமந்திப் பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றைப் பார்த்ததுமே யாரோ மிக சிரத்தை எடுத்துக் கொண்டு நீர் ஊற்றிக் கண்ணுங் கருத்துமாய் வளர்த்து வந்திருப்பது புரிந்தது. இலைகள் தளதளவென்று காற்றில் ஆடிக் கொண்டிருந்தன. பூக்கள் கண்ணுக்கு விருந்தாய் கலகலத்து கொண்டிருந்தன. ராதிகா டைந்து போய் தென்பட்ட அச் சுற்றுப் புறத்திற்குப் புத்துணர்ச்சியைத் தந்து கொண்டிருந்தது.

அவ்வெல்லைக்குள் நுழைந்ததுமே தொலைவிலிருந்து சிறுவர் சிறுமிகளின் சிரிப்புக்களும், விளையாடிக்கொண்டிருந்த சந்தடியும் கேட்டன.

இன்னொரு பக்கத்திலிருந்து துணிகளைத் துவைக்கும் கல்லின் மேல் வைத்து பொத் பொத்தென்று அடித்துத் தோய்த்துக் கொண்டிருந்த சப்தம் கேட்டது. செடிகளுக்கு டியூப் பைப் போட்டிருந்தார்கள் போலிருந்தது. அதிலிருந்து கொட கொடவென்று தண்ணீர் கொட்டிக் கொண்டிருந்த சப்தம் கேட்டது.

தெருவில் போவோருக்கு இந்த பங்களா ஒரு வெளவால்கள் வசிக்கும் பாழடைந்த கட்டிடமாய்தான் தென்படும் உள்ளே நுழைந்ததுமே செடிகளின் பசுமையும், பலநிறப்பூக்களும், குழந்தைகளின் சந்தோஷ ஆரவாரமும் வெளியே தென்பட்ட காட்சிக்குச் சற்றும் மாறுபட்ட விதத்தில் சூழ்நிலை எதிர்ப்படும்.

ராதிகா அச்சூழ்நிலைகளைப் பார்த்துக்கொண்டே ஹைஹீல்ஸ் ஷூ டக் டக்கென்று சப்தமிட, படியேறி வராந்தாவிற்கு வந்தாள். அங்கே சுமார் இருபத்தைந்து

வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன் உட்கார்ந்து கொண்டு தலை குனிந்தவாறு மரக்கதிரை ஒன்றின் உடைந்த காலை சரிபண்ணிக் கொண்டிருந்தான்.

ராதிகா ஹைஹீல்ஸ் அதிர விர்ரென்று அவனிடம் போனாள்.

"ஏய் மிஸ்டர் உன்னைத்தான்" கத்தினாற்போல கூப்பிட்டாள்.

அவன் சப்தம் வந்த திசையே திரும்பினான்.

"என்னையா?" கேட்டான்.

"உன்னைத்தான். சாம்பவி என்ற பெண் எங்கே இருப்பாள்?"

அவன் பார்த்தவிதத்தைக் கொண்டு அவன் கண் தெரியாதவன் என்பதை அப்பொழுதுதான் உணர்ந்து கொண்டாள் ராதிகா.

ராதிகா திரும்பவும் ஹைஹீல்ஸ் அதிர விருட்டென்று நகர்ந்தாள் அங்கிருந்து. டக்டக்கென்று ஓசையை எழுப்பிக் கொண்டே வராந்தாவில் நடக்கத் தொடங்கினாள். சுவற்றில் ஆங்காங்கு பொன்மொழிகள் எழுதப் பட்டிருந்தன.

வலது பக்கத்தில்— "மனிதனுக்கு அழகு தருவது மனத் தூய்மைதான். புற அழகு அழகல்ல"— என்று எழுதி இருந்தது.

"சட்"— ராதிகா விருட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அங்கே சுவற்றிற்கெதிரே இன்னொரு போஸ்டர் தென்பட்டது—

"சந்தோஷமாய் இருப்பவர்கள் துக்கமாய் இருப்பவர்களுக்குக் கைகொடுக்க வேண்டும்."

ராதிகாவால் அப்போஸ்டரிலிருந்து கண்களை மீட்கவே முடியவில்லை. அது அவளையே அறியாமல் மனதை ஒரு கவரும்படியாய் இருந்தது. ஒரு சிறுமி அழுது கொண்டிருக்கிறாள். உடம்பு ஒட்டிப்போய் முகத்தில் நிகில்! கன்களில் கண்ணீர். பொருளாதார ரீதியில் சமூகத்தில் மிக தாழ்ந்த நிலையில் இருப்பவர்களின் அவலைத்தனம் தெ பட்டது. உடல் நலமில்லாமையாலோ, பசியாலே இளைத்துக் குழிவிழுந்த அக் கன்னங்களில் கண்ணீர் கோடுகள்! ஒரு கை அவற்றைத் துடைத்துக் கொண்டிருக் கிறது. அக் கை சிலப்பாய், ஆரோக்கியமாய், அழகாய் தங்க வளைகளுடனும் விரல்களில் வைர மோதிரத்துடனும் செல்வச் செழிப்போடும் இருந்தது.

அந்த முகத்தில் வறுமையினால் தினம்!

அந்தக் கையில் அழகு! ஆரோக்கியம்! ராஜகளை!

ராதிகா வராந்தாவைத் தாண்டி வந்தாள். அங்கிருந்து திரும்பியபோது கண்ணுக்கெதிரே பரந்த வெளி அங்கே வாதநாராயண மரங்கள், வேப்பமரங்கள், பாதாம் மரங்கள் எல்லாம் வளர்ந்து வெயிலின் தீவிரத்திற்கு கவழ்ந்த குடைகளைப் போல இருந்தன.

அம்மரங்களுக்கடியில் நிறைய சிறுவர் சிறுமிகள் கூட்டுக்கு யிருந்தார்கள். அவர்களில பல்வேறுபட்ட உடல் ஊனமுற்றி கொண்டவர்களும், வளர்ச்சியடையாத குள்ளமான உருவங்களைக் கொண்டவர்களும், குருடர்களும், முடவர்களும் இருந்தார்கள்.

''சாம்பவி எங்கே?'' கைகளின் இடுக்கில் கட்டைகளை ஊன்றியபடி நடந்து கொண்டிருந்த ஒரு பையனைப் பார்த்துக் கேட்டாள.

''அதோ'' காட்டினான்.

ராதிகா அவன் சுட்டிக் காட்டிய பக்கமாய் திரும்பினாள். தொலைவில் பாதாம் மரத்திற்கருகில் வராந்தா

ல், ஏறக்குறைய தன் வயதே கொண்ட ஒரு பெண்— யற்கைக் கால் பொறுத்தப்பட்ட ஒரு னைப் பிடித்துக் கொண்டே நடக்கக் கற்றுக் ருந்தாள்.

அக்கா! உங்களுக்காக யாரோ வந்திருக்காங்க'' ப் பையன் சொன்னான். சாம்பவி திரும்பிப் தாள். அதற்குள் ராதிகா அவளிடம் வந்துவிட்டாள்.

ராதிகா தன்னைப் பரிச்சியம் பண்ணிக்கொண்டு— ன காந்திமதியின் மகள். ஒரு வாரத்திற்கு முன்னால் கம்மாவும் ராஜேஸ்வரி ஆண்ட்டியும் சேர்ந்து வந்து ந்த இடங்களையெல்லாம் பார்த்துட்டுப் போனாங்களே! நீங்கள் இந்த மாதத்தில் நடக்கவிருக்கும் ஆண்டு ாவில் ராஜேஸ்வரி ஆண்ட்டியிடம் ஏதேதோ பாடுகளை ங்கச்சொல்லி கேட்டுக்கிட்டீங்களாமே?''

சாம்பவி முறுவல் பூத்து விட்டு— ''அவங்களே என்களுக்குத் தராதாய் சொன்னாங்க.'' என்று ஏதோ ல்லப் போனாள்.

ராதிகா அதை காதில் போட்டுக் கொள்ளாமல்— ங்க மம்மி அந்த விவரங்கள் அடங்கிய காகிதங்களைக் ண்டுவரச் சொன்னாங்க. இன்றிரவு ஆண்ட்டி எங்க வரப்போறாங்களாம்'' மளமளவென்று த்து விட்டாள்.

''அப்படியா? வாங்க காகிதங்கள் எல்லாம் ஆபீசில் ருக்கின்றன. தரேன்'' என்றாள். சாம்பவி கிளம்பப் னவள் நின்று அப்பையனைப் பார்த்து—

''ரவி! நீ பதை நிறுத்திவிடாதே. கோபி, இப்படி ரவிக்கு தவி பண்ணு. நான் இதோ வரேன்'' ன்றாள். அவ தலையாட்டினான்.

இருவரும் ரீஸ் அறையை நோக்கி நடந்து கொண்டிந்தார்கள். வழியில் பவழமல்லிகை மரத்தடியில் ஷ்ணர் சிலை சதுக்கி வைக்கப்பட்டிருந்தது.

''இந்தச் சிலையைப் பார்த்தீங்களா? ஒரு தெரியாத பையன் செதுக்கினான் இதை'' சாம்பவி அ காட்டிச் சொன்னாள். அவ்வாறு காட்டியதில் ஏ கர்வமும், தன்னம்பிக்கையும் தெரிந்தன. சா இன்னொன்றையும் காட்டினாள்.

''அந்த சிமெண்ட் பெஞ்சிற்குப் பின்னாலி அந்தக் குடையைப் பார்த்தீங்களா? அதோ, அந்தக் களும் கைகளும் சும்பிப்போய், வயிறு பெரிதாய் இ அந்தப் பையன் தயாரித்தான்.''

ராதிக சிரிக்கவும் இல்லை. அப்படியா ஆர்வமும் காட்டவில்லை. அந்த முகத்தில் இங்கி எப்பொழுது வெளியே போவோமோ என்ற அ தென்பட்டது.

படியேறி ஆபீஸ் அறையை நோக்கி வந்து லையில் ஒரு கூஜா. அதன் மேல் ஒரு டிருந்தபோது ஒரு ஐந்தாறு வயது பையன் எதிர்ப்பட் டான். அவனுக்கு ஒரு கையும் காலும் போலியோ சுவாதீனமில்லாமல் போய் விட்டிருந்தன.

''அக்கா, இதோ நான் காகிதப்படகு பண்ணி கேன்'' என்று உற்சாகத்துடன் காட்டினான்.

சாம்பவி ஒரு வினாடி நின்று, ராதிகா என்ற ஒருத்தி பக்கத்தில் இருக்கிறாள் என்ற மறந்து போனவளாய்— அக்காகிதப் படகைப் பார் அசந்துப் போய்— ''அப்பப்பா! எவ்வளவு அழகாயிரு ரொம்ப நன்றாய் பண்ணியிருக்கிறாய். வெரிகுட்! ஈஸ் எ க்ளவர் பாய்'' என்று கிட்டே இழுத்துக் கொண் முதுகில் தட்டிக் கொடுத்தாள்.

அந்தச் சமயத்தில் சாம்பவியைப் பார்த்த அவளுக்கு இச்சிறுவர் சிறுமிகளின் விஷயந்தா தலையானது என்றும், எஞ்சிய எல்லாமே அதற்கப்பு தான் என்பது போலவும் தோற்றமளித்தது.

''போய் விளையாடு'' அப்பையனிடம் சொல்லி ட்டுப் புறப்பட்டாள்.

இருவரும் அறைக்கு முன்னால் வந்து நின்றார்கள்.

''வாங்க'' அறையின் பூட்டைத் திறந்து கொண்டே சான்னாள். ராதிகா அவளைத் தொடர்ந்து உள்ளே டியெடுத்து வைத்தாள்.

அவ்வறை சிறியதாய் இருந்தாலும் மிகவும் நீட்டாய் ருந்தது. ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்திருந்ததால் ற்றும் வெளிச்சமும் தாராளமாய் வந்து கொண்டிருந் . அறையில் எதிரே மேஜை— அதன் மீது போனும் நந்தது. விசிட்டர்கள் வந்தால் உட்கார்ந்து கொள்ள நாலைந்து நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. ற்றோரத்தில் கோத்ரெஜ் பீரோ இருந்தது. அறையின் லையில் ஒரு கூஜா. அதன் மேல் ஒரு கிளாஸ் தம்ளர் ழ்த்து வைக்கப்பட்டிருந்தது.

சாம்பவி மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு ாயரை இழுத்துக் கொண்டே— ''மம்மி சாயந்திரம் து கலெக்ட் பண்ணிப்பதாய் சொல்லியிருந்தாங்க. னால் இன்னும் ரெடியாகலை. ஒரு நிமிஷத்தில் ரங்களை எழுதித் தந்துடறேன்'' எனறாள்.

சொருகி வைக்கும் ஸ்டாண்டிலிருந்து காகிதங்களை துக் கொண்டே திரும்பி ஜன்னல் வழியாய் ரவி ர் காலோடு சரியாய் நடக்க பிராக்டீஸ் பண்ணு என்று ஒரு முறை பார்த்தாள்.

திகா நின்று கொண்டேயிருந்தாள்.

ட்காருங்கள்'' சாம்பவி முறுவலுடன் சொன்

திகா அவள் வரவேற்பை ஏற்றுக் கொள்ளவு அவள் கொடுத்த மரியாதைக்கு ''தாங்க்யூ''

என்றும் சொல்லவில்லை. அப்படியே நின்று கொண்
யிருந்தாள்.

சாம்பவி காகிதங்களை எடுத்துப் பரிசீலித்துக் கொ
டிருந்தாள். ராதிகா அங்குமிங்கும் பார்த்தபடி நி
கொண்டிருந்தாள். அங்கேயும் நிறைய போஸ்டர்
தென்பட்டன.

சாம்பவி உட்கார்ந்திருந்த இடத்திற்குப் பின்பக்க
சுவற்றின் மீது அறைக்குள் அடியெடுத்து வைத்த
கண்களைக் கவரும்படியாய் இருந்தது.

''கம்பளிப்பூச்சி கூட இயற்கை தனக்கு வ
யிருக்கும் தர்மத்தை நிறைவேற்றுகிறது. தான் அழ
இருக்கிறோமோ இல்லையா என்று என்றுமே வரு
படாது''— போஸ்டரில் எதிரே கம்பளிப் பூச்
அதையே பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு நொண்
பையனும இருந்தார்கள்.

''தாகம் எடுக்கிறது'' என்றாள் ராதிகா.

''ஒரு நிமிஷம்'' என்ற சாம்பவி, ''கிட்டா'' எ
கூப்பிட்டாள். உடனே ஒரு வளர்ச்சியடையாத கு
பையன் ஓடிவந்தான்.

''என்ன அக்கா?'' கட்டைத் தொண்டை
கேட்டான்.

''இவங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடு'' என்
சாம்பவி.

கிட்டு ஓடிப்போய் கூஜாவின் மேலிருந்த கி
தம்ளரை எடுத்து, அதில் நீரை ஊற்றி உள்ளங் கை
வைத்துக்கொண்டு, தன் கைவிரல்கள் த
வாறு ஜாக்கிரதையாய் எடுத்து வந்தான்.

ராதிகா அவனைப் பார்த்ததுமே ஓரடி பின்
நகர்த்து கொண்டாள். விகாரமாய் இருந்த அவன்

உருவத்தைப் பார்த்துமே அவள் முகத்தில் ஏளனம் தென்
பட்டது. அதை வெளிக்காட்டிக் கொள்வதுதான்
உயர்ந்தது என் திறண்ணினாளே தவிர, அதை தனக்குள்
மறைத்துக் கொள்வதுதான் தன் தர்மம் என்றெண்ண
வில்லை.

தண்ணீரைப் பெற்றுக் கொள்ளவில்லை.

ஒரு வினாடி கிட்டுவின் முகம் வேதனையால் பட
படத்தது. சாம்பவியைத் திரும்பிப் பார்த்தான். சாம்பவி
காகிதத்தில் எழுதிக் கொண்டிருந்ததால் இதைக் கவனிக்க
வில்லை. கிட்டு தம்ளரை மேஜை மேல் வைத்து விட்டுப்
போய் விட்டான்.

ராதிகா அந்த கிளாஸ் தம்ளரை அருவருப்போடு
பார்த்தாளே தவிர அதைக் கையாலும் தொடவில்லை.

அதற்குள் சுமார் நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க
ஒரு பெண்மணி அங்கே வந்தாள். அவள் எந்தக் குறை
பாடும் இல்லாமல் கருப்பாய் குள்ளமாய் பலமாய்
இருந்தாள். வஸ்தாதுகளிடம் தென்படும் தைரியமும்,
துணிச்சலும், திமிர் பிடித்ததனமும் அவளிடம் தென்
பட்டன.

எழுதிக் கொண்டிருந்த சாம்பவி நிமிர்ந்து பார்த்தாள்.
''என்ன அஞ்சலை?'' கேட்டாள்.

''கமித்ராம்மா இந்தக் காகிதங்களை பீரோவில்
வைக்கச் சொன்னாங்கம்மா?'' கையிலிருந்த காகிதங்
களைக் காட்டினாள்.

சாம்பவி டிராயருக்குள்ளிருந்த சாவிக் கொத்தை
எடுத்துத் தந்தாள்.

அஞ்சலை பீரோவை நோக்கிப் போய்க்கொண்டே
உல்லாசமாய் கூலிங் கிளாஸை அப்படியும் இப்படியுமாய்
சுழற்றியபடி நின்று கொண்டிருந்த ராதிகாவை ஏற
இறங்க விநோதமாய் பார்த்து விட்டுப் போனாள்.

சாம்பவி காகிதங்களை ராதிகாவை நோக்கி வைத்து விட்டு— ''இதோ பாருங்கள்! ஆண்டுவிழா நாளன்று, பரிசாய் தருவதற்கு வேண்டியவை இவை. சைனீஸ் செக்கர்ஸ், மூன்றுசக்கர சைக்கிள், இந்தப் படங்களோடு கூடிய புத்தகங்கள் கலர் பென்சில்கள் இந்த மௌத் ஆர்கான்ஸ்' —சாம்பவி சொல்லிக் கொண்டிருந்தபோது எட்டு வயதுப் பெண் ஒருத்தி அங்கே ஓட்டமாய் ஓடிவந்து சாம்பவியின் புடவைக் கொசுவங்களை அழுத்தமாய் பற்றிக் கொண்டு அவள் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அப்பெண்ணின் வாய்க்கருகில் மேலுதடும், நசிந்த மூக்கும் ஒன்று சேர்ந்து போய் பார்த்ததுமே விகாரமாய் தென்பட்டது. கால்களும் கைகளும் சூம்பிப் போயிருந்தன.

சாம்பவி ராதிகாவுடன் பேசிக் கொண்டிருந்தவள் பேச்சை நிறுத்தினாள். அப்பெண்ணின் தலை மீது பரிவோடு கையை வைத்து— ''பேபி! என்னம்மா?'' என்றாள். ''அக்கா! ராதா டாடி வரப்போறாருன்னும், என்னை வீட்டுக்கு அழைச்சுட்டுப் போயிடப் போறாருன்னும் சொல்கிறாள். நான் போக மாட்டேன் அக்கா'' தலையை வேகமாய் ஆட்டினாள் அப்படியும் இப்படியுமாய்.

சாம்பவி பேபியின் தலையைப் பரிவோடு தடவிக் கொடுத்தாள்— ''ராதா உன்னை அழவைக்கத்தான் அப்படிச் சொல்லியிருப்பாள். அது உண்மையில்லைம்மா.

''ஊஹூம், டாடி வந்துடுவார். நான் போகமாட்டேன்.''

''சரி, உனக்குப் பிடிக்காவிட்டால் கூட்டிட்டுப் போ மாட்டார். நான் அனுப்ப மாட்டேன்.''

''நிஜமாகவா?''

''நிஜமாய்தான் சொல்றேன்.'' சாம்பவியின் குரல் குழைவாய் நம்பிக்கையூட்டுவது போலிருந்தது.

பேபி சாம்பவியின் மடியிலிருந்து தலையைத் தூக்கவே யில்லை. ஆனால் அழுத்தமாய் பற்றிக் கொண்டிருந்த புடவைக் கொசுவங்களிலிருந்து கைகள் கொஞ்சம் தளர்ந்தன.

சாம்பவி பேபியின் தலையில் தட்டினாள். பிறகு திரும்பவும் காகிதங்களைக் காட்டி ராதிகாவிடம் விவரம் சொல்லத் தொடங்கினாள்.

அதற்குள் போன் மணியடித்தது. அஞ்சலை வந்து எடுத்தாள். மறுமுனைக் குரலைக் கேட்டு விட்டு— ''மகாலிங்கம் சார்'' என்று சாம்பவியிடம் தந்தாள். அஞ்சலை அப்பெயரைச் சொன்னதிலேயே மிக மதிப்பு தென்பட்டது.

சாம்பவி பேச்சை நிறுத்திவிட்டுப் போனை வாங்கிக் கொண்டாள். அவர் பெயரைக் கேட்டதுமே அவள் முகம் மலர்ந்தது.

''ஹலோ அங்கிள்! உம், ஆமாம். சரி, சாவிக்கொத்தை சத்தியா வீட்டில் கொடுத்துடுங்க. நான் வருவதற்கு ஆறரை ஆயிடும். சரி, காய்கறிகளை நான் வரும்போது வாங்கிக் கொண்டு வந்துடறேன். சரி! ஓகே பை!'' என்று போனை வைத்து விட்டாள்.

திரும்பவும் ராதிகாவிடம்— ''இவற்றையெல்லாம் நீங்கள் வாங்கினாலும் சரி, அல்லது பணம் தந்து எங்களை வாங்கிக்கச் சொன்னாலும் சரி, எங்க ஆபீஸ் சார்பில் போனால் கடைக்காரங்க முப்பது சதவீதம் டிஸ்கௌண்ட் தருவாங்க. வேறு ஏதாவது தேவையாயிருந்தால் உங்க நம்பரை எனக்குப் போன் பண்ணச் சொல்லுங்கள். நாலு ஆறரை மணி வரைக்கும் இங்கேயேதான் இருப்பேன். என்னை வரச்சொன்னால் உங்க வீட்டுக்கு வருவேன். ராஜேஸ்வரி அம்மாவைச் சந்திக்கச் சொன்னால் சந்திக்கிறேன். வீ ஈஸ் எ நைஸ் லேடி! எங்க ஹோம்க்கு நிறைய உதவி பண்ணியிருக்காங்க.''

சாம்பவியின் மடியில் தலைவைத்துக் கொண்டிரு
பெண் இப்பொழுது நிமிர்ந்து மடியில் சாய்ந்தபடி
ராதிகாவையே பார்த்துக் கொண்டிருந்தாள். திரும்ப
போன் மணியடித்தது.

அஞ்சலை எடுத்தாள். சாம்பவியிடம் தந்துவிட்
"பேபியின் டாடி சந்திரன் சார்" என்றாள். தந்தையது
பெயரைக் கேட்டதுமே பேபி திரும்பவும் மடியு
முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

சாம்பவி போனை வாங்கிக் கொண்டாள்.

"ஹலோ! நமஸ்காரம்!" இம்முறை குரல் மி
மரியாதையாய் இருந்தது.

"இதோ, பேபி இங்கேதான் இருக்கிறாள். ஷி ஈ
ஃபைன். படம் வரைந்தாள் நீங்கள் பார்த்தால், ஆச்சரிய
பட்டுப் போவீங்க. எஸ் ஐ திங்க் ஸோ! பேபிக்கு அ
டேலெண்ட் இருக்குன்னுதான் தோணுகிறது. இ
பேசுங்கள்" என்று போனைக் காட்டி— "பேபி! டா
கூப்பிடுகிறார்" என்றாள்.

"ஊஹூம், நான் பேசமாட்டேன்." தலைய
திருப்பிக் கொண்டாள். என்ன சொல்லியும் வரவில்ல

"சாயந்திரந்தான் நீங்கள் வரேனீங்களே. அ
உங்களோடு பேசிக்கிறாளாம். எஸ், ஷீ ஈஸ் எ
கோர்ள். பேபியைப் பற்றிக் கவலைப் படவேண்டா
தாங்க்யூ"— என்று போனை வைத்து விட்டாள்.

"என்ன? அவர் மகளைப் பார்க்க வ
போகிறாராமா?"

"ஆமாம் அஞ்சலை! ஐந்து மணிக்கு வருவார
நாளைக்கு ஊருக்குப் போறார். போகும் முன்
பார்ப்பதற்காக வர்றார்."

"பாலம், எவ்வளவு பாசம்! மகளை வீட்டில்
வைத்துக் கொள்வதற்கு இல்லாத பாசம் பார்ப்பதற்கு
மட்டும் வந்துடுத்து போலிருக்கு."

"அஞ்சலை" சாம்பவி எரிச்சலடைந்தவளாய் கடிந்து
கொண்டாள்.

ராதிகா காகிதங்களை எடுத்துக் கொண்டு புறப்பட்
டாள். எப்பொழுது அந்தச் சூழ்நிலையிலிருந்து வெளி
யேறுவோமோ என்ற துடிப்புடன் மளமளவென்று
வெளியே வந்து விட்டாள். கேட்டைத் தாண்டி
ஸ்கூட்டரை நோக்கி வந்து கொண்டே அம்மாடி என்று
நிம்மதியாய் பெருமூச்சு விட்டுக் கொண்டாள். அந்த
ஊனமடைந்தவர்களின் விகாரமான உலகத்தை விட்டுத்
தான் வெளியேறிவிட்டதைப் போல சந்தோஷம்
ஏற்பட்டது.

ஒருமுறை கால்களையும் கைகளையும் உதறிப்
பார்த்துக் கொண்டாள்.

தான் இவ்வாறு எந்த விகாரமும் இல்லாமல் இருந்தது
எத்தனை அதிர்ஷ்டம் என்பது அவர்களைப் பார்த்த
பிறகுதான் தெரிந்தது. ராதிகா ஸ்கூட்டரை ஸ்டார்ட்
பண்ணினாள்.



மாலை மறைந்தது. கரிய இருள் நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டு வந்தன. நகரத்தில் ஃபிலிம் உற்சவம் நடந்து கொண்டிருந்ததால் வீதிகள் எல்லாம் கலர் கலரான விளக்குகளால் மின்னிக் கொண்டிருந்தன. ஒவ்வொரு கடைகளும் ஒரு கடையை விட இன்னொரு கடை அதிகப்படியாய் இருக்க வேண்டும் என்ற உற்சாகத் தோடும் உறுதியோடும் அலங்கரிக்கப்பட்டிருந்தாற் போல தோன்றிற்று. எந்த பக்கம் திரும்பினாலும் விளக்குகளின் அலங்காரங்கள்தாம்.

கார்கள் விர்ரென்று பறந்து கொண்டிருந்தன.

ஒரு நாற்சந்தியில்—

வலது பக்கத்திலிருந்து வந்த வாகனங்களுக்காக சிவப்பு விளக்கு எரிந்து கொண்டிருந்தது—

கார்கள் எல்லாம் நின்றுவிட்டன. பார்த்துக் கொண்டிருந்த பொழுதே பளபளவென்று மின்னும் கலர் கலரான கார்கள் எல்லாம் வரிசையாய் வந்து நிற்கத் தொடங்கின.

கருப்புக் கண்ணாடியோடு இருந்த ஒரு ஃபியட் காருக்குள் உட்கார்ந்திருந்தவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். டிரைவருக்குப் பக்கத்தில் முன் சீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு ஐம்பது வயது ஆசாமி அலுத்துக் கொண்டான்.

"சாயந்திர வேலை ஆயிடுத்துன்னால் இதுதான் நியூசென்ஸ்!" —அவன் பின் சீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒருத்தியைப் பார்த்து— "மேடம்! இந்த டயத்திற்கு நாம்ப எங்கேயாலது போக வேண்டுமானால் நாம் நினைத்த நேரத்திற்கு அரைமணி முன்னதாகவே கிளம்பிடணும்— இந்தத் தாமதத்தைக் கணக்கிட்டுக் கொள்ளாமல் சிலர் போக வேண்டிய இடத்திற்குத் தாமதமாய் போய்விடுகிறார்கள்" என்றான்.

"நாம்ப அந்த வகையைச் சேர்ந்தவர்கள் இல்லைன்னு நினைக்கிறேன்" என்றாள் அவள்.

அந்த வெளிச்சமும் இருட்டும் கலந்த மங்கலான சூழ்நிலையில் அவள் வயது எவ்வளவு இருக்கும் என்று சரியாய் சொல்லுவது கஷ்டம். அவள் குரல் மட்டும் இருபது வயதுப் பெண்ணின் குரலைப் போல மென்மையாய் இருந்தது. அவள் கட்டிக் கொண்டிருந்த வெள்ளை சில்க் புடவையில் நிழல் விழுந்து கொண்டிருந்தது. அணிந்திருந்த நகைகள் அந்த விளக்கு வெளிச்சத்தில் மினுக் மினுக்கென்று ஒளியை வீசிக்கொண்டிருந்தன. அவ்வுடையும் நகைகளும் அவள் அந்தஸ்தைப் பறை சாற்றிக் கொண்டிருந்தன. கேசங்களைத் தூக்கி முடிந்து கொண்டிருந்தாள் கழுத்து நீளமாய் இருந்தது.

அவள் மடியில் இருந்த ஜரிகை வேலைப்பாடுகள் மிகுந்த பர்சைத் திறந்து அதிலிருந்த கைக்குட்டையை வெளியே எடுத்து நாசுக்காய் மூக்கைத் துடைத்துக் கொண்டாள்.

"ஒரே ஜலதோஷம். புதுத் தண்ணீரால் போலிருக்கு" என்றாள் அவள் கைகளிலிருந்த வளையல்களும், விரலில் அணிந்திருந்த மோதிரமும் ஒரு சிற்பி அழகான ஒரு பெண் உருவத்தைச் செதுக்கி மிக சிரத்தையாய் அதற்குப் பொறுத்தியிருந்த ஆபரணங்களைப் போல தோன்றின.

"மேடம்! நீங்கள் இந்த வேலைத் தொந்தரவில் ஆழ்ந்து போய் ஓய்வே இல்லாமல் இருக்கீங்க. என் பேச்சைக் கேட்டு ஒரு வாரம் பத்துநாள் எங்கேயாவது ஊட்டி போன்ற இடங்களுக்குப் போயிட்டு வாங்க" பக்கத்திலிருந்த பெண் மிகப் பொறுப்பாய் சொன்னாள். அப்பெண்ணின் வயது இருபத்தைந்திற்கு மேல் இருக்கும். வேஷங்கள் சாதாரணமாய் இருந்தன. ஆனால் அவள் கண்கள் மிக உற்சாகமாய், வாழ்க்கையில் என்றுமே எண்ணிப் பார்த்திராததும் எதிர் பாராததும் நடந்து விட்டாற்போல இருந்தன. அப்பெண் அவளைப் பார்த்து-

"மேடம்! உங்களோடு சேர்ந்து நான் இவ்வாறு உங்கள் காரில் பிரயாணம் பண்ணிட்டிருக்கேன்னால் என்னையே என்னால் நம்ப முடியவில்லை. நான் ராமேஸ்வரி மேடத் தோடு சேர்ந்து பிரயாணம் பண்ணினேன்னு சொன்னால் எங்கம்மாவும் அக்காவும் மூர்ச்சையடைந்து விடுவார்கள். உங்கள் பரிச்சயம் ஏற்பட்டது என் அதிர்ஷ்டந்தான்." அடக்கமாட்டாத ஆர்வத்துடன் அவள் சொல்லிக் கொண்டே போகவே, ராமேஸ்வரி— "அப்பப்பா! சியாமளா! உன் புகழுரைகளை இனி நிறுத்து. காலையி லேருந்து பார்க்கிறேன். என்னைப் புகழ்வதை நிறுத்தவே மாட்டேங்கிறாய்! உன்னோடு பிரயாணம் பண்றது ஒரு ஊறுகாய் ஜாடிக்குள் போட்டு அடைச்சுட்டாற்போல இருக்கக் கூடாது" என்றாள்.

முன்னால் உட்கார்ந்து கொண்டிருந்த ஆள் பக்கென்றுச் சிரித்தான். அவனைப் பார்த்துச் சொன் னாள்— "சங்கரன் சார்! ப்ளீஸ், நீங்களாவது சியாமளா விடம் இந்தப் புகழுரைகளையெல்லாம் நிறுத்தச் சொல் லுங்கள்."

"அவை புகழுரைகள் அல்ல மேடம்! உண்மைகள். நாலு வருஷத்துக்கு முன்னால் உங்களிடம் உத்யோகத்திற் காக வந்தபோது நானும் அசல் இந்த சியாமளாவைப் போலவேதான் சந்தோஷத்தால் தலைகால் புரியாமல்

தித்தேன். உங்களுக்காக உயிரைக் கூட தரும் நான் ணம் விட்டுச் சொல்ற வார்த்தைகளை நீங்களும் கேட்க வேண்டியது, மேடம்! இப்பொழுதும் என்னை யாராவது எங்கே வேலை பண்ணுகிறாய் ஓய்' என்று கேட்டால்— மேடம் ராமேஸ்வரியிடம் செக்ரட்டரியாய் வேலை பண்ணிட்டிருக்கேன்' என்று சொல்லிவிட்டால் போதும் என்னை வானளாவத் தூக்கி வைத்துக் கூத்தாடுவாங்க. உங்க பேரும் புகழும், பண்ணுகிற தான தர்மங்களும், உங்க நல்ல மனமும், உங்கள் உயர்ந்த குணங்களும் அப்படிப்பட்டவை மேடம். ரியலி வி ஆர் ப்ரௌட் ஆப் யூ!"

அவர்கள் பேச்சிற்கு இடையூறு விளைவித்த வண்ணம் கார்கள் நின்று கொண்டிருந்ததால் பிச்சைக்காரர்கள் வந்து கூடி விட்டார்கள்.

"அம்மா, தர்மம் போடுங்க"— ஒருத்தன் தகர டப்பாவைக் காட்டினான்.

"ஐயா, பசி" ஒருத்தி வயிற்றில் அடித்துக் கொண்டாள்.

"தம்பீ! குழந்தை குட்டிங்க இருக்கிற தாய் அப்பா!" நூறத்தில் படுக்க வைத்திருந்த குழந்தையைக் காட்டினாள்.

"போங்க, போங்க" சங்கரன் கடிந்து கொண்டான்.

"போங்க தூர. தெருவில் கொஞ்சம் நின்றுட்டால் போதும். இலங்க ரோதனை ஒண்ணு. உயிரை எடுத்துடு வாங்க," சியாமளாகூட எரிந்து விழுந்தாள்.

ராமேஸ்வரி தேவி கண்ணாடிக் கதவைக் கீழே இறக்கி, வெளியே விளக்குகளின் ஒளி வெள்ளத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அந்த வரிசையான சோடியம் விளக்குகள் எவ்வளவு அழகாய் இருக்கு, இல்லே?" என்று சொல்லிக் கொண் டிருந்தாள்.

அதற்குள் மாசடைந்த தாடியுடனும் கிழிந்த உ
யுடனுமிருந்த ஒரு இளைஞன் காருக்கருகில் வந்தா
பிச்சை போடச் சொல்லி அவளை நோக்கிக் கை
நீட்டினான்.

''ஏய், அப்பால் போ'' சியாமளா எரிந்து விழுந்தா

அவன் போகவில்லை.

''கையை உடைத்தெறிஞ்சு விடுவேன், கையை எடு
றாயா இல்லையா'' சங்கரன் கத்தினான்.

அந்த கத்தலுக்கு அவன் பயப்படவில்லை. கை
எடுக்கவும் இல்லை. பிடிலாதமாய் நீட்டிய கை
அப்படியே வைத்துக் கொண்டிருந்தான். இளைத்
தேய்ந்து போய் எலும்புக் கூடாய் இருந்த அக் கை
அழகும், செல்வமும், ஆரோக்கியமும் நிரம்பிய அ
களுக்கு முன்னால் மேலும் விகாரமாய் இருந்தது.

''ஏய்; உனக்குத்தான் சொல்றது! போ'' டிரை
சிள்ளென்று எரிந்து விழுந்தான்.

அவன் அப்பொழுது கூட கையை எடுக்கவில்
கையை இன்னும் கொஞ்சம் உள்ளுக்கு நீட்டினான். அ
கைவிரல்கள் அவள் தொடைமேலிருந்த பர்ஸிற்குள்
வந்தன. அதைப் பார்த்ததுமே டிரைவருக்கு அ
கோபம் வந்துவிட்டது. இறங்கி அவனைப் பிடி
கன்னங்களில் மாறிமாறி அறைந்து விட்டு, வேகமா
பிடித்துத் தள்ளினான். அவன் தள்ளிய தள்ளலுக்கு அ
போய் நடை பாதையின் மேல் விழுந்தான்.

எஞ்சிய கார்களில் இருந்தவர்களும் ஸ்கூட்டர்க
இருந்தவர்களும் இக்காட்சியைப் பார்த்துக் கொண்
இருந்தார்கள்.

டிரைவர் வந்து காரில் உட்கார்ந்துக் கொண்
படீரென்று ஓசையுடன் கதவைச் சாத்திக் கொண்டா

அவன் முகத்தில் தன் கடமையைத் தான் அளவுக்கும் மீறியே நிறைவேற்றி விட்டோம் என்ற மன நிறைவு தென்பட்டது.

''ஜோக்கையய்யா! உனக்கு எல்லாம் அவசரந்தான்! கொஞ்சம் பொறுத்தால் அந்த தடியனே போயி ருப்பான்!''— என்று நாகூக்காய் விரல் நுனியால் ஜரிகை பர்சைத் திறந்து அதிலிருந்து வைக்கப்பட்ட நாணயங் களை அள்ளி நடைபாதை மேல் மூட்டையாய் விழுந்து கிடந்த அந்தப் பிச்சைக்காரனின் மீது வீசியெறிந்தாள். அவை போய் அவன் முதுகின் மேல் விழுந்தன.

அதற்குள் சிவப்பு விளக்கு மறைந்து பச்சை விளக்கு எரிந்தது. நகர்ந்த கார்கள் விர்ரென்று ஒன்றைத் தொடர்ந்து இன்னொன்றாய் பறக்கத் தொடங்கின.

அவள் இருந்த அந்த வெள்ளை ஃபியட் போன போது அதிலிருந்து வந்து வீசிய வெளிநாட்டு சென்ட்டின் நறுமணம் அவ்விடமெல்லாம் சுகந்தத்தை அள்ளி வீசி விட்டுப் போயிற்று.

காரில் போய்க் கொண்டிருக்கையில் சங்கரன் சொன்னான்— ''மேடம்! நீங்க ஜோக்கய்யாவை ஆவேசப் பட்டான்னு கடிந்துக் கொண்டீங்க. ஆனால் எனக்கும் அதுபோல ஆவேசம் வந்தது. அந்த திருட்டு ராஸ்கலைத் தள்ளிக் கொன்று போட்டு விடணும் போல ஆத்திரம் வந்தது. இந்தப் பிச்சைக்காரங்களையே நம்பக் கூடாது. அவங்க இப்படித்தான் நம்மிடம் கை நீட்டுவாங்க. அது அவங்க தொழில்.

துறுவித்துறுவிக் கேட்டால் அவங்க ஒவ்வொருத்தனுக் கும் பாங்க் அகௌன்ட் இருக்கும். அவங்க சொல்ற துன்பங்கள் எல்லாம் பாதிக்கு மேல் எட்டுக் கட்டிச் சொல்றதுதான். அது எல்லோருக்கும் தெரியும்.''

அவள் மிக யோசனையுடன் சொன்னாள்— ''சங்கரன்? நமக்கு இந்தப் பிச்சைக்காரர்களின் பிராப்ளம்

ரொம்பத் தலைவலி இல்லையா? நாம்ப சில நாடுகளுக்
எழுதி ஃபண்ட் கலெக்ட் பண்ணி பிச்சைக்காரர்களி
விடுதியை ஏன் கட்டக்கூடாது?''

''வெரிகுட் மேடம்! மார்வலெஸ் ஐடியா! அ
விதமாய் நாம்ப ஒரிருமுறை வெளிநாட்டு ட்ரிப் அடிச்சுட்
வரலாம். நாம்ப ஒர்க் அவுட் பண்ணலாம் மேடம்''
கார் சர்க்கிளைத் தாண்டி கண் மறைவாயிற்று.

நடைபாதையில் மூட்டையாய் விழுந்துகிடந்
அவனை நோக்கி ஒரு போலீஸ் கான்ஸ்டேபிள் வந்தார்
தோளில் தட்டிவிட்டு— ''ஏய் மிஸ்டர் எழுந்திரு'' என்
கூடிந்து கொண்டே எழுப்பி நிறுத்தினான்.

அவன் எழுந்திருக்க முடியாதவனாய் பலவந்தமா
எழுந்து நின்றான்.

''வா, ஸ்டேஷனுக்கு'' லாட்டியால் தட்டினான்.

''அவன் என்ன பண்ணினாங்க!'' என்றான் பக்க
திலிருந்த பழ வண்டிக்காரன்.

''என்ன பண்ணினானா பப்ளிக் நியூசென்ஸ
யிட்டான். கார்களையெல்லாம் சுற்றிச் சுற்றி வந்துட்
வாயில் வந்தபடி பேசுகிறான்.''

''பாவம், அவன் வாயையே திறக்கமாட்டா
னுங்களே!''

''உஷ், நீ சும்மாயிரு இந்த ஆளுக்குக் கேஸ் எதுவு
கிடைக்கலை போலிருக்கு. மாதக் கடைசியாச்சே!
என்றான் செருப்புத் தைப்பவன். ''அவன் தினமும் வ
பிச்சைக்காரன் இல்லைங்கு ஏதோ அவ்வப்போது வந்த
பிச்சை எடுப்பான்! ஒரு தடவை வந்தானானால் ஒரு
வாரம் வரை கண்ணில் படவேமாட்டான்'' என்றான்
பழக்காரன்.

போலீஸ் கான்ஸ்டேபிள்? அவனைத் தள்ளிக்
கொண்டே அழைத்துப் போய்க் கொண்டிருந்தான்.

''எனக்கென்னவோ சந்தேகம். ஏதாவது சி. ஐ. டி.
யாய் இருப்பான். அப்படித் துள்ளி விழுவது எல்லாம் ஒரு
டிப்பாய் இருக்குமோ என்னவோ?''

''அப்படியும் இருக்குமோ?''

''என்னவோ? இந்த காலத்தில் யாரை நம்ப முடியுது?
ார் எப்படிப்பட்டவங்கன்னு நம்மால் ஊகித்துக்
கொள்ள முடியவில்லையே'' என்றான்.

●:○○○○:●
○ ○
○ 4 ○
○ ○
●:○○○○:●

''மிஸ்டர் மகாலிங்கம்! இவன் உங்களுக்கு என்ன
றவாக வேண்டும்?'' —போலீஸ் ஸ்டேஷனில் போலீஸ்
பரின்டென்ட் கேட்டார். அவருக்கெதிரே உயரமாய்
ருமனாய், கட்டை மீசையுடன், வழுக்கைத் தலையுடன்
ண்டுப் பூனையைப் போன்ற முகத்துடன் உட்கார்ந்
ருந்தார் மகாலிங்கம். அவர் தலை பெரும்பாலும்
ரைத்திருந்தது. கையில் சிகரெட் துண்டு.

''யாராவது நமக்கு ஏதாவது ஆகணும், ஆகவேண்
ம் என்று நினைச்சுக்கிறதெல்லாம் கேவலம். நாம்ப
ணைக்கிற விதத்தில்தான் இருக்கு மிஸ்டர் சூபரின்-
ன்ட்!'' என்றார் அவர். அவர் அந்த நாற்காலியில்

பின்னுக்குச் சாய்ந்து கொண்டு மிடுக்காய் உட்கார்
திருந்த விதமும், அந்த சிகரெட்டைப் புகைத்துக் கொ
டிருந்த விதமும், முறுவலுடன் தென்பட்ட விதத்தை
பார்த்தால் அவருக்கு அவனைப்பற்றிய விஷயமெல்லா
தெரியும் என்றும், இந்த உலகத்தில் பந்தம் பா
என்றெல்லாம் சொல்லிக் கொண்டு மனிதர்கள் அனுப
கும் தொல்லைகளையெல்லாம் தொலைவிலிருந்
பார்த்து மகிழ்ந்து கொண்டிருப்பவர் என்றும் புரிந்த

''சொல்லுங்கள் மிஸ்டர் மகாலிங்கம் இவன் உங்
பிள்ளையா?''

''நீங்க ஆமான்னு சொன்னால் ஆமாம். இல்லைன்
சொன்னால் இல்லைன்னு நினைச்சுக்குங்க.''

அங்கிருந்த இன்னொரு கான்ஸ்டேபிள் அலமாரிக்கு
ஃபைல்களை வைத்துப் பூட்டி விட்டு, ''மகாலிங்கம் சா
கடுமையான பிரம்மச்சாரி என்று அந்த வீதியிலிரு
கிறவங்க எல்லோருமே ஒரு மனதாய் சர்டிஃபிகே
தந்துட்டாங்க,'' என்றான்.

''இதென்னது? கல்யாணம் ஆயிருந்தால்தா
குழந்தைங்க இருக்கணும்னு இல்லையே?'' சூபரே
டென்ட் ஜோக் அடித்துவிட்டுச் சிரித்தார்.

''யு ஆர் கரெக்ட்'' என்றார் மகாலிங்கம்.

அதைக் கேட்டு அங்கிருந்த எல்லோரும் பக்கென்
சிரித்து விட்டார்கள்.

தொலைவில் கான்ஸ்டேபிள் சிறையின் பூட்டை
திறந்து, அதற்குள் உட்கார்ந்திருந்த அந்த தாடிப் பிச்சை
காரனை வெளியே விட்டுக் கொண்டிருந்தான்.

''அவனுக்கு ஏதாவது நோயா? ஏன் அப்படி எலும்
தோலுமாய் இருக்கிறான்?'' துறுவிக் கேட்டார் போலீ
ஆபீசர்.

மகாலிங்கம் தலையாட்டினார். போலீஸ் ஆபீசர் இரக்கத்தோடு சொன்னார்—

''இவன் உங்கள் ஆள் என்கிறீங்க. ஆனால் இந்த மாதிரி தெருவில் அலைந்து திரிந்து பிச்சை எடுத்துட்டி ருப்பது உங்களுக்கு மானம் போறாப்போல இல்லையா?''

மகாலிங்கம் அந்த வார்த்தையைக் கத்திரித்து விட்டார். ''இதப் பாருங்கள் ஆபீசர் சார். இந்த உலகத் தில் ஒவ்வொரு மனிதனும் ஒரு பைத்தியக்காரன்தான். மானத்திற்காகவோ, பணத்திற்காகவோ, காதலுக் காகவோ பிச்சை எடுத்துட்டு எல்லோருக்கும் பின்னால் சுற்றிச்சுற்றி வந்து இவனையும் விட அசிங்கமாய் நடந்துக் கிறாங்க என்ன சொல்றீங்க?''

''போலீஸ் ஆபீசர் உடனே வாய்விட்டுச் சிரிக்க வில்லை. ''யு ஆர் கரெக்ட்'' என்று சொல்லவில்லை. முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டார். அவருக்குத் தன் பிரமோஷனுக்காக எல்லோருக்கும் பின்னால் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பது நினைவிற்கு வந்தது. அது தெரிந்துதான் இந்தப் பெரிய மனிதர் தன்னை இவ்வாறு குத்திக் காட்டுகிறாரோ என்று ஓரக்கண்ணால் பார்த் தார். ஆனால் மகாலிங்கத்திடம் அந்த விதமான சிலேடை எதுவும் தென்படவில்லை. அவர் தோரணையே அவ்வாறு தான் எப்பொழுதும் கலகலப்பாய் சிரித்துக் கொண்டே யிருப்பார். சிறியவர்கள் பெரியவர்கள் எல்லோருடனும் ஒரே விதமாய் கலந்து போய் விடுவது அவர் வழக்கம். எப்பொழுதும் ஏதாவது ஒரு ஜோக் அடித்துக்கொண்டு சுற்றுப் பக்கத்திலிருப்பவர்கள் எல்லோரும் கொல்லென்று சிரிக்கும்படியாய் செய்து கொண்டிருப்பார்.

சிறையிலிருந்து விடுதலை கிடைத்துவிட்டதால் அவன் வந்தான். பேசாமல் அங்கே நின்று கொண்டான். அவனைக் கொஞ்சங் கூர்ந்து கவனித்தால் அவன் பார்வையோ கவனமோ இங்கே எங்குமே இல்லை என்று

புரியும். எங்கோ வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான். இச்சூழ்நிலையோடும் இந்த மனிதர்களோடும் தனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதுபோல இருந்தான். சிறைக்குள் கூட அவன் சலனமில்லாமல் தான் உட்கார்ந்திருந்தான். அவ்வாறு உட்கார்ந்திருப்பது எங்கே உட்கார்ந்திருந்தாலும் தான் என்ன, இந்த பூமி முழுவதுமே ஒன்றுதான், எங்கே உட்கார்ந்திருந்தால்தான் என்ன என்ற தோரணை தென்பட்டது. போலீஸ் சேவகன் வந்து சிறைக் கதவைத் திறந்து வெளியே விட்ட போதும் அவன் முகத்தில் எந்த சந்தோஷத்தையும் காணோம். அதே சலனமின்மை!

அவன் ஒரு நிமிஷம் நின்றான்.

தொலைவில் மகாலிங்கமும் போலீஸ் அதிகாரிகளும் சேர்ந்து பக்கென்று சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் யாருமே தனக்கு சம்பந்தமில்லாதவர்கள் என்றாற்போல அவன் தலை குனிந்தபடி போகத் தொடங்கினான்.

"அடேய், போகாதேடா அப்பனே! நானும் வந்துடேன்! இந்தாப்பா கான்ஸ்டேபிள் தம்பி! எ பிள்ளையை நிறுத்துப்பா" என்று மகாலிங்கம் பரபரபுடன் நாற்காலியை விட்டு எழுந்திருந்தார். போலீஸ் ஆபீசருடன் கை குலுக்கி விட்டு— "ஓ. கே. சார். குநைட்! தாங்க் யூ! என் பையனைக் கொஞ்சம் ஞாபகவெச்சுக்குங்க. ஜெயிலில் போட்டாலும் பரவாயில்லை நான் வந்து விடுதலை பண்ணிக் கூட்டிட்டுப் போயிவேன். ஆனால் அவன் உடம்பில் மட்டும் கையை வெச்சுடாதீங்க அவன் ஏற்கனவே எலும்புக்கூடு. தாங்கிக் முடியாமல் மண்டையைப் போட்டுடுவானோன்னு பயமா எனக்கு."

அதைச் சொன்னபோது அவர் கண்கள் என்னதான் குறும்புத்தனமாய் சிரிக்க முயன்றாலும் அது தீவிரமாய்

மாறிற்று. "கொஞ்சம் கண்டும் கண்டுக்காமல் விட்டுடச் சொல்லி உங்க ஆளுங்களுக்குச் சொல்லுங்க."

அவர் பக்கத்திலிருந்த ஹெல்மெட்டை எடுத்துக் கையிடுக்கில் வைத்துக் கொண்டு கிளம்பினார். அவர் மளமளவென்று நடந்து வந்து அந்த தாடிக்கார இளைஞனின் தோளில் கையை வைத்து கிட்டே அணைத்துக் கொண்டார். அவ்வாறு அணைத்துக் கொண்டதைப் பார்த்ததால் அவனுக்குத் தந்தையோ, அல்லது உயிரைக் கொடுக்கும் நண்பராகவோதான் இருக்க வேண்டும் என்று புரிந்தது. அவன் தோளைச் சுற்றிக் கைகளைப் போட்டுக் கொண்டே மோட்டார் சைக்கிளை நோக்கி நடத்தி அழைத்து வந்து கொண்டிருந்த அவர் கெஞ்சினாற்போல— "பரிஷித்! உனக்கு எல்வளவு தடவை சொல்லியிருப்பேன்? நீ என்ன வேணும்னாலும் பண்ணு, ஆனால், அந்த மாதிரி கார்களைச் சுற்றிச் சுற்றி வராதேன்னு சொல்லவில்லையா? ரெண்டு தடவை நான் ஊரில் இருந்ததால் சரியாச்சு. இல்லாவிட்டால் உன் கதி என்ன? அவங்க ஒரு உதை உதைத்தாங்கன்னால் போதும். உன்னால் எழுந்திருக்கவும் முடியாது." அவர் ஹெல்மெட்டைத் தலையில் மாட்டிக்கொண்டு மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் பண்ணினார்.

அவன் அவரோடு போய் நன்றாய் பழக்கப்பட்ட வனைப்போல பின்னால் உட்கார்ந்து கொண்டான் இயந்திர கதியில்.

"என் இடுப்பைச் சுற்றிலும் கைபோட்டுக் கோடாப்பா. நடுவில் நீ எங்கேயாவது குதித்துவிட்டாலும் நான் தெரிஞ்சுக்க முடியும்." எச்சரிப்பது போல சொன்னார் அவர். மோட்டார் சைக்கிள் ஸ்டார்ட் ஆயிற்று. ஒரு பர்லாங்கு கூட வரவில்லை. அவன் தலை அவர் முதுகின் மேல் சாய்ந்தது. "தூங்காதே" கத்தினார் அவர்.



வறுமையால் பீடிக்கப்பட்டவர்கள் வசித்து வந்
வீதி அது. இடுக்கான சந்துகள். பழங்கால வீடுகள். எந்
வீட்டில் பார்த்தாலும் வீடு முழுவதும் பெரியவர்களும்
சிறியவர்களும், பெண்களும், சிறுவர்களும் குழந்
களுமாய் நிரம்பி வழிந்து கொண்டிருந்தார்கள்.

அதிக வாடகை கொடுக்க முடியாமல் எவ்வள
குறைவாய் முடியுமோ அல்லவு குறைந்த வாடகையை
தந்து கொண்டு, முடிந்த வரையிலும் வீட்டிற்கு வெ
யிலே கட்டில் மீதும், திண்ணை மீதும், மரத்தடியிலுமா
கழித்துக் கொண்டிருப்பவர்கள் அவர்கள். ஒருத்
வாழ்க்கையைப் பற்றி இன்னொருத்தருக்குப் புத்தகத்தை
படித்துத் தெரிந்து கொள்வது போல அத்தனை நன்றா
தெரியும். மறைத்து வைக்க முயன்றாலும் அங்
நடக்காது. ஏனெனில் அங்கே மனிதனுக்கும் மனிதனுக்
மிடையேயும் குடும்பத்திற்கும் குடும்பத்திற்குமிடையேயு
இருந்த இடைவெளி குறைவு. கணவன் மனைவி
சரசமாடினாலும் தெரிந்து விடும். மாமியாரும் மருமகள்
பேசிக் கொண்டாலும் கேட்டு விடும். தந்தையும் மக
களும் சண்டை போட்டாலும் எல்லோருக்கும் புரிந்
போய் விடும். 'என் வாழ்க்கை என்னுடையது' என்
தனித்துவமோ, தனிமையோ கொஞ்சமும் கிடைக்கா
வாஸஸ்தலம் அது. அந்த வீதியில் யார் வீட்டில் எ
இருக்கிறார்கள் என்பதெல்லாம் எல்லோருக்கும் மன
பாடமே. எல்லோருடைய பொருளாதார கஷ்டங்களு

எல்லோருக்கும் தெரியும். சிலர் ரகசியமாய் நடத்த
விரும்பும் காதல் கதைகளும் தெரியும். அந்த வீதியில்
இரண்டு கட்சிகளாய் இருந்தார்கள் மனிதர்கள். ஆனால்
மகாலிங்கம் அவ்விடத்திற்கு வந்த பிறகு அவர்களுடைய
சண்டை சச்சரவுகளும் பூசல்களும் சற்று குறைந்தன.
அந்த வீதிக்கு அவர்தான் பெரிய தலை.

அந்த வீதியின் நடுவே இருந்த வீட்டிற்கு முன்னால்
வந்து நின்றது ஒரு ரிக்ஷா. சாம்பவி ரிக்ஷாவிலிருந்து
இறங்கி, சீட்டின் மேல் வைத்திருந்த காய்கறிக் கூடையைக்
கையிலெடுத்து கொண்டாள். ஊரில் நிகழ்ந்து கொண்
டிருந்த ஃபிலிம் உற்சவத்தின் தடபுடல் அந்த சந்திலும்
பரவிவிட்டிருந்தது என்பதற்கு அடையாளமாய் அங்கிருந்த
பெட்டிக்கடைகூட கலர் கலர் பல்புகளால் அலங்கரிக்கப்
பட்டிருந்தது. சாம்பவி ரிக்ஷாகாரனுக்குப் பணத்தை
எண்ணிக் கொடுத்துக் கொண்டிருந்தபோது பக்கத்து
வீட்டு நாகமணி ஓட்டமாய் ஓடிவந்தாள். அவள்
பேரனுக்கு சாதம் ஊட்டிக் கொண்டிருந்தாள். ''சாம்பவி!
இந்தா சாவிக்கொத்து. உங்க மாமா வீட்டில் இல்லை.
என்னிடம் தந்துட்டுப் போனார்.'' என்று தலைப்பில்
முடிந்து கொண்டிருந்த சாவிக் கொத்தை எடுத்துத்
தந்தாள்.

சாம்பவி வாங்கிக் கொண்டாள். நாகமணியின்
கண்கள் சாம்பவியின் கையிலிருந்த காய்கறிக் கூடைமேல்
பட்டன. கண்கள் அகல விரிய— ''அதென்ன? வெள்ளரிக்
காயா? எவ்வளவு நன்றாய் தளதளன்னு பிஞ்சாய்
இருக்கு! வாயில் வைத்துக் கொண்டால் எவ்வளவு நன்றா
யிருக்கும்!'' —என்று சொல்லிக் கொண்டே ஒரு காயை
எடுத்து வாயில் போட்டுக் கொண்டு ருசி பார்த்தாள்.
சாம்பவிக்குக் கோபம் வந்தாலும் பெரியவளாயிற்றே
என்று பேசாமலிருந்தாள்.

அதற்குள் சாம்பவியைப் பார்த்துவிட்டு தொலைவில்
திண்ணையில் படுத்துக் கொண்டிருந்த நாய்க்குட்டி ஒன்று

எழுந்து காச்சு மூச்சென்று கத்திக் கொண்டும் அழு
கொண்டும் ரகளை பண்ணத் தொடங்கிற்று. அ
எப்பொழுதும் போல துள்ளிக் குதித்துக் கொண்டு
வரவில்லை.

''புஜ்ஜி'' என்றாள் சாம்பவி. அந்நாய்க் குட்டியை
பார்த்ததுமே கையால் சிட்டிகையிட்டு.

நாய் வரவில்லை. ஆனால் அதன் அழுகை இன்னு
அதிகமாயிற்று.

நாகமணி சட்டென்று சொன்னாள்— ''இ
பாரும்மா! மத்யானம் உங்க நாய்க்குட்டி மேல் சைக்கி
ஏறிடுத்து. கால் உடைந்துடுத்து போலிருக்கு'' என்றா

''ஆ!'' என்று நாய்க்குட்டியிடம் ஓடினாள் சாம்ப
அது சாம்பவியின் மேல் விழுந்து புரண்டு ரக
பண்ணிற்று. அழுதது, கத்திற்று. நாக்கை வெளி
நீட்டி தன் சந்தோஷத்தை வெளிப்படுத்திற்று.

''என்னம்மா ஆச்சு புஜ்ஜி?'' சாம்பவி கா
கூடையைக் கீழே வைத்து விட்டு நாயைத் தூக்கிக் கொ
டாள். காலைத் தொட்டுப்பார்த்த போது அது வலியா
கத்திற்று. காலில் பலமான அடிதான் பட்டிருந்த
நாய்க்குட்டியைத் தூக்கிக் கொண்டு பூட்டைக் கை
எடுத்தாள்.

''நான் போறேம்மா'' என்றாள் நாகமண
பேரனுக்குத் தந்து கொண்டிருந்த சாதத்தை மளம
வென்று இரண்டு கவளம் வாயில் போட்டுக்கொண்டா

பாவம்! சாம்பவிக்கு அவளைப் பார்த்தால் இர
மாய் இருந்தது. சக்களத்தியின் மகன், மருமகள், குழந்
கள், போதும் போதாததுமான சம்பளம். அவளை அ
போல வீட்டில் வைத்துக் கொண்டிருப்பதே பெரிது. அ
வீட்டில் வயிறார யாருமே சாப்பிட மாட்டார்கள். அவ
அக்கம் பக்கத்தார் வீடுகளுக்குப் போய் ஏதோ வம்பு பே

விட்டு எதையாவது சாப்பிட்டு அதிகப் பசியைத் தீர்த்துக் கொள்வாள்.

சாம்பவி அவளுக்கு அரவணைப்பு இல்லத்தில் அடெண்டர் வேலை வாங்கித் தருவதாய் சொன்னாள். ஆனால் மகன் ஒரேயடியாய் மறுத்து விட்டான். ''என்னால் உனக்குச் சாப்பாடு போட முடியாதா?'' என்றான். அவனை மீறக்கூடிய துணிச்சல் அவளுக்கு இல்லை. இவ்வாறு சக்தி இருந்தும் தம் காலில் தாம் நிற்க முடியாத பெண்கள் எத்தனை பேரோ?

சாம்பவி நாய்க்குட்டியைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குள் வந்தாள். முதலில் அதை எடுத்து வந்து ஒரு நாற்காலியில் படுக்க வைத்துவிட்டு அலமாரியிலிருந்த ஸெப்டிக் பெளட்ரையும் பஞ்சையும் கொண்டு வந்து அதன் காலில் போட்டுக் கட்டுக் கட்டினாள். அது ரகளை பண்ணிற்று.

''குறைந்து போயிடும். ரகளை பண்ணாதே. புஜ்ஜி, நல்ல நாய் இல்லையா? இரு பால் கொண்டு வரேன்''— என்று எழுந்திருந்தாள்.

நாய்க்குட்டி 'பால்' என்ற வார்த்தையைக் கேட்ட துமே நாக்கில் ஜலம் சொட்டச் சப்புக் கொட்டிக் கொண்டது.

சாம்பவி சமையலறைக்குப் போய் பாலை வெது வெதுப்பாய் சூடு பண்ணிக் கொண்டு வந்து முதலில் அதன் பிளேட்டில் ஊற்றிச் சாப்பிட செய்தாள். அதற்கு நல்ல பசி போலும்! மடக்மடக்கென்று குடிக்கத் தொடங்கிற்று. சாம்பவி அதன் முதுகைத் தடவிக் கொடுத்தாள். பால் குடித்த பிறகு அதன் ரகளை கொஞ்சம் குறைந்தது!

சாம்பவி போய் கால் கைகளைக் கழுவிக் கொண்டு வந்தாள். உடைமாற்றிக் கொண்டு சமையலறைக்குப் போய் தேநீர் கெட்டிலை அடுப்பின் மீது வைத்து விட்டு

மூன் அறைக்கு வந்து கூந்தலை அவிழ்த்துப் பின்னி கொண்டிருந்தாள்.

அதற்குள் வாசலில் மோட்டார் சைக்கிள் வந்து நின் ஓசை கேட்டது. அந்த சப்தத்தைக் கேட்டதுமே நாற்கா யில் சுருண்டு படுத்துக் கொண்டிருந்த நாய் குட்டி ச லென்று வாரிச் சுருட்டி கொண்டு எழுந்து கத்தி, அழு ரகளை பண்ணத் தொடங்கிற்று.

சாம்பவி வாசலில் வந்து நின்றாள்.

வாசலில் மகாலிங்கம் பரிஷித்தின் தோள்களை சுற்றிக் கைகளைப் போட்டு கொண்டு உள்ளே அழைத்து வந்து கொண்டிருந்தார்.

சாம்பவி நிசப்தமாய் அவ்விருவரையும் பார்த்து கொண்டிருந்தாள்.

அவர் உள்ளே வந்ததுமே சாம்பவியைப் பார்த்து ''வந்தாயாம்மா! நம்ப பையன் இன்றைக்குத் திரும்பவு மாமனார் வீட்டுக்குப் போயிட்டு வந்திருக்கான். எனக்கு தெரிஞ்ச சப் இன்ஸ்பெக்டராய் இருந்ததால் போ பண்ணினார். கொஞ்சம் தாமதமாகியிருந்தாலும் நா கடையை விட்டுப் போயிருப்பேன். சரியாய் அந்த சமயத்தில் போன் வந்தது போலீஸ் ஸ்டேஷனுக் ஓடினேன். நான் போகாமலிருந்திருந்தால் ராத்தி பூராவும் இவன் அங்கேயே தங்கியிருக்கும்படி நேர்ந்திரு கும். போன தடவை மாதிரி ஆள் எங்கே போனான்னு நான் தேடித் தேடி அலைவதற்குள் ரெண்டு மூணு நா ஆயிருக்கும்.''

சாம்பவி அவர் வார்த்தைகளை சிரத்தையா கேட்டுக் கொண்டே அவர் கையிலிருந்த ஹெல்மெட்ட வாங்கி அலமாரியில் வைத்தாள். பரிஷித் அங்கே நிற் வில்லை. நிசப்தமாய் அந்த வார்த்தைகள் எதுவு தனக்குச் சம்பந்தப்பட்டவை இல்லை என்றாற்போ

அங்கிருந்து வலது பக்கமாய் இருந்த அறைக்குள் போய் விட்டான்.

அவன் அவ்வறைக்குள் நுழைந்த கொஞ்ச நேரத் திற்குள் அவ்வறையில் எரிந்து கொண்டிருந்த விளக்கு டக்கென்று அணைந்து விட்டது.

அதற்குப் பிறகு வேறெந்த சப்தமும் கேட்கவில்லை. சாம்பவி சமையலறைக்குள் போய் தேநீர் கெட்டிலைக் கீழே இறக்கி, மகாலிங்கம் கொல்லைப் பக்கம் போய் கைகால் கழுவிக் கொண்டு திரும்பி வருவதற்குள் தேநீரைத் தயாரித்து, இரண்டு கோப்பைகளில் ஊற்றிக் கொண்டு வந்து அவரிடம் தந்தாள். அவர் ஒன்றை எடுத்துக் கொண்டு, இன்னொன்றையும் தூக்கிக் கொண்டு அந்த அறையை நோக்கித் திரும்பி— ''பரிஷித்'' என்று கூப்பிட்டார்.

அறையிலிருந்து பதில் வரவில்லை.

''பரிஷித்! ஏய் பரிஷித்! இப்படி வா! வந்து தேநீர் குடி. சாம்பவி தேநீர் போட்டிருக்கிறாள். ரொம்ப நன்றாயிருக்கு'' என்று கூப்பிட்டார்.

அறையிலிருந்த இருட்டில் மாறுதல் இல்லை.

அவர் தேநீர் கோப்பையை எடுத்துக் கொண்டு அறைக்குள் போனார். தொடர்ந்து சாம்பவியும் போனாள். அவ்விடமெல்லாம் காரிருள்!

ஆள் இருக்கிறானா இல்லையா என்று எந்த சந்தடியும் இல்லை!

''ஏய் பரிஷித்'' அவர் திரும்பவும் கூப்பிட்டார். அறைக்குள் வாசல் பக்கமாய் இருந்த சுவிட்சைத் தட்டினார் அவர். விளக்கு எரிந்தது.

அவன் அறையின் தரையில் குப்புறப் படுத்துக் கொண்டிருந்தான். அவனிடம் சலனம் இல்லை.

''பரிஷித்! தேனீர் குடி'' என்றார் அவர்.

அவன் அசையவில்லை.

அவனிடம் போய் உட்கார்ந்து கொண்டு தோளை பிடித்துக் குலுக்கினார். அவன் ஆழ்ந்த உறக்கத்தி ஆழ்ந்திருந்தாற்போல தோன்றிற்று.

அவன் உறக்கத்தைப் பார்த்து அவர் மகிழ்ச்சியடை வில்லை! ஆழ்ந்து பெருமூச்சு விட்டு விட்டு எழு திருந்தார்.

''வாம்மா, போகலாம்'' என்றார் எழுந்து நடந்தபடி

சாம்பவி விளக்கை அணைக்கப் போனவள் அவ முகத்தைப் பார்த்தாள்.

மகாலிங்கம் தோளைத் தொட்டு அவனைக் குலுக்கி தால், அவன் கொஞ்சம் மல்லாந்து இந்த பக்கமா திரும்பியிருந்தான்.

அவன் முகம் இந்த உலகத்திலுள்ள வேதனைகளுக்கும் தனிமைக்கும் மாறுபெயராய் இருந்தது. அவன் ஒ இருண்ட குகை. தன்னைச் சுற்றிலும் மௌனம் என்ற ஒரு மகாபயங்கரமான சுவற்றை ஏனோ கட்டிக் கொண் டிருந்தான்.

ஒரு வினாடி அப்படியே சிலையாய் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தாள். யாரிடமாவது துன்பத்தைப் பார்த்தால் அவளையே அறியாமல் அவர்களைத் தேற்ற வேண்டும் என்றும், ஆறுதல் சொல்ல வேண்டுமென்றும் அவள் மனம் தவிக்கத் தொடங்கிவிடுவது வழக்கம்.

அவனை அவ்வாறு பார்த்தபோது சாம்பவியின் இதயத்தில் ஒரு கருணை ஒளி தோன்றி, அவன்பால் பொங்கி எழச் செய்தது.

அதற்குள் வாசலிலிருந்து ''மகாலிங்கம் சார்'' என்ற பக்கத்து வீட்டு சத்தியா அழைத்த குரல் கேட்டது.

''இன்றைக்கு எங்கள் சியாமளாவின் பிறந்த நாளுங்க. இதோ உங்கள் ஆசிர்வாதத்திற்காக அழைச்சுட்டு வந்தேன். அங்கிளுக்கு நமஸ்காரம் பண்ணும்மா'' என்று சொன்னாள்.

''வாங்க வாங்க'' மகாலிங்கம் வரவேற்றார்.

''நீங்க ரொம்பவும் பசங்களை இப்படி எல்லோருக்கும் நமஸ்காரம் பண்ணச் சொல்லிப் பழக்கக் கூடாது. அவங்க நாக்குப் பெரியவங்களான பிறகு நமஸ்காரம் பண்ணிப் பண்ணியே வேலை வாங்கிக் கொள்ள நன்றாய் பழக்கப் பட்டுப் போய் விடும், ஜாக்கிரதை'' —என்று பயமுறுத் தினார்.

சாம்பவி அறையின் விளக்கை அணைத்துவிட்டு வெளியே வந்து விட்டாள்.

6

மகாலிங்கம் சியாமளாவுக்கு ஜேபியிலிருந்து இருபது ரூபாய் காகிதத்தை எடுத்துத் தந்தார்.

அப்பப்பா பணம் வேண்டாங்க. நீங்கள் எனக்கு அண்ணாவைப் போன்றவர். உங்களைக் கண்டால் எங்கள் குடும்பத்திலுள்ள எல்லோருக்குமே இஷ்டம். என் மனைவி என்ன சொல்லுவாள் தெரியுமா? ''மகாலிங்கம் சாருக்கு சொந்தம் இல்லையாவது! இந்த பஜாரில் இருக்கிற எல்லா கும்பங்களும் அவரோடதுதானே! அவர்தான்

எங்களுக்குப் பெரியவர்! பெரியவங்க என்றால் குழந்தை
களின் கஷ்ட சுகங்களைப் பார்த்துக் கொண்டு அப்
மகாலிங்கத்தைப் போல இருக்கணும். உங்கப்பா
இருக்காரே எதுக்கு?'' என்று சொல்லிக் குத்
காட்டுவாள்.

மகாலிங்கம் முறுவலுடன் கேட்டுக் கொண்டிருந்த
சத்யா வாயைத் திறந்துவிட்டால் போதும் மனைவி
பற்றியப் பேச்சு தானாகவே வந்துவிடும். அ
ஆபிசிலாகட்டும், கடைவீதியாயிருக்கட்டும், எ
யாரோடு சம்பாஷணையைத் தொடங்கினாலும் ''
மனைவி...'' என்றுதான் தொடங்குவான்.

சத்யா சாம்பவிக்குக்கூட ஸ்வீட் தரச்சொன்ன
மகளிடம் ''ஆன்ட்டிக்கு நமஸ்காரம் சொல்லு'' என்ற

சியாமளா லெட்சத்தோடு சொன்னாள். மகாலிங்
மெய் மறந்து போனவராய் சத்யாவின் மடி
உட்கார்ந்து கொண்டிருந்த அச்சின்னப் பெண்ணை
பார்த்துக் கொண்டிருந்தார். சத்யா திரும்ப
சொன்னான்.

''வேற்று மனுஷங்களான நம்மையே அவர்
அளவுக்கு சொந்தத் தந்தையைப் போல கவனித்
கொள்கிறாரே, அவருக்கே திருமணமாகி, குழந்தை
இருந்திருந்தால் இன்னும் எவ்வளவு நன்றாய் பார்த்
பாரோன்னு. மிஸ்டர் மகாலிங்கம் நீங்கள்
கல்யாணமே பண்ணிக்கலை?'' கேட்டான்.

''எனக்குக் குழந்தைகள் என்றால் ரொம்பப் பிடி
தான். மனைவியின் தொல்லைகளை மட்டும் என்னால்
தாங்கிக்க முடியாது. நம்ப வாழ்க்கையின் திருகு அ
கையில் சிக்கிக்கிட்டது என்ற தைரியத்தில் நம்
விளையாட்டு பொம்மையாய் ஆட்டுவித்துக் கொ
சூப்பாங்க.''

அதற்குள் பலராமன் கூட வந்து விட்டான் அங்கே.

''வாங்க சார் வாங்க'' மகாலிங்கம் வரவேற்றார்.

அவர்களுக்கிடையே திருமணத்தைப் பற்றியும், ஆண்களின் பயத்தைப் பற்றியும் ஜோக்குகள் ஒன்றையடுத்து இன்னொன்றாய் அடிபட்டன. மூவரும் 'ஓ'வென்று ஹோ' என்று பெரிதாய் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

சாம்பவி சமையலறையில் சமைத்துக் கொண்டிருந்தாள். அவள் செவிகளை அவர்களுடைய ஜோக்குகள் ஈர்க்கவில்லை. அலள் மனம் அந்த இருட்டு அறையில் தரையில் குப்புறப் படுத்துக் கொண்டிருந்த பரிஷித்தைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தது.

மகாலிங்கம் எங்கே?

அவள் எங்கே?

பரிஷித் எங்கே?

மூவரும் எங்கிருந்தோ அடித்துக் கொண்டு வரப்பட்டு இந்தக் கூட்டில் வந்து சேர்ந்திருக்கிறார்கள். விதிகூட வேடிக்கையாய்தான் அவளை மகாலிங்கத்தோடு சேர்த்து வைத்திருக்கிறது. அவளுக்கு யாருமே இல்லை இருந்த ஒரு தந்தையும் செத்துவிட்டார். தனியாய் இருந்து, அத்தனிமை வாழ்க்கையைத் தாங்க முடியாமல் போய், அக்கம்பக்கத்தார் வேட்டை நாய்களாய் தன்னைக் கடித்துக் குதறிப் போட முயன்ற போது— கையில் பணம் இல்லாமல் எங்கே போவது என்றும் தெரியாமல் இங்கே இந்த ராட்சசர்களின் கையில் நித்திய கண்டம் பூரண ஆயுஷாய் பயந்து காலத்தைத் தள்ளிக் கொண்டிருந்த போது, ஒரு நாள் காலையில் கட்டை மீசையுடனும் நல்ல உயரமும் பருமனுமாய் பார்த்த மாத்திரத்தில் மிலிடெரி மாதிரியைப் போல தோற்றமளித்த இந்த மகாலிங்கம் அங்கிள், ஆன்ட்டியின் பெயரை விசாரித்துக் கொண்டு விலாசத்தைத் தேடிக் கொண்டு வந்தார்.

அவர் போய் ஆறுமாதமாகி விட்டது என்று அவ
சொன்னாள்.

''ஐயோ, அப்படியா?'' அவர் நாற்காலியில் சரிந்
விட்டார் அப்படியே.

அவள் அவருக்குச் சாப்பாடு போட்டாள்.

அவர் 'அம்மா' என்று கூப்பிட்டதைப் பார்த்
அவளுக்கு உயிர் திரும்பி வந்தாற் போலிருந்தது.

பிறகுதான் தெரிந்தது—

அவருக்கும் யாருமே இல்லையாம்!

மிலிடெரியிலிருந்து ரிடயராகித் திரும்பி வந்
விட்டாராம். சென்னையில் செட்டிலாக வேண்டும் என்
முயற்சி. அவருக்கு அவள் தந்தை ஒருவரைத்தான் இந்
ஊரில் தெரியும்.

நண்பன் இறந்து விட்டான். அவன் மகள் இரு
கிறாள். அப்போதைக்கு அவர் பெட்டி படுக்கைகளை
கொண்டு வந்து அந்த வீட்டில் வைத்துக் கொண்டார்
அவர் ரிடயராகி விட்டார். ஏதாவது தொழில் பண்ண
வேண்டும் என்று முயற்சி பண்ணத் தொடங்கினார்.

அவருக்கு வந்த நாலைந்து நாட்களிலேயே சாம்ப
யின் விஷயம் புரிந்து விட்டது. சாம்பவிக்கு யாரு
இல்லை. அவருக்கும் யாருமில்லை. அவர் வந்த பிற
சாம்பவியைச் சுற்றி வந்து கொண்டிருந்த வேட்டி
நாய்களின் தொல்லைகள் மெதுவாய் குறைந்து விட்டன

வீட்டில் சிம்மத்தைப் போன்ற ஆள்— அதுவு
மிலிடெரி ஆள் ஒருத்தர் இருந்தபோது சாம்பவியிட
வாலாட்ட யாருக்குத் துணிச்சல் வரும்? சாம்பவிக்கு
தந்தை இருந்தபோது கூட ஏற்படாத நிம்மதி ஏற்ப
தொடங்கிற்று.

மகாலிங்கத்தைப் பற்றி குசுகுசுக்கத் தொடங்
னார்கள். அதனால் உடனே அந்த வீட்டை மாற்றிவிட்டு
இந்த வீதிக்கு வந்துவிட்டார்கள். மகாலிங்கம் மெயின்
ரோடிலிருந்த வீடியோ ஷாப்பில் வேலை தேடிக்
கொண்டார்.

சாம்பவிக்கு அவர் அரவணைப்பு இல்லத்தில் வேலை
தேடித் தந்தார். சாம்பவிக்கு வாழ்க்கை நன்றாய் கழிந்து
கொண்டிருந்தது.

தன்னுடையது என்ற தனி உலகம் ஏற்பட்டது.
பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் எந்த
பிடிமான தொல்லைகளும் இல்லை. அதற்குக் காரணம்
மகாலிங்கந்தான்! சாம்பவிக்கு அவர்பால் நன்றி
மட்டுந்தான் நின்றிற்று.

மகாலிங்கத்திடம் ஒரு கெட்ட பழக்கம் இருந்தது.
யார் என்ன உதவி கேட்டாலும் இல்லை என்று மறுக்க
மாட்டார். அந்தக் காரியத்தைப் பண்ணித் தருவதற்காக
நிறையப் பணமும் செலவழிப்பார். தன் சொந்தப்
பணத்தைச் செலவழிக்கக்கூட தயங்க மாட்டார். அவர்
மனத்தத்துவமே அப்படிப்பட்டது. அவர் நிமிஷத்தில்
எல்லோரையும் சிநேகம் பண்ணிக் கொண்டு விடுவார்.
அந்த சிநேகத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்
தவித்துப் போவார். சாம்பவி ஏதாவது சொன்னால்—
போகட்டும் விடும்மா. நாம்ப இந்த உலகத்தை விட்டுப்
போகும்போது எதையும் எடுத்துட்டுப் போகப்
போவதில்லையே! உயிரோடிருக்கும் வரை திருப்தியாய்
சந்தோஷமாய் வாழணும். அதுதான் என் உத்தேசம்''
என்பார். சாம்பவிக்கு மெல்ல மெல்ல அவரைப் பற்றி
புரியத் தொடங்கிற்று.

அவர் எப்பொழுதும் யாராவது ஒருத்தரின் வேலை
மேல் ஊருக்குப் போய்க் கொண்டேயிருப்பார். தெரிந்
பெண்களுக்குத் திருமண சம்பந்தம் பார்ப்பதற்கும், வேலை

முயற்சியோ, ட்ரான்ஸ்பரோ, காலேஜில் சீட்டோ, ஏ
ஒரு காரியம் இருந்து கொண்டேதான் இருக்கும்

''அங்கிள்! ஏன் இவ்வளவு பண்றீங்க? அவங்களு
உங்கள் மீது கொஞ்சமும் நன்றியே இருக்காது'' எ
சாம்பவி ஆவேசப்பட்டாள்— ''போகட்டும்மா, எ
இப்படி உதவி பண்றதில் ஒரு சுயநலமும் இருக்கு
வை. எனக்கு ரொம்பவும் சந்தோஷத்தை ஏற்படுத்துகி
அல்லவா? நான் பல ஆண்டுகள் மிலிடெரியில்
இயந்திர வாழ்க்கையை நடத்திவந்திருக்கிறேன். அங்
எப்பொழுது பார்த்தாலும் சாப்பாடு, டிஸிப்ளி
எக்ஸர்ஸைஸ், யுத்தம் வந்தால் இவற்றை விட்டு வி
ஓட்டம் பிடித்தல்— இவற்றைத் தவிர மனிதனுக்குத் த
பட்டதாய் தன்னுடையது என்று எந்த வாழ்க்கை
இல்லை. சுதந்திரமோ கிடையவே கிடையாது! இ
அந்த மாதிரி டிஸிப்ளின் எல்லாம் கிடையாது! சந்தோ
மாய் சிரிக்கலாம். பிடித்த இடத்திற்குப் பிடித்த சமயத்
போகலாம். அல்வளவு நாட்கள் அந்த மாதிரி வாழ்
பிறகு இது எனக்குச் சந்தோஷத்தைத் தருகிறது.

''அப்படீன்னால் நீங்கள் மிலிடெரிக்கு எதற்கா
போனீங்க அங்கிள்?'' கேட்டாள் சாம்பவி. வந்
லிருந்தே பார்த்துக் கொண்டிருக்கிறாள், அவர் மிலி
வாழ்க்கையை எல்லோரையும் போல புகழ்ந்
தள்ளவில்லை.

''தெரியாமல்! நிறைய பேரைப் போல நா
மிலிடெரியில் சேருவது என்றால் ஒரு பெரிய விஷ
என்று எண்ணிக் கொண்டுவிட்டேன். ஆ
என்னைப் போன்ற ஊர் சுற்றிகளுக்கும், கர்வம் பிடி
வங்களுக்கும் அந்த வாழ்க்கையே பொருந்
ட்ரெய்னிங் முடிந்ததுமே நான் பண்ணிய கா
ரொம்பத் தப்புன்னு தெரிஞ்சுக்கிட்டேன். ஓடிப்போ
லாமான்னு பார்த்தேன். ஆனால் முடியவில்லை.
டிஸிப்ளின் இருக்கு பாரு, அது ஒரு நரகந்தான்னு

மொதல்ல எங்கம்மாவை பயமுறுத்துவதற்கும், அழ வைப்
பதற்குந்தான் நான் மிலிடெரியிலேயே சேர்ந்தேன்.
ஆனால் அப்புறமாய் பல வருஷங்கள் நானே அழுதுட்டே
கழிச்சேன்னு வை!

''உங்கம்மாவைப் பற்றி உங்களுக்கு இன்னும் ஞாபகம்
இருக்கா அங்கிள்?''

அவர் தலையாட்டினார்.

உங்கப்பா என்ன வேலை பண்ணிட்டிருந்தார்.''
அவள் ஆர்வத்தோடு கேட்டாள்.

''எனக்குத் தெரியாது. ஒருக்கால் நான் என்று ஒருத்தன்
இருந்தது தெரிந்திருந்தால் தலையில் அடித்துக் கொண்
டிருக்கலாம்! எனக்கு அவரைத் தெரியாது.''

''உங்கள் சிறுவயதிலேயே செத்துட்டாரா?''

''ஹூஹூம்.''

''பின்னே?''

''அவர் எங்கம்மாவைக் கல்யாணமே பண்ணிக்க
வில்லை.'' அவர் குரல் ஏதோ போல ஆகிவிட்டது.

''அப்படியா?'' அவர் முகத்தில் தோன்றிய
உணர்ச்சியைப் பார்த்த பிறகு என்ன சொல்லி அவரைத்
தற்றுவது என்று புரியவில்லை அவளுக்கு.

''சாம்பவி! என் ஆசை ஒன்றுதான்! என்னைப் பெற்ற
அந்த அயோக்கியன் எப்படி இருப்பான்னு ஒரு தடவை
பாவது கண்ணால் பார்த்து விடணும்னு! எங்கம்மாவை
எவ்வளவு தடவை கேட்டிருப்பேனோ? ஆனால் அவள்
சொல்லவேயில்லை. ஒருக்கால் அவளுக்கு என் சுபாவம்
தெரிந்திருக்கும். அதனால்தான் சொல்லவில்லையோ
என்னவோ? இப்பத் தோன்றுகிறது. அவள் சொல்லாததே
நல்லதுன்னு! சொல்லியிருந்தால் நான் இந்நேரத்தில்

அவரைப் போய் கொன்றுவிட்டுத் தூக்கு மேடையில் ஏ
செத்துப் போயிருப்பேன். இன்னமும் அவரை நினை
பற்களைக் கடித்துக் கொண்டிருக்கிறேன் கோபத்தா
திட்டித் தீர்த்துக் கொண்டேதான் இருக்கிறேன். ஏ
என்றால் அவரைப் பற்றி எனக்குச் சொல்லவில்லைன்
தானே நான் எங்கம்மா மேல் கோபித்துக் கொ
மிலிடெரியில் போய்ச் சேர்ந்ததே! நான் இவ்வ
நாளாய் கழித்த அந்த மிலிடெரி வாழ்க்கைக்குக் கார
கூட அவரேதானே! அயோக்கியன்! அவர் மட்
கண்ணில் படட்டும், சுட்டுத் தள்ளிடுவேன்'' அ
தோரணையைப் பார்த்து விட்டு சாம்பவி பக்கென
சிரித்து விட்டாள்.

''அங்கிள் எனக்குச் சிரிப்பு வரது.''

''சிரிம்மா சிரி! சிரிப்பது மனிதனின் உரிமை. சிரித்
கொண்டே வாழ்க்கையைக் கழிப்பதற்குத்தான் நா
பிறந்திருக்கோம். அந்த ராஸ்கல் சங்கதி ஞாபகத்தி
வராமலிருந்திருந்தால் நானும் எப்பொழுதும் சி
திருப்பேன்.''

''உங்க ஊர் எப்படி இருக்கும் அங்கிள்?''

''எங்க ஊரா'' அவர் நாற்காலியில் பின்னுக்
சாய்ந்து உட்கார்ந்து கொண்டார். அவர் கண்கள் அ
மயக்கத்தில் ஆழ்ந்து விட்டன. ''சாம்பவி! உன்
என்றாவது ஒருநாள் எங்க ஊருக்குக் கூட்டிட்
போவேன்! எங்கள் ஊர் இருக்கே, அதன் அழகும் அ
யும் எங்கேயுமே இராது. எங்கே பார்த்தாலும் உப்
கழிகள்! கரையோரங்களில் தென்னை மரங்கள். நீ
மிதக்கும் படகுகள்! எங்கள் கேரளத்துப் பெண்
எவ்வளவு உழைப்பாளிகள் தெரியுமா?''

''டிக்கெட் ரிசர்வு பண்ணுங்கள், நாளைக்கே
லாம் வாங்க அங்கிள். உங்கள் ஊரைப் பார்க்கணும்

எனக்கும் ரொம்ப ஆசையாய் இருக்கு'' என்றாள் உற்சா
கத்தோடு.

''நோ'' அவர் கனவிலிருந்து எதார்த்த நிலைக்கு
வந்தாற்போல சரியாய் உட்கார்ந்து கொண்டார்.

''இப்பொழுது இல்லை'' திடமாய் சொன்னார்.

''ஏன்?''

''அங்கே இன்னும் எங்கள் உறவினர்கள் ஓரிருவர்
பிழைத்திருக்காங்க. நான் போனால் அவங்களுக்குத்
தெரிந்து விடும்.''

''தெரிஞ்சால் என்ன?''

''என்னைப் பார்த்ததுமே திரும்பவும் எங்கம்மாவைத்
திட்டத் தொடங்கிடுவாங்க. அவள் செத்துப்போய்
சுவர்க்கத்தில் இருந்தாலும் சரி, என் மூலமாய் திட்டுக்
களை வாங்கிக்கிட்டே இருக்க வேண்டியதுதான். அது
எனக்குப் பிடிக்காது. கல்யாணம் ஆகாமல் என்னைப்
பெற்றாள் என்று அவளைத் திட்டுவாங்க. அப்கோர்ஸ்!
என்னைக் கூடத்தான் திட்டுவாங்கன்னு வை. அப்பப்பா!
அந்தத் திட்டுக்களையெல்லாம் இப்பொழுது நினைத்தா
லும்...'' அவர் அவற்றைக் கேட்க முடியாதவரைப்போல
செவிகளைப் பொத்திக் கொண்டார்.

கொஞ்சம் பொறுத்து— ''நோ! நெவர்! என்
ஜென்மத்தில் நான் திரும்பவும் எங்கள் ஊரில் காலடி
எடுத்து வைக்க மாட்டேன். எனக்கு அங்கே மரியாதை
கிடைக்காது.''

சாம்பவிக்கு அவர் நடவடிக்கைகள் எல்லாம்
வேடிக்கையாய் இருக்கும். சிரித்துக் கொண்டே கலகலப்
பாயிருக்கும் அவர் அந்தரங்க மனதிற்குள் இத்தனை
வருத்தம் இருந்தது என்றால் அவளால் நம்பத்தான் முடிய
வில்லை.

அவர் ஒரு முறை ஐதராபாத்திற்குச் சென்றிருந்தார். திரும்பி வந்தபோது தன்னோடு ஒரு மாசடைந்த தாடி மீசையுடனும் பறட்டைத் தலையுடனுமிருந்த ஒரு இளைஞனையும் கூட்டி வந்தார்.

சாம்பவிக்கு அவரைச் சுட்டிக் காட்டி விட்டு— ''சாம்பவி! இவன் பெயர் பரிஷித். ரயிலில் எனக்கு ஜுரம் வந்தபோது ரொம்ப உதவி பண்ணினான். ஒரு நாள் பூராவும் என்னைக் கண்காணித்துக் கொண்டேயிருந்தான். நம்ம வீட்டிற்குக் கூட்டிட்டு வந்தேன்'' என்றார்.

சாம்பவி ''நமஸ்காரம்'' என்றாள் அவனைப் பார்த்து. அவன் பதில் நமஸ்காரம் பண்ணவில்லை. தன்னை இல்லை என்பதுபோல எங்கோ பார்த்துக்கொண்டிருந்தான். அவன் கவனம் அங்கு எங்குமே இல்லை என்பது போல நின்று கொண்டிருந்தான்.

சாம்பவி அவனுக்கு மகாலிங்கத்தோடு சேர்ந்து தேநீர் கொடுத்தாள்.

அவன் ஒரு வாய் குடித்தானோ இல்லையோ, சட்டென்று வாந்தி எடுத்தான்.

''பாவம்! உடம்பு சரியாயில்லை'' என்றார் அவர்.

''டாக்டரிடம் அழைத்துட்டுப் போவோம்'' என்றாள் சாம்பவி.

அவன், ''வேண்டாம், வேண்டாம்'' என்றான்.

அவன் அன்றெல்லாம் அறையிலேயே படுத்துக்கொண்டிருந்தான். சாம்பவி விருந்தினரை ஓம்பும் மரியாதைப்படி தான் படுக்கும் கட்டிலில் இஸ்திரி போட்ட துப்பட்டியை விரித்து, தலையணை வைத்து, படுக்கையைத் தயாரித்துத் தந்தாள். ஐந்து நிமிஷங் கழித்துப் போய் பார்த்தால் அவன் அறையில் தரையில் படுத்துக் கொண்டிருந்தான்.

அவன் அன்று பூராவும் அந்த அறையிலேயே படுத்துக் கொண்டிருந்தான். சாப்பிடக் கூப்பிட்ட பொழுது வரவில்லை. திரும்பவும் வாந்தி எடுத்தான். சாம்பவி அவன் வாந்தி எடுத்த சப்தத்தைக் கேட்டு விட்டு ஓட்டமாய் ஓடிப் போய் தண்ணீரைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

அவன் வாங்கிக் கொண்டான். பிறகு அங்கிருந்த நாற்காலியில் சரிந்து கைகளால் கண்களை மூடிக் கொண்டான்.

அவன் உடைகளில் எல்லாம் ரத்தக்கறைகள் தென்பட்டன.

''இவனுக்கு என்ன உடம்பு?'' சாம்பவி மகாலிங்கத்தைப் பார்த்தாள் ஒன்றும் புரியாமல். பிறகு கேட்டாள் அவரையே.

''ட்ரக்ஸ்'' என்றார் அவர்.

சாம்பவி அவரை வியப்போடு பார்த்தாள்.

''ட்ரக்கா?'' என்றாள்.

''ஆமாம்! இவன் ஒரு ட்ரக் அடிக்ட்! அவனால் நமக்கு எந்த ஆபத்தும் இல்லை. யார் ஜோலிக்குமே வரமாட்டான்! தன் உலகத்தில்தான் இருப்பான். ரெண்டு நாளில் போயிடுவான்மா'' என்றார் அவர்.

இரண்டு நாட்கள் கழிந்தன. ஒரு வாரமும் கழிந்து போய் விட்டது. பத்து நாட்களும் ஆகிவிட்டன. அவன் போகவில்லை. அவர்களும் போகச் சொல்லி வற்புறுத்தவில்லை.

''நாம்ப எப்படிச் சொல்ல முடியும்?'' அவர் மென்று விழுங்கினார்.

அக்கம்பக்கத்தார் ஆர்வத்தோடு, ''அந்தப் பைத்தியக்காரன் யார்?'' என்று கேட்டால் எங்க உறவுக்காரப் பையன்'' —என்று சொல்லத் தொடங்கினார் மகாலிங்கம்.

அவனை அழவைக்க முயன்ற வீதிப்பிள்ளைகள் இந்த விஷயம் அறிந்து வாலைச் சுருட்டிக் கொண்டு பேசாமலிருந்து கொண்டார்கள்.

நாலைந்து நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் அவன் வீதியில் விழுந்து கிடக்கவே, "இவன் மகாலிங்கம் சாரின் உறவுக்காரப் பையன்டா"— என்று சொல்லி அவனைத் தூக்கிக் கொண்டு வந்து வீட்டில் இறக்கி விட்டுப் போனார்கள். ஒரு முறை அவன் மீது கார் மோதவே, யாரோ காப்பாற்றி விலாசத்தை விசாரித்து தெரிந்து கொண்டு அவனைக் கொண்டுவந்து விட்டார்கள்.

மற்றொருமுறை அவன் சகட்ரக் அடிக்ட் ஒருவனோடு சேர்ந்து, 'ப்ரௌன்ஷுகர்' வாங்கிக் கொண்டிருந்த போது போலீசார் பிடித்துக் கொண்டார்கள். அவன் ஜேபியில் மகாலிங்கத்தின் விஸிடிங் கார்டைப் பார்த்து விட்டு போலீஸ் அதிகாரிகள் மகாலிங்கத்திற்குப் போன் பண்ண— அவர் போய் விடுதலை பணணி அழைத்து வந்தார். இரண்டு நாட்களுக்குப் பிறகு வீட்டிலிருந்து மகாலிங்கத்தின் வாட்ச் மாயமாகி விட்டது. அதை அவன் விற்றுக் கொண்டிருந்தபோது போலீசார் பார்த்து பிடித்துக் கொண்டு வந்தார்கள் இன்னொரு முறை. அதிலிருந்து விலையுயர்ந்த சாமான்களை சாம்பவி பெட்டியில் வைத்துப் பூட்டத் தொடங்கினாள்.

அதற்குப் பிறகு அவன் போகவில்லை. மகாலிங்கம் அவனைப் போகச் சொல்லவில்லை. பரிஷித்தின் நடவடிக்கைகள் அவருக்கு எரிச்சலை உண்டாக்குவதற்கு பதிலாய் 'போகட்டும், பாவம்' என்று இரக்கத்தை வரவழைத்தன.

அவன் மெல்ல மெல்ல அந்த வீட்டில் ஒரு ஆளாகி விட்டான். காலையில் வீட்டை விட்டுப் போய் விடுவான். எங்கெல்லாமோ சுற்றியலைந்து விட்டு இரவில் வீட்டிற்குத் திரும்பி வருவான். சில சமயங்களில் இரண்டு நாட்கள்

வரை வீட்டிற்குத் திரும்பி வரவே மாட்டான். இனி வரவே மாட்டானோ, திரும்பிப் போய்விட்டானோ என்று எண்ணிக் கொண்டிருக்கும் சமயத்தில் திடீரென்று வாசலில் பிரத்யட்சமாவான் அல்லது எங்காவது சுவற்றில் சாய்ந்து கொண்டிருப்பான். நாய்க்குட்டி பார்த்து விட்டுக் குரைத்து ரகளை பண்ணும். அக்கம்பக்கத்தாருக்கு மகாலிங்கத்தின் உறவினர் பையனான இவன் பொழுது போக்கு வம்புப் பேச்சிற்கு ஒரு வித்தாகி விட்டான். அவனுக்கும் மகாலிங்கத்திற்கும் உள்ள உறவைப்பற்றியும், தொடர்பைப் பற்றியும் விதம் விதமாய் ஊகித்துப் பேசிக் கொள்வார்கள். சிலர் சாம்பவியைக் கேட்டே விடுவார்கள். ஒருமுறை சாம்பவி— "அங்கிள்! இதெல்லாம் என்ன? ரொம்ப ரகளையாய்ப் போச்சே?" என்றாள்.

"கிடக்கட்டும்மா! அதனால் நமக்கென்ன நஷ்டம்? நான் எவ்வளவோ பேருக்கு என்னென்னவோ உதவி பண்ணி வரேன். இதுவும் ஒரு விதந்தான்னு ஏன் எண்ணிக்கக் கூடாது? அவனால் நமக்கு எந்த செலவும் இல்லை. எப்பவோ வரான், போறான். நமக்கென்ன கஷ்டம் அதனால்?" என்றார். சாம்பவி அதற்குப் பிறகு அவனைப் பற்றி யோசிக்கவில்லை.

ஒருநாள் மகாலிங்கம் ஊரில் இல்லை, செங்கல்பட்டிற்குப் போயிருந்தார்.. பிற்பகல் வேளையில் பரிஷித் வந்தான். வழக்கப்படியே சாம்பவி கதவைத் திறந்ததும் உள்ளே வந்த அவன், நேராய் தன் அறைக்குள் போய் விட்டான்.

அன்றிரவு சாம்பவிக்கு பயமாயிருந்தது.

வீட்டில் அங்கிள் இல்லை.

தான் மட்டுமே தனியாய் இருக்கிறாள்.

சாம்பவி புத்தகம் படித்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

அவன் அறையில் எந்த சந்தடியும் இல்லை. யோசித்தாள்!

கடைசியில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டாள். போய் கதவில் டொக் டொக் என்று விரலால் தட்டினாள்.

அவன் காதில் விழவில்லை.

சாம்பவி கதவைத் தள்ளினாள்.

வெருமே சாத்தியிருந்த கதவு கிறீச்சென்று திறந்து கொண்டது. அறையெங்கும் ஒரே இருட்டு! ஜன்னலைக் கூட மூடிவிட்டான் போலும்! எந்தச் சின்ன வெளிச்சம் கூட இல்லாத காரிருள்!

சாம்பவி கூப்பிட்டாள்.

''பரிஷித்!''

அவனிடமிருந்து பதிலில்லை.

உள்ளே அடியெடுத்து வைத்து விளக்கைப் போட்டாள். அவன் கட்டிலில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். அவனிடம் சலனம் இல்லை.

அந்த நிலையைப் பார்த்தால் சுகமான உறக்கத்தில் ஆழ்ந்து போய் தூங்கிக் கொண்டிருந்தாற்போல இல்லை. உடம்பில் சொரணை இல்லாமல் ஒரு உயிரற்ற ஜடப் பொருளைப் போல விழுந்து கிடந்தாற் போலிருந்தது.

''பரிஷித்' கிட்டே போய் கூப்பிட்டாள்.

அவன் அசையவில்லை. உலுக்கினாலும் அசையக் கூடிய நிலையில் இல்லை. சாம்பவிக்கு ஏனோ தெரியவில்லை, முதல் முதலாய் அவனைப் பார்த்து இரக்கம் ஏற்பட்டது!

இளம் வயது! விரும்பிய வாழ்க்கையைச் சந்தோஷமாய் அனுபவிக்க வேண்டியவன், இப்படி மனதையும்

போதைப் பொருளால் கெடுத்து அழித்துக் கொள்கிறான்? தான் ஒரு அனாதை என்ற விரக்தியாலா?

சாம்பவி அன்றிரவு கவலையில்லாமல் தூங்கினாள். அதற்குப் பிறகு அவன் பால் நம்பிக்கையும் தைரியமும் ஏற்படத் தொடங்கிற்று. இவன் மூலமாய் சாதாரண ஆண்களால் ஏற்படக் கூடிய ஆபத்து எதுவும் வராது என்று தோன்றிற்று.



மகாலிங்கத்திற்கு நாளுக்கு நாள் ஒரு ஆசை தோன்றிக் கொண்டே வரத்தொடங்கிற்று. அது அவரிடமுள்ள கெட்டபழக்கம் போன்ற குணந்தான்! பிறர்க்கு உதவி பண்ண வேண்டும் என்ற தவிப்புதான் அது! பரிஷித்தை வாழ்க்கையில் திரும்பவும் சாதாரண மனிதனாய் மாற்றி விடவேண்டும் என்ற விருப்பம் ஏற்படத் தொடங்கிற்று. பரிஷித்தை அழைத்துக் கொண்டு சைக்காலஜிஸ்ட்டிடமும் சைக்கியாட்ரிஸ்ட்டிடமும் அலைந்து கொண்டிருந்தார்.

''அங்கிள்! உங்களுக்குப் பைத்தியம் ஏதாவது பிடித்து விட்டதா? இதெல்லாம் என்ன? நாலு நாள் இருந்துட்டுப் போய் விடப் போற அவனுக்காக...'' என்றாள்.

''எல்லோருமே நாலு நாள் இருந்துட்டுப் போய் விடப் போறவங்கதானேம்மா? எனக்கென்னவோ இந்த

முயற்சியைப் பண்ணிப் பார்க்கணும் போலிருக்கு. ஒரு ஆளை ஒரு கெட்ட பழக்கத்திலிருந்து மீட்டு சாதாரண ஆளாய் மாற்றுவது என்பது ஒரு சவால்! அது எல்லோராலும் முடியாது. பொறுமைக்கே ஒரு சோதனை! என்னுடைய இந்த பைத்தியக்காரத்தனமான வேலைகளையெல்லாம் பார்த்துப் பொறுத்துக் கொள்ள உனக்குத் தான் நன்றாய் பழக்கப்பட்டுப் போய் விட்டதேம்மா? என்னை எதுவும் சொல்லாதே'' என்றார் அவர்.

''அங்கிள்! நான் ஒன்று சொல்லட்டுமா?''

''கமான்! ஷூட் இட்'' என்றார் அவர்.

''நீங்கள் கல்யாணம் பண்ணிக்க வேண்டியது! வீடு, குழந்தைகள்பால் உங்களுக்கு ரொம்பவும் பாசம் இருக்கு அங்கிள்! ஏனோ அது உங்கள் வாழ்க்கைக்குக் கிட்டாமல் போயிடுத்து. சாதாரணமாய் சின்னச் சின்ன விஷயங்களுக்கே நீங்கள் எவ்வளவு சந்தோஷப்பட்டுப் போறீங்க! முந்தாநாள் பாருங்கள். சத்தியா நம்மை சாப்பிட அழைத்தபோது நீங்கள் எவ்வளவு மகிழ்ந்து போனீங்க! எல்லோரும் உங்கள் வீட்டுக்கு வரணும் என்றும், நீங்கள் எல்லோருடனும் ஒருத்தராய் கலந்து போயிடணும்னு ரொம்பவும் தவித்துப் போறீங்க. உங்களுக்குக் கல்யாணம் ஆகியிருந்தால் இதையெல்லாம் ரொம்பவும் எஞ்ஜாய் பண்ணியிருப்பீங்க. குழந்தைகளை நீங்கள் எவ்வளவு நன்றாய் வளர்த்திருப்பீங்கன்னு தோணுகிறது.''

சாம்பவி இவ்வாறு சொன்னதைக் கேட்டு அவர் கண்கள் கலங்கி விட்டன.

அந்த உணர்ச்சியை அவரால் அடக்க முடியவில்லை. சட்டென்று கண்களைத் துடைத்துக் கொண்டு—

''யூ ஆர் கரெக்ட்! ஆனால் இதெல்லாம் எனக்குக் கிட்டவில்லை என்றால் அதற்கு மூலகாரணம் யார் தெரியுமா? அந்த அயோக்கியன்—''

''உங்கள் தந்தையைத்தானே சொல்றீங்க?'' கேட்டாள் அவள்.

''ஆமாம்'' என்றார் அவர்.

''நீங்கள் கல்யாணம் பண்ணிக்காமல் போனதற்கு அவர் எப்படி காரணம் ஆவார் அங்கிள்? நீங்கள் ஒவ்வொன்றுக்கும் அநியாயமாய் அவர் மீது சாக்குச் சொல்றீங்க'' என்றாள்.

''நோ! நான் யாரையும் அநியாயமாய் பழிக்கமாட்டேன். பாரும்மா; அந்த அயோக்கியன் மூலமாய்தான் என்னுள் ஒருவிதமான தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டுப் போய் விட்டது. எனக்கு யார் பொண்ணு கொடுக்கப் போறாங்க என்று எண்ணிட்டிருந்தேன் கொஞ்ச நாளைக்கு. என் மனைவி என்னை மதிப்பாளா என்று இன்னும் கொஞ்ச நாட்கள் பயந்துட்டிருந்தேன். எனக்குப் பிறக்கப் போகும் குழந்தைகளின் எதிர்காலம் என் கடந்த காலத்தால் ஒரு களங்கமாகி விடுமோன்னு அஞ்சி வந்தேன். கல்யாணமான பிறகு என் மனைவியோ மாமியாரோ அடிக்கடி என் இந்த விஷயத்தைக் குத்திக் காட்டி ஒரு அங்குசத்தைப் போல என்னை வதைப்பாங்களோன்றும் நினைப்பேன்.''

''உங்க பயமெல்லாமே அனாவசியமான பயந்தான் அங்கிள்.''

''எது என்னவானாலும் கல்யாணம் என்ற படகு முழுவிப் போயிடுத்து என் வாழ்க்கையில்.''

''இப்ப மட்டும் என்னவாயிடுத்து? நம்ப தெருக் காடியில் இருக்கிற யமுனா டீச்சருக்கு உங்களை ரொம்பவும் பிடிக்கும். அவங்களுக்குக் கூட கல்யாணம் ஆகலை.''

அவர் சட்டென்று கையெடுத்துக் கும்பிட்டார்.

''வேண்டாம்மா, வேண்டாம்'' என்றார்.

''ஏன், அங்கிள்?''

''இவ்வளவு நாளாய் சுதந்திரமாய் இருந்துட்
என்னால் இப்ப இன்னொருத்தருக்கு கட்டுப்பட்டு இரு
ணும்னால் கஷ்டம். அந்தச் சுமையை சின்ன வயதிலே
தலையில் ஏத்திட்டிருக்க வேண்டியது. அது பழக்
பட்டுப் போயிருக்கும். அந்த பாரத்தைச் சுமப்பது
சந்தோஷமாய் தோன்றியிருக்கும்.''

''மேலுக்கு இந்த ஆள் எவ்வளவு தைரியசாலியா
தோற்றமளிக்கிறாரோ அத்தனைக்கத்தனை உள்
பயந்தாங்கொள்ளி'' —என்றெண்ணிக் கொண்டாள்.

* * *

''சாம்பவி'' வாசலிலிருந்து குரல் கேட்டது.

''ஆங்!'' சாம்பவி நிமிர்ந்தாள். மகாலிங்கம் வா
படியில் நின்று கொண்டிருந்தார்.

''என்னம்மா? எந்த லோகத்தில் இருக்கிறாய்? அப்
திடுக்கிட்டுப் போய் விட்டாயே, ஏன்?'' என்றார் அ
உள்ளே வந்து கொண்டே.

''சமையல் ஆயிடுத்து அங்கிள்! இதோ பூரிகளை
நிமிஷத்தில் பொரித்துக் கொண்டு வந்துடறேன்'
பிசைந்து கொண்டிருந்த மாவை உள்ளே எடுத்
கொண்டு வேகமாய் போனாள்.

இவ்வளவு நேரமாய் பூரிக்கு மாவைப் பிசை
கொண்டே சிந்தனையில் ஆழ்ந்து போய் விட்டிருந்தா
சத்யா முதலியவர்கள் எப்பொழுது போனார்க
தெரியாது.

மகாலிங்கம் அவ்விடத்திலிருந்து டைனிங் டேபிள்
முன்னால் வந்து உட்கார்ந்தார்.

''நான் இன்றைக்கு சைக்கியாட்ரிஸ்ட்டிடம் போயி
வந்தேம்மா'' என்றார்.

''என்ன சொன்னார் அவர்?'' அடுப்பின் மீது கடாயியை வைத்து பூரியை இட்டு எடுத்துக் கொண்டே கேட்டாள்.

''முயற்சி பண்ணினால் பரிஷித் சாதாரண மனுஷனாய் மாற முடியும் என்கிறார் அவர். ஆனால் பலன் கிடைக்க ஆறு மாதமோ, ஒரு வருஷமோ, அதற்கும் மேலேயோ கூட ஆகலாம், சொல்ல முடியாது'' என்றார்.

''அதற்கென்ன? முயற்சி பண்ணலாம்.''

''இதில் உன் ஒத்துழைப்புக்கூட ரொம்பவும் வேணும்மா.''

''என்னுடைய ஒத்துழைப்பா? என்னால் என்ன பண்ண முடியும் அங்கிள்?'' அவள் பூரிகளை எடுத்துக் கொண்டே கேட்டாள்.

''டாக்டர் சொல்கிறார் முதல் முதலில் இந்த ட்ரக் அடிக்ட் ஆனவங்களை நாம்ப வெருத்து ஒதுக்க வில்லைன்னு தெரியத் தொடங்கணுமாம் அவங்களுக்கு. அவனை நமக்கு மிகவும் பிடிக்கும் என்றும், அவனுடைய நல்லதிற்காகவே நாம்ப பாடுபடுகிற மனுஷங்க என்றும் அவனுக்கு நன்றாய் புரியும்படியாய் நாம்ப பண்ணனுமாம். ட்ரீட்மெண்டோடு கூட அதுவும் ரொம்பவும் முக்கியமாம். அதைத்தான் சொன்னார் அவர்.''

''அதற்கு என்னால் என்ன செய்ய முடியும்?''

''உன்னால்தான் செய்ய முடியும்மா.''

''நானா?'' அவள் ஆச்சரியமடைந்தவளாய் பார்த்தாள்.

''ஆமாம் நீயேதான்.'' அவர் பரிவோடு சொல்லத் தொடங்கினார். ''இதப்பாரும்மா சாம்பவி! நீ அரவணைப்பு இல்லத்தில் வேலை செய்றாய். உடல் ஊனமுற்றவங்களிடம் நீ எவ்வளவு அன்பாய் நடந்து

கொள்கிறாய்னு எனக்குத் தெரியும். பரிஷித்திடம் ஒ
ஒரு உளனம் இருக்கிறது. அது மனம் சம்பந்தப்பட்
உளனம். அதை அவன் எதிர்த்து நிற்கக்கூடிய சக்தி
நம்மால் தர முடியுமான்னு பார்த்துடலாம்.''

''என்னால் என்ன செய்ய முடியும் அங்கிள்
பூரிகளையும் குழம்பையும் கொண்டு வந்து மேஜை மே
வைத்தாள் அவள்.

''கொஞ்சம் என்னோடு சேர்ந்து முயற்சி செய்
சொல்றேன். அவன் அதிர்ஷ்டம் நன்றாயிருந்தால் பல
கிடைக்கும். இல்லாவிட்டால் இல்லை. நான் உன்னை
கேட்டுக் கொள்வது ஒன்றுதான். இவனையும் உங்
அரவணைப்பு இல்லத்திலுள்ள கிட்டுவைப் போலவே
பேபியைப் போலவோ பாவித்துக்கொள் என்பதுதா
மொதல்ல நீ அவனோடு கொஞ்சம் சிநேகமாய் இரு
முயற்சி செய். அவனைப் பார்த்து முகத்தைத் திருப்
கொண்டு போய் விடாதே.''

''சரி அங்கிள்'' அவள் போய் இருவருக்கும் தம்
களில் தண்ணீரைக் கொண்டு வந்து வைத்தா
மகாலிங்கம் எழுந்து போய் இருவர் தட்டுக்களையு
கொண்டு வந்து மேஜை மேல் வைத்தார். அவ
பூரிகளையும் குழம்புகளையும் பரிமாறினார்.

சாம்பவி வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''இதில் பரிஷித்துக்கு இப்படி உதவி செய்யச் சொல்
நான் கேட்கிறதில் என் சுயநலமும் நிறைய இருக்கும்மா

''அதென்னது?''

''இப்பச் சொல்லமாட்டேன். அப்புறமாய் எப்பொ
தாவது சொல்றேன். என் முயற்சி வெற்றியடைந்த
கண்டிப்பாய் சொல்றேன்'' என்றார் அவர்.

சாம்பவி பதில் பேசவில்லை.

இருவரும் மௌனமாய் சாப்பிடத் தொடங்கினார்கள்.

''என்ன யோசிக்கிறாய்?'' என்றார் அவர்.

''ஒன்று மில்லை'' என்றாள்.

அவர் அதற்கு மேல் வாதாடவில்லை. வழக்கம் போல சாப்பிடும்பொழுது அங்கே சிரிப்புகள் எழும்பவில்லை.

இருவரும் சாப்பிட்டு முடித்தார்கள்.

மகாலிங்கம் எப்பொழுதும் சாப்பிட்ட பிறகு தானே தட்டை எடுத்துக் கொண்டு போய் சிங்க்கில் போட்டுக் கழுவி வைத்து விடுவார். அவள் வேண்டாம் என்று மொத்திக் கொண்டாலும் கேட்க மாட்டார் 'இந்த வேலையைப் செய்யறது என்ன கஷ்டம்மா? சமைக்கிறது தான் ரொம்பக் கஷ்டம். அது எனக்கு வராது'' என்பார். சாம்பவி தட்டுக்களைக் கழுவித் துடைத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

''அங்கிள்'' கூப்பிட்டாள்.

''என்னம்மா.''

சாம்பவியின் உதடுகள் ஏதோ கேட்க அசைந்து விட்டுத் திரும்பவும் தைரியமில்லாமல் நின்று போயின.

''என்ன? கமான், ஷூட் இட்'' என்றார் அவர்.

''அங்கிள்! பரிஷித்...''

''உம்! பரிஷித்துக்கு என்ன?''

''உங்கள் மகனா?'' சாம்பவி வார்த்தைகளைத் தெளிவில்லாமல் உச்சரித்த போதிலும் அவர் அவற்றை நன்றாகவே கிரகித்துக் கொண்டு விட்டார்.

''என்ன?'' சட்டென்று அவர் புருவம் நெளியப் பார்த்தார். அதைத் தொடர்ந்து பக்கென்றுச் சிரித்து விட்டார் அந்த வீட்டின் மேற்கூரையே அதிரும்படியாய்.

''மைகாட்! உன் மூஞ்சியைப் பார்த்தபோது உனக்கு இந்தச் சந்தேகம் வந்துடுத்துன்னு நினைத்தேன். இல்லைம்மா! அப்படிப்பட்ட புராணக்கதை எதுவும் இல்லை. என்ன அவன் என் மகனா? ஓ காட்! நான் அர்ஜென்ட்டாய் மொதல்ல அவன் தாயைத் தேட வேண்டியிருக்கு இல்லையா? இல்லையா? நோ! நோ!'' அவர் திரும்பவும் சிரித்தார்.

சாம்பவியின் உதடுகளில் குறுநகை படர்ந்தது.

அவர் கொஞ்சம் நிறுத்திச் சொன்னார்— ''ஓ கே உன் வார்த்தைகளை எதுக்கு மறுக்கணும்? என் மகன் தான்! என் வளர்ப்பு மகன்! அவனுக்கு வாரிசு உரிமையாய் என்னால் என்னத்தைத் தந்துவிட முடியும்? பாஸ்டர்ட் என்கிற தந்தையின் ஹோதாவைத் தவிர—'' அவர் திரும்பவும் பெரிதாய் சிரித்தார்.

சாம்பவி அவர் கழுவி வைத்த தட்டுக்களைத் துடைத்து ரேக்கில் வைத்துக் கொண்டிருந்தாள்.

அவர் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே— ''அதில்லைம்மா நான் ஒரு நல்ல காரியத்தைப் செய்யப் போறேன். அதில் உன் உதவி இருந்தால் எனக்கு எளிதாகு மேன்னுதான்! இதுதான் உண்மையான ரகசியம். உன்னை அரவணைப்பு இல்லத்தில் சாதாரண உத்யோகத்தில்தான் சேர்த்தேன். அப்புறமாய் நீ அந்தப் பசங்களுடன் ஒட்டிக் கொண்ட விதத்தையும், அந்த முகங்களில் மகிழ்ச்சி ஒளியை **வர**வழைத்த உன் சாமர்த்தியத்தையும் பார்த்த போது **எனக்கே** ஆச்சரியமாகிவிட்டது. அதனால்தான் பரிஷித் விஷயத்தில்கூட என்னைவிட உன்னால் நன்றாய் செய்ய முடியும்னு நினைக்கிறேன். இது ஒரு வேடிக்கை யான பயிற்சி. எத்தனை பேருக்கு நான் கல்யாணம் செட்டில் பண்ணியிருக்கேன், வேலை பார்த்துத் தந்திருக்கேன். இதுவும் அப்படிதான்னு நினைக்கிறேன்.

''சரி அங்கிள்'' என்றாள் சாம்பவி.

''வெரிகுட்'' என்றார் அவர்.

அவருக்கு இப்பொழுது தைரியம் வந்தது. அவருக்கு சாம்பவியிடம் இருந்து வந்த இந்த ஆறு மாதத்தில் வாழ்க்கையில் என்றுமே பெற்றிராத அளவிற்கு சுகத்தை யும் சந்தோஷத்தையும் பெற்றுவிட்டாற் போலிருந்தது.

எங்கெங்கோ சுற்றியலைந்தாலும் வீட்டிற்குத் திரும்பி வந்தால் தனக்காகக் காத்திருப்பதுபோல தன் அறை, தன் படுக்கை, தன் புத்தகங்கள், எல்லாம் எப்பொழுதும் நீட்டாய் இருக்கும். பாதி ராத்திரி வேளையில் வீட்டிற்குத் திரும்பி வந்தாலும் சாம்பவியின் முகத்தில் எரிச்சல் தென்படாது. 'அங்கிள்! ஒரு கப் தேநீர்' என்பாள். சாம்பவி தரும் சூடான தேநீரைப் பருகிவிட்டு சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டு சிகரெட்டைப் புகைக்கத் தொடங்கிவிட்டால் சுவர்க்கமே இறங்கிவந்து விட்டாற் போல தோன்றும். தன்னுடையவர்கள் என்று யாரு மில்லாத வரண்ட அவர் வாழ்க்கையில் ஒரு நீர் ஊற்றாய் இருந்தாள் சாம்பவி. தன்னுடையது என்ற ஒரு வீடும், சமூகத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் சேர்ந்து அவருக்குப் புதிய ஜென்மம் எடுத்தாற் போலிருந்தது. அவர் சிறு வயதிலிருந்தே கனவு கண்டு வந்த சுவர்க்கம் இறங்கிவந்து தன்னை சந்தோஷப்படுத்திக் கொண் டிருந்தாற்போல இருந்தது.

இவ்வளவுக்கும் காரணம் சாம்பவி!

சாம்பவி தன்னோடு ஒரே கூரையின் கீழ் வசிக்க வந்ததிலிருந்து அவர் குடிப்பதை அறவே விட்டுவிட்டார். என்றுமே அவர் மிதமீறுபவர் அல்ல அப்பழக்கத்தில். ஆனாலும் சரி, அதையும் தவிர்த்து விட்டார்.

உலகத்தார்கூட அவரைப் பற்றிப் பேசி சாம்பவியை எள்ளி நகையாடவில்லை. அவளுக்கு அவர் சொந்த

தந்தையைவிட மேலாய் இருந்தார். அவருக்குத் தந்தையின் மோதாவைத் தந்து எல்லோர் முன்பும் மதிப்பைப் பெற்றுத் தந்தாள் சாம்பவி.

அவர் தனியாக வீடு பார்த்துக் கொண்டிருந்தார். கட்டைபிரம்மச்சாரி என்றெண்ணி யாரும் வாடகைக்கு வீடு கொடுத்திருக்க மாட்டார்கள். ஒருக்கால் வாடகைக்கு ஆசைப்பட்டு ஏதாவது தனி அறையைக் கொடுத்திருந்தாலும், அந்த அறை அவர் சிநேகிதர்கள் அனைவருக்கும் ஒரு சத்திரமாய் மாறிவிட்டிருக்கும். அவர்கள் எல்லோரும் அங்கே வந்து கூடி சீட்டாடிக் கொண்டும், குடித்துக் கொண்டும் பொழுதைப் போக்கியிருப்பார்கள். அவரால் தடுத்திருக்க முடியாது. பசியெடுத்தால் ஒரு கவளம் உணவளிப்பதற்கும், தலைவலி யெடுத்தால் ஒரு கோப்பை காப்பி போட்டுத் தருவதற்கும் யாருமே இருந்திருக்க மாட்டார்கள். அது ஒரு பயங்கரமான வாழ்க்கை.

ஆனால் இப்பொழுது அவரோடு சாம்பவி இருந்ததால் ஓரிரு கெட்ட சகவாசமுடைய சிநேகிதர்களை வர வேண்டாம் என்று சொல்லித் தடுத்து விட்டார் அவர்.

இப்பொழுது நிச்சிந்தையாய் இருந்தது அவருக்கு. சாம்பவி இப்படிப்பட்ட நரகத்திலிருந்து அவரை மீட்டு விட்டிருந்தாள்.

அதனால்தான் அவர் வீட்டு வேலைகளைப் செய்ய வேண்டாம் என்று சாம்பவி சொன்னாலும் கேட்டுக் கொள்ளாமல் செய்வார். அவ்வாறு செய்வதில் மகிழ்ந்து போவார் அவர். சத்யா மனைவி குழந்தைகளோடு தன் வீட்டிற்குச் சாப்பிட வந்தால் சத்யாவின்மனைவி அவரை 'அண்ணா' 'அண்ணா' என்று விளித்து, தன் வீட்டுத் தொல்லைகளையெல்லாம் சொன்னால் அவருக்குச் சொல்ல முடியாத சந்தோஷம்!

ஓட்டலுக்குப் போனால் அவர் குடும்ப அறையை நோக்கி நடந்து கொண்டிருக்கும் போது தாங்க முடியாத சந்தோஷம்! இதற்கு முன்னால் அவ்வாறு சென்று கொண்டிருந்தவர்களை அசூயையுடன் பார்த்துப் பொருமினாற்போல இனி பொருமத் தேவையில்லை. அவருக்குக் கடவுள் மேல் நம்பிக்கை இல்லை. ஆனால் இப்பொழுது சாம்பவியோடு சேர்ந்து அவ்வப்போது கோவிலுக்குப் போகத் தொடங்கிய பிறகு அந்த நம்பிக்கை ஏற்படத் தொடங்கிற்று. அவர் 'எந்த ஊருக்குப் போனாலும் எப்பொழுது வீட்டிற்குத் திரும்பி வருவோமோ என்று தவிக்கத் தொடங்கிவிட்டார் இப்பொழுதெல்லாம். வீட்டிற்கு வந்ததுமே சாம்பவி 'அங்கிள்' என்று அழைத்து விட்டால் போதும் அவருக்குப் போன உயிரில் பாதி திரும்பி வந்துவிடும். மீதி பாதி சாம்பவி தரும் காபியால் மீண்டு விடும்.

அன்றைக்கு பரமேஸ்வரன் கேட்டார்— "சாம்பவிக்கு சம்பந்தம் பார்க்கிறீங்களா? கல்யாணம் எப்பொழுது செய்யப் போறீங்க? எங்க அக்கா பையன் ஸ்டேட்ஸில் இருக்கிறான். அடுத்த மாதம் வருகிறான். இஞ்ஜினியர். நல்ல உத்யோகத்தில் இருக்கிறான். வரதட்சணை அது இதுன்னு பார்த்துட்டுப் போனால் உங்களுக்குக் கிடைக்கக் கூடிய சம்பந்தம் இல்லைங்க. உங்கள் நண்பனாய் நான் அவனைச் சம்மதிக்கச் செய்து விடுவேன்" என்று ஏதேதோ சொல்லிக் கொண்டே போனார்.

மகாலிங்கத்திற்கு அவர் சொன்னது எதுவுமே காதில் விழவில்லை. அவர் தலையில் இடி விழுந்தாற்போல குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

"சாம்பவிக்குக் கல்யாணமா? ஸ்டேட்ஸிற்கு அனுப்பி விடணுமா? எங்கே? எங்கே என் துப்பாக்கி? இவனைச் சுட்டுத் தள்ளிவிட வேண்டும். ராஸ்கல்! சாம்பவியை என்னிடமிருந்து பிரித்து விடணும்னு நினைக்கிறானா? பாஸ்டர்ட்!..."

மகாலிங்கம் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு தொடர்ந்து ஒரு வாரம் வரை பரமேஸ்வரனோடு பேசவில்லை. அவரைப் பார்த்தாலும் தன் மகிழ்ச்சியை கொள்ளை கொண்டு போவதற்காக வந்தவரைப் போல சந்தேகத்தோடும் அருவருப்போடும் பார்க்க தொடங்கினார்.

பரமேஸ்வரன் சாம்பவியிடம் சொன்னார்—

''உங்க மாமாவுக்கு என்ன ஆயிடுத்தும்மா, ஏ அப்படிப் பார்க்கிறார்? என்னோடு பேசுவது கூ இல்லை'' என்று நொந்து கொண்டார்.

அன்று மாலையில் சாம்பவி, ''அங்கிள்! இதென்னது? என்று கேட்டாள்.

அவரால் பதில் சொல்ல முடியவில்லை. என்னவென்று சொல்லுவார்? உனக்கு நல்ல சம்பந்தம் பார்த்தார் அதற்காக நான் அவரைப் பாராட்டாமல் திருடனை போல பார்த்தேன் என்பாரா? அப்பொழுது சாம்பவிக்கு தன் பால் எவ்வளவு அருவருப்பு ஏற்படும்! அங்கிள் எ சந்தோஷம் உங்களுக்குப் பிடிக்கவில்லையா? என்று கேட்டால் என்னவென்று சொல்லுவார்?

''சே, சே! அதெல்லாம் ஒண்ணுமில்லைம்மா'' எ களைப் பிசைந்து கொண்டே பரபரப்புடன் சொன்னா அவர். சமையலறைக்குப் போய்க் கொண்டிருந்த சாம்ப திரும்பி வியப்போடு பார்த்தாள் அவரை. ''என்ன இல்ல அங்கிள்?'' என்றாள்.

''ஆ!'' மகாலிங்கம் இந்த உலகத்திற்குத் திரும் வந்தவராய் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

''அதாம்மா... நான்... நான் வெருமே தமா பண்ணி, அழவைத்து ஷாக் ட்ரீட்மெண்ட் பண்ணலாம் அப்படிச் சொன்னேன் பரமேஸ்வரனிடம்.''

சாம்பவி பக்கென்றுச் சிரித்து விட்டாள்.

''எனக்குத் தெரியும் அங்கிள். நீங்க இதே போல ஏதோ செய்தியிருப்பீங்கன்னு முன்பே நினைத்தேன். பாவம், பரமேஸ்வரன், தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு கட்டிலில் ஏறிப் படுத்து விட்டார்.'' சாம்பவி திரும்பவும் சிரித்தாள்.

அச்சிரிப்பு அந்த வீட்டில் கோடி ஒளியைச் சிந்தினாற் போலவே இருக்கும். சாம்பவியின் காலடியோசை, வளையல் சப்தம், 'அங்கிள்' என்று அழைக்கும் அந்த அழைப்பு எல்லாவற்றிலும் ஒரு பாசம் இழையோடும்.

சாம்பவி வந்து ஏற்படுத்திய இந்த சந்தடி தன் வாழ்க்கையில் ஒரு கனவாகவே கருகிப் போய் விடாதே! என்று பயப்படத் தொடங்கினார் அவர். இதற்கு முன்பாய் இருந்தால் வேறு.

இந்த சொர்க்கத்தைப் பற்றித் தெரியாது.

அவர் கையில் எரிந்து கொண்டிருந்த சிகரெட்டைத் தரையில் போட்டு பூட்ஸ் காலால் தேய்த்தார்.

'நோ! சாம்பவி வழங்கிய இந்த வாழ்க்கையை அவர் என்றும் தரித்திருக்கும்படி செய்து கொள்ள வேண்டும். ஆனால் எப்படி?' அவர் யோசனையுடன் நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்து கொண்டார்.

சாம்பவிக்குப் பொருத்தமான இளைஞனாய்— தன்னோடு இருக்கக் கூடியவனாய் பார்த்துத் திருமணம் செய்ய வேண்டும்.

அவர் ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டார். சாம்பவிக்கு மணம் செய்விக்க வேண்டும். உண்மையே!

ஆனால் சாம்பவிக்கு வரப்போகும் அந்த ஆள் அவரை மதிக்கும் மனிதனாய் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்த சுவர்க்கும் அவர் கையை விட்டுப் போகாது. அவர்கள் மகிழ்ச்சிக்கு அவர் குறுக்காய் வரமாட்டார்.

அவர் கண்முன் சாம்பவியின் குழந்தைகள் தன் மேல் ஏறிக்குதித்து மீசையைப் பிடித்து இழுத்து, 'தாத்தா உன் மூக்கு துப்பாக்கியைப் போல இருக்கு' என்று அழவைத்துக் கொண்டிருக்கும் காட்சி நிழலாடிற்று. அவர்களுக்குத் தான் சாக்லீட்டுகளைத் தருவது போலவும், பள்ளிக்குக் கூட்டிச் செல்வது போலவும், அவர்களோடு சேர்ந்து சாம்பவி தனக்கு சாப்பாடு பறிமாறுவது போல அநேக காட்சிகள் நிழலாடத் தொடங்கின. சின்னஞ்சிறு குழந்தைகள்! அவருக்குத் துணையாய் இருப்பார்கள்; அவர்களுடைய மழலைப் பேச்சுக்களாலும், வேலைகளாலும் அவருக்கு ஓய்வு ஒழிச்சல் இருக்காது.

சாம்பவி கூட தன்னைப்பற்றி கணவனிடம் சொல்லுவாள். ''எங்க அங்கிள் இருக்காரே... அவர்...'' அவனும் பக்கென்று சிரிப்பான். இருவரும் சிரித்துக் கொண்டேயிருப்பார்கள். அவரும் சிரிப்பார். குழந்தைகளும் அவர் மேல் விழுந்து மீசையைப் பிடித்து இழுப்பார்கள். ஓஹ்! அந்த விதமாய் சாம்பவியின் வாழ்க்கையோடு கலந்து போகும் அவர் எதிர்காலத்தைப் பற்றி கற்பனை செய்யத் தொடங்கினார். யாரையோ தெரியாத ஒரு நபரைக் கூட்டி வந்து திருமணம் செய்து வைத்தால் அது ஒரு ரணகளம் ஆகிவிடும். அவருக்கு நிம்மதி வேண்டும். இனி இந்த வயதில் டென்ஷனை அவரால் தாங்கிக் கொள்ள முடியாது. சாம்பவி சுகமாய் இருக்க வேண்டும். அவளோடு அவர் வாழ்க்கை கரையேற வேண்டும். இதுதான் மாஸ்டர் பிளான்.


''என்ன அங்கிள்! அவ்வளவு தீர்க்காலோசனையில் மூழ்கிட்டீங்க?'' கேட்டாள் சாம்பவி.

''ஒண்ணுமில்லைம்மா'' என்றார் அவர்.

''குட்நைட் அங்கிள்.''

''குட் நைட் அம்மா.''

சாம்பவி தன் அறைக்குப் போய்விட்டாள்.



சாம்பவி தன் அறைக்கு வந்து கட்டிலில் படுத்துக் கொண்டாள்.

அவள் கண் முன்னால் மாலையில் 'அரவணைப்பு இல்ல'த்திற்கு வந்துவிட்டுப் போன சந்திரனின் உருவந்தான் நிழலாடிக் கொண்டிருந்தது. என்ன அழகான உடற்கட்டு! நல்ல நடத்தைக்கு எடுத்துக் காட்டாய் விளங்கும் பண்பு! அவனைப் பார்த்த மாத்திரத்தில் செல்வத்திலேயே பிறந்து செல்வத்தில் புரண்டு கொண்டிருக்கும் இளைஞனாய் தோன்றிற்று. அவ்வளவு செல்வம் இருந்த போதிலும், அதற்குரிய அகம்பாவமோ, கர்வமோ பேச்சிலோ நடத்தையிலோ சற்றும் தென்படவில்லை.

அவனுக்கு எவ்வளவு வேலைகள் இருந்த போதிலும் பேபியைப் பார்ப்பதற்காக இரண்டு மூன்று நாட்களுக்கொரு முறை வந்து கொண்டேதான் இருந்தான். தினமும் ஏதோ ஒரு டயத்தில் பேபிக்காகப் போன் பண்ணிக் கொண்டிருப்பான். பேபியைப் பார்த்து விட்டுத் திரும்பிப் போகும்பொழுது அவன் முகத்தில் தென்படும் வருத்தத்தைக் கண்டால் அவளுக்குக்கூட மனம் ஏதோ போல ஆகிவிடும்.

அவன் அத்தைமகளின் சொத்திற்கு ஆசைப்பட்டு இருவர் சொத்துக்களையும் ஒன்று சேர்த்து விட்டால்

கோடீஸ்வரர்களாகி விடுவார்கள் என்ற ஆசையில் அவ
பெற்றோர் அந்த அத்தை மகளுக்குத் தந்து மணம் முடித்
வைத்தார்கள். அந்த விவாகத்தின் மூலமாய் அவ
பெற்றோர், அத்தை, அத்தையின் கணவன், தாத்
மனைவி தேவி எல்லோரும் சுகமாய் சந்தோஷமா
நிச்சிந்தையாய் இருக்கிறார்கள், உண்மையே! ஆனா
அவனுக்கு மட்டும் கொஞ்சமும் சுகமில்லை, சந்தோஷ
இல்லை.

அவனுக்கும் தேவிக்கும் பிறந்த முதல் குழந்தைதா
பேபி. பிறந்ததுமே ஊனத்துடன் பிறந்தது அவர்க
உள்ளங்களைப் பாதித்து விட்டது. தேவி, சந்திர
இருவருமே அழகானவர்கள். அவர்கள் அழகிற்
களங்கத்தைப் போல, அந்த வீட்டில் ஒரு விகாரமா
உருவாய் வளர்ந்து வந்தாள்பேபி. தேவியோ அக்குழந்
யின் முகத்தையே பார்க்க மாட்டேன் என்று சொல்
விட்டாள்.

வீட்டிற்கு வந்தவர்கள் எல்லோரும் பேபியை
பார்த்துத் தமாஷாய் சிரித்து, குசுகுசுத்துக் கொ
டார்கள் கேலியாய். அதைப் பார்த்து தேவி அழுது தள
யில் அடித்துக் கொண்டு புலம்புவாள், அட்டகாச
பண்ணுவாள்.

கடைசியில் இந்த வருத்தமே அவளைத் தற்கொல
பண்ணிக் கொள்ளும்வரை கொண்டு போய் விட்ட
பாட்டியோ எப்பொழுது பார்த்தாலும்— ''ஏன்தா
பிறந்தாயோ பாபி'' என்று திட்டிக் கொண்
யிருப்பாள். ''இது எந்த ஜென்மத்து பாவ கர்மமோ
என்று தலையில் அடித்துக் கொள்வாள். சந்திரனின் தா
இந்த விஷயத்தில் எப்பொழுது பார்த்தாலும் விரத
பூஜை, சாமியார் என்று உயிரை வாங்கிக் கொ
டிருந்தாள். எவ்வளவு வேதனையான விஷயம் என்ற
பேபிக்கு அவர்கள் பெயர் கூட வைக்கவில்லை.

ஒரு பக்கத்தில் தேவியின் தொல்லைகள்! ''இவ்வளவு குரூபியான பெண், இந்த உலகத்தில் இவ்வளவு பேர் பெண்கள் இருக்கும்போது எனக்குத்தானா வந்து பிறக்கணும்?'' என்று அழுவாள், ஆவேசப்படுவாள், கூச்சலிடுவாள்.

''நீங்கள் தான் ஏதோ பாவம் பண்ணியிருக்கிங்க'' என்று கணவனைக் குத்திக் காட்டுவாள். பேசி இந்தச் சண்டைகளுக்கு நடுவே அடங்காப் பிடாரியாய் மாறி விட்டாள். தாய்க்குத் தன் மேல் விருப்பம் இல்லை என்று தெரியும். கணவனையும் அவள் வெறுத்ததால் அவள் தந்தையை உறவினர்கள் சிலர் மறுமணம் செய்து கொள்ளச் சொல்லி ஆலோசனைகள் தந்தார்கள். அவனுக்கப் பைத்தியம் பிடிக்கும் போலிருந்தது.

அதனால் சந்திரனுக்கு வீட்டில் நிம்மதியே இல்லாமல் போய்விட்டது. அவன் வாழ்க்கையில் எல்லா அதிர்ஷ்டங்களும் இருந்தும் எதையுமே அனுபவிக்க முடியாத குறை! எவ்வளவு துரதிர்ஷ்டம்!

ஒரு முறை தேவி ஆவேசத்தோடு, பேபியின் கழுத்தைப் பிடித்துத் திருகிக் கொல்லப் போனபொழுது சந்திரன் தடுத்துக் காப்பாற்றினான். அதற்கு மறுநாளே அரவணைப்பு இல்லத்திற்கு அழைத்து வந்து சேர்த்து விட்டான். மகளை அங்கே விட்டுவிட்டுத் திரும்பும்போது அவன் கண்களில் ஜிவ்வென்று நீர் ததும்பியது.

சாம்பவிக்கு முதலில் அவன் தோரணை எதுவும் புரியவில்லை. அவ்வளவு அன்பு உள்ளவன் இங்கே எதற்குக் கொண்டு வந்து சேர்த்தான் என்று நினைத்தாள். ஆனால் வரவர சந்திரன் முடிந்த போதெல்லாம் அரவணைப்பு இல்லத்திற்கு வந்து மகளைப் பார்த்து விட்டுப் போனதும், வந்ததுமே கைநீட்டி அவளைத் தூக்கிக் கொண்டு முத்தமாரிப் பொழிவதும், போக விருப்பமில்லாமல் பிரிந்து போவதும், அடிக்கடி மகளைப் பற்றி

விசாரித்துப் போன் பண்ணுவதும், வேறு ஊருக்கு போனால் சாம்பவிக்குக் கடிதங்கள் எழுதுவதும் இச்சம்பவங்களால் அவனுக்கு மகள் மேலிருந்த பாசத்தைப் பற்றி புரிந்து கொள்ளத் தொடங்கினாள்.

முதல் முதலில் பேபி தாய் தந்தையரை விட்டு பிரிந்து வசிப்பதற்கு உடன்படாமல் மிகவும் ரகளை பண்ணி வந்தாள். ஆனால் சீக்கிரத்திலேயே சாம்பவியுடன் ஒட்டிக் கொண்டு விட்டாள். இப்பொழுது மகிழ்ச்சியோடு இருக்கத் தொடங்கினாள்.

சந்திரன் ஆறே மாதத்தில் பேபியிடம் தோன்றி மாறுதலைக் கண்டு ஆச்சரியமடைந்தான்.

பேபியின் உடம்பில் சதை பிடித்தது!

கண்களிலிருந்த அந்த திகிலும் பயமும் மாயமாயின அடங்காப்பிடாரித்தனம் மறைந்து விட்டது.

இதர பிள்ளைகளுடன் சேர்ந்து அழகாக விளையாடத் தொடங்கினாள்.

பேபியின் கையால் அழகிய டிராயிங்குகள் உருவெடுக்கத் தொடங்கின. படங்கள் வரைவதில் அவளுக்கு ஆர்வம் ஏற்படத் தொடங்கி விட்டது. ஒரு ஆண், பெண் படங்களை வரைந்து விட்டுக் கீழே 'அம்மா— அப்பா' என்று எழுதினாள்.

சந்திரனுக்குத் தான் இங்கே கொண்டு வந்து சேர்த்த பேபிதானா இந்தப் பெண் என்ற ஆச்சரியம் ஏற்படத் தொடங்கிற்று. பேபியின் நடவடிக்கை கூட மாறிவிட்டது. அவள் பிடிவாதம் மறைந்தது.

சந்திரன் சாம்பவியிடம்— ''சாம்பவி! உங்களைப் பாராட்டுகிறேன். உங்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்கிறேன்'' என்றான்.

''எதற்கு?'' என்றாள்.

''பேபியைப் போன்ற பிடிவாதக்காரக் குழந்தையிடம் எவ்வளவு மாறுதலைக் கொண்டு வந்துட்டீங்க? பேபியை எங்க வீட்டிலிருந்து இங்கே கூட்டிட்டு வந்த போது நான் ரொம்பவும் தளர்ந்து போயிருந்தேன். நான் ஒரு அரக்கன் என்று என்னையே நிந்தித்துக் கொண்டேன். நாங்கள் எவ்வளவு சுயநலவாதிகள், குழந்தை அழகாய் இல்லைங்கிறதுக்காக வெட்கப்படுவதா? தாய் தந்தையர் உயிரோடிருந்தும் ஒரு அனாதையாய் பேபிக்கு யாருமே திக்கில்லாதவர்களைப் போல, அனாதையாய் இங்கே கொண்டு வந்து சேர்க்கிறேனே என்று வருத்தப்பட்டேன். உண்மையைச் சொல்கிறேன். அப்ப எனக்குத் தெரியாது பேபியை ஒரு 'தெய்வ'த்திடம் கூட்டிட்டு வந்திருக்கேன்னு.''

''அவ்வளவு பெரிய வார்த்தைகளைச் சொல்லாதீங்க. நான் என் டியூட்டியைதான் செய்தேன். இது ஒன்றும் பெரிய விஷயமில்லையே'' என்றாள் சாம்பவி.

''உங்களைப் புகழணுங்கிறது என் நோக்கமில்லைங்க. இதை நீங்கள் செய்யறது கேவலம் டியூட்டிதான்னு சொன்னால் என்னால் ஒப்புக்க முடியாது. பேபி கீழே விழுந்து அடிப்பட்டு விட்டால் சட்டென்று அவளைத் தூக்கிக்கிட்டு காயம் பட்டு ரத்தம் வழிகிற இடத்தில் மருந்து போட்டு பேண்டேஜ் கட்டினால் அது கேவலம் உங்க டியூட்டின்னுதான்னு நினைச்சுக்கலாம். ஆனால் பேபி அந்த அடியைத் தாங்கிக்க முடியாமல் துடிதுடித்தால் அவளைத் தூக்கிக் கொண்டு சமாதானப்படுத்துவதும், அவள் வலியை மறப்பதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்து அதைப் செய்வதும், அச்சிறுமியின் முகத்தில் சிரிப்புத் தென்படுகிற வரை நீங்கள் விடாமல் செய்வது இதெல்லாம் வெறும் டியூட்டிதான்னு என்னால் நினைத்துக்க முடியாது.''

சாம்பவி முறுவல் பூத்தாள்.

''மிஸ் சாம்பவி! நீங்கள் பேபியை இல்லை, என்னைத்தான் காப்பாற்றியிருக்கீங்க'' மார்பில் கை வைத்துக் கொண்டே சொன்னான்.

''அப்படீன்னால்?'' புரியாமல் கேட்டாள்.

''இப்ப எனக்கு எவ்வளவு நிச்சிந்தையாய் இருக்குன்னு உங்களால் புரிஞ்சுக்க முடியாது.'' ஐயாம் வெரி கிரேட்ஃபுல் டு யூ. ஏனெனில் இதற்கு முன்னால் எந்த ஊருக்காவது வியாபார ரீதியாய் நான் போனால் என் உயிரெல்லாம் பேபி மீதே இருந்துட்டிருக்கும். நான் வரும் வரை தேவி குழந்தையை உயிரோடு விட்டு வைத்திருப்பாளா, என்னால் திரும்பவும் அவளைக் கண்ணால் காண முடியுமா என்று தவித்துப் போயிட்டிருப்பேன். ஊரிலிருந்தாலும் வெளியூருக்குப் போனாலும் ஒவ்வொரு நிமிஷமும் என் மனமெல்லாம் குழந்தையைப் பற்றியேதான் இருக்கும். இப்ப அந்தக் கவலை இல்லை! நிச்சிந்தையாய் இருக்கு! இப்ப பேபியைப் பற்றிய ஞாபகம் வந்தால் உடனே உங்களைப் பற்றிய ஞாபகம் வந்துடும். பேபி உங்களிடம் சிரித்துக் கொண்டு சந்தோஷமாய் இருக்கிறாள். அந்த யோசனையும் நம்பிக்கையுமே எனக்கு எவ்வளவு தைரியத்தைக் கொடுக்கிறது தெரியுமா? உங்களுக்குத் தெரியாது... ஒருக்கால் நான் இப்படி மனம் விட்டுச் சொல்றது உங்களுக்குப் புகழுரையாய் தோணுகிறதோ என்னவோ?''

சாம்பவிக்கும் புரிந்துதான் இருந்தது- அவன் சந்தோஷமாய் கவலையில்லாமல் இருக்கத் தொடங்கியிருப்பது உண்மைதான்.

சந்திரன் தன் நன்றியை வேறு விதத்தில் காட்டிக் கொண்டிருந்தான், அரவணைப்பு இல்லத்தில் இருந்த குழந்தைகளின் சௌகரியத்திற்காக ஏதாவது ஒன்றை பண்ணிக் கொண்டிருக்கத் தொடங்கினான். குழந்தைகள் படுத்துக் கொள்ளும் ஹாலில் ஃபேன் போடச் செய்தான். எல்லோர் கட்டிலுக்கும் கொசுவலை வாங்கித் தந்தான். விளையாட்டு சாமான்களைப் பற்றிச் சொல்லத் தேவை இல்லை. வெந்நீர் வசதிக்காக ஹீட்டர் பொருத்தித் தந்தான். பண்டிகை நாள் வந்தால் எல்லோருக்கும்

புதுசுகள் வாங்கித் தந்தான். குழந்தைகளுக்காக டீ. வி. வாங்கித் தந்தான்.

'அரவணைப்பு' இல்லத்தின் ப்ரெசிடென்ட் சுமித்ரா தேவிக்கு சந்திரன் மீது நல்ல பற்றுதல் ஏற்பட்டது.

''சந்திரன்! மை பாய்! உன்னைப் போன்ற இளைஞர்கள் இன்னும் கொஞ்சம் பேர் என் கைக்கீழ் இருந்து விட்டால் இந்த நாட்டிலுள்ள பாதிப்பேர் ஊனமுற்றோர்களை நானே சுவீகாரம் எடுத்துக் கொண்டு விடுவேன்'' என்பாள் அவள்.

''ஓ. கே. ஷ்யூர் ஆன்ட்டி! உங்க சாம்பவி உங்களுக்கு ஒத்தாசையாய் இருந்துட்டால் நாம்ப நீங்கள் நினைத்தாற்போலவே செய்திடலாம்'' என்பான் அவன். ''நான் உதவி செய்றது மட்டுமேயில்லை ஆன்ட்டி; ராஜேஸ்வரி ஆன்ட்டி என்று எங்கள் உறவுக்கார ஒரு பெண்மணி இருக்காங்க. அவங்க நல்ல சமூகசேவகி. ஒரு தடவை இங்கே கூட்டிட்டுவரேன் அவங்களை'' என்று வாக்களித்தான்.

அந்த வாரத்திலேயே ராமேஸ்வரியைக் கூட்டி வந்தான். குழந்தைகளைப் பார்த்ததும் ராமேஸ்வரியின் மனம் இளகிவிட்டது. அப்பொழுதே அவள் ஐம்பதாயிரம் நன்கொடை தருவதாய் அறிவித்து விட்டாள். ராமேஸ்வரியும் சந்திரனும் போய் விட்டபிறகு சுமித்ராதேவி சாம்பவியின் தோளில் தட்டி, ''சாம்பவி! நன்றியை உனக்குத்தான் சொல்லணும்மா. இதற்கெல்லாம் காரணம் நீதான். நீ இந்தக் குழந்தைகளை மிகச் சிரத்தையாய் கவனித்துக் கொள்வதால்தான் நமக்கு இத்தனை நல்ல பேர் கிடைத்திருக்கிறது. நீ செய்த நல்ல காரியம் சந்திரனின் மனதில் எவ்வளவு நல்ல எண்ணத்திற்கு வித்திட்டிருக்கிறது, பார்! ஒரு நல்ல காரியத்தின் பலன் ஆயிரம் நல்ல காரியங்களுக்கு அஸ்திவாரமாகும் என்பாங்க இதற்குத்தான் போலும்!'' என்றாள் அவள்.

அந்த நிமிஷமே சாம்பவியின் சம்பளத்தை அதிகரிக்கும் படியும், பஸ் பாஸ் தரும்படியும், குழந்தைகள் விஷயத்தில் சுயமாய் முடிவெடுக்கக்கூடிய அதிகாரங்கள் சிலவற்றையும் தரச் சொல்லி சிபாரிசு செய்து எழுதினாள். சாம்பவி ஆனந்தத்தால் திணறத் தொடங்கினாள். நல்ல மார்க்கு களை எடுத்து தங்கமெடல் பெற்ற மாணவியின் மனைதப் போல ஆயிற்று அவள் மனம். அவள் அதிர்ஷ்டந்தான் போலும் அவளுக்கு எல்லோருமே ஆதரித்து அன்பு செலுத்துபவர்களே கிடைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவள் சொந்த விஷயத்திற்கு வந்தால் தந்தையைக் காட்டிலும் அதிகமாய் எந்தக் குறையுமில்லாமல் பார்த்துக் கொள்ளும் அங்கிள்!

அரவணைப்பு இல்லத்திலோ மிகப் பரிவோடு நடத்து கிற சுமித்ரா தேவி!

வாயால் சொல்லாமல் தன் கைகளால் செய்து காட்டி அன்போடும் நன்றியோடும் நடந்து கொள்ளும் சந்திரன்.

ஓஹ்! வாழ்க்கை மிக நிறைவு பெற்றதாய், பூரண மகிழ்ச்சியோடு எந்தக் குறையும் இல்லாததாய், நிச்சிந்தை யாய், சந்தோஷமாய் இருந்தது.

9

இருபது நாட்களுக்குப் பிறகு—

இதற்கு நடுவில் மகாலிங்கம் பரிஷித்திடம் என்ன சொன்னாரோ, எப்படிச் சொன்னாரோ, தெரியாது, அவன் அவரோடு டாக்டரிடம் வந்தான்.

டாக்டர் மாதவன் சைக்கியாட்ரிஸ்ட் மட்டுமே யில்லை. ட்ரக் அடிக்ட் ஆனவர்களுக்கு சிகிச்சை பண்ணு வதில் கூட பிரபலமானவர் என்று தெரிந்தது.

இந்த இருபது நாட்களும் மகாலிங்கம் பரிஷித்தைப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு ஏதேதோ சொல்லிக் கொண்டேயிருந்தார்.

அவன் மட்டும் இதொன்றையுமே கவனிக்காமல் எங்கோ பார்த்துக் கொண்டிருப்பான்.

முதல் முதல் அவர் அவனை டாக்டரிடம் அழைத்துச் செல்லப் போவதாய் சொன்னதுமே, அவன் வீட்டைவிட்டும். ஓடிப்போய் நான்கு நாட்கள் வரை திரும்பி வராமல் தலைமறைவாய் இருந்தான்.

மகாலிங்கம் எங்கெல்லாமோ சுற்றிச் சுற்றி அலைந்து தேடிப் பார்த்து விட்டு இறுதியில் ட்ரக் அடிக்ட்டான அவனுடைய சக நண்பனைச் சந்தித்து, அவர்கள் மூலமாய் பரிஷித் இருந்த இடத்தைத் தேடிப் பிடித்தார். ஊர்க்கோடியிலிருந்த ஒரு சத்திரத்தில் படுத்துக் கொண்டி

ருந்தான். அவ்விடமெல்லாம் புதர்களும் காட்டுச் செ
களும் மண்டிக் கிடந்தன. பாழடைந்த குட்டிச் சுவர்க

மகாலிங்கம் அவ்விடத்தில் நினைவற்ற நிலை
படுத்துக் கிடந்த பரிஷித்தைத் தோளில் தூக்கிப் போட்
கொண்டு மெயின் ரோடு வரைக்கும் நடந்து வ
அங்கிருந்து ஆட்டோவில் வீட்டிற்கு அழைத்து வந்தார்

அவர் பரிஷித்தைத் தூக்கிக் கொண்டு நட
வந்ததால் அவர் முதுகு சுளுக்கிக் கொண்டது. சாம்
வெந்நீரைக் கொதிக்க வைத்து அதில் அமிர்தாஞ்ச
தைப் போட்டுக் கொண்டு வந்து அவர் முதுகில் ஒத்த
கொடுத்துக் கொண்டிருக்கையில் அவர் தொலை
கட்டிலில் படுத்து சூனியத்தைப் பார்த்துக் கொண்டிரு
பரிஷித்திடம சொன்னார்—

''இதப்பார் பரிஷித்! நீ எங்கே ஓடிப் போனாலும்
இந்த பூமியில் எந்த மூலையில் ஒளிந்து கொண்டா
நான் உன்னைத் தேடிப் பிடித்துவிடுவேன். என்
மிருந்து நீ தப்பித்துக் கொண்டுவிட முடியா
தெரிஞ்சுதா? உன் நண்பர்கள் அத்தனை பேரை
எனக்குத் தெரியும். நான் அவங்களுக்கெல்லாம் பத்
இருபதோ பணம் தந்து கையில் போட்டுக் கொ
பிட்டேன். உனக்கே நீ கொஞ்சம் ஹெல்ப் பண்
காள்.''

''இதோடு ஆயிரம் தடவை சொல்லிட்டே
உங்களுக்கு. என்னால் முடியாது'' பரிஷித் மேற்கூரை
பார்த்துச் சொல்வதுபோல அவ்விடத்தையே வெறி
பார்த்துக் கொண்டு சொன்னான். அவன் குரல் மிக
பலவீனமாய் இருந்தது.

''ஏன் முடியாது?'' மகாலிங்கத்தின் குரலில் ஆவே
பொத்துக் கொண்டு வந்தது.

''இப்படித்தான் இந்தப் போதை மருந்துகளால் உன்
வாழ்க்கையை நாசம் செய்யப் போகிறாயா?—''
மகாலிங்கம் சட்டென்று எழுந்து வரப்போன பொழுது,
சாம்பவி அவர் கைமேல் தன் கையை வைத்துத் தடுத்து
விட்டாள். கண்களாலேயே— ''இந்த விதத்தில் சொல்லக்
கூடாது'' என்பது போல பார்த்தாள்.

மகாலிங்கத்தின் ஆவேசம் சட்டென்று தணிந்து
விட்டது. தன்னை கட்டுப்படுத்திக் கொண்டவர் வந்து
அவன் படுத்துக் கொண்டிருந்த கட்டிலில் உட்கார்ந்து
கொண்டார். அவன் கையைத் தன் இரு கைகளிலும்
எடுத்துக் கொண்டு கொஞ்சும் குரலில்—

''பரிஷித்! ப்ளீஸ்! ஒரு தடவை... ஒரே தடவை...
உன்னைக் குணப்படுத்த முடியுமா இல்லையான்னு முயற்சி
செய்து பார்.''

''எனக்கு குணப்படுத்திக்கணும்னு இல்லை.''

நாய்க்குட்டி வாலை ஆட்டிக் கொண்டே கிட்டே
வந்தது. அவன் காலால் அதை ஒரு தள்ளு தள்ளினான்.
அது வீலென்று அலறிக் கொண்டே சாம்பவியிடம் ஓடி
வந்தது.

''இந்த இருட்டுக் குகைக்குள்ளே இப்படியே
இருந்துடப் போகிறாயா?''

''நான் இருட்டுக் குகைக்குள்ளேயிருந்து வெளியே
வந்துட்டேன். இவ்விடமெல்லாம் சந்தோஷ சாகரம்.
எல்லையில்லாத ஆனந்தம்''— அவன் கண்களில் மகிழ்ச்சி
குமிழியிட்டது ''என் சந்தோஷத்தைக் கெடுக்காதீங்க.
நீங்க என்னைக் கொஞ்ச நாளாவது இப்படி வாழ
விடுங்க.''

மகாலிங்கம் வந்து கட்டில் மீது உட்கார்ந்து
கொண்டதால் அவர் முதுகிற்கு ஒத்தடம் கொடுத்துக்
கொண்டிருந்த சாம்பவி வெந்நீர் பாத்திரத்தையும்

துணியையும் எடுத்துக் கொண்டு தானும் கட்டிலுக்
வந்து நின்றாள். அவ்விருவரின் சம்பாஷணைகளை
கேட்டுக் கொண்டே அவர் முதுகில் ஒத்தடம் கொடுத்
தொடங்கினாள். அவர் கோபத்தை அடக்கிக் கொண்
திரும்பவும் கெஞ்சிக் கொண்டிருந்தார்.

''பரிஷித்! என் பேச்சைக் கேளு. வாழ்க்கைய
வீணாய் கெடுத்துக் கொள்கிறாய்! நீ உட்கொள்
இந்தப் போதை மருந்து உன் வாழ்க்கைக்கு நீயே தி
வைத்துக் கொள்வது போலத்தான். அது உனக்குத் தெ
மாட்டேங்கிறது. உன்னால் அதிக நாள் உயிரோடிரு
முடியாது.''

அவன் சிரித்தான்.

''எனக்கு உயிரோடிருக்கணும்னு இல்லை.''

''நீ கோழை! வாழ்க்கையை எதிர்த்து நி
முடியாமல் இப்படி இருட்டுக் குகைக்குள் போய் ஒளி
கொண்டு விட்டாய்.''

அவன் பதில் பேசவில்லை.

அவர் கேலியாய் சொன்னார்— ''கோழை! வாழ்க்
யில் எதற்கும் பயன்படாமல், ஒன்றுமே செய்ய முடி
மல், ஏதோ ஏதோ சந்தோஷத்தைக் கொள்ளையடித்
கணும்னு எண்ணி இவ்விதமான வழியைத் தே
தெடுத்துக் கொண்டிருப்பாய்! அதை ஒப்புக்கொள்! ஒப்
கிறாயா?'' அவர் மிரட்டலாய் கேட்டார்.

டாக்டர் அவ்வாறு மிரட்டச் சொல்லியும், அவ
வாதாட வைக்கும்படியும், குதர்க்கத்தால் அவனை
தூண்டி விடும்படியும் ஆலோசனை தந்திருந்தார். மனதி
குள் புதைந்திருக்கும் வேதனை என்னவென்று வெளி
படும் என்பது அவர் அபிப்பிராயம். அவன் கடந்த கா
தைப் பற்றித் தெரிந்து கொண்டால் அவனைப் பா
யாவது புரிந்து கொள்ளலாம்! அப்பொழுது சிகிச்சை
செய்வது பாதி எளிதாகிவிடும்!

அவனை மகாலிங்கம் விசாரித்த பொழுது தான் ஒரு அனாதை என்றும், தனக்கு யாருமே இல்லை என்றும் சொல்லியிருந்தான் பரிஷித். அதைக் கேட்டு அவர் உள்ளம் உருகி விட்டது.

பரிஷித்தைப் பார்த்தபோது அவருக்குத் தன் வாழ்க்கை நினைவிற்கு வரத் தொடங்கிற்று.

''தாங்க் காட்! தான் இவ்வளவு அமைதியின்மையால் துன்புறவில்லை! பரிஷித் அனாதை என்று தெரிந்த பிறகு அவர் அன்பு அவன்பால் பொங்கத் தொடங்கிற்று.

டாக்டர் சிகிச்சை செய்வதற்கு நிறைய பணம் செலவழியும் என்று சொன்ன போதிலும் அவர் அதை லட்சியம் பண்ணவில்லை.

''எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. இவன் சாதாரண மனுஷனாகணும், அதுதான் முக்கியம் டாக்டர்'' என்றார் அவர் ஆவேசமாய்.

''இவன் உங்களுக்கு என்னவாகணும்?'' டாக்டர் கேட்டார்.

''நேற்றுவரை அவன் எனக்கு எந்த உறவும் ஆக வேண்டாம். ஆனால் இந்த நிமிஷத்திலிருந்து இவன் எனக்கு மகன்! நான் இவன் வளர்ப்புத் தந்தை. என் மகனை நான் குணமாக்க வேண்டிய தர்மம், பொறுப்பு என்னைச் சேர்ந்தது இல்லையா?''

டாக்டர் தலையாட்டினார்.

''நீங்கள் உறவு கொண்டாடிக் கொண்டாலும், உறவை விட்டாலும் அது வேறு விஷயம். ஆனால் உங்கள் மூலமாய் ஒரு அனாதையான— போதைப் பொரு ளுக்கு அடிமையான ஒருத்தனின் வாழ்க்கை சீர் திருத்தி னால் அதைவிட பெரிய விஷயம் வேறு உண்டா? நீங்கள் விடாமுயற்சியோடு பாடுபட்டால் இவன் கண்டிப்பாய்

குணமாவான் என்ற நம்பிக்கை இருக்கிறது எனக்கு. ஆனால் உங்களை இவன் மிகவும் பாடுபடுத்தி விடுவான். கோபத்தை வரவழைப்பான்— அலுப்படையச் செய்து விடுவான். சில சமயங்களில் இந்த ட்ரக் அடிக்ட்ஸ்களை சீர்த்திருத்த முயலுகிற அவங்க உறவினர்களே உடல்நலம் கெட வாய்ப்பு உண்டு. அந்த ஆபத்து உங்களுக்கு வந்து விடாமல் ஜாக்கிரதையாய் இருங்கள்'' என்றார் அவர்!

''எனக்கு ரொம்ப பொறுமை உண்டு. ஒருக்கால் இந்த விஷயத்தில் எங்கம்மாவைக் கொண்டு பிறந்திருப் பேன். இவனை எப்படியாவது குணப்படுத்திடனும். இது இவனைக் காப்பாற்றுவதற்காக இல்லை. என்னை நான் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான்! பையன் ரொம்ப கெட்டிக்காரன்னு நீங்கதான் சர்டிஃபிகேட் தந்துட்டீங்களே''

''எஸ்! ஹி ஈஸ் பிரில்லியண்ட். நோ டெளட்.''

''எனக்கு அந்த நம்பிக்கை போதும்'' என்றார் அவர். டாக்டர் சொன்னதைக் காட்டிலும் அதிகமாகவே பரிஷித் அவரை அழவைத்துக் கொண்டிருந்தான். ஆனாலும் சரி அவர் பொறுமையாய் தாங்கிக் கொண்டார்.

''பரிஷித்! ஒரு தடவை முயற்சி செய்து பாருப்பா'' திரும்பவும் கெஞ்சினார் அவர்.

''எனக்குப் செய்யணும்னு இல்லை.''

''அதான் ஏன்னு கேட்கிறேன்.''

''உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை'' அவன் கோபமாய் சொன்னான்.

''ஏன் சொல்ல மாட்டாய்?''

''சொல்ல முடியாது, முடியாது, என்னிஷ்டம். என்னைத் துன்புறுத்தாதிங்க'' கத்தினான் பரிஷித்.

மகாலிங்கம் அதையும்விட பெரிய குரலோடு கத்தினார். ''சொல்லாவிட்டால் விடுய்யா! ஏதோ எனக்காகக் கேட்பது போல எண்ணிக் கொண்டு விட்டாயா? இந்த நிமிஷத்திலேருந்து உன் விஷயத்தையே பொருட்படுத்தப் போறதில்லை நான்.''—

பரிஷித் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தவன் எழுந்திருந்தான்.

அவன் வாசலை நோக்கி விடுவிடென்று போகத் தொடங்கியதைப் பார்த்து மகாலிங்கம் கத்தினார்— ''எப்படிப் போயிடுவாய்? இவ்வளவு நாளாய் என்னிடம் இருந்திருக்கிறாய். என் அறையைப் பயன்படுத்திக் கிட்டாய். எங்க வீட்டில் சாப்பிட்டிருக்கிறாய். காபி. டீ குடித்திருக்கிறாய். இதெற்கெல்லாம் பணத்தைக் கட்டி விட்டுப் போ. கட்டாமல் போனாயானால் செத்தாலும் சும்மாயிருக்க மாட்டேன். போலீஸ் ரிப்போர்ட் கொடுப்பேன். அவங்க உன்னை அரெஸ்ட் செய்து ஜெயிலில் போட்டு விட்டால், உனக்கு அப்ப ட்ரக்ஸ் எங்கேயிருந்து வரும்னு பார்த்துடறேன். நான் சொன்ன படியே செய்து திருவேன்.''

போய்க் கொண்டிருந்த பரிஷித் நின்று விட்டான்.

அவன் மெல்ல திரும்பி மகாலிங்கத்தைப் பார்த்தான்.

அவன் கண்களில் ஆச்சரியம், தீனம் செய்வதறியாத தன்மை தென்பட்டது

''நீ வாசலைத் தாண்டு! நான் போலீசாரிடம் உன்னை ஒப்படைக்காமல் போனால் பார்...! அந்த எஸ். ஐ. தான் உனக்குத் தெரியுமே! நான் சொல்லி விட்டால் உன்னை ஒரு மாதமில்லை, ரெண்டு மாத மானால் கூட விடமாட்டார். அப்ப ட்ரக்ஸ் இல்லாமல் எப்படி இருந்துடுவாய்னு பார்த்துடறேன்.

சாம்பவி குறுக்கிட்டாள்.

பரிஷித்திடம் வந்தாள்.

''பரிஷித்! ப்ளீஸ்! அங்கிளுக்குக் கோபத்தை வழைக்காதே! அவர் சொன்னது போலவே செய்திடு வார்.—நீ ரொம்ப வருத்தப்படுவாய். எனக்குத் தெரியும் உன்னால் அந்த இஞ்ஜக்ஷன் இல்லாமல் இருக்க முடியாது டாக்டர் சொன்னாற் போல கொஞ்சங் கொஞ்சமாய் டோஸேஜைக் குறைத்துக் கொள்வதற்கு நீ முயற்சி பண்றது ஒன்றும் கஷ்டமில்லை. உனக்கு நாங்கள் இருவரும் இருக்கிறோம்! உன் மேல் எங்களுக்கு அன்பு இருக்கு.''

அவன் அதைக் கேட்டு ஏனமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''இந்த வார்த்தைகள் போதைப் பொருளை வி பயங்கரமானவை,''

''என்ன?'' கேட்டாள்.

அவன் திரும்பவும் பதில் பேசவில்லை.

சாம்பவி அவன் கையைப் பிடித்துப் பரிவோடு சொல்லத் தொடங்கினாள்— ''பரிஷித்! நானும் உன்னைப் போன்ற ஒரு அனாதைதான்! அங்கிளிடம் இருப்பதால் எவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறேன் பார். அங்கிள் சொல்றதை ஒரு நிமிஷம் ஆலேசமில்லாமல் யோசித்துப் பார். உனக்கு நிறைய எதிர்காலம் இருக்கு. உன்னையே ஏன் நீ இப்படி பாழடித்துக் கொள்கிறாய்? இப்பொழுதும் ஒன்றும் மிஞ்சி விடவில்லை. நீ எந்தக் காரணத்தால் இந்த இருட்டுக் குகைக்குள் போனாய்னு நாங்கள் கேட்க வில்லை. உன் கடந்தகால வாழ்க்கையோடு எங்களுக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை. நீ எங்களைப் போல சாதாரண மனுஷனாய் ஆகணுங்கிறதுதான் எங்கள் முயற்சி. நாங்களிருவரும் சொல்லி விட்டால் போதாது. உனக்கே உதவி செய்துக்கணும் நீயும். ஒன்று மட்டும் உண்மை! அங்கிளுக்கு உன் மேல் ரொம்பப் பிரியம். அவர்

உன்னை சொந்த மகனைக் காட்டிலும் அதிக பிரியமாய்...''

''இதப்பார்! அந்த சம்பந்தந்தான் எனக்கு அருவருப் பாயிருக்கு. நான் அனாதை. எனக்கு யாரோடுமே சம்பந்தம் வெச்சுக்கணும்னு இல்லை.'' அவன் கத்தினான்.

''சரி விடு. நாம்ப மூவரும் சிநேகிதர்கள். போதுமா? பரிஷித்! ப்ளீஸ்! வீட்டிற்குள் வா, உனக்குக் கோபம் வந்தால் எங்கள் மீது எரிந்து விழு. சண்டை போடு. என்ன வேண்டுமானாலும் செய். வீட்டை விட்டு மட்டும் போயிடாதே. ப்ளீஸ்'' சாம்பவி கெஞ்சி கேட்டுக் கொண்டாள்.

பரிஷித் பதில் பேசவில்லை.

அவன் பாதம் வாசலுக்கு வெளியே போவதற்கு நகர்ந்து கொண்டிருந்தது.

சாம்பவி பரிவு நிரம்பிய குரலில் சொன்னாள்—

''பரிஷித்! நீ போக விரும்பினால் போய்க்கொள். நாங்கள் உன்னை நிறுத்த மாட்டோம். இன்றைக்கு இப்படிச் சண்டை போட்டுக் கொண்டு மட்டும் போக வேண்டாம். நாளைக்குப் போ. நல்லதோ கெட்டதோ இவ்வளவு நாளாய் சேர்ந்து ஒரு கூரைக்கீழ் வசித்து வந்தோம். நாங்கள் உன்னை எதுவும் சொல்ல மாட்டோம். சொல்ல உரிமையும் கிடையாது எங்களுக்கு. நீ நாளைக்குப் போ. உன்னிஷ்டம்! இனி அங்கிள் உன்னைத் தேடிட்டு அலையும்படி விடமாட்டேன் நான். நீ விரும் பாதபோது உன்னைப் பின்தொடர்ந்து அலைந்து தொந்தரவு செய்யக் கூடாது நாங்கள், வா.''

சாம்பவி கெஞ்சியதால் தானோ என்னவோ வாசலைத் தாண்டி எடுத்து வைத்த அவன் பாதம் திரும்பி உள்ளே வந்து விட்டது. அப்படியே நின்று விட்டது.

சாம்பவியின் முகத்தில் மகிழ்ச்சி.

''உள்ளே வா பரிஷித்! உனக்கு தேநீர் தரேன். நாங்கள் உனக்கு ஃபிரெண்ட்ஸ் பரிஷித். உனக்கு விரோதிகள் இல்லை.''

பரிஷித் அப்படியே நின்றான்.

அவன் முகத்தில் இருவேறு உணர்ச்சிப் போராட்டம் தென்பட்டது. போய் விடுவதா? அல்லது இந்தப் பெண்ணின் வார்த்தையை மதித்து மரியாதை காட்டுவதா?

''வா பரிஷித்'' என்றாள் சாம்பவி.

பரிஷித் திரும்பி மகாலிங்கத்தை ஒரு முறை தீவிரமாய் பரம விரோதியைப் பார்ப்பது போல பார்த்தான்.

அவர் அதற்குள் முகத்தைத் திருப்பிக் கொண்டு நாய்க் குட்டியைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

பரிஷித் உள்ளே வந்தான்.

நேராய் தன் அறைக்குள் போய் கதவைச் சாத்திக் கொண்டான்.

சாம்பவியும் மகாலிங்கமும் ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அவன் அவ்வாறு கதவைச் சாத்திக் கொண்டால் கையில் இஞ்ஜக்ஷன்னைக் குத்திக் கொள்கிறான் என்று அர்த்தம். சாம்பவி தாழ்ந்த குரலில் சொன்னாள்—

''அங்கிள்! நாம்ப அவனை போதைப் பொருளிலிருந்து மீட்டு தொலைவிற்குக் கொண்டு போவதை விட்டு விட்டு, இன்னும் அவனை அந்தப் பக்கமாகவே இழுத்துச் செல்கிறோமோன்னு தோணுது.''

''எனக்கும் அப்படித்தாம்மா தோணுகிறது! என்ன பண்றதுன்னு தெரியலை. எல்லாம் ஒரே குழப்பமாய்

இருக்கு. டாக்டர் சொன்னது எதுவும் நினைத்தாற் போல பலன் தராததோடு கூட இந்த மாதிரி திருப்பிக் கொண்டு விட்டதே.''

''அப்படி நிராசையடைந்து விடாதீங்க. கொஞ்சம் பொறுமையாய் இருந்து பார்ப்போம்'' என்றாள்.

''நான் பிடியை விடாத விக்ரமாதித்தனைப் போல முயற்சி செய்றேன். இந்த மகாலிங்கம் பிடித்தால் உடும்புப் பிடிதான்'' என்றார் அவர்.

10

நான்கு நாட்கள் கழிந்தன.

மகாலிங்கம் ஊரில் இல்லை. சத்யாவின் மைத்துனிக்கு வேலூரில் ஏதோ சம்பந்தம் பார்த்ததால் சத்யாவோடு தானும் போயிருந்தார். சாம்பவிக்குக் காலையிலிருந்தே உடம்பு வலியும் ஜலதோஷமும் இருந்ததால் அஞ்சலைக்குப் போன் செய்தாள்.

சாப்பிடக்கூடத் தோன்றவில்லை அவளுக்கு.

பரிஷித் அரை மணிக்கு முன்னால் வெளியே போய் இருந்தான்.

தினமும் அவன் எழுந்திருக்கும்போது மிகத் தாமத மாகி விடும். அங்குமிங்கும் தட்டமாலை சுற்றுவது போல

சுற்றிக் கொண்டிருப்பான். வீட்டில் இருந்தால் மாலை வரையிலும் இருப்பான். இல்லாவிட்டால் வெளியே போய் விடுவான்.

டாக்டர் அவன் கையில் எந்தச் சமயத்திலும் பணம் கொடுக்க வேண்டாம் என்று எச்சரிக்கை செய்திருந்தார். வீட்டில் விலையுயர்ந்த சாமான்களைக் கூட கண்ணில் படும்படி போட்டு வைத்திருக்க வேண்டாம் என்று ஆலோசனை தந்திருந்தார்.

இந்தப் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள் அந்த மருந்துகளை வாங்குவதற்காகப் படும் அவஸ்தைகள் அளவில்லாதவை என்று அவர் சொன்னார். அந்த மருந்து இல்லாமல் போனால் அவர்களால் பிழைக்க முடியாது. அவர்களிடம் இந்தப் பழக்கத்தையும், பலவீனத்தையும் கவனித்துவிட்டு விற்பனையாளர்கள்— போதைப் பொருட்களுக்கு அளவுக்கு மீறிய விலையைச் சொல்லுவார்கள். எப்படியாவது சரி அதைப் பெற்றுவிட வேண்டும். இதுதான் அவர்களின் தவிப்பு. கடைசியில் பிச்சைக்காரர்களைப் போல கையேந்தி பிச்சை எடுக்கவும் தயங்க மாட்டார்கள். மகாலிங்கமும் சாம்பவியும் இந்த விஷயத்தில் மிக ஜாக்கிரதைகளை மேற்கொண்டார்கள்.

வீட்டில் பணம் கிடைக்க வழியில்லை.

மகாலிங்கம் பரிஷித்திற்கு யார் ஒரு நயாபைசா கொடுத்தாலும் செம்மையாய் உதைத்து விடுவேன் என்று சொல்லி விட்டார் எல்லோரிடமும். அவன் வெளியே போகும் வரையிலும் மகாலிங்கமோ சாம்பவியோ காவல் காரர்களைப் போல ஏதோ வேலை இருப்பது போல சாக்கிட்டு அவ்விடத்திலேயே இருப்பார்கள்.

இரண்டு நாட்களாய் பரிஷித்திற்குப் போதை மருந்துகள் எதுவும் கிடைக்கவில்லை போலிருந்தது. பைத்தியம் பிடித்தவனைப் போல, குட்டி போட்ட பூனையாய் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான்.

சாம்பவியை இதற்கு முன்னால் என்றுமே ஏறிட்டும் பார்க்காதவன் அன்று மாலையில் அவள் சமையல் செய்து கொண்டிருந்த பொழுது, வந்து சமையலறை வாசலில் நின்றான். உருளைக் கிழங்குகளின் தோலை உரித்துக் கொண்டிருந்த சாம்பவி எதற்காகவோ இந்தப் பக்கமாய் திரும்பியவள் கதவிற்கருகில் நின்று கொண்டிருந்த பரிஷித்தைப் பார்த்து ஒரு வினாடி ஆச்சரியமடைந்து விட்டாள். உடனே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு முறுவலுடன்— பரிவும் அன்பும் கலந்த பார்வையோடு பார்த்து— ''என்ன?'' என்றாள்.

அவன் பதில் பேசவில்லை.

தடுமாற்றத்துடன் பார்த்தான்.

கண்கள் தரையை நோக்கித் தாழ்ந்தன.

''பசிக்கிறதா?'' என்றாள்.

அவன் இல்லையென்று தலையை ஆட்டினான்.

சாம்பவி எதிர்பார்த்தாற்போல விருட்டென்று திரும்பி உள்ளே போய்விடவில்லை அவன்.

''என்ன?'' குழைவோடு— சின்னப் பையனை விசாரிக்கும் அக்காவைப் போல கேட்டாள்.

''ஒரு நூறு ரூபாய் இருந்தால் தரீங்களா?'' அவன் தரல் எங்கிருந்தோ பாதாளத்திலிருந்து வந்தாற்போல கேட்டது.

அப்படியா சங்கதி என்றெண்ணிக் கொண்டாள். உடனே இல்லை என்று திட்டவட்டமாய் சொல்லிவிடவில்லை. ''இப்படிக் கேட்டால் எப்படி?'' என்று பிரசங்கம் தரவில்லை. செய்வதறியாதபடி— ''அம்மோவ்! நூறு ரூபாயா? எனக்கு எங்கேயிருந்து வரும் பரிஷித்? உனக்குத்தான் தெரியுமே, எனக்கோ போதும் போதுதா மான சம்பளம். அங்கிளின் டெல்ஷனும் சேர்ந்து நமக்கு

எப்படியோ கழிந்துட்டிருக்கு. வீட்டில் சர்க்கரை இல்லை நானே யாரையாவது கேட்கலாம்னு எண்ணி, சீ! வேண்டாம் ஒரு நாள் தேநீர் குடிப்பதை விட்டுவிட்டால் என்ன குடிமுழுகிடும்னு நினைச்சேன்'' என்றாள்.

உண்மையைப் போலவே சொல்லிவிட்டாள்.

பரிஷித் ஒன்றும் பேசவில்லை. ஒரு வினாடி யோசனையுடன் நின்று கொண்டிருந்தவன் விருட்டென்று திரும்பி அங்கிருந்து போய் விட்டான்.

சாம்பவி குளித்தாள். தலைவாரிக் கொண்டு வந்து சுவாமி படத்திற்கு முன்னால் தீபம் ஏற்றி வைத்தாள். அதற்குள் எங்கிருந்தோ பெரிதாய் கத்தலும் கூச்சலும் கேட்டன.

''திருடன்! திருடன்.''

''கொல்லுங்கள், அடியுங்கள்.''

''போலீசைக் கூப்பிடுங்கள்.''

''இதற்குப் போய் போலீசைக் கூப்பிடுவானேன்'' எல்லோர் குரலும் பெரிதாய் கேட்டன.

சாம்பவி அந்த சப்தத்தைக் கேட்டுவிட்டு என்னவாயிருக்கும் என்றெண்ணிக் கொண்டே வெளியே வந்தாள்.

''என்ன மாமி?'' நாகமணியைக் கேட்டாள்.

''உங்க பக்கத்து வீட்டுக்குப் புதிதாய் குடகூலி வந்திருக்கிறாரே ஒரு பேங்க் ஆபீசர், அவர் வீட்டில் திருடன் புகுந்துட்டான்.''

''இந்தப் பட்டப்பகலிலா?'' சாம்பவி ஆச்சரியமடைந்தாள். இந்த திருடர்களுக்கே ரொம்பவும் துணிச்சல் அதிகமாயிடுத்து. பகலில் எல்லோரும் வீட்டிலிருக்கும்போதே கொள்ளையடிக்க வந்துடறாங்க.''

எங்கிருந்தோ கூச்சல்கள் கேட்டுக் கொண்டே இருந்தன.

''கொல்லுங்கள்.''

''செம்மையாய் உதையுங்கள்.'' உதைக்கும் சப்தம் கேட்டது.

''ஐயோ! ஐயோ! இவனா?''— நாகமணி சுவற்றிற்கு அருகில் வந்து கத்திக் கொண்டே— ''சாம்பவி! அம்மா சாம்பவி! உங்க பரிஷித்தை அவங்க செம்மையாய் உதைக்கிறாங்கம்மா! வாயிலிருந்து ரத்தம் ஒழுகுகிறது''— என்று தெரியப்படுத்தினாள். உள்ளே போகத் திரும்பிய சாம்பவி சரேலென்று வெளியே வந்தாள்.

''என்ன மாமி?''

''உங்க பரிஷித் போயிட்டாம்மா— செம்மையாய் உதைக்கிறாங்க.''

''ஆ!'' சாம்பவி சட்டென்று பக்கத்து வீட்டை நோக்கி ஓடினாள். அங்கே லராந்தாவில் கூட்டமாய் இருந்தது. சாம்பவி அவர்களைத் தள்ளிக் கொண்டு உள்ளே ஓடினாள்.

அங்கே தரையில் குப்புற விழுந்துக் கிடந்தான் பரிஷித்.

பாங்க் ஆபீசர் அடிக்கப் போனார். சாம்பவி சட்டென்று ஓடிப் போய் அவர் கையைப் பிடித்துத் தடுத்துவிட்டாள்.

''மன்னித்துக்குங்க கொஞ்சம் பொறுங்க. அவன் என்ன தப்புச் செய்தான்?''

''என்ன செய்தானா?'' அவர் உருமியபடி பார்த்தார். நான் குளித்துக்கிட்டிருந்தேன் பாத்ரூமில். என் மனைவி சமையலறையில் சமைத்துட்டிருந்தாள். இவன் எங்க வீட்டிற்குள் புகுந்து இதோ இந்த கடியாரத்தை லவுட்டிக்

கொண்டு ஓடப் பார்த்தான். என் மனைவி சமயத்
வந்து கத்தியதால் போயிற்று. திருட்டு ராஸ்கல்! என்
தைரியம் இவனுக்கு—'' அவர் அடிக்கப் போனபொழு
சாம்பவி அழுத்தமாய் கையைப் பிடித்துத் தடு
விட்டாள்.

''இதப்பாருங்க, திருட்டுத்தனம் செய்
போலீசாரிடம் ஒப்படைக்கணுமே தவிர, இப்படி அடிக்
உரிமை உங்களுக்குக் கிடையாது.'' பெரிதாய் கத்தினா
சாம்பவி.

''ஐயோ! இவன் நம்ப மகாலிங்கம் சாரின் மகன்.''

''அடேய்! போதைப் பொருள் மகானே!''

''தெருவில் தென்பட்டு விட்டால் போதும், பள
கடன் தரீங்களான்னு என் பின்னல் சுற்றி அலைகிறான்
''நான் இவனை பஸ் ஸ்டாண்டிலும் கார்கள
சுற்றிச்சுற்றி வந்தும் பிச்சையெடுத்துட்டிருந்தத
பார்த்திருக்கிறேன்''— எல்லோரும் தலைக்கு
வியாக்கியானம் செய்து கொண்டிருந்தார்கள்.

சாம்பவி மட்டும் சட்டென்று பரிஷித்திடம் வந்தா
சலனமில்லாமல் படுத்துக்கிடந்த அவன் தோளில் த
விட்டு, ''பரிஷித்'' என்றாள்.

பரிஷித் அசையக் காணோம்.

அவனை ''பரிஷித்'' என்று பலமாய் உலு
மல்லாக்கத் திருப்பியவள் குழப்பமடைந்தாள்.

அவன் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் ரத்தம் வழி
கொண்டிருந்தது. கண்கள் சொருகிக் கொண்டிருந்

சாம்பவி கத்தினாள்— ''யாராவது போய்
ஆட்டோவைக் கூட்டிட்டு வாங்க. இவனை உட
ஆசுபத்திரிக்குக் கூட்டிட்டுப் போகணும்.''

''நான் போலீஸ் ரிப்போர்ட் தரேன்'' விட்டுக்காரர்
கத்திக் கொண்டிருந்தார்.

''சும்மாயிருய்யா! மொதல்ல டாக்டரிடம் கூட்டிட்டுப்
போக விடு. அவனுக்கு ஏதாவது ஆயிட்டதானால்
மகாலிங்கம் சார் உன்னைத் துப்பாக்கியால் சுட்டுத் தள்ளி
விடுவார்'' ஒருத்தன் பயமுறுத்தினான்.

யாரோ ஆட்டோவிற்காக ஓடினார்கள். ஆட்டோ
வந்தது. சாம்பவி அவனைத் தூக்க முயன்றபோது
ஒருவர் உதவி செய்து கீரையாய் துவண்டு விழுந்து
கிடந்த பரிஷித்தைத் தூக்கி வந்து ஆட்டோவில் உட்கார
வைத்தார்கள்.

சாம்பவி பரிஷித்தின் தலையை மடியில் வைத்துக்
கொண்டு உட்கார்ந்தாள். ஆட்டோவின் குலுங்கலுக்கு
அவன் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் இன்னும் ரத்தம்
கொட்டிக் கொண்டேயிருந்தது. சாம்பவி புடவைத்
தலைப்பை உருண்டையாய் சுற்றிக் கொண்டு மூக்கிலி
ருந்த வழிந்த ரத்தத்தைத் துடைத்து, வாய்க்கருகில்
அழுத்திப் பிடித்துக் கொண்டாள். அடுத்தத் தெருவிலி
ருந்து டாக்டரிடம் கூட்டி வந்தாள். அவர் பரிசோதித்து
விட்டு— ''லாபமில்லைம்மா. உடனே ரத்தமும் ஆக்ஸிஜ
னும் ஏற்றணும். அரசாங்க ஆசுபத்திரிக்குக் கூட்டிட்டுப்
போங்க'' என்றார்.

திரும்பவும் ஆட்டோவில் ஆசுபத்திரிக்கு எடுத்துச்
சென்றாள்.

அவ்வாறு ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்ததைப் பார்த்த
சாம்பவிக்குத் தலை சுற்றத் தொடங்கிற்று. இவன்
பிழைப்பானா என்று தோன்றிற்று. ஆட்டோவிலிருந்து
இறக்கி ஆசுபத்திரித்குள் கூட்டிச் செல்வதற்கு ஆட்டோக்
காரன் உதவி செய்தான்.

டாக்டர் வந்து பரிஷித்தை வார்டில் கட்டிலில் படுக்க
வைத்து ஆக்ஸிஜன் ஏற்றும்வரை அவன் பக்கத்திலேயே

இருந்தான். இடையில் பக்கத்து கட்டிலிலிருந்த ஆ
யில் பிளாஸ்கைக் கேட்டு வாங்கிக் கொண்டு போய்
வாங்கித்தந்து— ''குடிங்கம்மா'' என்றான்.

''ஐயோ, உங்களுக்கு வீண் சிரமம்'' என்ற
சாம்பவி.

''சிரமம் ஒன்றுமில்லைம்மா'' என்றான் ஆட்டோ
காரன். ஒரு மணி நேரங்கழித்து— ''இனி
போறேம்மா'' என்றாள்.

சாம்பவிக்குத் திடீரென்று அப்பொழுதுதான் ஞாபகம்
திற்கு வரத் தொடங்கிற்று. தன்னிடம் ஒரு சல்லிக்காசு
கூட இல்லை. அவனுக்கு ஆட்டோ கூலி தரவேண்டும்.

''நான்...பணம்...'' என்றாள் கலவரத்தோடு-

''பரவாயில்லிங்கம்மா, நான் அப்புறமாய் வாங்கி
கிறேன்.''

''என் அட்ரஸ்...'' சொல்லப் போனாள்.


''எனக்குத் தெரியுங்கம்மா, நீங்க அரவணை
இல்லத்தில் வேலை பண்றீங்க இல்லையா? நான்
தடவை ஒரு பையனைக் கொண்டு வந்து அங்கே
தேன்'' என்றான்.

சாம்பவி ''அம்மாடா'' என்று நிம்மதியாய் சிரித்தா

''தாங்க்யூ.''

''நோ மென்ஷன்'' அரைகுறையாய் வந்த ஆங்
தில் சொல்லிவிட்டுப் போய்விட்டான் அவன்.

'பாவம்! யாரோ தெய்வமாய் வந்து உதவினான்'
எண்ணிக் கொண்டே சாம்பவி பரிஷித் பக்கமாய் திரு
னாள். அவன் இந்த உலகத்திலேயே இல்லை என்
போலப் படுத்துக் கிடந்தான்.



இரவு வந்தது.

டியூட்டி டாக்டர் வந்தார்.

பரிஷித்தின் பல்ஸைப் பார்த்தார்.

போய் பெரிய டாக்டரோடு போனில் எதோ பேசி விட்டுத் திரும்பி வந்தார். வரும்போது வார்ட் பையனை ஸ்ட்ரெச்சர் எடுத்துவரச் சொன்னார்.

பரிஷித்தை எமர்ஜென்ஸி வார்டில் சேர்த்தார். ஏதேதோ இன்ஜக்ஷன்களைத் தந்தார்கள்.

''உங்களைச் சேர்ந்த பெரியவங்க யாராவது வந்திருக்காங்களா?'' என்று கேட்டார் டியூட்டி டாக்டர்.

''எதுக்கு?'' என்றாள் கலக்கத்தோடு.

''இவர் இன்றிரவைத் தாண்டுவது கஷ்டம். யாராவது இருந்தால் நல்லது'' அவர் சொல்லிவிட்டுப் போய் விட்டார். சாம்பவி சிலையாகி விட்டாள். அவளுக்கு இந்த எமெர்ஜென்ஸி வார்டில் அடியெடுத்து வைத்ததிலிருந்தே மனம் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தது.

அதோ! அந்தக் கோடியில் இருக்கும் எட்டாம் நம்பர் பெட்டில்தான் நான்கு வருடங்களுக்கு முனனால் தந்தை இறந்தார். அவர் இறந்தது, அந்த நோய், தன் கலக்கம், அந்தக் கடந்த காலமெல்லாம் இப்பொழுதுதான் கண்

முன்னாடி நடப்பது போலிருந்தது. பரிஷித்தின் வ
லேசாய் அசைந்தது.

சாம்பவி சட்டென்று அக்கையைத் தன் இரு கைகள
லும் பிடித்துக் கொண்டாள். சாம்பவியின் க
முன்னாடி தந்தையே வந்து கொண்டிருந்தார். அ
மரணத் தருவாயிலிருந்த அந்தச் சம்பவமே ஞாபகத்தி
வந்து கொண்டிருக்க— ''பரிஷித்'' என்று கூப்பிட்டாள்.

அவனிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. சமயத்தி
மகாலிங்கம் கூட ஊரில் இலலை.

பரிஷித்தின் கை சில்லென்றிருந்தது. சாம்பவி மு
முதலாய் கவனித்தாள். அவன் வலது கையில் நடுவிரலு
கடியில் பெரிய மச்சம் ஒன்று இருந்தது. சாம்ப
அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

அவளுள் அணுவணுவும் சாகக்கிடந்த அந்த உயி
மிக ஜாக்கிரதையாய் தன் இதயத்தில் எங்கேயோ வெ
லெதுப்பான இடத்தில்— உயிருக்கு ஆபத்தில்லா
இடத்தில்— இழுத்துப் பிடித்து வைத்துப் பாதுகாத்
விட வேண்டும் போன்ற தவிப்பு ஏற்பட்டது.

இவனைப் பிழைக்கவைப்பது எப்படி?

'எவ்வளவு துரதிர்ஷ்டம்! சமயத்தில் அங்கிள் சு
இல்லையே!' டாக்டர்கள் தம்மால் முடிந்ததையெல்லா
செய்து கொண்டிருப்பதாய் சொன்னார்கள்.

இரவு பன்னிரெண்டடித்தது.

டியூட்டி டாக்டர் திரும்பவும் வந்தார்.

''இன்னும் வேறு யாராவது பெரிய டாக்டர்களை
கூப்பிடறீங்களா?'' பதற்றத்துடன் கேட்டாள் சாம்பவி.

''எல்லோரும் பார்த்தாச்சு மேடம்! நாங்க செய்
வேண்டியதையெல்லாம் செய்றோம். அவங்களுக்
ஆயுளும் இருக்க வேண்டாமா?''

சாம்பவிக்குச் சட்டென்று ஆவேசமாய் கத்திவிட
வேண்டும் போலிருந்தது. ''டாக்டர், போதும் உங்கள்
வேதாந்தம். ஆயுள் மீது மட்டுமே நம்பிக்கை வைச்சுட்
டிருந்தால் அப்புறமாய் உன்னைப் போன்ற டாக்டருங்க
எதுக்கு? லட்சக்கணக்கான ரூபாய்களைப் போட்டு இந்த
ஆசுபத்திரிங்க எதுக்கு?''

சாம்பவியின் முகத்தில் ஆவேசத்தைப் பார்த்து விட்டு
அவர் சொன்னார்—

''நீங்க ஆவேசப்படாதிங்க நடப்பதை நம்மால்
தடுத்துவிட முடியாது.''— அவர் போய்விட்டார்.

பக்கத்து கட்டிலை நெருங்கினார். மளமளவென்று
ஏதேதோ பரிசோதனைகளை செய்தார்.

''போயிட்டான்'' முகத்தின் மேல் துப்பட்டியை
இழுத்து விட்டுச் சொன்னார். அங்கே உட்கார்ந்திருந்த
பெண்மணி ஓவென்று கதறினாள்.

''உஷ்! உஷ்! சும்மாயிரு. டாக்டர்தான் காலை
யிலேயே போயிடுவான்னு சொல்லிட்டாரே. சாயந்திரம்
வரைக்கும் நம்ப பிராப்தம் போலும்.'' ஒருத்தன் அவளை
சமாதானப்படுத்தினான். அவள் மகனாம். சிறுநீரகக்
கோளாறாம். பாவம், சாம்பவியிடம் கொஞ்சம் முன்னாடி
தான் தன் கதையையெல்லாம் கக்கியிருந்தாள்.

ஒரு மணி நேரத்தில் பக்கத்திலிருந்த அந்தக் கட்டில்
காலியாகிவிட்டது.

சாம்பவி மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டே
உட்கார்ந்திருந்தாள். அவள் கல்லைக் கொட்டாமல்
பரிஷித்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

இதென்ன விநோதம்!

அவள் எங்கே?

பரிஷித் எங்கே?

தன் கையிலிருந்த அவன் கையைப் பார்த்தாள்.

இதயம் படபடத்தது.

இவன் கடைசி தருணம் இது போலத்தன் முன்னை யில்தான் எழுதி வைத்திருக்கிறது போலும்! இல்லை விட்டால் எவ்வளவோ நாட்கள் வீட்டை விட்டுப் போ எங்கெல்லாமோ சுற்றியலைந்திருக்கிறானே! அங்கே எங்கேயாவது இந்த மாதிரி ஏன் நடக்கவில்லை?

அங்கிள் சொன்னதுபோல இவனுக்கும் தனக்கு ஏதாவது ஜென்ம பந்தம் இருக்கிறதா?

அந்த அந்திம தசைக்காகவே தன்னிடம் வந்தான இவன்?

தந்தையின் மரணத்தையே அவளால் இன்னும் மறக்க முடியவில்லை! அப்படியிருக்கும்போது தன் கையி இன்னொரு மரணமா?

சாம்பவி அப்படியே சிலையாய் உட்கார்ந்திருந்தாள்

எங்கேயோ கடியாரம் இரண்டு மணி அடித்தது கேட்டது. அவள் மனம் கலக்கமடைந்தது.

மரணத்தின் பிடியில் தளர்ந்து போய்க் கொண்டிரு கும் அனாமத்தான இந்தப் பரிச்சயமில்லாத இளைஞனை அவளால் இந்த ஜென்மத்தில் மறக்க முடியாமல் போ விடுமோ? இன்றிரவு- இந்த பயங்கரமான இரவை அவளால் ஜென்மத்திலும் மறக்க முடியாது.

அவளுக்குப். பயமாயிருந்தது

என்னதான் சாதாரணமாய் இருக்க முயன்றாலு அழுகை வந்தது.

பாவம், பரிஷித்! போதைப் பொருளுக்கு அடிமை யாகித் தன் வாழ்க்கையைத் தானே நாசம் செய்

கொண்ட விதம் ஒன்றைத் தவிர, மீதி விஷயத்தில் அவனிடம் எப்படிப்பட்ட குறைபாடும் தென்படவில்லை. சாதாரணமாய் இருக்கும்போது மிக மரியாதையாய் இருக்கிறான்.

தேநீர் தந்தாலும், சாப்பாடு போட்டாலும் எவ்வளவு சங்கோஜத்துடன் சாப்பிடுகிறான்! அவன் எவ்வளவு வெட்கப்பட்டுக் கொண்டு வேறு வழியில்லாத நிலையில் தன்மானத்தோடு அவற்றை ஏற்றுக் கொள்கிறான் என்பதை அவளும் புரிந்து கொண்டுதான் இருந்தாள்.

இவ்வளவு நல்ல பையனுக்கு இந்தப் போதைப் பொருள் பழக்கம் ஏன் ஏற்பட்டதோ என்று தோன்றும்.

அங்கிள் வந்தால் அவள் என்ன சொல்லுவாள்?

பரிஷித் இறந்து விட்டான் என்று தான் சொன்னால் அவர் எவ்வளவு தளர்ந்து போய் விடுவார்! மகன் மகன் என்று தன் அன்பையெல்லாம் வளர்த்துக் கொண்டிருக் கிறாரே!

அங்கிளைச் சொல்வானேன்?

இப்பொழுது பார்த்தால் அவளுக்கே அவன்மேல் விருப்பம் தோன்றத் தொடங்கிவிட்டதே!

இந்த உலகத்தில் கதியில்லாத அனாதைகள் என்றாலே சாம்பவிக்கு இரக்கந்தான். அவர்கள் பால் தனிப்பட்ட அன்பையும் ஆதரவையும் காட்ட வேண்டும் என்ற தவிப்பு ஏற்பட்டு விடும்.

மணி மூன்று!

டியூட்டி டாக்டர் திரும்பவும் வந்தார்!

அவர் முதலில் பரிஷித் கட்டிலை நோக்கிதான் நேராய் வந்தார்.

அவர் பரிசோதித்துக் கொண்டிருக்கையில் சாம்பவி கண்கள் அகல விரிய பார்த்துக் கொண்டிருந்தாள். அவள்

தொண்டையெல்லாம் வற்றிப் போனாற் போலிருந்தது. எந்த நிமிஷத்தில் 'எல்லாம் முடிந்து விட்டது' என்ற வார்த்தையைக் கேட்க வேண்டியிருக்குமோ என்ற தவிப்பு! இறந்துவிடப் போகிறான் என்று தெரியும். ஆனால் எந்த நிமிஷத்தில் நிகழுமோ என்ற கலவரம். ஒரு வினாடி கூட பரிஷித்தை விட்டு அவள் பார்வை நகர வில்லை. அவன் கையைத் தன் இரு கரங்களாலும் பிடித்துக் கொண்டு விடவேயில்லை. அக் கையைப் பற்றிக் கொண்டிருந்த விதத்தையும், இடையிடையே மெத்தென்று அழுத்தியதையும் பார்த்தால் ஒரு உயிருக்குயிரான அன்பான மனிதனை, இனித் திரும்பிப் பார்க்க முடியாதோ என்ற அளவிற்குத் தொலைதூர தேசத்திற்கு அனுப்பி வைப்பது போன்ற உணர்ச்சியாய் தோன்றிற்று.

அவனை இனி தான் பார்க்க முடியாது என்று நன்றாய்த் தெரிந்து, அந்தப் பிரிவிற்குத் தன்னை சித்தமாக்கிக் கொள்ளும் நிலை!

காலையிலிருந்து பச்சைத் தண்ணீர் கூட குடிக்க வில்லை. சாம்பவிக்குத் தலை சுற்றிற்று.

அவர் பரிசோதித்து முடித்துவிட்டு சாம்பவியை நோக்கித் திரும்பி, "உங்கள் பெரியவங்க யாரும் வரலையா?" என்று கேட்டார்.

"எங்களுக்கு... எங்களுக்கு யாரும் இல்லை. இருக்கிற ஒரு அங்கிள் கூட ஊருக்குப் போயிட்டார்" தடுமாறினாள் அவள்.

டாக்டர் இரக்கத்தோடு பார்த்தார்.

"டாக்டர்" பரபரப்புடன் கூப்பிட்டாள்.

அவர் திரும்பிப் பார்த்தார். பயத்தோடும் பதற்றத்தோடும் அகல விரிந்த சாம்பவியின் கண்களில் தென்பட்ட கேள்விக்குறி. அவருக்குப் புரிந்து போய் விட்டது.

"இன்னும் ஆபத்தைத் தாண்டவில்லை" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

மனமொடிந்து போய்விட்ட சாம்பவி அங்கிருந்த ஸ்டூலின் மீது சரிந்தாள்.

பரிஷித்தின் கையைத் திரும்பவும் தன் கைகளில் எடுத்துக் கொண்டாள்.

ஆவேசத்தோடு தனக்குள் நினைத்துக் கொண்டாள்: "பரிஷித்! நீ அனாதை இல்லை. உயிரோடிருந்த வரையிலும் அப்படி இருந்தாலும், இப்பொழுது சாகும்போது மட்டும் அனாதையாய்ச் சாகவில்லை. நான் உனக்கருகில் இருந்து விடை கொடுத்து அனுப்புகிறேன்! சிநேகிதியாய் உனக்காக என் உயிர் பரிதவிக்கிறது! நீ எந்தத் தெருவோரத்திலோ, குப்பைத் தொட்டியிலோ, மருத்துவ உதவி இல்லாமல், திக்கில்லாமல் இந்த உலகத்தை விட்டு ஏதோ குப்பைக் காகிதத்தை வீசியெறிந்தாற்போல போகவில்லை! ஒரு சிநேகிதியின் கைகளில் அணைப்புண்டு, 'மரண தேவன்' என்ற இன்னொரு சிநேகிதனிடம் ஒப்படைத்தாற் போலப் போகிறாய். இது மிக மேல் அல்லவா? என்னால் உனக்கு மேலும் மேலும் இன்னும் ஒன்றுமே பண்ண முடியவில்லையே என்றுதான் வருந்துகிறேன். அங்கிள் இந்த விஷயத்தைக் கேட்டால் தளர்ந்து போய்விடுவார்! பரிஷித்! அதனால் நீ அதிர்ஷ்டசாலி! உன்னைப் பிழைக்க வைத்து விட வேண்டும் என்று நான் எவ்வளவோ முயன்றேன். ஆனால் சாத்தியப்படவில்லை. ஆனாலும் நீ சாவதே மேல் அல்லவா? ஏனெனில் இந்தப் போதைப் பொருள் என்ற பயங்கரப் பழக்கத்திலிருந்து உன்னால் எப்படியும் வெளியேற முடியாது..."

சாம்பவி யோசித்தபடியே அவன் கைகளை மெதுவாய், அன்போடு, வருடத் தொடங்கினாள்.

அவன் வலியால் நெளிந்தபடி, மரணத்தோடு கடைசியாய் போராடினாற்போல முனகிக் கொண்டு லேசாய் அசைந்தான்.

அவனுடைய காய்ந்து உலர்ந்த உதடுகள் பிரிந்தன.

''பரிஷித்'' சாம்பவி சட்டென்று குனிந்தாள்.

''என்னை விட்டுவிடாதே உன்னோடு வந்து விடுகிறேன். நீ போகாதே'' தெளிவில்லாமல் உச்சரித்தன.

''போகமாட்டேன் பரிஷித்! எங்கேயும் போகமாட்டேன். நான் உன்னிடமே இருக்கிறேன்.'' சாம்பவி அவன் மேல் குனிந்து, இடது கையால் அவன் தலையைச் சுற்றிலும் வளைத்துப் போட்டுக் கொண்டு, அணைத்துக் கொண்டவள், வலது கையால் அவன் மார்பை மிக மென்மையாய் நீவிவிடத் தொடங்கினாள்.

''பரிஷித்! நான் இங்கேயேதான் இருக்கேன். எங்கேயும் போகவில்லை. கேட்டுக் கொண்டிருக்கிறாயோனோ? எங்கேயுமே போகமாட்டேன். உன்னை விட்டு விட்டுப் போகவே மாட்டேன். போதுமா? எதுக்காகப் போகப் போறேன்? உன்னை ஒருநாளும் விடமாட்டேன்.''

''உன்னிடமே இருக்கிறேன் உன்னை விட்டுப் போக மாட்டேன்'' —என்ற வார்த்தைகள் அவனுக்குப் புரிய வேண்டும் என்றும் அவன் மனதில் அது படிய வேண்டும் என்றும், ஒன்றிற்குப் பத்து முறை திருப்பித் திருப்பிச் சொன்னாள். அவள் எதிர்பார்த்தாற் போலவே அவள் குரல், அவன் தவிப்பை மெல்ல சாந்தப்படுத்தத் தொடங்கிற்றுப் போலும். அவன் துடிதுடிப்பு நின்றது.

சாம்பவிக்கு அசையாமல் கிடந்த அவன் உடம்பைப் பார்த்ததும் ஓவென்று அழவேண்டும் போலிருந்தது. அதி கலங்கிப்போய் அழும் அழுகை! புடவைத் தலைப்பை வாயில் அழுத்திக் கொண்டு வந்த அழுகையை அடக்கிக் கொள்ள அரும்பாடுபட்டாள்.

அதைப் பார்த்து டாக்டர் சட்டென்று வந்தார்.

நோயாளியின் பல்சைப் பார்த்தார்! இதயத் துடிப்பைப் பரிசோதித்தார்.

சாம்பவியிடம் சொன்னார்— ''பயப்படாதீங்க. நம் கையில் எதுவும் இல்லை'' என்றார் இரக்கத்தோடு.

சாம்பவி அழுகையை அடக்கிக் கொண்டே நிமிர்ந்து பார்த்தாள். அவளுக்குத் தந்தையைப் பற்றிய நினைவு வரத் தொடங்கிற்று. 'எதிரே இருந்தது பரிஷித் இல்லையோ?' தந்தையே தென்பட்டுக் கொண்டிருந்தார்.

பரிஷித் தலையைச் சுற்றிலும் கையைப் போட்டுக் கொண்டு அவன் கேசத்தைத் தடவிக் கொடுத்தாள்.

''உன்னை விடடுட்டுப் பேயிடமாட்டேன் நான்'' திரும்பவும் சொன்னாள்.

சாம்பவி அப்படியே உட்கார்ந்திருந்தாள். நேரம் போனதே தெரியவில்லை. ஒவ்வொரு நிமிஷமும் மிக பாரமாய்க் கழிந்து கொண்டிருந்தது.

ஆசுபத்திரிக்கு வெளியேயிருந்த மரங்களில் குருவிகளின் ஆரவாரம் கேட்டது.

சாம்பவியின் செவிகளில் அந்தச் சப்தங்கள் மட்டுமே இயந்திர கதியில் கேட்டுக் கொண்டிருந்தது.

இயற்கை விழித்துக்கொண்டது. எங்கேயோ யாரோ நடந்த காலடியோசை! நர்ஸின் பேச்சுக்கள்— டாக்டர் வந்துகொண்டிருந்த சந்தடி!

சாம்பவி சட்டென்று திரும்பிப் பார்த்தாள்!

எதிரே மகாலிங்கம்.

''அம்மா!'' என்று அவர் பரபரப்புடன் கிட்டே வந்தார்.

சாம்பவியின் தூக்கக் கலக்கத்தோடிருந்த கண்களில் குபுக்கென்று மகிழ்ச்சி குமிழிட்டது.

''அங்கிள்'' என்று எழுந்திருக்கப் போனாள். ஆனால் கை பரிஷித்தின் கைகளுக்கிடையே அவன் வயிற்றின் மீது படிந்திருந்தது.

''அங்கிள்'' என்றாள். அவர் வந்து சாம்பவியின் தோளைச் சுற்றிக் கைகளைப் போட்டு அவளை அணைத்துக் கொண்டார். பரிஷித்தைப் பார்த்தபடி— ''இப்பத்தான் வீட்டிற்கு வந்ததுமே சொன்னாங்க. வந்துட்டேன். எப்படி இருக்கு?'' கேட்டார் அவர்.

அவரும் சாம்பவியைப் போலவே அவன் தலையைச் சுற்றிலும் கையைப் போட்டார். சாம்பவி, மகாலிங்கம் இருவர் கைகளுக்குமிடையே அவன் தலை இருந்தது. அவர் மிகப் பரிவோடு பரிஷித்தின் தலையைத் தடவித் தந்தார். ''கேட்டதுமே என்னால் நம்பவே முடியலை'' என்றபோது அவர் குரல் துக்கத்தால் கம்மிற்று.

டியூட்டி டாக்டர் போனவர் திரும்பவும் வந்தார். மகாலிங்கம் அவரை வணங்கினார். அவர் பரிஷித்தைப் பரிசோதித்தார். க்ளூகோஸ் நிரவம் மிக மெதுவாய் இறங்கிக் கொண்டிருந்தது. அவன் உடலுக்குள் மெல்ல போய்க் கொண்டிருந்தது.

''இட்ஸ் எ குட் ஸைன்'' என்றார் அதைப் பார்த்து விட்டு.

பரிஷித்தின் கையைப் பிடித்துக் கொண்டிருந்த சாம்பவியின் கை இன்னும் அழுத்தமாய் இறுகிற்று. அவளுக்கு அதைக் கேட்டதும் சந்தோஷம் ஏற்பட்டது.

டாக்டர் இஞ்ஜக்ஷன் கொடுப்பதற்காக பரிஷித்தின் கையை எடுத்துக் கொண்டார். ஊசியைக் குத்துவதற்காக நரம்பைத் தேடிப் பிடித்துக் கொண்டிருக்கையில் அவன் கையில் நிறைய இடங்களில் ஊசி குத்திக் கொண்ட அடையாளங்கள் தென்பட்டன.

''இவன் ட்ரக் அடிக்ட்டா?'' கேட்டார் அவர்.

''ஆமாம்'' என்றார் மகாலிங்கம்.

''அதனால்தான் மருந்துகள் வேலை செய்ய மாட்டேங்குது. அவனுக்குப்பட்ட அடி ஒன்றும் உயிருக்கு அபாயமான அடியில்லை. ஆனாலும் இப்படிப்பட்ட

ஆபத்து வந்திருப்பதற்குக் காரணம் உடம்பில் தாங்குகிற சக்தி இல்லாமல் போனதால்தான். எனவே, இவன் ஆபத்தைக் கடந்து விட்டதாய்த்தான் நினைக்கிறேன். மத்யானந்தான் சரியாய் சொல்ல முடியும்'' என்றவர் மகாலிங்கத்தைப் பார்த்து— ''பாவம்! ராத்திரியிலிருந்து அவங்கதான் தனியாய் இருந்து அவ்வளவையும் கவனிச்சுக் கிட்டாங்க. கிவ் ஹெர் சம் ரெஸ்ட்'' என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

மகாலிங்கம் தான் வந்து உட்கார்ந்து கொண்டு, சாம்பவியைப் போய் முகத்தைக் கழுவிக் கொண்டு வரச்சொன்னார்.

சாம்பவி திரும்ப வந்ததும், அவளை உட்காரச் சொல்லி விட்டுத் தான் போய் காபியை வாங்கி வந்தார். சாம்பவி குடித்தாள்.

''நீ வீட்டுக்குப் போம்மா'' என்றார்.

''ஊஹூம், அங்கே தனியாய் இருக்க முடியாது என்னால். அதோடுகூட நான் இங்கேயே இருக்கேன்னு பரிஷித்துக்கு பிராமிஸ் தந்துட்டேன்'' என்றாள்.

''பிராமிஸா?'' என்றார் அவர் புரியாமல் விழித்தபடி.

''ஆமாம்'' என்று பரிஷித்தின் புலம்பலைப் பற்றிச் சொன்னாள்.

''சரி, இப்படி வா.'' மகாலிங்கம் ஸ்டூலை அவள் பக்கமாய்த் தள்ளினார். சாம்பவி அதில் உட்கார்ந்து கொண்டாள்.

''இப்படி தலை வைத்துக்கிட்டு கொஞ்சநேரம் படுத்துக்கோம்மா'' என்றார் அவர்.

சாம்பவி மறுக்கவில்லை. மறுக்கும் சக்தி கூட அவளிடம் இல்லை. ஸ்டூலின் மேல் உட்கார்ந்தபடியே அவர் மடியில் தலையைச் சாய்த்துக் கொண்டு படுத்தாள்.

அவள் கை பரிஷித்தின் கையின் மேல் இருந்தது. அவள் கண்களில் தூக்க மயக்கம் வந்து சூழ்ந்து கொண்டது. மனம் எவ்வளவு லேசாகி விட்டது! அங்கிள் பக்கத்தில் இருக்கிறார். பரிஷித்தின் உடம்பில் க்ளூகோஸ் ஏறிக் கொண்டிருக்கிறது!

12

ஆறு நாட்களுக்குப் பிறகு—

பரிஷித் ஆசுபத்திரியில் - அதே ஸ்பெஷல் வார்டில் கட்டிலில் படுத்திருந்தான். அந்தக் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தவன் பரிஷித் என்று சொன்னால் நம்ப முடியாமல் இருந்தது. அதற்குக் காரணம் அவன் முகம் மிகவும் இளைத்திருந்தாலும் தெளிவாய்த் தென்பட்டுக் கொண்டிருநதது. அவனுக்கு தினமும் சவரம் பன்னினார்கள். பரட்டையாய் இருந்த தலை மறைந்து அழகான கிராப் வந்து சேர்ந்தது. கந்தலாடையாலும், பரட்டைத் தலையாலும் இவ்வளவு நாளாய் மறைந்து கொண்டிருந்த அவன் முகம் இப்பொழுது தெளிவாய்த் தென்பட்டுக் கொண்டிருந்தது! அவன் மூக்கு மிக அழகான மூக்கு என்பது இப்பொழுதுதான் தெரியத் தொடங்கிற்று.

அவனைச் சுற்றிக் கொண்டிருந்த ஏதோ பீடை விலகினாற்போல அவன் முகம் சுத்தமாய் இருந்தது. உயரமான தலையணைகளை வைத்துப் படுத்துக் கொண்

டிருந்தான். நெற்றியிலும், மணிக்கட்டிற்கருகிலும் அடிபட்ட இடங்களில் அழுத்தமாய் பிளாஸ்டர்கள் போடப் பட்டிருந்தன.

அதே கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருந்த மகாலிங்கம் ஸ்பூனால் பாலில் தோய்த்த பிரெட்டை அவன் வாயில் தந்து கொண்டிருந்தார்.

"போதும்" என்றான் பரிஷித்.

"சாப்பிடப்பா! என் கண்ணில்லையா? டாக்டர் என்ன சொல்லியிருக்கிறார்? இந்த மருந்துகளுக்கு நன்றாய் சாப்பிடாமல் போனால் வயிறு சரியாயிருக்காதுன்னும், தலைவலி வரும்னும் சொல்லவில்லையா? ப்ளீஸ் இந்த ரெண்டு வாய் மட்டும் சாப்பிட்டுவிடு."

அவர் அவ்வாறு பலவந்தம் செய்ததால் மறுக்க முடியாதவனாய் சாப்பிட்டான் அவன்.

கொஞ்சம் தூரத்தில் சாம்பவி உட்கார்ந்து ஆரஞ்சுப் பழங்களைப் பிழிந்து கொண்டிருந்தாள்.

அதற்குள் டாக்டர் வந்தார். அன்று பரிஷித் சாகக் கிடந்தபோது பார்த்த டாக்டர்தான் அவர்.

அவர் உள்ளே வந்து கொண்டே பிரெட்டை சாப்பிட்டுக் கொண்டிருந்த பரிஷித்தைப் பார்த்து விட்டு, "ஹலோ" என்றார். சாம்பவியையும் பார்த்து "ஹலோ" என்றார் முறுவலுடன்.

"ஹலோ" என்றாள் சாம்பவி.

டாக்டர் உள்ளே வந்ததுமே மகாலிங்கம் எழுந்தார். டாக்டர் கட்டிலில் உட்கார்ந்து கொண்டே பரிஷித்தின் இதயத்துடிப்பைப் பரிசோதித்தார். ரத்த அழுத்தத்தைப் பரிசோதித்தார். தர்மாமீட்டரைக் கொண்டு ஜ்வரம் இருக்கிறதா என்று பார்த்தார். ஜ்வரம் இல்லை.

''வெரிகுட்! எல்லாம் நார்மலாய் இருக்கிறது. நீங்கள் நாளைக்கு வீட்டிற்குப் போய்விடலாம்'' என்றார்.

''தாங்க்யூ டாக்டர்'' என்றான் பரிஷித்.

''தாங்க்ஸ் எனக்கெதற்கு? நீங்கள் அந்தப் பெண்ணிற்கு தான் ரொம்ப தாங்க்ஸ் சொல்லணும். உங்களை கண்ணில் விளக்கெண்ணை விட்டுக் கொண்டு கவனித்து வந்தாங்க. மைகாட்! அன்றைக்கு உங்களைப் பார்த்து கொண்ட விதத்திற்கு உண்மையில் மெச்சிக்கணும். மிஸ்டர் பரிஷித், யு ஆர் ரியலி வெரி வெரி லக்கி'' என்று எழுந்தார். பரிஷித்தின் கண்கள் தன்னையறியாமல் சாம்பவியின் பக்கமாய் திரும்பின. அவற்றில் லேசாய் நன்றி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது சட்டென்று அதற்குள் சங்கோஜத்துடன் பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

''ஹௌ ஆர் யூ ஃபீலிங் நௌ?'' கேட்டார் டாக்டர்.

''பைன் சார்'' என்றான்.

''நீங்கள் போதைப் பொருளைத் தவிர்ப்பதற்கு முயற்சி பண்ணுங்கள். அதை விட்டுவிடணுங்கிற உறுதியை நீங்களே வரவழைத்துக் கொள்ளணும்'' —என்று சொல்லிவிட்டுப் போனார் அவர்.

பரிஷித் முகத்தைத் திருப்பிக் கொண்டு ஜன்னல் வழியாய் வெளியே பார்க்கத் தொடங்கினான்.

''டாக்டர் என்னசொன்னார் தெரியுமா?'' மகாலிங்கம் கேட்டார்.

''தெரியும்.''

''என்ன சொன்னார்?''

''போதைப் பொருளை விட்டுவிடச் சொன்னார். நீங்கள் என்னைப் பிழைக்க வைத்தது இன்னொரு நரகத்

திற்குள் தள்ளிவிடுவதற்கில்லையே?'' பரிஷித்தின் பார்வை மகாலிங்கத்தின் முகத்தின் மீது தீவிரமாய் நிலைத்தது.

''இல்லை.''

''என்னைப் போதைப் பொருளை விட்டுவிடுன்னு சொல்லாதீங்க. என்னால் எதுவும் இல்லாவிட்டாலும் இருக்க முடியும். ஆனால் அவை இல்லாவிட்டால் மட்டும்...''

சாம்பவி பழரசம் நிரம்பிய தம்ளரை அவனிடம் கொண்டு வந்தாள்.

''அங்கிள்! இப்ப அதைப்பற்றி என்ன பேச்சு?'' என்றாள் கடிந்து கொள்வது போல.

''உண்மைதாம்மா'' என்றார் அவரும் ஒப்புக்கொண்டாற்போல.

''எனக்குப் பழரசம் வேண்டாம்'' பரிஷித் மறுத்தான்.

''குடியுங்கள். திரும்பவும் மருந்து சாப்பிட வேண்டாமா?'' —என்றாள் சாம்பவி.

அவனால் மறுக்க முடியவில்லை. கையை நீட்டி தம்ளரை வாங்கிக் கொண்டான் அதை உதட்டில் வைத்து குடிக்கப் போனபொழுது கை நடுங்கிற்று. மகாலிங்கம் தொலைவில் நின்றபடி சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தார்.

சாம்பவி நடுங்கியபடி தம்ளரை நழுவவிடத் தெரிந்த பரிஷித்தின் கைமேல் தன் கையை வைத்து தம்ளரைப் பிடித்துக் கொண்டாள்.

அவனால் ஒரேயடியாய் அருந்த முடியவில்லை-நிறுத்தி நிறுத்தி, பலவந்தமாய் மெதுவாய் குடித்தான். சாம்பவி பொறுமையாய் பார்த்துக் கொண்டிருந்தாள். சாம்பவி தம்ளரை எடுத்துக்கொண்டு போகத் திரும்பிய பொழுது—

''ஐயாம் சாரி'' என்றான் மெதுவாய்.

''எதற்கு?'' என்றாள்.

''உங்களுக்கு... உங்களுக்கும் மகாலிங்கம் சாருக்கும் ரொம்ப, ரொம்ப, கஷ்டத்தைத் தருகிறேன்.'' அவன் அந்த வார்த்தைகளைச் சொல்லி முடிப்பதற்குள் நிறுத்தி நிறுத்தி மூச்சு விட்டுக்கொள்ள வேண்டியிருந்தது.

''கஷ்டமா? எங்களுக்கென்ன கஷ்டம்? உங்களுக்கு குணமானதற்காக நாங்கள் எவ்வளவு சந்தோஷப்படுகிறோம் தெரியுமா?'' என்றாள்.

''அப்படிச் சொல்லும்மா'' என்றார் மகாலிங்கம்.

சாம்பவி அவன் வாயைத் துடைத்தாள். படுக்கையின் ஓரங்களை இழுத்து சரி செய்துவிட்டு, துப்பட்டியை ஒழுங்காய்ப் போர்த்தினாள். பாத்ரூமிற்குள் போய் தம்ளரைக் கழுவிக் குப்புறக் கவிழ்த்து வைத்தாள்.

''குடிக்கத் தண்ணீர் இருக்காம்மா?'' கேட்டார் அவர்.

''இதோகொண்டுவரேன் அங்கிள்'' சாம்பவி கூஜாவை எடுத்துக் கொண்டு போனாள். தண்ணீரைப் பிடித்துக் கொண்டு வராந்தாவில் வந்து கொண்டிருக்கையில்—

''எக்ஸ்யூஸ் மீ'' என்று கேட்டது பின்னாலிருந்து.

சாம்பவி திரும்பிப் பார்த்தாள்.

எதிரே சந்திரன்!

சாம்பவியைப் பார்த்ததுமே அவன் சிரித்தான்.

''நீங்க தானோ இல்லையோன்னு குழம்பிட்டிருந்தேன். மொதல்ல பார்த்தபோது இந்தப் பொண்ணைப் பார்த்தால் சாம்பவியைப்போல இருக்கேன்னு நினைத்தேன். நன்றாய் பார்த்தபோது நீங்கதான்னு தெரிஞ்சுது. நீங்க இங்கே எப்படி வந்தீங்க?'' என்று கேட்டான்.

''எங்களுக்குத் தெரிஞ்ச ஒருத்தருக்கு உடம்பு சரியாயில்லை.''

''ஓ, அப்படியா? அதானா? அரவணைப்பு இல்லத்திற்குப் போன் செய்தபோதெல்லாம் நீங்கள் வரவில்லைன்னு சொன்னாங்க. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. உங்களுக்கு ஒருவேளை உடம்புக்கு ஏதாவதோன்னு நினைத்தேன். கலக்கமாயிருந்தது. உங்க வீட்டிற்கு வரலாம்னு பார்த்தால் உங்கள் விலாசத்தை யாரும் சொல்லவேயில்லை. அஞ்சலையைக் கேட்டபோது தெரியாதுன்னு டபாய்த்து விட்டாள். அஃப்கோர்ஸ் அஞ்சலை சொல்லாமல் மறைக்கிறாள் என்று எனக்குத் தெரிந்ததுதான்னு வையுங்க. எனி வே, குட் லக்! எதிர் பாராமல் உங்களைப் பார்த்துட்டேன். எங்கள் பாட்டி அடிக்கடி சொல்லுவாங்க. நமக்கு யாரையாவது பார்க்கணும்னு இருந்தால், அவங்க நமத்குத் தென்படுவாங்களாம். அவங்களுக்கு கிருஷ்ணர் தென்படுவாராம்.''

''அப்படீன்னால் என்னை இப்ப கிருஷ்ணர் என்கிறீர்களா?'' என்று கேட்டாள் சிரித்துக் கொண்டே.

''அஃப்கோர்ஸ்.''

''எங்கள் அறை இதுதான். உள்ளே வாங்க'' அழைத்தாள் சாம்பவி.

''வேண்டாம்... உங்கள் மனிதர்கள்...'' தயங்கினான்.

''பரவாயில்லை வாங்க. எங்கள் அங்கிள் இருக்கிறார்'' —என்று உள்ளே அழைத்துச் சென்றாள். மகாலிங்கத்திற்கு அவனைப் பரிச்சயம் செய்துவைத்தாள்.

அவர் மலர்ந்த முகத்துடன் கை குலுக்கிவிட்டு—

''எங்க சாம்பவி உங்களைப் பற்றிச் சொல்லிட்டிருக்கிறாள்'' என்றார்.

''இலன் பரிஷித்'' என்று பரிச்சயம் பண்ணினார்.

சந்திரன் கட்டிலை நோக்கிச் சென்றான். பரிஷித் பேப்பரைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''க்ளாட் டு மீட் யூ'' என்று கை குலுக்கினான்.

பரிஷித் உடனே கையைக் கொடுத்து விடவில்லை. இளைத்துத் துரும்பாய் இருந்த அவன் கை தயக்கத்துடன் வெளியே வந்தது. அக் கையைப் பற்றிக் கொண்டு குலுக்கினால் சந்திரன். பரிஷித் எதுவும் பேசவில்லை.

சந்திரன், ''என்ன உடம்பு?'' என்று கேட்டான்.

மகாலிங்கம் சட்டென்று— குறுக்கிட்டு— ''ஆக்ஸிடென்ட் ஆயிடுத்து. அடிபட்டுவிட்டது'' என்று சொன்னார்.

பரிஷித்தின் பார்வை பேப்பரை நோக்கித் திரும்பி விட்டது. சந்திரனுக்கு சம்பாஷணையை வளர்த்த வேண்டும் என்றும், கொஞ்சநேரம் அங்கு நின்று கொண்டிருக்க வேண்டும் என்றும் உற்சாகமாயிருந்தது. ஆனால் மகாலிங்கமோ பரிஷித்தோ அப்படிப்பட்ட உற்சாகத்தைக் காட்டினாற்போல தோன்றவில்லை.

''ஓ. கே. வரேன்'' என்றான்.

சாம்பவி அவனைத் தொடர்ந்து வெளியே வந்தாள். சந்திரன் சொன்னான்— ''மிஸ் சாம்பவி! இது ரொம்பவும் அநியாயம்! என்னைப்பற்றி உங்கள் வீட்டில் அவ்வளவு சொல்லியிருக்கிற நீங்கள் உங்கள் வீட்டிலுள்ளவர்களைப் பற்றி எதுவுமே சொல்லவில்லை. அவர் உங்கள் அங்கிள் அரவணைப்பு இல்லத்திற்கு அவ்வப்பொழுது போய் செய்துக்கிட்டிருப்பார். அந்த விதத்தில் அவனை தெரியும். ஆனால் அவன்...?''

''அங்கிளுக்கு வளர்ப்பு மகன்'' என்றாள் சாம்பவி.

''நீங்கள் என்றுமே சொன்னதில்லையே!''

''அதற்கு சந்தர்ப்பம் வரவில்லை, அதனால்தான்'' என்று முறுவல் பூத்தாள். ''அதுசரி, நீங்கள் இங்கே எதற்கு வந்திங்க?'' கேட்டாள்.

''தேவிக்கு உடம்பு சரியாயில்லை. சேர்த்திருக்கோம்'' என்றான்.

''ஐயோ! அப்படியா? வாங்க நானும் பார்த்துட்டு வரேன்.''

''நோ, நோ! வீண் சிரமம் எதுக்கு? அவள் ஓய்வு கிறாள் போலிருக்கு. இன்னொரு தடவை பார்க்கலாம்.''

சாம்பவி நின்றுவிட்டாள். ''சரி'' என்றாள்.

''பேபியைப் பற்றிக் கவலையாய் இருக்கு எனக்கு. நேற்றுக் கூட சாதத்தை வீசியெறிந்து விட்டாளாம். அஞ்சலை சொன்னாள்—''

''நாளைக்கு நாங்க வீட்டுக்குப் போறோம். நாளைக்கு நான் அரவணைப்பு இல்லத்திற்குப் போகிறேன்.''

''தாங்க்யூ, வரேன்'' அவன் போய்விட்டான்.

சாம்பவி அறைக்குத் திரும்பி வந்தாள்.

''நான் காபி வாங்கிட்டு வரேம்மா,'' மகாலிங்கம் ஃபிளாஸ்கை தோளில் மாட்டிக்கொண்டு புறப்பட்டு விட்டார்.

''சரி அங்கிள்.''

சாம்பவி உள்ளே வந்தாள். பரிஷித்தின் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்ததை பார்த்தாள். உடனே ஃபேனைப் போட்டாள்.

அவனுக்கு இன்னும் வியர்த்துக் கொட்டிக் கொண்டே இருந்தது.

சாம்பவி அவனிடம் வந்தாள். நெற்றியில் கைவைத்து, "எப்படி இருக்கு?" என்று கேட்டாள்.

"என்னவோ காபராவா இருக்கு. மார்பு படபடன்னு அடித்துக் கொள்கிறது."

சாம்பவி சட்டென்று போய் க்ளுகோஸைக் கரைத்துக் கொண்டு வந்து குடிக்கச் செய்தாள். திரும்பவும் தம்ளரை கெட்டியாய் பிடித்துக் கொண்டாள்.

அவன் குடித்துவிட்டு பின்னுக்குச் சாய்ந்து கொண்டான். சாம்பவி அவன் வியர்வையைப் புடவைத் தலைப்பால் துடைத்தாள். பேப்பரால் விசிறத் தொடங்கினாள்.

"இன்றைக்குப் புது மருந்து கொடுத்திருக்கிறார் டாக்டர். அந்த காப்ஸூலைச் சாப்பிட்டால் கொஞ்சம் களைப்பாய் இருக்கும்னு சொன்னார். பயப்பட வேண்டாம். கொஞ்ச நேரத்தில் அதே குறைந்துவிடும்" —இதமாய் சொன்னாள்.

அவன் சாம்பவியின் கைளை அழுத்திப் பிடித்துக் கொண்டான். கொஞ்சம் பொறுத்துச் சொன்னான்—

"தாங்க்யூ! தாங்க்யூ வெரிமச்! சற்று முன்னால்தான் டாக்டர் சொன்னார்' என்றான் மெல்லிய குரலில்.

"எனக்கா தாங்க்ஸ் சொல்றீங்க நீங்க?"

"ஆமாம். மெனி மெனி."

சாம்பவி முறுவலுடன் சொன்னாள்— "அப்படி எல்லாவற்றையும் ஓர்ர தடவையில் சொல்லிடாதீங்க, நாம்பதான் வீட்டிற்குப் போகப் போகிறோமே! அப்பொழுது தினந்தோறும் ஒவ்வொரு தடவையாய் கொஞ்சம் கொஞ்சமாய் சொல்லிக்கலாம் நீங்க. அப்ப எனக்குரொம்பவும் கர்வமாய்— சந்தோஷமாய் இருக்கும். ரொம்பநாளைக்கு ஞாபகத்தில் இருக்கும். என்ன சொல்றீங்க?"

காய்ந்த அவன் உதடுகளில் மெல்லிய புன்னகைக் கீற்று நெளிந்து சட்டென்று மாயமாகி விட்டது.

"நாளைக்குத்தான் வீட்டிற்குப் போய்விடப் போறோமே! நம்ப வீடாயிருந்தால் ரொம்ப சௌகரியமாய் இருக்கும்" என்றாள் இதமாய்.

"நம்ப வீடா? நம்ப வீ...டு" அவன் முணுமுணுத்தான். சாம்பவியின் காதில் விழுந்துவிட்டது.

இன்னும் உறுதியான குரலில் அவள் சொன்னாள்—

"ஆம்! நம்ப வீடுதான்!. அந்த வீட்டில் எனக்கும் அங்கிளுக்கும் எவ்வளவு சுதந்திரம் உண்டோ அவ்வளவு சுதந்திரம் உங்களுக்கும் உண்டு."

"எனக்கு வீடு என்பதே கிடையாது" அவன் குரலில் ஆவேசம் வந்துவிட்டது.

"உண்டு."

"நான் அனாதை."

"அது இந்த ஆசுபத்திரிக்கு வரத்துக்கு முன்னாடி.. இப்ப நீங்கள் அனாதையில்லை. நானும் அங்கிளும் உங்கள் மனிதர்கள். இல்லாவிட்டால் நாங்கள் உங்களுக்காக இவ்வளவு துடிப்போமா, சொல்லுங்கள்"— அவன் பலவீனமாயிருந்த தன் கைகளைக் கூப்பினான். அவன் பலமிழந்த கண்களில் துளிர்த்துப் பளபளத்த கண்ணீரைக் கண்டாள் சாம்பவி. அவள் அக்கைகளைப் பிரித்தாள்.

"இந்த மாதிரியே பைத்தியக்காரத்தனமான காரியங்களைப்பண்ணாதீங்க. நாங்கள் உங்களை சேர்ந்தவர்கள். எங்களை விட்டுவிட்டுப் போகணும்னு நீங்கள் ஒருநாளும் நினைக்காதீங்க." சாம்பவி ஒரு முறை வாசலை நோக்கித் திரும்பிப் பார்த்துவிட்டுச் சொன்னாள்— "அங்கில் இல்லை. அவர் மனதிலிருப்பதை உங்களிடம் சொல்லி

விடுகிறேன். அவர் நம்மைப் பெற்ற குழந்தைகளையும் விட அதிகமாய் பாவிக்கிறார். இந்த ஆறு மாதமாய் அவர் உங்களுக்காக எப்படி கலங்கிப் போயிட்டிருக்கிறார் என்று நீங்களே பார்த்தீங்க இல்லையா? அங்கிளை உங்கள் உதாசீனத்தால் தயவுசெய்து இனிமேலாவது வருத்தப் படுத்தாதீங்க. தயவு செய்து அதை மட்டும் ஞாபகத்தில் வெச்சுக்குங்க. நீங்கள் விட்டுட்டுப் போய் விட்டால் அவர் இதயமே வெடித்து செத்து விடுவார். அது ஒன்றுதான் நீங்கள் எனக்குச் சொல்ல வேண்டிய நன்றி. அதோ அங்கிள் வருகிறார்.'' —சாம்பவி எழுந்து அப்பால் போனாள். மகாலிங்கம் வத்தார். அவர் கையில் பிளாஸ்கோடு பழக்கூடையும், ஹார்லிக்ஸும், பரிஷித்திற்குத் தேவையான புத்தகங்களும் இருந்தன.

13

மகாலிங்கம் சார்! நீங்கள் இப்படி மனமொடிந்து விட்டால் எப்படிங்க? நான்தான் சொல்லிட்டேனே, இந்த போதைப் பொருளைப் பழக்கப்படுத்தியது எவ்வளவு சுலபமோ அத்தனைக்கத்தனை அதை விடுவது கஷ்டம்னும். இது ஒரே நாளில் ஆகிற காரியமில்லை டாக்டர் தேவன் நயமாய் எடுத்துச் சொன்னார்

அவருக்கெதிரே மகாலிங்கமும் சாம்பவியும் உட்கார்ந் திருந்தார்கள். ''நான் பொறுத்துக் கொண்டேதான் இருக்கேன் டாக்டர். நீங்கள்வைத்தியம் பார்க்க தொடங்கி நாலு மாதம் ஆயிடுத்து. கொஞ்சநாள் நீங்க

சொன்ன விதத்திலேயே டோஸைக் குறைத்துக் கொண்டதும் வழிக்கு வந்தான். அதற்குள் என்னவாச்சோ தெரியலை. அந்த சந்தோஷம் கூட நிலைக்கவில்லை. திரும்பவும் தொடங்கிட்டான். ட்ரீட்மெண்ட் திரும்பவும் முதலுக்கே வந்து நிற்கிறது. இப்படி இருந்தால் என்ன பண்றது டாக்டர்? இதுதான் என் வருத்தமெல்லாம்.''

''நீங்கள் ஒன்றை மறந்துட்டீங்க. நோயாளிக்கு நாம் சான்ஸ் கொடுக்கணும். இது ஒரே நாளில் ஆகிற காரியமில்லைன்னும், ஏகப்பட்ட பணம் செலவாகிற விவகாரம்னும் மொதல்லேயே சொன்னேன் உங்களுக்கு.''

''அப்பப்பா! பணத்தைப் பற்றிய பேச்சே இல்லை டாக்டர்!. நீங்கள் இப்படி என்னைத் தவறாய் புரிந்துக் கிட்டால் அப்புறமாய் என்னையே நான் சுட்டுத்தள்ளிக்க வேண்டியிருக்கும். பணம் எவ்வளவு ஆனாலும் பரவாயில்லை, நான் பின்வாங்கமாட்டேன். என்னிடமுள்ள சகலத்தையும் விற்றாவது சரி, கடைசி பைசாவரைக்கும் பரிஷித்திற்காகச் செலவழிப்பேன். என் உத்தேசம் அதில்லை.''

''வேறென்ன சார்? உங்களுக்கு அவன் மீது நம்பிக்கையும் பொறுமையும் இருக்கணும்னு கூட நான் மொதல் லேயே சொல்லிட்டேன்.''

''சொன்னீங்கதான்'' மென்று விழுங்கினார் மகாலிங்கம்.

''இதப்பாருங்கள் மகாலிங்கம் சார்! நீங்கள் இவ்வளவு சீக்கிரத்தில் ரிஸல்டிற்காகத் துடித்தால் காரியம் நடக்காது இங்கே பேஷண்ட்டின் மனத்தத்துவம் விநோதமாய் இருக்கும். சில சமயம் விட்டுவிடுவோமா என்று தோன்றி அதற்கான முயற்சியைத் தொடங்கலாம். ஆனால் அவ்வாறு விட்டு விடுவதற்குத் தேவையான 'சக்தி' மனத்தளவிலோ உடலளவிலோ அவனுக்கு இல்லாமலிருக்கலாம். சில மயங்களில் தன் கடந்த காலம் ஏதாவது நினைவிற்கு

வந்து, அந்த யோசனைகள் பீடித்திருந்தால், அதைத் தாங்க முடியாமல் போய் திரும்பவும் தொடங்கியிருக்கலாம். சில சமயங்களில் போதைப்பொருட்களுக்கு அடிமையான சக நண்பர்கள் பலவந்தமாய் தந்திருக்கலாம். பேஷண்ட் திரும்பவும் பழையபடி மாறுவதை அவங்க எதிர்ப்பாங்க. இவ்வளவு இருக்கின்றன. இது நமக்கு மிகச்சாதாரணமான விஷயமாய் தோன்றலாம். ஆனால் மனத்தளவிலோ உடலளவிலோ பலவீனமாய் இருக்கிறவங்களுக்கு இது ஒரு 'யாகம்' போன்றது என்று நாம்ப புரிந்துகொள்ளணும். பேஷன்ட்டின் பால் நிஜமாய் அன்பு இருக்கிறவங்க அவன் படும் இந்தப் பாட்டைப் பொறுமையாய் தாங்கிக்கணுமே தவிர, கொஞ்சமும் ஆவேசப்பட்டு விடக்கூடாது. முக்கியமாய் நம்ப வழிக்கு அவங்களைக் கொண்டு வந்து கொண்டிருக்கிறோம் என்று உங்களிடம் கொஞ்சம் தென்பட்டாலும் போதும் அவங்க தொலைவிற்கு ஓடிப்போயிடுவாங்க. இந்தக் கெட்டப் பழக்கத்திலிருந்து தப்பித்துக் கொண்டு பழைய ஆளாக மாற்றுவது—'இது உனக்காகவேதான், எங்களுக்காக இல்லை'—என்பதுபோல கை கொடுக்க வேண்டும். உங்களுக்கு இன்னொரு தடவை எச்சரிக்கை தரேன், சரியாய் கேட்டுக்குங்க. பரிஷித்திற்கு நீங்கள் ஆதரவு தரீங்க என்ற உணர்ச்சி வரணுமே தவிர, நீங்கள் பல வந்தம் பண்றீங்க என்று தொந்தரவாய் தோன்றிவிடக் கூடாது அவனுக்கு. இதை நன்றாய் நினைவில் வைத்துக் குங்க.''

மகாலிங்கம் கவனமாய் கேட்டார். கையிலிருந்த மூக்குக் கண்ணாடியை அப்படியும் இப்படியும் திருப்பிக் கொண்டே—''என்னவோ அவன் மாறணுமேன்னு மனசு கிடந்து தவிக்கிறது. அது நடக்குமோ நடக்காதோ தெரியலை. தெய்வசங்கல்பம் எப்படியோ?'' என்றார்.

''நீங்கள் மிலிடெரியில் வேலை பண்ணியவர். தெய்வ சங்கல்பம் என்கிறீங்களே, இதென்ன?'' என்றார் அவர்.

''ஓய் நாட்? ஏன்? மிலிடெரியில் வேலை பண்றவங்க மனுஷங்க கிடையாதுன்னு எண்ணிட்டீங்களா? யுத்தம் நிகழும்போது எதிரிகள் போட்ட குண்டு சரியாய் வந்து நமக்குப் பக்கத்தில் நின்னுட்டிருக்கும். நாலு பேர் மேல் விழுந்து, அவங்க உடல்கள் வெந்து சிதறிப்போய் நமக்கு எதுவும் ஆகாவிட்டால், எப்பொழுதுநம்பினாலும் நம்பா விட்டாலும் அந்த நிமிஷத்தில் தெய்வசங்கல்பத்தை நம்பு வாங்க! நானும் சாதாரண சமயங்களில் நம்பமாட்டேன்னு எல்லோரிடமும் தம்பட்டமடித்துக் கொண்டாலும், இப்படிப்பட்ட மிகக்கஷ்டம் வந்துவிட்ட சமயங்களில் கண்டிப்பாய் நம்புவேன்'' என்றார் அவர்.

டாக்டர் பக்கென்று சிரித்து விட்டார்.

''யு ஆர் எ பிக் ரோக் தென்'' என்றார் டாக்டர் தேவன் சிகரெட்டை எடுத்து வாயில் வைத்துக்கொண்டே.

''எஸ் சர்டன்லி ஐயாம்'' மகாலிங்கம் உடனே லைட்டரை எடுத்து அவர் சிகரெட்டைப் பற்றவைத்தார். அவரிடம் ஒரு நல்ல பழக்கம் உண்டு. எப்பொழுது பார்த்தாலும் எதிராளியின் தேவையை கவனித்துத் தன்னாலான உதவியைசெய்து கொண்டேயிருப்பார். ஒருக்கால் அதனால்தானோ என்னவோ, பரிச்சயமான, சொற்ப நேரத்திற்குள்ளேயே எதிராளிக்கு சிநேகமாகி விடுவார்.

டாக்டர் தேவனும் மகாலிங்கமும் குறுகிய காலத்திற்குள்ளேயே சிநேகமாகி விட்டார்கள். மகாலிங்கம் வரப்போவதாய் அப்பாயிண்ட்மெண்ட் கேட்டால் தேவன் நோயாளிகள் அத்தனை பேரையும் அனுப்பி வைத்துவிட்டு கடைசி நபராய் அப்பாயிண்ட்மெண்ட் தருவார் அவருக்கு.

''போயிட்டு வரோம் டாக்டர்'' மகாலிங்கம் எழுந்திருக்கப் போனபொழுது.—

சிட்டெளன்! பையனைக் காபி கொண்டு வரச் சொல்லி அனுப்பியிருக்கேன். கொண்டு வருவான்'' என்றார்.

''ஐயோ, உங்க வேலைக்காரப் பையனா? தெருவிற் காலை வைத்துவிட்டால் போதும், சினிமா போஸ்டருங் களையெல்லாம் படித்துக்கொண்டே ஆர அமர வருவ தற்குள் விடிந்து விடுமே!. பரிஷித் வீட்டிற்கு வருவானோ என்னவோ? சாம்பவிகூட இங்கேயே தான் இருக்கிறாள்'' என்றார் அவர் கவலையோடு.

டாக்டர் எரிந்து விழுந்தார்— ''இதப்பாருங்க! இந்தக் கவலைதான் வேண்டாம் என்றேன். பரிஷித் வருவானோ என்னவோ, நான் வர வரைக்கும் இருப்பானோ அல்லது போய்விடுவானோ என்ற பயங்களே வேண்டாங்கிறேன். நீங்கள் இல்லாவிட்டாலும் நீங்கள் வர வரைக்கும் அவள் அங்கே இருக்கணும்.''

''அதெப்படி முடியும்?''

''ஏன் முடியாது? ஒவ்வொரு மனுஷனுக்கும் மனத் தளவில் 'இவங்க என்னைச் சேர்ந்தவங்க'—என்ற ஒரு செக்யூரிட்டரி வேண்டும். அதை நாம்ப எதிராளியிடம் உண்டாக்க முடிந்தால் அதைவிட பலம் வாய்ந்த பந்தம் வேறில்லை.

உங்களை மட்டுமேயில்லை நிறைய பேரிடம் நான் பார்த்துட்டுதானே வரேன். தாய் தந்தையர் குழந்தை களின் பாலும், மனைவிகள் கணவன் பாலும், எஜ மானர்கள் வேலையாட்கள் பாலும் இந்த உணர்ச்சியைத் தோற்றுவிக்க முடியாமல், அலங்கவங்களின் பந்தங்களைப் பாழடித்துக் கொள்கிறாங்க. அதற்கப்புறம் சந்தேகங்கள் பொய்கள், ருசுக்கள், துவேஷங்கள், மாறுபட்ட கொள்கைகள்! சண்டை பூசல்கள்!

கடைசியில் விளைவு அழுகை! மனஸ்தாபம்! வாழ்க்கையே ஒரு சமாதியாகிவிடுகிறது. மிஸ்டர் மகாலிங்கம்! ஒவ்வொரு மனுஷனுக்கும் தனக்கு வேண்டி யவர் என்று விரும்பும் நபர் பால் ஆழ்ந்த நம்பிக்கை வேண்டும். அது இல்லாதபோது அந்த நபரிடமிருந்து தொலைவிற்குப் போய்விட வேண்டும். அதானே தவிர சந்தேகங்களோடு நெருக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று பார்க்கக்கூடாது. சந்தேகம் என்பது இரு மனுஷங்களுக்கிடையேயுள்ள தொடர்பிற்குக் கறை யானைப் போன்றது! அது அளவுக்கு மீறிய மனத் துன்பத்தை உண்டாக்கும், என்ன சொல்றீங்க?''

நீங்க ரொம்பவும் சீரியஸான வாழ்க்கை சத்தியங் களைச் சொல்றீங்க. அதை ஜீரணித்துக்கொண்டு புரிஞ்சுக் கணும்னால் உடனடியாய் நான் தொடர்ந்து இரண்டு சிகரெட்களைப் புகைக்கணும்'' என்றார் மகாலிங்கம். அதைக்கேட்டு டாக்டர் தன் சிகரெட் பாக்கெட்டை எடுத்துத் தந்தார் அவரிடம். சாம்பவியைப் பார்த்து டாக்டர் தேவன்—என்னம்மா சாம்பவி? இவ்வளவு மௌனமாய் இருக்கிறாயே! என்ன யோசிச்சிட்டிருக் கிறாய்?'' கேட்டார்.

''அதில்லை டாக்டர்! இந்தப் போதை மருந்துகள் மனிதர்களுக்கு எப்படி பழக்கப்படுகிறதுன்னு தான் யோசிச்சிட்டிருந்தேன். இந்தப்போதைப் பொருட்பழக்கம் கூட ஒரு விதமான தற்கொலை தானே?''

''சரியாய் சொன்னாயம்மா! எப்படிப் பழக்கப்படுகிற துன்னு சொல்ல முடியாது நம்மால்! அதற்கு நிறைய காரணங்கள் இருக்கின்றன. அந்த 'ட்ரக்' பழக்கப்பட்ட ஆளை, முக்கியமாய் அந்த நோயாளியின் குடும்ப அங்கத் தினர்களைத் தொடர்பு கொண்டால்தான் நமக்கு முழு விவரமும் தெரியும் மேற்கு நாடுகளின் புள்ளி விவரத் தின்படி, சிறுவர்களிடம் இது பழக்கப்படுவதற்கு முக்கிய காரணம் அவங்க குடும்ப நிலைதான்! அவங்க குடும்பங் களில் தாய் தந்தையர் பிரிந்து போய்விடுவார்கள். தாய் வேறு மணம் செய்து கொண்டுவிடுவாள். அல்லது தந்தை

வேறு மணம் செய்துகொண்டு போய் விடுவார். குழந்தைகளுக்கு, ''என் வீடு'', ''என் இடம்'', ''என் மனிதர்கள்'' என்ற எமோஷனல் செக்யூரிடி இருக்காது. ஒருக்கா குடும்பம் சரியாய் இருந்தாலும் அவர்களின் பொருளாதார சுதந்திரத்தின் மூலமாய் குழந்தைகள் பருவம் வந்ததுமே வீட்டைவிட்டு தொலைவிற்குப் போய்விடுவார்கள். அந்த வயதில் பாடுபட்டால் பொருளாதார சுதந்திரம் கிடைக்கலாமே தவிர, மனத்தளவில் பக்குவம் வராது. மனதில் குழந்தைத்தனம் போகாது. எமோஷனல் செக்யூரிடிக்காக ''காதல்'' என்ற பெயரில் தேடத்தொடங்கிடுவாங்க. காதலை ஆழ்ந்து நம்புவார்கள். ஆனால் சில நாட்களில் அது கூட இளமையின் துடிப்பால் புளித்துப் போய் விடும். திரும்பவும் தனிமை! இந்த விதமாய் தொடங்குகிறது. எதன் மூலமாகவாவது இந்த மானசீக வேதனையைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்ற தவிப்பு! அப்படிப்பட்டவங்களுக்கு இந்தப் போஸ்ட் பொருள் ஒரு வரமாய் தோன்றுகிறது.

இந்த 'ட்ரக்' முளையிலுள்ள நரம்புகளை பலவீனமாய் தூங்க வைத்துவிட்டு ஒரு 'மகிழ்ச்சி' என்ற பிரம்மைக்குக் கூட்டிச் செல்கிறது. அவ்விடமெல்லாம் 'ஹாய்யாய்', அமைதி'யாய் இருப்பது போல தோன்றுகிறது. முதல் முதலில் இது நன்றாய் இருப்பது போல தான் தோன்றும். பாவம், சின்ன டோஸ்களில்தான் ஆரம்பிப்பாங்க. ஆனால் போகப்போக, அதன் அளவு போதாது! மூன்று நாட்களுக்கு ஒரு இஞ்ஜக்ஷனே பெளடர் பொட்டலமோ அல்லது ஒரு ப்ரவுன் ஷுகர் போன்றதோ தேவைப்படும். போகப்போக, இன்னும் அதிகமாகி, அதற்காகத் தவிப்பு அதிகமாகி, நாளுக்கு மூன்று இஞ்ஜக்ஷன்கள் வரைக்கும் கொண்டுபோய் விடும். அதுவரை போயிட்டவங்களை மீட்டுக் கொண்டு வருவது ரொம்பக்கஷ்டம். அந்த உடம்பு பாதிக்கும் மேலே சிதிலமானாற்போலத்தான். இப்பப் புதுசா இன்னொன்று வந்திருக்கு. ஸ்னேக் பைட்! பாம்பின்

விஷத்தை எடுத்து அதனைக் கொண்டு உதட்டில் கடிக்கச் செய்கிறார்கள். கடித்ததுமே அது செத்துவிடுகிறது.''

அதைக் கேட்டதுமே சாம்பவி அருவருப்புடன் மயிர்க்கூச்சலெடுக்கப் பார்த்தாள்.

''சிலபேர் பாவம், தெரியாமல் இதில் சிக்கிக்கொண்டுவிடறாங்க. இவற்றிற்கு முக்கிய காரணம் அதிகப் பணக்காரர்களாய் இருப்பதுதான். காலேஜில் படிக்கும் இளைஞர்களிடம் இது பரவலாய்த் தென்படுகிறது. மிகப் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பசங்களைப் பிரசித்தி பெற்ற காலேஜ்களில் சேர்த்து ஹாஸ்டலில் தங்க வைப்பது தம் கௌரவத்திற்கு எடுத்துக்காட்டாய் நினைக்கிறாங்க சில பேர். 'என் பையன் குறிப்பிட்ட பப்ளிக் ஸ்கூலில் படிக்கிறான்' என்று சமூகத்தில் பெருமையாய் சொல்லிக்கணும்னு தவித்துப்போறாங்களே தவிர, அந்த வயதில் பசங்களுக்குத் தாய் தந்தையரின் அரவணைப்பு, மனத்தளவில் வளர்ச்சிக்கு எவ்வளவு முக்கியமானது என்பதைப் புரிந்துகொள்ள மாட்டார்கள். அதைப்பற்றிக் கேட்டால், அங்கே பெஸ்ட் எஜுகேஷன் கிடைக்கிறது' என்பாங்க. நான் அதை நம்பமாட்டேன். தெருவிளக்கு வெளிச்சத்தில் படித்தாலும் பிரில்லியெண்ட்டான ஸ்டுடென்ட்டுகள் நிறையப பேர் இருக்காங்க. 'ஆக்ஸ்போர்டில் படித்தவன்தான் உயர்ந்தவன்' என்று சொல்லுவதைப் போலதான் பைத்தியக்காரத்தனம் இதுவும்!

'ஏன்? ஆக்ஸ்போர்டில் படிக்காதவங்களில் எத்தனையோ பேர் அறிவாளிங்க இல்லையா?...உனக்குத் தெரியுமா சாம்பவி? தாய் தந்தையரிடையே இன்னொரு விதமான பைத்தியக்காரங்க கூட உண்டு. பசங்கள் சுயமாகவே நன்றாய்ப் படித்தால் சரி! ஆனால் இந்தப் பைத்தியக்காரங்க இருக்காங்களே, அவங்க பசங்களை ஃபர்ஸ்ட் வரணும் ஃபர்ஸ்ட் வரணும்னு பந்தய குதிரைங்களை ஓட்டுகிற ஜாக்கியைப் போல முடுக்கிட்டிருப்பாங்க. முதல் மார்க் வராவிட்டால் பிறகு அந்தப் பசங்கள்

பிரயோஜனப்பட மாட்டாங்க என்பது இவங்க எல்லை
சரியாய் சாப்பாடு கூட போடமாட்டாங்க. பசங்
புத்திசாலியாய் வளர்ச்சியடையாததற்குக் காரணங்
நிறைய உண்டு! அலை என்ன என்று பெரியவங்க பொ
போடு ஆராய்ந்து பார்க்காமல், காரணம் தெரியா
அந்தச் சின்னப் பசங்களின் மனதை இம்சிப்பாங்க.

நாற்பத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் தம் பா
பருவத்தில் இருந்த நிலை வேறு! இப்பொழுது
என்றெண்ணிப் புரிந்துக்கொள்ள மாட்டாங்க. அவ
'பெரிய உலக'த்தில் அவங்களுக்கு எத்தனை பிரச்சி
களும், போட்டிகளும், வருத்தங்களும் இருக்குமே
பசங்களின் 'சின்ன உலக'த்தில் கூட அதே அளவி
அத்தனையும் இருக்கும் என்பதை யோசித்துப் பார்
மாட்டாங்க. பசங்களுக்குக்கூட வாழ்க்கை கஷ்டம்
இருக்கும்.

வீட்டில் ஒரு தினுசான சூழ்நிலை!

வெளியே ஸ்கூலுக்குப் போனால் இன்னொரு தி
சான சூழ்நிலை!

வீட்டுச் சூழ்நிலைக்கு முக்கியத்துவம் தந்து வெளி
சமர்த்தாய் இருந்தால் வெளிப்பசங்கள் கேலி பண்
வார்கள். வெளிச் சூழ்நிலைக்கு முக்கியத்தும் தி
வீட்டில் அதைக்காட்டினால் வீட்டிலிருப்பவங்க 'கெட்
போயிட்டான்' என்று இடித்துரைப்பார்கள். அழு
பூசல்!

பெரியவங்க, உறவுக்காரங்க மூலமாய் அந்தச் சி
உள்ளம் படும் பாட்டால் படிப்பின் மேல் ஆர்
குறைந்து விடலாம்.

பணக்காரக் குடும்பங்களில் பசங்கள் சிநேக
களுடன் பார்ட்டி என்ற பெயரில் கூடும்போது, நண்பர்
மூலமாய் இந்தப் போதைப் பொருள் பழக்கம் ஏற்படு
சர்வ சாதாரணம்.

அந்தே போதைப்பொருள் பழக்கமுடைய ஆள் பாவம்
இவங்களுக்குத் தெரியாமலேயே அதைப் பழக்கப்படுத்தி
விடறாங்க. அதனால் அவன் இனி அவ்வளவுதான்!
முக்கியமாய் இந்தக் காலத்தில் தாய் தந்தையர்கள் பசங்
களைக் காலேஜிற்கு அனுப்பிப் பணம் கட்டி, வேண்டிய
துணிமணிங்களைத் தைத்துத் தந்து, கேட்ட பணத்தை
அவங்களுக்குத் தந்துவிட்டுத் தப் பொறுப்புத் தீர்ந்ததாய்
எண்ணிக்கெண்டு விடக்கூடாது! குடும்பத்தில் தாய்
தந்தையர் எந்தத் தொழிலைச் செய்தாலும், எப்படிப்
பட்ட பிஸியாய் இருந்தாலும் சரி, தினமும் ஒரு அரை
மணி நேரமோ, வாரத்திற்கு ஒரு வேளையோ கண்டிப்
பாய்ப் பசங்களோடு சேர்ந்து கழிக்கணும். அவங்களோடு
சிநேகமாய்ப் பழகணும். அவங்களுக்குக் கவலைகளோ,
தொல்லைகளோ ஏதாவது இருக்கான்னு நல்ல வார்த்தை
களில் இதமாய்க் கேட்டுத் தெரிஞ்சுக்கணும்!

'எங்களுக்கு டைம் இல்லை' என்று பசங்கள் விஷயத்
தில் சொல்றவங்க என்றோ ஒருநாள் அதன் பலனை
ஏதோ ஒரு விதத்தில் அனுபவித்துத் தீர வேண்டியிருக்கும்.

பசங்களை நம் வாழ்க்கையில் ஒரு முக்கியமான பாக
மாய் நினைத்துக்கணும். வெளியுலகத்தில் பசங்களுக்கும்
சரி, பெரியவங்களுக்கும் சரி எத்தனையோ விதமான
விஷப்பாம்புகளைப் போன்ற ஆபத்துக்கள் பதுங்கியிருக்
கின்றன. என்னிடம் வருகிற ஒரு பேஷன்ட் இருக்கிறாள்.
பேர் சாரதான்னு வைச்சுப்போம். பேங்க்கில் வேலை
செய்துக்கிட்டிருக்கிறாள். அவளுக்குத் திருமணம்
ஆயிற்று. இரண்டு குழந்தைகள். கணவனோடு குடும்பம்
சரியாய் அமையவில்லை. பேங்க்கில் வேலை அதிகம்.
எப்பொழுது பார்த்தாலும் அந்தக் கவலையால் தலை
வலியால் வருந்திட்டிருப்பாள்.

ஒருநாள் சிநேகிதியின் அண்ணன், 'தலைவலிக்கு
என்னிடம் மருந்து இருக்கிறது' என்று சொல்லி ப்ரவுன்
ஷுகரை கொஞ்சமாய்— மைல்ட் டோஸ் தந்துட்டான்.

அவளுக்கு அதைச் சாப்பிட்டதுமே தலைவலி போ
விட்டாற்போலவும், மிக லேசாகவும், வெறிபிடி
சந்தோஷத்தோடும், உற்சாகமாகவும், உடம்பு காற்றி
மிதப்பது போலவும் தோன்றிற்று. ஆபீசில் வேலை அ
மாய் செய்யக் கூடிய சக்தி வந்து சேர்ந்துவிட்டாற்போ
தோன்றிற்று. ஆனால் முப்பத்தாறு மணி நேரங்கழித்
திரும்பவும் தீவிரமான தலைவலி வந்துவிட்டது! அ
ரமேஷிடம் ஓடினாள். அவன் மிகவும் இரக்கப்பட்டா
போல பசப்பிவிட்டுத் திரும்பவும் மருந்து தந்தா
போகப் போக சாரதாவுக்கு அந்த மருந்து பழக்கப்பட்டு
போய்விட்டது. அவன் பணம் கேட்கத் தொடங்கினா
விலை ஜாஸ்தியாயிடுத்து என்றான். கிடைக்கவில்ல
பிளாச்கில் வாங்கணும் என்றான். சாரதா பண
கொடுக்கத் தொடங்கினாள். சம்பளத்தில் பாதி
கொடுக்கத் தொடங்கினாள். நாளடைவில் அ
ரமேஷிற்குக் கட்டுப்பட்டுப் போய்விட்டாள்.

சாரதாமேல் விருப்பம் போனபிறகு கணவன் அவ
விட்டுப் போய் விட்டான். சாரதாவால் மருந்து இல்லா
இருக்கமுடியவில்லை. இன்னொருத்தன் நண்பனான
அவனுக்குப் பணம் தேவைப்பட்டது. சாரதா நகைகளை
கொடுக்கத் தொடங்கினாள். கடைசியில் தாயிடம் போ
இருந்தாள். அங்கே தாயின் நகைகளைத் திருடும் வ
கும் நீண்டது. குழந்தைகளுக்குப் பால், பழம் தருவ
தவிர்த்தாள். வீட்டிலிருந்த சாமான்களை வி
தொடங்கினாள். உறவினர்கள் சாரதாவைத்
வீட்டிற்கு வரவிடவில்லை. சாரதாவின் தாய் தந்
ருக்கு விஷயம் புரிந்தது. என்னிடம் அழைத்து வந்தா
பாவம்! சாரதா ஒரே அழுகை! வீடு, குடும்பம், குழந்
கள், எல்லாம் போயிடுத்து. சாரதாவைப் போன்றவ
ளுக்கு இப்படிப்பட்ட போதைப் பொருள் பழ
ஏற்பட்டது ரொம்ப ஆக்ஸிடென்டல், அது ரொ
துரதிர்ஷ்டம்.

"நம்ப நாட்டில் கூட இது ஜாஸ்தியாயிட்டிருக்கே சார்" என்றார் மகாலிங்கம்.

"மேற்கு தேசங்களை ஒப்பிட்டால் நம்ப நாட்டில் குறைவுன்னுதான் சொல்லணும். ஏன்னால் நம்ப குடும்ப பந்தங்கள் ரொம்பவும் பலம் வாய்ந்தவை. இப்பொழுதுதான் மேலை நாட்டுக் காற்று தீவிரமாய் வீசத் தொடங்கியிருக்கிறது. ஆனாலும் இன்னும் இச்சமூகத்தைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்குகிற நிலைக்கு வந்துவிடவில்லை. இப்பொழுது நம்மிடையேயும் விவாகரத்தின் ரேட் அதிகமாகி விட்டதாய்ச் சொல்கிறார்கள் தந்தை விட்டுவிட்டுப் போய்விட்டாலும் தாய் குழந்தைகளை விட்டுவிடமாட்டாள். அது முக்கியம். இரண்டாவது காரணம் நம் நாட்டில் அதிகமாய் பணக்காரர்கள்தான் இந்தப் பழக்கத்திற்கு அடிமையாகிறார்கள். ஏனெனில் இந்தச் செலவுகளை அவங்களால்தான் தாங்க முடியும்.

ஆனால் பணக்காரர்களுக்குதான் இந்தப் பழக்கம் அடிமையாகும்னு மற்றவங்களுக்குக் கிடையாதுன்னு எண்ணிவிடக்கூடாது. ரிக்ஷாக்காரங்க, ஆட்டோக்காரங்களில் கூட ட்ரக் அடிக்ட் ஆனவங்க இருக்காங்க. இதையெல்லாம் ஏன் சொல்றேன்னால் எந்தக் காரணத்தினாலாவது பசங்க இந்தப் போதைப் பொருளுக்குப் பழக்கப்பட்டுப் போயிட்டால் அவங்களைத் திட்டாதீங்க, லெருத்து, அருவருத்து ஒதுக்காதீங்க. ஒரு துரதிர்ஷ்டமான சம்பவம் நேர்ந்து விட்டது, அதிலிருந்து அவங்களை மீட்கணும் என்று பிறர் முயற்சி செய்யணும்.

மனிதர்களுக்கு ஜுரம் வந்தால் நாம்ப லெருத்து ஒதுக்குவதில்லையே! ஆக்ஸிடென்ட் ஆயிட்டால் அப்படியே விட்டுவிடுகிறோமா? இதுவும் அப்படித்தான்னு நினைத்துக்கணும், அவங்களிடம், இவங்க இருமடங்கு அன்பையும், மன உறுதியையும் வழங்கணும். மனத்தளவிலும் உடலளவிலும் பலவீனப்பட்டிருக்கும் அவங்

களைப் பொறுமையாய் புரிந்துகொண்டு உதவி பண்ண
ணும். அவங்க நமக்கு வேண்டும் என்றால் இந்த உத
யைச் செய்துதீரவேண்டியதுதான். தேவையில்லைன்னா
அது வேறு சங்கதி.'

சாம்பவி முகவாயில் கைகளை ஊன்றிக்கொண்டு மி
கவனமாய் டாக்டர் சொன்னதை கேட்டுக் கொண்டிரு
தாள். அவள் கண் முன்னால் அந்தச் சமயத்தில் பரிஷி
தென்பட்டான்.

அதற்குள் பையன் காபியைக் கொண்டு வந்தான்.

டாக்டர் காபியைக் குடித்துக்கொண்டே சொன்னார்
"அதனால்தான் நான் பரிஷித் விஷயத்தில் சாம்பவியிட
உங்களையும் விட அதிகமாய் உதவி பண்ண முடியு
என்று சொல்வேன் ஏனெனில் சாம்பவி அரவணைப்
இல்லத்திலிருக்கிற அந்த ஊனமுற்ற குழந்தைகளின் முக
களில் சிரிப்பை வரவழைத்திருப்பதை நான் பார்த்திரு
கிறேன். அவளிடம் பொறுமையும், பயிற்சியும் இரு
கின்றன. ஷீ ஈஸ் நிகரெக்ட் பெர்சன் டு ஹெல்ப் ஹிம்.

"எனக்குத் தெரியும் டாக்டர்" என்றார் மகாலிங்
சாம்பவியை வாத்சல்யத்தோடு பார்த்தபடியே.

"என்னால் முடிந்ததைக் கண்டிப்பாய்ப் பண்றே
டாக்டர்" என்றாள் சாம்பவி.

"உங்கள் அரவணைப்பு இல்லத்திற்கு ஆதரவு காட்
கிற காந்திமதியம்மா இருக்காங்களே அவங்களுக்கு ஏ
பெரிய பிரச்னை" என்றார் அவர்.

"ஏன் அவங்க நன்றாய்த்தானே இருக்காங்க?"

"மேலுக்கு அப்படித்தான் இருப்பாங்க நிறையப்பே
அந்த முக்காட்டை எடுத்துட்டால் ஒவ்வொருத்தரிடமு
ஒவ்வொரு வேதனையும் அமைதியின்மையும் தென்படு
அவங்க பெண் ராதிகா தாய் தந்தையர் சொல்

பேச்சைக் கேட்க மாட்டாள். தாய் என்றாலே இளப்பம்.
லட்சியம் செய்யமாட்டாள். அவங்களுக்கு அது வேதனை.
காந்திமதியம்மா கூட என் பேஷன்ட்தான். பிரச்னை
இருந்தால் அதைக் குறைத்துக் கொள்ளாமல் பதற்றத்தால்
இன்னும் அதிகரித்துக் கொள்வாங்க நிறையப் பேர்.
அவங்களும் அப்படித்தான்.

ஒரு டாக்டராய் அவங்களை எல்லோரும் தெய்வமாய்க்
கருதுகிறார்கள். வீட்டில் கணவன் குழந்தைகளோடு மன
நிம்மதியில்லை தன்னைப் புரிந்துகொள்ளவில்லை என்று
இவங்க வருத்தம். இவங்க தம்மைப் பொருட்படுத்து
வதில்லைன்னு அவங்க வாதனை. எல்லோரையும்
உட்காரவைத்துப் பேசிப் பார்த்ததில் கடைசியில் வெளிப்
பட்ட விஷயங்கள் அற்பமானவை மனதிற்குள்ளேயே
வெச்சிட்டு மருகிக் கொண்டிருந்ததால் பெரிதாகிவிட்டன.
சில சமயங்களில் மிகச் சின்னச் சம்பவங்கள்தான்
வாழ்க்கையில் பெரிய புயலாய் மாறிவிடுகின்றன.
அவற்றைக் கண்டு பிடித்துவிட்டால் மனிதன்
ஜாக்கிரதையாய் அந்த ஆபத்திலிருந்து வெளியேறி
விடுவான்."

"ஹலோ டாக்டர்" வாசலில் குரல் கேட்டது.
மகாலிங்கமும் சாம்பவியும் திரும்பிப் பார்த்தார்கள்.
வாசலில் சுமித்ராதேவி நின்றுகொண்டிருந்தாள். சாம்பவி
சட்டென்று எழுந்து வணங்கினாள்.

"உங்க பரிஷித் எப்படியிருக்கான்?" அவள் தோளில்
தட்டிவிட்டுக் கேட்டாள்.

"இப்பத்தான் கொஞ்சம் வழிக்கு வந்துட்டுத் திரும்ப
வும் பின்னுக்கு ஓடிப்போயிட்டார்" என்றார் டாக்டர்.

மகாலிங்கமும் சாம்பவியும் புறப்பட்டார்கள்.

"போய் வரோம் டாக்டர்! தாங்க்யூ" என்று கை
குலுக்கிவிட்டு வெளியே வந்தார் மகாலிங்கம்
சாம்பவியோடு.

14

சாம்பவி நடுஹாலில் உட்கார்ந்து தலையணைக்கு எம்பிராய்டரி செய்து கொண்டிருந்தாள். அங்கிளின் தலையணையில் 'குட்நைட்' என்று தைக்க வேண்டும் என்று பல நாட்களாய் முயன்று கொண்டிருக்கிறாள். அதைத் தொடங்கிய பிறகு ஏதேதோ தொல்லைகள். ஒரு வினாடி கூட ஓய்வில்லாதபடி ஓயாத வேலைகள். இன்றைக்கு 'அரவணைப்பு இல்லத்திற்கு' விடுமுறை. நாய்க்குட்டி நூல்கண்டோடு விளையாடிக் கொண்டிருந்தது. அங்கிள் கோர்ட் வேலையாய் காலையில் சாப்பிட்டுவிட்டுப் போனவர்தான். இன்னும் திரும்பவில்லை. அவர் போகும்போது சாம்பவியிடம் வந்து சட்டைப் பொத்தானைப் பிடித்துக்கொண்டே தாழ்ந்த குரலில்—

''பரிஷித் அறையில்தான் இருக்கிறான். அந்தப் போக்கிரிங்க யாராலது வராங்களோ என்னவோ, ஒரு கண் பார்த்துட்டிரும்மா'' என்று குரலைப் பெரிதாக்கிக் கொண்டு—

''நான் போயிட்டு வரேம்மா. வீட்டில் தனியாய் இருக்கிறாய் ஜாக்கிரதையாய் இரு. ஆனாலும் உனக்கென்ன பயம், பரிஷித்தான் வீட்டில் இருக்கிறானே!'' என்று உரக்கச் சொல்லிவிட்டு பரிஷித்தின் அறைக்கு முன்னால் போய் நின்று—

''பரிஷித்! நான் கோர்ட்டுக்குப் போயிட்டு வரேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

ஒரு வாரத்திற்கு முன்னால் பரிஷித் கொஞ்சம் வழிக்கு வந்து கொண்டிருக்கிறான் என்றெண்ணிக்கொண்டு அரவணைப்பு இல்லத்திற்குப் போய்விட்டாள் சாம்பவி. மகாலிங்கம் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொண்டிருந்தார். அவர் தூங்கி விழித்தபோது பரிஷித் இல்லை. பக்கத்துவீட்டு நாகமணி ''யாரோ ஒரு இளைஞன் வந்து ஜன்னல் வழியாய்க் கல்லை விட்டெறிந்து பரிஷித்தைக் கூப்பிட்டு அழைத்துச் சென்றான்'' என்று சொன்னாள். பரிஷித் அன்று மாலையில் திரும்பி வந்தான்.

பரபரப்புடன் ஏதோ பாட்டை முணுமுணுத்துக் கொண்டே வந்த அவனைப் பார்த்ததுமே அவன் இன்ஜக்ஷன் குத்திக் கொண்டிருக்கிறான் என்று புரிந்து விட்டது. நள்ளிரவில் பரிஷித்தின் அறையிலிருந்து ''ஓ! ஓ'' என்று அலறல் சப்தம் கேட்டது. மகாலிங்கமும் சாம்பவியும் எழுந்து ஓடினார்கள்.

''பல்லி, பல்லி, ராட்சசப் பல்லி'' என்று கத்தி அலறிக் கொண்டே பிதியடைந்து கொண்டிருந்தான். மகாலிங்கம் பரிஷித்தை அணைத்துப் பிடித்துக் கொண்டு பார்த்தபோது சுவற்றில் சின்ன பல்லிக் குட்டி ஒன்று தென்பட்டது.

மகாலிங்கம் அதை விரட்டிவிட்டு வந்து பரிஷித்தை சமாதானப்படுத்தி தூங்க வைத்தார். பிறகு டாக்டரைக் கேட்டபொழுது அவர் ட்ரக் அடிக்ஷிற்கு அந்த விதமாய்தான் தென்படும் என்று சொன்னார். மூன்றாவது நாள் பரிஷித்தைத் தேடிக்கொண்டு அதே இளைஞன் வந்தபோது மகாலிங்கம் துப்பாக்கியை கையிலெடுத்துக் கொண்டு—

''திருட்டு ராஸ்கல்! திரும்பவும் கண்ணில் பட்டாயோ சுட்டுத் தள்ளிவிடுவேன்.'' என்று தெருக்கோடி வரைக்கும் துரத்திவிட்டுத் திரும்பி வந்தார்.

'இந்த எல்லைக்குள் எவனாவது வந்தால் அத்தனை பேரையும் சுட்டுத் தள்ளிவிடுவேன்' என்று அவர் மிரட்டிய தாய் சத்யா பிற்பாடு சொன்னான்.

அதிலிருந்து அவரும் சாம்பவியும் மாறிமாறி முழு போட்டுக் கொண்டு காவல் காக்கத் தொடங்கினார்கள் பரிஷித்தை.

பரிஷித் இப்பொழுதுதான் சில நாட்களாய், கொஞ்சமாய் சாப்பிடத் தொடங்கியிருக்கிறான். அவன் வயிற்றில் போன ஆகாரம் வாந்தியாய் வெளிவருவது நின்றிருந்தது....

மூன்று மணியளவில் பரிஷித் அறையை விட்டு வெளியே வந்தான்.

''ஹலோ'' என்றாள் சாம்பவி தானே. டாக்டர் சொன்னதிலிருந்து தானே அவனோடு உரிமை எடுத்துக் கொண்டு பேசத் தொடங்கியிருந்தாள். சிநேகமாய் இருக்கத் தொடங்கினாள். அடிக்கடி ஏதாவது பேசி அவனோடு சம்பாசணையைத் தொடங்கிக் கொண்டிருந்தாள். சமையலறையில் வேலை செய்துகொண்டே பரிஷித்தைக் கூப்பிட்டு 'கொஞ்சம் அந்தக் கிண்ணத்தை எடுத்துத்தா, இந்தத்தட்டை அங்கேவை' என்று வேலைகள் தரத்தொடங்கினாள்.

அவன் பேசமாட்டான். அவன் சாம்பவி சொன்ன வேலைகளைச் செய்வான். ஆஸ்பத்திரியில் இருந்தபோது தனக்காக அவர்கள் செய்த சேவைகளை அவன் மறந்து விடவில்லை.

''ஹலோ'' என்றான் அவன். அவன் தோரணையைப் பார்த்தால் வெளியே போகப் புறப்பட்டு விட்டாற் போலிருந்தது. அடுத்த அறைக்கு வந்த அவன் அவ்விடத்திலேயே உட்கார்ந்திருந்த சாம்பவியைப் பார்த்துவிட்டுத் திரும்பி உள்ளே போகப்போய், நின்று செய்வதறியாது குழம்பினான்.

''இன்றைக்கு நீங்க எனக்கு தாங்க்ஸ் சொல்லவில்லை'' என்றாள் கோபித்துக் கொண்டாற்போல.

ஆசுபத்திரியிலிருந்து திரும்பி வந்ததிலிருந்து ஒவ்வொரு நாளும் அவன் ஏதோ ஒரு வேளையில், ''தாங்க்ஸ்'' என்று சொல்ல வேண்டும்.

''காலையில் நீங்கள் பிஸியாய் இருந்தீங்க. அந்த மங்கம்மா வந்தாள் இல்லையா? சர்பத் பண்ணித் தந்தீங்களே?''

''நிஜந்தான்'' ஒப்புக்கொண்டாள். ''இதப்பாரும்! இன்றைக்கு தாங்க்ஸ் வெறும் வாயால் இல்லை. ஒரு வேலை செய்து காட்டணும்.''

''எப்படி?'' சந்தேகத்தோடு கேட்டான்.

''இன்றைக்கு எங்கேயும் போகாலிருப்பதுதான் எனக்கு தாங்க்ஸ் சொல்றதுன்னு அர்த்தம்.''

அவன் சங்கடத்துடன் பார்த்தான். தலையைச் சிலிர்த்துக் கொண்டான். வெளியே போகப்போனான்.

பின்னாலிருந்து சாம்பவி சொன்னாள்—''அப்படீன்னால் நீங்க தாங்க்ஸ் சொல்றதெல்லாம் மனப்பூர்வமாய் உண்மையாகவே நன்றியைத் தெரியப்படுத்துவது இல்லைன்னு சொல்லுங்க. வெறுமே, இயந்திரகதியில் வாயில் சொல்றதுதானே?''

பரிஷித்தின் கால்கள் வாசலைத் தாண்டப்போய் அப்படியே நின்றுவிட்டன. திரும்பிவந்து அங்கிருந்த ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டான். அவன் முகம் மிக எரிச்சலாய் இருந்தது.

''குட்! நான் இப்ப ஒரு கப் தேநீர் கொடுத்துட்டு, நானே உங்களுக்கு தாங்க்ஸ் சொல்றேன்'' —என்று உள்ளே போனாள். நாய்க்குட்டியும் அவளைத்

தொடர்ந்து ஓடிற்று. அவனை வேண்டுமென்றே அவ்வாறு விட்டுவிட்டுப் போனாள்.

டாக்டர் சொன்ன ஒவ்வொரு வார்த்தைகளையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு ஒவ்வொன்றாய் நிறை வேற்றிக் கொண்டிருந்தாள் அவள், அவர் என்ன சொன்னார்? இருக்கிறானா இருக்கிறானா என்று கவலைப் பட்டுக் கொண்டோ இருக்கக் கூடாது என்றார். இருக்க வேண்டும் என்ற உணர்ச்சி அவனிடம் சுயமாகவே வரும் படியாய் உண்டாக்க வேண்டும். தேநீர் தயாரித்துக் கொண்டிருந்த போதிலும் சாம்பவியின் காதுகள் அவள் காலடியோசைக்காகக் கூர்ந்து கவனித்துக் கொண்டே யிருந்தன. இப்பொழுதெல்லாம் அவள் பரிஷித்திற்காக 'பிளாக்டீ' தயாரிக்கத் தொடங்கியிருந்தாள்.

தேநீர் டிகாக்ஷனில் கொத்தமல்லிப் பொடியையும் சக்கரையையும் போட்டு, எலுமிச்சை ரசத்தைப் பிழிந்து விடுவது. அது பரிஷித்திற்குப் பிடித்திருந்தது. முதல் தடவை குடித்ததுமே 'நன்றாயிருக்கிறது' என்றான். சாம்பவி இரு தம்ளர்களில் தேநீரை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். அங்கே ஸ்டூலில் பரிஷித் இல்லை. வாசல் கதவு வெறுமே சாத்தியிருந்தது.

சாம்பவியின் முகத்தில் ஏமாற்றம் ஏற்பட்டது. அவள் எவ்வளவு பைத்தியக்காரத்தனமான வேலையைச் செய்து விட்டாள்! அங்கிள் சொன்னது போல இன்னும் அவளை அதுபோல விட்டுவிட்டுப் போகும் நிலைமை வரவில்லை என்று நம்பியிருந்திருக்க வேண்டும்.

"நான் ஒரு முட்டாள்" என்று நொந்துகொண்டே தேநீரைத் திருப்பி எடுத்துக்கொண்டு உள்ளே போகத் திரும்பினாள். அங்கே கொல்லைக்கதவிற்கருகில், கதவின் மீது தோளைச் சாய்த்துக்கொண்டு, கைகளைக் கட்டிக் கொண்டு, எங்கோ பார்த்தபடி தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் பரிஷித்.

சாம்பவியின் கண்களில் திடீரென்று உற்சாகம் பொங்கிற்று.

"அட! நீங்க இங்கே இருக்கிங்களா?" என்றாள். ஒரே பாய்ச்சலாய் அவனிடம் வந்து நின்று.—"நீங்க போயிட்டீங்கன்னு நினைச்சேன். அங்கிள் என்னைத் திட்டத் தான் போகிறார் என்று நினைச்சேன்" என்றாள் தேநீரை தந்துகொண்டே.

"போயிடலாம்னுதான் நினைச்சேன். ஆனால்..." அவன் இடையிலேயே நிறுத்திக் கொண்டான்.

ஆனால் எது தடுத்து நிறுத்திவிட்டது?"

"நீங்கள் 'நன்றி' என்று ஒன்றை என் தலையில் சுமத்திவிட்டீங்க அல்லவா?' தேநீர் கோப்பையை வாங்கிக் கொண்டான்.

சாம்பவிக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது. அவன் இப்பொழுதுதான் கொஞ்சங் கொஞ்சமாய் சாதாரண மனிதனாய்ப் பேசத் தொடங்கியிருக்கிறான்.

"என்னையே நான் ஒரு முட்டாள் என்று திட்டிக் கிட்டேன்" என்றாள்.

"நானும் கேட்டேன்."

"நீங்களும் கேட்டுட்டீங்களா? மைகாட்!" கண்கள் அகலவிரிய ஆச்சரியமடைந்தவளாய் கேட்டாள். தொடர்ந்து பக்கென்று சிரித்து விட்டாள்.

"நம்மையே நாம்ப திட்டிக்கொள்வதை யாராவது கேட்டுவிட்டால் ரொம்ப சில்லியாய்த் தானே இருக்கும்?" என்றாள்.

"ஒன்றும் இருக்காது."

எப்படிச் சொல்றீங்க?"

''நானும் என்னையே திட்டிட்டுத்தான் இருப்பேன் எப்பப்பார்த்தாலும்.''

ஓ! அதுவா?'' சாம்பவி திரும்பவும் சிரித்து விட்டாள். அவன் சந்தர்ப்பம் தந்தும் போய்விடவில்லை. அது மிக சந்தோஷமாயிருந்தது அவளுக்கு.

''தேநீர் நன்றாயிருக்கு'' என்றான்.

''தேநீர் போட கற்றுத்தரேன் உங்களுக்கு'' என்றாள். அவன் முகம் அதற்குள் சீரியஸாகி விட்டது. பாதி குடித்த தம்ளரை அவ்விடத்திலேயே வைத்துவிட்டு அறைக்குள் போய் கதவைச் சாத்திக்கொண்டு விட்டான்.

சாம்பவி வியப்படைந்து போனாள்.

''பரிஷித்! பரிஷித்!'' கதவைத் தட்டிக் கூப்பிட்டாள். நாய்க்குட்டி கூட எம்பி எம்பி கதவைக் கீறத்தொடங்கிற்று.

''உம்'' குரல் கொடுத்தான். அவன் குரல் சாதாரணமாய்த்தான் இருந்தது.

''நான் ஏதாவது சொல்லக்கூடாத வார்த்தையை சொல்லிட்டேனா?''

''இல்லை.''

''பின்னே எதுக்குக் கதவைச் சாத்திக்கணும்?''

பதில் இல்லை.

சாம்பவி அறையில் அங்குமிங்கும் நடைபயின்றாள்.

அதென்னவோ எல்லாம் நன்றாகவே இருந்தது அதற்குள் மூட் கெட்டுவிட்டது.

திரும்பவும் போய்க் கதவைத்தட்டினாள். ''பரிஷித் பரிஷித்'' கூப்பிட்டாள். பதில் வரவில்லை.

சாம்பவி கதவை ஓங்கி அறைந்தாள்.

''பரிஷித்.''

பதில் வரவில்லை. அவன் திரும்பவும் இன்ஜெக்ஷன் குத்திக்கொள்கிறானா? தெருப்பக்கமாய் ஓடிப்போய் ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தாள். நாய்க்குட்டியும் கூடவே ஓடிவந்தது. அவன் கட்டிலில் இருந்தான். மல்லாந்து படுத்தபடி கைகளைத் தலைக்குக் கீழே வைத்துக்கொண்டு, மேற்கூரையைப் பார்த்தபடி தீர்க்கமாய் யோசித்துக் கொண்டிருந்தான்.

சாம்பவிக்கு அம்மாடா என்றிருந்தது.

''பரிஷித்'' திரும்பவும் கூப்பிட்டாள்.

''என்ன?'' இந்தப் பக்கமாய்த் திரும்பாமலேயே கேட்டான்.

''எனக்கு பயமாயிருக்கு. கதவைத் திறங்கள்'' என்றாள்.

பரிஷித் போய் கதவைத் திறந்துவிட்டு வந்து திரும்பவும் கட்டிலில் படுத்துக்கொண்டான்.

சாம்பவி திரும்பவும் உட்கார்ந்து தைக்கத் தொடங்கினாள். நாய்க்குட்டி காலடியில் வந்து, படுத்துக் கொண்டது.

'தேநீர் போடக் கற்றுத் தருகிறேன்' என்று சொன்னதுமே அவனுக்கு அத்தனை கோபம் ஏன் வந்தது, என்று யோசிக்கத் தொடங்கினாள்.

15

சாம்பவி அரவணைப்பு இல்லத்தின் ஆபிசு அறை உட்கார்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருந்தா டென்மார்க்கில் இருந்த ஒரு சங்கம் உலகம் முழுவதி உள்ள ஊனமுற்றோர் இல்லங்களுக்குப் பொருள் உ செய்து கொண்டிருந்தது. இப்பொழுது இருந்துவ இந்தக் கட்டிடம் பாழடைந்த கட்டிடமாய் இருந்த குழந்தைகள் நல்ல சூழ்நிலையில் வளர்ந்தால் அவர் மனங்கள் ஆனந்தமாய் இருக்கும் என்று நம்பின அவள். சுமித்ராதேவி 'என்னால் ஒன்றும் செய்யமு வில்லை. நமக்கு நிதி பற்றாது' என்று சொல்கிறா ராமேஸ்வரிதேவி ஒரு விலாசத்தைத் தந்து அச்சங் திற்குக் கடிதம் எழுது என்றும் தானும் சிபாரிசு செ தாகவும் சொன்னாள்.

சாம்பவி டென்மார்க்கிலிருந்த அச்சங்கத்தி இந்த ஊனமுற்றோர் அரவணைப்பு இல்லத்தை பற்றியும், அதிலிருக்கும் ஊனமுற்றவர்களின் வி களைப் பற்றியும், அவர்களுக்குத் தேவையானவைகள பற்றியும் மனதைத் தொடும்படியான வார்த்தைகளு யோசித்து யோசித்து, கடிதம் எழுதிக் கொண்டிருந்தா கடிதம் எழுதிக்கொண்டே இடையிடையே ஜன்னல் யாய் வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். குழந்தை விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஜன்னல் வழியாயப் பார்த்துவிட்டு 'அக்கா' என்று

ட்டிக் கொண்டிருந்தார்கள். சாம்பவிக்கு அவர்களைப் ர்த்தபோது, அவர்களின் முகங்களில் தென்பட்ட ற்சாகமே ஒரு கலையாய் தோன்றிற்று.

சாம்பவிக்கு எந்தக் காரியத்தை செய்து கொண்டிருந் லும் அவளையறியாமல் பரிஷித்தின் நினைவே வந்து ண்டிருந்தது. வீட்டில் அவன் என்ன செய்து கொண்டிருப்பானோ என்று தோன்றும். திரும்பவும் தலை தனிந்தபடி எழுதிக் கொண்டிருந்தபோது வாசலில் சந்தடி கேட்டது.

சேஷன் தட்டுத்தடுமாறிக் கொண்டே கழியால் அறை வாசலைத் தடவிப் பார்த்துக்கொண்டே வந்து கொண்டி ருந்தான். உள்ளே வந்ததுமே, "அக்கா" என்று கூப்பிட்டான்.

"என்ன சேஷன்?"

"உன்னோடு பேசணும் அக்கா."

"வா, உட்காரு, சொல்லு."

சேஷன் வந்து உட்கார்ந்து கொண்டான்.

"எங்கம்மா எனக்கு சம்பந்தம் பார்த்திருக்காங்க. கல்யாணம் நிச்சயம் செய்யறாங்க."

"அப்படீன்னால் எங்களுக்கெல்லாம் விருந்துச் சாப்பாடு உண்டுன்னு சொல்லு."

"அக்கா" தயக்கத்துடன் நிறுத்திக் கொண்டான்.

"என்ன சேஷன்? சொல்லு."

"அவள் என்னைப் பார்த்திருந்தாலும் எல்லோரும் 'குருடனின் மனைவி' என்று குறிப்பிட்டால் வருத்தப்பட நேருமோ என்னவோ? எனக்கு கல்யாணமே வேண்டாம் னால் அம்மா கேட்கலை."

"அப்படி பயப்படாதே சேஷா! நான் உங்கம்
விடம் சொல்லி, அந்தப் பெண்ணைக் கூப்பிடுகிறே
ஒரு முறை நீ அந்தப் பெண்ணோடு தனியாகப் பே
உனக்கு தைரியம் வந்தால் செய்துகொள். உன்
விரும்புகிற பெண்ணாய் இருந்தால் உன் குடு
வாழ்க்கை சுகமாய் இருக்கும்."

"என் இஷ்டத்தைப் பற்றிய பேச்சே இல்லை அக்
அந்தப் பெண்ணின் விஷயத்தைதான் தெரிஞ்சுக்கணும்

"என்னவென்று?"

"பெரியவங்களின் பலவந்தத்தின் பேரில் ஒப்
கொள்ளவில்லை என்று."

"அப்படின்னால் உங்கம்மாவைக் கூப்பிட்டுப் பே
கிறேன். பயப்படாதே. உனக்கு ஏதாவது சந்தேகம் இ
தால் உங்கம்மாவிடம் சொல்கிறேன். உன் பேச்சை
கேட்பாள்."

சேஷன் கைகளைக் கூப்பினான்- "எனக்கு
தைரியந்தான் அக்கா."

அதற்குள் போன் மணியடித்தது. சாம்பவி எடு
"ஹலோ" என்றாள்.

மறுமுனையிலிருந்து குரல் கேட்டதும் சா
சந்தோஷத்தோடு "சௌக்கியந்தான்! பேபியை
கூப்பிடட்டுமா?" என்றாள்.

"வேண்டாம். உங்க பேச்சிலிருந்தே தெரிந்துவி
பேபி எப்படி இருக்கிறாள் என்று. நான் சாயந்தி
வரேன்' —என்றான் சந்திரன்.

அவன் ஊருக்குப் போய் பதினைந்து நாட்களு
மேல் ஆகிறது. நேற்றுதான் வந்தானாம். போன
வைத்து விட்டான்.

மாலையில் சந்திரன் வந்தான். பேபிக்கும் இதர
குழந்தைகளுக்கும் பொம்மைகள், சாக்லீட்டுகள் வாங்கி
வந்தான். சாம்பவிக்கு ஒரு கைக்கடியாரத்தைத் தந்து,
"இது உங்களுக்குப் பரிசு" என்றான்.

"எனக்கா?" தயங்கினாள்.

"ஆமாம். உங்கள் கைக்கு இது ரொம்ப அழகாய்
இருக்கும்."

"நான் இந்த மாதிரி பரிசுகள் எல்லாம் வாங்கிக்
கொள்ளக் கூடாது. இது அரவணைப்பு இல்லத்தின்
விதிக்கு விரோதம்."

"ஒழிந்தோம்! இது லஞ்சத்தைச் சேர்ந்ததா என்ன?"
அவன் சிரித்தான்.

"கண்டிப்பாய் அப்படித்தான் ஆகும்" என்றாள்.

"அப்படின்னால் தரலை" சந்திரன் கைக்கடி
காரத்தை ஜேபியில் வைத்துக் கொண்டுவிட்டான்.

கொஞ்ச நேரம் இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள்.
அவன் வியாபாரத்தின் கிளையை பம்பாயில் கூட திறக்கப்
போகிறார்களாம். 'அரவணைப்பு இல்லத்தின் பிராஞ்சு'
ஒன்றைக்கூட அங்கே திறக்க வேண்டும் என்றிருக்கிற
தாம். அவனுக்குத் தெரிந்தோ தெரியாமலோ தன்னை
அறியாமல் ஒரு முறை அவன் கை அவள் மீது பட்டது.

"சாம்பவி அதைத் தவறாய் புரிந்து கொள்ளவில்லை,
மகிழ்ந்து போகவும இல்லை. அதை ஒரு எதேச்சையான
செய்கையாய் பொருட்படுத்தவில்லை. சந்திரன் போய்
விட்டான்.

மாலை ஆறரை மணிக்கு சாம்பவி ஆபீசு அறைகளை
மூடிவிட்டு, குழந்தைகளிடம் சொல்லி விட்டு, அஞ்சலை
யிடம் சாவிக் கொத்தைத் தந்துவிட்டு வீட்டிற்குப் புறப்
பட்டாள்.

வெளியே வந்து பஸ் ஸ்டாண்டில் நின்றபடி பஸ்
காக காத்திருக்கத் தொடங்கினாள். சரியாய்
ஐம்பத்தைந்திற்கு பஸ் வரும். சாம்பவி கைக்கடியார
தைப் பார்த்துக் கொண்டாள். இன்னும் ஐந்து நிமிஷ
இருந்தது வாட்சைப் பார்த்ததுமே சந்திரனின் நினை
வந்தது.

அவ்வாறு பரிசுகளைப் பெற்றுக் கொள்வது சாம்ப
யின் சுபாவத்திற்கே மாறுபட்டது. வெகுமதிகளைத் து
வேண்டுமானாலும், பெற்றுக்கொள்ள வேண்டுமானா
லும் முதலில் அப்பரிச்சியத்திற்கு ஒரு அர்த்தம் இரு
வேண்டும். அந்த வெகுமதியைப் பெற்றுக் கொண்
பிறகு அவர்களிடம் தனிப்பட்ட விநயத்தையும், சிரத்
யையும் காட்ட வேண்டியிருக்கும்.

அதற்குள் பக்கத்தில் ஏதோ வந்து நின்றாற்போல்
ஓசை கேட்டது! சாம்பவி திரும்பிப் பார்த்தாள்! எதி
காரில் சந்திரன்!

''வாங்க, இறக்கி விட்டுவிடுகிறேன்'' என்றா
கதவைத் திறந்து கொண்டே.

''நோ, தாங்க்ஸ், பஸ் வந்துவிடும்.'' என்ற
மரியாதையோடு.

''ரொம்பவும் கோழையாய் நடந்துக்காதிங்க. நா
உங்களை கிட்னாப் பண்ணிடமாட்டேன்'' என்றா
அவன் முறுவலுடன்.

சுற்றுமுற்றும் இருந்தவர்கள் ஆர்வத்தோடு பார்க்
தொடங்கினார்கள். அவன் போகும் வழியாய் தெ
வில்லை.

சாம்பவி வேறு வழியில்லாமல் காரில் ஏறி உட்கார்
கொண்டாள். கார் நிதானமாய் ஊர்வலம் போன
போல போய்க் கொண்டிருந்தது.

''நீங்கள் இந்தச் சமயத்தில் இங்கே இருப்பிங்கன்னு
தெரியும். ஒரு ஃபிரெண்டிடம் போயிருந்தேன். நேரத்
தைப் பார்த்துக்கொண்டு புறப்படலாம்னு இருந்தபோது
அவன் விடவில்லை. எப்படியோ கத்திரித்துக் கொண்டு
வருவதற்குள் சரியாய் ஐந்தே நிமிஷம்தான் இருந்தது
டயம். என் அதிர்ஷ்டத்தைப் பரிசோதிக்க எண்ணி
வாயு வேகத்தில் வந்தேன். நீங்க தென்பட்டீங்க. நான்
அதிர்ஷ்டசாலின்னுதான் நினைக்கிறேன்.'' அவன் டிரைவ்
பண்ணிக் கொண்டே காலரைத் தூக்கி விட்டுக் கொண்
டான்.

''சாம்பவி பதில் பேசவில்லை. அவன் உரிமை
எடுத்துக்கொண்ட விதத்தையும் அந்தத் தோரணையையும்
எப்படி கூடாது என்று மறுத்துச் சொல்வது என்று
புரியாமல் யோசித்துக் கொண்டிருந்தாள்.

''அது சரி, உங்களை பஸ் ஸ்டாண்டில் வந்து ஏன்
பிடிக்கணும்னு நினைத்தேன் தெரியுமா?'

''ஏன்?'' வெளியே வீதியைப் பார்த்துக்கொண்டே
எந்த உணர்ச்சியுமில்லாமல் கேட்டாள்.

''இந்த வாட்சைத் தரத்துக்கு தான். அங்கே இல்லத்
தில்தான் நீங்கள் வாங்கிக்கக்கூடாது. இங்கே வாங்கிக்
கலாமில்லையா?''

சாம்பவிக்குக் கொஞ்சம் எரிச்சல் ஏற்பட்டது. அவன்
போக்கை எப்படி வேறு வழியாய் திருப்பி விடுவது என்று
யோசித்தாள். மூஞ்சியலடித்தாற்போல மறுத்துவிட்டால்
அவனை அவமதித்ததாய் ஆகிவிடும். இவ்வளவு தூரம்
ஞாபகம் வைத்துக்கொண்டு ஸ்பெஷலாய் வாங்கிவந்தால்
என்னை நிராகரிக்கிறாயா என்று அவன் அகம் அடியுண்
டாற்போல ஆகிவிடலாம். ஒப்புக்கொள்ளவும் முடியாத
விஷயம்.

''எடுத்துக்கொள் சாம்பவி'' அவன் ஒருமையில்
விளிக்கத் தொடங்கினான்.

இன்னும் அலள் அந்த வாட்சை அவனிடமிருந்து வாங்கிக்கொள்ளக்கூடவில்லை. அதற்குள் ஒருபையன் விளிக்கத் தொடங்கிவிட்டான். வாங்கிக்கொண்டான் இன்னும் என்னவாகுமோ?

சாம்பவி தர்மசங்கடத்துடன், தான் இந்தக் காரில் ஏன்தான் ஏறிக்கொண்டோமோ என்று உதட்டைக் கடித்துக் கொண்டே வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதற்குள் நடைபாதையில் தலை குனிந்தவாறு மளமளவென்று நடந்து போய்க்கொண்டிருந்த பரிஷித் கண்ணில் பட்டுவிட்டான்.

சாம்பவி உடனே கையை வெளியே நீட்டி—''பரிஷித் பரிஷித்'' என்று கத்திக் கூப்பிட்டாள். ''கொஞ்சம் காரை நிறுத்துங்கள்'' என்றாள் உரக்க.

சந்திரனுக்குப் புரியவில்லை. தன்னையறியாமல் காரின் வேகத்தைக் குறைத்தான்.

சாம்பவி சரேலென்று கதவைத் திறந்துகொண்டு இறங்கிவிட்டாள். ஓட்டமாய் ஓடிப்போய் பரிஷித்தின் கையை அழுத்திப் பிடித்துக்கொண்டாள். சுற்றிலுமிருந்த உலகத்தோடு தனக்கு எந்தச்சம்பந்தமும் இல்லை என்றபோல நடந்து போய்க்கொண்டிருந்த அவன் சரேலென்று யாரோ ஒரு பெண்ணின் கை தன்னைப் பிடித்ததால் கோபமாய் திரும்பிப் பார்த்தான். எதிரே சாம்பவி!

''எங்கேயிருந்து வரீங்க?'' என்றாள்.

அவன் பதில் பேசவில்லை.

சந்திரன் காரிலிருந்து இறங்கி வந்தான்.

''இவன் யார்?'' என்றான்.

''பரிஷித்! அன்றைக்கு நீங்க ஆசுபத்திரியில் பார்த்தீங்களே, இவன்தான்'' என்றாள்.

சந்திரன் பரிஷித்தை புருவங்கள் நெளியப் பார்த்தான். அன்றைக்குத் தென்பட்ட அந்த எலும்புக்கூடு போன்ற உருவத்திற்கும் இவனுக்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. இவன் அப்பொழுது இருந்தாற்போல் இல்லை. கொஞ்சம் சதை பிடித்திருந்தது. அழகான கண்ணங்கள் பளபளத்தன. கண்களிலும் முகத்திலும் அவ்வளவு பலவீனம் இல்லை. உடல் நிறம்கூட மாறிவிட்டது.

''வாங்க, இறக்கி விட்டுவிடுகிறேன்'' என்றான் சந்திரன். அவன் வரமாட்டேன் என்பது போல தலையாட்டினான்.

''பரிஷித் வரமாட்டானாம். நானும் வரலை. எங்களுக்கு இங்கே கொஞ்சம் வேலையிருக்கு. தாங்க்யு வெரிமச்'' முறுவலுடன் சொன்னாள் சாம்பவி.

சந்திரனால் எதுவும் பேசமுடியவில்லை.

அவன் கார் போய்விட்டது.

''பரிஷித், எங்கேயிருந்து வர்றீங்க?'' கேட்டாள் சாம்பவி.

''எங்கேயோ ஓரிடத்திலிருந்து. உனக்கெதற்கு?''

சாம்பவி திரும்பி அவனைப் பார்த்தாள்.

திரும்பவும் என்னவாகி விட்டதோ! அவன் மிகவும் எரிச்சலுடன் இருந்தான்.

அவனை அதற்குமேல் தொந்தரவு செய்யவில்லை. அவனைப் பிடித்துக்கொண்டிருந்த கையை மட்டும் விடவில்லை. இருவரும் நடக்கத் தொடங்கினார்கள்.

மளமளவென்று நடந்து கொண்டிருந்த சாம்பவி ஆயாசமடைந்தவளாய்— ''கொஞ்சம் மெதுவாய் நடங்கள் சுவாமீ, உமக்குப் புண்ணியம் உண்டு. ஓட்டப் பந்தயத்தில் கலந்துக்கிட்டாற்போல இதென்ன ஓட்டம்?'' என்றாள். அவன் விடுவிடுவென்று நடந்து கொண்டிருந்ததை மட்டும் விடவில்லை.

16

இருவரும் வீட்டிற்குத் திரும்பி வந்தார்கள்.

மகாலிங்கம பாத்ரூமில் குளித்துக் கொண்டிருந்தார் ஏதோ பாட்டைப் பெரிதாய் பாடிக் கொண்டிருந்தார் அவர். அது அவர் பழக்கம்.

"அப்பப்பா! ஒரே தாகமாயிருக்கு" என்று சமையல் அறைக்குள் போகத் திரும்பிய சாம்பவி ஏனோ சந்தேகம் வந்து இந்தப் பக்கமாய் திரும்பினாள். பரிஷித் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொள்வதற்காக அதன்மேல் கைகளை வைத்துக் கொண்டிருந்தான்.

சாம்பவி ஒரே பாய்ச்சலாய் அவனிடம் ஓடி வந்தாள் நாய்க்குட்டியும் வேகமாய் ஓடிவந்தது. அவள் சாம்பவியைத் தள்ளிவிட்டு கதவைச் சாத்திக் கொள்ள முயன்று கொண்டிருந்தான். ஆனால் முடிய வில்லை. சாம்பவி அரும்பாடுபட்டுத் தள்ளிக் கொண்டு அவனோடு கூட அறைக்குள் வந்துவிட்டாள்.

"பரிஷித்! என்னவாயிடுத்து?" என்றாள்.

"ஷட் அப்! கெட் அவுட்."

சாம்பவிக்கு சந்தேகம் ஏற்பட்டது. அவனை பிடித்துக் கொண்டு, அவன் தள்ளினாலும் விடாமல் மேலே விழுந்து, அவன் ஜேபியைத் தேடி அதிலிருந்த போதைப் பொருளை வெளியே எடுத்தாள்.

"அங்கிள், அங்கிள்" கத்திக் கூப்பிட்டாள்.

குழாயைத் திறந்து விட்டுக்கொண்டு குளித்துக் கொண்டிருந்த அவருக்கு அந்த இரைச்சல் கேட்கவில்லை. சாம்பவி பரிஷித்திடமிருந்து தப்பித்துக்கொண்டு ஜன்னல் வழியாய் பலத்தையெல்லாம் கூட்டிக்கொண்டு வேகமாய் வெளியே விசியெறிந்தாள் அதை. போய் குப்பைத் தொட்டியில் விழுந்தது. பரிஷித் சாம்பவியை விட்டுவிட்டு, தெருவை நோக்கி ஓடப்போனான். சாம்பவி அவனைப் பிடித்துக் கொண்டு விடவில்லை. சாம்பவியை அவன் வெறிப்பிடித்தாற்போல குத்தத் தொடங்கினான். தள்ளினான். தலையைச் சுவற்றில் மோதினான். கழுத்தைப் பிடித்துத் திருகப் போனவன்—

'யூ டெவில்!" என்றான் பற்களைக் கடித்துக் கொண்டே.

நாய்க்குட்டி குரைத்துக்கொண்டே அவன் மேல் தாவப்போனபொழுது அவன் ஒரு தள்ளு தள்ளினான். வீலென்று அலறிக்கொண்டே தொலைவிலிருந்தபடியே குரைக்கத் தொடங்கிற்று. அதற்குள் மகாலிங்கம் தலையைத் துடைத்துக் கொண்டே ஏதோ பாட்டை முணு முணுத்துக் கொண்டு அங்கே வந்தார்.

அவர் அக்காட்சியைப் பார்த்துவிட்டு விக்கித்துப் போய்விட்டார்.

"பரிஷித்! இதென்ன? இதென்ன?" அவர் ஓட்டமாய் ஓடிவந்து சாம்பவியை அவன் கையிலிருந்து அரும்பாடு பட்டு விடுவித்தார்.

"சாம்பவி! என்னதான் ஆச்சு?"

அவர் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே பரிஷித் ஒரே பாய்ச்சலாய் வாசலை நோக்கி ஓட, சாம்பவி அதை யும்விட வேகமாய் பாய்ந்து சென்று அவன் இடுப்பைச் சுற்றிலும் கைகளைப் போட்டுப் பிணைத்து, "அங்கிள்!

திரும்பவும் போதை மருந்தை வாங்கி வந்திருக்கிறான். நான் பார்த்துட்டு வெளியே குப்பைத் தொட்டியில் வீசி யெறிந்துட்டேன். எடுத்துக்கப் போயிட்டிருக்கான். பிடித்துக்குங்க'' என்று கத்தினாள்.

மகாலிங்கம் ஓடிவந்து பரிஷித்தைப் பிடித்துக்கொண் டார். நாய்க்குட்டியும் அலறோடு தைரியமாய் ஓடி வந்தது. பரிஷித் அலறைத் தலையாலும் கைகளாலும் முட்டித் தள்ளினான். கால்களால் கால்களைத் தள்ளி விட்டான்.

''விடு, விடு, கொன்று போட்டுவிடுவேன் விடு''— கத்தினார் மகாலிங்கம். ''சாம்பவி! சட்டென்று போய் அந்தக் கயிற்றை எடுத்துட்டு வா'' கத்தினார்.

சாம்பவி அவ்விடத்திலிருந்த பெட்டிங்கின் கயிற்றை உருவிக் கொண்டு வந்தாள். அவர் பரிஷித்தை நகர முடியாமல் பிடித்துக்கொண்டு— ''கட்டிவிடும்மா, கட்டி விடு'' என்று உத்தரவிட்டார்.

சாம்பவி சட்டென்று கட்டிவிட்டாள்.

மகாலிங்கம் அவ்விடத்தில் துணிகளைக் காயப்போடு வதற்காகக் கட்டியிருந்த பிளாஸ்டிக் ஒயரைப் பிடுங்கி, அதனால் பரிஷித்தின் கால்களை அசையவிடாமல் கட்டிப் போட்டுவிட்டார். அந்தக் கயிற்றின் இன்னொரு முனை யைக் கொண்டுவந்து ஜன்னல் கம்பியோடு சேர்த்துக் கட்டினார். பரிஷித் அந்தச் சமயத்தில் கைதியாகி விட்டான்.

கம்பிக் கூண்டிற்குள் கட்டிப் போடப்பட்ட சிங்கத்தைப்போல அவன் திமிறினான். கடைசியில் அசதி வந்து சேர்ந்துவிட்டது. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டிற்று.

மகாலிங்கம் வாசல் கதவைச் சாத்தித் தாழிட்டு விட்டுத் திரும்பி வந்தார்.

''என்னை அவிழ்த்துவிடு. உன்னைக் கொன்று போட்டுவிடுகிறேன்'' அவன் தொண்டை கிழியக் கத்தினான்.

''பரிஷித், ப்ளீஸ்'' மகாலிங்கம் கெஞ்சினார்.

சாம்பவி உள்ளே போய் தண்ணீர் குடித்துவிட்டு வந்தாள். அவளுக்குப் பெரிய யுத்தம் செய்து சோர்ந்து போனாற்போலவும், உடம்பையெல்லாம் நன்றாய் அடித்து போட்டாற் போலவும் இருந்தது.

பரிஷித் முதலில் எல்லோரையும் பெரிதாய் திட்டி னான். கத்தினான். தன்னையே திட்டிக்கொண்டான். இந்த உலகத்தைத் திட்டினான். கத்திக் கத்திச் சோர்ந்து போய் அப்படியே உட்கார்ந்துவிட்டான்.

சாம்பவிக்கு ஏனோ அலனைப் பார்க்கையில் துக்கம் வரத் தொடங்கிற்று. அலனை மார்போடு அணைத்துக் கொண்டு, அன்பாய் எதையாவது சொல்லி அலன் துன்பத்தைத் தேற்ற வேண்டும் போலிருந்தது.

ஒரு மணி நேரத்திற்கும் மேல் ஆயிற்று.

''டோன்ட் டார்ச்சர் மீ லைக் திஸ் சாம்பவி! என்னால் இதைத் தாங்கமுடியலை. மிஸ்டர் மகாலிங்கம், கில் மீ. ஐ டோன்ட் வான்ட் திஸ் ப்ளடி லைஃப்! ப்ளீஸ் ஷூட் மீ! ஐ பெக் யூ! ஐ பெக் யூ! ஐ ஸே!'' பரிஷித்தின் கால்களையும் கைகளையும் அசைக்கவும் முடியாமல் கட்டிப் போடப்பட்டிருந்தால் கூண்டிற்குள் அடைக்கப் பட்ட சிங்கத்தைப்போல அவன் கத்தல் அல்லறையில் எதிரொலித்தது.

கொஞ்சம் தூரத்தில் சாம்பவியும் மகாலிங்கமும் நின்று கொண்டிருந்தார்கள். அலனை நோக்கி நகரப் போன சாம்பவியை மகாலிங்கம் தடுத்தார். அவள் கை அங்கிருந்த நாற்காலியை அழுத்திப் பிடித்துக் கொண்டது. அவள் தன் உணர்ச்சிகளை பலலந்தமாய் அடக்கிக்

கொண்டது தொண்டைக் குழியில் அதிர்ந்து கொண்டு குந்த நரம்புகள் மூலம் தெரிந்தது.

''ஆல்ரைட்! நீங்கள் என்னைக் கொல்ல மாட்டீங்க, என்னை சுதந்திரமாய் எனக்குப் பிடித்தாற்போல வாழவும் விடமாட்டீங்க.'' என்று திடீரென்று தலையைச் சுவற்றில் மோதிக்கொள்ளத் தொடங்கினான்.

மகாலிங்கத்தின் கையை உதறிவிட்டு, ஒரே பாய்ச்சலாய் சாம்பவி அவனிடம் ஓடிவந்தாள். அவன் தலையை இழுத்து மார்போடு அணைத்துக்கொண்டே, ''பரிஷித்! நீங்க உயிரோடிருக்கணும். எனக்காக! நம்மிருவருக்காக நீங்கள் 'புனர்ஜென்மம் எடுக்க வேண்டும்'' —ஆவேசமாய் சொல்லிக் கொண்டேபோன அவள் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் உதிர்ந்தது.

''சாம்பவி! என்னால் இந்த நரகத்தைத் தாங்க முடியலை'' அவன் சொன்னான்.

மகாலிங்கம் டாக்டருக்காக ஓடினார்.

நாய்க்குட்டி கூட பரிஷித்தைத் தேற்றுவதுபோல காலைத்தூக்கி அவன் மேல் வைத்து, லொள் லொள் என்று குரைத்தது.

17

மூன்று நாட்கள் கழிந்தன.

காரிருள் நிரம்பி வழிந்த அவ்வறையில் சுவிட்சைத் தட்டிய ஓசை கேட்டது. தொடர்ந்து சின்ன மேஜை விளக்கின் வெளிச்சம் அறையில் பரவிற்று. அறையில் தரையில் படுத்துக் கொண்டிருந்த பரிஷித் சட்டென்று அந்த வெளிச்சத்தைத் தாங்க மாட்டாதவனாய் முழங்கையால் முகத்தை மூடிக்கொண்டான்.

''வேண்டாம்! லைட்டை அணைத்து விடு.''

''எவ்வளவு நாளைக்குதான் இந்த இருட்டுக் குகைக்குள் இருப்பீங்க?'' சாம்பவி கேட்டாள்.

அவன் பதில் பேசவில்லை. பேச சக்தியில்லாதவனாய் முடங்கிக் கொண்டு படுத்திருந்தான். அவன் உடம்பு அந்த விளக்கு வெளிச்சத்தை விட்டு ஓடிப்போக விரும்பி முடங்கிப் போனாற்போல தோன்றிற்று.

''மொதல்ல அந்த லைட்டை அணை'' அக்குரல் அலறலாய் இருந்தது.

சாம்பவிக்கு அவன் படும் பாட்டைப் பார்த்தபோது கண்களில் கண்ணீர் கசியத் தொடங்கிற்று. அவன் துன்பத்தைக் காண சகிக்காதவளாய் விளக்கை அணைத்து விட்டாள். ஜன்னல் வழியாய் வந்து விழுந்த குருட்டு நிலா வெளிச்சம் அவன் மீது பட்டுக்கொண்டிருந்தது.

சாம்பவி அவனுக்கருகில் வந்து தரையில் உட்கார்ந்து கொண்டாள். அவன் தோளில் கை வைத்தாள். அவள் முகத்தை மூடிக்கொண்டிருந்த பூழங்கையை எடுத்தாள். அவன் கண்கள் இருண்ட குகைக்குள் சுற்றிவரும் ஜந்துவை போல இப்பொழுது தான் கொஞ்சங் கொஞ்சமாய் அந்த நிலா வெளிச்சத்திற்குப் பழக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

''பரிஷித்! நீங்கள் முயற்சி பண்ணினால் இந்த நரகத்திலிருந்து வெளியேற முடியும்'' பரிவோடு சொன்னாள். அவள் குரலிலிருந்த பரிவுதான் காரணமோ, அல்லது அவள் ஸ்பரிசத்திலிருந்த அன்புதான் காரணமோ, தெரியாது. அவன் உடனே அவள் மடியில் ஒண்டிக் கொண்டு, அவள் மார்பில் தலையைப் புதைத்துக் கொண்டான்.

''சாம்பவி! எனக்குத் தெரியும் இந்த உலகத்தில் நிலா வெளிச்சம் எவ்வளவு அழகாய் இருக்கும் என்றும்—சூர்யோதயம் கண்களுக்கு எவ்வளவு அருமையாய் இருக்குமென்றும். ஆனால் அதன் அழகுகளையெல்லாம் பார்த்து மகிழக்கூடிய பரிஷித் இல்லை நான். நான்...நான் ஒரு நடைப்பிணம்!'' ''அவன் சட்டென்று அழுதுவிட்டான். ''ஐ வான்ட் டு டை! ஐ வான்ட் டு டை!'' அவன் துக்கம் வெள்ளமாய் பொங்கி அவன் உடலை வாட்டிக் கொண்டிருந்தது. சாம்பவியின் கை அவன் தலையைத் தடவிக்கொடுக்கத் தொடங்கிற்று. அந்த இதமான ஸ்பரிசம் அதளபாதாளத்தில் இருந்த அவனுக்குக் கை கொடுத்தாற் போலிருந்தது.

''பரிஷித்'' அன்போடு வந்த அவ்வழைப்பு இருண்ட குகைக்குள் சிறு தீபத்தை ஏற்றிவைத்தாற்போல இருந்தது.

''பரிஷித்'' திரும்பவும் கூப்பிட்டாள்.

அவன் தினமாய் சொன்னான்—''சாம்பவி! எனக்கு இதிலிருந்து மீளவேண்டும் என்றுதான் இருக்கிறது. ஆனால்...ஆனால் என்னால் முடியவில்லை! என்னால்

தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஒரு பக்கத்தில் இந்த நினைத்தை விடவும் முடியவில்லை. இன்னொரு பக்கத்தில் எனக்காக இவ்வளவு பண்ணுகிற உங்களை வருத்தப் படுத்தவும் முடியலை. என் வேலை நிசங்கு சொர்க்கமாய் இருக்கிறது.''

சாம்பவி அவன் முகத்தோடு முகத்தைச் சேர்த்துக் கொண்டு அவன் செவிக்கருகில் மெல்லிய குரலில்,

''பரிஷித்! நீங்கள்... நீங்கள் கொஞ்சம் பொறுத்திருந்தால் போதும். டாக்டர் சொல்லலையா? இந்தத் துன்பம் இப்படித்தான் இருக்கும் என்றும், இதைப் பொறுத்துக் கொண்டுவிட்டால் கொஞ்ச நேரத்தில் 'தவிப்பு' குறைந்து விடும்னும் சொன்னாரில்லையா?''

''கொஞ்ச நேரமா? எவ்வளவு நேரமாய் இந்த துக்கத்தைத் தாங்கிட்டிருக்கேன் தெரியுமா?''

''ஆமாம்; பரிஷித்! நிஜந்தான்! நீங்கள் பொறுத்துட்டிருக்கீங்கதான்! என்னாலேயே இதைக் கண்ணால் பார்க்கமுடியலையே! ஆனால் ஒன்றை மட்டும் நன்றாய் நினைவில் வைச்சிக்கிங்க. இந்தத் துன்பத்தைப் பொறுத்துக்கிட்டால் அப்புறமாய் வரப்போற சந்தோஷத்தைப் பற்றி யோசித்துப்பாருங்க. நீங்கள் மெதுவாய் பழைய நிலைக்காக மாறுவதற்கு அவகாசம் கிடைக்கும். இந்தப் பழக்கம் ஒரு நாளில் வந்ததில்லை அல்லவா? இதை விடணும் என்றால் நீங்கள் நிறைய பொறுத்துக்க வேண்டும். ஆனால் இது மரண வேதனை அல்ல. அதிலிருந்து விடுபடுவது. அதை நன்றாய் ஞாபகத்தில் வைச்சிக்குங்க.''

''சாம்பவி! என்னை விடு! பார், எனக்கு விக்கல் வருது! என் உடம்பில் அணுவணுவும் நொருங்கிப் போயிட்டிருக்கு! உனக்குத் தெரியாது, எவ்வளவு சித்திரவதையை அனுபவிச்சுட்டிருக்கேன் தெரியுமா?''

''எனக்குத் தெரியும் பரிஷித்'' எழுந்திருக்கப் போ
அவனை அசையாமல் அழுத்திப் பிடித்துக் கொண்டு
சாம்பவி.

''விடு என்னை.''

''மாட்டேன்.''

''சாம்பவி! சொல்றேன், என்னால் முடியாது.''

சாம்பவி பதில் பேசவில்லை. அவனை அழுத்தமா
அணைத்துக் கட்டிக் கொண்டாள். அவன் திமி
கொண்டிருக்கையில், சட்டென்று சாம்பவி அவன் நெ
யில் முத்தமிட்டாள்! ''நல்லவரோனோ! பரிஷித் ரொ
வும் நல்லவர். சாம்பவி சொன்னதைக் கேட்பார். இந்
துன்பத்தைப் பொறுத்துப்பார். அது பரிஷித்துக்
இல்லை, சாம்பவிக்காக! ஏன் என்றால் பரிஷித்தும் சா
பவியும் நல்ல சிநேகிதர்கள். சிநேகிதர்களுக்காகசேட்ட
செய்யணுமில்லையா?'' சாம்பவி வாயில் வந்த வார்த்
களை ஏதேதோ பேசிக் கொண்டே அவன் முகத்தைபே
லாம் முத்தங்களால் நிரப்பினாள்.

பரிஷித் திடீரென்று நிசப்தமாகி விட்டான். அ
உடம்பிலிருந்த தவிப்பும், போராட்டமும், மெல்ல மெ
சாம்பவியின் உதடுகளின் சக்திகளின் சக்திக்கு முன்ன
ஆதரவின்றி பலமிழந்து விட்டாற்போல குறை
போகத்தொடங்கின.

'பரிஷித்! இது நமக்குப் பெரிய சோதனை! இ
சோதனையில் நாமிருவரும் வெற்றிபெறணும். நான் உ
னுக்குத் துணையாய் இருக்கிறேன். பரிஷித். நாமிரு
ஒன்று. உங்களால் இதைத் தாங்கிக்க முடியும். அந்த ச
உங்களிடம் இருக்கிறது. எனக்குத் தெரியும்'' எ
பரிஷித்தின் தலையை மார்போடமுத்திக் கொண்டு
முகத்தோடு அவன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்

பரிஷித் விநோதமான முறையில் சாந்தமடைந்தான்.
வன் உடம்பில் பதற்றம் குறைந்தது. சிறு குழந்தையைப்
பால அவள் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்
ான். அவனுக்கு விக்கல்கள் எடுத்துக் கொண்டிருந்தன.
ம்முறை அவன் தன்னால் தாங்கிக்கொள்ள முடியாது
ன்று பழியைப் போடவில்லை. அந்தத் துன்பத்தைத்
ங்கிக்கொள்ளும் சக்தி ஏதோ ஏற்பட்டு விட்டாற்
பால— அந்த நரக வேதனையை அனுபவித்துக் கொண்டி
ந்த உடல் தன்னுடையதில்லை என்றாற்போல—
சாமலிருந்தான்.

சாம்பவி அவன் நகர இடங்கொடுத்தால் எங்கே திரும்
ும் ரகளை செய்வானோ என்றெண்ணிக் கொண்டு
ப்படியே உட்கார்ந்திருந்தாள்.

''சாம்பவி! எனக்கு இது- ரொம்பவும் சுகமாய்
ுக்கு'' என்றான் முணுமுணுப்பது போல.

''அப்படீன்னால் அப்படியே நகராமல் இருங்க.
ங்க முயற்சி பண்ணுங்கள். உங்க மனதில் போதைப்
ாருளை சாப்பிடவில்லை என்ற யோசனையை விட்டு
ட்டு வேறு எதையாவது யோசியுங்கள்.''

''ஊஹூம், எதையும் யோசிக்கப் பிடிக்கலை.''

''அப்படீன்னால் இப்படியே இருங்க பின்னே.'' அவன்
லையைத் தடவினாள். வெதுவெதுப்பான அவள்
ர்பில், அவள் கையின் ஸ்பரிசத்தில், அவளுடைய
ிமையான ஆறுதல் மொழிகள், எல்லாம் சேர்ந்து
ஷித்திற்கு அவனையறியாமல் ஏதோ பலம் வந்து
ந்து விட்டாற்போலிருந்தது. அவனுள் சதா குமுறிக்
ண்டே அமைதியில்லாமல் கொழுந்து விட்டெரிந்துக்
ண்டிருந்த அக்னி ஏதோ அவள் முன்னிலையில்—
ன் மடியில் குளிர்ந்துபோய் கொண்டிருந்தாற்போல
ன்றத் தொடங்கிற்று. அவ்விடமெல்லும் நிசப்தம்.
நிசப்தத்திலிருந்து அவள் ஸ்பரிச அவனுக்குள்ளே

கோலாய் எழுந்தது. பரிஷித் அவள் இடுப்பைச் சு
கைகளைப் போட்டு இறுக்கமாய் கட்டிக் கொண்ட

இருவரும் வெகுநேரமாய் அப்படியே உட்கார்ந்
தார்கள்.

18

நேற்றிரவு அச்சம்பவத்திற்குப் பிறகு மறுநாள் சாம்பவி காபியைக் கொண்டுவந்து கொடுத்தபோது, மிக சங்கோஜத்துடன் அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்க முடியாதவனாய் தப்புப்பண்ணிவிட்டவன் போல—தலையைத் திருப்பிக் கொண்டுவிட்டான். அவள் பிடக் கூப்பிட்டபொழுதும் வரவில்லை.

''ஏன்?'' சாம்பவி வந்து கேட்டாள்.

''பசிக்கவில்லை.''

சாம்பவி அவனிடம் வந்தாள், அவன் உள்ளங்கைகளால் பொத்திக்கொண்டிருந்தாள்.

''பரிஷித், சாப்பிட வாங்க.''

அவன் பதில் பேசவில்லை. சாம்பவி அவன் பிடித்துத் [illegible] நிறுத்திவிட்டு — ''நீங்க விட்டால் [illegible]ம் சாப்பிடப் போவதில்லை. செ[illegible]றாள்.

அவன் நிமிர்ந்து பார்த்தான்.

அவன் கண்களைப் பார்த்த சாம்பவி திடுக்கிட்டாள். விவரிக்க முடியாத வேதனையில் ஆழ்ந்திருந்தன அக்கண்கள்.

''என்னவாச்சு?'' என்றாள் அவன் கண்களைக் கூர்ந்து பார்க்க முயன்றபடி.

''என்னை... என்னைக் கண்டால் அருவருப்பாய் இல்லையா?'' அவன் மிகத் தாழ்ந்த குரலில் கேட்டான்.

''அருவருப்பா? எதற்கு?''

''என்னவோ! எனக்குத் தெரியாது. என்னைக் கண்டால யாருக்குமே பிடிக்காது'' அவன் திரும்பவும் தலை குனிந்தான்.

சாம்பவி அவன் தலைமேல் கையை வைத்தாள்.

''ஏன் அப்படி நினைக்கிறீங்க? ஒரு முறை ஞாபகப் படுத்திக்குங்க. உங்களைப் பிடிக்காமல் தான் அங்கில் உங்களுக்காக அவ்வளவு தவிக்கிறீரா? உங்கள்மேல் இஷ்டம் இல்லாமல் தான் நான் இப்படி சிநேகமாய் இருக்கிறேனா? ஒருமுறை நீங்களே யோசித்துப் பார்த்துக் கொங்க.''

சாம்பவி கையைப் பிடித்து இழுத்தாள் — ''பரிஷித் சாப்பிடலாம் வாங்க ப்ளீஸ், நான் உங்களுக்காகக் காத்திட்டிருக்கேன். எனக்குப் பசிக்கிறது.''

அவன் எழுந்து வந்தான். மௌனமாய் சமையல் அறைக்குள் வந்து, டைனிங் டேபிள் மீது தட்டுக்களை வைத்து, தண்ணீரை எடுத்து வைக்கத் தொடங்கினான். சாலிங்கம் பண்ணிவந்த வேலைகளைத்தான் அவன் செய்தான். சாம்பவி அவனையே கலவிக்கத் தொடங்கினாள். தட்டுக்களைக் கழுவியதிலும் அவற்றைத் துடைத்துக் கவிழ்த்து வைத்ததிலும் அவனுக்கு அலை

பழக்கப்பட்ட வேலைகளாய் தோன்றின. ஒருக்கா
இவன் ஏதாவது ஓட்டலில் சர்வராய் வேலை செய்திரு
பானா? ஆனால் சர்வர்கள் பண்ணும் வேலை மகா
கத்தைப் போல, தன் வேலையைத் தான் பண்
கொள்ளும் விதமாய் இருந்தது.

இருவரும் உட்கார்ந்து சாப்பிட்டார்கள். ''ஆ
அது உருளைக்கிழங்கு சாம்பார். அது உங்களுக்கு வே
டாம், இந்தக் கீரை உங்களுக்கு'' என்றாள்.

சாம்பவி அவனுக்காக எளிதில் ஜீரணமாகக்கூ
கீரைகளை வாங்கி வருவாள். தினமும் கீரையைக் கள்
பாய் சமைப்பாள்.

அவனுக்கு இப்பொழுதுதான் சில நாட்களாய்
பிட்ட ஆகாரம் செரிக்கத் தொடங்கியிருந்தது.
யெடுக்கத் தொடங்கியிருந்தது. சாம்பவி இரண்டு நாட்
தானாகவே வலியப் பேசி அவன் பயத்தைப் போக்
தான். பரிஷித் சாதாரண மனிதனாய் மாறத் தொ
கினான்—

அன்று ஹோலிப் பண்டிகை. பக்கத்து
மராட்டிச் சிறுவர்கள் கலர் நீரை வாறியிறைத்துவி
போனார்கள் வீடு வீடாய் ஏறியிறங்கி. பரிஷித்
சாம்பவியின் மீதும்கூட கலரைப் பூசிவிட்டுப் போ
டார்கள். பரிஷித் யோசனையில் ஆழ்ந்துவிட்ட
பார்த்து, ''என்ன யோசிக்கிறீங்க'' கேட்டாள் சாம்

''மனிதனின் மூஞ்சியில் நிறத்தைப் பூசி எல்
விகாரமாக்கி விடுகிறது உலகம்னுதான் யோசி
டிருந்தேன்'' என்றான்.

சாம்பவி நிமிர்ந்தாள் — ''அட! அங்கிள்
இங்கே இருந்திருந்தால் கை தட்டியிருப்பார்
ஹியர்''— என்று தானே கைதட்டினாள். ''புஜ்ஜி
பரிஷித்திற்கு சல்யூட் பண்ணு'' என்றாள்
குட்டியைப் பார்த்துத் திரும்பி.

நாய்க்குட்டியின் முகத்திலும் கலர் பௌடர் கண்ணில்
பட்டிவிட்டிருந்ததால் காலைத் தூக்கி முகத்தைக் கீறக்
தொண்டது. அதைப் பார்த்து சாம்பவி பக்கென்று
சிரித்துவிட்டாள்.

''சல்யூட் பண்ணு புஞ்ஜி'' என்றாள்.

''எப்படிப் பண்ணும்? அதன் அவஸ்தையில் அது
இருக்க'' பரிஷித் குளிப்பதற்காக பாத்ரூமிற்குள் போய்
விட்டான்.

அவன் குளித்துவிட்டுத் திரும்பி வந்தபோது அவன்
கட்டிலின் மீது புதுச்சட்டையும் பேண்ட்டும இருந்தன.

''இதென்னது? இலை ஏது?'' என்றான்.

''அங்கிள் தைத்தார். அதுமட்டுமில்லை இதோ''—
லமாரியைத் திறந்து ஹாங்கரில் இருந்தவைகளையும்
ட்டினாள்.

''இவ்வளவா? எனக்காக இவ்வளவு எதுக்கு செலவழிக்
னும்?'' என்றான் அவன் அலுத்துக்கொண்டே.

''அது அவர் சந்தோஷத்திற்காகத்தான்''— சாம்பவி
இரு செவிகளையும் திருப்பிக் காட்டிக்கொண்டே—
''பரிஷித்! நேற்று அங்கிள் எனக்கு இந்த ஜிமிக்கியை
வாங்கி வந்தார். நான் மறுக்கவில்லை சந்தோஷமாய்
போட்டுக் கொண்டேன். ஏன் தெரியுமா? அவர் நம்மை
ரு தந்தையைப்போல பாவிக்கிறார். நாம்ப வாங்கிக்
கொள்வதில் தப்பில்லை. அவரை நாமும் தந்தையாய்
ன்போடு பார்த்துக்கொண்டால் போதும். அவர் அதைக்
ட வேண்டும் என்று கேட்கவில்லை நாம்பதான் புரிந்து
கொண்டு வழங்க வேண்டும்.

பரிஷித், உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ
னக்குத் தெரியலை. ஆனால் எனக்கு நன்றாய் புரிந்தது
ன்னவென்றால் அங்கிளைப் போன்ற நல்ல மனம்

படைத்த மனிதர் நம்மை விரும்புலது நம்ப அதிர்
தான். நீங்கள் அப்படி நினைக்கிறீங்களோ இல்லை
எனக்குத் தெரியாது. ஆனால் நான் மட்டும் அப்
தான் நினைக்கிறேன்— அலமாரிப் பக்கமாய் தி
அங்கு வைத்திருந்த தன் உடைகளை எடுத்துக் கொ
போய் விட்டாள் சாம்பவி. அந்த வீட்டில் இரு
ஒரே ஒரு அலமாரிதான். அதில்தான் சாம்பவியு
உடைகளும், மகாலிங்கத்தின் உடைகளும், பரிஷி
உடைகளும் வைக்கப்பட்டிருந்தன.

சாம்பவி போன பிறகு பரிஷித் ஒரு நிமிஷம்
மாய் யோசிக்கத் தொடங்கினான். பிறகு என்ன நி
தானோ தெரியாது, தன் உடைகளை எடுத்துப் போ
கொண்டான். கொஞ்சம் லூசாக இருந்தாலும்
கலே தைக்கப்பட்டிருந்தது

ஒரு மணி நேரங்கழித்து மகாலிங்கம் வ
சாம்பவிகூட அதற்குள் குளித்து முடித்துவிட்டுத் த
சரம் காய வைத்துக்கொண்டிருந்தாள்.

நாய்க்குட்டியைக்கூட குளிப்பாட்டியிருந்தாள்.
வெயிலில் படுத்தபடி உடம்பைக் காய வைத்துக்
டிருந்தது

''இதோ சமையலை முடித்துவிடுகிறேன் அ
இந்தப் பசங்கள் வந்து என்னைக் குழப்பிட்
வீட்டை சுத்தம் பண்ணி, நான் 'குளித்துவிட்டு வர
தாமதமாயிடுத்து'' என்று சமையலறைக்குள் போ

பரிஷித் அறையிலிருந்து வெளியே வ
மகாலிங்கம் புத்தாடை உடுத்திக்கொண்டு நீட்
இருந்த அவனைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த
அப்படியே நின்றுவிட்டார். தலைக்குக் குளித்த
நீட்டான உடையுடன், சுத்தமாய் இருந்த இந்த
திற்கும், அந்த மாசடைந்த தாடியுடன் கந்தல் து
னிருந்த பரிஷித்திற்குந்தான் எத்தனை வித்தி

உடல் நலமின்மையால் நலிந்துபோயிருந்த அவன் தோள்கள் இப்பொழுது கொஞ்சம் உடம்பு தேறி பலம் கூடி இருந்ததால் செழுமையாய் இருந்தன.

''குட்மார்னிங் அங்கிள்'' என்றான் அவன்.

''குட்மார்னிங், வெரிவெரி குட்மார்னிங் பரிஷித்.''

அவர் சந்தோஷ மிகுதியால் கிட்டே வந்து பரிஷித்தின் கையைப் பிடித்துக் குலுக்கினார்.

''தாங்க்யூ'' என்றான் பரிஷித்.

''எதுக்கு?'' வியப்போடு கேட்டார்.

''இவற்றை எனக்குத் தந்ததற்கு'' உடைகளைக் காட்டினான்.

''அடடா! இதென்னது? இதற்குப் போய் தாங்க்ஸ் சொல்றதாவது? நீ என்ன எனக்கு வேற்று மனுஷனா? பரிஷித் என்னை வேற்று மனுஷனாய் பார்க்காதே. தெரிந்ததா? எனக்கு எப்பவாவது தாங்க்ஸ் சொன்னாயானால், நான் அதை அவமரியாதை பண்ணியதாய்—என் கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டதாய் தான் எடுத்துப் பேன். நீ இன்னும் எனக்கு அது வேணும் இது வேணும்னு கேட்டாயானால் எனக்கு இன்னும் சந்தோஷமாய் இருக்கும்.''

சாம்பவி அங்கே வந்தாள் அவருக்கு பி பி இருந்ததால் சந்தோஷம் வந்தாலும் வருத்தம் வந்தாலும் படபடப்பு வந்துவிடும். அவரை அந்த மாதிரிய சமயங்களில் எதையோ ஒன்றைச் சொல்லி சாந்தப்படுத்துவாள்.

''அங்கிள்! இன்றைக்குச் சாப்பாடடில் ஸ்பெஷலாய் ஏதாவது பண்ணட்டுமா? என்ன வேணும் சொல்லுங்கள்'' என்றாள்.

''பரிஷித்தைக் கேளு'' என்றார் அவர். திரும்பவும் அதே சந்தோஷத்தோடு உற்சாகமாய்—''நோ! இன்றைக்கு

நாம்ப இண்டோர் இல்லை அவுட்டோருக்குப் போவோ
சமைக்கத் தேவையில்லை. ஓட்டலுக்குப்போய்ச் சாப்பி
லோம்'' என்றார்.

''எதுக்கு அங்கிள்? நிமிஷத்தில் சமைத்து விடுவே
நான்'' என்று சொல்லப் போனபோது அவர் ஆள்காட்
விரலைக் காட்டினார்—''நோ! எ பிக் நோ! நாம்
ஓட்டலுக்குப் போய் செலபிரேட் பண்ணிக்க வேண்டியது
தான்.''

''செலபிரேஷனா?''

''ஆமாம்.''

''எதுக்கு?''

''நான் ரொம்பச் சந்தோஷமாய் இருக்கிறேன்.
அவர் பரிஷித் தோளைச் சுற்றிக் கைகளைப் போட்டபடி
சொன்னார்.

''அங்கிள், நான் முன்பே சொல்லிட்டேன். எனக்
ஐஸ்க்ரீம் வேண்டும்'' என்றாள் அவள்,

''நீங்க ரெண்டுபேரும் எதைக் கேட்டாலும் தரேன்
வாங்க''—என்றார் அவர் ஆனந்தமாய்.

19

முவரும் ஓட்டல் 'நியூலாண்டிற்கு வந்தார்கள். சாம்பவியையும் பரிஷித்தையும் தன் இரு பக்கத்திலும் உட்காரவைத்துக்கொண்டு சாப்பிட்டார் அவர். இன்றைக்கு ஏனோ தெரியவில்லை, வாழ்க்கையிலேயே மிக ஆனந்தமாய் திருப்தியாய் சாப்பிட்டாற்போலிருந்து அவருக்கு. சாப்பிட்டு முடிக்கும் வரை தன் மிலிடெரி வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்களையும் ஜோக்குகளையும் சொல்லி அவ்விருவரையும் சிரிக்கவைத்துக் கொண்டிருந்தார்.

அதற்குள் புலுபுலுவென்று நான்கு பெண்கள் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். ''ராதிகா! நம்ப ஃபேவரெட் ஸ்பாட் இது. நாம்ப இங்கே உட்கார்ந்துக்கலாம்'' என்றாள் ஒரு பெண்.

''ஓ. கே.'' என்றாள் ராதிகா. அவ்விருவரும் ஒருவரையொருவர் மிஞ்சும்படியாய் போட்டி போட்டுக் கொண்டு தலை, உடை, நகை அலங்காரங்களில் திகழ்ந்தார்கள். பக்கத்து மேஜைகளில் உட்கார்ந்தவர்கள் எல்லோரும் இப்பெண்களின் பக்கமாய் திரும்பிப் பார்க்கும்படி செய்தன அவர்களின் அட்டகாசமான பேச்சுக்கள்.

''ராத்திரி பார்ட்டியில் லேட்டாயிடுத்துன்னு எங்க மம்மி திட்டினாங்க ராதிகா'' ஒரு பெண் புகார் சொன்னாள்.

"ரூபா! நீ ஒருமுட்டாள்! உங்க மம்மியை உன் வ
கையை அப்படி ரூல் பண்றத்துக்கு விட்டு விட்டு
நானாயிருந்தால் எங்க மம்மியை எதுக்குமே ஆலோச
கேட்கமாட்டேன். நான் எங்க வீட்டில் யாருக்
கட்டுப்படமாட்டேன். அப்படிப் பார்த்துப்பேன்
கிரதையாய். எங்க மம்மிக்கு என்னைக் கண்டா
உதறல். ஏன்னால் வீட்டில் சாப்பிடாமலிருந்து
வேன்னு பயம்" என்றாள் ராதிகா. "பேரர்..." எ
கூப்பிட்டு எல்லோருக்கும் ஐஸ்கிரீம் ஆர்டர் தந்தாள்.

"போதும், உங்க மம்மி சங்கதியை என்
சொல்லாதே. எங்க வீடுங்களுக்கெல்லாம் போன் பண்
எங்க அம்மாக்களோடெல்லாம் சண்டைபோட்டு, நா
என்னவோ உன்னைக் கெடுத்துட்டிருக்கோம்னு பு
சொல்லி எங்களுக்குத் திட்டு வாங்கித் தந்துடுவா
உனக்கேதிரே, என்னவோ 'அம்மா, கண்ணு' எ
பாங்க."

"அவங்க தந்திரம் எனக்குத் தெரியும். அதனால்தா
எனக்கு போர். ஐஹேட் ஹெர். அதனால்தான் அவ
ளோடு எனக்குச் சரிப்பட்டே வராது' என்றாள் ராதி

"ராதிகா! உனக்கென்னம்மா! நீ என்னவே
மானாலும் சொல்லு, உங்க மம்மியும் டாடியும் உன்
எதிர்த்துப் பேசமாட்டாங்க உனக்குப் பிடிக்காத காரி
தைப் பண்ணத் துணிச்சல் இல்லை அவங்களுக்கு. எ
மம்மியும் டாடியும்தான் இருக்காங்களே. அப்பப்
அவங்களோட பெரிய கஷ்டந்தான். எனக்குத் தெரியா
எங்க அத்தை மகனோடு என் கல்யாணத்தை செய்
டிருந்தாங்க அது தெரிஞ்சு. நான் நன்றாய் சண்
போட்ட பிறகு தான் விட்டாங்க".

"அது உன் தப்பு மேன்! கல்யாணம் டண்ணிக்
போறது நாம்பளா அவங்களா? அவ்வளவு தூர
அவனைப் பிடிச்சிருந்தால் போய் அவங்களே

பண்ணிக்கச்சொல்லு. கல்யாணம் என்றால் அவங்களைப்
போல கட்டுப்பெட்டியாய் பெரியவங்க பார்த்து வெச்ச
மேல்களைக் கட்டிக்கறத்துக்கு நாம்ப என்னவோ
படிப்பறிவில்லாத ப்ரூட்ஸுகள்னு நினைச்சுட்டாங்க
போலிருக்கு"— என்றாள் ராதிகா தீவிரமாய்.

ராதிகாவைப் பார்த்தால்— அப்பெண் பேசும்
தோரணையையும், எஞ்சிய எல்லோரும் ஆர்வத்துடன்
ரித்தையாய் கேட்டுக் கொண்டிருந்த விதத்தையும் பார்த்
தால் அந்தக் கும்பலுக்கு அவள்தான் லீடர் என்று தோன்
றிற்று.

இன்னொரு பெண் சொன்னாள்— "எங்க வீட்டிலும்
கூட இதே தொல்லைதான். என்னை விரும்புகிற ஒருத்தன்
டைத்தால் பண்ணிப்பேன். இல்லாவிட்டால் எனக்குக்
கல்யாணமே வேண்டாம், படிக்கிறேன்னு சொல்லிட்
டேன். எங்க பாட்டி ஒரே ரகளை— கல்யாணமே
பண்ணிக்காம இப்படியே இருந்துடப் போகிறாயான்னு!
அவங்களுக்கு பன்னெண்டு வயதில் கல்யாணமாச்சு.
பத்துக் குழந்தைகளைப் பெத்தெடுத்தாங்க. நானும்
அப்படியே செய்யணும்னு அவங்க தவிப்பு. பெண்
களுக்கு கல்யாணம், குழந்தைகள்தான் முக்கியம்மா என்று
என்னையே சுற்றிச் சுற்றி வருவாங்க."— ரூபா சொன்
னதைக்கேட்டு எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

"எனக்குப் பிடிச்சவனை யாரிடமும் சொல்லாமல்
கொள்ளாமல் பண்ணிக்கிட்டு, எங்க வீட்டிலிருக்கிற
வங்களுக்கெல்லாம் ஷாக் ட்ரீட்மெண்ட் தரப்போறேன்"
என்றாள் ராதிகா.

"எங்களுக்குக்கூடவா சொல்லமாட்டாய்?" என்றாள்
கல்யாணி.

"ராதிகா சொல்லணுமா என்ன? நமக்கா தெரியாது?
அந்த ஆள் ப்ரதீப்தானே?"

"இப்பல்லாம் ராஜேஷ்கூட ரொம்பவும் ஆசைப்
கிறான் இல்லே?" என்றாள் இன்னொருத்தி.

"அப்படீன்னால், இவ்வளவு சிநேகமாயிருந்தும்
நமக்கும் சல்பெண்ஸ் தான்னு சொல்லு" என்றாள்
அதைக் கேட்டு எல்லோரும் திரும்பவும் சிரித்தார்கள்.

பையன் சாப்பாடு கொண்டு வந்தான். பரிஷி
சாம்பவி, மகாலிங்கம் மூவரும் சாப்பிட்டு முடித்தார்க
சாம்பவி உடனே கைப்பையைத் திறந்து பரிஷித்திற்
வேண்டிய மருந்துகளை எடுத்துத் தந்தாள், அதை
பார்த்து மகாலிங்கம் மகிழ்ந்து போனார். "பார்த்தாயா
பரிஷித்? நான் சந்தோஷம் வந்தாலும் கோபம் வந்தாலு
நான் பண்ணவேண்டிய வேலைகளை மறந்து போயி
வேன். சாம்பவி அப்படி இல்லை" என்றார் புகழ்ச்சியாகி

பரிஷித் சாம்பவி தந்த மருந்துகளைச் சாப்பிட்டான்
மறுப்புச் சொல்லாமல்.

மகாலிங்கம் பையனிடம் பில்லைக் கொண்டு வர
சொன்னார்.

பரிஷித் எழுந்து வெளியே போனான்.

மகாலிங்கம் கலக்கத்தோடு பார்க்கவே, சாம்பவி-
"பயப்படாதீங்க அங்கிள். பரிஷித் எங்கேயும் போயிட
மாட்டான்னுதான் நினைக்கிறேன்" என்றார்.

பக்கத்து மேஜையிலிருந்த ராதிகா முதலியவர்கள்
அம்மாக்களைப் பற்றி காமண்ட் ஏதேதோ அடித்துக்
கொண்டிருந்தார்கள் திரும்பவும். மகாலிங்கம் சாம்பவி
யிடம் மெல்லிய குரலில்—

"இவங்களுக்கு அம்மாக்களைப் பற்றித் தவிர வேற
எந்த டாப்பிக்கும் கிடையாது போலிருக்கு. பாரும்மா!
அந்த நடை உடை பேச்சுக்களில் மட்டுந்தான் வேறுபாடு.
மனங்களில் இவ்வளவு வெறும் மாமிகள்!"

இந்த வயதிலிருந்தே ஒருத்தரைப்பற்றி இன்னொருத்
தருக்குச் சொல்லிக் கொள்வது—அதில் மகிழ்ந்து போவது
இதெல்லாம் தொடங்கிடுத்து. அங்கே பெரியவங்களோ
சம்பிரதாயம் அது இதுன்னு கழுத்தறுப்பாங்க! இங்கே
சின்னவங்களோ நாகரீகத்தின் மோகத்தில் திளைத்துட்டி
ருப்பாங்க! மொத்தத்தில் பெரியவங்க, சின்னவங்க
அத்தனைப் பேரும் குருடர்களாய் தான் நடந்துட்டு
வராங்களே தவிர, அங்கே சம்பிரதாயத்தில் நல்லதை
மட்டும் பார்த்து ஏற்றுக் கொண்டும் இங்கே புதுமையில்
வசதியையும் சுலபத்தையும் மட்டும் பார்த்து நடந்து
கொண்டும் வந்தால் வாழ்க்கை எவ்வளவோ சுகமாய்
இருக்குமே! பாரும்மா, அந்த நீலக்கட்டம் போட்ட ஷர்ட்
போட்டுண்டு நிக்கிற பொண்ணு பேசற பேச்சைக்
கேட்டியோ ஆங்'யானோ? தனக்குப் பிடித்தவன் கிடைத்தால்
தான் கல்யாணம் பண்ணிப்பாளாம். இந்த வயசில்
அப்படித்தான் தோணும். ஒரு ஐம்பது அறுபது வயசாச்
சுன்னால் எதையாவது ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்
காமல் "ஏ போயிட்டோமேன்னு வருந்தும் வேளை வரும்.
நானும் ஒரு காலத்தில் அந்தப் பெண்ணைப் போலவே
தான் அல்வப்பொழுது நினைச்சிட்டிருப்பேன், மொதல்ல.
ஆனா, இந்தப் பசங்களோடு தப்பே இல்லைம்மா இதெல்
லாம்! இதற்கெல்லாம் உண்மையான மூலகாரணம்
இந்தப் பெரியவங்கதான். தாய்தந்தையர்கள், இந்தக்
காலத்தில் பசங்கள் மீது அவங்களுக்கு இருக்கிற அன்பைக்
காட்டிக் கொள்கிறோம்னு நினைச்சுக்கிட்டு, அளவுக்கு
மீறிப் பண்றாங்க.

வாழ்க்கை என்றால் என்னவென்றே தெரியாமல் ஒரு
சுவர்க்கத்தைப்போல சுகங்களை ஏற்படுத்திப் பசங்களை
அதில் தூக்கி நிறுத்தி வைக்கணும்னு தவித்துப்
போறாங்க. வாழ்க்கையில் கஷ்ட சுகங்களை கவனிக்க
வேண்ஸ் கொடுக்கமாட்டாங்க. எப்பப் பார்த்தாலும்
பசங்களுக்கும், அவங்க பசங்களுக்கும் கூட தாமே எதிர்

காலத்தை நிர்ணயம் செய்து, ராஜ பாட்டை போட
கிறாங்க. அதைப்பற்றிக் கேட்டு விட்டால்— 'எங்
ஊனையும் உடலையும் உங்களுக்குத் தாரை வார்
கிறோம். இதைவிட வேறென்ன வேண்டும்?'— என்பா
கள். தினமும் பஞ்சபட்ச பரமான்னத்தை வெள்ளி
கிண்ணத்தில் வைத்துத்தந்தால் அதன்மீது வெறுப்புத்தான்
பெருகுமே தவிர விருப்பம் ஏற்படாது. யோசித்துப்
பார்த்தால் இந்தச் சின்னவங்க 'சுதந்திரம்', 'சுதந்திரம்'
என்று ரகளை பண்றதெல்லாம் இதுதானோன்னு
தோணுது. தாய் தந்தையர்கள் என்னதான் கஷ்டப்பட்டு
சம்பாதித்துத் தந்தாலும், தாமே சுயமாய் சம்பாதிப்பதில்
தான் த்ரில்! அந்த கிக் இதில் இராது. அதைபோல
பெரியவங்க மறந்து போய் 'நாங்க எவ்வளவு
கூட இவங்க ஏன் இப்படி செய்யறாங்க?'—
புலம்பறாங்க.

வெளிநாட்டில் ஹிப்பி நாகரீகம் இப்படித்
தொடங்கிற்று. செல்வந்தர் மகன் வந்து கோவாவில்
குடிசையில் இருந்துக்கிட்டு, இது ரொம்ப ஆனந்தமா
இருக்கு என்று எண்ணிப்பான். டாக்டர் சொன்னது
ரொம்பவும் உண்மை! பசங்களை அவங்க எதிர்காலத்தை
அவங்க நிர்மாணித்துக் கொள்வதற்குப் பெரியவர்கள்
உதவணுமே தவிர, நாங்கள் உங்கள் வேலையை
பண்றோம்னு சொல்லக்கூடாது. ஒவ்வொரு மனிதனின்
உடம்பிலும் உள்ள 'சக்தி'யானது உழைப்பாய் செலவாக
வேண்டும். அப்படியில்லாமல் அந்தச் சக்தி புதைந்து
போய் விட்டால் அதுவும் ஆபத்துதான்—'' அவர்
சொல்லிக்கொண்டே போனாலும் இடையிடைய பரிவி
திற்காக அவர் கண்கள் கலக்கத்துடன் தேடிக்கொண்
ருந்தன.

பையன் பில்லைக் கொண்டு வந்தான். மகாபோ
மிக தாராளமாகவே அவனுக்கு டிப்சையும் சே
தட்டில் வைத்தார்.

ராதிகா முதலியவர்களும் எழுந்தார்கள். பொழு
பொழுவென்று விளியே போய்விட்டார்கள்.

சாம்பவியும் மகாலிங்கமும் வெளியே வந்தார்கள்.
அங்கே தூணில் சாய்ந்தபடி பேண்ட் ஜேபியில் கையை
விட்டுக் கொண்டு நின்றிருந்தான் பரிஷித்.

அவ்விடத்தில் தோட்ட வேலை பண்ணும் ஆள்
செடிகளைக் கத்திரித்துக் கொண்டிருக்க, வேடிக்கை
பார்த்துக் கொண்டிருந்தான்.

''பரிஷித்'' மகாலிங்கம் கிட்டே வந்து தோளில்
ட்டினார்.

''ஆங்'' திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

''எந்த உலகத்தில் இருக்கிறாய்? திடுக்கிட்டுத்திரும்பிப்
பார்த்தாயே?''

''ஒன்றுமில்லை.''

ராதிகா அவ்விடத்தில் ஸ்கூட்டரை ஸ்டார்ட்
பண்ணிக் கொண்டிருந்தாள். அது ஸ்டார்ட் ஆகவில்லை.
ரூபா உடனே அங்கிருந்த படியில் பொத்தென்று உட்
கார்ந்து கொண்டு,—

''போச்சுடாப்பா! உன் வண்டி சண்டித்தனம்
பண்ணத் தொடங்கிடுத்து. இனி நாம்ப கிளம்பினாற்
போலத்தான் சினிமாவுக்கு'' என்றாள் உற்சாகமிழந்தபடி.

''மீதிப் பெண்கள் டி. வி. எஸ். களையும் ஸ்டார்ட்
ளையும் நிறுத்தி விட்டு வந்து உட்கார்ந்துக் கொண்
ார்கள்.

''என்னவாச்சு மேன்?'' ஒருத்தி கிட்டே வந்தாள்.

''இன்னைக்கு நமக்கு சினிமா இல்லை'' என்றாள்
ரூபா.

''அபசகுனமாய் பேசினால் கொன்று போட விடுவேன்'' என்றாள் ராதிகா எம்பிக் காலால் வண்டியை உதைத்தபடி.

அது உறுமவில்லை.

மகாலிங்கமும், பரிஷித்தும் சாம்பவியும் போய் கொண்டிருந்தார்கள்.

''அவனைக் கேட்போமா?'' ரூபா கண்ணைக் காட்டினாள். ராதிகா குறும்புத்தனமாய் சிரித்துக்கொண்டு தலையாட்டினாள்.

ரூபா அவனைத் தொடர்ந்து ஓடினாள். ''சார்! சார்! ப்ளீஸ்! கொஞ்சம் ஹெல்ப் பண்றீங்களா?''

மூவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

''ஸ்கூட்டர் நின்னுடுத்துங்க. கொஞ்சம்...''

மகாலிங்கம் சங்கடத்துடன் பார்த்தவர்—''எனக்கு ஸ்கூட்டர் ஓட்டத்தான் தெரியுமே தவிர, நின்றுவிட்டால் சரி பண்ணத் தெரியாதும்மா'' நேர்மையாய் சொல்லி விட்டார்.

''சர்...நீங்க...'' பரிஷித்தைக் கேட்டாள்.

அவன் அவர்களைப் பார்த்தான்.

''ப்ளீஸ்'' என்னாள்.

சாம்பவி, ''அவருக்குத் தெரியாது'' என்று சொல்லிப் போனாள். அதற்குள் பரிஷித் ஸ்கூட்டரை நோக்கிப் போகத் தொடங்கினான். சாம்பவியின் வார்த்தைகள் தொண்டைக்குள்ளேயே அமுங்கிவிட்டன. ஆச்சரியம் மடைந்தவளாய் மகாலிங்கத்தைப் பார்த்தாள். அவரும் இருமடங்கு வியப்படைந்தவராய் சாம்பவியைப் பொருள் பொதியப் பார்த்துக்கொண்டிருந்தார்.

பரிஷித் கிட்டே வந்ததுமே ராதிகா ஸ்கூட்டரை விட்டுவிட்டு ஒதுங்கி நின்று கொண்டாள்.

அவன் அதைப் பரிசோதித்தான் ஸ்டார்ட் செய்யப் போனான். முடியவில்லை. ஓயர்களைப் பிரித்துப் பார்த்து சரி செய்தான். திரும்பவும் ஸ்டார்ட் செய்வதற்கு ஹேண்டிலைப் பிடித்துக் கொண்டான். ராதிகா அவன் கையைப் பார்த்தாள். வலது கையில் நடு விரலுக்குக் கீழே பெரிய மச்சம்.

ராதிகா அவன் கையிலிருந்த மச்சத்தையும் அவன் முகத்தையும் மாறிமாறிப் பார்த்தாள் வியப்போடு.

அவன் ராதிகாவைப் பார்க்கவில்லை. ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்தான். அது உடனே ஸ்டார்ட் ஆகி விட்டது. சுற்றிலும் கூடி நின்று கொண்டிருந்த பெண்கள் அத்தனை பேரும் கை தட்டினார்கள்.

''தாங்க்யூ சர்'' என்றாள் ரூபா. அவன் போகத் திரும்பினான். ராதிகா இன்னும் திணறியபடி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பரிஷித் போக முயன்றபோது பெண்கள் எல்லோரும் கோரஸாய் குரலெடுத்து, ''தாங்க்யூ சர்'' என்றார்கள்.

''தாங்க்யூ டியர்'' ஒரு பெண் கத்தியபடி கையை 'ஸ்' என்று உதட்டில் வைத்துத் தூக்கிக் காற்றில் முத்தமிட்டாள்.

பரிஷித் அக்கத்தலையும், குறும்பு சேஷ்டைகளையும் கொஞ்சமும் லட்சியம் செய்யவில்லை.

சாம்பவியும் மகாலிங்கமும் சந்தோஷ மிகுதியால் ஒருவரையொருவர் கட்டியணைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பரிஷித் கிட்டே வந்ததும அவர் அவன் தோளில் தட்டினார். அவர்கள் போய்க் கொண்டிருக்கையில், ராதிகா இன்னும் கண்கொட்டாமல், நம்பமுடியாத மாதிரியாய் அவரகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்?'' கல்யாணி ராதிகாவின் கண் முன்னாடி விரல்களை ஆட்டினாள்.

ராதிகா இன்னும் அதேபோல பார்த்துக் கொண்டிருந்தாள்.

''கல்யாணி! உடம்பில் ஒரேயிடத்தில் ஒரே மாதிரியாய் ரெண்டு பேருக்கு மச்சம் இருக்க முடியுமா என்ன?''

''அப்படீன்னால் என்ன?''

''நான் சொன்னேனே அன்றைக்கு உங்களிடமெல்லாம்... க்வாரியிலிருந்து திரும்பி வந்துட்டிருந்தபோது ஒருத்தன்...''

''ஆங்! ஆங்! க்ளிண்ட் ஈஸ்ட்வுட்—'' எல்லோரும் அந்தப் பேரைக் கேட்டதுமே சுற்றிலும் கூடிவிட்டார்கள்.

''அவன் கையில் அசல் இதே போலவே மச்சம் இருந்தது.''

''ஆ! நிஜமாகவா? ஆனால் இப்படி இருக்கிறானே, இதென்னது? அவன் அசல் க்ளிண்ட்டோ ஈஸ்ட்வுட்டைப் போல இருந்தான்னு சொன்னாயே!''

ராதிகா நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''அதான் நானும் யோசிச்சிட்டிருக்கேன்'' என்றாள்.

''ஒருக்கால் அவங்க ரெண்டுபேரும் இரட்டைக் குழந்தைகளாயிருக்கலாம்'' என்றாள் ரூபா.

''இருக்கலாம். எனக்கும் அப்படித்தான் தோணுது. இவன் முகமும் கொஞ்சம் நீளமாய்தான் இருக்கு. மூக்குகூட அதேபோல இருக்கு.''

''அடடா! மொதல்லேயே சொல்லியிருந்தா அவனைப் பிடித்துக் கொண்டு அவன் அண்ணனைப் பற்றிய விவரங்களையெல்லாம் கேட்டிருப்போமே'' இனனொருத்தி ரொம்பவும் வருத்தப்பட்டுக் கொண்டாள்.

ஒரு பெண் கேட் வரைக்கும் ஓட்டமாய் ஓடிப் போய்ப் பார்த்து, நிராசையுடன் திரும்பிவந்து— ''பேட் லக் மேன்! அவங்க இல்லை போயிட்டாங்க''— என்றாள்.

''எப்படியாவது சரி அவன் அட்ரஸைத் தெரிஞ்சுக்க வேண்டியதுதான்'' என்றாள் ரூபா.

எல்லோரும் தலையாட்டினார்கள். ராதிகாவின் முகத்தில் உற்சாகம் வந்தது— ''தெரிஞ்சுக்குங்க, தெரிஞ்சுக்குங்க''— என்றெண்ணிக் கொண்டாள் மனதிற்குள்ளேயே. அவர்களை முட்டாளடித்து விட்டோம் என்ற சந்தோஷம் அவள் முகத்தில் நாட்டியமாடிக் கொண்டிருந்தது.

ஸ்கூட்டர்கள் வரிசையாய் சினிமா தியேட்டரை நோக்கிப் புறப்பட்டன.

20

சத்யாவின் மைத்துனிக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. திருமணத்திற்கு இன்னும் இரண்டே நாட்கள் இருந்தன. அந்த வீதியில் யார் வீட்டில் எந்த சுபகாரியம் நடந்தாலும், எல்லோரும் தலைக்கு ஒரு வேலையைப் பங்கிட்டுக் கொண்டு உதவி பண்ணுவார்கள்.

சாம்பவி சத்யாவிடம் மணப்பந்தலை அலங்கரிப்பதற்கு கலர் காகிதத் தோரணங்களைத் தயாரித்துத் தருவதாய் சொல்லியிருந்தாள்.

'அரவணைப்பு இல்லத்திலிருந்து சேஷனும் அவ
யும் உதவிப் செய்ய வந்தார்கள். நேற்றிலிருந்து
வேலை.

சாம்பவி கொல்லையில் பாதாம் மரத்தடியில் பா
போட்டுக் கொண்டு கலர் காகிதங்களைக் கத்தரித்
போட்டுக் கொண்டிருந்தாள். சேஷன் அவற்றை ஒ
கொண்டிருந்தான். கண் தெரியாவிட்டாலும் சே
அந்தக் காரியத்தை மிகச் சுலபமாய் மளமளவென
செய்து கொண்டிருந்தான்.

நாய்க்குட்டி அவர்களுக்குப் பக்கத்தில் உட்கார்
கொண்டு, கிழிந்து பழையதான கலர் காகிதங்க
வாயால் குதறிக் கிழித்து விளையாடிக் கொண்டிருந்

சாம்பவி எழுந்து உள்ளே வந்தாள்.

முன் அறையில் பரிஷித் உட்கார்ந்திருந்தான். அ
ஏதோ காகிதங்களை சிகரெட் லைட்டரால் பற்றவைத்
கொண்டிருந்தான். ''என்னது?'' சட்டென்று கிட்
வந்தாள்.

அக்காகிதங்களைப் பார்த்த சாம்பவி அதிர்
விட்டாள். அவை, மகாலிங்கம் சிலநாட்களுக்கு முன்
லைப்ரெரியிலிருந்து கொண்டு வந்திருந்த புத்தகத்
காகிதங்கள். 'ட்ரக் அடிக்ட்டும் அவன் கடந்த கா
களும்'—என்ற தலைப்பின் கீழ் இரண்டு மூன்று ந
புத்தகங்கள்.

ஒரு முறை ராத்திரி வேளையில் மேஜை விளக்
போட்டுக் கொண்டு சிரத்தையாய் இந்தப் புத்தகங்கள
படித்தபடி உலகத்தையே மறந்துப்போய் உட்கார்ந்திரு
மகாலிங்கத்திடம் வந்து அதென்ன புத்தகம் என்று
டாள் அவள்.

அது ட்ரக் அடிக்ட்டைப் பற்றிய புத்தகம். இ
ட்ரக் என்னென்ன விதங்களில் உண்டு, அவை எங்கெங்

எந்தெந்த நாடுகளில் எந்த விதத்தில் சுலபமாய் கிடைக்கின்றன, அவை தோன்றிய விதங்கள், அதற்குப் பழக்கப்பட்டுப்போகும் நோயாளிகளின் அறிகுறிகள் முதலியவை இருந்தன

''இந்தப் புத்தகங்கள் ஏது அங்கிள்?'' என்று கேட்டாள் சாம்பவி.

''லைப்ரெரியில் தேடித் தேடிப் பார்த்து எடுத்துட்டு வந்தேம்மா. வாம்மா, இப்படி வந்து உட்காரு'' என்று சாம்பவியைப் பக்கத்தில் உட்காரவைத்துக் கொண்டு அங்கங்கே படித்து விவரித்துச் சொன்னார். ஓரிரண்டு உற்சாகத்தைத் தந்தாலும், பெரும்பாலும் போரடித்தன.

சாம்பவிக்குக் கொட்டாவி வந்துவிட்டதால் தூங்கப் போய் விட்டாள். இடையில் விழிப்பு வந்து பார்த்த போது அவர் இன்னும் புத்தகம் படித்துக்கொண்டிருந்ததைக் கண்டாள். ஆனால் அவற்றை பரிஷித்தின் கண்களில் பட்டுவிடாமல் மறைத்து வைத்து விடுவது அவர் வழக்கம்.

இன்றைக்கு அவளே கலர் காகிதங்களைக் கத்திரிப்பதற்காக கத்திரிக்கோலை டிராயரில் தேடியபோது டிராயருக்குள்ளிருந்த இப்புத்தகங்களை வெளியே எடுத்து வைத்தவள், திரும்பி உள்ளே வைக்க மறந்துபோய் கொல்லைப்பக்கம் போய் விட்டாள். அவை லைப்ரேரி புத்தகங்கள்.

சாம்பவிக்குக் கோபமும் ஆத்திரமும் வந்துவிட்டன. ''பரிஷித்! இதென்னது?'' அவள் சட்டென்று தீயை அணைக்கப் போனபொழுது அவன் சாம்பவியின் கோளைப் பிடித்து அப்பால் இழுத்துவிட்டான். சாம்பவியை அவன் நகரவிடவில்லை. அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள முடியவில்லை அவளால்.

சாம்பவிக்குக் கோபம் தலைக்கேறிவிட்டது. ''உங்களுக்கு புத்தி இருக்கா? அவற்றின் விலை என்னன்னு

தெரியுமா? சத்யாவின் கார்டு மூலமாய் பிரிட்டிஷ் லைப்ரெரியிலிருந்து கொண்டு வந்தவை! இப்ப என்ன செய்யறது? எவ்வளவு பணம் கட்டணுமோ என்னவோ? ஆனாலும் உங்க பணம் ஒன்றும் போயிடலியே? கஷ்டப் பட்டுப் பணம் சம்பாதித்துட்டு வந்து உங்களைத் தரச் சொன்னால் அப்பத் தெரியும்'' என்று கத்திவிட்டாள்.

சாம்பவியின் தோளில் இருந்த அவன் கை விரல்கள் கோபத்தால இன்னும் அழுந்தின.

''பணம் நான் தந்துக்கறேன்'' என்றான்.

''ஆங்! தருவீங்க! எங்கேயிருந்து கொண்டுவருவீங்க? காரைச் சுற்றிக் கையேந்தியா? வீடுகளில் புகுந்து திருடியா?'' தீவிரமாய் கேட்டாள்.

அவன் கண்கள் ஒரு வினாடி படபடத்தன.

சாம்பவியின் தோளில் இருந்த அவன் விரல்கள் மெதுவாய் தளர்ந்தன. அங்கிருந்து போய்விட்டான்.

சாம்பவி ஓடிப்போய் அலற்றைப் பார்த்தால் ஏறக்குறைய எல்லாம் கருகிப் போய் சாம்பலாகி விட்டிருந்தன.

''ஐயோ'' தலையிலடித்துக் கொண்டாள்.

இரவு ஒன்பது மணியாகி விட்டது. பரிஷித் இன்னும் வீடு திரும்பவில்லை மகாலிங்கம் கைகளைப் பின்னுக்குக் கட்டிக் கொண்டே வராந்தாவில் குட்டிபோட்ட பூனை யாய் நடைபயின்று கொண்டிருந்தார்.

அவர் மாலையில் வீடு திரும்பியதும் சாம்பவி எதிர் போய், ''அங்கிள்'' —என்று நடந்ததையெல்லாம் சொல்லிவிட்டாள்.

அவர் உடனே புத்தகங்களின் விலை என்னவிருக்குமே என்று பயந்துபோய் கணக்குப் போடவில்லை.

''பரிஷித் போய் எவ்வளவு நேரமாகிறது?'' என்று கேட்டார்.

சாம்பவி சொன்னாள்— மூன்று மணிக்குப் போனவன் ஒன்பது மணியாகியும் இன்னும் வீட்டிற்குத் திரும்பி வரவில்லை. அவர் உடனடியாய் போய்த் தேடித் தேடி அலைந்து விட்டுத் திரும்பி வந்தார்.

''பரிஷித்தைக் கண்ணில் காணவேயில்லைம்மா. அந்த ட்ரக்ஸ் எடுத்துக்கிற சிநேகிதர்களிடம் கூட இல்லை. சாதாரணமாய் அவன் இருக்கிற இடங்களியெல்லாம் தேடிப்பார்த்துட்டு வந்தேன். ''என்றார்.

அவர் முகத்தைப் பார்த்தபோது சாம்பவிக்குத் தான் எவ்வளவு தவறு இழைத்துவிட்டோம் என்று புரிந்தது.

பரிஷித் இன்னும் பழையபடி மாறவில்லையா? அவள் தான் அவசரப்பட்டு ஆவேசத்தில் ஏதேதோ சொல்லி விட்டாளா? தான் சொன்ன வார்த்தைகளைளெல்லாம் மறைக்காமல் மகாலிங்கத்திடம் சொல்லி விட்டாள். ''அப்படி சொல்லாமலிருந்திருக்கணும்மா'' என்றார் அவர்.

மகாலிங்கம் சாப்பிடவில்லை. சுற்றித்திரிந்து விட்டு வந்ததால் சோர்வுடன் இருந்தார். என்றுமே ஜோக் அடித்துக் கொண்டு உற்சாகத்துடன் இருக்கும் அவர் இப்பொழுது என்றுமில்லாத சீரியஸாய் இருந்தார். உடை மாற்றிக்கொண்டு திரும்பவும் வராந்தாவில் நடை பயிலத் தொடங்கினார்.

சாம்பவி அவ்விடத்திற்கு வந்தாள்.

கதவைப் பிடித்துக் கொண்டே நின்ற அவள், ''அங்கிள்'' என்றாள்.

''என்னம்மா?'' என்றார் அவர்.

''மன்னிச்சுக்குங்க அங்கிள். நான் அவசரப்பட்டு விட்டேன். வருத்தமாய் இருக்கு.'' அவள் கண்கள் கலங்கின.

''சே...இதென்னம்மா? அப்படியெல்லாம் நினைத்துக்க வேண்டாம்'' என்றார் அவர். கொஞ்சம் பொறுத்து ''நாம்ப வேணும்னு விரும்பினால் பரிஷித் திரும்பி வருவான். தேவை இல்லை என்று நினைத்தால் வரமாட்டான். அந்த மன உறுதியை நான் வரவழைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

இரவு பதினோறு மணியளவில் பரிஷித் வந்தான். மகாலிங்கம் சந்தோஷத்தோடு வரவேற்கப் போனவர், தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு நாற்காலியில் வெருமே உட்கார்ந்து விட்டார்.

அவன் உள்ளே வந்தவன் நேராய் கொல்லைப்பக்கம் போய் கால்களையும் கைகளையும் கழுவிக்கொண்டு வந்தான்.

போய்படுத்துக்கொள்ளப் போனபொழுது மகாலிங்கம் கூப்பிட்டார்,

''பரிஷித், சாப்பிடலாம் வா.''

''எனக்குப் பசியில்லை.''

''சாம்பவி என்னிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள். புத்தகங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் நீ. உனக்குப் பிடிக்காததால், கொளுத்தி விட்டாய் அவ்வளவுதான்.''

அவன் எதுவும் பேசவில்லை.

மகாலிங்கமும் வாதாடவில்லை.

வாதாடப் போனால் வார்த்தைகள் தடித்து, எல்லைகளை ஆகுமோ என்ற பயம் அவருக்கு. வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டான். கண்ணெதிரே இருக்கிறான், அதுவே போதும்.

அன்றிரவு யாருமே சாப்பிடவில்லை.

மூன்று நாட்கள் கழிந்தன.

சாம்பவி மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள். மேஜைக்கு முன்னால் திடீரென்று வந்து நூறு ரூபாய் தாள்கள் நான்கு சிதறி விழுந்தன. நிமிர்ந்து பார்த்தாள்.

எதிரே பரிஷித் நின்று கொண்டிருந்தான்.

அவனையும் பணத்தையும் மாறிமாறிப் பார்த்தாள்.

''இதென்னது?''

''புத்தகங்களுக்குப் பணம்.''

சாம்பவி ஏதோ சொல்லப் போனாள். ஆனால் வார்த்தைகளைத் தொண்டைக்குள்ளேயே விழுங்கிக் கொண்டாள்.

''பயப்படாதே! நான் இந்தப் பணத்தை எந்தக் கார்கிட்டேயும் போய் பிச்சை எடுத்து வாங்கிட்டு வரவில்லை. எந்த வீட்டிலும் திருடி எடுத்துட்டு வரவில்லை'' சாம்பவியின் கண்களில் ஜிவ்வென்று கண்ணீர் பொங்கி வந்தது.

அவன் அந்த வார்த்தைகளைக் கொஞ்சம் சிநேகமாய் சொல்லியிருந்தால் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்! உடனே அவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு தான் பட்ட வேதனைகளைச் சொல்லியிருப்பாள். சாம்பவி எந்த வாதனையும் பண்ணவில்லை. மௌனமாய் அந்தப் பணத்தை எடுத்து டிராயரில் வைத்துவிட்டுத் திரும்பவும் எழுதத் தொடங்கினாள்.

அவன் உடை மாற்றிக்கொண்டு, பாத்ரூமிற்குப் போய் குளித்துவிட்டுத் திரும்பி வந்தான். சாம்பவி இன்னும் எழுதிக் கொண்டேயிருந்தாள்.

''எனக்குச் சாப்பாடு இருக்கா வீட்டில்?'' கேட்டான்.

மூன்று நாட்களாய் அவன் வீட்டில் சாப்பிடவில்லை சாம்பவி எழுதிக் கொண்டிருந்த காகிதங்களை மூடி வைத்துவிட்டு, எழுந்து சமையலறைக்குப் போனாள். சமைத்தவைகளை எடுத்து சாப்பாட்டு மேஜையில் வைத்துக் கொண்டிருக்கையில் அவன் போய் ஒரு இருந்த தட்டைக் கொண்டு வந்தான். தம்ளரில் தண்ணீர் எடுத்து வைத்துக் கொண்டான். சாம்பவிக்கும் சேர்த்து அவன் தட்டை எடுத்து வைத்ததைப் பார்த்துவிட்டு ''நான் சாப்பிட்டுவிட்டேன்'' என்றாள்.

''காலையில் எப்பொழுதோ சாப்பிட்டது தானே திரும்பவும் கொஞ்சமாய் சாப்பிட்டால் போச்சு என்றான் தானே இருவருக்குமாய் பறிமாறிக் கொண்டு

சாம்பவி உட்கார்ந்து கொண்டாள். மௌனமாய் சாப்பிடத் தொடங்கினாள்.

அவன் ஜேபியிலிருந்து இன்னொரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து சாம்பவிக்கு முன்னால் வைத்தான். ''வீட்டுச் செலவில் இது என் பங்கு. இப்போதைக்கு இவ்வளவுதான் இருக்கு. போகப்போக இன்னும் அதிகமாய்த் தர முயற்சி பண்றேன்.''

சாம்பவி பதில் பேசாமல் மௌனமாய் இருந்தாள்.

''ஒன்றுமே பேசாமல் இதென்ன மௌன விரதம்?'' அவன் தீவிரமாய் கேட்டான்.

''என்ன சொல்லச் சொல்றீங்களோ சொல்லுங்க. உங்களுக்கு நான் எப்படிப் பேசினால் நன்றாயிருக்குமோ தோணுகிறதோ சொலிட்டால் நான் அப்படியே பேசுவேன்.''

''எனக்குப் பிடித்தாற்போல பேசத் தேவையில்லை நீ நீயாய் இருந்தால் ரொம்ப சந்தோஷப்படுவேன்'' என்றான் இரைந்து.

''நீங்கள் கூட என்னை வருத்தப்படுத்தாமலிருந்தால் நானும் சந்தோஷப்படுவேன்.'' —சாம்பவியும் இரைந்தே சொன்னாள். மூன்று நாட்களாய் பட்டுக்கொண்டிருந்த வேதனை ஆவேசமாய் கட்டுமீறிக் கொண்டு வெள்ளமாய் வந்தது.

அவன் திடீரென்று மௌனமாகி விட்டான்.

சாம்பவியையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்களில் அவன் இதயத்தைக் கத்தியால் கிறினால் ஏற்படும் நரக வேதனை நன்றாய் தென்பட்டது.

அவன் சட்டென்று தம்ளரிலிருந்த தண்ணீரை எடுத்துத் தட்டில் கையைக் கழுவிக் கொண்டுவிடப் போனான்.

சாம்பவி செடென்று அவன் கையைப் பிடித்துத் தடுத்து விட்டாள்.

அவன் தலையைத் தன் வலது முழங்கை இடுக்கில் புதைத்துக் கொண்டான்.

''பரிஷித்'' என்றாள் அவள்.

அவன் மௌனமாய் இருந்தான். ''பரிஷித் திரும்பவும் கூப்பிட்டாள்.

''நான் உன்னுடையவன்னு நினைச்சுட்டிருந்தேன், இல்லைன்னு இப்பத்தான் தெரிஞ்சுது.'' அவன் குரல் கிணற்றிற்குள்ளிருந்து கேட்டாற்போலிருந்தது.

சாம்பவி நாற்காலியை விட்டு எழுந்திருந்து அவனுக்குப் பக்கத்தில் வந்தாள்.

''எனக்கு வாழ ஆசையை ஏற்படுத்தித் தந்தாய். தந்துட்டு இப்படிக் கொன்று போடுகிறாய்.''

''பரிஷித்'' சட்டென்று அவன் தலைமேல் கையை வைத்தாள். ''அப்படிச் சொல்லாதிங்க. இந்த மூணு நாளும் நீங்க வீட்டில் காபி குடிக்கிறதில்லைன்னும்,

சாப்பிடுவதில்லைன்னும் நானும் அங்கிளும் என்ன பாடு படுகிறோம்னு தெரியாது உங்களுக்கு.''

சாம்பவி பரிஷித்தின் தலையைத் தன் வயிற்றில் அமுத்திக் கொண்டாள். ''உண்மையைச் சொல்கிறேன், அன்றையலிருந்து நான் என்ன நரகத்தை அனுபவிச்சுட்டிருக்கேன் தெரியுமா? நான்தான் ஏதோ உளறினேன்னு வையுங்க. நீங்கள் என் கன்னத்தில் ஒன்று கொடுத்துவிட்டு பதில் சொல்லிட்டுப் போயிருக்க வேண்டியதுதானே. நீங்கள் அப்படிப் பண்ணியிருந்தால் நான் ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பேன். ஒன்று மட்டும் நினைவில் வெச்சுக்குங்க. நடந்ததற்கு நான் உங்களையும் விட அதிகமாய் வெட்கப்படுகிறேன். உங்களை அவமானப் படுத்தினால் என்னையே நான் அவமானப் படுத்திக்கிட்டாற்போலத்தான். பணம் வேணும்னால் நீங்கள் திரும்பவும் அதே காரியத்தைப் செய்வீங்களோன்னு தோணிற்று. ஐ யாம் சாரி! பரிஷித்! உண்மையால் சொல்றேன். நீங்கள் நம்புவீங்களோ என்னவோ? அப்புறமாய் உங்களிஷ் ''

பரிஷித் சட்டென்று சாம்பவியின் இடுப்பைச் சுற்றிலும் கை போட்டுக் கொண்டு, மடியில் உட்கார வைத்துக் கொண்டு, அவள் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். ஆனால் வாயால் ''சாரி'' என்று சொல்லவில்லை. ஆனால் அவனும் நடந்ததற்குப் பச்சாதாபப் பட்டுக் கொண்டிருக்கிறான் என்று புரிந்தது. சாம்பவி அவன் மடியில் உட்கார்ந்து பிளேட்டிலிருந்த சாதத்தை அவன் வாயில் ஊட்டத் தொடங்கினாள். அவனும் சாம்பவியின் வாயில் ஊட்டினான்.

மகாலிங்கம் திரும்பி வந்தபோது இருவரும் சிரித்து மகிழ்ந்து கொண்டே கேரம் ஆடிக் கொண்டிருந்தார்கள்.

அவர் இச்சூழ்நிலையைப் பார்த்து ஆச்சரியமடைந்து விட்டார். மேகங்கள் விலகி சூரியோதயம் வந்துவிட்டதி விட்டில் இப்பொழுது.

அவர் படுக்கப் போனபொழுது சாம்பவி தண்ணீரைக் கொண்டுவந்து வைத்துவிட்டுத் தாழ்ந்த குரலில் பரிஷித் பணம் தந்த விஷயத்தைப் பற்றிச் சொன்னாள். டிராயரைத் திறந்து பணத்தை எடுத்து அவரிடம் தந்தாள். வீட்டுச் செலவில் பங்காய் நூறு ரூபாய் கொடுத்ததையும் அவரிடம் சொன்னாள். அவர் உதட்டைக் கடித்துக் கொண்டே யோசனையில் ஆழ்ந்துவிட்டார்.

பரிஷித்திற்கு இவ்வளவு பணம் எங்கேயிருந்து வந்திருக்கும்? எந்தப் போலீசாவது எந்த நிமிஷத்திலாவது வந்து கதவைத் தட்டக்கூடாதே! ஏது என்று கேட்டால் என்ன வருத்தப்படுவானோ?

மறுநாள் காலையில் அவர் காபி குடித்துக்கொண்டிருக்கையில் சொன்னார்—''இதப்பார் பரிஷித்! நம்மிடம் பணம் நிறைய இருக்கு. இவ்வளவு நாளாய் நான் சம்பாதித்து சேமித்துவைத்த பணம் இருக்கு. ரிடயராகி வந்த பணமும் இருக்கு. இன்ஷ்யூரென்ஸ் பாலிசியின் பிரீமியமும் வந்துவிட்டது. நாம்ட த்தை எப்படிச் செலவழிக்கணும்னு பார்க்க ேணடியதே தவிர...'' மென்று விழுங்கினார்.

சட்டையை மாட்டிக் கொண்டு எங்கேயோ போகத் தயாராகிக் கொண்டிருந்த பரிஷித் சட்டையின் பட்டன்களை மாட்டிக் கொண்டே—''பணம் உங்களிடம் இருக்கிறது தெரியும். ஆனால் பணம் சம்பாதிப்பதில் இருக்கிற த்ரில்லை நானும் அனுபவிக்க விடுங்கள் டாடு'' என்றான்.

அவர் பரிஷித்தையே பார்த்துக் கொண்டிருந்தார். சாம்பவிக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது. தான் நேற்றையிலிருந்தே உபதேசம் பண்ணி, தனக்கு இன்றைக்குச் சொல்ல வேண்டிய 'தாங்க்ஸ்' மகாலிங்கத்தை 'டாடி' என்று கூப்பிடுவதுதான் என்று சொல்லியிருந்தாள்.

பரிஷித் போய்விட்டான்.

மகாலிங்கம் உடனே ''சாம்பவி, சாம்பவி'' என்று இரைந்து கூப்பிட்டார்.

''பரிஷித் என்னை என்னவென்று அழைத்தான் கேட்டாயா?'' என்றார் மகிழ்ச்சியோடு.

''கேட்டேன் அங்கிள்'' என்றாள் முறுவலுடன்.

அவர் முகத்தில் தென்பட்ட ஆனந்தம் அவளுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது.

அன்று மாலையில் அவர் வரும்போதே வாசலிலிருந்து ''சாம்பவி! சாம்பவி'' என்று இரைந்து கூப்பிட்டுக் கொண்டே வந்தார். அரவணைப்பு இல்லத்திலிருந்து அப்பொழுதுதான் வந்து சமையல் காரியத்தில் முனைந்திருந்த சாம்பவி ''என்ன அங்கிள்?'' என்றாள்.

''உனக்குத் தெரியுமா?'' அவர் ஆயாசத்தோடு கேட்டார்.

''என்ன?'' கலக்கமடைந்தாள் அவள்.

''பரிஷித்...நம்ப பரிஷித்...''

''பரிஷித்...உம்! என்ன?'' அரிசி இருந்த முறத்தைக் கீழே வைத்து விட்டாள் அவள்.

''மெயின் ரோடில் கடைசியாய் இருக்கே 'ஜம்பு மோட்டார் சர்வீஸ்' என்று. அதில் வேலை பண்ணிட்டிருக்கான்.''

''என்னது?'' சாம்பவியால் நம்பவே முடியவில்லை.

''ஆமாம்மா. நான் அங்கே ஸ்கூட்டருக்குப் பெட்ரோல் போட்டிட்டிருந்தபோது, காரை வாட்டர் பைப் மூலமாய் கழுவிட்டிருந்த பரிஷித்தைக் காட்டி 'எங்க புதி ஆள்' என்று சிரித்தான். ஜம்புவைத்தான் எனக்குத்

தெரியுமே. பரிஷித் சிரித்தான். ஜம்பு பயந்துபோய்—சார்! வேலை கேட்டான் பையன்! நீங்க துப்பாக்கியைத் தூக்கிடுவீங்களோன்னு பயந்தேன். அதெல்லாம் ஒன்றுமில்லைன்னும் வேலை ரொம்பவும் முக்கியம்னு சொன்னான். அதனால் தந்தேன் சார்''—என்று பயந்தபடி சொன்னான்.

நானும் சிரித்தேன்—''உத்தியோகம் கொடுக்காமல் இருந்தால் நிஜமாய் துப்பாக்கியைத் தூக்கிட்டு வந்திருப்பேன். என் பையன் கேட்டும் நீ இல்லைன்னு சொல்லுப்பதா? என்றேன்'' என்றார்.

''நிஜமாகவா அங்கிள்?'' என்றாள் சாம்பவி.

''அட்வாட்ன்ஸ் கேட்டு வாங்கிக்கிட்டானாம். அங்கேயே போகிறானாம் காலையிலேயே.''

''அப்படியா?'' சாம்பவி போய் டிராயரைத் திறந்து பணத்தைப் பார்த்தாள்.

''அப்படின்னால் இது அவனோட உழைப்பின் ஊதியம்னு சொல்லுங்க'' என்றாள்.

''ஆஹா! இனி நீ கவலையில்லாமல் அந்தப் பணத்தை உபயோகப்படுத்திக்கலாம்''— என்றார் அவர்.

சாம்பவி பரிஷித் தந்தபோதிலும் அந்தப் பணத்தைப் பயன்படுத்தவில்லை. ஒருக்கால் உடனே திருப்பித்தர வேண்டியிருக்குமோ என்றெண்ணி அப்படியே வைத்திருந்தாள்.

21

சாம்பவி கண்ணாடியில் பார்த்தபடி பொ
வைத்துக்கொண்டிருந்தாள். சமையல் வேலையை முடி
விட்டாள். நாளைக்கு அரவணைப்பு இல்ல
அதெளண்ட்டுகளைப் பார்ப்பதற்காக ஆடிட் பார்
வரப்போகிறது. காலையிலேயே அவள் போகவேண்
காய்களை வாங்கி வைத்துக்கொண்டுவிட்டால் கால
ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து சமைத்துவிடலாம்.

"ஒருநாள் சமைக்காவிட்டால் என்ன வந்
தும்மா? வெளியே ஓட்டலிருந்து கொண்டுவந்துவிட
கஷ்டப்பட வேண்டாம்" என்று மகாலிங்கம் சொல்
லும் சாம்பவி கேட்டுக்கொள்ளமாட்டாள். "நான்
கும்போது அந்த அவசியம் எதுக்கு?" என்பாள்.

வெளியே கருமேகங்கள் திரண்டு, காற்று பல
வீசிக்கொண்டிருந்தது. மழைவரும்போலிருந்தது. சா
கொல்லையில் உலர்த்தியிருந்த துணிகளை எடுத்
மடித்து வைத்துக்கொண்டிருந்தாள்.

அதற்குள் ஜன்னல் வழியாய் வெளியே தெருவில்
'பிப், பிப்' என்று ஸ்கூட்டர் ஹாரன் சப்தம் கேட்
ஒரு முறையில்லை, இரண்டு மூன்று தடவை!

சாம்பவிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வ
யாரோ ரௌடியாயிருக்கும். போக்கிரிகள்! ஹார
அடிப்பார்கள். யார் என்று போய்ப் பார்த்தால் ப

ிப்பார்கள். அல்லது கண்ணைக் கொட்டுவார்.
ன்னும் விடாமல் 'பிப், பிப்' என்று கேட்டுக்கொண்
ந்தது.

சாம்பவி சரேலென்று ஜன்னல் கதவைச் சாத்
ானவள், "வெட்கமில்லை?"—எரிந்து விழுந்துவி
ட்டென்று நின்றுவிட்டாள் அப்படியே.

ம்,

வெளியே ஸ்கூட்டர் மீது உட்கார்ந்து கொண்டிரு
ன் பரிஷித். அவன்தான் ஹாரனை அடித்துக்கொண்
ருந்தான்.

அது மகாலிங்கத்தின் ஸ்கூட்டர். கெட்டுப்போய்
ட்டதால் மெக்கானிக்கிடம் விட்டு பல நாட்களாகி
ட்டன. மெக்கானிக்—"இது பழைய வண்டியாயிடுத்து
ர். எவ்வளவு பணத்தைச் செலவழித்து நீங்க ரிப்பேர்
ண்ணினாலும் பணம் தண்டந்தான்! திரும்பவும்
ப்பேருக்கு வந்துடும். புதுசு வாங்கிக்குங்க சார்" என்
ன். அதை ரிப்பேர் செய்து, செய்து அலுத்துப்போய்
க்கானிக்கிடமே விட்டு வைத்திருந்தார் மகாலிங்கம்.

"அட! இந்தக் குதிரை சரியாயிடுத்தா என்ன?" ஆச்
யத்தோடு கேட்டாள். பரிஷித்தின் குரலைக் கேட்ட
மே நாய்க் குட்டிகூட கால்களை ஜன்னலில் வைத்து
எம்பி எம்பிப் பார்த்துக்கொண்டே லொள் லொள்
ன்று குரைத்து சேதி விசாரித்தது.

"குதிரை சரியாகிறதாவது! வாயு வேகத்தில் பறந்து
ரும்போது—" பரிஷித் ஸ்கூட்டரைத் திருப்பித் தெருவில்
ருவோர் போவோரைக் குறுக்கே தாண்டிக்கொண்டு
ர்ரென்று கட் பண்ணிக்கொண்டே அவர்களைக் கலங்
டித்துவிட்டுத் திரும்பி வந்து ஜன்னலண்டை நிறுத்தி
ான். எல்லோரும் விநோதமாய் பார்க்கத் தொடங்
னார்கள்.

"எப்படி இருக்கு?" என்று கேட்டான்.

''பிரம்மாண்டமாய் இருக்கு'' என்றாள்.

''என்ன தோளில் பையை மாட்டிக்கொண்
யே, எங்கே கிளம்பிட்டாய்?''

''காய்கறி வாங்கணும். வீட்டில் மூ பெண
ப்பும் ஆயிடுத்து. கடைக்குப் போயிட்டிருக்கே

''வா, நான் அழைச்சுட்டுப் போறேன்.''

''இதோ வரேன்'' சாம்பவி மளமளவென்று
களைச் சாத்திவிட்டு வெளியே பூட்டுவதற்குள் புஜ்ஜி
வெளியே ஓடிவந்து விட்டது. சாம்பவி திரும்ப
கதவைத் திறந்து, அதை உள்ளே தள்ள முயன்ற
நாய்க்குட்டி உள்ளே போக மறுத்தது. சாம்பவி செரு
மாட்டிக்கொண்டு விட்டால் எங்கோ போகப் போ
தெரிந்துவிடும் அதற்கு.

''அதை அழவிடாதே சாம்பவி. கூட்டிட்டு வா
என்றான் பரிஷித்.

சாம்பவி பையை எடுத்துக்கொண்டு, நாய்க்குட்டி
மடியில் வைத்துக் கொண்டு அவனுக்குப் பின்
உட்கார்ந்து கொண்டாள்.

ஸ்கூட்டர் விர்ரென்று பறக்கத் தொடங்கிற்று.

மாலை வேலையாயிருந்ததால் வீதிகளில் ஜனக்கூட்
நிரம்பி வழிந்தது. ஸ்கூட்டர் ஆட்டோக்களிலிரு
தப்பித்துக் கொண்டும், கார்களின் வரிசைகளுக்கிடை
புகுந்து சென்றும் பறந்து சென்று கொண்டிருந்
சாம்பவி ஆ, ஊ என்று கத்தக் கத்த, அம்பாய் பற
கொண்டேயிருந்தது.

ஒரு சிலப்பு மாருதிக் கார் வேகமாய் போய்க் கொ
டிருந்தது. ஸ்கூட்டரை ஓவர்டேக் செய்துவிட்
பறந்தது. பிடிவாதமாய் பரிஷித் ஓவர்டேக் செய்தான்

''இதென்னது? ஓட்டப்பந்தயமா?'' சாம்பவி
தினாள்.

''பந்தயம் எனக்குப் பிடிக்கும்'' என்றான் அவன்.

நாய்க்குட்டி சாம்பவியின் மடியில் பூனைக் கூட்டியாய்
ந்து ஒடுங்கிப் போய் உட்கார்ந்திருந்தது.

கடைக்கருகில் நிறுத்தி, தேவையான சோப்பையும்,
ய்கறிகளையும் வாங்கிக் கொண்டார்கள்.

''அங்கிளுக்கும் உங்களுக்கும் ஷேவிங் கிரீமும்,
ம்புவும் தீர்ந்துவிட்டது'' என்றாள். பரிஷித் அவற்
றுக் கூட வாங்கிக் கொண்டு எல்லாவற்றிற்கும் தானே
ணத்தைக் கொடுத்தான். நாய்க்குட்டிக்கு பிஸ்கெட்
க்கெட் வங்கிக் கொண்டார்கள்.

''என்னடா புஜ்ஜி பயந்து போயிட்டயா?'' —அதன்
லையில் தட்டினான் பரிஷித்.

''நான் ஒன்றும் பயப்படவேயில்லை'' என்றாள்
பெருமையாய் சாம்பவி.

''அப்படீன்னால் பந்தயம்னால் உனக்கு த்ரில்லிங்னு
சொல்லு'' என்றான்.

திரும்பவும் ஸ்கூட்டரில் ஏறிக் கொண்டார்கள்.

''இந்தப் பக்கமாய் எங்கே?'' என்றாள் சாம்பவி.

''இதற்குள்ளேயே வீட்டிற்கா?'' என்றான்.

பரிஷித் ஸ்கூட்டரை பார்க்கிற்குள் கொண்டுவந்தான்.
விர்விர்ரென்று அவ்விடத்தை வளைய வந்து விட்டுத்
திரும்பவும் மெயின் ரோட்டிற்கு வந்தான். லேசாய் தூறல்
தொடங்கிவிட்டது. சாம்பவி நாய்க்குட்டியின் தலையை
புடவைத் தலைப்பால் போர்த்தினாள்.

மழை வலுக்கத் தொடங்கிவிட்டது. அந்த மழை
லும் கூட பரிஷித் ஓட்டிக் கொண்டிருந்த ஸ்கூட்டர்

வேகமாய் பறந்து கொண்டிருந்தது. ''பரிஷித்! மழை இருக்கு ஜாக்கிரதை'' என்று கத்தினாள் அவள்.

''உன் உயிருக்கு என் உயிர் உத்திரவா போதுமா?'' என்றான்.

இருவரும் நன்றாய் நனைந்து போய் விட்டார்க மழைத் தாரைகள் நீர்த் தோரணங்களாய் மேலே வ விழுந்து கொண்டேயிருக்க, அவற்றிற்கிடையே விர் போனது விநோதமான உணர்ச்சி!

இருட்டி விட்டது. மழையின் சீற்றம் கொ தணிந்தது. விளக்குகள் எரியத் தொடங்கின. மழைய நனைந்த வீதிகள் கலர் கலரான விளக்குகளின் ஒளி ப மின்னிக் கொண்டிருந்தன. இவ்வாறு ஸ்கூட்டரில் மாய் எதையுமே பொருட்படுத்தாமல் பறந்தது சா விக்கு அபூர்வமான உணர்ச்சி!

மகாலிங்கத்தோடு நிறைய தடவை போயிருக்கிறா அவர் ஜாக்கிரதையாய், மிக நிதானமாய் ஓட்டுவா இந்தத் தரில் இருக்காது.

இருவரும் திரும்பி வீட்டிற்கு வந்து சேர்ந்தபோ மகாலிங்கம் பூட்டிய வீட்டுக் கதவிற்கு முன்னால் வரா தாவில் நின்று காத்துக் கொண்டிருந்ததைக் கண்டார்க

ஸ்கூட்டரிலிருந்து இறங்கிய அவ்விருவரையும் அ வியப்போடு பார்த்தார்.

''உங்களுக்கு ப்ளெசண்ட் சர்ப்ரைஸ் கொ கணும்னுதான் நான் மொதல்லேயே இதை ரிப்பே செய்துட்டதைச் சொல்லலை உங்களிடம்'' என்றான்.

மகாலிங்கத்திற்குத் திரும்பவும் ஸ்கூட்டரை அவ நல்ல கண்டிஷனில் இருந்து பார்த்தது மிகச் சந்தோ மாய் இருந்தது.

சாம்பவி புஜ்ஜியைத் துடைத்து விட்டு, தான் உடை மாற்றிக்கொண்டு, தலையைத் துடைத்துக் கொண்டிருந்த போது பரிஷித், ''அச் அச்'' என்று தும்மியது கேட்டது.

சாம்பவி கூட வேண்டுமென்றே அவனைப் போலவே 'அச் அச்' என்றாள்.

இருவரும் பக்கென்று சிரித்து விட்டார்கள்.

அவ்வாறு சிரித்துக்கொண்டிருந்த அவ்விருவரையும் பார்த்தபோது மகாலிங்கத்திற்குத் தன் வீட்டில் ஆயிரம் ஒளி விளக்குகள் மினுமினுக்கத் தொடங்கினாற்போல மனையோடு மகிழ்ச்சியாய்த் தோன்றிற்று.

மூவரும் சேர்ந்து சாப்பிட்டார்கள்.

புஜ்ஜி வெதுவெதுப்பான பாலைக் குடித்துவிட்டு நாக்கை நக்கிக் கொண்டு, சாவதானமாய் படுத்துக் கொண்டே பல்டியடித்துக் கொண்டிருந்தது.

மகாலிங்கம் இருவருக்கும் விழுந்து விழுந்து பறிமாறிக் கொண்டே சாப்பிடச் செய்தார்.

சாம்பவி பரிஷித் ஸ்கூட்டரை எப்படி பந்தயக் குதிரையைப் போல ஓட்டுகிறான் என்பதைப் பற்றி விவரித்துச் சொல்லத் தொடங்கினாள்.

சாப்பிட்டு முடித்தார்கள். மகாலிங்கம் பிளேட்டை எடுத்துக் கொண்டிருந்தபோது பரிஷித் தடுத்தான்— 'அங்கிள்! அது என் வேலை! விடுங்கள் நீங்கள்.''

''பரவாயில்லை பரிஷித்.''

''ஊஹூம் என் வேலையை நீங்கள் செய்ய வேண்டாம். இனி உங்களுக்கு ரெஸ்ட்'' என்று தானே மூவர் தட்டுக்களையும் எடுத்து சிங்க்கில் போட்டு குழாய் நீரில் கழுவி வைத்து விட்டான்.

* * *

சாம்பவி படுக்கப் போவதற்கு முன்னால் அவனு விக்ஸை எடுத்துத் தந்துவிட்டு மார்பில் தடவிக் கொள்ள சொன்னாள்.

மகாலிங்கம் தூங்கிவிட்டார்.

''என்னால் தடவிக்க முடியாது'' என்றான்.

''ஜலதோஷம் அதிகமாயிடும்.''

''ஆகட்டும்.''

''ஏன் தடவிக்க மாட்டீங்க?''

அவன் பதில் பேசவில்லை. சட்டையின் பொத்தான் கள் விடுபட்டு ரோமம் மண்டிக்கிடந்த அவன் மார் தென்பட்டது.

சாம்பவி சங்கோஜத்துடன் அங்கிருந்து போய் திரும்பினாள்.

''கொஞ்சநேரம் என் பக்கத்தில் உட்கார்ந்திருக்க கூடாதா?'' கேட்டான்.

சாம்பவி திரும்பிப் பார்த்தாள்.

அவன் கண்களில் குறும்புத்தனமோ வயதால் தன் காட்டும் ஆசையோ இல்லை.

''நீ என் பக்கத்தில் உட்கார்ந்திருந்தால் எனக்கு மிக சந்தோஷமாய் இருக்கிறது சாம்பவி என்ற வேண்டுகோள் தான் இருந்தது.

சாம்பவி வந்து அவன் கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள்.

அவன் சாம்பவியின் கையை எடுத்துக் கண்கள் மேல் வைத்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டான். கொஞ்ச நேரங்கழித்துச் சொன்னான்—

''சாம்பவி! இன்று மாலையில் நடந்ததை நினைத்தால் நான்தானான்னு தோணுகிறது.''

''ஏன் அந்தச் சந்தேகம்?''

''என்னிடம் இன்னும் அவ்வளவு சக்தி இருக்கான்னு தான்'' அவன் ஆச்சரியத்தோடு தனக்குள் சொல்லிக் கொள்வது போல சொன்னான்.

சாம்பவிக்கு ஒரு வினாடிக்கு முன்னால் அவனை நெருங்கி வருவதற்கு அவளுள் ஏற்பட்ட வெருப்பும், பயமும் பறந்து விட்டன.

''நீங்கள்...நீங்கள் மனம் வைத்தால் இதுபோல இன்னும் நிறைய செய்ய முடியும். உங்க மனதில் சக்தி இருக்கிறது பரிஷித். அங்கிள் என்ன சொல்கிறார் தெரியுமா? உங்களுக்கு ஏதாவது பிஸினெஸ் வைத்துத்தரப் போகிறாராம். டாக்டர் கூட உங்களைப்பற்றி எவ்வளவு சந்தோஷப்படுகிறார் தெரியுமா?'' சாம்பவி பாட்டிலில் இருந்த விக்ஸைக் கையில் எடுத்துக்கொண்டு அவன் மார்பில் தடவத் தொடங்கினாள். அது மிகச் சாதாரண தினசரி நிகழ்ச்சியாய் இருந்தது.

''நான் உனக்கு நன்றி சொல்லணும்.''

''எதுக்கு?''

''என் இந்தச் சக்திக்கு நீதான் காரணம். திரும்பவும் வாழ்க்கை மேல் ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது.''

''புகழ்வதை நிறுத்துங்கள். இல்லாவிட்டால் நான் போய்விடுவேன்.'' சாம்பவி எழுந்திருக்கப் போனாள். அவன் அவள் கையைப் பிடித்துத் தடுத்தான். உட்கார்ந்து விட்ட சாம்பவியை அவன் கிட்டே இழுத்துக் கொண்டான். அவன் கை சாம்பவியின் கழுத்தைச் சுற்றிப் படர்ந்தது. அவள் முகம் கிட்டே வந்து அவன் முகத்தோடு உராய்ந்தது. ''என்னை விட்டுட்டு ஒரு நாளும்

போயிடாதே சாம்பவி! உண்மையைச் சொல்றேன், என்னால் உயிரோடு இருக்க முடியாது'' என்றான். அவனுடைய உஷ்ணமான மூச்சுக்காற்று அவள் முகத்தில் பட்டுக் கொண்டிருந்தது! அவன் கைகளை நீட்டி சாம்பவியின் உடலை அல்ல—மனதை அணைத்துக்கொண்டாற் போலிருந்தது.

22

சாம்பவி பரிஷித்தின் ஆரோக்கியம் நன்றாய் திடமாக வேண்டும் என்றெண்ணி அநேக அக்கறைகளை எடுத்துக் கொண்டாள். நாகமணி சொன்ன ஆலோசனைப்படி தினந்தோறும் காலையில் ஆம்லெட் பண்ணி சாப்பிடச் செய்வாள்.

சிலநாள் பரிஷித் அலுத்துக் கொள்வான்.

''அப்பப்பா! சாம்பவி! இதைச் சாப்பிட்டுச் சாப்பிட்டு அலுத்துப் போயிடுத்து.''

''நல்லவரோனோ! இன்னும் ஒரே ஒரு மாதம் இப்படி சாப்பிட்டால் உடம்பு நன்றாயிருக்கும்.''

''இப்ப எனக்கென்னவாயிடுத்து? நன்றாய்தானே இருக்கேன்?''

''நன்றாய்தான் இருக்கீங்க. ஆனால் டாக்டர் என்ன சொன்னார்? நீங்க இன்னும் வெயிட் போடணும்னு சொல்லலையா?''

''சீ! அவர் ஒன்று''—அலுத்துக் கொண்டான்.

''இந்த ஒண்ணே ஒண்ணு''—

சாம்பவி தட்டில் போட்ட கடைசி ஆம்லெட்டை சாப்பிட்டுக் கொண்டே கேட்டான்—''ஆமாம்! நான் இவ்வளவு பலத்தைக் கூட்டிக்கொண்டு என்னத்தைச் சாதிக்கணும்?''

''உலகத்தில் சாதனை புரிவதற்கு நிறைய இருக்கு. நமக்குப் விருப்பமும், உடம்பில் சக்தியும் இருக்கணுமே தவிர...''

''உதாரணத்துக்கு...''

''எங்க அரவணைப்பு இல்லம் இருக்கிறதல்லவா? குழந்தைகளுக்கு அதன் எல்லைக்குள் ஒரு பார்க்கை நிர்மாணிக்க வேண்டும்னு சொன்னேன் அல்லவா?''

ஆமாம் என்பது போல தலையாட்டினான் அவன்.

சாம்பவி போகத் திரும்பியபோது கூப்பிட்டான் அவன். ''ஆமாம், எப்பப் பார்த்தாலும் மற்றவங்களுக்காகவேதானா? உனக்குன்னு நீ எதுவுமே யோசிக்க மாட்டாயா?'' கேட்டான்.

''எனக்கா? சாம்பவி அழகாய் சிரித்தாள்'' எனக்கு அங்கிள் இருக்கிறார். நீங்கள் இருக்கீங்க. எனக்கு வேண்டியதெல்லாம் உங்களிடம் கிடைத்துவிடுகிறது. எனக்கு வேறென்ன குறை, சொல்லுங்க! தெய்வம் எனக்கு இவ்வளவு அதிர்ஷ்டத்தைக் கொடுத்திருக்கும்போது... நான் சுகமாய் நிம்மதியாய் இருக்கிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

பரிஷித் மாலையில் எப்பொழுதாவது தனக்கு வேலை அதிகமாய் இல்லாதபோது, ஸ்கூட்டரில் ஆசிரமத்திற்கு வந்து சாம்பவியை அழைத்துக்கொண்டு போவான்.

முதல் தடவை அவன் வந்ததுமே சாம்பவி குழந்தைகள் எல்லோரையும் பரிச்சயம் செய்துவைத்தாள். பேபி, ரவி, கோபி முதலியவர்கள் பண்ணிய கைவேலைகளைக் காட்டினாள். சேஷனைப்பற்றிச் சொல்லத் தேவை யில்லை. கண் தெரியாவிட்டாலும் இவன் பண்ணாத வேலை இல்லை.

அஞ்சலை பரிஷித்தைப் பார்த்து ஆச்சரியமடைந்த வளாய் கன்னத்தில் கைவைத்துக் கொண்டாள். ''அட! அந்த எலும்புக்கூட்டு ஆசாமிதானா இந்தத் தொரை? என்னாலேயே நம்பமுடியலீங்களே! ஓ யம்மா! என்ன அழகு நிறங்க! தங்கமாய் மின்னுராருங்களே!'' என்று மெச்சிக் கொண்டாள்.

சாம்பவி சுமித்ரா தேவியைக் கூட பரிஷித்திற்குப் பரிச்சியம் செய்து வைத்தாள். ''பரிஷித்! சாம்பவி எப்பொழுதும் உங்களைப் பற்றி சொல்லிட்டேயிருப்பாள் எங்களுக்கு வயசாயிடுத்து. எங்களால் முடிந்ததைப செய்தோம். உங்களைப் போன்ற இளைஞர்கள் எங்கள் சாம்பவியைப் போல இப்படிப்பட்ட காரியங்களில் பங்கெடுத்துக்கொண்டு செய்ய வேண்டியவைகளை உற்சாகத்துடன் செய்ய வேண்டும்'' என்று ஊக்கமளித் தாள். அதற்குள் அவ்விடத்திற்கு ரூபா வந்தாள். கைப் பையைத் திறந்து சுமித்ராதேவிக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு பணத்தை எடுத்துத் தந்துகொண்டே—

''மேடம் எங்கம்மா இதைக் கொடுத்தனுப்பினாங்க இப்போதைக்கு டிக்கெட் விற்றதில் இவ்வளவு வசூலா சாம்'' என்றாள்.

''நாங்க வரோம் மேடம்'' சாம்பவியும் பரிஷித்தும் எழுந்தார்கள்.

ரூபா திரும்பிப் பார்த்தாள். ஆச்சரியமடைந்து விட்டாள். அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள்.

ரூபா சுமித்ரா தேவியைப் பரபரப்புடன் கேட்டாள்

''இவன் யார் மேடம்?''

''யாராவது? சாம்பவியின் கனின். வி ஈஸ் எ நைஸ் பாய்'' அவள் வார்த்தைகள் முடியக்கூடவில்லை. ரூபா சரேலென்று எழுந்து தாழ்வாரத்தில் நடந்து சென்று கொண்டிருந்த வர்களிடம் ஓடிவந்தாள்.

''ஹாய்'' என்றாள்.

பரிஷித் வியப்போடு பார்த்தான்.

'சார், உங்க பேரு?''

அவன் பொருள் பொதியப் பார்த்தானே தவிர பதில் சொல்லவில்லை.

''பரிஷித்'' சாம்பவி தானே பதிலளித்தாள்.

ரூபா சட்டென்று அவன் கையைப் பற்றிக் கொண்டு குலுக்கிகொண்டே உற்சாகத்துடன்—''க்ளாட் டு மீட் யூ சர்.'' ஐயாம் வெரிவெரி ஹாப்பி'' என்று அவன் முகத்தைப் பார்த்தாள்.

பரிஷித் கையை விடுவித்துக் கொண்டான்.

''எதுக்கு? காரணம் என்ன?'' சாம்பவி கேட்டாள்.

''அதற்கு ஒரு பெரிய கதை இருக்குங்க'' என்று அவன் பக்கமாய் திரும்பி— ''சார், நீங்க எங்கே இருக் கீங்க?'' என்றாள்.

அதற்கு அவன் பதில் பேசவில்லை. போய்க்கொண்டே யிருந்தான். ''நாங்களா? சிவாஜி பார்க்குக்குப் பக்கத்து சந்தில்'' சாம்பவி பேசிக்கொண்டிருக்கையிலேயே அவன் அவள் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் விட்டான்.

''சிவாஜி பார்க்குக்குப் பக்கத்து சந்து''—ரூபா மனப் பாடம் பண்ணிக்கொண்டாள்.

இருவரும் ஸ்கூட்டரில் திரும்பி வந்து கொண்டிருக்கையில் சாம்பவி, ''அந்தப் பொண்ணு யாரு?'' — என்று கேட்டாள்.

''அதையேதான் நானும் உன்னைக் கேட்கவிருந்தேன்'' என்றான்.

''உங்களுக்குத் தெரியாதா?'' என்றாள் சாம்பவி.

''தெரிந்திருந்தால் தெரியாததுபோல நாடகமாடியிருப்பேனா?'' அவன் கோபமாய் சொன்னான். அதற்குள் இன்னொரு ஸ்கூட்டர் அலனைத் தாண்டிப் போகவே, பரிஷித் விர்ரென்று அதை ஓவர்டேக் பண்ணினான்.

''அடிக்கடி பார்க்கிறேன், ஏன் இப்படி ஓவர்டேக் பண்றீங்க?'' என்றாள்.

''அது என் பழக்கம்'' என்றான்.

வீட்டிற்குத் திரும்பிவந்த பிறகுகூட அவன் கோபமாய்தான் இருந்தான்.

சாம்பவி அவனுக்குத் தேநீர் கலந்துகொண்டு வந்து தந்தபோது— ''என்னை சந்தேகப்படுகிறவங்க எனக்கொன்றும் தேநீர் தரத்தேவையில்லை'' என்றான்.

''அதான் சாரீன்னு சொல்லிட்டேனே'' என்றாள் சாம்பவி முறுவலுடன்.

''உம். இனி ஒரு நாளும் அப்படிக் கேட்காதே'' என்றான் அவன் தேநீர் கோப்பையை வாங்கிக்கொண்டே. அன்றிரவு சாப்பிட்டு முடித்த பிறகு அவன் தட்டுத் தடுமாறிக்கொண்டே— ''அந்தப் பசங்களைப் பார்த்தால் உனக்கு அருவருப்பாய் இல்லையா?'' சாப்பவி படித்துக் கொண்டிருக்கையில் கேட்டான்.

''ஊஹூம். அவங்களைப் பார்த்தால் எனக்குச் சந்தோஷமாய் இருக்கும்'' என்றாள்.

''ஏன்?'' என்று கேட்டான்.

''அவங்களை தெய்வம் ஏதோ ஒரு விதத்தில் ஊனமாய் படைத்துட்டார். ஆனாலும் சரி, அவங்க அந்தக் குறையைப் பார்த்து திகிலடைந்துப்போய் தாம் துரதிர்ஷ்டசாலிகள் என்று திட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கவில்லை. சாகப்போவதாய் தற்கொலை முயற்சிகூட பண்ணவில்லை. தம்மிடமுள்ள சக்தியை வெளிக்காட்ட முயற்சித்து, அதன்மூலம் பிழைக்க வழிதேடிக்கொண்டிருக்கிறார்கள். சந்தோஷமாய் இருக்கிறார்கள்! அவர்கள் உடலளவில் பலவீனமானவர்களாய் இருக்கலாம். ஆனால் மனத்தளவில் பலசாலிகள்! அவர்களுக்கு மற்றவர்கள் மீது வெருப்பில்லை. தம்மையே திட்டிக்கொண்டு அழகாய் இருக்கிறவங்களை துவேஷித்துக்கொண்டு வாழ்நாளை வீணடிக்கமாட்டார்கள். வாழ்க்கையை இருப்பதற்குள் எப்படி சந்தோஷமாய் கழிப்பது என்று மட்டுமே பார்ப்பார்கள். உடல் குறைபாட்டை தம் வாழ்க்கையில் ஒரு பாகமாய் ஈடுகட்டிக்கொண்டு போவார்கள். அதை மெச்சவேண்டியது பரிஷித்!

நான் அவங்களையும் பார்க்கிறேன். என் சுற்றுப் பக்கத்திலிருக்கிற சாதாரண ஜனங்களையும் பார்க்கிறேன் இவர்கள் உடலளவில் எந்தக் குறைபாடும் இல்லாத ஆரோக்கியமானவர்கள் — அழகானவர்கள். ஆனால் மனத்தளவில் மிகக் குரூபிகள். அடுத்தவங்களைப் பார்த்தால் வெருப்பு, பொறாமை, தம்மிடம் இருப்பதைக் கொண்டு சந்தோஷப்படாமல் இல்லாததற்காக எப்பொழுதும் தவித்து, நிராசையை ஏற்படுத்திக்கொண்டு தம் வாழ்வை நரகமாக்கிக்கொள்வார்கள். சுற்றிலுமிருக்கிறவங்க வாழ்க்கைகளைக்கூட வேதனை மயமாக்கி விடுவாங்க. இவங்க ஆசைங்களுக்கு அளவே இருக்காது! எப்பொழுது பார்த்தாலும் எதற்காவது தவிப்பு. எதற்கோ வேட்டை! நம்மில் நூற்றுக்கு எண்பது சதவீதம் பேர் இப்படித்தான் வாழ்க்கையை வீணாக்கிக்கிறாங்க. எனக்கு அவங்களைப் பார்த்தால் இரக்கமாயிருக்கிறது.

புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டிருந்த பரிஷித் எழுந்து சாம்பவியின் நாற்காலிக்குப் பின்னால் வந்து நின்றான். சாம்பவியின் நாற்காலிமேல் கையை ஊன்றிக் கொண்டே—''நீ சொன்னது நிஜந்தான் சாம்பவி. எனக்குப் புரியாத விஷயம் என்னவென்றால் உனக்கு இவ்வளவு விவரமாய் யோசிக்கிற சக்தி எப்படி வந்தது என்றுதான்''.

''சிறு லயதிலிருந்தே நிறைய கஷ்டங்களை அனுபவித்திருக்கிறேன்''.

''கஷ்டப்பட்ட ஆள் நெகடிவ் யோசனைக்குத்தானே போவான்?'' என்றான்.

''இல்லை! ஒருக்கால் எங்கப்பா எனக்குச் சிறு வயதிலிருந்தே எல்லாவற்றையும் விவரித்துச் சொல்லியிருந்தாலோ என்னவோ, வளர வளர எனக்கு விஷயங்களைப் பற்றி யோசிக்கப் பழக்கப்பட்டுப் போய்விட்டது''.

''அப்படிப்பட்ட தந்தை இருந்தது எவ்வளவு அதிர்ஷ்டம்!''

''ஆமாம். எனக்கு எங்கம்மாவைத் தெரியாது. நான் பிறந்த பன்னிரெண்டாவது நாளே செத்துட்டாங்களாம். அப்பாதான் எனக்கு அம்மாவாகவும் அப்பாவாகவும் இருந்து வளர்த்தார்.''

''நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி.''

சாம்பவி தலையைத் தூக்கிப் பின்னால் நின்று கொண்டிருந்த அவனைப் பார்த்து—''நீங்கள் இல்லையா கிறீங்களா?'' என்றாள்.

அவன் நாற்காலியின்மேல் குனிந்தபடி சாம்பவியின் கண்களைப் பார்த்தான். மிகத் தாழ்ந்த குரலில்—''இதுவரைக்கும் அப்படித்தான் நினைச்சுட்டிருந்தேன். இப்பொழுது இல்லை'' என்றான்.

''ஏன்? என்ன காரணம்?''

அவன் சாம்பவியின் நெற்றியின்மீது தடவிக்கொண்டே, ''இப்பொழுது எனக்கு சாம்பவி என்ற சிநேகிதி கிடைத்திருப்பதால்!'' என்றான். அவன் கண்கள் அவ்வார்த்தைகளை மிக அருமையாய் சொல்லிக்கொண்டிருக்கிறாற்போல எடுத்துக் காட்டின.

23

பரிஷித் அந்த மாதத்தில் எப்பொழுதும் தருவதைவிட அதிகப் பணம் தந்தான்.

''இதென்ன?'' என்றாள் சாம்பவி வியப்படைந்தவளாய்.

''சாயந்திரம் நாலு மணியிலிருந்து ராத்திரி எட்டு மணி வரைக்கும் 'சிதம்பரம் மோட்டார் ட்ரைவிங் ஸ்கூலில்' ட்ரைவிங் கற்றுத் தருவதற்கு வேலையில் சேர்ந்திருக்கிறேன்.''

''ஏன்? அந்த அவசியம் ஏன் வந்தது? நமக்கு இப்பொழுது பணம் போதவில்லையா என்ன? உங்களிடந்தான் சொல்லிட்டேனே, மாதந்தோறும் ஐநூறு ரூபாயை மீத்து பாங்கில் போட்டிட்டிருக்கேன்னு'' என்றாள் சாம்பவி.

"நீ வீட்டிற்கு வருவதற்குள் ராத்திரி எட்டு மணி ஆ விடுகிறது. அதுவரை நான் என்ன செய்யறது? ஐந்து மணிக்கே வீட்டிற்குவந்து உட்கார்ந்துவிட்டால் போரடி கிறது. அங்கிள் ஒன்பது மணி வரை வீடியோ ரெரியை விட்டு லரமாட்டார்."

"என்ன செய்றது பரிஷித்? ஆசிரமத்தில் குழந்தை களுக்கு சாப்பாடு போடச் சொன்னால் சமையல்கார சமையலையெல்லாம் விழுங்கி ஏப்பம் விட்டுட்டுப் பசங்க வயிற்றைக் காயப் போட்டு விடறாங்க. அஞ்சலை சொல் னால் கேட்கமாட்டாங்க. அதனால் ஏழு மணிக்கு அவங் சாப்பாட்டையெல்லாம் பார்த்துட்டு வந்துட்டிருக்கேன்" என்றாள் சாம்பவி.

"நாளைக்கு கல்யாணமாயிட்டால் என்ன பண்ணு வாய் சாம்பவி?" என்று சிரித்துக்கொண்டே கேட்டான்

"கல்யாணம் ஆயிட்டவா?" சாம்பவியின் கண்கள் யோசனையுடன் பார்த்தன. "ஊஹூம். என்னைப் புரிந்துகிட்டு ஆசிரமத்தில் வேலை பண்ண விரும்பும் நபரைத்தான் பண்ணிப்பேன். முன்பே சொல்லிவிடு கிறேன். ஆசிரமம் என் உடம்பில் கால் கையைப்போல என் வாழ்க்கையில் அதுவும் ஒரு முக்கியமான பாகம்" என்றாள்.

பரிஷித் சிரித்தான்.

"வரவன் ஒப்புக்காவிட்டால்?"

'ஒப்புக்கிறவனைத்தான் பண்ணிப்பேன்."

சாம்பவி பணத்தை எடுத்து பீரோவில் வைத்த போன பொழுது பரிஷித் பின்னாலிருந்து சொன்னான்

"அந்தப் பணத்தை பேங்கில் போடவேண்டாம்."

"வேறென்ன செய்றது?"

"அங்கிளுக்கும் உனக்கும் வேறு ஏதா □ 215
னும்"

"எனக்கு எதுவும் தேவையில்லை. அங்கிளுக்கு..." தபோது

"சாம்பவி யோசித்தாள். 'ஆங்! அங்கிளுக்கு பாலம் அந்த சாய்வு நாற்காலி சரியாய் இல்லை. அவஸ்தைப் படுகிறார். அந்தக் காலத்து டைப் சாய்வு நாற்காலி— கொஞ்சம் அகலமாய் பின்னுக்குச் சாய்ந்து படுத்துக் கொள்ள வாகாய் நன்றாய் இருக்கும்" என்றாள்.

"கடைக்குப் போவோமா?" என்றான் அவன் உடனே.

பத்து நிமிஷங்களில் ரெடியாகி இருவரும் கடைக்கு வந்தார்கள். அந்த ரகமான சாய்வு நரற்காலி எந்தக் கடையிலும் கிடைக்கவில்லை. நிறைய பேர் கடைக்காரர் களுக்கு அப்படிப்பட்ட சாய்வு நாற்காலியைப் பற்றிக் கேட்டபோது புரியக்கூடவில்லை. கடைசியில் ஒரு பழைய மர சாமான்களை விற்கும் தச்சனிடம் கிடைத்தது. அதிர்ஷ்டவசமாய் அது புதிதாய் இருந்தது. ஒரு டாக்டர் செய்யச் சொல்லி ஆர்டர் தந்து விட்டு அமெரிக்காவி லிருந்த தன் மகனிடம் போய் விட்டாராம் கடைக்காரன் விலை அதிகமே சொன்னான்.

சாம்பவி போராடிக் கொண்டிருக்கையில் பரிஷித் கண்களாலேயே கடிந்து கொண்டான். அங்கே பக்கத்தில் டிரெஸ்ஸிங் டேபிள் இருந்தது. அதற்கு தொலைவில் அருகருகில் நின்று கொண்டிருந்த சாம்பவி- பரிஷித்தின் உருவங்கள் தென்பட்டுக் கொண்டிருந்தன அதில்.

சாம்பவி பரிஷித்தின் உருவத்தை அதில் பார்த்து அழகு காட்டினாள். அவன் உதட்டில் முறுவல் தவழ்ந்தது.

சாய்வு நாற்காலியை வீட்டிற்கு அனுப்பி வைக்கச் சொல்லி பரிஷித் விலாசத்தைத் தந்தான். இருவரும் வீட்டிற்குத் திரும்பினார்கள்.

ணி எட்டடித்தது. சாம்பவி சமையல் செய்
"நீ வீட்டிலிருந்தாள். வீட்டிற்கு முன்னால் சந்தடி கேட்டது
விடுகிறது ார்?" என்றாள்.
மணி
"சாய்வு நாற்காலி வந்திருக்கு" என்றான் பரிஷித்.

சாம்பவி சந்தோஷத்தோடு வெளியே வந்தாள். சாய்வு நாற்காலியை ஜன்னலோரமாய் காற்று அதிகமாக வரும் இடத்தில் போடச் செய்தாள். அதற்குப் பக்கத்திலேயே சின்ன ஸ்டூலைப் போட்டாள். அங்கிள் ஜெகதீஷ் குடித்தால் சாம்பலைத் தட்ட ஆஷ்ட்ரேயை வைப்பதற்கும், புத்தகங்களை வைத்துக் கொள்வதற்கும், டிராஸ்டரை வைத்துக் கொள்வதற்கும் அது பயன்படும்.

அடுத்ததாய் டிரெஸ்ஸிங் டேபிளைத் தூக்கிக்கொண்டு வந்து போட்டார்கள் ஆட்கள்.

"இதென்னது?" ஆச்சரியமடைந்தவளாய் கண்கள் அகல விரியக் கேட்டாள்.

"இதை டிரெஸ்ஸிங் டேபிள் என்பாங்க" என்றான் பரிஷித் முறுவலுடன். டிரெஸ்ஸிங் டேபிளைக் கொண்டு வந்து வைத்துவிட்டு ஆட்கள் போய்விட்டார்கள்.

சாம்பவி இன்னும் ஆச்சரியத்திலிருந்து மீளாதவளாய் முன் அறையில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்

பரிஷித் வாசல் கதவைச் சாத்திவிட்டு வந்தான். சாம்பவியின் கைகளைப் பிடித்துக் கொண்டு அறைக்குள் அழைத்துச் சென்றான். பின்னாலிருந்து அவள் தோளில் கைவைத்து டிரெஸ்ஸிங் டேபிளுக்கு முன்னால் நிற்க வைத்து— "இது உனக்கு. கடையில் பார்த்ததுமே இது உனக்குப் பரிசுன்னு நினைச்சுட்டேன்" என்றான்.

சாம்பவி இன்னும் வியப்பிலிருந்து மீளவில்லை.

"இதை எப்ப வாங்கினீங்க?" என்றாள்.

"நீ அந்த ஃபர்னிசர்களைப் பார்த்துட்டிருந்தபோது கடைகாரனோடு பேசினேன்."

"பணம்?"

"அதைப்பற்றி நீ கவலைப்படாதே. எப்படியிருக்கு? அதைச் சொல்லு?

"ரொம்ப நன்றாயிருக்கு. பரிஷித் இதன் விலை?" கவலையோடு கேட்டாள்.

பரிஷித் சாம்பவியின் பக்கத்தில் வந்து நின்று கழுத்தைச் சுற்றிலும் கைகளைப் போட்டுக் கொண்டே "விலையைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்னு சொல்லலையா?" என்றான்.

சாம்பவி கண்ணாடியில் பரிஷித்தின் முகத்தைப் பார்த்தாள்

"ஹலோ" அவன் சாம்பவியின் உருவத்தைப் பார்த்துச் சொன்னான்.

"நமஸ்காரம் பரிஷித் அவர்களே" என்றாள் சாம்பவி கைகளைக் கூப்பி. கண்ணாடி உருவத்தில் அவன் சிரித்துக் கொண்டிருந்தான். நிமிர்ந்து வாய்விட்டுப் பெரிதாய் சிரித்தபோது அவன் முகம் மலர்ந்து பார்க்கத் தெவிட்டாததாய் இருந்தது.

சாம்பவியும் சிரித்துக் கொண்டிருந்தாள். "தாங்க்ஸ் பரிஷித்" என்றாள்.

"எதுக்கு?"

"இதை எனக்குத் தந்ததற்கு" கண்ணாடியைச் சுட்டிக் காட்டிச் சொன்னாள்.

"நீ எனக்கு தாங்க்ஸ் சொல்றதா? நான்தான் உனக்கு வாழ்நாளெல்லாம் சொல்லணும். இதுவரை உனக்காக எதையாவது ஒன்றை செய்து தாங்க்ஸ் சொல்லப் பழகிட்

டேன் இல்லையா? அதுதான் இனி வாங்கத் தொடங்
விடும். இன்றைக்கு இந்தக் கண்ணாடிதான் நீ
உனக்குச் சொல்ற தாங்க்ஸ்'' என்றான் டிரெஸ்ஸ
டேபிளின் மீது உட்கார்ந்து கொண்டு

''ஐயோ, வேண்டாம் வேண்டாம். நீங்க தாங்க்
சொல்றது எப்பொழுதோ முடிஞ்சு போயிடுத்து
என்றாள் பதறியபடி.

''ஒன்றும் முடியலை. சொல்லப்போனால் இப்
தான் தொடங்கியிருக்குன்னு வெச்சுக்கோ.''

''பரிஷித்! வேண்டாங்கலை?'' கோபத்தை வரவழை
துக் கொண்டாள். ''இந்தமாதிரி பரிசுகள் கொடு
கணும்னு ஏதாவது இருக்கா?''

''வேண்டாம்னு சொல்ல உனக்கு உரிமையில்ல
டியர்.''

''மைகாட்! என் வார்த்தைகளையே எடுத்து வீசு
களா என்னிடம்?''

''உம்'' தீவிரமாய் சொல்லப் போனவன் சாம்பவியி
முகத்தைப் பார்த்துவிட்டு பக்கென்று சிரித்துவிட்டான்.

''உம், பரிஷித் உர்ரென்று வைத்துக் கொண்டா
முகத்தை.

''என்னைப் பார்த்துச் சிரிக்கிறீங்க இல்லே? எனக்
கோபம் வரது. நான் போகிறேன்'' —சாம்பவி போ
திரும்பினாள்.

அவன் சட்டென்று தடுத்து நிறுத்தினான். வேக
இழுத்ததால் அவள் அவனுக்கு அண்மையில் வந்து சே
தாள். சாம்பவி தொலைவிற்குப் போக முயன்றபோ
அவன் இடது கை அவள் இடுப்பைச் சுற்றிக் கொண்ட
அவன் அவள் மார்பில் முகத்தைப் பொத்திக்கொண்டா

''ஊஹூம், நகராதே'' என்றான் அன்போடு.

சாம்பவி கண்ணாடியில் தென்பட்ட இருவர் முகத்தை
பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கே ஆச்சரியமாய் இருந்தது. இருவரும்
இவ்வளவு நெருக்கமாய் எப்பொழுது ஆனார்கள்?
இருவருக்குமிடையேயிருந்த தயக்கமும் சங்கோஜமும்
எப்பொழுது மாயமாயிற்று?

அவன் சட்டென்று நிமிர்ந்து சாம்பவியின் தலையைத்
தாழ்த்தி உதட்டின் மீது ஆழ்ந்து முத்தமிட்டான்.

* * *

மதாலிங்கம் வந்ததுமே சாய்வு நாற்காலியைப்
பார்த்து, பரிஷித் வாங்கியதாய் கேட்டு மகிழ்ந்து
போனார்.

''அடடா! இவ்வளவு பணம் எதுக்குச் செலவழித்தா
யப்பா?'' என்றார்.

''அங்கிள்! நீங்க இப்படிச் சொன்னால் பரிஷித்திற்குக்
கோபம் வந்துடும். துள்ளிக் குதிப்பார்'' என்றான்
சாம்பவி.

''சே! வெருமே சொன்னேன். இது ரொம்ப அழகாய்
இருக்கு'' என்றார் அவர்.

சாம்பவி டிரெஸ்ஸிங் டேபிளைக் காட்டினாள். அவர்
இன்னும் மகிழ்ச்சியடைந்தார். ''இது ரொம்ப அவசிய
மானதுதான்'' அவர் தலையில் தட்டிக்கொண்டு—
''பார்த்தாயா இது எனக்குத் தோணவேயில்லை''
என்றார்.

''இல்லை அங்கிள். இதை எனக்காக நீங்க விட்டுக்
கொடுத்திருக்கிறாப்போல இருக்கு'' என்றான் பரிஷித்.
அவன் சாம்பவியை நோக்கித் திரும்பினான். சாம்பவிக்கு

ஒரு மணி நேரத்திற்கு முன்னர் கண்ணாடிக்கு முன்னால் நிகழ்ந்த சம்பலம் நினைவிற்கு வந்தது. அது ஒரு இனிய நினைவு! மெதுவாய் அங்கிருந்து நகர்ந்தாள்.

''பரிஷித்! என்னை ரொம்பவும் ஆச்சரியப்படுத்தி விட்டாய் இன்றைக்கு ரொம்பவும் சுகமாய், ஆனந்தமாய் இருக்கு'' என்றார் மகாலிங்கம் சாய்வு நாற்காலியில் சாய்ந்து படுத்துக்கொண்டே.

''உங்களை ஆச்சரியப்படுத்துவது எனக்கு த்ரில் அங்கிள்'' என்றாள் பரிஷித்.

சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டே சிகரெட்டைப் புகைத்துக்கொண்டிருந்த மகாலிங்கத்திற்கு வாழ்க்கை என்றுமில்லாத சுகமாய், சந்தோஷமாய் எந்தக் கவலையுமின்றி இருந்தது. மனதில் திருப்தி! அமைதி! போர் நிகழ்ந்த பிறகு அமைதியான சூழ்நிலையில் வீற்றிருக்கும் சேனை வீரனின் மனதைப் போலிருந்தது அவர் மனம்.



ஒரு மாதம் ஓடி விட்டது.

சாம்பவி ஆசிரமத்தின் ஆபீசிலிருந்து வெளியே வந்து பஸ் ஸ்டாண்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தபோது கேட்டிற்கு வெளியே பரிஷித் ஸ்கூட்டரோடு காத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தாள்.

''இதென்னது? சாயந்திரம் டிரைவிங் கற்றுத்தரப் போகவில்லையா?'' என்று கேட்டாள் கிட்டே வந்து

காலையில் எழுந்ததுமே அவனுக்கு காபி தருவாள். அவன் குளிக்க ஏற்பாடு பண்ணித்தருவாள். சமையல் செய்து முடிக்கும்வரை அவன் ஏதாவது உதவி பண்ணிக் கொண்டே சாம்பவியுடனேயே இருப்பான். இருவரும் சேர்ந்து சாப்பிடுவார்கள். அவரவர்கள் வேலைக்குக் கிளம்பிவிடுவார்கள். பிற்பகலில் ஏதோ ஒரு சமயத்தில் அவன் எங்கிருந்தாலும் சரி, எவ்வளவு வேலையிலிருந்தாலும் சரி, எந்த விதத்திலாவது சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு ஆசிரமத்திலிருக்கும் சாம்பவிக்குப் போன் செய்வான்.

மாலையில் வீட்டிற்குப் போன அரை மணிக்கெல்லாம் அவனும் வந்துவிடுவான். ஆனாலும் சரி! ஒரு மணி நேரங்கழித்து அவனைப் பார்த்தால் சாம்பவிக்கு எவ்வளவோ நேரங்கழித்துத் திரும்பிப் பார்ப்பதுபோல இருக்கும். அரவணைப்பு இல்லத்தில் அவன் குழந்தை

களைக்கொண்டு தோட்டம் போடச் செய்திருந்தான். தோட்டத்திற்கு நடுவே ஒரு ஊஞ்சலைக் கட்டித் தந்தான். அதையெல்லாம் பசங்களையும், அஞ்சலையையும் உதவிக்கு வைத்துக்கொண்டு அவனே செய்திருந்தான். பகுமையாய் இருந்த அச்சூழ்நிலையைப் பார்க்கும்போது சாம்பவிக்கு அவ்விடத்தில் பரிஷித்தைப் பார்ப்பதுபோலவே இருக்கும்.

அஞ்சலைக்கும் சேஷனுக்கும் அவன்மீது தனிப்பட்ட அன்பு. பேபியைப் பற்றியோ கேட்க வேண்டாம். அவன் வந்ததுமே குரலைக் கேட்டுவிட்டு எங்கிருந்தாலும் ஓடி வந்து விடுவார்கள் அவன் இப்பொழுது அவர்களோடு ஒரு பாகமாகிவிட்டான் 'பரிஷித் மிக நல்லவன். கஷ்டப்பட்டு உழைக்கிறவன்'— என்று சுமித்ராதேவிகூட புகழத் தொடங்கிவிட்டாள் ஒரிரு முறை சந்திரன்கூட வந்தான்.

ஒரு நாள் சாம்பவியும் சந்திரனும் பேபியும் பேசிக் கொண்டே மரநிழலில் நடந்து கொண்டிருந்தார்கள். அவன் பம்பாயில் தான் திறந்திருக்கும் ஆபீசு கட்டிடத்தைப் பற்றியும், அதிலுள்ள ஃபர்னிசர்கள், போன்களின் நிறங்கள், ஜன்னலைத் திறந்தால் தென்படும் சமுத்திரம், இரவு வேளைகளில் மினுமினுக்கும் விளக்கு வெளிச்சங்கள் முதலியவைகளைப்பற்றியெல்லாம் விவரித்துச் சொல்லிக் கொண்டேயிருக்க, சாம்பவி 'உம்' கொட்டிக்கொண்டேயிருந்தாலும் இடையிடையே அவள் கண்கள் தொலைவில் மரத்தடியில் குழந்தைகளுடனே வேலை செய்து கொண்டிருந்த பரிஷித் மீதே நிலைத்திருந்ததை கவனித்து விட்டு, "நீங்கள் என் பேச்சைக் கேட்கவேயில்லை நான் தான் லொட லொட வென்று பேசிக்கொண்டிருக்கிறேன்" என்றான். திடுக்கிட்ட அவள் 'கேட்கிறேனே' என்றாள்.

பரிஷித் காரேஜில் வேலை செய்துவருவதாய் தெரிந்து கொண்ட சந்திரன் 'பரிஷித்துக்கு நான் அதையும்விட நல்ல உத்யோகம் பார்த்துத் தரேன்' என்றான். சாம்பவி அவன் இவ்வாறு சொன்னதைப்பற்றி பரிஷித்திடம் சொல்லவில்லை.

பரிஷித் தற்சமயம் உத்யோகம் செய்துக்கொண்டிருக்குமிடத்தில் நன்றாகவே இருந்து வருகிறான். ஜம்பு அவனை உயிருக்கும் மேலாய் பாவித்து நடத்தி வருகிறான் சம்பளத்தை அதிகரித்திருக்கிறான். அதோடுகூட அந்த காரேஜ் அவள் வீட்டிலிருந்து ஆசிரமத்திற்கு வரும் வழியிலேயே இருந்தது. அதுதான் மிக சுகமாயிருந்தது.

பரிஷித் இன்று காலையில் காபி குடித்ததுமே வேலை இருப்பதாய் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

சாம்பவி ஆசிரமத்திற்கு வரும்போது வழியில் காரேஜிற்கருகில் நின்று அவனுக்கு சேரியரைத் தந்தாள். அவன் வாங்கிக்கொண்டிருந்தபோது அதே சமயத்தில் ராதிகா சிவப்பு மாருதி காரில் பிரசன்னாவோடு சேர்ந்து அங்கே வந்தாள். ராதிகா பரிஷித்தைப் பார்த்ததுமே, "ஹலோ" என்று அழைத்தாள். சாம்பவியைப் பார்த்ததுமே முகத்தைச் சுளுக்கிக்கொண்டாள். சாம்பவி என்ற பெண்ணையே தனக்குத் தெரியாது என்றாற்போல அவளுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு திரும்பி—"பரிஷித் சார், சௌக்கியமா? என் ஸ்கூட்டரை ரெண்டு தடவை சரி செய்திருக்கீங்க" என்றாள்.

"ரெண்டு தடவையில்லை, ஒரே தடவைதான். ஒட்டலுக்கருகில்" என்றான் அவன். ராதிகா பிரசன்னாவைப் பரிச்சயம் செய்தாள்.

பிரசன்னா மிக ஸ்டைலாய், காரில் சாய்ந்துகொண்டு செல்வந்தர் வீட்டுப் பையனாய், மிடுக்கோடு நின்றபடி பேசிக்கொண்டிருந்தான். இன்னும் இரண்டு கார்கள்கூட வந்தன. சாம்பவி புறப்பட்டுவிட்டாள். போகும்போது, "போயிட்டு வரேன் பரிஷித்" என்றாள்.

அவன் இந்த பக்கமாய் திரும்பிப் பார்க்கவில்லை. "உம்" என்றான்.

சாம்பவி ஆசிரமத்திற்கு வந்துவிட்டாள். பிற்பகலில் பரிஷித் எப்பொழுதும் போல போன் செய்யவில்லை.

சாயந்திரம் கூட செய்யவில்லை. எந்தப் போன் ஒலித்தாலும் பஷிரித் என்றெண்ணிக் கொண்டு மிகச் சந்தோஷத்தோடு ''ஹலோ'' என்ற சாம்பவிக்கு பேசியது வேறு யாரோ என்று தெரிந்ததுமே நிராசையே ஏற்பட்டது. சாப்பிட்டானோ இல்லையோ என்றெண்ணிக் கொண்டாள்.

அப்படியிருக்கையில் இப்பொழுது திடீரென்று அவன் கண்முன் தோன்றியதைப் பார்த்து அவளுக்கு மிக மகிழ்ச்சி ஏற்பட்டது. வந்து அவனுக்குப் பின்னால் ஸ்கூட்டரில் உட்கார்ந்து கொண்டாள்.

''சாப்பிட்டீங்களா?''

''ஆங்.''

சாம்பவி சீட்டைப் பிடித்து உட்கார்ந்து கொண்டாள்.

''என் இடுப்பைச் சுற்றிக் கைகளைப் போட்டுக் கொள்'' என்றான் அவன்.

சாம்பவி அவன் தோளில் கையை வைத்துக் கொண்டாள்.

''இந்தப் பக்கமாய் எங்கே?'' என்றாள். ஸ்கூட்டர் வீட்டுப் பக்கமாய் போகவில்லை.

''உன்னிடம் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல வேண்டும்'' என்றான்.

''என்ன?'' தோள் வழியாய் ஆர்வத்தோடு கேட்டாள்.

''சாப்பிடத்தான் போகிறாயே குறுகுறுவென்று கேட்பானேன்?''

''வீட்டில் சொல்லக்கூடாதா?'' கேட்டாள்.

''ஊஹூம்'' கச்சிதமாய் வந்தது பதில்.

ஸ்கூட்டர் நேராய் வந்து சின்ன குன்றிற்கருகில் நின்றது. குன்றின் மேல் முருகன் கோவில் ஒன்று இருந்தது.

அவன் மௌனமாய் படியேறினான். சாம்பவி அவனைத் தொடர்ந்தாள்.

அவன் நடுவில் சாம்பவியின் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டான்.

''இப்படி நாமிருவரும் வாழ்க்கையில் கூட நிறைய படிகளை ஏறணும்'' என்றான்.

சாம்பவி பக்கென்று சிரித்துவிட்டாள்.

''ஏன் சிரிக்கிறாய்?''

''நீங்க முணுமுணுக்கிறதைப் பார்த்தால் சிரிப்பு வரது.''

''முணுமுணுக்கிறேனா?''

''பின்னே என்ன? செய்யணும்னு எண்ணியதை செய்யணும். அதற்கு இந்த ஒளிவு மறைவான வார்த்தைகளும், எதிர்காலத்தைப் பற்றிய தர்க்கமும் எதுக்கு?

அவன் காற்றில் பறந்து கொண்டிருந்த கிராப்பை முன் விரல்களால் சரி செய்து கொண்டான்.

''நீ ரொம்பவும் பிராக்டிகலாய் பேசுகிறாய்'' என்றான்.

இருவரும் படியேறி மேலே வந்தார்கள். ஜனங்களோடு சேர்ந்து நடந்து கொண்டிருந்தார்கள். சாம்பவி மனதிற்குள் யோசிக்கத் தொடங்கினாள். இவன் சொல்ல போகிற அந்த முக்கிய விஷயம் என்னவாயிருக்கும்? வேறென்னவாயிருக்கும்?... அந்த யோசனை வந்ததுமே சாம்பவியின் கன்னங்களில் செம்மை படர்ந்தன. இதயம் படபடக்கத் தொடங்கிற்று. இது அவள் ஊகிக்காத விஷயம் ஒன்றும் இல்லை. ஆனாலும் சரி, எப்படியோ இருந்தது. உலக விஷயத்தை எந்த உணர்ச்சியுமில்லாமல் எடுத்துக் கொள்கிற அவள் சுபாவம் எங்கே போய் விட்டது?

ஒரு மிகச் சாதாரணப் பெண்ணைப் போல மனம் நெக்குருகிப் போய்க் கொண்டிருக்கிறதே!

இருவரும் உள்ளே போய் சுவாமியை தரிசித்து விட்டு, விழுந்து வணங்கிவிட்டு வெளியே வந்து எல்லோரும் உட்காரும் இடத்தைவிட்டு, இடது பக்கமாய் இருந்த மண்டபத்திற்கருகில் போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

சாம்பவி சுற்றுச் சூழ்நிலையைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். இருவருக்குமிடையே மௌனம்! அந்த மௌனம் இருவர் இதயங்களிலுமுள்ள உணர்ச்சிகளை ஒன்று சேர்க்க வேண்டும் என்று முயற்சித்துக் கொண்டிருந்தாற்போலிருந்தது

"சாம்பவி!" அவன் கூப்பிட்டான். அவன் குரல் மிகத் தயக்கத்தோடு, மந்திரஸ்தாயில் இருந்தது.

"உம்" எங்கோ பார்த்துக் கொண்டே பதில் அளித்தாள்.

"நான்... நான்" அவன் நிறுத்திக் கொண்டான்.

"உம்! என்ன?" அவனை ஊக்குவிப்பது போல சொன்னாள். என்னதான் சுவாதீனமாய் பழகினாலும் இப்படிப்பட்டவைகளைப் பேசுவது கஷ்டந்தான் என்று இப்பொழுதுதான் தெரிந்தது.

"நான் ரொம்ப முக்கியமான விஷயத்தைச் சொல்லப் போறேன்"

"சுமான். ஷூட் இட்" அசல் அங்கிள் சொல்வது போல சொன்னாள்.

"நீ இங்கே பார்."

எங்கோ பார்த்துக் கொண்டிருந்த சாம்பவி திரும்பி அவனைப் பார்த்தாள். கண்கள் அவன்மீது நிலைத்தன.

"நீ என்னைத் திட்டமாட்டாயே?" வேண்டிக் கொள்வது போலிருந்தது அவ்வார்த்தை.

திட்டுவதா? உள்ளுர வியப்படைந்து போனாள்.

"பிடித்த ஆண் ஒருத்தன் வந்து 'நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்கிறேன்' என்று சொன்னால் இந்த உலகத்தில் எந்தப் பெண்ணாவது திட்டுவாளா? அதுவும் அவள்! இதென்ன பைத்தியக்காரத்தனமான சந்தேகம் இவனுக்கு! சாம்பவியின் கண்களில் மின்னல் பளிச்சிட்டன. அந்த சந்தியா வேளையில் அப்பொன் முகம் மேலும் புடம் போட்டாற்போல தகதகத்தது.

"நான்..." அவன் நிறுத்தினான்.

சாம்பவியின் கன்னங்கள் செம்மையேறிக் கொண்டிருக்க, இயற்கையின் அழகு. ஆனந்தம் அவ்வளவும் அவள் முகத்திற்கு வந்து குடி கொண்டு விட்டாற்போலிருந்தது.

'உம், நீங்கள்?"

"நான் அடுத்த மாதத்தில் நடக்கவிருக்கிற மோட்டார் ராலியில் பங்கெடுத்துக்கலாம்னு நினைக்கிறேன் சாம்பவி.

சாம்பவியின் முகத்தில் முறுவல் இன்னும் சிதறவில்லை. ஆனால் கண்களிலிருந்த ஒளி குன்றிப்போய் விட்டது

"என்ன?" என்றாள்.

"அடுத்த மாதம், ஐதராபாத்தில் நடக்கவிருக்கிற சார்மினார் சேலஞ்சு மோட்டார் ராலியில், மோட்டார் ரிஸ்ட்டாய் பங்கெடுத்துக்க விரும்புகிறேன்."

"என்னது?" புருவங்கள் நெறியப் பொருள் பொதியப் பார்த்தாள்.

ஒரு சுந்தர உலகத்திற்குள் சிறகுகளை விரித்துக் கொண்டு பறந்து போய்க் கொண்டிருந்த சாம்பவியின் மனம், லகானிட்டு உண்மை நிலைக்கு இழுத்து வந்தாற் போல மெல்ல மெல்ல இந்த உலகத்திற்குத் திரும்பி வந்தது.

சாம்பவியின் கைகளைத் தன் கையிலெடுத்துக் கொண்டு சொல்லத் தொடங்கினான் பரிஷித்.

"ஜம்பு தன் தம்பியின் ஃபியட் காரைத் தருவதாய் சொன்னான். இதற்குள் யாருக்கும் சொல்லப் போலதில்லை நான், முக்கியமாய் அங்கிளிடம். அவர் மோட்டார் ரேலி என்றால் ரிஸ்க் இருக்கும்னு பயப்படுவார். என்னை வேண்டாம்னு சொல்லுவார். அதனால் முதலிலேயே நான் பங்கெடுத்துக்கப் போவதைச் சொல்ல விரும்பவில்லை. ஜம்புவின் மகனுக்கு ட்ரெயினிங் தந்துட்டிருப்பதாய் சொல்றேன்."

"அங்கிளிடம் பொய்யா?" சாம்பவி அது நடக்காத காரியம் என்பது போல பார்த்தாள்.

"இது அவரிடம் பொய் சொல்றதோ, மோசம் பண்றதோ இல்லவே இல்லை. அவரிடம் சொல்லாமல் நாமிருவரும் போய் சாய்வு நாற்காலியை வாங்கிட்டு வந்து ஆச்சரியப்படுத்தலையா அவரை? இதுகூட அப்படித்தான். அங்கிளுக்குக் கடைசி-தருணம் வரை நான் இதில் பங்கெடுத்துக்கப் போறது தெரியக் கூடாது. இதற்கு உன் உதவி வேணும்."

"ஆனால்" சாம்பவி தீவிரமாய் தடை சொல்லப் போனாள்.

மோட்டார் வாகனப் போட்டிகளைப் பற்றி முழுவதும் இல்லாவிட்டாலும் அவளுக்கு ஓரளவிற்கு நன்றாகவே தெரியும். சுமித்ரா தேவியின் மகன் ப்ரசன்னா அதில் பங்கெடுத்துக் கொள்வான். அவள் எப்பொழுதும் தலை

யாய் அடித்துக் கொள்வாள். ஆனால் அது மிக ஆபத்தானது

பரிஷித்தின் உடல்நிலை இப்பொழுதுதான் தேறி வருகிறது இப்பொழுதுதான் அவன் திடமாய், ஆரோக்யமாய் இருக்கிறான்.

"சாம்பவி! ப்ளீஸ்!" பரிஷித் கெஞ்சுவது போல தன் கைக்குள் இருந்த அவள் கையை அழுத்தினான். "நீ மறுத்துவிடாதே நீ மறுத்தால் நான் போகமாட்டேன். அந்த யோசனையையே விட்டுவிடுவேன். உடலளவிலும் மனத்தளவிலும் நான் முற்றிலுமாய் சரியாகிவிட்டேனா இல்லையான்னு என்னையே நான் பரிசோதித்துக்கொள்ள இது ஒரு அவகாசம். சாம்பவி! ப்ளீஸ்" கெஞ்சினாற் போல பார்த்த அவன் கண்களையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

அவன் அவ்வளவு தூரம் விரும்பி கேட்கிற அதை அவள் வேண்டாம் என்று மறுத்துவிட்டால், ஒருக்கால் அவன் அதை விட்டுவிட்டாலும் மனதில் நிராசை சூழ்ந்துக் கொண்டேயிருக்குமோ? என்ன பண்ணுவது? கூடாது என்று சொல்வதற்கு வாய் வரவில்லை. சரி என்று சொல்வதற்கும் மனம் ஒப்புக்கொள்ளவில்லை.

"என்ன சொல்கிறாய்?" கேட்டான்.

"ஆனால் பரிஷித், எனக்கு பயமாயிருக்கு."

"உனக்கு ஒரு பயமும் இல்லை. நான் எல்லா விஷயத்திலும் ஜாக்கிரதை எடுத்துக்கிறேன்." அவன் சாம்பவியின் உள்ளங்கையில் தன் கையை வைத்து சொன்னான்.

காற்றில் அவன் கேசங்கள் லேசாய் படபடத்துக் கொண்டிருந்தன.

அவன் கண்களில் ஒரு உறுதியும், பிடிவாதமும் தென்பட்டன.

அவன் அக்காரியத்தைப் பண்ண வேண்டும் என்று அவ்வளவு ஆசைப்படும்போது அவனை அதிலிருந்து தொலைவிற்கு இழுத்துக்கூட லாபம் இருக்காதே.

ஆனால் அங்கிளிடம் சொல்லாமல் செய்வது சாம்பவியின் மனதைப் பிடித்தறிந்து விட்டாற்போல அவன் சொன்னான்—'அங்கிளிடம் கடைசி நாள் சொல்லிக் கொள்கிறேன் சாம்பவி! அதுவரை இது நம்மிருவருக்கு மிடையே இருக்க வேண்டிய ரகசியம்! அங்கிள் ஒன்றும் சொல்லமாட்டார்! உனக்குத்தான் தெரியுமே சாம்பவி அங்கிளுக்கு திடீரென்று எதிர்ப்படும் ஆச்சரியமும் ஆனந்தமும் ரொம்பப் படிக்கும்னு! எதிர்பாராமலிருக்கும் போது நடந்தால்தான் வாழ்க்கையில் 'த்ரில்' என்பார். அவர் இந்த ஆச்சரியத்தை ரொம்பவும் எஞ்ஜாய் பண்ணுவார். வேணுமானால் நான் உன்னோடு பெட் கட்டுகிறேன். மொதல்லேயே சொல்லிட்டேன்னு வை! ஆப்கோர்ஸ் மொதல்ல லேண்டாம்னு ரகளை பண்ணினாலும் நான் பிடிவாதம் பிடித்தால் ஒப்புக்கொண்டு விடுவார். அவரை எப்படியாவது சம்மதிக்க வைத்துவிட முடியும் என்னால். ஆனால் இப்போதிலிருந்தே அவர் அதைப் பற்றியே யோசித்துக் கலவரப்பட்டுட்டிருப்பார். ஏஜ் கவலே பிளட் பிரெஷர் ஆள். அதனால் எனக்கு இஷ்டமில்லை. அவருக்கு ஏதாவது கொஞ்சம் உடம்பு கெட்டாலும் எனக்கு இந்த ராலியின் மீதே ஆர்வம் போய்விடும் கவனம் பிசகிவிடும்.'

"அங்கிளை நாம்ப மோசம் பண்றது ஆகாதா இது?" திரும்பவும் கேட்டாள்.

ஊஹூம்! அதான் சொன்னேனே! இதுவும் சொல்லாமல் கொள்ளாமல் சாய்வு நாற்காலியை வாங்கிப் போட்டவரது போலத்தான்! எனக்குப் போதைப்பொருள் பழக்கம் இருந்தபோது நான் அவருக்கு எவ்வளவு தலைக்குனிவை ஏற்படுத்தியிருப்பேன்! அவர் கொஞ்சம்கூட தளரவில்லை. பொறுமையாய் இருந்தார். அவருக்கு ரொம்பவும்

மதிப்பையும் மரியாதையையும் தரக்கூடிய காரியம் ஏதையாவது செய்யனும்னு எனக்கு ரொம்பவும் தவிப்பாய் இருக்கு. இது ஒன்றுதான் என்னால் முடிந்த வழியாய்த் தோன்றுகிறது. நான் மட்டுமேயில்லை, என்னோடு உன்னையும் கூட காரில் கூட்டிட்டுப் போறேன்" என்றான்.

"நானா?" வியப்படைந்தாள் அவள்.

"ஆமாம் நீயேதான்! நான் காரை டிரைவ் பண்றேன். நீ நேவிகேட்டராய் என்னோடு இருப்பாய்."

"அப்படீன்னால்?" புரியாமல் கேட்டாள்.

"நேவிகேட்டர் என்றால் காரை டிரைவ் செய்கிறவருக்குப் பக்கத்திலேயே இருந்துகொண்டு, ரோடில் தென்படுகிற அடையாளங்களைப் பார்த்துக்கொண்டே 'நோட்புக்'கைத் தன்னிடம் வைத்துக்கொண்டு அல்வப் பொழுது எவ்வளவு தூரத்தில் எது இருக்கிறது என்று எடுத்துச் சொல்லிக்கொண்டே, அதற்கு மேற்கொள்ள வேண்டிய ஜாக்கிரதைகளை எச்சரித்துக்கொண்டிருக்கும் பணி! உண்மையைச் சொல்லணுமானால் டிரைவர் ஜெயிப்பது ஐம்பது சதவீதம் இந்த நேவிகேட்டர் மீது தான் ஆதாரப்பட்டிருக்கிறது."

"எனக்குக் காரைப்பற்றி அ, ஆ, இ, ஈ, கூடத் தெரியாது." சாம்பவி பேந்தப் பேந்த விழித்தாள்.

அவன் தன் உள்ளங்கையால் அவள் உள்ளங்கையில் தட்டினான். "பயப்படாதே. வேண்டிய டயம் இருக்கிறது. நான் மொதல்ல டிரெயினிங் தரேன் உனக்கு."

"எனக்கு வராது பரிஷித்."

"உனக்கு வரும். பெட்! உன்னிடம் கிரகித்துக் கொள்கிற சக்தியும், ஞாபகசக்தியும் நிறைய இருக்கு. அதுபோதும்."

அவன் அரை மணி நேரம் அந்த மோட்டார் ராலியைப்பற்றி விவரித்துச் சொன்னான். சாம்பவி கேட்டுக்கொண்டிருந்தாள் ஆச்சரியத்தோடு! ஆனந்தமாய்!

அவள் நேரத்தைப் பார்த்துக்கொண்டான்.

''இனிப் போகலாமா? அங்கிள் வந்திருப்பார்'' என்றான்.

சாம்பவி எழுந்திருந்தாள்! ''அட! இருட்டிவிட்டதைப் பற்றியோ, விளக்குகள் எரியத் தொடங்கிவிட்டதைப் பற்றியோ நாமிருவரும் கவனிக்கவேயில்லை!''

சாம்பவி பரிஷித் இருவருமே கைகளைக் கோர்த்துக் கொண்டு விளக்கு வெளிச்சத்தில் குன்றிலிருந்து இறங்கி கீழே வந்தார்கள். குன்றின்மீது ஏறி வருவோரும் இறங்கிச் செல்வோருமாய் ஒரே கூட்டமாய் இருந்தது. அல்விருவரும் அதையொன்றையும் பொருட்படுத்தவில்லை. தாமிருவர் மட்டுமே அங்கு இருந்தாற்போல உல்லாசமாய் இறங்கி வந்துகொண்டிருந்தார்கள்.

இருவர் முகங்களிலும் உற்சாகம் பொங்கிக்கொண்டிருந்தது. ஒரு பெரிய காரியத்தை இருவரும் சேர்ந்து செய்யப் போகிறார்கள். அதுவும் ரகசியமாய்! வழியெல்லாமே கார் ராலியைப் பற்றியே சம்பாஷணை நடந்தது.

இருவரும் வீட்டிற்கு வந்தார்கள். மகாலிங்கம் அதற்குள் வந்துவிட்டிருந்தார். இருவரும் கலகலப்பாய் சிரித்துப் பேசிக்கொண்டே உள்ளே வந்தவர்கள் சட்டென்று நின்றுவிட்டார்கள்.

அவர் இருவரையும் கூர்ந்து பார்த்தார்.

இருவர் முகத்திலும் உற்சாகம் பொங்கிக்கொண்டிருந்தது. கண்களில் கோடிப் பிரகாசம் சுடர்விட்டுக் கொண்டிருந்தது.

''என்னடா? ஏதாவது விசேஷம் உண்டா? ஏதாவது என்னிடம் சொல்லணும்னு நினைக்கிறீங்களா?'' என்றார் அவர்.

''அங்கிள்'' என்றாள் சாம்பவி.

பரிஷித் மெதுவாய் கையைக் கிள்ளினான்.

''ஒன்றுமில்லை'' என்றாள் உடனே.

சாப்பாடு முடிந்துவிட்டது. இருவரும் சமையலறை வேலை செய்து கொண்டே குசுகுசுத்துக் கொண்டிருந்தார்கள். அவர், தண்ணீர் வேண்டியிருந்ததால் சமையலறை வாசலுக்கு வந்தார். குசுகுசுக்கள் நின்றுவிட்டன. இருவரும் தீவிரமாய் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மகாலிங்கம் பத்து மணிக்கெல்லாம் தூக்கம் கண்ணைப் பொத்துக்கொண்டு வந்துவிட்டதால் படுத்துவிட்டார். சாம்பவி புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். இடையிடையே அவரையே பார்த்துக் கொண்டிருந்ததைக் கவனித்த அவர் கொட்டாவி விட்டுக் கொண்டே விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக் கொண்டார். அவருக்குத் தூக்கம் வந்துவிட்டது.

ஒருமணி நேரங்கழித்து வியர்த்துக் கொட்டியபடி விழிப்பு வந்தது. எழுந்து விடிவிளக்கைப் போட்டார்.

சுவற்றோரமாயிருந்த கட்டில் காலியாயிருந்தது. அங்கே சாம்பவி இல்லை. அவர் பரிஷித்தின் அறையை நோக்கித் திரும்பினார். அவ்வறையின் கதவுகள் திறந்து கிடந்தன. உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

எங்கிருந்தோ தாழ்ந்த குரலில் பேச்சுக் குரல்கள் கேட்டது. அவர் எழுந்து பார்த்தார்.

கொல்லையில் பாயை விரித்துப் போட்டு உட்கார்ந்து கொண்டு இருவரும் ஏதோ தீவிரமாய் பேசிக் கொண்டி-

குந்தார்கள். கொல்லையில் விளக்கு எரிந்து கொண்
தது. பரிஷித் ஏதோ சொல்லிக் கொண்டிருந்
சாம்பவி முழங்கால்களில் முகவாயைப் புை
கொண்டு சிரத்தையாய் அவன் சொன்னதைக் கே
கொண்டிருந்தாள். தொலைவில் உட்கார்ந்திருந்ததா
அவர்கள் மெல்லியகுரலில் பேசியதாலும், காதைத் தி
கொண்டு கேட்டபோதிலும் அவர்கள் பேச்சு புரியவி
அவருக்கு.

அவர் வந்து படுத்துக் கொண்டார்.

பரிஷித் முற்றிலும் குணமடைந்துவிட்டான். டா
அவனுக்குத் திருமணம் செய்யலாம் என்று செ
விட்டார்.

மகாலிங்கம் அந்த விஷயத்தைப் பற்றித்தான் யோ
துக் கொண்டிருந்தார். அவ்விருவருக்கும் திருமணம்
விட்டால் பின் அவர் வாழ்க்கைக்கு சீல் வைத்தாற்போ
தான். அவர் அதிர்ஷ்டம்! இருவரும் நல்ல குணம் ப
தவர்களாய் இருக்கிறார்கள்!

25

"அங்கிள்! இன்று மாலையில் சினிமாவுக்குப் போகிறோம்" என்றாள் சாம்பவி.

"சரிம்மா!" சந்தோஷமாய் சொன்ன அவர் ஜேபியிலிருந்து பணத்தை எடுத்துத் தந்து— "பாருங்கள். ஔட்டோவில் போய்த் திரும்பி வாங்க. பணத்தைச் சிக்கனமாய்ச் செலவழிக்கணும்னு யோசிக்காதீங்க" என்றார் காலிங்கம்.

ஒரு வாரத்திற்கு முன்னால் அவர் காலையில் காபி குடித்துக் கொண்டிருக்கும்போது பரிஷித் கிட்டே வந்து, "அங்கிள்! நான் ஜம்புவின் மகனுக்கு,மோட்டார் ராலியில் பங்கெடுத்துக் கொள்வதற்காக டிரெயினிங் தந்துட்டிருக்கேன். வீட்டிற்கு வர அவ்வப்போது தாமதம் ஆகலாம். நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க" என்றான்.

"சரி! அதை என்னிடம் இல்லை, சாம்பவியிடம் சொல்லு" என்றார் அவர். அன்றையிலிருந்து பரிஷித் சரியாய் வீட்டில் தங்கியிருப்பதேயில்லை.

சாம்பவி ஒரு நாள்— "அங்கிள்! எனக்குப் பொழுதே போகமாட்டேங்குது. நானும் பரிஷித்திடம் போகட்டுமா?" என்று கேட்டாள்.

"போம்மா. வா, நான் கொண்டு விட்டுவிடுகிறேன்." அவர் உடனே உடைமாற்றிக் கொண்டு வந்து

சாம்பவியை காரேஜிற்கருகில் இறக்கி விட்டுவிட்டு போய்விட்டார். பரிஷித் காரில் ஏதோ பழுது பார்த்துக் கொண்டிருந்தான்.

அவருக்கு வீட்டிற்குத் திரும்பி வந்ததுந்தான் தேறிற்று. லாபமில்லை. பரிஷித்தைக் கண்டிக்க வேண்டும். சாம்பவியை விட்டு விட்டு வேலை வேலை என்று அலைகிறான். மறுநாள் அவரே சாம்பவியைக் கூட அழைத்துக் கொண்டு போகச் சொல்லி உத்தரவிட்டார்.

ஒருநாள் அவர் தாமதமாக வீட்டிற்கு வருவதாய் தெரியப்படுத்த விரும்பி சாம்பவிக்காக அரவணைப்பு இல்லத்திற்குப் போன் பண்ணினார். சாம்பவி இல்லை போய்விட்டாள் என்றார்கள். வீட்டிற்கு வந்தால் சாம்பவி இன்னும் வரவில்லை.

கொஞ்ச நேரங்கழித்து பரிஷித் சாம்பவி இருவரும் சேர்ந்து வந்தார்கள். இருவர் முகமும் மிகவும் சோர்ந்து போய்த் தென்பட்டன.

இதென்ன இப்படி இருக்கிறார்கள்? ஏதாவது சண்டை போட்டுக் கொண்டார்களா என்ன? என்றெண்ணிக் கொண்டார் அவர்...

ஒரு நாள் ரூபா வந்தாள் சிநேகிதிகளுடன்.

"நான் டிரைவிங் கற்றுக்கணும். பணம் எவ்வளவு வேணுமானாலும் தரேன்."

உடனே சாம்பவி குளித்துக் கொண்டிருந்த பரிஷித்திடம் கதவைத் தட்டிச் சொன்னாள்— "உங்க சிஷ்யை வந்திருக்கிறாள்."

"யாரு?" என்றான் பரிஷித் புரியாமல்.

"உங்க சிஷ்யை."

பரிஷித் குளித்து முடித்துவிட்டு தலையைத் துடைத்துக் கொண்டே வெளியே வந்தான்.

அங்கே ரூபாவும், சிநேகிதிகளும் உட்காந்திருந்தார்கள்.

"ஹாய்" என்று எழுந்து சந்தோஷமாய் விஷ் பண்ணினார்கள்.

"டிரைவிங் கற்றுக்கணுங்க. நீங்க கற்றுத் தரணும்," என்றாள் ரூபா.

"நான் ஸ்பெஷலாய் யாருக்கும் கற்றுத் தருவதில்லை. நீங்கள் இன்னொரு தடவை இதுபோல வீட்டிற்கு வர வேண்டாம். டிரைவிங் கற்றுக்கணும்னால் ஜம்புவிடம் பேசவேண்டியது." கச்சிதமாய் சொல்லிவிட்டான்.

ரூபா முதலியவர்களின் முகங்கள் வெலவெலத்துப் போய்விட்டன. அவர்கள் போய்விட்டார்கள்.

"இதென்ன, இவ்வளவு முரட்டுத்தனமாய் சொல்லிட்டீங்களே?" என்றாள் சாம்பவி.

"அவங்க எப்படிப்பட்டவங்கன்னு எனக்குத் தெரியும். வேணுங்கிற உரிமையைத் தாமே எடுத்துக் கொள்வாங்க. இன்றைக்கு வீட்டிற்கு வந்தாங்க. நாளைக்குச் சமையல் அறைக்குள் நுழைந்து காபியைக் கலக்கத் தொடங்கிடுவாங்க. கடைவீதியில் தென்பட்டு விட்டால் 'ஹாய்', 'ஹலோ' என்று மேலே வந்து விழுவாங்க. நீ அதைக் கேட்டுவிட்டால் நான் ஏதோ அவங்களை உற்சாகப்படுத்திட்டதாய் நினைக்கக் கூடும். ஏன் இந்தத் தொல்லையெல்லாம்?" என்றான்.

"நான் ஏதாவது சொல்லுவேன்னுதான் அவங்களை வரவேண்டான்னீங்களா?"

"எனக்குச் சட்டென்று தோன்றிய யோசனை அதானே?"

"போதும். சில்லியாய்ப் பேசாதீங்க. நான் ஒண்ணும் எதையும் தெரிஞ்சுக்காமல் சொல்ல மாட்டேன். நான்

ஏதாலது சொன்னாலும், சொல்லாவிட்டாலும் நீங்கள் அதுபோல எனக்காக அவங்களிடம் மூஞ்சியில் அறைந்தாற்போலப் பேசக்கூடாது.''

''ஏன்?''

''இப்படி ஒவ்வொன்றையும் நான் மெச்சணும்னே செய்துட்டிருந்தால் பிறகு உங்களுக்குத்தான் தொல்லை ஏற்படும்.''

''எப்படி?''

''அப்புறமாய் நான் ஒவ்வொரு சின்ன விஷயத்திற்கும் அதிகாரம் செய்து பழக்கப்பட்டுப் போயிடுவேன். ஆண்களில் நிறையப்பேர் இப்படித்தான். பெண்களைச் சந்தோஷப்படுத்துகிறோம் என்ற நோக்கத்தில் மொதல் மொதல்ல அவளுக்குப் பட்டாபிஷேகம் செய்து, அவள் கண்ணசைப்பில் நடந்துட்டு வருவாங்க. போகப் போகச் செய்யமுடியாது அவங்களால் அப்படி. அதனால் சிம்மாசனத்தில் ஏறிவிட்ட அந்தப் பெண்ணால் இறங்கி வர முடியாது. அதோடு 'என்னைக் கண்டால் உங்களுக்குப் பிடிக்காமல் போயிடுத்துன்னு முணுமுணுக்கத் தொடங்கிடுவாங்க. அதனால் தகராறுகள் தொடங்கி விடும். அதனால் நீங்க என்னை அப்படி மகாராணியாய் செய்ய வேண்டியதில்லை.''

அவள் சாம்பவியை நோக்கித் திரும்பினான். ''உனக்கு இவ்வளவு விஷயங்கள் எப்படித் தெரிஞ்சுது?'' வியப்போடு கேட்டான்.

''நம்மைச் சுற்றிலுமுள்ள உலகத்தைக் கவனித்தால் போதும், நிறைய தெரிஞ்சுக்கலாம்'' என்றாள் குறும்பாய்.

26

பரிஷித் காரில் சாம்பவியை மைதானத்திற்குக் கூட்டிச் சென்று முதலில் காரைப் பற்றியும், இதில் எந்தெந்தப் பாகம் எப்படி வேலை செய்கிறது என்பதைப் பற்றியும் சொன்னான். பிறகு டிரைவிங் கற்றுத்தரத் தொடங்கினான். முதலில் பரிஷித் க்ளச், பிரேக், கேரிங் போடுவதையெல்லாம் தன் கன்ட்ரோலிலேயே வைத்துக் கொண்டு, சாம்பவியைத் தன் பக்கத்தில் வைத்துக் கொண்டு ஸ்டீரிங்கை மட்டுமே அவளிடம் தந்தான்.

மறுநாள் சாம்பவியை டிரைவிங் சீட்டில் உட்கார்ந்து காரை ஸ்டார்ட் செய்யச் சொன்னான்.

''ஐயோ, எதையாவது உடைத்துப் போட்டு விடுவேனோ என்னவோ?'' என்றாள் பயந்து.

''அந்தப் பயமே கூடாது. மனதில் டென்ஷன் இருந்தால் கவனம் டிரைவிங் மீது நிலைக்காது. எது உடைந்தாலும் பரவாயில்லை. நான் சரி செய்துக்கறேன்'' என்று பரிஷித் உத்திரவாதம் தந்ததால் சாம்பவிக்குத் தைரியம் வந்தது. பயமாயிருந்தாலும் மெல்ல மெல்ல தைரியம் பிறக்கத் தொடங்கிற்று. காரை டிரைவ் செய்து கொண்டிருக்கையில் சொல்ல முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டது.

ஏதோ பெரிய சாதனையைத் தான் செய்து முடித்து விட்டாற் போலிருந்தது. பரிஷித் காருக்கு முன்னால் 'எல்'

போர்டை மாட்டினான். மறுநாள் வீதிக்குக் கொண்டு வந்துவிட்டான்.

''ஐயோ, எனக்கு பயம்'' என்றாள்.

''பயம் கியம் எதுவும் இல்லை. நான் சொன்னது போல, கவனமாய் இருக்கப் பழகிக்கொள்.''

டிரைவிங் சீட்டில் உட்கார்ந்து ஸ்டீரிங்கைப் பிடித்ததுமே மனம் தெருவில் நிலைக்கும்படியாய் நமக்கு நாமே பயிற்சி தந்து கொள்ளணும். ஜாக்கிரதையாய் போவதற்கும் எதிரே வருகிறவங்களைக் கவனிப்பதற்கும் பழக்கப் படுத்திக் கொள்ள வேண்டியது மிக முக்கியம். இதப்பார், நீ வீட்டில் சமையல் செய்ய வேண்டும் என்றாலும், ஆசிரமத்தில் கணக்கைப் போடவேண்டுமானாலும் நிமிஷத்தில் சுலபமாய் செய்துவிடுகிறாய் அல்லவா? அலை உனக்கு எப்படி வந்தது? பிராக்டீசால்! இந்தக் காரை ஓட்டுவது மட்டுமேயில்லே, அதோ வானத்தில் பிளேன் பறக்கிறதே அதை ஓட்டுவது கூட அதேபோல கவனமாய் கேட்டு பிராக்டீசு செய்யணும். பிராக்டீஸ் மேக்ஸ் மேன் பெர்ஃபெக்ட்? ஆங், ஜாக்கிரதை! லாரி வரது பார்.''

சாம்பவி சட்டென்று காரை ஒரு பக்கமாய்த் திருப்பினாள்.

''இந்தப் பக்கத்தில் வருகிற ரிக்ஷாவை ஏன் கவனிக்கவில்லை?'' எரிந்து விழுந்தான். ''இதற்குள் அவனைக் கொன்று போட்டிருப்பாய்'' என்றான்.

''ஐயோ! அப்படீன்னால் எனக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்படுமா?''

''பின்னே இல்லையா? அதை நன்றாய் ஞாபகம் வைத்துக்கொள்.

''அதுசரி இவ்வளவு இக்கட்டான ரோடு எதுக்கு?''

''முனிசிபல் கமிஷனருக்கும், முதல் மந்திரிக்கும், பிரதம மந்திரிக்கும் கடிதங்கள் எழுதிப்போடு.''

''சே! ஜனங்கள் ரொம்பக் கூட்டமாய் இருக்காங்க. நம்ப நாட்டில் பணம் இல்லைங்கிறாங்களே, இதென்ன? இவ்வளவு பேருக்கு ஸ்கூட்டர்களும் கார்களும் இருக்கே!''

''இவைகளை வாங்கிய பிறகும் இன்னும் பணம் மிஞ்சியிருக்கணுங்கறது அவங்க உத்தேசமாயிருக்கும்.''

''பரிஷித்! இந்த ரோடு ரொம்ப ரஷ்ஷாய் இருக்கு. வேறு ரோடுக்குப் போகலாம்'' கெஞ்சினாள்.

''நமக்காகத் தனி ரோடுகள் இருக்காதே! இந்த ஜனங்களுக்கிடையே தான் போகணும். நம்ப மெட்றாஸ் ரோடுகளில் டிரைவிங் செய்ய முடிந்துட்டால், இந்த உலகத்தில் வேறு எங்கே இருந்தாலும் சரி, கண்ணை மூடிக்கொண்டு டிரைவ் செய்துடலாம்.''

''நம்ப வீதியில் டாக்டருக்கு பிராக்டீசு ஏன் அதிகமாயிருக்குன்னு எனக்கு இப்பத்தான் புரிகிறது'' என்றாள் சாம்பவி.

''ஏனாம்? லெப்டில் கட் செய்'' கத்தினான்.

சாம்பவி மின்னலாய் லெப்டில் கட் செய்தாள். ஒரு பஸ் மேலே ஏறிவிட்டாற்போலவே தோன்றிற்று.

''அம்மம்மா! இதயம் படபடக்கிறதே. இந்த பஸ்ஸுங்களைக் கண்டாலே எனக்கு பயம். தினம் பேப்பர்களில் பிரேக்குகள் தவறி, எவ்வளவு பேர் மேல் ஏறி விட்டது என்ற செய்திதான்.''

''அப்படிப்பட்ட செய்திகளை ஸ்டீரிங்கிற்கு முன்னால் உட்கார்ந்திருக்கும்போது ஞாபகப்படுத்திக் கொள்ளக் கூடாது. ஒருக்கால் ஞாபகம் வந்தாலும் நாம் இன்னும் ஜாக்கிரதையாய் ஓட்டணுமே தவிர கோழைத்தனம் கூடாது.''

"பரிஷித்! பின்னாடி மாருதி காரில் சைட் கேட்டி றாங்க, தரட்டுமா?"

"வேண்டாம்."

"பாவம், தரேன்."

"சரியாய்ப் பார். அதில் ஒரு பெண் இருக்கிறாள்."

சாம்பவி பார்த்தாள். 'கொடுக்கமாட்டேன்' என்றாள். பரிஷித் நிமிர்ந்து பார்த்துச் சிரித்தான்.

"உங்களைச் சிரிக்க வைக்கத்தான் அப்படிச் சொன் னேன்" என்றாள் சாம்பவி சைட் கொடுத்துக் கொண்டே.

* * *

பார்க்கில் இருந்த பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டி ருந்தார்கள் பரிஷித்தும் சாம்பவியும். பரிஷித்தின் மடியில் ஒரு புத்தகம் இருந்தது. அதில் குறுக்காய்க் கோடுகள் போட்டு, அதற்கிடையே அடையாளங்கள் இருந்தன. பரிஷித் சாம்பவிக்கு அவற்றைக் காட்டி சொல்லிக் கொண்டிருந்தான்.

"இப்படி இருந்தால் செக்போஸ்ட்! இப்படி இருந் தால் அப்ஹில், இப்படி இருந்தால் ஜனக்கூட்டம். அதாவது ஊர் என்று அர்த்தம். இது ரயில்வே லெவல் கிராசிங், இது பிரிட்ஜ்" —அவன் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு சொல்லத் தொடங்கினான்.

"நான் ராலியில் போகும்போது நேவிகேட்டரின் உதவி ரொம்பவும் வேண்டியிருக்கும். டிரைவ் செய்கிற வரின் கவனமெல்லாம் வாகனத்தின் ஸ்பீட் மீதே இருக்கும். இந்த அடையாளங்களையெல்லாம், கவனித்து, மூப்பதடிக்கு முன்பாகவே நேவிகேட்டர் வரப்போற அடையாளங்களைச் சொல்லி எச்சரிக்க வேணும். நாளைக்கு நாம்ப இதுபோன்ற ஒரு ரோடில் போவோம்" என்றான்.

சாம்பவிக்கு இப்பொழுது பயம் ஏற்படவில்லை. முதலில் இருந்த திகிலும், பயமும், தன்னால் இதைச் செய்ய முடியுமா என்ற அவநம்பிக்கையும் போய்விட்டன. மிக உற்சாகமாய் இருந்தது. பரிஷித் கூடவே இருந்ததும், ஒவ்வொரு நிமிஷமும் அவன் யோசனையைப் பகிர்ந்து கொண்டதும் வாதனை புரிந்து கொண்டதும், பழக்கப் பட்டுப் போய்விட்டது.

சாம்பவிக்கு இதற்கு முன்னால் என்றுமே இவ்வளவு உற்சாகம் ஏற்பட்டதில்லை. ஆகாசத்தில் பறப்பது போலிருந்தது சிற்சில சமயம் பரிஷித் என்னிடம் இவ்வளவு பொறுப்புகளை விட்டு வைத்திருக்கிறானே, அவற்றை என்னால் சரிவர நிறைவேற்ற முடியுமா?' என் மீது இவ்வளவு நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டிருக் கிறானே, அவன் என்னிடம் ஒப்படைத்திருக்கும் பொறுப் புக்களை என்னால் செய்ய முடியுமா என்று கோழையாய் நினைத்துக் கொள்வாள். அடுத்த நிமிஷமே ஏன என்னால் செய்ய முடியாது? எனக்கும் இது ஒரு சோதனைதான்! பரிஷித்தோடு சேர்ந்து இந்தப் பந்தயத்தில் பங்கெடுத்துக் கொள்வது எவ்வளவு உற்சாகமாகவும் ஆனந்தமாகவும் இருக்கிறது என்றெண்ணிக் கொள்வாள்.

அவள் இப்பொழுது பரிஷித் சொன்ன வார்த்தைகளை ஒன்று விடாமல் அப்படியே செய்யவும், அவனுக்குச் சற்றும் அலுப்புத் தட்டி விடாதவாறும், திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாதவாறும் ஜாக்கிரதையாய் இருக்கத் தொடங்கினாள்.

இருவரும் இப்பொழுது பிராண சிநேகிதர்களையும் விட மேலாகிவிட்டனர்.

சிலசமயம் இருவரும் கடற்கரைக்குப் போய் ஏகாந்த மான இடத்தில் உட்கார்ந்து கொள்வார்கள். பரிஷித் இவற்றைப்பற்றி யெல்லாம் பாடத்தைப் போல விவரித்து சொல்லிக் கொண்டேயிருக்க அவள் கன்னத்தில் கையை

வைத்துக்கொண்டு கவனமாய் கேட்டுக்கொண்டிருப்பாள். இடையிடையே காகிதத்தில் குறித்து வைத்துக் கொள்வாள். சுற்றிலும் வருவோர் போவோர் தம் உலகத்தில் ஆழ்ந்து போயிருக்கும் இந்த ஜோடிகளை விநோதமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டே போவார்கள். ஆனால் இவர்கள் அதொன்றையும் கவனிக்க மாட்டார்கள்! மாலையில் காற்றிற்கு அவள் புடவைத் தலைப்பு படபடத்துக் கொண்டிருக்க, அவன் கேசங்கள் லேசாய் அசைந்து பறந்து கொண்டிருக்க, இருவரும் ஒரே சித்திரத்தில் வரைந்த பொம்மைகளைப் போல உட்கார்ந்திருப்பது வழக்கமாகிவிட்டது.

சாம்பவி ஆசிரமத்தில் கொஞ்சம் ஓய்வு கிடைத்த சமயங்களிலும் சரி, இரவில் தூக்கம் வராதபோதும் சரி இதைப் பற்றியே யோசிக்கத் தொடங்கினாள். சந்தேகம் ஏதாவது ஏற்பட்டால் காகிதத்தில் குறித்து வைத்துக் கொள்வாள். அடுத்த நாள் மாலையில் பரிஷித்திடம் இதைப்பற்றிக் கேட்பாள். அவன் கவனமாய்க் கேட்டு பதில் சொல்லி, அதைப்பற்றி விவரிப்பான்.

27

பரிஷித் கண்ணாடிக்கு முன்னால் நின்றபடி தலை வாரிக் கொண்டிருந்தான். அவன் என்றுமில்லாதபடி இன்றைக்கு மிகவும் ஆர்வத்தோடு, ஏதோ பாட்டை முணு முணுத்துக்கொண்டு உல்லாசமாய் இருந்தான்.

சாம்பவி அவ்வறைக்குள் வந்தாள்.

''பரிஷித்! கண்ணை மூடிக்குங்க'' என்றாள்.

''என்ன விசேஷம்?'' என்றான்.

''கண்ணை மூடிக்குங்கன்னு சொல்லலை?''

அவன் கட்டிலில் உட்கார்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

''நன்றாய் மூடிக்கிட்டீங்களா?''

''ஆங்.''

சாம்பவியின் கைகள் அவன் கழுத்தில் எதையோ முடிபோட்டன.

''இப்பக் கண்ணைத் திறங்க'' என்றாள்.

''இதென்னது?'' கழுத்தில் தொங்கிய கருப்புக் கயிற்றைப் பார்த்துக்கொண்டான். அதில் நயாபைசா அளவிற்கு அனுமார் டாலர் தொங்கிக் கொண்டிருந்தது.

"நாகமணி மாமி சொன்னாங்க, இதைப் போட்டுக்கிட்டால் திருஷ்டி ஏற்படாதாம். ரொம்ப நல்லதாம்."

"அனுமார் டாலரா?" அவன் உடனே கன்னங்களை உப்பிக் கொண்டு, உள்ளங்கைகளால் பலூனை வெடிப்பது போல 'பட்'டென்று குத்திக் கொண்டு காட்டினான்.

"ஓ. கே! இந்த டாலரில் ரொம்ப மகத்துவம் உண்டு. எனக்கு அதற்குள்ளேயே ஆறடி உயரத்திற்குப் பறந்து நீந்திட்டுப் போறாப் போலிருக்கு. மலையை உள்ளங்கையால் தூக்கிவிடுவேன் போலிருக்கு."

அவன் முகத்தைப் பார்த்துவிட்டு பக்கென்று சிரித்து விட்டாள் "பரிஷித்! சிரிக்காதீங்க" அவன் கண்களின் மீது கையை வைத்துச் சொன்னாள்

பரிஷித் அக் கையைப் பிடித்துக் கொண்டான். சாம்பவி போகப் புறப்பட்டபோது அக் கையைப் பிடித்து இழுத்தான். இடுப்பைச் சுற்றிலும் கைகளைக் கோர்த்துக் கொண்டு சாம்பவியின் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன அப்படிப் பார்க்கிறீங்க?"

"உன்னைத்தான்."

"உங்களுக்கெதிரே நிற்பது நான்தான்னு தெரியும். அப்படி என்ன யோசனை?"

"சாம்பவி! ஒரு தடவை ஆசுபத்திரியில் சொன்ன அந்த வார்த்தைகளைச் சொல்ல மாட்டாயா?"

"எந்த வார்த்தைகளை?"

"அதான் நான் உடம்பு சரியில்லாமலிருந்தபோது நீ கலங்கிப்போய்ச் சொன்ன வார்த்தைகள்."

"அதுவா? இப்ப எதுக்கு? நாம்ப சந்தோஷமாய் இருக்கிறபோது அந்த மாதிரி விஷயங்களையெல்லாம் ஏன் ஞாபகப்படுத்திக்கணும்? அங்கிள் என்ன சொன்னார்?

எவ்வளவு விலைமதிப்பு வாய்ந்ததாயிருந்தாலும் சரி, லருத்தத்தைத் தரக்கூடியதாய் இருந்தாலும் சரி, கடந்த காலத்தை ஞாபகப்படுத்திக் கொண்டு அசைபோடக் கூடாதாம்."

"நீ சொல்லப் போகிறாயா இல்லையா?"

"ஊஹூம், சொல்லமாட்டேன்."

"சொல்லமாட்டாய்?"

"ஊஹூம்" உதட்டில் முறுவல் தவழப் பதிலளித்தாள்.

ஒரு நிமிஷம் அவன் அவளையே உற்றுப் பார்த்தான். பிறகு கட்டிலை விட்டு எழுந்திருந்தான். சாம்பவியை அலாக்காய் அப்படியே தூக்கி ஆட்டுக் குட்டியைப்போல கழுத்தில் போட்டுக்கொண்டு அறை முழுவதும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான். 'சொல்ற வரைக்கும் இறக்கமாட்டேன்."

"பரிஷித், ப்ளீஸ்."

"சரி சொல்றேன், இறக்கி விட்டுடுங்க" வேறு வழியில்லாமல் பதிலளித்தாள்.

அவன் இறக்கிவிட்டான். சாம்பவி அறையிலிருந்து விர்ரென்று பாய்ந்து ஓடப்போனாள் அதைப் புரிந்து கொண்டு தடுத்து நிறுத்தினான்

"விடாக்கண்டர்" என்றாள்.

"வெரும் விடாக்கண்டனில்லை. படு விடாக் கண்டன்." ஒப்புக்கொண்டான்.

"நீங்க நினைச்சது நடந்து தீரணும் உங்களுக்கு."

"அது என் பழக்கம். நான் என்ன செய்வேன்? வா." சமர்த்தாய் அழைத்து வந்து கட்டிலில் உட்கார வைத்தான்.

''பரிஷித், உள்ளே நிறைய வேலையிருக்கு.'' கெஞ்சினாள் அவள்.

''நான் உதவி பண்றேன். கவலைப்படாதே.''

''ப்ளீஸ் பரிஷித்'' முகவாயைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்.

''ப்ளீஸ் சாம்பவி'' அவன் அதையும் விட இருமடங்கு கெஞ்சினாற்போல பார்த்தான்.

''சொல்லித்தான் தீரணுமா?'' ஆதரவில்லாமல் கேட்டாள்.

''சொல்லித்தான் தீரணும்னு இப்பொழுதாவது தெரிஞ்சுகொள்.'' சாம்பவி தொண்டையை செரிமித்துக் கொண்டாள். அபிநயம் செய்வது போல சொன்னாள்.

''ஆசுபத்திரி! எமர்ஜென்ஸி வார்டு! அங்கெல்லாம் நோயாளிகள் சீரியஸான நிலைமையில் இருக்காங்க. ஒரு பெட்டில் ஒரு இளைஞர் உயிரேயில்லாதது போல் விழுந்து கிடக்கிறார். ஒரு பெண் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். அதற்குள் டாக்டர் வந்துவிட்டார்.

''உங்க பெரியவங்க யாருமில்லையா?'' டாக்டர் குரலை வரவழைத்துக் கொண்டே பேசினாள்.

''எங்களுக்கு... எங்களுக்கு யாருமில்லைங்க. எங்க அங்கிள் ஊருக்குப் போயிருக்கிறார்'' —சாம்பவி சங்கோஜமில்லாமல் மிக சரளமாய் பேசினாள். ஒரு நிமிஷம் நிறுத்தினாள். ''டாக்டர் அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்'' —நாடகத்தைப் போல குரலை வைத்துக் கொண்டு சொன்னாள்.

உடனே கையைத் தூக்கி அங்கே உண்மையாகவே டாக்டர் போய்க் கொண்டிருப்பது போலவே பாவித்து ''டாக்டர்'' கலக்கத்தோடு கூப்பிட்டாள். திரும்பவும் டாக்டரைப் போலவே தானே திரும்பி, பரபரப்பான

குரலை வரவழைத்துக் கொண்டு— ''ஆபத்து இன்னும் தாண்டவில்லை'' —சீரியஸாய் பார்க்கப்போன சாம்பவி அடக்கமாட்டாமல் பக்கென்று சிரித்துவிட்டாள்.

''பரிஷித்! என்னைக் கொல்லாதீங்க. அந்தக் கலக்கமும், பயமும் இப்ப எப்படி வரும்?'' என்றாள் சிரித்துக் கொண்டே.

பரிஷித் கட்டிலில் பின்னுக்குச் சாய்ந்து கொண்டான். அவன் கைகள் அவள் இடுப்பைச் சுற்றி விடாமல் பிடித்துக் கொண்டிருந்ததால், அவன் இழுத்த இழுப்பிற்கு சாம்பவி அவன் மீது வந்து விழுந்தாள். அவள் சட்டென்று விழுந்திருக்கப் போனபொழுது அவன் அது நடக்க விடாமல் மேலும் இறுக்கமாய் பிணைத்துக் கொண்டு— ''உம் சொல்லு'' என்றான். அவ்வாறு ''சொல்லு'' என்று சொன்ன வார்த்தைகளிலிருந்த கெஞ்சலோ, அல்லது அக்கண்களில் அக் கடந்த காலச் சம்பவத்தைக் கேட்க வேண்டும் என்ற ஆவல் மிகந்ததைக் கண்டதாலோ சாம்பவியால் மறுக்க முடியவில்லை.

அவன் அவளைத் தன் மார்பின் மேல் அப்படியே அடுக்கவைத்துக் கொண்டு, அவள் வாயால் அதைச் சொல்லச் சொல்லிக் கேட்டுக் கொண்டிருந்தான்.

சாம்பவி இம்முறை தீவிரமாகவே சொல்லத் தொடங்கினாள்— ''பரிஷித்! நீங்கள் அனாதையல்ல. இப்ப நீங்க அனாதையாய் சாகப்போறதில்லை. நான் உங்களுக்கு அருகில் இருந்து உங்களுக்கு விடை கொடுக்கிறேன். நேகிதியாய், உங்களுக்காக என் உயிர் தலிக்கிறது—'' பரிஷித் சாம்பவியின் தலையை மார்போடு அழுத்திக் கொண்டான். அவன் தாடை எலும்பு இறுகிக் கொண்டது.

''உம், சொல்லு'' நாத்தழுதழுக்கக் கேட்டான்.

சாம்பவி அவன் மார்பில் முகம் புதையுண்டு போக, சொல்லிகொண்டேயிருந்தாள். சாம்பவியின் தொண்டை

கூட ஏனோ கம்மினாற்போலவேயிருந்தது. அவ
சொல்லிக் கொண்டிருக்கையில், மெல்ல மெல்ல ம
கடந்த காலத்தை நோக்கிப் போய், அந்த விஷ
இப்பொழுதுதான் நடந்து கொண்டிருந்தாற்போ
தோன்றத் தொடங்கிற்று.

"பரிஷித்! நீங்க எந்த நடுத்தெருவிலோ, குப்பை
தொட்டியிலோ, வைத்திய உதவியில்லாமல், திக்கில்லாய
எந்தக் குப்பைக் காகிதத்தையோ விட்டெறிந்தாற்போ
போகவில்லை. ஒரு சிநேகிதி தன் கைகளில், அழுத்தி
பிடித்துக் கொண்டு மரணதேவன் என்ற இன்னொ
நண்பனிடம் ஒப்படைப்பது போல போகிறாய். உ
னைக் காப்பாற்றிக் கொண்டு விடவேண்டும் என்று நா
தவிதவிக்கிறேன். என்னால் முடியவில்லை. ஒருக்கா
நீங்கள் செத்துப்போவதே நல்லதோ? ஏனெனில்—
ஏனெனில்— இந்தப் போதைப் பொருள் என்ற பயங்க
மான விஷயத்திலிருந்து எப்படியும் உங்களால் வெளியே
முடியாது." —பரிஷித் சட்டென்று சாம்பவியின் முகத்
இரு கைகளாலும் கிட்டே இழுத்துக் கொண்டு நெற்
யிலும், கண்களிலும், முகம் முழுவதும் ஆவேசமா
முத்தங்களால் நிரப்பினான்.

சாம்பவி திடீரென்று பெரிதாய் அழுதுவிட்டாள்.

"சாம்பவி! இதென்னது? ஏன்?" கலங்கிப் போ
கேட்டான்.

"எனக்கு இது கனவா அது கனவான்னு புரியமா
டேங்கிறது பரிஷித்" அழுது கொண்டே பதிலளித்தா

"அதுதான் கனவு! கெட்ட கனவு! இது நினை
பார்! ஒரு முறை கண்ணைத் திறந்துப் பார்! நான் உ
கெதிரே இருக்கிறேன். ஆரோக்கியத்தோடு
கிறேன்." —சாம்பவியின் முகத்தைத் தூக்கித் திரும்ப
உதடுகளில் ஆழ்ந்து முத்தமிட்டான். சாம்பவியின் மு
தில் வந்து தவழ்ந்த கேசங்களைக் காதோரத்தில் ஒ

டு— "சாம்பவி! நீ மரணதேவனை கூட இரக்கப்
ம்படி செய்துவிட்டாய். அதனால்தான் மரணதேவன்
ன்னைத் துன்புறுத்தப் பிடிக்காமல் விட்டு விட்டுப்
போய் விட்டான் போலும்."

சாம்பவி இன்னும் கடந்த காலத்திலிருந்து மீளவில்லை
ன்பது அவள் வார்த்தைகளை எடுத்துக் காட்டின.

"அங்கிள் இதைக் கேட்டால் தளர்ந்து போய்
டுவார். வீ லவ் யூ பரிஷித்! வி லவ் யூ!" அவன் மார்பில்
லையைச் சாய்த்துக் கொண்டே சொன்னாள் அவள்.

"எங்கே திரும்பவும் அந்த வார்த்தைகளைச்
சொல்லு" அவன் குரல் உணர்ச்சி வசத்தால் நடுங்கிற்று.
சாம்பவி சொன்னாள்.

அவன் சாம்பவியை மார்போடு அழுத்திக் கொண்
டான். சட்டென்று தோள்களை அழுத்திப் பிடித்துக்
கொண்டே அவளைத் தூக்கி நிறுத்தி விட்டு—" நாம்ப
எப்பக் கல்யாணம் பண்ணிக்கலாம்?" என்று கேட்டான்.

சாம்பவி அவன் சொன்னதையே மறந்து விட்டாற்
போல வியப்போடு அவனையே பார்த்துக் கொண்டி
ந்தாள்.

"சொல்லு" நாம்ப எப்பக் கல்யாணம் செய்துக்
கலாம்?"

சாம்பவி பதில் சொல்ல முடியாதவளாய் இன்னும்
கண்கள் மலர அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சாம்பவி! நான் உன்னைக் கேட்டுவிட்டேன். நீ
புக் கொண்டால் சாதாரணக் கல்யாணம், நீ ஒப்புக்
மல் போனால் உன்னைத் தூக்கிக் கொண்டு போய்
ட்சச கல்யாணம் செய்துப்பேன். எனக்குக் கூட என்
இந்த வாழ்க்கை கனவா நினைவான்னு சிற்சில சமயம்
தோணுகிறது. அந்தச் சமயத்தில் சட்டென்று ஓடிவந்து

உன் மார்பில் தலையைச் சாய்த்துக் கொண்டு வாயால் இது நிஜம் என்று சொல்லச் சொல்லிக் விடணும் போலிருக்கும். சொல்லு சாம்பவி! கல்யாணம் செய்துக்கலாம் என்கிறேன் நான். நீ சொல்கிறாய்? காத்திருக்கச் சொன்னால் லாம் காத்திருக்கத் தயார்.''

சாம்பவி சட்டென்று அவன் வாயில் கையை வைத்து தடுத்தாள்.

''வேண்டாம் பரிஷித் வேண்டாம்! ஒருநாள் கூ தாமதிக்க வேண்டாம். நான் அங்கிளிடம் சொல்றேன்'' என்றாள்.

''ஊஹூம், நான் சொல்றேன்'' என்றான் அவன்.

''என்னால் சொல்ல முடியாமல் உங்களை முன்னுக்குத் தள்ளிட்டேன்னு நினைத்துப்பாரோ என்னவோ அங்கிள் அவருக்குக் கோபைத்தனம் என்றாலே ஆத்திரம் வரும்'' தயங்கினாள்.

''ஊஹூம், நீ சொன்னால் நான் உன்னை வலைப்போட்டுக்கொண்டு விட்டேன்னு எண்ணிவிடுவாரோ என்னவோ?'' பயந்தான் அவன்.

''அப்படீன்னால் ஒரு காரியம் செய்வோம். ரெண்டு பேருமாய் சேர்ந்து சொல்லிடுவோம்'' என்றாள் அவள்.

''எப்படி? ஒரே சமயத்தில் போய் கோரஸாய், நாங்கள் கல்யாணம் செய்துக்கிறோம்னா?''

''சே! அப்படியில்லை.''

''பின்னே எந்த விதத்தில்?''

''அவர் சாப்பிட்டு முடித்துவிட்டு சிகரெட்டை புகைத்துக் கொண்டே ஓய்வாய் சாய்வு நாற்காலியில் வந்து உட்காருவாரே அப்பொழுது, ''அங்கிள்'' என்று

நான் கிட்டே போய், ''பரிஷித்தும் நானும்...'' என்பேன். நீங்கள் உடனே ''நானும் சாம்பவியும் கல்யாணம் செய்துக்கப் போறோம் —என்று சொல்லிடுங்க.''

''ஐயோ! வேறு வினையே வேண்டாம்! ஒருக்கால் உன் வார்த்தைகளைக் கேட்டதுமே அவர் கொதித் தெழுந்து சட்டென்று துப்பாக்கியை எடுத்துட்டா ரானால்?''

''அப்படிச் செய்யமாட்டார்.''

''என்னவோ? உன் கல்யாணத்தைப் பற்றி அவருக்கு என்னென்ன ஆசைகள் இருக்குமோ? என்னைப் போன்ற அனாமத்தான, அனாதைகளுக்குப் பெண் கொடுக்க மாட்டாரோ என்னவோ?''

''அவர் உங்க வார்த்தைக்கு எதிராய் ஒன்றும் செய்ய மாட்டார்.'' என் பேச்சை மறுக்க மாட்டார்.''

''போகட்டும், ஒன்று செய்வோமா?'' என்றான் அவன்.

''என்ன?''

''ரெண்டு பேருமாய் சேர்ந்து அவருக்கு ஒரு கடிதம் எழுதுவோம்'' என்றான்.

''ஒண்டர்ஃபுல் ஐடியா'' என்றாள்.

பரிஷித் சாம்பவியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு மேஜை டிராயருக்கருகில் போய் தான் உட்கார்ந்துகொண்டு அவளை மடியில் உட்கார வைத்துக் கொண்டான். டிராயரைத் திறந்து காகிதத்தையும் பேனாவையும் எடுத்துத் தந்தான்.

''உம், எழுது'' என்றான்.

''என்னத்தை எழுதுவது? எனக்குப் பயமாய் இருக்கு'' என்றாள் செய்வதறியாமல்.

"நான் சொல்றேன், நீ எழுது" என்றான்,

சாம்பவி அவன் முதுகில் புத்தகத்தைத் தாக்கி நிறுத்தி அதன் மீது காகிதத்தை வைத்துக்கொண்டு— "உம்" என்றாள்.

அவன் சொல்லத் தொடங்கினான்.

'அன்புள்ள அங்கிளுக்கு—"

சாம்பவி எழுதிக் கொண்டிருந்தாள். "நாங்களிரு வரும் கல்யாணம் செய்துக்கத் தீர்மானித்துக் கொண்டு விட்டோம் நீங்கள் ஆசீர்வதிக்க வேண்டும்."

"சீ! இது நன்றாயில்லை. கோர்ட் மாரெண்ட்டைப் போல! நாங்கள் வீட்டை ஜப்தி செய்றோம். நீங்கள் வீட்டை விட்டுப் போங்கள் என்பதுபோல இருக்கு."—

"எப்படி இருக்கணும் பின்னே?"

"எப்படின்னால்— அவர் மனதில் கொஞ்சம் ஏதேனும் வேறுபாடு இருந்தாலும்கூட அது நாம்ப எழுதுகிற விதத்தில் மூலமாய் போயிடனும்."

பரிஷித் ஒரு விநாடி யோசித்தான். சாம்பவியைப் பக்கத்தில் தள்ளிவிட்டு—'பேனாவை இப்படிக் கொடு' என்று மேஜை மேல் வைத்துக்கொண்டு தானே எழுதத் தொடங்கினான். சாம்பவி அவன் எழுதியதை கவனித்துக் கொண்டிருந்தாள்.

"டியர் அங்கிள்"—

"வணக்கம். இன்றைக்கு நானும் சாம்பவியும் சேர்ந்து உங்களுக்கு ஒரு அதிர்ச்சியான செய்தியைச் சொல்லப் போகிறோம். நாங்களிருவரும் கல்யாணம் செய்துக்கத் தீர்மானித்துக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு சம்மதம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் உங்கள் சம்மதம் கிடைத்தால் தான் இந்தக் கல்யாணம் நடக்கும். இல்லாவிட்டால் நடக்காது. நாங்கள் அவசரப்பட்டு முடிவெடுத்து

விட்டோம்னு நீங்கள் நினைத்தால் எங்களை மன்னித்து விடுங்கள். நாங்கள் எடுத்துக்கொண்ட முடிவில் என்ன தப்பு இருக்கிறது என்பதை எங்களுக்கு விவரிக்கவேண்டும். உங்கள் தீர்மானத்தின் மேல் எங்களிருவருக்கும் அபார மான நம்பிக்கை இருக்கிறது—

இப்படிக்கு,

உங்கள்

பரிஷித்"

அதற்குப் பக்கத்திலேயே "சாம்பவி" என்று அவளும் கையொப்பமிட்டாள்.

"கடிதத்தை அவரிடம் எப்பொழுது தரலாம்?" சந்தேகம் வந்துவிட்டது.

"அவர் ஆபீசுக்குப் போகும்போது கோட்டுப் பையில் வைத்து விடுகிறேன்" என்றாள் சாம்பவி.

"அதுதான் நல்லது. சாயந்திரம் வரைக்கும் நமக்கு டயம் இருக்கும்" என்றான் அவன் பெருமூச்சு விட்டபடி. சிறிய லெட்டர் ஒன்று அவன் வாழ்க்கைப் போக்கை நிர்ணயிக்கப் போகிறது.

"ஒருக்கால் அங்கிள் வேண்டாம் என்றால்?" அவன் கேட்டான். சாம்பவி உடனே பதில் பேசவில்லை. கொஞ்ச நேரம் பொறுத்து—"நான் செய்துக்க மாட்டேன்" என்றாள்.

அவன் கொஞ்ச நேரங்கழித்துச் சொன்னான்— "நானும் உன் கண்ணில் படமாட்டேன் திரும்பி. இது தான் நம் கடைசி சந்திப்பு" என்று அவளைக் கிட்டே இழுத்து அணைத்துக்கொண்டான். இருவரும் அப்படியே உட்கார்ந்திருந்தார்கள்.

28

மகாலிங்கம் வீடியோ பார்லரில் உட்கார்ந்து பேப்பரைப் பார்த்துக் கொண்டிருந்தார். அதற்குள் சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க பஞ்சகச்சம் வேட்டி கட்டிக் கொண்டிருந்த குடையைக் கையிடுக்கில் மடித்து வைத்துக் கொண்டிருந்த ஒருத்தர் அங்கு வந்தார். அவர் நடையையும் போக்கையும் பார்த்தால் ஆண்டுக் கணக்காய் மிக விநயத்தைக் காட்டக்கூடிய தொழிலில் ஊறி வந்திருப் பவர் என்று தோன்றிற்று. புருவங்களுக்கிடையே இருந்த குங்குமப்பொட்டு அவர் ஒரு பக்தர் என்பதை எடுத்துக் காட்டிற்று. மேஜைக்கருகில் வந்தவர்— ''நமஸ்காரம் மகாலிங்கம் சார்'' என்றார். மகாலிங்கம் பேப்பரை மடித்து வைத்துவிட்டு பார்த்தார். வந்தவரின் முகத்தைப் பார்த்ததுமே அவர் முகம் மகிழ்ச்சியால் மின்னிற்று.

''நீங்களா அப்பாஸ்வாமி? வாங்க வாங்க நாளே உங்களிடம் வரலாம்னு இருந்தேன். என்ன இது, வியாழக் கிழமை வரேன், வந்து என்ன விஷயம்னு சொல்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போனவர் அப்புறமாய் கண்ணி லேயே படவில்லையே?'' என்றார்.

''அப்பாஸ்வாமி மகாலிங்கத்தை வணங்கிவிட்டு எதிரே வந்து உட்கார்ந்துகொண்டே, ''குழந்தைக்கு ஜுரம்! அதோடுகூட அந்தம்மாதான் ரொம்பவும் பிளி என்று சொன்னேனே! இதோ வான்னு சொல்லுவாங்க. உடனே நான் பூஜையையெல்லாம்கூட போட்டுவிட்டுப்

போனால் யாராவது வந்திருப்பாங்க, அல்லது போனில் பேசிட்டிருப்பாங்க. அப்படியே உட்கார்ந்து காத்திருப்பேன். காபி குடிங்கள், டிபன் சாப்பிடுங்கள் என்பாங்க. அதற்கு மட்டும் எந்தக் குறையும் வைத்ததில்லை டாங்க. ரொம்பப் பெரிய மனசுதான்! நாங்க அவங்களிடம் நிச்சிந்தையாய் கவலையில்லாமல் இருப்போம். ரெண்டு தடவை போய் காபி, சாப்பாடுகூட ஆயிற்று. ஆனால் அம்மாவோடு பேசுகிற சந்தர்ப்பமே கிடைக்கலை. அதோடுகூட எங்கிருந்தோ வெளிநாட்டிலிருந்து பணத்தை வரவழைத்து 'பிச்சைக்காரங்க இல்லம்' கட்டு கிறாங்களாம். அதற்கு இடம் வாங்குவது, அந்தக் கட்டி டத்தின் திறப்பு விழாவுக்கு கவர்னரை அழைப்பது, இதற் கெல்லாம் சுற்றியலைந்ததில் மூச்சும் விடமுடியலையாம். வீடு முழுவதும் எப்பப் பார்த்தாலும் ஏதோ வேலையாய் வந்தவங்கதான் கூட்டம் கூட்டமாய் வளையவந்துட்டிருப் பாங்க''

''எங்கே? அவங்களை நீங்கள் எனக்குக் காட்டுகிறேன் காட்டுகிறேன்னு சொல்றிங்களே தவிர என்றுமே உங்களால் முடியவில்லை'' என்றார் மகாலிங்கம்.

அல்லளவு பெரிய மனம் படைத்த பெண்மணியை நேருக்கு நேராய் பார்க்க வேண்டும் என்று அவர் மனம் கிடந்து தவித்துக் கொண்டிருந்தது.

''அது சரி, நம்ப விஷயமாய் என்ன சொன்னீங்க?'' என்றார்.

''அம்மாவோடு போனில் பேசினேனுங்க. என்னால் முடியவில்லை. இந்த வீடு பழையது. அதிகமாய் ரிப்பேர் ஆயிட்டிருக்குன்னாங்க. விற்று விடலாம். யாரையாவது பேரம் பேசச் சொல்லுன்னாங்க.''

''பேரத்தைப்பற்றி நான் சொன்ன அத்தனையையும் சொன்னீங்களா?''

''சொன்னேன் ''

''என்ன சொன்னாங்க? ஒப்புக்கிட்டாங்களா?''

''ஒப்புக்கிட்டாங்க. ஆனால் இன்னும் பதினைந்தாயிரம் அதிகம்னாங்க.''

''இன்னும் பதினைந்தாயிரமா? என்னய்யா இது? அன்றைக்குப் பத்தாயிரம்னீங்க. சரின்னேன். இப்பத் திரும்பவும் பதினைந்தாயிரங்கிறீங்களே! எனக்குத் தலை யில்லை, போங்க! என்ன ஊரய்யா இது? ஒரு ரூபாய் சாமானுக்கு இன்னொரு ரூபாய் அதிகமாய் சொல்லிட் டால் பேராசைன்னு நினைச்சுக்கிறோம். பத்து ரூபாய் அதிகமாய் சொல்லிட்டால் தீய ஆசை என்கிறோம். நூறு ரூபாய் அதிகமாய் சொல்லி எங்களைக் கழுகாய் பிடுங்கித் தின்னுடுவாங்க'' மகாலிங்கம் எரிச்சலடைந்தார்.

''நீங்கள் அப்படிச் சொல்லிட்டால் எப்படி? அவங்க உத்தேசத்தைச் சொன்னேன்.''

''நீங்க அப்பாயிண்ட்மென்ட் ஃபிக்ஸ் பண்ணுங்க. அம்மாவோடு நானே நேராய் பேசுகிறேன். பழைய வீடு இன்னும் நாங்க ஏகப்பட்ட ரிப்பேர் செய்துக்கணும். குறைந்தது இருபத்தைந்தாயிரத்துக்கு மேலே ஆகும். ஏதோ கொஞ்சம் உயரத்தில் இருக்கிறது! காற்று நன்றாய் வருகிறது சுற்றுப்புறமெல்லாம் நன்றாய் இருக்கு. ஏதோ என் பொண்ணுக்குச் செடி கொடிகள் என்றால் உயிராச் சேன்னு ஆசைப்பட்டேன். நீங்கள் என்னை வழியில் போற ஜேப்படித் திருடனாய் கொள்ளையடிக்கப் போகிறேன்னு சொன்னால் சும்மாயிருந்துடுவேன்னு நினைச்சீங்களா!'' அவர் சிறினார்.

''அமமம்மா! என்ன பேச்சு இது? சரி போகட்டும் ஒரு பத்தாயிரம்...''

''பத்துப்பைசா கூட தரமாட்டேன். அந்த ஓயரிங் எல்லாம் கூட ரொம்பப் பழசு. திருமபவும் போடணும். புது லிடு கட்டுவதற்கு ஆற செலவுதான் எல்லாம்.''

''சரி ஐந்தாயிரம்.''

''ஐந்து பைசாகூட இல்லை.''

'சரி போகட்டும், ரெண்டாயிரம்.''

''அதுகூட இல்லை.''

''இன்னும் என் பேச்சை மறுத்துச் சொல்லிடாதிங்க.'' அப்பாஸ்வாமி துணிந்து அவர் இரு கைகளையும் பிடித்துக்கொண்டார்.

''அம்மாவோடு நான் பேசுகிறேன்.''

''நானும் அந்த முயற்சியில்தான் இருக்கேன்'' என்றார் அப்பாஸ்வாமி.

''ஒரு வாரத்திற்குள் செட்டில் பண்ணாமல் போனீங் கன்னால் நான் வேறு வீடு வாங்கிக்கொண்டு விடுவேன்.''

''அப்படிச் சொல்லிடாதீங்க. இந்த வீட்டை இனி நீங்கள் வாங்கிட்டாற் போலத்தான். அப்ப நான் வரேன்.''

''ஒரு வாரந்தான் டயம்'' எச்சரித்தார் அவர்.

''சரி, அப்படியே செய்றேன். எனக்கும் சீக்கிரமாய் முடித்து விடணும்னுதான் இருக்கு'' என்று சொல்லிவிட்டு போய்விட்டார் அவர்.

மகாலிங்கம் அவரை வாசல்வரை வழியனுப்பி வைத்துவிட்டு இன்னொரு முறை எச்சரித்து விட்டுத் திரும்பி வந்தார்.

ஒரு மாதத்திற்கு முன்னால் அவர் அப்பாஸ்வாமி காட்டிய வீட்டைப் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்தார். வீடு நன்றாய்த்தான் இருந்தது. காற்றும் வெளிச்சமும் வந்தது. மாடியில் ஒரு படுக்கையறை போட்டுக்கொண்டு விட்டால் நன்றாயிருக்கும் சுண்

''சொன்னேன் ''

''என்ன சொன்னாங்க? ஒப்புக்கிட்டாங்களா?''

''ஒப்புக்கிட்டாங்க. ஆனால் இன்னும் பதினைந்தாயிரம் அதிகம்னாங்க.''

''இன்னும் பதினைந்தாயிரமா? என்னய்யா இது? அன்றைக்குப் பத்தாயிரம்னீங்க. சரின்னேன். இப்பத் திரும்பவும் பதினைந்தாயிரங்கிறீங்களே! எனக்குத் தெளிவில்லை, போங்க! என்ன ஊரய்யா இது? ஒரு ரூபாய் சாமானுக்கு இன்னொரு ரூபாய் அதிகமாய் சொல்லிட்டால் பேராசைன்னு நினைச்சுக்கிறோம். பத்து ரூபாய் அதிகமாய் சொல்லிட்டால் நியாயம் என்கிறோம். நூறு ரூபாய் அதிகமாய் சொல்லி எங்களைக் கழுகாய் பிடுங்கித் தின்னுடுவாங்க'' மகாலிங்கம் எரிச்சலடைந்தார்.

''நீங்கள் அப்படிச் சொல்லிட்டால் எப்படி? அவங்க உத்தேசத்தைச் சொன்னேன்.''

''நீங்க அப்பாயிண்ட்மெண்ட் ஃபிக்ஸ் பண்ணுங்க. அம்மாவோடு நானே நேராய் பேசுகிறேன். பழைய வீடு இன்னும் நாங்க ஏகப்பட்ட ரிப்பேர் செய்துக்கணும். குறைந்தது இருபத்தைந்தாயிரத்துக்கு மேலே ஆகும். ஏதோ கொஞ்சம் உயரத்தில் இருக்கிறது! காற்று நன்றாய் வருகிறது சுற்றுப்புறமெல்லாம் நன்றாய் இருக்கு. ஏதோ என் பொண்ணுக்குச் செடி கொடிகள் என்றால் உயிராச் சொல்லு ஆசைப்பட்டேன். நீங்கள் என்னை வழியில் போற ஜோப்படித் திருடனாய் கொள்ளையடிக்கப் போகிறேன்னு சொன்னால் சும்மாயிருந்துடுவேன்னு நினைச்சீங்களா!' அவர் சிறினார்.

''அய்யய்யா! என்ன பேச்சு இது? சரி போகட்டும் ஒரு பத்தாயிரம்...''

''பத்துப்பைசா கூட தரமாட்டேன். அந்த ஓயரிங் எல்லாம் கூட ரொம்பப் பழசு. திரும்பவும் போடணும். புது வீடு கட்டுவதற்கு ஆற செலவுதான் எல்லாம்.''

''சரி ஐந்தாயிரம்.''

''ஐந்து பைசாகூட இல்லை.''

''சரி போகட்டும், ரெண்டாயிரம்.''

''அதுகூட இல்லை.''

''இன்னும் என் பேச்சை மறுத்துச் சொல்லிடாதிங்க.'' அப்பாஸ்வாமி துணிந்து அவர் இரு கைகளையும் பிடித்துக்கொண்டார்.

''அம்மாவோடு நான் பேசுகிறேன்.''

''நானும் அந்த முயற்சியில்தான் இருக்கேன்'' என்றார் அப்பாஸ்வாமி.

''ஒரு வாரத்திற்குள் செட்டில் பண்ணாமல் போனீங்களால் நான் வேறு வீடு வாங்கிக்கொண்டு விடுவேன்.''

''அப்படிச் சொல்லிடாதிங்க. இந்த வீட்டை இனி நீங்கள் வாங்கிட்டாற் போலத்தான். அப்ப நான் வரேன்.''

''ஒரு வாரந்தான் டயம்'' எச்சரித்தார் அவர்.

''சரி, அப்படியே செய்றேன். எனக்கும் சீக்கிரமாய் முடித்து விடணும்னுதான் இருக்கு'' என்று சொல்லிவிட்டு போய்விட்டார் அவர்.

மகாலிங்கம் அவரை வாசல்வரை வழியனுப்பி வைத்துவிட்டு இன்னொரு முறை எச்சரித்து விட்டுத் திரும்பி வந்தார்.

ஒரு மாதத்திற்கு முன்னால் அவர் அப்பாஸ்வாமி காட்டிய வீட்டைப் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்தார். வீடு நன்றாய்த்தான் இருந்தது. காற்றும் வெளிச்சமும் வந்தது. மாடியில் ஒரு படுக்கையறை போட்டுக்கொண்டு விட்டால் நன்றாயிருக்கும் கண்

ணாம்பு அடித்துச் சின்னச் சின்ன மாறுதல்களைச் செய்து விட்டால் புதிய வீட்டைப் போலவே இருக்கும். இப் பொழுது இருந்த இந்த வீடு போதவேயில்லை.

அவர் நேரத்தைப் பார்த்துக்கொண்டார். பதினொறு இருபத்தைந்து ஆயிற்று! ஒருக்கால் சாம்பவி இதற்குள் தான் அவள் கைப்பைக்குள் வைத்த சீட்டைப் பார்த்திருப் பாள்! பரிஷித்தின் பேண்ட் ஜேபியில் கூட சீட்டை வைத் திருந்தார். இருவருக்கும் இன்றைக்குத் தன் மனதை எடுத்துச் சொல்லிவிட்டார். இருவரும் என்ன சொல்லு வார்களோ? அவர் கோட்டுப் பாக்கெட்டில் கையை நுழைத்து சிகரெட் பாக்கெட்டைத் தேடியபோது ஏதோ காகிதம் ஒன்று கைக்குத் தட்டுப்பட்டது. அவர் அதைப் பொருள் பொதியப் பார்த்தார்.

காகித மடிப்பைப் பிரித்துப் பார்த்தார். அது ஒரு கடிதம். மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து படிக்கத் தொடங்கினார்.

"அங்கிள், நமஸ்காரம்—" எழுத்துக்கள் வரிசையாய் கண்களுக்கு முன்னால் ஓட ஓட அவர் முகம் ஆனந்தத் தாலும் மகிழ்ச்சியால் பொங்கத் தொடங்கிற்று.

* * * *

அஞ்சலை காய்கறி லிஸ்ட்டை எழுதித்தரும்படி கேட்டாள்.

சாம்பவி பேனாவை எடுக்கக் கைப்பையைத் திறந் தாள். அதிலிருந்து பேனாவை எடுத்தபோது ஒரு காகிதம் கூட கைக்கு வந்தது.

சாம்பவிக்குப் புரியவில்லை. பிரித்துப் படித்தாள். அங்கிள் எழுதியிருந்தார்.

அதில் இவ்வாறு இருந்தது.

"அன்புள்ள சாம்பவிக்கும் பரிஷித்திற்கும்.—

நான் ஒரு மாத காலமாய் இந்த விஷயத்தை உங் களிடம் எப்படிச் சொல்வதென்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். நீங்களிருவரும் சினிமாக்களுக்கும் கடைவீதிகளுக்கும் சென்று வருவதை பார்த்து எனக்கு மிக சந்தோஷமாக இருந்தது யாராவது ஏதாவது சொல்லு வார்களோ என்றெல்லாம் நான் பயப்படவில்லை. உங்களைக் கண்டிக்கவும் விரும்பவில்லை. வாழ்நாளெல் லாம் உங்களிருவரையும் இதுபோல கண்ணாரக் காணும் பாக்கியத்தை எனக்கு ஏற்படுத்தித் தரும்படியாய் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். இதில் என் சுயநலம் கூட அதிக மாய் இருக்கிறது. ஏனெனில் என் எஞ்சிய வாழ்க்கையை உங்களிடம் நிம்மதியாய் கழிக்க வேண்டும் என்று தோன்றுகிறது. நான் என் விஷயத்தில் சுயநலத்தோடு யோசித்தாற்போலவே நீங்களும் தயங்காமல் உங்களைப் பற்றி யோசித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஒருவர் மால் இன்னொருத்தருக்கு எப்படிப்பட்ட அபிப்பிராயம் உள்ளது என்பதை ஒருவரையொருவர் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். எனக்குத் தெரிவியுங்கள். நான் அவசரப் பட்டு இக்கடிதத்தை எழுதிவிட்டதாய் நீங்கள் எண்ணி னால் வயதானவனின் பிடிவாதம் என்றெண்ணி மன்னித்து விட்டுவிடுங்கள். எனக்கு நீங்களிருவரும் உயிர். இதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் விருப்பத்தையும் யோசனையையும் நான் சற்றும் எதிர்க்க மாட்டேன். இந்த வயதில் உங்கள் நிழலாய் வசிக்க விரும்புகிறேன். நாம் மூவரும் எங்கே இருந்தாலும் சரி, ஒரே குடும்பந்தான்! அதை மறந்துவிடாதீங்க. உங்கள் வரவால் நான் அதிர்ஷ்டசாலியாகி விட்டேன்.

ஆசிகளுடன்

அங்கிள்."

சாம்பவியின் முகத்தில் விதவிதமான உணர்ச்சிகள் ஏற்படத் தொடங்கின. கண்களில் கண்ணீர் கசிந்து எழுத்துக்களை மறைத்தன.

''என்னங்கம்மா? என்னவாச்சு? எல்லோரும் நல்லாதானே?'' கேட்டாள் அஞ்சலை.

சாம்பவி ஒன்றுமில்லை என்பதுபோல சிரித்தாள்.

இதை உடனே பரிஷித்திடம் சொல்ல வேண்டுமென்று தோன்றிற்று. கண்களைத் துடைத்துக்கொண்டு போனை எடுக்கப் போனாள். அதற்குள் போன் திடீரென்று கணகணவென்று ஒலித்ததால் திடுக்கிட்டுப் போனாள். உடனே போனை எடுத்தாள்.

''ஹலோ'' என்றாள் மூச்சிரைக்க.

''ஹலோ'' மறுமுனையிலிருந்து பரிஷித்தின் குரல் கேட்டது.

''பரிஷித்! நான்—'' என்றாள் இரைந்து.

''சாம்பவி ஒரு விஷயம் அர்ஜென்டாய் சொல்லணும்'' என்றான் அவன்.

'இருங்க, ஒரு விஷயம் என்னைச் சொல்லவிடுங்க''

''இல்லை சாம்பவி! ஃபென்டாஸ்டிக் சங்கதி.''

''ப்ளீஸ் பரிஷித்! என் வார்த்தையைக் கேளுங்க.''

''இல்லை சாம்பவி'' அவன் சொல்லப் போனான்.

''பரிஷித்! அங்கிள் என் கைப்பையில் சீட்டு எழுதி வைத்திருந்தார்'' என்றாள்.

''அட! நிஜமாகவா? என் பேன்ட் ஜேபியில்தான் இருந்தது''

''நிஜமாகவா? இருங்கள், நான் மொதல்ல படிக்கிறேன்'' சாம்பவி நிறுத்தாமல் படித்துவிட்டாள்.

''அட! என்னிடம் இருக்கிற கடிதம் கூட அதே காப்பிதான்'' என்றான் சந்தோஷமாய்.

''பரிஷித்! நம்ப கடிதத்தைக்கூட இதற்குள் அங்கிள் படித்திருப்பார்.''

''மைகாட்'' என்றான் அவன்.

''பரிஷித்—'' சாம்பவியின் தொண்டை கம்மிற்று.

''சாம்பவி! ரொம்ப சந்தோஷமாய் இருக்கா?'' அவன் குரல் கூட ஏதோ போலிருந்தது. நேற்றையிலிருந்து அவர்கள் மனதை சூழ்ந்து கொண்டிருந்த ஏதோ சந்தேகம் விடுபட்டுப்போய் இதயம் தோகை விரித்தாடும் மயிலைப் போல ஆனந்தமாய் நாட்டியமாடிக் கொண்டிருந்தது.

''சந்தோஷமாகவா? என்னால் சொல்லவே முடியவில்லை பரிஷித்! நான் இவ்வளவு அதிர்ஷ்டசாலியான்னு தோணுகிறது.''

''என்னைவிட அதிகமில்லை சாம்பவி! நான் இதோ வரேன். நாம்ப எங்கேயாவது போகலாம்.''

''சீக்கிரமாய் வாங்க'' என்றாள்.

அஞ்சலை யாரோ கூப்பிடவே போய் விட்டாள். எப்பொழுது வந்தாளோ தெரியாது பேபி வந்து சாம்பவியின் மடியில் தலைவைத்துக் கொண்டே நின்றாள். சாம்பவி பேபியின் தலையில் அழுத்தமாய் முத்தமிட்டாள். சாம்பவி எழுந்து வந்து கொண்டிருக்கையில் ரவி எதிர்ப்பட்டான். அவன் கன்னத்தை நிமிண்டினாள்.

''போகிறாயா அக்கா? ஏன்?'' கேட்டான் சேஷன்.

''வேலை இருக்கு சேஷன்! கொஞ்சம் பார்த்துக் கொள் குழந்தைகளை.''

''சரி அக்கா. நீங்க கவலையில்லாமல் போயிட்டு வாங்க. ''சாம்பவி அவனை நன்றியோடு பார்த்தாள்.

பத்தே நிமிஷங்களில் பரிஷித் ஏறிய ஸ்கூட்டர் ஆசிரமத்திற்கு முன்னால் வந்து நின்றது.

சாம்பவி கேட்டிற்கு வெளியே நின்றபடி காத்துக் கொண்டிருந்தாள்.

ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு, இஞ்ஜினை நிறுத்தாமலேயே ஒரு பாதத்தைத் தரையில் ஊன்றியபடி நின்ற அவன் சாம்பவியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சாம்பவி கூட தலையைச் சாய்த்து, வெயில் முகத்தில் படாதபடி கண்களை இடுக்கிக்கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். இருவர் கண்களிலும் ஒளிமயம்!

"தாமதமாயிடுத்தா?" கேட்டான் அவன்.

"ஆமாம். கோடி ஆண்டுகளாய் உங்களுக்காக இங்கே நின்று காத்துட்டிருக்கிறாப்போல இருந்தது."

"வா" என்றான்.

சாம்பவி கனவில் நடப்பவளைப்போல நடந்து வந்து அவனுக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டாள்.

அவள் இடுப்பைச் சுற்றிலும் கையைப் போட்டாள். அவ்வாறு அழுத்திப் பிடித்த ஸ்பரிசத்தின் மூலமாய் அவள் அடைந்து கொண்டிருந்த மகிழ்ச்சி நன்றாய் புலப்பட்டது. அவன் என்றுமில்லாதவாறு ஸ்கூட்டரை நிதானமாய் ஓட்டிக் கொண்டிருந்தான். அவன் சுபாவத்திற்கு முற்றிலும் விரோதமாய் கேட்ட எல்லோருக்கும் கையை ஆட்டி சைட் கொடுத்துக் கொண்டிருந்தான். ஸ்கூட்டர் வேகமாய் போய்க் கொண்டிருந்தபோது சாம்பவி முகத்தை அவன் முதுகில் சாய்த்துக் கண்களை மூடிக் கொண்டாள்.

"தூக்கம் வரதா?" கேட்டான் அவன்.

"ஊம்" மயக்கத்தோடு பதிலளித்தாள் அவள். "சொல்ல முடியாத அளவிற்குச் சந்தோஷமாய் இருக்கிறது" என்றாள்

பரிஷித் ஸ்கூட்டரை ஓட்டிக் கொண்டிருக்கையில் அவன் முதுகில் முகத்தைச் சாய்த்துக் கொண்டு தூங்குவது போல உட்கார்ந்திருந்த சாம்பவியை வீதியில் போவோர் வருவோர் வேடிக்கை பார்த்துக் கொண்டே போனார்கள்.

பரிஷித் ஸ்கூட்டரைப் பார்க்கில் கொண்டு வந்து நிறுத்தினான். அங்கே அந்தச் சமயத்தில் கூட்டம் அதிகமாய் இல்லை. அவனும் சாம்பவியும் அங்கிருந்த சிறு கொடிப் பாதையில் நடந்து கொண்டிருந்தார்கள். அவ்விடத்தில் எல்லாம் மலர்ச்செடிகள் பயிரிடப்பட்டு அழகாய் கத்தரித்து விடப்பட்டிருந்தன. அவன் கை அவள் இடுப்பைச் சுற்றிக் கொண்டிருந்தது. அவள் தலை அவன் தோளுக்குக் கீழே மார்பில் பட்டுக் கொண்டிருந்தது.

"என்ன ரொம்பவும் பேசாமடந்தையாகி விட்டாயே?" —என்றான் அவன்.

சாம்பவி அவனை விட்டுவிட்டுப் போய் அங்கிருந்த புல்தரையில் சரிந்தவள்— "பரிஷித்! எனக்கு எதோபோல் இருக்கிறது. உடம்பெல்லாம் பஞ்சாய் பறந்து கொண்டிருப்பதுபோல லேசாய் தோன்றுகிறது. அப்படியே காற்றில் கலந்து வானத்தில் மிதக்க வேண்டும் போலிருக்கு. தரையில் குனிந்து இந்தப் பூமியை முத்தமிடணும் போலிருக்கு. இந்தக் காற்று, இந்த பூமி, எல்லாம் எனக்கு இந்த வாழ்க்கையைத் தந்திருக்கின்றன! இந்த வாழ்க்கைக்கு உங்களைத் தந்திருக்கின்றன! ஐயாம் லக்கி பரிஷித்! ஐயாம் வெரி வெரி லக்கி! அங்கில் எவ்வளவு நல்லவர்! உங்களை எனக்காகவே வீட்டிற்குக் கூட்டிவந்தாற் போலிருக்கு. ஆம், அப்படித்தான் இருக்கணும்." முழங்காலிட்டு சரிந்தபடி சிரித்துக் கொண்டே இவ்வாறு சொன்ன சாம்பவிக்குச் சட்டென்று கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் வழியத் தொடங்கிற்று.

பரிஷித் சட்டென்று தானும் புல்தரையில் உட்கார்ந்து சாம்பவியைக் கிட்டே இழுத்துக் கொண்டான். சாம்பவி அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''உண்மைதான் சாம்பவி! வீ ஆர் லக்கி! வெரி வெரி லக்கி!'' என்றான். அவன் முகம் சாம்பவியின் தலையை நோக்கிக் குனிந்தது. இருவரும் மௌனமாய் ஒரு விவரிக்க முடியாத ஆனந்தத்தை நிசப்தமாய் பங்கெடுத்துக் கொள்பவர்களைப் போல அப்படியே இருந்தார்கள்.

29

சார்மினார் சேலெஞ்சு கார் ராலி நெருங்கிவிட்டதால், சாம்பவியும் பரிஷித்தும், அது நடந்து முடிந்தபிறகு திருமணம் செய்து கொள்ளலாம் என்று தீர்மானித்துக் கொண்டார்கள்.

''அங்கிள் கூட சம்மதித்து விட்டார். இனி நமக்கு பயம் ஏன்? திருமணம் எப்பொழுது ஆனால் என்ன?'' என்றாள் சாம்பவி.

''நாம்ப ரெஜிஸ்தர் மேரேஜ் செய்துப்போம்'' என்றான் பரிஷித்.

ஆனால் மகாலிங்கம் ஒப்புக்கொள்ளவில்லை. ''அதெல்லாம் முடியாது. தெரு முழுக்கப் பந்தல் போட்டு

தடபுடலாய் நடத்தாவிட்டால் எனக்குத் திருப்தியாய் இருக்காது. எனக்குக் கொஞ்சம் டயம் கொடுங்கள் நீங்கள்'' என்றார் அவர். அவருக்கு ராலியைப் பற்றித் தெரியாது. அவர் சந்தோஷித்தால் பொங்கிப் போய்க் கொண்டிருந்தார்.

சத்யாவுடனும் நாகமணியுடனும் அதற்குள் பேசி முடித்து கல்யாணம் எப்படிச் செய்வது, அதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் முழுவதுமாய் தெரிந்து கொண்டார். வானத்தை நோக்கி விரலைச் சுட்டிக்காட்டி, ''அங்கே இருக்கிற நண்பன் மகிழ்ந்து போகவேண்டும்'' என்றார்.

பரிஷித்தால் அவர் வார்த்தைகளைத் தட்ட முடியவில்லை சாம்பவியும் அவனும் மிக மகிழ்ச்சியோடு இருந்தார்கள். திருமணம் ஆனதுமே ஒரு மாத காலம் நாடெல்லாம் சுற்றிவிட்டு வரவேண்டும் என்றெண்ணிக் கொண்டிருந்தார்கள்.

நாய்க்குட்டி புஜ்ஜிக்கு சில்க்கில் நீண்ட சடையைத் தைத்துப் போட்டார்கள். கழுத்தில் சங்கிலியைக் கட்டினார்கள். கால்களில் சதங்கைகளைக் கட்டினார்கள். அது தனக்கு ஏதோ புது ஹோதா வந்துவிட்டாற்போல, பாய்ந்து பாய்ந்து செல்லம் கொண்டாடிற்று. வீடு முழுவதும் பண்டிகையைப் போல கலகலப்பும் உற்சாகமும் ஏற்படத் தொடங்கிற்று.

''அன்றைக்கு பரிஷித்தை ஆசுபத்திரிக்குக் கூட்டிச் சென்று சேர்ப்பித்த அந்த ஆட்டோக்காரனுக்கும், அன்றிரவு பார்த்த அந்த டாக்டருக்கும் கண்டிப்பாய் நாம்ப நன்றியைத் தெரிவிக்கணும்'' என்றாள் சாம்பவி.

சாம்பவியை அன்றைக்கு அந்த டாக்டரிடம் கூட்டிச் சென்றான் பரிஷித். ஒரு ஸ்வீட் பாக்கெட்டை வாங்கிக் கொண்டார்கள். ஒரு ஸ்டெதாஸ்கோப்பை வாங்கி பரிசாய் தர எண்ணி எடுத்துச் சென்றார்கள்.

ஆரோக்கியமாய், கலகலப்பாய், உற்சாகம் பொங்க, தென்பட்ட அந்த ஜோடியைப் பார்த்து, சட்டென்று அவரால் அடையாளம் தெரிந்துகொள்ள முடியவில்லை. சாம்பவி சொன்னபிறகு "ஓ!" என்று சட்டென்று நினைவுக்கு வந்தவராய், 'விஷ்' பண்ணினார்.

ஆரோக்கியமாய் திடமாய், இளமை பொங்க, மலர்ந்த முகத்துடன் தான் விரும்பிய சாம்ராஜியத்திற்குத் தலைவனாகி விட்டாற்போல சந்தோஷமாய் மிடுக்காய் இருந்த பரிஷித்தை அவர் கண்கள் அகல விரிய ஆச்சரியத்துடன் பார்த்தார். அந்த நோயாளி சாகத் தயாராய் எலும்புக்கூடாய், இந்த உலகத்தோடு தனக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்றாற்போல விரக்தியாய்-எங்கோ மவறிக்கப் பார்த்தபடி இருந்த அந்த பரிஷித்தும் இந்த பரிஷித்தும் ஒருவன்தான் என்றாலே அவரால் நம்பமுடியவில்லை.

"தாங்க்யூ டாக்டர்" என்றாள் சாம்பவி.

"தாங்க்ஸ எ லாட்! ஐ மீன் இட்" என்றான் பரிஷித்தும்கூட.

இளம் டாக்டர் தோளைக் குலுக்கிக்கொண்டே— "நீங்க என்னை அனாவசியமாய் புகழ்கிறீங்க. இதில் நான் செய்தது எதுவுமில்லை. அதன் க்ரெடிட் எல்லாம் இந்த சாம்பவிக்குத்தான் உரியது. இந்தப் பெண்ணிற்கு நான் கங்கிராஜுலேஷன்ஸ் சொல்லணும்." என்று அவர் சாம்பவியை நோக்கித் திரும்பி—"இவர் விஷயத்தில் நீங்கள் நிஜமாய் மிராகில்தான் செய்திருக்கீங்க. என்னால் இன்னும் நம்ப முடியவில்லை. உட்காருங்கள். எனக்கு ரொம்ப சந்தோஷமாய் இருக்கு" என்றார்.

பரிஷித்தும் சாம்பவியும் உட்கார்ந்து கொண்டார்கள்.

"மிஸ்டர் பரிஷித்! உண்மையைச் சொல்லணுமானால், உங்களைப் பார்த்தால் எனக்குப் பொறாமையாய் இருக்கு இப்படிப்பட்ட பெண் உங்களுக்குக் கிடைத்தது உண்மை

யிலேயே உங்கள் பூர்வஜென்ம புண்ணியந்தான்னு சொல்லணும். இவங்க உங்களோடு சரிசமமாய் மரண தேவதையோடு போராடினாங்க. இன்றைக்கு உங்களைப் பார்த்து நான் அடைந்த மகிழ்ச்சி இருக்கே, அது இருபதாயிரம் ரூபாய் ஃபீசு வாங்கினாலும் கிடைக்காது. டாக்டர் இப்படி நோயாளிகள் சாதாரணமாய் குணமாகி ஆரோக்கியமாய் வளைய வந்தாங்கன்னால் மனத்தளவில் மிகத் திருப்தியும் ஆனந்தமும் அடைவார்கள்" என்று சொன்னார். அவர்கள் மறுத்தபோதிலும் கேட்காமல் காபி வரவழைத்துத் தந்தார். இருவரும் திருமணம் செய்துகொள்ளப் போவதாய் அறிந்து இன்னும் அதிகமாய் மகிழ்ந்து போனார். "விஷ்யூ ஆல் தி பெஸ்ட் இன் தி வோர்ல்ட்" என்று பரிஷித்தைக் கை குலுக்கினார்.

சாம்பவியும் பரிஷித்தும் அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தார்கள். ஸ்கூட்டரில் திரும்பி வந்து கொண்டிருக்கையில் சாம்பவி சொன்னாள்— "இன்றைக்கு எனக்கு இந்த டாக்டரிடம் வந்தது மிகச் சந்தோஷமாய் இருக்கிறது. நான் இதைக் கனவிலும் நினைத்திருக்கவில்லை." என்றாள்.

"இன்னும் போகப் போக நீ கனவிலும் எண்ணிப் பார்த்திராதது நிறைய நடக்கும்" என்றான் அவன்.

ஆட்டோக்காரன் கிடைக்கவில்லை. சாம்பவி வருத்தப்பட்டாள். அந்த ஆட்டோக்காரன்தான் எவ்வளவு நல்லவன். அன்றைக்கு அவளுக்கு எவ்வளவு உதவி செய்தான். ஆட்டோவுக்குப் பணம் வாங்காததோடு தன் காசில் தேநீர் வாங்கி வேறு தந்தான் சாம்பவியால் பண்பை மறக்க முடியவில்லை.

அரவணைப்பு இல்லத்தில் அவன் கொண்டு வந்து சேர்த்திருந்த பெண் வீட்டிற்குப் போய்விட்டாள். சேஷன் அஞ்சலை முதலியவர்களைக் கொண்டு அவர்களை விசாரித்துவிட்டு வரச்சொன்னாள். அவர்களாலும் அந்த

ஆட்டோக்காரனைப்பற்றி சரியாய் எதுவும் சொல்ல முடியவில்லை. சாம்பவிக்கு அவன் பெயர் 'ரஜாக்' என்று மட்டுமே தெரிந்திருந்தது. ஆட்டோவில் வந்து கொண்டிருக்கையில் ஓரிடத்தில் நிறுத்தி பெட்ரோல் போட்டுக் கொண்டபோது இன்னொரு ஆட்டோக்காரன், ''அடேய் ரஜாக்'' என்று அவனைக் கூப்பிட்டு ஏதோ பேசியது மூலமாய் அவன் பெயர் ரஜாக் என்று மட்டும் தெரிந்து கொண்டிருந்தாள்.

மூன்றாம் நாள் பிற்பகலில் பேபிக்குப் படம் வரையச் சொல்லிக் கொண்டு உட்கார்ந்திருக்கையில் போன் வந்திருப்பதாய் அஞ்சலை சொன்னாள். சாம்பவி போய் எடுத்தாள் பரிஷித் பேசினான். அவன் ஏதாவது ஒரு நேரத்தில் போன் செய்து கொண்டேதான் இருந்தான்.

''சாப்பிட்டீங்களா?'' என்றாள்.

அவன் அதைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.

''நான் பத்து நிமிஷத்தில் வரேன். கேட்டிற்கருகிலேயே ரெடியாய் நின்னுட்டிரு'' என்றான்.

எதற்காக என்று சொல்லாமலேயே போனை வைத்து விட்டான்.

சாம்பவி அவன் வரும்வரை அவன் சொன்னது போலவே கேட்டிற்கருகில் காத்துக் கொண்டிருந்தாள்.

''எங்கே?'' ஸ்கூட்டரில் உட்கார்ந்து அவன் தோளில் கை வைத்துக் கொண்டே கேட்டாள்.

''ரஜாக் அட்ரஸ் கிடைத்து விட்டது.''

''நிஜமாகவா?''

''ஆங்! அவனுக்கு மனைவி, ரெண்டு குழந்தைங்கள், தாய் தந்தையர் அத்தனை பேரும் இருக்காங்க.''

''அப்படின்னால் இங்கே நிறுத்துங்கள். குழந்தைகளுக்கு ஏதாவது வாங்கிட்டுப் போவோம்.''

சாம்பவி பொம்மைக் கடைக்கருகில் நிறுத்தி குழந்தைகளுக்கு பொம்மைகளை வாங்கிக் கொண்டாள். ஸ்லிட் பாக்கெட்டை வாங்கிக் கொண்டார்கள்.

திருவல்லிக்கேணியில் சன்னிதி தெருவிற்கருகிலிருந்த ஒரு சின்ன சந்திற்கு வந்து நின்றது ஸ்கூட்டர்.

வீட்டைத் தேடிக்கொண்டு போனார்கள். வீதியிலேயே கதவு இருந்தது. அதற்குத் திரைச்சீலை கட்டியிருந்தது. வீட்டு வாசலில் ஆட்டோ நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது.

பரிஷித் கதவைத் தட்டினான்.

ஒரு பெரியவர் வந்து கதவைத் திறந்தார்.

''ரஜாக் இருக்காரா?'' கேட்டான் பரிஷித்.

''ஆங்'' என்ற அவர் வீட்டிற்குள் பார்த்து, ''பேட்டா'' என்று கூப்பிட்டார்.

ரசாக் வெளியே வந்தான் சாப்பிட்டு முடித்திருந்தான் போலிருந்தது. கையைத் துடைத்துக்கொண்டே வந்தான்.

சாம்பவியைப் பார்த்துவிட்டுச் சட்டென்று வணங்கினான். ''உட்காருங்கம்மா. என்ன இப்படி வந்திருக்கிங்க?'' சட்டென்று போய் நாற்காலியை எடுத்துக் கொண்டு வந்து போட்டான்.

சாம்பவி அவனுக்குப் பரிஷித்தைக் காட்டிச் சொன்னாள்.

''என்ன?'' அவன் கண்களில் பரிஷித்தைப் பார்த்ததும் ஆச்சரியமும் ஆனந்தமும் போட்டியிட்டன.

பரிஷித் ரஜாக்கின் கையைப்பற்றிக் குலுக்கிவிட்டு— ''சாம்பவி சொன்னாள். தாங்க்யூ வெரிமச்'' என்றான்.

அவ்விருவரும் தன்னை இவ்வாறு தேடிக்கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்திராத ரஜாக் சந்தோஷத்தால் திணறினான். சங்கோஜத்தால் லெட்கப்பட்டான். மனைவியையும், குழந்தைகளையும் தாயையும் கூப்பிட்டுப் பரிச்சயம் செய்தான். சாம்பவி குழந்தைகளுக்கு பொம்மைகளையும் ஸ்வீட்டையும் தந்தாள். உட்காரச் சொல்லி நிர்பந்தப்படுத்திவிட்டு மனைவியைத் தேநீர் கொண்டு வரச் சொன்னான். ரஜாக்கின் தாய் தந்தையர் இதைக் கேட்டு சந்தோஷமடைந்தார்கள். ''என் மகனை நான் தான் இவ்வளவு நல்லவனாய் வளர்த்தேன்'' என்றார் அவர் பெருமையோடு.

''எங்க மகன் செய்தது ரொம்பச் சின்னது. ஆனால் நீங்கள் இதற்காகப் போய் தேடிக்கிட்டு வந்து சொன்னதான் உங்கள் நல்ல குணம்'' என்றாள் ரஜாக்கின் தாய்.

மனைவி தேநீர் கொண்டுவந்து கொடுத்தாள். கோப்பைகள் கொஞ்சம் பழையதாய் இருந்தாலும் தேநீர் மசாலா போட்டு மிக ருசியாய் இருந்தது. இன்னொரு கப் கேட்டுக் குடிக்க வேண்டும் போலிருந்தது.

குழந்தைகள் தங்களுக்கு பொம்மைகளையும் ஸ்வீட்டுகளையும் வாங்கி வந்த அந்த ஆண்ட்டியைப் பார்த்துச் சந்தோஷப்பட்டார்கள்.

இருவரும் விடை பெற்றுக்கொண்டு வந்து ஸ்கூட்டரில் ஏறி உட்கார்ந்தபோது குடும்பம் முழுவதும் வெளியே வந்து வழியனுப்பி வைத்தது.

''எனக்கு டாக்டரைவிட அந்த ரஜாக்கைப் பார்த்த பிறகுதான் இன்னும் அதிகமாய் நன்றி தோன்றுகிறது. ஆட்டோவுக்குப் பன்னிரெண்டு ரூபாய்கள். அதோடு இன்னொரு ரூபாய் தேநீருக்கு! அன்றைக்கு மொத்தம் பதிமூன்று ரூபாய்கள்— அந்தக் குடும்பம் சாப்பிட வேண்டிய உழைப்பின் ஊதியம் நமக்காகச் செலவழிந்து விட்டது. அந்தக் குடும்பத்தையும், அதன் வறுமை நிலை

யையும் பார்த்தால் அவங்களுக்குப் பதிமூன்று ரூபாய் ரொம்பப் பெரிதுதான்'' என்றாள் சாம்பவி வழியில்.

பரிஷித்திற்கும் அதே போலவேதான் தோன்றிற்று.

''பார்ப்போம். ஏதாவது உதவி செய்ய முடிகிறதான்னு'' என்றான்.

''இவர்களையே நாம்ப இவ்வளவு நன்றியோடு நினைத்துக் கொள்கிறோம். ஆனால் நம்மை இவ்வளவு நன்றாய் பார்த்துக்கொள்கிற அங்கிளுக்கு நாம்ப என்ன தருவது?'' என்றாள் சாம்பவி.

''அங்கிளுக்கா? அவர் நம்மிடமிருந்து என்ன வேணும்னு விரும்புகிறாரோ, அதைக் கொஞ்சமும் குறையாமல் கிடைக்கும்படியாய் செய்யணும்'' என்றான் பரிஷித்.

''அப்படீன்னால் என்ன?''

''இந்த வயதில் ஒரு குடும்பமாய்—நம்மை சொந்தக் குழந்தைகளையும்விட மேலாய் பாவித்து, ஒரு வீடு, அமைதி, மகிழ்ச்சி நிரம்பிய சூழ்நிலை வேண்டும் என்று விரும்புகிறார். அதை நாமிருவரும் தரவேண்டும். முக்கியமாய் அவரை உண்மையிலேயே சந்தோஷப்படுத்தணுமானால் நாம்ப சீக்கிரமாய் கல்யாணம் செய்து கொண்டு, ஓரிரு குழந்தைகளைப் பெற்று அவருக்குத் தரணும். அதுதான் நாம்ப தருகிற காணிக்கை.''

''போங்கள்'' என்றாள் உதட்டைக் சுழித்து.

''நான் உண்மையைச் சொல்றேன்'' அவன் மிக சீரியஸாய் சொன்னான்.

''பதினெட்டாம் தேதி அன்றைக்கு முகூர்த்தம் இருக்காம். அப்படீன்னால் இன்னும் ரெண்டே வாரம்! ஒரு வாரத்திற்கு முன்பாய்—அதாலது அடுத்த வாரம் ராலியும் முடிந்துவிடும்'' என்றாள் சாம்பவி.

30

ராலி நெருங்கி வந்து கொண்டிருந்தது.

பரிஷித் மெக்கானிக்கோடு சேர்ந்து இரவும் பகலுமாய் காரைத் தயார் செய்துகொண்டும், ராலிக்காக அதை தயார்படுத்திக் கொண்டுமிருந்தான்.

பரிஷித்தோடு சாம்பவியும் இருப்பாள். இரவு வேளைகளில் மெக்கானிக் ஜம்பு காருக்கடியில் நுழைந்து, ஏதோ ஒன்றை அடித்துக் கொண்டும், பொறுத்திப் பழுது பார்த்துக் கொண்டுமிருப்பான்.

இன்றைக்கும் ஜம்பு காருக்கடியில் மல்லாந்து படுத்துக் கொண்டு ஏதோ செப்பனிட்டுக் கொண்டிருந்தான்.

சாம்பவி அவ்விடத்தில் ஸ்டூலில் உட்கார்ந்திருந்தாள்.

பரிஷித் சாம்பவிக்கு ஒன்றைக் காட்டி— ''இதென்ன சொல்லு'' என்றான்.

''அண்டர் வீல்ட்' சாம்பவி சட்டென்று சொன்னாள்.

''என்ன செய்யணும் இவை?'' மாணவனை மேற்பார்வை கேட்டாற்போல கேட்டான்.

''இஞ்ஜின் பம்ப்பைக் காப்பாற்றும். பெட்ரோல் டாங்கை ஜாக்கிரதையாய் காப்பாற்றும்.''

''இது?'' இன்னொன்றைக் காட்டினான்.

''ரோல் கேஜ்.''

''என்ன செய்யும்?''

''கார் ஓவர்டர்ன் ஆனபோது டிரைவரின் உடல்நிலை மாறி நிதைந்து போகாமல் காப்பாற்றும்.''

''இவை?''

''சீட் பெல்ட்ஸ். டிரைவ் செய்யும்போது டிரைவரும் நேவிகேட்டரும் கண்டிப்பாய் இதைக் கட்டிக் கொள்ள வேண்டும்.''

''இதென்னது?'' இன்னொன்றைக் காட்டிக் கேட்டான்.

''எக்ஸ்டிங் விஷர் ''

''என்ன செய்யணும்?''

''தீ விபத்து ஏற்பட்டால் தீயை அணைத்துவிடும்.''

''வெரி குட். இது?'' ஒரு மீட்டரைக் கையில் எடுத்துக் கொண்டு கேட்டான்.

''ஹால்டாவின் மாஸ்டர்'' சட்டென்று சொன்னாள்.

''இதன் உபயோகம்?''

அதற்குள் காருக்கடியிலிருந்து ஜம்பு, ''ஒரு நிமிஷம் இங்கே வாங்க'' என்று கூப்பிட்டான்.

பரிஷித் மீட்டரை சாம்பவியின் மடியில் வைத்துவிட்டு காரை நோக்கிப் போனான். ஷாக் அப்ஸருக்கருகில் வேலை செய்து கொண்டிருந்த ஜம்பு ஏதோ சொன்னான். பரிஷித் உடனே தரையோடு படுத்துக்கொண்டு காருக்குக் கீழே நகர்ந்தான். இருவரும் அதைப்பற்றி வாதாடிக் கொண்டிருந்தார்கள்.

சாம்பவி மீட்டரைக் கையிலெடுத்துக் கொண்டு அவளை அப்படியும் இப்படியும் திருப்பிப் பார்த்தாள். பரிஷித் சாம்பவிக்குக் காரைப் பற்றிய எல்லா பாகங்களைப் பற்றியும், அவை எவ்வாறு வேலை செய்கின்றன என்பதைப் பற்றியும் விவரமாய் தெரிவித்து பயிற்சி தந்திருந்தான்.

சாம்பவிக்கு இன்னும் ஏதோ மேனைஜ்க்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு காரைப் பற்றித் தீவிரமாய் பேசிக் கொண்டிருப்பது போலவும், அவன் விவரமாய் சொல்லிக் கொண்டிருப்பது போலவுமே தோன்றிக்கொண்டிருந்தது. அந்த மீட்டரைப் பார்த்துக் கொண்டிருக்கையில் இன்னமும் அவன் வார்த்தைகளே காதில் ஒலித்துக் கொண்டிருந்தன. "சாம்பவி! இந்த வரால்ட்டாவின் மாஸ்டர் இருக்கே, இதைக் காரில் பொறுத்திவிட்டால் உடனுக்குடன் ஒவ்வொரு முன்னூறு அடிகளுக்கும் டிஸ்டென்ஸ் ரீடிங்கைக் காட்டும் நேவிகேட்டர் இதைப் பார்த்து, கையிலிருக்கும் ரோடு புத்தகத்தை செக் செய்து கொண்டே, ஒவ்வொரு முன்னூறு அடிகளுக்கும் முன் கூட்டியே, வரப்போகும் ரோடு எப்படியிருக்கும் என்று தெரிந்துகொண்டு, டிரைவருக்கு எச்சரிக்கைகளை செய்து கொண்டிருப்பார். வரப்போகும் ரோடில் அண்மையில் பிரிட்ஜ் இருக்கிறதா, லெவல் கிராஸிங் உண்டா, ரோடு ஷார்ப்பாய் வளைந்து செல்கிறதா, நாம் வலதுபக்கம் போகவேண்டுமா அல்லது இடதுபக்கம் போகவேண்டுமா, என்று இதையெல்லாம் முன்கூட்டியே கவனித்துக் கொண்டே ஓட்டுபவருக்கு எச்சரிக்கை செய்து கொண்டிருந்தால், டிரைவர் அதற்கேற்றாற்போல வேகத்தை கட்டுப்படுத்திக் கொண்டிருப்பார். இந்த மீட்டர் ஜீரோ, ஜீரோ, ஜீரோவிலிருந்து தொடங்கும். உதாரணத்துக்கு உன் ட்விலிப் ரீடிங் 1 25 கிலோமீட்டர் இருக்குன்னு வை. புத்தகத்தில் 1.25 கிலோமீட்டர் வரும்போது வலது பக்கம் திரும்புன்னு இருக்கு. இடதுபக்கம் பெட்ரோல் பம்ப் வாண்ட் மார்க்கில் நந்திருக்காங்க. இப்ப இந்த 1.25 கிலோ மீட்டர் வருவதற்கு முன்பாகவே, அதாவது

ன்னூறடிகளுக்கு முன்பாகவே நீ இடதுபக்கம் திரும்பும் என்று எச்சரிக்கை செய்துவிடணும். பிறகு நூறடி தூரம் போனபிறகு காபிமடிவ் சைகில், ட்ரிபுள் ஷன்— அதாவது மறுபடியும் உதாரணத்துக்கு 132.15 லோ மீட்டரில ஷார்ப் லெப்ட் டர்ன், வித் லைட் ஸ்ட் போல்டர்ஸ் ஆன் போட் சைட் ஆஃப்தி ரோட், ஸ்ட் கொளண்ட் டெளன் யுவர் ஸ்பீட்" என்று ரிக்கை தரணும். டிரைவர் சுயமாய் இந்த எச்சரிக்கை ளையெல்லாம் பார்த்துட்டே டிரைவ் செய்வது டம். அவர் கவனம் எல்லாம் வேகத்தின் மீதே இருக்க . அதனால் நேவிகேட்டராய் வரும் ஆள், ட்யூலிப் ரீடிங் மாய் அவருக்குப் பக்கபலமாய் இருக்க வேண்டும். விகேட்டர் கொஞ்சம் அசிரத்தை காட்டினாலும், ஜாக்கிரதையாய் இருந்தாலும் உடனே ஆபத்து ஏற் டுவிடும். அல்லது தப்பான ரோடு வழியாய் லேகமாய் தும்படி நேர்ந்துவிடும்"

பரிஷித் சாம்பவிக்கு ராலியைப்பற்றி விவரித்துச் ன்னான்—

"சாம்பவி! இந்த 'சார்மினார் சாலெஞ்சு ராலி'யின் லாவர் லீஃப் முறை த்ரீலெக்ஸ்ஸாய்—அதாவது மூன்று கமாய் இருக்கும். ஒரு லெக் முடிவடைந்த பிறகு, ன்னொரு லெக் தொடங்கும். ஒரு லெக்கிற்கும் இன் ாரு லெக்கிற்குமிடையே சுமார் எட்டு மணி இடை வளி இருக்கும். அந்த இடைவெளிக்குள் கார் ரிப்பேர் ணுவதும், திரும்பவும் டிரைவர் ராலிக்குத் தயாரா ம் நடைபெறும்."

"நாம்ப எல்லோருக்கும் முன்பாய் வந்துவிட்டால்?" ான் அவள் உற்சாகத்துடன்.

"ஊஹூம். அப்படி வரக்கூடாது. டைம் கன்ட் ுக்கு முன்னதாய் வந்தால் ஒரு நிமிஷத்திற்குப் பத்து ாலிடி பாயிண்ட்ஸ் போட்டு விடுவாங்க. தாமதமாய்

வந்தால் ஒரு நிமிஷத்திற்கு ஒரு பெனல்டி பாயிண்ட் வி
பாங்க. ஒருக்கால் நாம்ப முன்கூட்டியே வந்தால், ஒ
கன்ட்ரோலுக்கு முன்பாகவே காரை நிறுத்திவிட்டு
கார்ந்துடணும்.''

இந்த விதமாய் அவன் விவரமாய் எடுத்துச்சொ
யிருந்ததால் சாம்பவிக்கு ராலியில் எங்கெங்கே தப்
பண்ணக் கூடாது என்று தெரிந்துவிட்டது.

ஜம்பு உயிரை விட்டுக் கொண்டு எஞ்சிய கார்
களையெல்லாம் கூட தவிர்த்து விட்டுகாரை ரெடியாக்
கொண்டிருந்தான்.

தன் டீமிற்கு 'லவ் பீம்' என்று பெயர் வைத்
கொண்டார்கள்.

ராலிக்கு சுமார் முப்பத்திரெண்டு கார்கள் என்ட்ரி
வந்தனவாம். ராலியில் மிஸ்டர் வினாயக் மாஸ்
வினாயக் என்று இருவர் தந்தையும் மகனுமான டீ
அவர்கள் ஹிமாலயன் ராலியிலிருந்து மெட்றாஸ், கூ
கர்னாடகா, டெல்லி என்று நாட்டில் எங்கே கார் ரா
கள் நடந்தாலும் பங்கெடுத்துக் கொள்வார்களா
ப்ரசாந்த்- ராதிகா இருவரும் கூட பங்கெடுத்
கொள்ளப் போவதாய் நான்கு நாட்களுக்கு முன்னர்தா
தெரிந்தது. அவர்களுக்கு ஜம்புவைத் தெரிந்த வெங்கடே
என்ற மெகானிக்தான் காரை ரெடி செய்து கொ
ருக்கிறானாம். இம்முறை எல்லோருமே கைதேர்ந்த
களாய் இருந்ததால் போட்டி தீவிரமாய் இருக்கும் என்
எல்லோரும் எண்ணினார்கள்.

பரிஷித்தும் சாம்பவியும் இதுபோல இரவு வேள
களில் கூட விழித்திருந்து இந்த வேலைகளைக் கவனி
வந்தார்கள்.

சாம்பவி மீட்டரை மடியில் வைத்துக்கொண்டு
களை மூடிக்கொண்டாள். ரோட் புக் லெக் நெம்

ன்னில் எங்கே, எல்லளவு கிலோ மீட்டர்கள் வரை
ரோடு எல்வாறு இருக்கிறது எங்கே என்னென்ன
அடையாளங்கள் உள்ளன என்றெல்லாம் ஞாபகப்
படுத்திக் கொண்டே மனப்பாடம் செய்து கொண்டி
ருந்தாள்.

அதற்குள் பரிஷித், ''சாம்பவி! அங்கே இருக்கிற
ரெஞ்சை இப்படிக் கொண்டா'' என்று கத்தினான்.
சாம்பவி சட்டென்று திடுக்கிட்டுக் கண் விழித்தாள்.

சரேலென்று எழுந்து ஓட்டமாய் ஓடிப்போய்
ரெஞ்சை எடுத்து வந்து முழங்காலிட்டு அமர்ந்துகொண்டு
காருக்குள்ளேயிருந்து வெளியே வந்த பரிஷித்தின் கையில்
அதை வைத்தாள்.

''தாங்க்யூ டியர்'' என்று கேட்டுக் கொண்டிருக்
போதே அக்கை உள்ளே போய்விட்டது.

திரும்பவும் வந்து ஸ்டூலில் உட்
கொண்டாள்.

கண்களை அழுத்தமாய் மூடிக்கொ
தினைவில் கொண்டுவந்து— மன
விரென்று பறந்து கொண்டிருந்தாள்.

அதற்குள் தலையில் ஒரு குட்டு வைத்துக்
டிட்டு கண்களைத் திறந்தாள்.

எதிரே பரிஷித் நின்று கொண்டிருந்தா
பாண்ட்டும், ஷர்ட்டும் ஒரே கருப்பு மயம்! மூ
ன்னங்களிலும், நெற்றியிலும் உடையிலும் நன்
படிந்திருந்தது.

அங்கிருந்த சிறு துணியால் கைகளைத் துடைத்துக்
கொண்டே—

''என்ன ஜபம் செய்துட்டிருக்கிறாய்?'' என்றான்.

'ஒன்றுமில்லை.''

''நிஜத்தைச் சொல்லு! ட்யூலிப் ரீடிங்கா?''

சாம்பவி நிமிர்ந்து அவன் கண்களைப் பார்த்தாள். என்ன லாபம்? பொய் சொன்னாலும் அவனுக்குத் தெரிந்து போய்விடும். அவன் கண்கள் லேசர் கிரணங்களைப் போல அவள் சொல்லும் பொய்யைத் துளைத்துக் கொண்டு போய் உண்மையைக் கக்க வைத்துவிடும். அதனால் ஒப்புக்கொண்டு 'ஆம்' என்று தலையாட்டினாள்.

''எங்கே இருக்கிறாய் நீ இப்பொழுது? எந்த ரோட்புக்? லெக் நெம்பர் ஒன்னா? லெக் நெம்பர் டூவா? லெக் நெம்பர் த்ரீயா?''

''லெக் நெம்பர் ஒன்.''

''எந்த இடத்தில் இருக்கிறாய்?''

'ஜஹீராபாத்திற்கருகில்.''

''பரீட்சைக்குப் போகிற ஸ்டூடென்ட்டைப் போய் இதென்ன வேலை?'' போய் தொலைவில் இருந்த பக்கெட்டிலிருந்த நீரை எடுத்து கால்களையும் கைகளையும் கழுவிக்கொண்டு வந்தான்.

'நீ இவ்வளவு பயந்தால் எப்படி?'' கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டே கேட்டான்.

''எனக்கொண்ணும் பயமில்லை.'

''பயமில்லையா? முகத்தைப் பார்த்தாலே புரிகிறதே! நீ உட்கார்ந்திருக்கிற விதத்திலேயே கலங்கிப் போயிருக்கிற விதம் தெரிகிறதே! எப்படி ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருக்கிறாய் பார்! கொஞ்சம் அசந்து விட்டால் போதும் ஏதாவது ஆபத்து நேர்ந்து விடுமோ என்று பயந்து கொண்டிருப்பது போல...''

சாம்பவி அதைக் கேட்டு சரியாய் உட்கார்ந்து கொண்டாள்.

''என் மேல் நம்பிக்கை இல்லையா?'' அவன் கிட்டே வந்து எதிரே நின்று கொண்டு பேன்ட் ஜேபியில் கைகளை நுழைத்துக் கொண்டே கேட்டான்.

''ஏகப்பட்ட நம்பிக்கை இருக்கு'' என்றாள்.

''என்னால் நம்ப முடியாது. பார், நீ என்னோடு தனியே கேட்டராய் வருகிறாய். உன் மேல் எனக்கு முழு நம்பிக்கை இருக்கு. அதனால்தான் எனக்கு எந்தப் பயமும் இல்லை. நான் கவலையில்லாமல் இருக்கிறேன். என் மேல் உனக்கு நம்பிக்கை இல்லை. அதனால இவ்வளவு கலக்கமடைகிறாய். பயந்து போகிறாய்.''

அதற்குள் ஜம்பு கூட காருக்கடியிலிருந்து வெளியே வந்தான். ''அம்மாவுக்கு பயமா? என்னால் நம்ப முடியாது. அவங்க எவ்வளவு சீக்கிரத்தில் கற்றுக் கிட்டாங்க. ராலியில் நீங்களே இல்லை, ஸ்டீரிங்கைத் தொட்டால் அவங்களே கூட ஓட்டிடுவாங்க'' என்றான் உற்சாகமாய்.

''அப்படிச் சொல்லு ஜம்பு'' என்று எழுந்தாள். அங்கே ப்ளாஸ்கில் இருந்த தேநீரை இரு கோப்பைகளில் ஊற்றி அவ்விருவருக்கும் தந்தாள். தான் ஒரு கோப்பையில் ஊற்றி எடுத்துக்கொண்டாள். அவ்விருவரும் இரவில் வெகுநேரம் வரை விழித்திருந்து வேலை செய்கிறார்கள். சாம்பவி வீட்டிலிருந்து வரும்போது ப்ளாஸ்க் நிறைய தேநீரும், பிஸ்கட்டும் ஆப்பிள்களையும் கொண்டு வருவாள். வேலைக்கு நடுவில் அவர்களுக்கு பலவந்தமாய் ஊட்டி சாப்பிடச் செய்வாள்.

பரிவுடன் தேநீரைக் குடித்துக்கொண்டே நேரத்தைப் பார்த்தான். விடியற்காலை மணி மூன்று. ''ரொம்ப நேரமாயிடுத்து' என்றான்.

''நீங்க வேணும்னாலும் கொஞ்சம் குட்டித் தூக்க போடுங்க சார். இதை நான் பொறுத்தி முடிப்பதற்கு மணி நேரமாவது ஆகும். வேலை முடிந்ததும் நா உங்களை எழுப்புகிறேன்' — என்று ஜம்பு வெளியே போ சிகரெட் குடித்துவிட்டு வந்து திரும்பவும் காருக்கடி நுழைந்தான்.

சாம்பவி அவ்விடத்தில் போடப்பட்டிருந்த மர பெட்டி ஒன்றின் மேல் உட்கார்ந்து கொண்டா பரிஷித்தும் வந்து பக்கத்தில் உட்கார்ந்து கொண்டா

முழங்கைகளைப் பின்னுக்குச் சேர்த்துக் கொ தலையைச் சாய்த்தபடி ஓய்வு எடுத்துக் கொள்வது உட்கார்ந்தான்

''அங்கிளிடம் நாளைக்குச் சொல்லிவிட வேண்டு ஐதராபாத்துக்குப் போகணும். என்ன சொல்வாரோ என்றான் பரிஷித்.

'என்ன சொல்லுவாரோ தெரியலை? ராலி விஷய கூட பெரிதில்லை. அவர் கடைசி நிமிஷத்தில் வந் என்னிடம் சொல்கிறீர்களா என்று ஏதாவது ரக செய்வாரோன்னுதான் பயமாயிருக்கு அதிகமாய்''

''நாம்ப டாக்டர் தேவனிடம் முன்கூட்டியே சொ லிட்டோம் இல்லையா? அவரும் நமப அபிப்ராயத் தானே உறுதியாக்கினார்? அங்கிளுக்குக் கடைசி சமயத் சொல்ல முடிவெடுத்தது கூட அவரோடு கலந்து ஆலோசி ததுதானே?''

''ஆமாம். அவரிடம் சொல்லி செய்தது நாம்ப செ ஒரு நல்ல காரியம். டாக்டர் இப்படி செய்யச் சொன்ன என்று சொன்னால் அங்கிள் ஒன்றும் சொல்லமாட்டா என்றாள்.

அச்சமயத்தில் திடீரென்று மின்சாரம் போய்விட்ட ''அட! விளக்குகள் போய்விட்டனவே!'' —சாம்

எழுந்திருக்கப் போனாள். பரிஷித் பிடித்துத் தடுத்து விட்டான். கண்மூடித் திறப்பதற்குள் அவன் உதடுகள் சாம்பவியின் உதடுகளை அழுத்தமாய் ஒற்றின. அடுத்த நிமிஷமே விட்டுவிட்டான்.

''சார்! அங்கே மெழுகுவர்த்திங்க இருக்கு'' சொன்னான் ஜம்பு.

''இதோ வரேன்'' பரிஷித் எழுந்திருந்து இருட்டில் தேடிப்பிடித்து மெழுகுவர்த்தியை எடுத்து வந்து ஏற்றி வைத்தான்.

ஜம்பு காருக்கடியிலிருந்து வெளியே வந்தான். ''தெரு விளக்குகள் எல்லாம் கூட போயிடுத்து போலிருக்கு சார். ஒரே இருட்டு மயம்'' ஜம்பு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே வெளியே போய் விட்டான்.

பரிஷித் காற்றிற்குப் படபடத்த மெழுவர்த்தியை ஒரு கையால் அணைத்துப் பிடித்துக் கொண்டே ஒரு உடைந்த தகர டப்பாவிற்குப் பக்கத்தில் கொண்டு வந்து வைத்தான். வெளியே எங்கும் இருட்டுப் பரவியிருந்ததால் ஷெட்டைப் பார்க்க ஏதோ போலிருந்தது. பரிஷித் நடந்து கொண்டிருக்கையில் சுவற்றில் நிழல் கூட நீளவாட்டில் நடந்து வந்து கொண்டிருந்தது.

அவன் வந்து திரும்பவும் சாம்பவியின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.

''பயமாயிருக்கா?'' கேட்டான்.

''இல்லை.''

''என்ன யோசிக்கிறாய்?''

''அந்த விளக்கைப் பார்த்துட்டிருக்கேன்.''

''அதில் என்ன விசேஷம் இருக்கு?'' அவனும் அந்தப் பக்கமாய் பார்த்தான்.

''இந்தக் காரிருளில் அந்தச் சின்ன விளக்கு எவ்வளவு வெளிச்சத்தைத் தருகிறதுன்னு பார்த்துட்டிருந்தேன்.''

பரிஷித் கூட ஒரு வினாடி அதையே பார்த்தான்.

''ஆமாம்! எவ்வளவு நன்றாயிருக்கிறது. காரிருளில் ஒரு சின்ன தீபம் என்றால் இதுதான் போலும்!''

சாம்பவி அதைக் கேட்டு மெய்மறந்துபோய் தலை ஆட்டினாள்.

அவள் கண்கள் எரிந்து கொண்டிருந்த அந்த மெழுகு வர்த்தியையே பார்த்துக் கொண்டிருந்தன. ஆனால் பரிஷித்தின் கண்கள் மட்டும் சாம்பவியையே பார்த்துக் கொண்டிருந்தன. அவன் மெதுவாய் சாம்பவியின் கைகளைத் தன் கையில் எடுத்துக் கொண்டான்.

தானும் திரும்பி அந்த விளக்கைப் பார்க்கத் தொடங்கினான். தாழ்ந்த குரலில் சொன்னான்— ''இந்தச் சின்ன விளக்கு இல்லாவிட்டால் இந்த இருட்டு எவ்வளவு பயங்கரமாயிருக்கும்! நாம்ப எந்தப் பக்கத்தில் போவோமோ? எதில் தடுக்கிக் குப்புற விழுவோமோ? எதில் போய் மோதிப்போமோ நமக்கே தெரியாது.''

சாம்பவி கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவ்வப்போது அவன் அதுபோலத்தான் அவள் கையைப் பிடித்துக் கொண்டு தனக்குள் தான் எண்ணிக் கொள்வதுபோல— சாம்பவிக்குத் தன் மனதிலுள்ள யோசனைகளை சொல்வதுபோல ஏதாவது சொல்லிக் கொண்டேயிருப்பான். சாம்பவிக்கு அக்கையின் ஸ்பரிசமும், தாழ்ந்த குரலில் பேசிய அக்குரலும் தன்னையறியாமலேயே இருவருக்குமிடையே ஏதோ ஒரு பந்தத்தை ஏற்படும்படி செய்து கொண்டிருந்ததை கவனித்தாள். அவன் இவ்வாறு சொல்லும் வார்த்தைகள் அதற்குப் பின்னர் கூட அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்ளும்படி

செய்து கொண்டிருந்தன. அவனைப் பற்றி யோசிக்கும்படியாய் செய்யும் அவை.

வெளியே விடியற்காலையின் நிசப்தம். அமைதியாய் திருந்தது. சூழ்நிலை குளிர்ச்சியாய் நன்றாய் இருந்தது. எங்கோ பறவையொன்று படபடவென்று சிறகை அடித்துக் கொண்டுவிட்டு திரும்பவும் படுத்துக் கொண்டது.

சுற்றிலும் இருள் சூழ்ந்த அச்சூழ்நிலையில், மிக அமைதியான அந்தச் சமயத்தில் அச்சிறிய விளக்கின் வெளிச்சத்தில் சாம்பவியும் பரிஷித்தும் அருகருகே ஒருவர் மீது ஒருவர் சாய்ந்தாற்போல உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

''பரிஷித்! என்ன யோசிச்சிட்டிருக்கீங்க?'' கேட்டாள் சாம்பவி.

பதிலுக்கு அவள் கையைப் பிடித்துக் கண்களில்மேல் வைத்து கொண்டான் அவன். உணர்ச்சி வசத்தோடு சொல்லத் தொடங்கினான்— ''சாம்பவி! என் வாழ்க்கையில் இருட்டில் ஏற்றிவைத்த விளக்கைப் போலத்தான் நீயும் நுழைந்திருக்கிறாய்.''

அதைக்கேட்ட சாம்பவி கம்பீரத்தை வரவழைத்துக் கொண்டே சொன்னாள்— ''இல்லை பரிஷித்! இதைப் புகழ்ச்சியை என்னால் ஒத்துக்கொள்ள முடியாது.''

''புகழ்ச்சியாயிருந்தால் ஒப்புக்கொள்ள வேண்டாம். உண்மையாயிருந்தால் ஏற்றுக் கொண்டுதானே தீரணும்? நிஜந்தான் சாம்பவி! இந்தச் சமயத்தில் எனக்கு அப்படித் தான் தோன்றுகிறது.'' அவன் கை அவள் கையின் மீது மேலும் இறுகிக் கொண்டது. ''அந்த பயங்கர வாழ்க்கையை நீ ஒரு கனவாய் என் வாழ்க்கையிலிருந்து களைந்தெறிந்து விட்டாய். அந்த பலம், போராட்டம் அத்தனையும் நீதான்.'' அவன் சாம்பவியின் தோளில்

சாய்ந்து கொண்டே கண்களை மூடிக்கொண்டான். குரல் கம்மச் சொன்னான்.

"உடல் நலமில்லாதவர்களுக்குத்தான் ஆரோக்கியத்தின் மகிமை தெரியும் போலிருக்கு. சாதாரணமாய் பிற எல்லோரையும் போல இருப்பதில் உள்ள மகிழ்ச்சியும், சுதந்திரமும் அதை இழந்தவர்களுக்குத்தான் தெரியும் போலிருக்கு!" ஒரு நிமிஷம அவன் மனம் வேதனையின் ஆழத்தில் ஆழ்ந்துவிட்டாற்போல மௌனமாய் இருந்தான் "என்ன விநோதம்! ஒருவர் கை உன்னை அதல பாதாளத்தில் தள்ளிவிட்டால், இன்னொருவரின் கையோ அதிலிருந்து எழுப்பி நிறுத்தக் கை கொடுக்கிறது."

"எந்தக் கவிஞர் சொன்னார் இந்த வார்த்தைகளை?" ஆர்வத்தோடு கேட்டாள்.

"நான்தான் சொல்றேன். இது கவிதை இல்லை. உண்மையைத்தான் சொல்றேன்" அவன் சொன்னான்.

"பரிஷித்" அவனை நோக்கித் திரும்பினாள்.

"சாம்பவி! நாம்ப நாளைக்கே கல்யாணம் செய்து கொண்டுவிடலாம். இனி ஒரு நிமிஷம் கூட தாமதிக்க வேண்டாம். விடிந்ததுமே இங்கிருந்து நேராய் தோவிலுக்குப் போவோம் வா" ஆவேசமாய் சொன்னான்.

அவன் அதைச் சொன்ன விதத்தையும், அக்குரலையும் பார்த்தால் அவன் அத்திருமணத்திற்கு எவ்வளவு அலசரப் படுகிறான் என்று புரிந்தது.

"இன்னும் கொஞ்சநாள்தானே நாம்ப காத்திருக்கணும்?" என்றாள்.

"நான் உன்னை சுகமாய் வைத்திருப்பேன் என்ற நம்பிக்கை உனக்கு இருக்கா இல்லையா?"

"நிறைய இருக்கு."

சாம்பவி அதைச் சொல்லிக் கொண்டிருந்தபோது திடீரென்று விளக்குகள் எரியத் தொடங்கின. இருவரும் ஒரு நிமிஷத்திற்குப் பிறகு பழைய நிலைக்கு வரமுடிந்தது. ஜிம்மி வெளியேயிருந்து வந்தான். "சட்! இந்த கரென்ட் இப்படிக் காலைவாறிவிட்டிருக்காவிட்டால் இதற்குள் என் வேலை பாதி ஆகியிருக்கும் சார்" என்று திரும்பவும் தாருக்கடியில் புகுந்து கொண்டான் மறுபடியும் அவன் பட் பட்டென்று அடித்துக் கொண்டிருந்த சப்தம் கேட்கத் தொடங்கிற்று. அதன்மூலம் அதுவரை அவ்விடத்தில் நிலவிவந்த நிசப்தம் மாயமாயிற்று.

"தூக்கம் வந்தால் இப்படி படுத்துக்கொள்"— என்றான் பரிஷித்.

"பரவாயில்லை" என்றாள் சாம்பவி. ஆனால் பத்தே நிமிஷத்திற்குள் தலையைச் சாய்த்துக் கொண்டு தூங்கி விட்டாள்.

அதைப் பார்த்த பரிஷித் அவள் தோளைப் பற்றி மென்மையாய் நகர்த்தி, அவள் தலையைத் தன் மடியில் சாய்த்து படுக்க வைத்துக் கொண்டான்.

ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த சாம்பவியின் முகத்தைப் பார்த்தால் அவனுக்கு இந்த உலகத்தில் எங்குமில்லாத அருமையாய் தோன்றிற்று. அந்த உதடுகளில் புன்னகை என்றும் நிலைத்து நிற்பதற்காக அவன் ஏழு கடல்களை வேண்டுமானால் தாண்டத் தயாராயிருக்கிறான். தனக்கு புனர்ஜன்மத்தைத் தந்திருக்கும் சாம்பவிக்கு மட்டுமே அவன் மீது முழு அதிகாரமும் உரிமையும் உண்டு. வேறு யாருக்குமே இல்லை.

அவன் கண்ணுக்கெதிரே கார் தென்பட்டது. அந்தக் கருப்பு ஃபியட் காரின் மீது சாம்பவி பெயிண்ட் டப்பாவைப் பிடித்துக் கொண்டிருக்க அவன் பிரஷ் மூலமாய் 'லவ் பீம்' என்று எழுதினான். இந்த டீமிற்கு 'லவ் பீம்' என்று சாம்பவியே பெயர் வைத்தாள்.

பரிஷித்திற்கு அந்த எழுத்துக்களைப் பார்த்தபோது, அதைத் தாமிருவரும் சேர்ந்து எழுதிய சம்பவம் நினைவிற்கு வந்தது. வாழ்க்கையில் இவ்வாறு சின்னச் சின்ன வேலைகளைச் சேர்ந்து செய்வதில் இவ்வளவு ஆனந்தம் இருக்கிறது என்று முதல் முதலாகப் புரியத் தொடங்கிற்று.

31

காலை பத்துமணியளவில் அந்த வீட்டிலிருந்து கத்தலும் கூச்சலும் கேட்டுக் கொண்டிருந்தன. மகாலிங்கம் வீட்டின் மேல் கூரையே இடிந்து விழுந்து விடும்போல கத்திக் கொண்டிருந்தார். இதுவரை அந்த வீட்டிலிருந்து இப்படிப்பட்ட கத்தலையும் யாரும் கேட்டதில்லை. அக்கம்பக்கத்தார் கூச்சலிட்டுச் சண்டை போட்டுக் கொண்டால் கூட, "இப்படிக் கத்தாதீங்கய்யா. உங்கள் விஷயத்தை எல்லோரும் ஏன் கேட்கணும்?" என்று இதபோதனை செய்வார். அப்படிப்பட்ட அவர் சுபாவத்திற்கே விரோதமாய் கத்திக் கொண்டிருந்ததைக் கேட்டு எல்லோரும் கைவேலைகளைப் போட்டு விட்டு ஓடி வந்தார்கள்.

அவர் ஆயாசத்தால் மூச்சிரைக்க, கைகளை நீட்டிக் கொண்டே கத்திக் கொண்டிருந்தார். "என்னது? நீ... நீ ராலியில் போகிறாயா? சாம்பவியைக் கூட கூட்டிட்டுப் போகிறாயா? எந்த அயோக்கியன் உனக்கு இந்த

யோசனையைச் சொன்னான், அதைச் சொல்லு! கொன்று போட்டு விடுகிறேன். எல்லாம் உன்னிஷ்டந்தானா? என்னைக் கேட்கத் தேவையில்லையா? மொதல்ல நான் ஒருத்தன் வீட்டில் இருக்கிறது உங்களுக்கு ஏன் ஞாபகமில்லாமல் போயிடுத்து? உங்களிருவரையும்... எங்கே என் துப்பாக்கி?"

சாம்பவி ஓடிப்போய் துப்பாக்கியைக் கொண்டுவந்து அவர் கையில் தந்தாள். திரும்பவும் போய் பரிஷித்திற்குப் பக்கத்தில் நின்று கொண்டு— "கொன்று போட்டு விடுங்கள் அங்கிள்! கொன்று போடுங்கள்! கமான்! ஷூட் அஸ். உங்களுக்கு அந்த உரிமை இருக்கு! நாங்கள் சொல்லாதது எங்கள் தப்புத்தான். திடீரென்று ஆச்சரியப் படுத்தணும்னு எண்ணினோமே தவிர வேறெந்த உத்தேசமும் இல்லை. இதோ இந்த சாய்வு நாற்காலியைப் போலத்தான் செய்யலாம்னு நினைத்தோம். இல்லையா பரிஷித்?" என்றாள்.

அவன் உடனே 'ஆம்' என்று தலையாட்டினான். பரிஷித் வாயைத் திறந்து எதுவும் பேசவில்லை. இப்பொழுது எதைப் பேசினாலும் அவர் கோபம் அதிகமாய்த்தான் ஆகும் என்று அறிவான் அவன்.

முடிந்தவரை அவர் சந்தோஷமாய் இருக்கும் மூடைப் பார்த்து இந்தச் செய்தியைச் சொல்லவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் அவர் அவர்கள் எதிர்பார்த்தாற் போலவே எரிமலையாய் கொதித்தெழுந்தார். முதலில் அவருக்கு அவர்கள் சொன்னது புரியலில்லை.

கார் ராலியைப் பார்க்கப் போகப் போகிறோம் என்று சொல்கிறார்கள் போலும் என்று நினைத்தார். விஷயம் புரிந்ததும் ஆவேசம் வந்து விட்டது. ஆக்ஸிடெண்டைப் பற்றி நினைத்து பயந்து போனார். இவ்விருவரும் சேர்ந்து தன்னைத் தனியனாக்கி விட்டார்கள் என்று அழுகை வரத் தொடங்கிற்று.

பரிஷித்திற்கு அந்த எழுத்துக்களைப் பார்த்தபோது, அதைத் தாமிருவரும் சேர்ந்து எழுதிய சம்பவம் நினைவிற்கு வந்தது. வாழ்க்கையில் இவ்வாறு சின்னச் சின்ன வேலைகளைச் சேர்ந்து செய்வதில் இவ்வளவு ஆனந்தம் இருக்கிறது என்று முதல் முதலாகப் புரியத் தொடங்கிற்று.

31

காலை பத்துமணியளவில் அந்த வீட்டிலிருந்து கத்தலும் கூச்சலும் கேட்டுக் கொண்டிருந்தன. மாதவிங்கம் வீட்டின் மேல் கூரையே இடிந்து விழுந்தது போல கத்திக் கொண்டிருந்தார். இதுவரை அந்த வீட்டிலிருந்து இப்படிப்பட்ட கத்தலையும் யாரும் கேட்டதில்லை. அக்கம்பக்கத்தார் கூச்சலிட்டுச் சண்டை போட்டுக் கொண்டால் கூட, ''இப்படிக் கத்தாதீங்கய்யா, காலைல விஷயத்தை எல்லோரும் ஏன் கேட்கணும்?'' என்று தற்கொலை முயற்சி செய்வார். அப்படிப்பட்ட அவர் சுபாவத்திற்கே விரோதமாய் கத்திக் கொண்டிருந்ததைக் கேட்டு அங்கேயிருந்த எல்லோரும் கைவேலைகளைப் போட்டு விட்டு ஓடி வந்தார்கள்.

கோபாவேசத்தால் முகமெல்லாம் சிவக்க, கைகளை நீட்டிக் கொண்டே கத்திக் கொண்டிருந்தார். ''என்னது? நீ... நீ ஆஸ்பத்திரிக்குப் போகிறாயா? சாம்பவியைக் கூட கூட்டிட்டுப் போகிறாயா? எந்த அயோக்கியன் உனக்கு இந்த

யோசனையைச் சொன்னான், அதைச் சொல்லு! கொன்று போட்டு விடுகிறேன். எல்லாம் உன் விஷ்டந்தானா? என்னைக் கேட்கத் தேவையில்லையா? மொதல்ல நான் ஒருத்தன் வீட்டில் இருக்கிறது உங்களுக்கு ஏன் ஞாபகமில்லாமல் போயிடுத்து? உங்களிருவரையும்... எங்கே என் துப்பாக்கி?''

சாம்பவி ஓடிப்போய் துப்பாக்கியைக் கொண்டுவந்து அவர் கையில் தந்தாள். திரும்பவும் போய் பரிஷித்திற்குப் பக்கத்தில் நின்று கொண்டு— ''கொன்று போட்டு விடுங்கள் அங்கிள்! கொன்று போடுங்கள்! கமான்! ஷூட் அஸ். உங்களுக்கு அந்த உரிமை இருக்கு! நாங்கள் சொல்லாதது எங்கள் தப்புத்தான். திடீரென்று ஆச்சரியப்படுத்தணும்னு எண்ணினோமே தவிர வேறெந்த உத்தேசமும் இல்லை. இதோ இந்த சாய்வு நாற்காலியைப் போலத்தான் செய்யலாம்னு நினைத்தோம். இல்லையா பரிஷித்?'' என்றாள்.

அவன் உடனே 'ஆம்' என்று தலையாட்டினான். பரிஷித் வாயைத் திறந்து எதுவும் பேசவில்லை. இப்பொழுது எதைப் பேசினாலும் அவர் கோபம் அதிகமாய்த்தான் ஆகும் என்று அறிவான் அவன்.

முடிந்தவரை அவர் சந்தோஷமாய் இருக்கும் மூடைப் பார்த்து இந்தச் செய்தியைச் சொல்லவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் அவர்கள் எதிர்பார்த்தாற் போலவே எரிமலையாய் கொதித்தெழுந்தார். முதலில் அவருக்கு அவர்கள் சொன்னது புரியவில்லை.

கார் ராலியைப் பார்க்கப் போகப் போகிறோம் என்று சொல்கிறார்கள் போலும் என்று நினைத்தார். விஷயம் புரிந்ததும் ஆவேசம் வந்து விட்டது. ஆக்ஸிடென்டைப் பற்றி நினைத்து பயந்து போனார். இவ்விருவரும் சேர்ந்து தன்னைத் தனியனாக்கி விட்டார்கள் என்று அழுகை வரத் தொடங்கிற்று.

"உங்கள் கால்களை உடைத்துப் போட்டுவிட்டு, அப்புறமாய் குணமாக்கிக் கொள்கிறேன். இந்த நிமிஷத்திலிருந்து உங்களை நகரவிடாமல் அந்த அறையில் போட்டுப் பூட்டிவிடுகிறேன். எங்கே போகிறீர்களோ பார்த்து விடுகிறேன்" கத்தினார் அவர்.

சாம்பவி அவர் கையில் துப்பாக்கியைத் தந்து— பரிஷித்திற்குப் பக்கத்தில் போய் நின்று, அவர் குறி பார்த்துக் கொண்டிருக்கையில்— தந்தையைச் சிறு பெண் கெஞ்சுவதுபோல— "அங்கிள்! ப்ளீஸ்! எங்களைக் கொன்று போட்டுவிடுங்கள், பரவாயில்லை. உங்களிடம் சொல்லாமல் தப்பு செய்துட்டோமாதலால் நீங்கள் என்ன செய்தாலும் நியாயந்தான். ஆனால் அங்கிள்! ப்ளீஸ் சுட்டுத் தள்ளிவிடாமல் ஒரு நிமிஷம் நில்லுங்கள். எப்படியும் கொல்லப் போகிறவர் அந்த ராலி ஆனபிறகு கொன்று போட்டுவிடுங்கள். அங்கிள் ராலி என்றால் எங்களுக்கு எவ்வளவு இஷ்டம் தெரியுமா! எவ்வளவோ கஷ்டப்பட்டு நான் பரிஷித்திடமிருந்து அதையெல்லாம் கற்றுக்கிட்டேன். நாலுநாள் பொறுங்கள். ராலி முடிந்து விடும்" சாம்பவி கைகளைக் கூப்பினாள். "அங்கிள்! எப்படியும் எங்களைக் கொல்லப் போகிறீர்கள். கடைசி ஆசையாய் கேட்டுக் கொள்கிறேன். ராலிக்குப் போய் விட்டுத் திரும்பி வந்த பிறகு கொன்று விடுங்கள். அந்தத் த்ரில்லிங்கில் செத்துப் போகிறோம். அங்கிள் ப்ளீஸ்!"

அவர் முகம் தொய்ந்து விட்டது. சுடுவன் பூனை முகம் போல ஆயிற்று. அவர் கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. சட்டென்று துப்பாக்கியைத் தன் பக்கமாய் திருப்பிக் கொண்டார். 'உங்களைக் கொல்ல நான் யார்? என்னிடம் சொல்லாமல் இந்தக் காரியத்தை செய்ததால் நான் வேற்று மனுஷன் என்பதைச் சுட்டிக் காட்டி விட்டீர்கள். உங்களைக் கொல்லமாட்டேன். நானே செத்துப் போகிறேன்."

அவர் பயமுறுத்துவதற்காக அந்த வார்த்தைகளைச் சொல்லவில்லையென்றும், உண்மையாகவே வேதனையோடும் ஆத்திரத்தோடுந்தான் சொல்கிறார் என்றும் சொன்னபடியே செய்தும் காட்டிவிடுவார் என்றும் ஊகித்துக் கொண்ட பரிஷித், ஒரே பாய்ச்சலாய் அவர் மேல் விழுந்து அந்த துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டு, எடுத்துப் போய் கொல்லையிலிருந்த கிணற்றிற்குள் போட்டுவிட்டு வந்தான்.

சாம்பவி அவரைப் பிடித்துக்கொண்டு "அங்கிள்! அங்கிள்" என்று புலம்பிக் கொண்டிருந்தாள்.

அவ்வீதியிலிருந்த ஜனங்களெல்லாம் அங்கே வந்து கூடிவிட்டார்கள்.

"என்னவாச்சு?" என்று ஒருவர்.

"அதான் எனக்கும் புரியலை" என்று இன்னொருவர்.

"ஏதோ நடக்கக் கூடாத தீங்குதால் நடந்துவிட்டிருக்கும்" என்று இன்னொருவர்.

"பாவம்! அவர் இவ்வளவு கோபமடைந்தும் வருத்தமடைந்தும் இது வரை கண்டதேயில்லை" என்று இன்னொருவருமாய் தலைக்குத் தலை வியாக்கியானம் செய்து கொண்டிருந்தார்கள்.

சத்யா, "என்னவாச்சு?" என்று பதறியபடி ஓடி வந்தார்.

கொல்லையிலிருந்து வந்துகொண்டிருந்த பரிஷித்தைக் கேட்டார்.

பரிஷித் சுருக்கமாய் நடந்ததைச் சொன்னான்.

"ஓ! இவ்வளவுதானா?" என்றார் ஒருவர்.

"இதற்குப் போயா இவ்வளவு?" என்றார் இன்னொருவர்.

''இதற்கு இவ்வளவு ரகளையா? பசங்க பெரிய காரியத்தை செய்யறதைப் பார்த்துச் சந்தோஷப்படாமல் இப்படித் தொண்டையைக் கிழித்துக்கொண்டு கத்துகிறாரே!'' என்றான் சத்யம் அடக்குவது போல.

''உன் பசங்கள் இருவரிடம் கத்தியைக் கொடுத்துக் குத்திக் கொள்ளச் சொல்லு உன் கண் எதிரிலேயே, நன்றாயிருக்கய்யா உன் விவரணை'' உருமினார் ஒருத்தர்.

''மகாலிங்கம் சார்! நீங்கள் இப்படி ஆவேசப்படுவது நன்றாயில்லை. பாருங்கள், எப்படி வியர்த்துக் கொட்டுகிறதுன்னு'' அவரைப் பிடித்துக்கொண்டு சொன்னார் சத்யா.

''சாம்பவி! டாக்டருக்குப் போன் செய்துட்டு வா. சட்டென்று போ'' பரிஷித் மெல்லிய குரலில் சொன்னான். சாம்பவி ஓடினாள். அடுத்த பதினைந்து நிமிஷத்தில் டாக்டர் தேவனின் கார் அவ்விடத்திற்கு முன்னால் வந்து நின்றது.

* * *

''மிஸ்டர் மகாலிங்கம் வானமே இடிந்து தலையில் விழுந்து விட்டாற்போல இதென்ன ரகளை?'' தேவன் கண்டித்தார்.

''நீங்களே சொல்லுங்கள் டாக்டர் நாங்கள் சொன்னால் காதில் போட்டுக் கொள்ளவே மாட்டேங்கிறார்'' என்றார் சத்யா.

மகாலிங்கம் தலைக்கு துண்டை இழுத்துக் கட்டிக் கொண்டு கட்டிலில் படுத்தபடி மேற்கூரையை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தார். தேவன் அவருக்கு இஞ்ஜெக்ஷன் குத்தினார். சாம்பவி ஹார்லிக்ஸை கரைத்துக் கொண்டு வந்தாள். பரிஷித்

தூரத்தில் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றிருந்தான்.

''டாக்டர்! இவங்க ரெண்டுபேருக்கும் இந்தத் தெருவுக்குப் பந்தல் போட்டுக் கல்யாணம் செய்யணும்னு நினைத்தேன். ஒருக்கால் இருவரையும் என் கையாலேயே தானத்திற்கு...''

''சீ! இதென்ன பேச்சு?'' சத்யா சட்டென்று கடித்தார்.

''டாக்டர்'' தீனமாய் பார்த்தார் அவர்.

''என்ன?'' கேட்டார் தேவன்.

''நீங்கள் ஏதாவது ஆசுபத்திரியில் மூன்று பெட்களை ரிசர்வ் செய்து வையுங்கள்.''

''எதுக்கு?''

''அதற்குள் ஹார்ட் அட்டாக் வந்து செத்தால் எனக்கு ன்று! ராலியில் ஆக்ஸிடென்ட் வந்துட்டால் அவங்க ண்டு பேருக்கும்''

''அப்பப்பா! போதும் உங்கள் பயமும் சந்தேகமும்.'' டாக்டர் அலுத்துக் கொண்டார். ''உங்களை இவ்வளவு கோழையாய் நான் இதுவரை பார்த்ததேயில்லை'' அவர் ஆச்சரியமடைந்தார்.

''இந்தப் பசங்கள் ரெண்டு பேரும் என்னை அப்படிச் செய்துட்டாங்க. ஒருக்கால் வரப்போற துக்கத்திற்குத் தானோ என்னவோ? என் வாழ்க்கையில் இந்த நாலுநாள் பசையும் ஒரு பண்டிகையாய் கழிந்து போயிடுத்து''

''நீங்கள் கண்ணை மூடிக்கொண்டு ஓய்வு எடுத்துக் ங்கு.'' டாக்டர் கண்டித்தார்.

சாம்பவி கிட்டே வந்து உட்கார்ந்து அவர் கையைப் டித்துக் கொண்டாள். ''அங்கிள்! நாங்கள் விட்டு

விடுகிறோம். நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க'' என்றாள் தினமாய்.

டாக்டர் சட்டென்று எரிந்து விழுந்தார். இதப்பா இப்படித்தான் சொல்லக் கூடாதுங்கிறேன். எதுக்க விடணும்? மிஸ்டர் மகாலிங்கம்! இந்தப் பசங்கள் ரெண்டு பேரும் உங்களை மோசம் ஒன்றும் செய்யலை. அவங்க அப்படிப்பட்டவங்க இல்லைன்னு என்னையும் விட உங்களுக்கே நன்றாய் தெரியும். அவங்க ரெண்டுபேரும் வந்து மொதல்ல என்னிடம் சொன்னாங்க. நான்தான் அந்த சமயத்தில் சொல்லிக்கலாம், முன்கூட்டியே சொல்ல வேண்டாம்னு ஆலோசனை சொன்னேன். மொதல்லியே சொன்னால் நீங்களோ ஏற்கனவே ப்ளட்ப்ரெஷர் ஆள் உங்க உடம்புக்கு அதிர்ச்சி ஆகாதுன்னுதான்!'' டாக்டர் அவர் கையில் தட்டிக் கொண்டே— ''அவங்களைப் புரிஞ்சுக்குங்க, திமுர் என்று வந்து உங்களைச் சந்தோஷப் படுத்தணும்னு சொன்னாங்க. அதானே தவிர வேறெந்த உத்தேசமும் அவங்களுக்கு இல்லை. நீங்கள் இல்லாத காபரா அடைந்து விடுவீங்கன்னு நானே எதிர்பார்க்கல. இதில் தப்பு அவங்களோடது இல்லை. யோசனை சொன்ன என்னோடதுதான். என்னைச் சுட்டுத் தள்ளிடுங்களா? சொல்லுங்க. துப்பாக்கி எங்கே, இங்கே கொண்டு வாங்க'' என்றார் அவர்.

டாக்டர் திரும்பத் திரும்பச் சொன்னதாலும் சத்யா பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு தைரியம் சொன்னதாலும் மகாலிங்கம் கொஞ்ச நேரத்தில் பழையபடி ஆனார்.

பரிஷித் கார் ராலியில் பங்கெடுத்துக் கொள்ளப் போவதை அறிந்து அந்த வீதியிலிருந்த இளைஞர்கள் எல்லோரும் வந்து அவன் கையைப் பிடித்துக் குலுக்கி விட்டு, கங்கிராஜுலேஷன்ஸ் தெரிவித்தார்கள். மிக உற்சாகத்துடன் அதைப் பற்றிய விவரங்களைக் கேட்கத் தொடங்கினார்கள் அதைப் பற்றிய சம்பாஷணைகளே

நடந்து கொண்டிருந்தன. அந்த வீதியிலிருந்த ஓரிரு பெரியவர்கள் கூட வந்து புகழ்ந்தார்கள். ''என்னையிருந்தாலும் உங்க பசங்களே வேறுதான் சார்! எங்க பசங்களும் இருக்காங்களே, எதுக்கு, கிணற்றுத் தவளைங்கதான்! ஒரு விஷயத்திலும் ஆர்வம் இருக்காது. படிப்பிலோ விளையாட்டிலோ கூட சுருசுருப்பு இருக்காது மொதல்ல இந்த அம்மாமாருங்க இருக்காங்களே, அவங்களைச் சொல்லணும் புடவைத் தலைப்பை விட்டுட்டுப் போக விடமாட்டாங்களே!'' என்றார்கள்

யாரெல்லாமோ வந்து கொண்டேயிருந்தார்கள். வீடெல்லாம் சந்தடியாய் இருந்தது. அவர்கள் மகாலிங்கத்திற்குக் கூட கங்கிராஜுலேஷன்ஸ் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள் பரிஷித்திற்கும் சாம்பவிக்கும் ஒரு பாராட்டு விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாய் இளைஞர்கள் வந்து தெரிவித்தார்கள்.

மறுநாள் அந்த வீதியெல்லாம் உற்சாகத்தால் விழித் தெழுந்தாற்போல ஆயிற்று. அவனுக்கு வெற்றி ஏற்பட்டால் அந்த வீதிக்கே புகழ்! வெற்றி ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் ஒரு ஆள் இந்த வீதியிலிருந்து சென்று அதில் பங்கெடுத்துக் கொள்கிறான். இதுபோதும்.

வீதியிலேயே ஒரு சின்ன மேடையைப் போட்டார்கள். சத்யாவின் மனைவி தேநீர் கலந்து கொண்டு வந்தாள். இன்னொருத்தர் வீட்டிலிருந்து பக்கோடாக்கள் வந்தன. இன்னொருத்தர் வெற்றிலை பீடாக்களை வாங்கிவந்தார். நாகமணி அவர்கள் வீட்டிலும் இவர்கள் வீட்டுக் கொல்லையிலுமாய் புகுந்து பூக்களையெல்லாம் பறித்து வந்து இரண்டு மாலைகளைத் தயாரித்து விட்டாள். வீடுகளிலிருந்த நாற்காலிகளைக் கொண்டுவந்து போட்டார்கள். மேஜையை நடுவே போட்டு அதன் மீது ஒரு கண்ணாடித் தம்ளரை வைத்துப் பூங்கொத்தைத் தயா

ரித்து அதில் வைத்தார்கள். சாம்பவிக்கும் பரிஷித்திற்கும் சத்யாவின் மகளைக் கொண்டு மாலை போடச் செ தார்கள்

மகாலிங்கத்தைப் பேசச் சொன்னார்கள். அவர் முதலில் மறுத்தாலும், எல்லோரும் பலவந்தப்படுத்திய தால் வேறு வழியின்றி பேசத் தொடங்கினார். யைப் போன்ற எதுவும் இல்லை. அதன் தேவை கூட அவரி மில்லை என்றாற்போல அவர் பேசத் தொடங்கியதுமே எல்லோரும் நிசப்தமாகிவிட்டார்கள்.

அவர் சொல்லிக் கொண்டிருந்தார். ''பெரியவங்க எல்லோருக்கும் என் வணக்கம். சின்னவங்களுக்கு என் ஆசிகள். இது சந்தோஷமா துக்கமா என்று எனக்குத் தெரியவில்லை. இந்தத் தடபுடலையும், இந்த உற்சாகத் தையும் பார்த்தால், இவங்க செய்யற இந்தக் காரியம் நன்றாய் இருப்பது போலத்தான் இருக்கு. எனக்கு உடனே பயமும் ஏற்படுறது. ஒன்றை மட்டும் உங்கள் எல்லோ ருக்கும சொல்லிடறேன்'' —அவர் எல்லோரையும் சுற்றிப் பார்த்துவிட்டு இரு கைகளையும் கூப்பினார். ''உங்களில் பெரியவங்கள்ளாம் இவங்க ரெண்டு பேரும் ராலியிலி ருந்து காலையோ கையையோ உடைத்துக் கொள்ளாமல் லட்சணமாய் வந்து சேரணும்னு ஆசீர்வதியுங்கள்! சின்ன வங்கள்லாம் விஷ் செய்யுங்க. அதுதான் உங்களைக் கேட்டுக் கொள்வது.'' அவர் முகம் தொய்ந்துவிட்டது அவர் கண்களில் ஏதோ மின்னல்! பயம் தொடர்ந்து கொண்டேயிருப்பது புரிந்தது,

''பரிஷித்— சாம்பவி! விஷ் யூ ஆல் தி பெஸ்ட்'' இளைஞர்கள் எல்லோரும் கையைத் தூக்கி கோரலாய் கத்தினார்கள்.

32

நாளன்றைக்குத்தான் ராலி!

ஆயிரம் கனவுகளுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த நாள் வந்தே வந்துவிட்டது. சாம்பவி தன் மனதில் இதுவரை தினமும் நூறு தடவைகளாவது ராலியில் செல்வதுபோல கற்பனை செய்து கொண்டிருந்த வேளை உண்மையாகவே நெருங்கிவிட்டது.

அன்றுதான் அவர்கள் ஐதராபாத்திற்குப் புறப்பட இருந்தார்கள். முன்கூட்டியே ஓட்டலில் அறையை புக் செய்து விட்டார்கள். மகாலிங்கம் காலையிலிருந்தே ஒரே தடபுடல் செய்து கொண்டிருந்தார். அவர்கள் ராலியின் போது வழியில் சாப்பிட ஹார்லிக்சும், க்ளுகோசும் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தார். சர்க்கரையை ஒரு சின்ன டப்பாவில்போட்டுத் தந்தார். பிஸ்கெட்டுகளையும் சாட்பரீஸ் சாக்லெட்டுகளையும் வாங்கி வந்து எல்லாவற் றையும் சேர்த்துக் கட்டி பின்சீட்டில் வைத்தார்.

''ஓட்டலில் வெந்நீரைக் கேட்டு வாங்கிக் கொண்டு ஹார்லிக்ஸைக் கலந்து பிளாஸ்கில் ஊற்றிக் கொள்ளுங்கள். ராலிக்குப் போவதற்கு முன்னால அதைக் காரில் ஞாபகமாய் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். க்ளுகோசையும் கூட''— என்றார்.

ஸ்பேர் பார்ட்டுகளையெல்லாம் காரில் எடுத்து வைத்துக் கொண்டார்களா இல்லையா என்று திரும்பத் திரும்ப ஞாபகப்படுத்தி, செக் செய்து கொள்ளச் சொன்னார்.

சத்யா சொன்னார்— ''ஆஹா! இந்த மிஷின்களுக்கு ஒரு ஸ்பேர் பார்ட் போயிட்டால் இன்னொரு ஸ்பேர் பார்ட் கடையில் கிடைத்து விடுகிறது. மனுஷ உடம்பிற்குக் கஷ்டம். கிடைக்காது இல்லையா?''

மகாலிங்கம் சட்டென்று சொன்னார்— ''சத்யா சார், எவ்வளவு முட்டாள் நீங்க! ஒரு தடவை உங்க உடம்பைப் நீங்க பார்த்துக்குங்க. ரொம்ப முக்கியமான பாகங்கள அத்தனைக்கும் கடவுள் நம்ப உடம்பில் ஒரு ஸ்பேர் பார்ட்டைப் பொருத்தி வைத்து நம்மை அனுப்பி வைத்திருக்கிறார். ஒரு கண்ணுக்கு இன்னொரு கண், ஒரு கைக்கு இன்னொரு கை, காலுக்கு இன்னொரு கால், காதுக்கு இன்னொரு காது, லங்சுக்கு இன்னொரு லங்சு, கிட்னிக்கு இன்னொரு கிட்னி, இப்படிப் பாவம் நாம்ப தேடியலை யாமலிருக்க ஏற்பாடு செய்து வைத்திருக்கிறார்—'' என்று சொல்லிச் சிரித்தார்.

மகாலிங்கம் கூடை நிறைய பழங்களையும் இன்னும் ஏதேதோ சாமான்களையும் சுமந்து கொண்டு வரவே, பரிஷித் தடுத்தான்— ''அங்கிள்! இதையெல்லாம் சாப்பிட நேரம் எங்கே இருக்கப் போகிறது? வேண்டாம், ப்ளீஸ்''—

'லவ் பீம்' வெளியே சித்தமாய் நின்று கொண்டிருந்தது. அதற்குள் நிறைய ஸ்பேனர்கள், வெளியே நிறை வியாபார நிறுவனங்கள் விளம்பரத்திற்காகத் தம் கடை களின் பெயரை பெயிண்ட் அடித்திருந்தார்கள் அதன் மீது அது பார்க்க அழகாய் சிங்காரித்துக் கொண்டு நின்றது பரிஷித்- சாம்பவியின் வரவுக்காகக் காத்திருந்தாற் போல் தோன்றிற்று.

பரிஷித்தின் கார் ராலி விஷயத்தைப் பற்றிக் கேட்டதுமே அந்த வீதியிலிருந்த சிலர் டிரைவிங் கீப்பர்களை மீதடிக்கொண்டு போகத் தொடங்கிவிட்டார்கள். ''இதும் ஒரு விளையாட்டைப் போல்தான். ஆனால் கொஞ்சம் உயிரோடு போட்டியிட்டுக் கொண்டு வேகமாய் போ

கூடிய அபூர்வ துணிச்சலும் உற்சாகமும் கொண்ட பந்தயம்! கால், கை உடைந்து போகும் என்று பெரியவர் கள் திட்டுவார்கள். அவங்க மூஞ்சி! அவங்களுக்கென்ன தெரியும் இதிலிருக்கிற த்ரில்லைப்பற்றி? எந்த வேலையும் பண்ண விடாமல் பிடிச்சு வெச்சுட்டிருப்பாங்க. கிழவர் தளைப்போல மூலையில் முடுங்கிக் கிடக்கச் சொல்லு வாங்க. ஆக்ஸிடென்ட் என்பது தலையில் எழுதி வைத் திருந்தால் எங்கேயுந்தான் நடக்கும் அது! எதிர்த்தவீட்டுப் பையன் எவ்வளவு ஜாக்கிரதையாய் இருப்பான். அவங்க பாட்டி அவனை சைக்கிள் ஓட்டக்கூட விடமாட்டாங்க. பாத்ரூமில் சருக்கி விழுந்து இடுப்பு எலும்பு உடைந்து கட்டிலோடு கட்டிலாய் படுத்துக்கிடக்கிறான் ஆறுமாத மாய். ஆனாலும் இந்தப் பெரியவங்க ரொம்பத்தான் அடக்கி வைப்பாங்க ராலிக்குப் போறவங்க அத்தனை பேருக்கும் ஆக்ஸிடென்ட் ஆகிறதா என்ன? தெருக் கோடியில் இருக்காரே வரதாச்சாரி, அவர் எல்லோருக்கும் பிரயாணத்துக்கு முகூர்த்தம் பார்த்து ஜோதிடம் சொல் கிறார். முந்தாநாள் அவர் போன பஸ் பள்ளத்தில் விழுந்து அவர் கை உடைஞ்சுடுத்து'' என்று பேசிக் கொண்டார்கள்.

அந்த வீதியிலிருந்த நடுத்தரக் குடும்பத்தினருக்கும், அதையும் விட கடைமட்டத்திலிருந்தவர்களுக்கும் இச சம்பவம் சொல்ல முடியாத அபூர்வ விஷயமாய் இருந்தது.

''அட! பெண் பிள்ளை! அந்த சாம்பவி போகிறாள்.'' என்று வியந்து போனார்கள்.

''நமக்குக் கார் இல்லாவிட்டாலும் போகட்டும். கார் இருக்கிறவங்களையாவது சிநேகம் செய்துக்கணும்டா''— இவ்வாறு தலைக்குத் தலை சந்தடியாய் வியாக்கியானம் செய்துகொண்டிருந்தார்கள்.

காருக்கு சத்யாவின் மனைவி தேங்காய் உடைத்து சூம்பூரம் காட்டினாள். எல்லோருக்கும் நடுவில் புகுந்து

நாய்க்குட்டி பிஜ்ஜி தாவித் தாவி ஓடிக்கொண்டிருந்தது. மகாலிங்கம் அதைப் பிடித்து அறைக்குள் தள்ளி சாத்தி விட்டார்.

பரிஷித் மெக்கானிக்காய் ஜம்புவைக் கூட அழைத்துக் கொண்டு போக எண்ணியிருந்தான். ஆனால் நேற்று மாலையில் ஜம்புவின் தம்பிக்கு உடம்பு சரியாயில்லை என்று தந்தி வந்ததால் அவன் ஊருக்குப் போகும்படி நேர்ந்தது.

"நானும் உங்களோடு வரேன்" என்றார் மகாலிங்கம்.

டாக்டர் தேவன் உடனே தடை விதித்துவிட்டார்.

"ஒன்றும் வேண்டாம். ராலியில் உங்களை கூட்டிட்டு போனால் அந்த வேகத்துக்கு வழியில் உங்களுக்கு ஏதாவது ஆயிட்டால் தொல்லையாகி விடும். அல்லது வெளியே காத்துட்டு நின்றாலும் உங்களுக்குப் பதைபதைப்பு அதிகமாகி விடும்" என்று பலவந்தமாய் தடுத்துவிட்டார். பரிஷித்தும் சாம்பவியும் திரும்பி வரும் வரை மகாலிங்கம் டாக்டர் தேவனோடு தங்கியிருக்கும்படியாய்த் தீர்மானமாயிற்று

சாம்பவி வீட்டைவிட்டுப் புறம்படுவதற்கு முன்னால் அந்த அமர்க்களத்திலேயே நடுவில் சரேலென்று ஏகாந்தமான சமயம் பார்த்து பரிஷித்திடம் வந்தாள். நிமிர்ந்த சட்டென்று அவன் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு— "விஷ் யூ ஆல் தி பெஸ்ட்" என்றாள்.

இன்னும் என்னென்னவோ சொல்லவேண்டும் போலிருந்தது. ஆனால் வாயிலிருந்து வார்த்தை வெளி வரவில்லை. நேரமும் இல்லை. மின்னலாய்ப் பாய்ந்து ஓடிப்போகப் போன சாம்பவியை பரிஷித் தடுத்து கிட்டே இழுத்துக் கொண்டான். நெற்றியில் உதடுகளைப் பதிப்பித்து.

"தாங்க்யூ! சேம் டு யூ!" என்றான்.

'இருவரும் இவ்வாறு சேர்ந்து போகிறோம். மறுபடியும் கால் கையோடு திரும்பி வருவோமா' என்று தோன்றிற்று சாம்பவிக்கு.

பரிஷித்தும் சாம்பவியும் தயாராகி, மகாலிங்கத்தின் இரு பக்கங்களிலுமாய் நின்றுகொண்டு அவர் இரு கன்னங்களிலும் முத்தமிட்டார்கள்.

"மே காட் ப்ளெஸ் யூ மை சில்ட்ரன்" அவர் வாயிலிருந்து தன்னையறியாமல் வார்த்தைகள் வெளிவந்தன.



ஐதராபாத் பேகம்பேட் போலீஸ் ஹாக்கி ஸ்டேடியம் கலகலப்பாய் இருந்தது. ராலியில் பங்கெடுத்துக்கொள்ள விருந்த முப்பத்திரெண்டு கார்களும் வரிசையாய் நின்றிருந்தன. அவற்றில் ஃபியட்ஸ், அம்பாஸிடர்ஸ், ஜீப்ஸின், மாருதி முதலிய விதம் விதமான கார்கள் இருந்தன. வரிசையாய் நின்றபடி பந்தயத்திற்குத் தயாராய் இருந்தன டிரைவர்கள் கார்களை கடைசியாய் ஒரு முறை பரிசோதித்துக் கொண்டார்கள். அவரவர்களின் சிநேகிதர்களும், குடும்ப அங்கத்தினர்களும் விடை கொடுத்தனுப்பிக் கொண்டிருந்தார்கள். பரிஷித்தின் கார் நெம்பர் இருபத்தைந்து.

ராதிகாவும் ப்ரசன்னாவும் கூட சிவப்பு மாருதிக் காரோடு அங்கு வந்து அதற்குள் தயாராகியிருந்தார்கள்.

அவர்கள் நிநேகிதர்கள் நிறையப்பேர் வந்திருந்தார்கள். ராதிகா காரைப் பரிசோதித்துக்கொண்டிருந்த பரிஷித்தைப் பார்த்துவிட்டு கிட்டே வந்தாள். ''ஹாய்'' என்று விசாரித்தாள்.

''நீங்கள் கூட வரீங்களா? வாட் ஏ சர்ப்ரைஸ்?'' என்றாள் கைகளை ஆட்டித் தோளைக் குலுக்கிவிட்டு, சாம்பவியைப் பார்த்ததும் அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அங்கிருந்து போய்விட்டாள்.

நேரம் நெருங்கிவிட்டது.

கவர்னர் வந்தார்

கிளப் பிரெசிடென்ட் பேசிக்கொண்டிருந்தார்—

இந்தச் சார்மினார் சேலெஞ்சு ராலி வரவர மிகப் புகழ் பெற்றுக்கொண்டே வருகிறது. இந்த ராலியின் ரூட் மொத்தமாய் இரண்டாயிரத்து நானூறு கிலோ மீட்டர்கள் இருக்கிறது. இதை த்ரீ லெக்ஸாய் பிரித்திருக்கிறோம். இது க்ளோவர் லீஃப் பாட்ரனில் இருக்கிறது. ஒவ்வொரு லெக்ஸும் ஐதராபாத்திலிருந்து புறப்பட்டுத் திரும்பவும் ஐதராபாத்திற்கே வருகிறது. நாங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிற இந்த வழி டிரைவர்களின் சாமர்த்தியத்தை ருசு பண்ணக்கூடிய விதத்தில் அமைந்திருக்கிறது. இதில் அதிகப் பாகம் ரோட் காம்பிடிவ் விதத்திற்குத் தோதாக க்ராஸ் கன்ட்ரீ ரோடுகளோடு இருக்கிறது. புழுதி ரோடுகள் அதிகம். முக்கியமாய் சொல்ல வேண்டியது ''சர்வீஸ் செண்டர்ஸ்''. மாருதி ப்ரீமியர் ஆட்டோமொபைல்காரர்களைப் பற்றி. இந்துஸ்தான் மோட்டார் சர்வீஸ்காரர்கள் நல்லிதயத்துடன் சர்வீஸ் பாக்ஸ் தந்து உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஆண்டு வந்துள்ள இந்த முப்பத்திரெண்டு என்ட்ரீகளில் நாட்டிலுள்ள பெஸ்ட் டீம்கள் எல்லாம்

பங்கெடுத்துக்கொண்டு இதற்குத் தனிச் சிறப்பை ஏற்படுத்தித் தந்ததற்கு மகிழ்ச்சியடைகிறேன்— அவர் இன்னும் ஏதேதோ விவரங்களைச் சொல்லிக்கொண்டேயிருந்தார்.

''இருபத்தைந்தாம் நெம்பர் குறிக்கப்பட்டிருந்த கருப்பு ஃபியட்டில் பரிஷித்திற்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த சாம்பவிக்கு இதெல்லாம் உண்மையாய் நடந்துகொண்டிருப்பதுபோல இல்லை. ஏதோ கனவில் நிகழ்ந்து கொண்டிருந்தாற்போலவே இருந்தது. உடம்பிலுள்ள ஒவ்வொரு அணுவையும் இருக்கமாய் கட்டிப் போட்டுவிட்டுத் திரும்பவும் அவற்றை அழுத்தமாய் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தாற்போலவே இருந்தது. மனத்தில் ஏதோ கலக்கம். உதடுகள் காற்றில் உலர்ந்து போய்க்கொண்டிருந்தன.

கவர்னர் பிரசங்கத்தைத் தொடர்ந்தார்.

''இளைஞர்கள்—உற்சாகம்...'' என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்த அவர் வார்த்தைகள் எதுவுமே சாம்பவியின் செவிகளில் ஏறவில்லை. ஏறினாலும் புரியவில்லை.

''பயமாயிருக்கா?'' பரிஷித் கேட்டான்.

''இல்லை'' கம்பீரமாய் வந்தது அவள் பதில்.

அவன் ஜேபிக்குள் கையைவிட்டு எதையோ லெளியே எடுத்து ''எடுத்துக் கொள்'' என்றான். சாம்பவி அதைப் பார்த்தாள். சாக்லெட்!

''எடுத்துக் கொள்'' என்றான்.

சாம்பவி வாங்கி வாயில் போட்டுக்கொண்டாள்.

அம்மாடா! உடம்பில் கொஞ்சம் நரம்புகள் அசையாவே சுகமாய் இருந்தது.

ராதிகா, ப்ரசாந்த், நிநேகித கும்பல்கள் எல்லோரும் பெரிதாய் கூச்சலிட்டுக்கொண்டிருந்தார்கள்.

கலர்னர் நீலநிறக் கொடியைப் பிடித்துக்கொண்டார். கௌண்ட் டௌன் தொடங்கிவிட்டது.

''ஃபைவ்—போர்—த்ரீ—டூ—வன்—கோ...''

முதல் கார் டூம் விர்ரென்று வெளியே போயிற்று. டிரைவர்கள் எல்லோரும் ரெடியாய் ஸ்டீரிங்கின் மீது கையை வைத்துக்கொண்டே உட்கார்ந்திருந்தார்கள். பிறகு அடுத்த கார் போயிற்று. ஒரு காருக்குப் பின்னால் இன்னொரு கார் ஒரு நிமிஷ இடைவெளியில் வெளியே போய்க்கொண்டிருந்தது.

ஜனங்களின் கூச்சலும் ஆரவாரமும் விசில் சப்தமும் கேட்டுக்கொண்டிருந்தன!

இருபத்தைந்தாவது காராய் பரிஷித் ஸ்டார்ட் செய்து ராம்ப்பின் மீது வரத் தொடங்கியதும், சாம்பவிக்கு திடீரென்று உடலே இலேசாகிவிட்டாற்போல, வானத்தில் எங்கேயோ சூனியத்தில் மிதந்து கொண்டிருந்தாற்போலவும் தோன்றத் தொடங்கிற்று.

காதுகளில் சமுத்திரத்தின் பேரிரைச்சல்.

கன்னங்களில் சூடு பறந்தது.

திரும்பி பரிஷித்தைப் பார்த்தாள். அவன் சாதாரணமாகவே இருந்தான்!

முகம் கொஞ்சம் தீவிரமாய் இருந்தது. தாடை எலும்புகள் மட்டும் கொஞ்சம் இறுகி விட்டுத் திரும்பவும் பழைய நிலைக்கு வந்தது கார்கள் ரோடில் வந்துவிட்டன. ரோடில்கூட இரு பக்கங்களிலும் ஜனங்கள் கூடி, கைகளில் விதவிதமான நிறங்களிலிருந்த கொடிகளைத் தூக்கி ஆட்டிக்கொண்டிருந்தார்கள். சந்தோஷமாய்—உற்சாகத்தைத் தந்தபடி ஆரவாரத்துடன் கத்திக்கொண்டிருந்தார்கள். சாம்பவிக்கு ஜன சமுத்திரத்தின் அலைகளைக் கிழித்துக்கொண்டு போய்க் கொண்டிருந்தாற் போல இருந்தது.

34

கார் விர்ரென்று போய்க் கொண்டேயிருந்தது. சாம்பவி கழுத்தில் தொங்க விட்டுக்கொண்டிருந்த கடியாரத்தைப் பார்த்துக்கொண்டே—ட்யூனிப்ரீடிங்கைப் பார்த்துக்கொண்டே—பரிஷித்திற்கு அவ்வவ்விடத்தில் ரோடுகளைப் பற்றி—முப்பதடி தூரத்திற்கு முன்பாகவே என்ன வரப் போகிறது என்பதைப்பற்றி உடனுக்குடன் எச்சரித்துக்கொண்டே வரத் தொடங்கினாள்.

இங்கே இவ்வாறு போய்க்கொண்டிருக்கையில் கார் ராலியில் போவது போலவே தோன்றவில்லை. பரிஷித் சாதாரணமாய் காரை ஓட்டிக்கொண்டிருப்பது போலத்தான் தோன்றிற்று. அந்த வேகத்தை அவன் இதற்கு முன்பே பழக்கப்படுத்தியிருந்தான். சாம்பவிக்கு வேறு எதைப்பற்றியும் யோசிக்க நேரமில்லை. மனதிலிருந்த எஞ்சிய யோசனைகளையெல்லாம் தற்காலிகமாய் ஒதுக்கி வைத்தாள்.

பின்னால் புறப்பட்ட கார்கள் இவர்களைத் தாண்டிக் கொண்டு போய்க் கொண்டிருந்தன.

''ஐயோ! எல்லாம் தாண்டிப் போயிட்டிருக்கே!'' என்றாள் கலங்கிப்போய்.

''பயப்படாதே'' என்றான் அவன். அவன் சங்கரபல்லியைத் தாண்டும் வரை சாதாரணமாகவே ஓட்டிக் கொண்டிருந்தான். சாம்பவிக்கு ஆச்சரியமாயிருந்தது. சாதாரண

மாய் வீதியில் போகும்பொழுது ஒரு வாகனத்திற்குக் கூட சைட் கொடுக்காமல் வேகமாய் பறக்கும் அவன் இந்த ராலியில் இப்படிச் செய்கிறானே, இதென்ன என்று ஜஹீராபாத்திலிருந்து அவன் வேகம் அதிகரித்தது.

பலவகல்யாண் வரும்போது அவன் கார் எட்டாவது காராய் வரிசையில் இருந்தது. சாம்பவிக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது. சொல்ல முடியாத ஆனந்தத்துடன் தமக்கு முன்னால் இன்னும் எவ்வளவு கார்கள் இருக்கின்றன என்று கணக்கிடத் தொடங்கினாள்.

அதற்குள் பட்டென்ற சப்தம்! திடீரென்று பூமி தலை கீழாகி விட்டது! சாம்பவியின் வாயிலிருந்து பெருத்த ஓலமாய் அலறல் சப்தம் வந்தது

ஐந்து நிமிஷங் கழித்து, ''ஓ! ஹெல்'' என்று திட்டிக் கொண்டிருந்த பரிஷித்தின் குரல் கேட்டது. அவன் வந்து ''சாம்பவி! சாம்பவி'' என்று கூப்பிட்டான்.

சாம்பவி அசைந்தாள். பரிஷித் முகத்திற்கு முன்னால் குனிந்து கூப்பிட்டுக் கொண்டிருந்தான். தன் சீட்டிலிருந்து டிரைவர் சீட் பக்கமாய் ஒதுங்கிப் போயிருந்த சாம்பவி கண்களைத் திறந்தாள்.

''பரிஷித்'' திடீரென்று அலறிவிட்டாள்.

கார் நீரில் ஒருபக்கமாய் நன்றாய் அமுங்கிப்போய் படகுபோல இருந்தது.

''என்னவாச்சு?'' சாம்பவிக்கு எதுவுமே புரியவில்லை. பரிஷித் சாம்பவியின் முதுகிலும், கன்னங்களிலும் கையால் தட்டினான்.

''பயப்படாதே, மேஜர் ஆக்ஸிடென்ட் எதுவும் ஆயிடலை. ஐ திங்க் ஸோ.'

அவன் அவ்வாறு சொன்னதைக் கேட்டபிறகுதான் சாம்பவி மூச்சு விட்டுக் கொண்டாள்.

சீட் பெல்ட்டைக் கழற்றி விட்டு கீழே இறங்கினான் அவன். சாம்பவி கூட அரும்பாடுபட்டு இறங்கி வந்தாள்.

கார் குழிக்குள் அமிழ்ந்து போயிருந்தது.

எதிரே பெரிய கல் இருந்தது. அதில் பட்டிருக்கும் போலிருந்தது.

பானெட் சப்பையாகி லிட்டது. பம்ப்பர் வளைந்து போய்விட்டது.

''என்னவாச்சு?'' என்றாள் கலங்கிப்போய்.

அவன் ரோடு மேப்பை எடுத்துப்பார்த்தான். ''என்ன வாச்சா? நீ 'கீப் டர்ன்' சொல்லவில்லை. நானும் சாதாரணமாய் வந்துவிட்டேன். இந்தக் கல்லில் மோதி இந்தக் குழியில் விழுந்துவிட்டேன். எனக்கு இந்தக் கல் தென்பட்டது. பிரேக் போடுவதற்குள் இந்த ஆபத்து நேர்ந்து விட்டது.''

''இப்ப என்ன பண்றது?'' பதறிப்போய் கேட்டாள். அவன் விசிலடித்தபடி சுற்றிலும் நோட்டமிட்டான். சுற்றுப்பக்கத்தில் எங்குமே மனித சஞ்சாரம் இல்லை. அங்கிருந்து கொஞ்சம் இடதுபக்கமாய் தென்பட்ட ஒற்றையடிப் பாதையில் வண்டிச்சக்கரங்களின் அடையாளக்கோடுகள் தென்பட்டன.

''உன்னால் இங்கே இருக்க முடிந்தால் நான் போய் சுற்றுப்பக்கத்தில் எங்கேயாவது ஊர்கள் இருக்கின்றனவா என்று பார்த்துவிட்டு வரேன்'' என்றான்.

''ஐயோ! நான் தனியாகவா?'' என்றாள் கண்கள் அகலவிரிய.

''அப்படீன்னால் வா'' என்றான்.

இருவரும் அந்த மண்சாலையையொட்டி நடக்கத் தொடங்கினார்கள். சாம்பவிக்கு வெட்கமாய் இருந்தது.

பயமாகவும் இருந்தது. எங்கேயோ யோசித்துக்கொண்டே தான் ட்யூனிப்ரீடிங்கில் அசிரத்தையாய் இருந்துவிட்டான். அந்த அசிரத்தையின் விளைவுதான் இந்த ஆக்ஸிடெண்ட். பரிஷித் ஜெயித்துவிடலிருந்தவன் அவள் மூலமாய் நின்று விட்டான்.

அதிர்ஷ்டவசமாய் ஊர் மிக அண்மையிலேயே இருந்தது. அது ஒரு சேரிப்பகுதியைப் போலிருந்தது.

பரிஷித் சொன்னதுமே ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாய் புலுபுலுவென்று வந்துவிட்டார்கள்.

காரைப் பள்ளத்திலிருந்து எல்லோருமாய் சேர்ந்து வெளியே எடுத்தார்கள். சாம்பவிக்கு லவ்பீம் ''நீ என்னைக் குழிக்குள் தள்ளிவிட்டாய் பார்'' —என்று முறைத்துப் பார்த்தாற் போலவே இருந்தது.

பரிஷித் ஸ்டார்ட் செய்யப் பார்த்தான். உடனே ஸ்டார்ட் ஆகிவிட்டது.

குழிக்குள் இறங்கி விட்டதே தவிர சேதாரம் எதுவும் ஆகவில்லை.

''தாங்க்யூ'' பரிஷித் அவர்களனைவருக்குமாய்ச் சேர்த்துப் பணத்தைக் கொடுத்தான்.

கார் போகத் தொடங்கியதும் சேரிவாழ் ஜனங்கள் கைகளைத் தூக்கி ஆட்டினார்கள்.

சாம்பவி ரோட் புத்தகத்தை மடியில் வைத்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''ஐயாம் சாரீ பரிஷித்'' என்றாள். இவ்வளவு நேரமாய் அவள் மனதிற்குள் துக்கம் பொங்கிக் கொண்டேயிருந்தது. தன் அசிரத்தை மூலமாய் இவ்வளவு கொடுமை நேர்ந்து விட்டதே என்ற வேதனை அது!

''தட்ஸ் ஆல் ரைட்' சாம்பவியின் கையில் தட்டிச் சொன்னான் அவன்.

''நீங்கள் இவ்வளவு சாந்தமாய் எப்படி இருக்கீங் ன்னுதான் புரியலை?'' எனக்கு என்மேல் கோபம் ரலையா? என்றாள்.

''ஊஹூம்.''

''என்னால் நம்பமுடியலை'' என்றாள்.

''நான் உண்மையைத்தான் சொல்றேன். இப்படிப் ட்டச் சமயங்களில் கோபத்தை வரவழைத்துக் கொள்ளக் டாது கலங்கிப் போய்விடக் கூடாது ஏனெனில் இந்தக் சுகளில் இப்படிப்பட்ட ஆபத்துக்கள் சகஜம். ன்னொரு காரணம் அது நடந்த போது சாந்தமாய் த்திரமடையாமல் இருக்கணும். இல்லாவிட்டால் னம் பிசகிவிடும்.'' அவன் அவள் கையை எடுத்துக் ன்னத்தில் வைத்துக் கொண்டான்.

''அதனால், உனக்கு என்ன சொல்ல விரும்புகிறேன் ால் ஃபர்கெட் அபௌட் தி ஆக்ஸிடெண்ட். இட் வாஸ் எ ர்ட் ஆஃப் தி கேம் என்று நினைத்துக்கணும். ஓ கே'' அவன் திரும்பிப் பார்த்தான்.

''நீ சிரித்துக் கொண்டு உற்சாகமாய் இல்லாலிட்டால் ால் ஓட்டவே போறதில்லை. அதுவரை நிறுத்தி ிடுகிறேன்'' அவன் காரின் வேகத்தைக் குறைத்துக் கொண்டே சொன்னான்.

''வேண்டாம், வேண்டாம்'' என்றாள்.

''அப்பரிலாக்ஸ் ஆயிட்டாயா இல்லையா?''

''ஆயிட்டேன்'' என்றாள் சிரித்துக் கொண்டே ர் திரும்பவும் வேகத்தை மேற்கொள்ளத் தொடங் ற்று.

சிட்குப்பா, மட்டாலா, நானிந்தி முதலிய இடங் னைத் தாண்டியபிறகு ஓரிடத்தில் பஞ்சாபிக்காரனின் ர் பஞ்சராகிவிட்டது போலிருந்தது. அவன் மாற்றிக்

கொண்டிருந்தான். ஸ்டார்ட் ஆன சில கார்களைக் கண்ணில் காணவேயில்லை. ஹலிந்திலிருந்து புக்குரி, புக்குரியிலிருந்து உல்மான் சாகர், அங்கிருந்து ஜதராபாத்.

பரிஷித்திற்கு நாற்பத்தைந்து பெனாலிடி பாயிண்ட்டுகள் விழுந்துவிட்டன. யார் யாருக்கு ஆக்ஸிடென்ட் ஆயினவென்றும், கார்கள் எங்கெங்கே தொல்லைகள் கொடுத்தனவென்றும் பேசிக் கொண்டிருந்தார்கள், சர்வீஸ்சென்டரில். கார்களை அவ்விடத்தில் விட்டார்கள்.

இருவரும் ஓட்டலுக்குத் திரும்பி வந்து குளித்து விட்டுக் கொஞ்ச நேரம் படுத்து ஓய்வெடுத்துக் கொண்டார்கள்.

திரும்பவும் செகண்ட் லெக் தொடங்கிவிட்டது. இரவு வேளைப் பயணமாதலால் நிலா வெளிச்சம் இதமாய் இருந்தது. முதல் லெக்கில் ஏற்பட்ட அனுபவத்தால் சாம்பவி ஒரு வினாடிகூட கவனப்பிசகாய் இல்லை.

''அது அப்படி நடந்ததே நல்லதாய் போச்சு. திருப்பவும் மேஜர் ஆக்ஸிடென்ட் ஆகாது நமக்கு'' என்றான் பரிஷித்.

சாம்பவி கைப்பையிலிருந்த சாக்லெட்டை எடுத்து அவன் வாயில் போட்டாள்.

அவன் அதை மென்று கொண்டே ஓட்டத் தொடங்கினான்.

''வெளியே நிலா வெளிச்சம் ரொம்ப நன்றாயிருக்கு பாரு'' என்றான் பரிஷித்.

''பார்க்க மாட்டேன்னால் பார்க்க மாட்டேன். நிலா வெளிச்சத்தைப் பார்க்கணும்னு ஆசையாயிருந்தால் இன்னொரு சமயத்தில் எப்பவாலது உங்களோடு சாதாரணமாய் வந்து கொள்கிறேன்'' என்றாள் தலையைத் திருப்பாமலேயே.

பரிஷித் சாம்பவியின் பயத்தைப் பார்த்துச் சிரித்து விட்டான்.

''எப்படிச் சிரிச்சிட்டிருக்கிங்க? பதற்றமாய் இல்லையா?'' என்றாள்.

''ராலிக்கு வரத்துக்கு முன்னாடியே பதற்றம் என்பதை வீட்டிலேயே பீரோவுக்குள் வைத்துப்பூட்டிவிட்டு வரணும் பதற்றத்தால் மனுஷனுக்கு என்றுமே நஷ்டந்தானே தவிர லாபமில்லை. பதற்றமடைந்து விட்டால் சூழ்நிலை மாறப்போறதா என்ன?''

ப்ரசாந்த்-ராதிகா அவர்களுக்குக் கொஞ்சம் முன்னும் பின்னுமாய் இருந்தார்கள் லீடில். தந்தையும் மகனுமாய் இருந்தவர்கள் எல்லோருக்கும் முன்பாயிருந்தார்கள். அதற்குப் பிறகு கணவன்—மனைவியராய் வந்திருந்த இன்னொரு டீம். எஞ்சியவர்கள் எல்லோரும் யார் முன்னால் என்று சரியாய் சொல்ல முடியாத அளவிற்கு வரவரப் பின் தங்கிவிட்டார்கள்.

* * *

ராலியில் கடைசிப் பாகமான மூன்றாவது லெக் தொடங்கிற்று. சாம்பவிக்கு இந்த லேகமும், இந்த டைம் செண்ஸும் நன்றாய் பழக்கப்பட்டுப் போய்விட்டாற் போலிருந்தது.

ராலி தொடங்கியபோதே, வானத்தில் மப்புக்கள் கூடி குளிர்காற்று வீசத்தொடங்கிற்று. அரைமணிக்கெல்லாம் லேசாய் தூறத்தொடங்கிவிட்டது. விட்டு விட்டுத் தூறிக்கொண்டும் இடையிடையே விர்ரென்று குளிர்ந்தகாற்று வீசிக்கொண்டும் இருந்தது.

அரைமணிக்குப் பிறகு தூறல் வலுத்தது. வானத்தில் கரு மேகங்கள் திரண்டு கொண்டிருந்தன.

பரிஷித் சாதாரணமாகவும், மெல்ல மெல்ல வேகத்தை அதிகமாக்கிக் கொண்டும் டிரைவ் செய்துகொண்டிருந்தான். சாம்பவி சிரத்தையாய் ரோட் புத்தகத்தைப் பார்த்துக்கொண்டே, ட்யூனிப் ரீடிங்கை அவனுக்கு எச்சரித்துக் கொண்டேயிருந்தாள். அதற்குள் ஸ்பீட் மீட்டருக்குப் பக்கத்தில் டைனமோ லைட் எரியத் தொடங்கிற்று. பரிஷித் அதைப் பார்த்ததுமே காரின் வேகத்தைக் குறைத்தான்.

''என்னவாச்சு?'' என்றாள்.

''ஃபான் பெல்ட் போயிடுத்து போலிருக்கு'' என்றான். காரை தெருவோரத்தில் கொண்டுவந்து நிறுத்திவிட்டு, காரிலிருந்து இறங்கி பானெட்டைத் திறந்து பார்த்தான். அவன் சொன்னதே நிஜமாயிற்று. ஃபான் பெல்ட் போய்விட்டது.

சாம்பவி கீழே இறங்கி டிக்கியைத் திறந்து டார்ச் லைட்டைப் போட்டு அதிலிருந்த ஃபான் பெல்ட்டை எடுத்து வந்து பரிஷித்திடம் தந்தாள்.

அவன் பழையதை நீக்கி விட்டுப் புதியதைப் பொருத்திக் கொண்டிருந்தான். மேலே கும்பவர்ஷமாய் ஒரே மழை. இருவரும் நன்றாய் நனைந்து போய்விட்டார்கள்.

அவன் பொறுத்திக்கொண்டிருக்கையில் சாம்பவி டார்ச் விளக்கைப் போட்டு அவனுக்கு வெளிச்சம் காட்டிக் கொண்டிந்தாள்.

பின்னாலிருந்து வந்து கொண்டிருந்த ராலி கார்கள் விர்விர்ரென்று வேகமாய்ப் பறந்து கொண்டிருந்தன.

'ஒன்று - இரண்டு - மூன்று - நான்கு - ஐந்து- ஆறு—' சாம்பவி அவற்றைப் பார்த்துக் கணக்கிட்டுக்கொண்டாள். ஃபான் பெல்ட்டைப் பொறுத்தியாகிவிட்டது. பரிஷித் பானெட்டை மூடினான். லவ்பீமைத் தட்டிவிட்டு— ''குட்பாய்! டேக் அட்ஈஸி'' என்றான். இருவரும் வந்து

ரும்பவும் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டு சீட் பெல்ட் டக் கட்டிக் கொண்டார்கள்.

பரிஷித் காரை ஸ்டார்ட் செய்வதற்கு முன்னால் ம்பவியைப் பார்த்து இனிமையாய் சிரித்தான். ''ராலி ல் பின்தங்கி விடுவோமோன்னு பயமாயிருக்கா?''

ஆம் என்று தலையாட்டி உண்மையை ஒப்புக்கொண் ாள். அவன் இன்னும் அதிகமாய் சிரித்துவிட்டு அவள் ாளைச்சுற்றிக் கைகளைப் போட்டு கிட்டே இழுத்துக் ாண்டான்.

''ராலியில் ஜயித்தால் என்ன, ஜெயிக்காவிட்டால் ன் என்ன? நாமிருவரும் அருகருகே உட்கார்ந்து ாண்டு போகிறோமே, அந்தத் த்ரில் போதாதா?''

சாம்பவி உடனே ஆம் என்று ஒப்புக்கொண்டாள்.

அந்தத் த்ரில்லிங் சாமானியமானதல்ல. அதற்கு ன்னால் அவர்கள் தரும் அந்த ட்ரோப்பியும், கேஷ் வார்டும் அற்பம் என்றே சொல்லவேண்டும். அனுபவமே ில்தான் இருந்தது. இந்த ஆனந்தமே ஒரு பரிசு!

பரிஷித் காரை ஸ்டார்ட் செய்தான்.

சாம்பவிக்கு அவன் மனத்தத்துவம் விநோதமாய் ருந்தது. தனக்குத் தெரிந்த பரிஷித்திற்கும் இந்த ரிஷித்திற்கும் எவ்வளவு வித்தியாசம்! இந்த பந்தயத்தில் வன் எவ்வளவு மனத்துணிவோடு இருக்கின்றான். வளைப்போலப் பற்றமடையவில்லை. நிராசையடை ும் இல்லை. ஒருவிதமான மூட் ரிலாக்ஸிங்காய்! டையிடையே ஜனக்கூட்டத்திற்கு நடுவே போகும்போது ன்னுக்குச் சாய்ந்து கொண்டு 'எப்படியிருக்கு?'—என்ற ள்வி தென்படும்.

சாம்பவி கூட அவனுக்குக் கண்களாலேயே 'ரொம்ப றாயிருக்கு' என்று பதிலளிப்பாள்.

காம்ப்பிடேடிவ் நேச்சர் ட்ராக்கில் வந்து விட்டால் அலன் மிகவும் கவனமாய் இருப்பான்.

ஓரிடத்தில்- ப்ரசாந்த்—ராதிகாவின் காரை ஓவர்டேக் செய்யணும் என்ற நிலைக்கு வந்து விட்டான்.

பின்னாலிருந்து பரிஷித் எவ்வளவு தடவை ஹாரனை அடித்த போதிலும் ப்ரசாந்த் — ராதிகா சைட் கொடுக்கவேயில்லை.

''பாருங்கள், எப்படிச் செய்கிறாள் என்று'' என்றாள் சாம்பவி. பின்னால் வந்தவர்கள் தன்னை சைட் கேட்டால் கொடுத்து விடுவான் பரிஷித்.

''நீ ஆவேசப்படாதே. நீ ஆவேசப்பட்டால் எனக்கு ஆவேசம் வந்துவிடும்'' என்றான் பரிஷித்.

எவ்வளவு தடவை ஹாரன் அடித்த போதிலும் ப்ரசாந்த்—ராதிகா சைட் கொடுக்கவேயில்லை.

அதற்குள் ஒரு ஊர் வரத்தொடங்கிற்று. பரிஷித்திற்கு நேற்று ஐதராபாத்திற்கு வந்ததுமே பயிற்சி செய்து பார்ப்பதற்காக இதே மார்க்கத்தில் வந்தபோது இந்த ஊருக்குள்தான் புகுந்து அவனும் சாம்பவியும் பெட்டிக் கடையில் சோடா குடித்தார்கள். அதனால் அவனுக்கு அந்த ஊர் சந்து பழக்கப்பட்டதுதான். சட்டென்று காரை வலது பக்கமாய்த் திருப்பி, வேகமாய் ஒரு வீதியின் சந்து வழியாய் போய், மெயின் ரோடில் ப்ரசாந்த்—ராதிகாவிற்கு முன்னால் வந்து விட்டான்.

''இப்ப என்ன செய்திடுவாங்க?'' என்றாள் சாம்பவி சந்தோஷமாய்.

''பல்லை நறநறவென்று கடித்திருப்பாங்க. இந்த இடத்தில் இந்த ஊர் வந்தது நம்ப அதிர்ஷ்டம். அதனால் தான் சொல்றாங்க—விதியை மீற முடியாதுன்னு!''

பின்னால் ப்ரசாந்த் ஹாரனை அடித்துக் கொண்டு சைட் கேட்கத் தொடங்கினான்.

''பரிஷித்! தராதீங்க நீங்க'' சாம்பவி உரக்கச் சொன்னாள். ஆனால் பரிஷித் கேட்கவில்லை. ப்ரசாந்த்திற்கு சைட் கொடுத்து விட்டான்.

ப்ரசாத்— ராதிகாவின் சிவப்பு மாருதி அவர்களைத் தாண்டிக் கொண்டு விர்ரெனப் பறந்தது.

மழை நன்றாய் விட்டுவிட்டது. நிலா அப்பொழுதுதான் இந்தக் கார் ரேசைப் பார்க்க உற்சாகத்துடன் எட்டிப்பார்ப்பதுபோல மேகத்திற்கு வெளியே வந்து கொண்டிருந்தது. ரோடில் ஆங்காங்கு குழிகளில் நீர் தேங்கி நின்றன. பரிஷித் சொன்னான்— ''இது ரொம்ப நல்ல டேஞ்ஞர்.'' விர் விர் என்று கார்கள் பறந்து கொண்டிருந்த சப்தத்தைத் தவிர வேறெந்த சப்தமும் இல்லை.

விட்டு விட்டுக் கார்களின் விளக்கு வெளிச்சம் தென்பட்டதும், அலை கிட்டே வந்து சைட் கேட்டு முன்னுக்குத் தாண்டிப் போவதோ அல்லது இன்னும் தூரத்திற்குப் பின் தங்கிப் போய் அவற்றின் விளக்கு வெளிச்சங்கள் தென்படாமல் மறைந்து போவதும் மாறி மாறி நடந்து கொண்டேயிருந்தன.

''அவங்க நமக்கு செட் கொடுக்காமல் அவ்வளவு அழவைத்தாங்க. நீங்க ஏன் சைட் கொடுத்தீங்க?'' பரிஷித்தைக் கடிந்து கொண்டாள்.

''டேக் இட் ஈஸி'' என்றான் அலன்.

கார் காற்றைத் துளைத்துக் கொண்டு போனாற் போலிருந்தது. பேரிரைச்சலாய் இருந்த காற்றினால் கொஞ்சம் இரைந்து பேச வேண்டியிருந்தது.

பரிஷித் ஒரு ப்ரீமியர் பத்மினியை ஓவர்டேக் பண்ணி முன் நோக்கி வந்து விட்டான்.

சாம்பவி உடனே மகிழ்ச்சி மிகுதியால் கைதட்டினாள்.

''உங்களுக்குத் தெரியுமா பரிஷித்? இப்ப நாம்ப எட்டாவது காராய் வரிசையில் வந்துட்டோம். அந்த பஞ்சாபிக்காரன், பாவம் போன வருஷம் அவ்வளவு முன்னால் இருந்திருக்கிறான். இப்பவோ ரொம்ப பின் தங்கிவிட்டான்.''

பரிஷித் பதில் பேசவில்லை. பின்னால் சாய்ந்து உட்கார்ந்திருந்த அவன் நிமிர்ந்து சரியாய் உட்கார்ந்து கொண்டான். கார் முழு வேகத்தை மேற்கொண்டது.

'இன்னும் எவ்வளவு கார்கள் முன்னுக்குப் போயிருக்கின்றன? இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது?' சாம்பவி மனத்திற்குள் கணக்கிட்டுக் கொண்டாள்.

ஹெட்லைட் வெளிச்சத்தில் வெகு தொலைவில் பிரிட்ஜ் தென்பட்டது. பரிஷித் வேகத்தைக் குறைக்க வேண்டும் என்று முயன்று கொண்டிருந்தபோதே பிரிட்ஜ் கிட்டே வந்துவிட்டது. முழுவேகத்திலேயே பிரிட்ஜைத் தாண்டிவிட்டது கார். அந்த வேகத்திற்கு பிரிட்ஜ் தடதடவென்று அதிர்ந்தது. பரிஷித்தின் கை விரல்கள் ஸ்டீரிங்கை அழுத்தமாய் பிடித்துக்கொண்டன. பிரிட்ஜைத் தாண்டி சாதாரண ரோடிற்கு வந்ததுமே பரிஷித் கையை நீட்டி சாம்பவியின் முதுகில் பட்டென்று அறைந்தான்.

''இடியட்! மேஜர் ஆக்ஸிடென்ட் அதிர்ஷ்டவசமாய் தப்பிற்று. யூ ஃபூல்! லேர் ஆர் யூ?''—அறைந்தாற் போலவே கத்தியும் விட்டான்.

அவன் அறைந்தது முதுகிலேயே அவ்வளவு சுரீரென்ற போது—கன்னமாயிருந்திருந்தால் ஒருக்கால் பற்கள் பெயர்ந்து விழுந்திருக்கலாமோ என்னவோ?

''இல்லை...நாம்ப எத்தனாவது காராய் வரிசையில் முன்நோக்கி இருக்கிறோம்னு யோசிச்சிட்டிருந்தேன்.''

''ஷட் அப்! டேக்யுவர் ரோட்புக்! பி காஷஸ்! டோன்ட் மேக் எனி சிங்கிள் மிஸ்டேக். ஐ வார்ன் யூ.''

லவ்பீம் முழுவேகத்தில் பறந்து கொண்டிருந்தது. வரிசையாய் தொடர்ந்து வந்து கொண்டிருந்த கார்களை ஓவர்டேக் செய்துகொண்டேயிருந்தது.

சாம்பவிக்கு ஒரு பக்கத்தில் அவன் அடித்ததற்கு வருத்தமும், இன்னொரு பக்கத்தில் கார் முன்னுக்குப் போய்க் கொண்டிருந்ததற்கு சந்தோஷமும் ஏற்பட்டன.

பரிஷித்தின் கைகளில் கார் விர்ரென்று பறந்து கொண்டேயிருக்க எதிரே தென்பட்ட ஹெட் லைட்டின் வெளிச்சத்தில் ஓரிடத்தில் ரோடிற்கு ஓரமாய் இருந்த மரத்தில் மோதி புகைந்து கொண்டிருந்த ஒரு கார் தென்படவே, விர்ரென்று பறந்த அவன் காரைத் திரும்பவும் பின்னுக்குக் கொண்டு வந்து அவ்விடத்தில் நிறுத்தினான்.

சிவப்பு மாருதி கார்! மரத்தில் மோதிக்கொண்டு சப்பையாகி விட்டது.

கொஞ்சம் தூரத்தில் மாட்டுவண்டி யொன்று ஒதுங்கி நின்று கொண்டிருக்க, எருது செத்துக் கிடந்தது.

வண்டிக்காரன் கீழே லிழுந்து முனகிக்கொண்டிருந்தான்.

சிவப்பு மாருதிக் கார்கள் நாலைந்து இருந்தன.

இது யாருடையதோ தெரியவில்லை.

பரிஷித் காரை நிறுத்திவிட்டு இறங்கிப் போனபோது, சாம்பவியும் அவனைத் தொடர்ந்து இறங்கி வந்தாள். பரிஷித் காருக்கு முன்னால் போய்ப் பார்த்தான்.

''மைகாட்!'' என்றான்.

சாம்பவி அதற்குள் அக்காட்சியைப் பார்த்துவிட்டு தாங்க முடியாதவளாய் முகத்தைத் திருப்பிக்கொண்டு விட்டாள்.

ப்ரசாந்தின் கார் அது. ஸ்டீரிங் அவன் மார்பில் ஆழமாய் இறங்கியிருந்தது. ராதிகா சீட்டிற்கிடையே சிக்குண்டிருந்தாள். தலை வெளியே தொங்கிக் கொண்டிருந்தது. தலையிலும் கைகளிலும் காயங்கள் ஏற்பட்டு ரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

பரிஷித் அரும்பாடுபட்டு சாம்பவியின் உதவியோடு ராதிகாவை வெளியே இழுத்தான். ராதிகாவிற்கு நினைவு தப்பிவிட்டிருந்தது ராதிகாவை இருவருமாய் தூக்கிக் கொண்டு வந்து லக்கேஜ் பின்சீட்டில் படுக்க வைத்தார்கள்.

பரிஷித் திரும்பவும் வந்து ப்ரசாந்தைப் பார்த்தான். அவன் உதட்டைக் கடித்துக்கொண்டே ஒரு வினாடி யோசித்தான். ப்ரசாந்த், ''டாக்டர், டாக்டர்'' என்று முனகிக் கொண்டிருந்தான்.

தான் ஒருத்தனாய் இருந்து கொண்டு ஒன்றுமே பண்ண முடியாத நிலைமை அது!. உடனே டைம் கன்ட்ரோலில் ரிஸ்க் டைமிற்குச் சொல்லிவிட்டு ஆம்புலன்சை அனுப்ப எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் ஏற்பாடு செய்வது நல்லது!

அவன் சட்டென்று வந்து ஸ்டீரிங்கிற்கு முன்னால் உட்கார்ந்து கொண்டான். சாம்பவியும் வந்து அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

பரிஷித் அடுத்த டைம் கன்ட்ரோல் நெருங்கியதுமே, ராதிகாவை ஒப்படைத்துவிட்டு, 'மாருதி ஃபாட்டல் ஆக்ஸிடென்ட்' என்று ரிபோர்ட் தந்தான். உடனே ப்ரசாந்திற்காக ஆம்புலன்ஸ் பறந்தது.

கார் திரும்பவும் முழு வேகத்தை மேற்கொண்டது. சாம்பவிக்கு நெற்றிப்போட்டு அதிர்ந்து நல்ல தலைவலி வந்து சேர்ந்துவிட்டது. அந்த ஆக்ஸிடென்ட்டைப் பார்த்த பிறகு தலை சுற்றுவதுபோல தோன்றிற்று.

வயிற்றைப் பிசைந்தெடுத்தது— வாந்தி வரும் போலிருந்தது.

''பரிஷித்! நமக்கு ராலி வேண்டாம், இந்த ஆக்ஸிடென்ட்டும் வேண்டாம். வேகத்தைக் குறையுங்கள். க்ஷேமமாய் ஊருக்குப் போய்ச் சேருவோம்.'' என்றாள்.

''சில்லியாய் பேசாதே. கன்ட்ரோல் யுவர் செல்ஃப்', உத்தரவிட்டாற் போலிருந்தது அவன் பதில்.

கார் படுவேகத்தில், பரிஷித் இந்த ரேலில் வென்றே தீரவேண்டும் என்ற உறுதியோடு இருந்தாற்போல ஐதராபாத்தை நோக்கி வந்துகொண்டிருந்தது.

கார்கள் ஒவ்வொன்றாய் வந்து கொண்டிருந்தன.

முதல் காராய் தந்தையும் மகனுமாய் இருந்த டீம் நாற்பத்தைந்து பெனாலிடி பாயிண்டுகளுடன் வந்தது. இரண்டாவது காராய் பரிஷித் — சாம்பவி ஜோடி நூற்றைம்பது பெனாலிடி பாயிண்டுகளுடன் வந்தது.

மூன்றாவது காராய் கணவன்—மனைவி ஜோடி நூற்றென்பது பெனாலிடி பாயிண்டுகளுடன் வந்தது. கார்கள் வந்தபோது போட்டோ கிராப்பர்களும், டீ. வீ. காரர்களும், ப்ரெஸ் ரிபோர்டர்களும் காத்துக் கொண்டிருந்தார்கள்.

காரிலிருந்து இறங்கி வந்ததுமே ஜோடிகளுக்கு எதிரே ஓடிப்போய், கேள்விகள் கேட்டு போட்டோக்களை க்ளிக் க்ளிக் என்று எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

''கங்கிராஜீலேஷன்ஸ்''

''கங்கிராஜிலேஷன்ஸ்''

எல்லோரும் பாராட்டிக் கொண்டிருந்தார்கள். சிலர் கைகுலுக்கிக் கொண்டிருந்தார்கள்.

'இந்தப் பெண் யார்?'' ஒரு ப்ரெஸ் ரிபோர்டர் கேட்டார்.

''எனக்கு வரப்போகும் மனைவி.''

காமிராக்கள் க்ளிக் க்ளிக் என்றன. இரண்டாவது பரிசாய் பரிஷித்திற்குப் பதினைந்தாயிரம் கொடுத்தார்கள். அது மட்டுமில்லாமல் ஸ்பான்ஸர் செய்தவர்கள் எல்லோரும் விதம் விதமான பரிசுகளைத் தந்தார்கள். இருவரும் ஓட்டலுக்கு வந்து மகாலிங்கத்திற்குப் போன் செய்தார்கள்— டாக்டர் தேவன் நெம்பருக்கு. அவர் சந்தோஷத்தால் திக்குமுக்காடி விட்டார்.

மறுநாள் காலையில் ஊருக்குத் திரும்பி வந்தபோது மகாலிங்கம் அவர்களிருவரையும் இழுத்து அணைத்துக் கொண்டார். அந்த வீதி ஜனங்கள் எல்லோரும் அவர்கள் வீட்டிற்கே வந்து கூடிவிட்டார்கள் — பரிஷித்— சாம்பவியின் கழுத்தில் மாலைகளைச் சூட்டினார்கள். ஸ்வீட்டுகளை வழங்கினார்கள். பண்டிகையைப்போல ஒரே சந்தடியாயிருந்தது.

''கங்கிராஜீலேஷன்ஸ் பரிஷித்.''

''கங்கிராஜீலேஷன்ஸ் சாம்பவி.''

''தாங்க்யூ.''

இவர்களைப் பார்த்ததுமே நாய்க்குட்டி ஓடிவந்து தாவிற்று.

''மொதல்ல குளியுங்கள். உங்களுக்காக ஸ்பெஷல் சமையல் செய்யச் செய்திருக்கேன்'' என்றார் மகாலிங்கம்.

''அங்கிள்! கொஞ்ச நேரங்கழித்துச் சாப்பிடுகிறேன்'' சாம்பவி அங்கிருந்த சோபாவில் சரிந்தாள். அடுத்த நிமிஷமே பின்னுக்குச் சாய்ந்து கொண்டாள். கண்கள் மூடிக்கொண்டு விட்டன.

பரிஷித் அறைக்குள் போய் கட்டிலில் குப்புற விழுந்தான். இருவரும் அடித்துப் போட்டாற்போல

தூங்கிவிட்டார்கள். அவங்க ரொம்பக் களைச்சுப் போயிட்டாங்க. நாளைக்கு வாங்க ப்ளீஸ்''— மகாலிங்கம் வந்த எல்லோருக்கும் சொல்லி அனுப்பி வைத்தார்.

35

மறுநாள் தெரிந்தது, ப்ரசாந்த் இறந்துவிட்டானாம்.

ராதிகா ஆசுபத்திரியில் குணமடைந்து கொண்டிருக்கிறாளாம்.

பரிஷித் தனக்கு வெகுமானமாய் கிடைத்த செக்கை சந்தோஷமாய் கொண்டு வந்து மகாலிங்கத்தின் கையில் தந்து விட்டு— அங்கிள்! இதோ! என்னால் உங்களுக்குத் தர முடிந்த கௌரவம் இதுதான். என் மூலமாய் உங்களுக்கு எவ்வளவு அகௌரவம் ஏற்பட்டதுன்னு நான் அறிவேன். உங்களுக்கு என்னால் ஒரு தடவையாவது கௌரவம் வரணும், அதனால்தான் நான் இவ்வளவு உறுதியாய் இருந்து இந்த ராலியில் பங்கெடுத்துக் கொண்டேன். இதைத் தவிர எனக்கு வேறெந்த ஆசையுமே இல்லை. இந்த ராலியில் எனக்கு வேறு எந்த விதமான ஆர்வமும் இல்லை'' என்றான்.

மகாலிங்கம் கண்ணீர் மல்க பரிஷித்தை அணைத்துக் கொண்டார்.

''பரிஷித்! இதென்ன? இதற்காக இவ்வளவு கஷ்டப் படணுமா என்ன? என் மனதில் என்றுமே உன்னைப் பற்றித் தாழ்ந்த எண்ணம் இருந்ததில்லை. நான் என்ன செய்தாலும் அது உன் துன்பத்தை புரிந்து கொண்டுதான் செய்தேனே தவிர, நான் அதை அகௌரவமாய் என்றுமே பாவித்ததில்லை. நம்ப வீதியைச் சேர்ந்தவங்க எல்லோரு மாய் சேர்ந்து பெரிய பார்ட்டிக்கு ஏற்பாடு செய்திருக் காங்க இன்று மாலையில். உன்னை ரெண்டு மூணு தடவை அரெஸ்ட் செய்துட்டு விட்டாரே அந்த போலீஸ் இன்ஸ்பெக்டருக்குக்கூட ஒரு தடவை உன்னைப் பார்க் கணும்னு தவிப்பாய் இருக்காம். அவரோட தம்பி பெண் ஒருத்தி இருக்கிறாளாம் கல்யாணத்துக்கு.''

''ஓ! அங்கிள்'' என்றான் பரிஷித். அவர் பெரிதாய் சிரித்து விட்டார்.

மாலையில் அந்த வீதியே தடபுடல் பட்டது. வீதி முழுக்கப் பந்தல் போட்டு ட்யூப் லைட்டுகளைப் போட்டு விட்டார்கள். வெளியே ''பரிஷித்- சாம்பவிக்கு நல்வரவு'' —என்று மினுமினுக்கும் கலர் விளக்குகளைத் தோரண மாய்த் தொங்கவிட்டார்கள்.

மகாலிங்கம் டாக்டரையும், போலீஸ் இன்ஸ்பெக்ட ரையும், அன்றைக்கு ஆசுபத்திரியில் வைத்தியம் பார்த்த டாக்டரையும், ஆட்டோரிக்ஷாக்காரனையும்— ஒருத்தர் பாக்கி வைக்காமல் எல்லோரையும் விருந்திற்கு அழைத்தார்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் பரிஷித்தின் கையைப் பிடித்துக் கொண்டு சந்தோஷமாய் கைக்குலுக்கிக் கொண்டே— ''இட் ஈஸ் எ வண்டர்புல் எக்ஸ்பீரியன்ஸ் ஃபர் மீ'' என்றார். டாக்டரோ கேட்கவே வேண்டாம். ''நீங்கள் என்னைத்தான் மொதல்ல கங்கிராஜுலேட் செய்யணும்'' என்றார். ஆட்டோக்காரனோ பெரிய ரோஜாப்பூ மாலையைக் கொண்டு வந்தான். ''ஐயோ!

இவ்வளவு விலையுயர்ந்த மாலை எதுக்கு?'' என்றாள் சாம்பவி.

''சந்தோஷம் எப்பொழுதும் வராதேம்மா'' என்றான் அவன்.

எல்லோரும் ஜம்புலைக் கூட பாராட்டினார்கள். சாம்பவி ஜரிகைப் புடலையைக் கட்டிக் கொண்டு, தலை நிறையப் பூவைச் சூடிக் கொண்டு, அங்கிள் வாங்கித்தந்த சங்கிலியைப் போட்டுக் கொண்டு கலகலப்பாய் இருந்தாள்.

''சாம்பவியைப் பார்த்தால் இன்றைக்குத்தான் கல்யாணம் போலிருக்குன்னு நினைச்சுப்பாங்க யாராவது பார்த்தால்'' என்றார்கள் யாரோ.

''கேட்டயா?'' என்றான் பரிஷித் சாம்பவியின் பிளேட்டிலிருந்த ஸ்வீட்டை எடுத்து வாயில் போட்டுக் கொண்டே.

''எல்லாம் கேட்டேன்'' சாம்பவி அவன் கையிலிருந்த ஸ்வீட்டைப் பிடுங்கித் தானே தின்றாள்.

''இப்படிப் பிடுங்குவானேன்? கேட்டால் நானே தர மாட்டேனா?'' அவன் இன்னொரு ஸ்வீட்டை எடுத்து சாம்பவியின் வாயில் திணித்தான்.

மகாலிங்கமும், டாக்டரும், போலீஸ் இன்ஸ்பெக்ட ரும், சத்யாவும் உட்கார்ந்து ஏதோ ஜோக் அடித்துக் கொண்டு பெரிதாய் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

அதற்குள் ஒரு சிறுவன் ஓடிவந்து மகாலிங்கத்தின் கையைத் தொட்டு—: ''அங்கிள்! உங்களைத் தேடிட்டு யாரோ ஒருத்தர் காரில் வந்திருக்கார்'' என்றான்.

''யாரு?''

''பேரைச் சொல்லலை. உங்களைக் கூப்பிடுகிறார்'' என்று சொல்லிவிட்டு ஓடிப்போய் விட்டான்.

''போங்க சார்! யாராவது பெண் பிள்ளையின் தந்தையாய் இருப்பாங்க. சந்தேகமில்லை'' என்றார் சத்யா.

''பெண் பிள்ளையின் தந்தையா? அப்படீன்னால் சுட்டுத் தள்ளிடறேன்'' என்று சிரித்துக் கொண்டே வெளியே போனார் அவர்.

''மகாலிங்கம் ரொம்ப அதிர்ஷ்டசாலிதான். இந்தக் காலத்தில் சொந்தப் பிள்ளைகளே சொன்னதைக் கேட்பதில்லை. வளர்ப்புப் பசங்களைப் பாருங்கள். அவங்க மூணு பேரும் ஒரே மனம் படைத்தவங்க' என்றார் சத்யா.

மகாலிங்கம் பந்தலுக்குள்ளேயிருந்து வெளியே வந்தார். வெளியே நீண்ட கார் ஒன்று நின்றிருந்தது. ஒரு ஐம்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஆள் ஒருத்தன் அதன் மீது சாய்ந்தபடி நின்றுகொண்டிருந்தான்.

மகாலிங்கம் அவனைப் பொருள் பொதியப் பார்த்தார்.

''யார் வேணுங்க?'' வினயமாய் கேட்டார்.

''மகாலிங்கம் வேண்டும்'' என்றார் அவர்.

''நான்தான். தங்கள் பேர்?'

அவன் உடனே வணங்கினான்.

''என் பெயர் சங்கரன். நான் ராமேஸ்வரி அம்மாவின் செக்ரட்டரி! அவங்க என்னை அனுப்பிச்சாங்க.'' மகாலிங்கத்திற்கு அவள் பெயரை என்றுமே தான் கேட்டதாய் நினைவில்லை.

''ராமேஸ்வரி அம்மாவா?'' என்றார்.

''ஆமாம்.''

''அவங்க...'' பொருள் பொதியப் பார்த்தார்.

''பரிஷித்தின் அம்மா.''

''என்ன? ? ? ? ! !'' அவருக்கு இடி விழுந்தாற்போலிருந்தது. ராமேஸ்வரி அம்மாவைப் பற்றி உங்களுக்குத் தெரியாது போலிருக்கு. இந்த நாட்டின் ஏழை எளியவங்களுக்காக அவங்க வெளிநாடுகளுக்குப் போய் பணம் கொண்டுவந்து எத்தனையோ குடும்பங்களுக்கு உதவி செய்துக்கிட்டிருக்காங்க. பெரிய சமூக சேவகி! நான் அம்மாவின் செக்ரட்டரி. பரிஷித் அவங்க மகன். தாய்க்கும் மகனுக்கும் அவ்வளவாய் சரிப்படாது. பரிஷித் வீட்டை விட்டுப் போயிட்டான்.''

''இது... இது எவ்வளவு நாளைக்கு முன்னால் நடந்த விஷயம்?'' தொண்டை வரளக் கேட்டார்.

''சுமார் ஐந்து வருஷமாயிடுத்து. பரிஷித் வீட்டை விட்டுப் போனதிலிருந்தே நாங்க தேடிட்டேயிருக்கோம். ஆனால் கிடைக்கவில்லை. நேற்று பேப்பரில் போட்டோ வந்தது. அம்மா உடம்பு சரியாகவே இல்லை. இல்லாமல் போனால் அவங்களே நேராய் வந்திருப்பாங்க. நீங்க பரிஷித்தை என்னோடு அனுப்புங்க.''

''சரி, சரி, வாங்க'' மகாலிங்கத்தின் குரல் பலநாள் கட்டினி கிடந்தாற்போல கிணற்றுக்குள்ளிலிருந்து கேட்டாற் போலிருந்தது. அவருக்குத் தான் நின்று கொண்டிருந்த பூமியே புதைமணலாய் மாறிவிட்டாற்போலவும், அதற்குள் தான் அமிழ்ந்து போய்க் கொண்டிருப்பது போலவும் தோன்றிற்று. இந்த ஆபத்து தப்பித்துக் கொள்ள முடியாத ஒன்று. அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அவர் சங்கரனை அழைத்துக் கொண்டு பந்தலுக்குள் சென்றார்.

பரிஷித் சத்யாவோடு ஏதோ பேசிக் கொண்டிருந்தான். ஏதோ ஜோக் போலிருந்தது. எல்லோரும் வாய் விட்டு பெரிதாய் சிரித்துக் கொண்டிருந்தார்கள். சாம்பவி பரிஷித்திற்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள்.

மகாலிங்கம் பின் பக்கமாய் வந்து மெதுவாய் "பரிஷித்! உனக்காக யார் வந்திருக்காங்களு பார்" என்றார்.

பரிஷித் திரும்பிப் பார்த்தான்.

எதிரே நின்று கொண்டிருந்த சங்கரனைப் பார்த்ததுமே அவன் முகம் ஒரு வினாடி வெல வெலத்துப் போய் விட்டது. அக்கண்கள்—"நீயா?" என்பதுபோல பார்த்தன. அடுத்த நிமிஷமே தன்னை சுதாரித்துக் கொண்டு விட்டான்.

"எக்ஸ்யூஸ் மீ அங்கிள்! இவர் யாரோ எனக்குத் தெரியாது" என்றான்.

"பரீ! டபாய்க்காதே! அம்மா எவ்வளவு தளர்ந்து போயிட்டாங்க தெரியுமா? அப்பாவுக்கு ஆக்ஸிடென்ட் ஆயிடுத்து. படுத்த படுக்கையாய் இருக்கார். அவங்க மேல் உனக்கு ஏதாவது கோபம் இருந்தால் வீட்டில் இருந்துட்டு நேருக்கு நேராய் தீர்த்துக்க வேண்டுமே தவிர, இப்படி வீட்டை விட்டு ஓடிப்போய் அவங்களை பழிலாங்கணும்னு எண்ணுவது..."

"ஷட் அப்" பரிஷித் கத்தினான்.

சாம்பவி குழப்பத்துடன் பார்த்தவள் மகாலிங்கத்திடம் வந்து நின்று திகிலோடு—" அங்கிள்" என்றாள்.

அவர் இரு என்பதுபோல கையால் ஜாடை காட்டினார்.

சங்கரன் மகாலிங்கத்திடம் சொன்னான்—"பரிஷி சின்ன வயதிலேருந்தே இப்படித்தான் சார்! அவங்கம்மா

பண்ற சமூக சேவை இவனுக்குப் பிடிக்காது. ஃபிரெண்டுங்களோடு சேர்ந்து ரகளை செய்வான்."

பரிஷித் கையிலிருந்த கண்ணாடி தம்ளரைத் தரையில் ஓங்கி எறிந்தான். அவன் கண்கள் நெருப்பை உமிழ்ந்தன.

உடைந்த கண்ணாடித் தம்ளரின் துண்டு ஒன்றைக் கையிலெடுத்துக் கொண்டு, பற்களைக் கடித்துக் கொண்டே— "இங்கிருந்து போகிறாயா, இதால் குத்தட்டுமா?" என்றான்.

"பரீ" சங்கரன் ஓரடி பின் வாங்கினான்.

"ஷட் அப்! கெட் அவுட்! கெட் அவுட்! ஐ ஸே! இன்னொரு நிமிஷம் என் கண் முன்னாடி நின்றால் கொன்று விடுவேன். நீயா எனக்கு உபதேசம் பண்றாய்? ராஸ்கல்!" பரிஷித் அவன் மீது பாயப்போன பொழுது டாக்டர் சட்டென்று குறுக்கிட்டு அவனைப் பிடித்துக் கொண்டார். சங்கரனை மகாலிங்கம் பின்னுக்கு இழுத்தார்.

"என்னவாச்சு? என்னவாச்சு?' எல்லோரும் அங்கே வந்து கூடிவிட்டார்கள்.

"பரிஷித் நீ உள்ளே போ! சாம்பவி! பரிஷித்தைக் கூட்டிட்டு நீ உள்ளே போ." மகாலிங்கம் கத்தினார்.

சந்தோஷமாய் இருந்த அச்சூழ்நிலை திடீரென்று ஒரு துளி பாலில் ஒரு சொட்டு விஷத்தைக் கலந்து விட்டாற் போல திரிந்து போய்விட்டது.

யார் இந்த சங்கரன்?

பரிஷித்திற்கும் இவனுக்கும் என்ன சம்பந்தம்? பரிஷித் எதற்காக அவனைத் திட்டி, அடிக்கவும் சித்தமாகி விட்டான்? எல்லோரும் தலைக்குத்தலை ஊகித்துக் கொண்டு விதம் விதமாய் பேசிக் கொண்டார்கள்.

* * *

சுமார் நான்கு மணி நேரங்கழித்து—

மகாலிங்கத்தின் வீட்டில்—

அதற்குள் இரவு மணி பதினொன்றாகி விட்டது. வெளியே எங்கும் நிசப்தமாய் இருந்தது. ஆனால் மகாலிங்கத்தின் வீட்டில் மட்டும் இன்னும் விளக்கு எரிந்து கொண்டேயிருந்தது.

முன் அறையில் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான் பரிஷித். அவன் நாற்காலிக்குப் பின்னால் சாம்பவி நின்று கொண்டிருந்தாள். அவள் கை அடிக்கடி பரிஷித் மகாலிங்கத்திடம் ஆவேசமாய் பேசிக் கொண்டிருக்கும் போது மெல்ல அவன் தோளில் மென்மையாய் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தது தேற்றுவதுபோல.

மகாலிங்கம் தொலைவில் ஜன்னலுக்கருகில் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றிருந்தார். அவர் முகம் இந்தக் கொஞ்ச நேரத்திற்குள்ளேயே சுக்கு நூறாய் உடைந்து விட்டாற் போலிருந்தது. மாலையில் அவர் கண்களில் பொங்கிக் கொண்டிருந்த உற்சாகமும் மகிழ்ச்சியும் இப் பொழுது கடுகளவும் அவரிடம் இல்லை. அவர் ஏனோ தளர்ந்து போய்விட்டார். திடீரென்று வயது கூடி விட்டாற்போல பாரமாய் உணரத் தொடங்கினார்.

அங்கு கொஞ்சம் தூரத்தில் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான் சங்கரன். அவன் முகம் கூட வாதாடி வாதாடி அலுத்துப் போய் விட்டாற்போல இருந்தது. ஜேபியிலிருந்து கைக்குட்டையை எடுத்து கண்ணாடியைத் துடைத்துக் கொண்டான்.

பரிஷித் சொல்லிக் கொண்டிருந்தான்— ''அங்கிள்! இப்ப நீங்கள் சொல்லுங்க. நான் வீட்டை விட்டு வந்ததில் தப்பு இருக்கா. மொதல்ல அது என் வீடுன்னுதான் தோணுமா?'' அவன் குரலில் ஆவேசமும் ரோஷமும் போட்டியிட்டுக் கொண்டிருந்தன.

மகாலிங்கம் தன் மனைதைப் பிழிந்தெடுத்துக் கொண்டி நந்த வருத்தத்தை பின்னுக்குத தள்ளி வைத்தார். ன்னலை விட்டு நகர்ந்து வந்து பரிஷித்திற்குப் பக்கத்தில் ின்று, மிக உறுதியான குரலில் எந்த உணர்ச்சியும் ல்லாமல்— ''பரிஷித்! நீ சொன்னதையெல்லாம் கேட்டேன். எனக்கு எல்லாம் புரிந்துவிட்டது. உன் மனம் தனால் காயமடைந்ததோ, நீ விரும்பியது உங்கம்மாவிட திருந்து எப்படிக் கிடைக்காமல் போனதோ எல்லாம் புரிந்து விட்டது'' அவர் கொஞ்சம் நிறுத்திவிட்டு- டம்பிலிருந்த சக்தியையெல்லாம் திரட்டிச்கொண்டு சொல்வதுபோல சொல்லத் தொடங்கினார்— ''பாரப்பா! ன்ன சொன்னாலும் ஒன்று மட்டும் நிஜம்! அவங்க ன் தாய்! இந்த சத்தியத்திலிருந்து நீ தப்பித்துக் கொண்டுவிட முடியாது. அவங்க உன் விஷயமாய் தப்பு செய்திருப்பது உண்மைதான். நான் மறுக்கவில்லை. ஆனால் நீ அவங்க செய்த தப்பை செய்யக் கூடாது. இது ருத்தருக்காக இன்னொருத்தர் செய்வது இல்லை. ழுக்கப்படி அவங்கவங்க கடமையை அவங்கவங்க செய்ய வேண்டிய வேலை! பசங்கள் பெரியவங்களான பிறகு ம்மை கவனித்துக் கொள்வார்களா இல்லையா என்ற யநலத்தோடு தாய் தந்தையர்கள் பசங்களை கருதக் டாது. சிறகு முளைக்கும் வரையிலும் அவங்களை ளர்த்து ஆளாக்குவதைத் தம் கடமையாய் கருத வேண்டும். அதேபோல பசங்கள் கூட பெரியவங்களான பிறகு தாய்தந்தையர்கள் சின்ன வயதில் தம்மை ன்றாய்ப் பார்த்துக் கொண்டாங்களா இல்லையான்னு னைக்காமல், வயோதிகத்தில் அவங்க தப்பு செய்தாலும் ன்னித்து விட்டு விட்டு, அவங்களை ஆதரித்து கவனித்துக் ொள்வது கடமை. இது அவங்கவங்க சுயமாய் தீர்மா த்துக் கொள்ள வேண்டிய விஷயம். ஒருத்தருக் காருத்தர் சொல்லி செய்யக்கூடிய ஆலோசனை இல்லை. ரிஷித், எங்கம்மா விஷயத்தில் நான் கூட இளைஞனாய் ருந்தபோது மன்னிக்கவில்லை. ஆனால் உத்யோகத்தில்

என் சக ஊழியர்கள் தப்பு செய்தபோது மன்னித்தேன். அக்கம்பக்கத்தார் அநியாயமாய் பேசியபோது போகட்டும் என்று அட்ஜெஸ்ட் செய்து கொண்டேன். நான் எங்கேயோ, எத்தனையோ விதங்களில் ராஜியாகிக் கொண்டிருந்தேன். ஆனால் இப்பத் தோணுகிறது, நான் இவ்வளவு பேர்களிடம் ராஜியானேனே! இவ்வளவு பேர்களை இப்படிப் புரிந்துகொண்டு மன்னித்து விட்டு விட்டேனே; எங்கம்மாவை ஏன் மன்னிக்காமல் போனேன்னு! அதற்குக் காரணம் கூட எனக்குத் தெரியும். நம்ப இந்த வாழ்க்கையில் யாரை அதிகமாய் நேசிக்கிறோமோ அவங்க தப்புச் செய்துட்டால் நம்மால் மன்னிக்க முடியலை. என் விஷயத்தில்கூட அப்படித்தான் நடந்தது. நீ சொன்னதைக் கொண்டு பார்த்தால் உங்கம்மாவோடு இருக்கணும்னு உன் மனது தவிக்கிறது. உன் மனதை அவங்க புரிந்து கொள்ளவில்லை. யோசித்துப்பார். இது மன்னிக்க முடியாத குற்றம் இல்லையே! அவங்க வாழ்க்கையில் அந்த வேகமும் அந்த பிடியும் அப்படிப்பட்டது. அவங்களைப் பார்த்தால் எனக்குக் கோபம் வரலை பரிஷித், நிஜமாய் இரக்கந்தான் ஏற்படுகிறது.

நம்மைச்சுற்றிலும் நிறையப்பேர் இதுபோலத்தான். அன்பு செலுத்தும் மனைவிகளைப் புரிந்துகொள்ளாத கணவர்கள், குழந்தைகளைப் புரிந்து கொள்ளாத தாய் தந்தையர், தாய்தந்தையரைப் புரிந்து கொள்ளாத குழந்தைகள், குடும்பத்திற்காக மாடாய் உழைத்து பணம் சம்பாதித்துக்கொண்டு வந்தால் அந்தக் குடும்பத்தலை வனின் சுகத்தைப் புரிந்து கொள்ளாத பெண்கள்—இப்படி எத்தனையோ விதங்களில்! அன்பில்லாத வாழ்க்கை உயிரில்லாத உடம்பிற்குத் தான் சமம். அது இவங்களில் நிறைய பேருக்குத் தெரியாது போலிருக்கிறது. ஏதோ பிறந்துவிட்டு, ஏதோ வாழ்ந்துவிட்டு, ஏதோ செத்தும் போவது ஒன்றுதான் தெரியும! அதனால் இது உன் மனம் சம்பந்தப்பட்ட கேள்வி! நீதான் முடிவெடுத்துக்கொள்ள

வேண்டும். உன் கடமையை நீ நிறைவேற்ற வேண்டும். உங்கப்பா உனக்காக தவிக்கிறதாய் இவர் சொல்லுகிறார் ஒரு முறை போய் பார்த்துவிட்டு வந்தால் எந்த நஷ்டமும் வரப்போவதில்லையே!'' என்றார் அவர்.

பரிஷித் தலையை கவிழ்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான். அவன் வாழ்க்கையில் திரும்பவும் இது போன்ற ஒரு நிலைமை வரும் என்று அவன் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

''பரிஷித்'' சாம்பவி அவன் கையில் தட்டினாள். அவன் நிமிர்ந்து பார்த்தான். சாம்பவி அவன் கண்களையே பார்த்தபடி சொன்னாள்—''போயிட்டு வாங்க பரிஷித். தயங்காதிங்க. பிழைத்திருக்கும்போதே தாய் தந்தையரை விட்டுப் பிரிந்திருப்பது எத்தனை துரதிர்ஷ்டம். சந்தேகங்களும், சுருத்து வேற்றுமைகளும் இருந்தால் நேருக்குநேராய் பேசித் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். நான் அப்படித்தான் நினைக்கிறேன்'' என்றாள்.

பரிஷித் அவளைப் பார்த்தான்.

''போங்க பரிஷித்! தயங்கவேண்டாம். நீங்கள் போகாவிட்டால் அந்தக் கடின இதயம் இருக்கே, அதை என்னால் தாங்கிக்க முடியாது.'' அவன் கை சாம்பவியின் கையின் மேல் படிந்தது. அந்த ஸ்பரிசத்தை அவள் அறிவாள். அவனுக்குப் பிடிக்காமல் போனாலும், சாம்பவிக்காகச் செய்யும்போது எடுத்துக்கொள்ளும் தீர்மானம் அது.

''தாங்க்யூ'' கண்கள் பனிக்கச் சொன்னாள்.

''இன்றைக்கு எங்க அம்மா எங்கள் எல்லோருக்கும் வரங்களை மூட்டை மூட்டையாய் வழங்கிடப்போறாங்க'' என்று எழுந்திருந்தான் சங்கரன்.

36

"அம்மா! அம்மா!" சங்கரன் கூப்பிட்டுக் கொண்டே விடுவிடென்று நடந்தவாறு உள்ளே போனான்.

பின்னாடியே பரிஷித் தொடர்ந்து வந்துகொண்டிருந்தான். என்னதான் மறுத்தாலும்—என்னதான் மனதை இறுக்கமாய் கட்டுப்படுத்திக் கொண்டாலும், அந்த வீட்டிற்குள் அடியெடுத்து வைக்கும்போது அவன் இதயம் விநோதமாய் நெகிழத் தொடங்கிற்று. வலதுபக்கம் கார்களின் ஷெட்டுகள் இன்னும் அப்படியே இருந்தன. அங்கே ரங்கய்யன் தாத்தா உட்கார்ந்து கொள்ளும் ஸ்டூல் இன்னும் அப்படியே இருந்தது. அவர் முதுகில் ஏறி நின்று கொண்டு அவர் வழுக்கைத் தலையில் கைகளால் தபலா வாசிப்பான் பரிஷித். தோட்டக்காரன் அவன் கையால் நட்டு வைத்த அந்தச் சின்ன வெள்ளை விருட்சிச் செடி இப்பொழுது எவ்வளவு பெரிதாகிப் பூக்களை வாரி வழங்கிக் கொண்டிருந்தது!.

பரிஷித் நிமிர்ந்து பார்த்தான். மாடியில் இடது பக்கத்து அறையின் ஜன்னல் சாத்தியிருந்தது. அங்கே நின்று கொண்டுதான் எத்தனை ஆயிரம் கடலைகள் திருதிருவென்று விழித்தபடி தாய் தந்தையர் காரில் போவதை அழுதுகொண்டும் தேம்பிக் கொண்டும் பார்த்திருப்பான்! சிற்சில சமயங்களில் அங்கிருந்து அப்படியே குதித்து காருக்குப் பின்னால் ஓடவேண்டும் என்று எவ்வளவு ஏக்கமாய் இருக்கும்! இரவு வேளைகளில் எப்பொழுது

பார்த்தாலும் வேகமாய் போய்க்கொண்டிருக்கும் தாயின் காருக்குப் பின்னால் ஓட்டப்பந்தயத்தைப் போல தான் ஓடிக்கொண்டிருப்பது போலவே கனவு வரும். ஆயாசத்தால் வியர்த்துக் கொட்டும்போது, இனி ஓடமுடியாமல் போனால் கார் கண் மறைவாகிவிடும். ஏமாற்றத்தால் திணறியபடி அழுகை வரத்தொடங்கிவிடும். படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொள்வான். "அம்மா..." விழிப்பு வந்த பிறகு அழுதுவிடுவான். பரிஷித் ஆழ்ந்து பெரு மூச்சு விட்டுக்கொண்டான். வீட்டிற்கு முன்னால் இருந்த பெரிய பெரிய படிகளில் ஏறி வராந்தாவிற்கு வந்தான். சிறுவயதில் அந்த வராந்தா தூண்களைச் சுற்றிச் சுற்றி வந்து தான் தனியாய் எப்படியெல்லாம் விளையாடுவான்! ஒரு தூணைக் கையால் தொட்டான் சேதி விசாரிப்பது போல.

வராந்தாப் படிகளில் வரிசையாய் பூந்தொட்டிகள் அன்றுபோலவே அழகுக்காக வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் பசுமையும் பூக்களும் இன்னும் அப்படியேதான் இருந்தன. அந்த வீடும் வீட்டிற்கு முன்னால் இருந்த தோட்டமும் அன்று போலவே இன்றும் களையோடு விளங்கிற்று.

அவன் வாசல் கதவின் மேல் கையை வைத்தபடி ஒரு வினாடி நின்றான். தான் திரும்பவும் இந்த வீட்டிற்குள் அடியெடுத்து வைப்போம் என்று அவன் கனவிலும் கருதவில்லை. அவன் மெதுவாய் பாதத்தை எடுத்து உள்ளே வைத்தான். சங்கரனின் குரல் எங்கேயோ உள்ளேயிருந்து "அம்மா!" என்று கூப்பிட்டுக் கொண்டிருந்தது. பரிஷித் பேன்ட் ஜேபியில் கைகளை விட்டுக்கொண்டே ஹாலில் தனியாய் நின்று கொண்டிருந்தான்.

எதிரே தென்பட்ட பெரிய மாடிப்படி மேல் மாடிக்குப் போகிறது. அதன் படி தொடங்கும் இடத்தில் இரு பக்கங்களிலும் அழகான பொம்மைகள் இருந்தன. அவன் விட்டை நன்றாய் சுற்றுமுற்றும் பார்த்தான். வீடெல்லாம்

சுத்தமாய் இருந்தது. எந்தெந்த சாமான்கள் எங்கெங்கே இருக்கவேண்டுமோ அங்கங்கே செக்குச் செதுராமல்— வீட்டுத் தலைவியின் மேற்பார்வை நன்றாய் இருந்ததை எடுத்துக் காட்டிக்கொண்டு— துளி கூட தூசியோ அழுக்கோ இல்லாமல் அழகாய் இருந்தன.

இதற்த முன்னால் சாமான்கள் எல்லாம் போட்ட இடத்தில் போட்டபடி கிடந்தாற்போலவோ— வருவோர் போவோர் கூடி ஒரே சந்தடியாய் இருந்தாற்போலவோ இப்பொழுது இல்லை. நிசப்தமாய், ராஜா கொலுவீற்றி ருந்து விட்டுப் போனபிறகு தென்படும் ராஜதர்பாரைப் போல ஆளரவமில்லாமல் இருந்தது.

பரிஷித் கண் முன்னால் வேறொரு காட்சி நிழலாடிக் கொண்டிருந்தது. பத்து வயது சிறுவன் கண்களைக் கசக்கிக் கொண்டு ஜுரத்தால் உடம்பு கொதித்துக் கொண்டிருக்க, ''தாகம்'' என்று வந்தபோது அந்த ஹாலில் நெடுக உட்கார்ந்திருந்த ஜனங்களில் ஒருத்தர் கூட பொருட்படுத்தவில்லை. அவர்களுள் நாடகம் போடு பவர்களும், உத்யோக முயற்சிக்காக வந்தவர்களும், மகளை அழைத்துக் கொண்டு திருமண முயற்சிக்காக வந்தவர்களும், கோர்ட்டு கேசு விஷயமாய் வந்தவர்களும் என்று ரயில்வே ஃபிளாட்பாரத்தில் உட்கார்ந்திருப்பது போல கூட்டமாய் உட்கார்ந்திருப்பார்கள்.

வம்பு பேசிக் கொண்டிருக்கும் அவர்கள் பேச்சு ஒரே ஒரு தடவை மட்டுமே நிற்கும். அது மாடியிலிருந்து ''அம்மா'' இறங்கி வரும்போதோ, அல்லது வெளியே யிருந்து வந்து காரில் இறங்கி, மளமளவென்று ஹாலுக் குள் நுழைந்து படியேறி மாடிக்குப் போகும்போதோ மட்டுமே!

''அம்மா வந்துட்டாங்க, வந்துட்டாங்க'' என்று எல்லோரும் எழுந்து நின்று பக்தியாய் வணங்குவார்கள். அவள் கட்டிக் கொண்டிருக்கும் புடவை, ஜாக்கெட், போட்டுக் கொண்டிருக்கும் நகைகள் போன்றவைகளை பெண்கள் வாயைப் பிளந்துகொண்டு பார்த்தால்— ஆண்களோ அவள் உடல் அழகை விழுங்கி விடுவதுபோல பார்ப்பார்கள்.

அவளுக்குப் பின்னால்— ''ஆள் லட்டுபோல் இருக் கிறாள். அவள் போய் கேட்டு விட்டால் போதும் மகாராஜாக்கள் கூட ராஜ்யங்களை தானம் செய்து விடுவார்கள்'' —என்று சிலரும்— ''அந்த செக்ரட்டரிக் தும் அவளுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்காம். அந்தப் பேரைச் சொல்லிக்கிட்டு அவங்க எல்லா உல்லாசங்களை யும் செய்துட்டு வராங்களாம்.'' என்று இன்னொருத்தரும் பலவிதமாய் அவளுக்குத் தலைமறைவில் செய்யும் வியாக்கியானங்களும், குசுகுசுக்களும் பத்து வயது பையன் செவியில் விழுந்து, அவன் மனதைச் சுக்கு நூறாய் உடைந்து போகும்படியும் செய்யும்.

அவர்களனைவருக்கும் அப்படிப்பட்ட சிறுவன் ஒருவன் அந்த வீட்டில் இருக்கிறான் என்றுகூடத் தெரியாது. ஏனெனில் வீட்டில் உறவினர்களின் குழந்தை கள் கூட நிறையப்பேர் இருந்து வந்தார்கள். அவர்கள் யார் யார் என்று கூட யாருக்கும் தெரியாது. ராமேஸ்வரி அம்மாள் தன் மகனுக்குத் தான் எந்தக் குறையும் வைக்க வில்லையே என்றெண்ணிக் கொள்வாள். மகனுக்குச் சாப்பாடு போட ஆயா, படிப்புச் சொல்லித் தர வீட்டி லேயே டீச்சர், வெளியே அழைத்துக் கொண்டு போய் சுற்றிக்காட்டி விட்டு வர ஆயா, ஒவ்வொன்றிற்கும் வேலைக்காரர்கள்தான்! பணச்செலவு என்று பார்க்கா மல் அவ்வளவு பேர்களை வேலைக்கு வைத்திருந்தாள். ஏனெனில் பையனைப் பார்த்துக்கொள்ள அவளுக்கு நேரம் இருந்ததில்லை. எப்பொழுதும் ஊர்கள்— வெளி நாடுகள் என்று பயணம். ஊரில் இருந்தாலும் மீட்டிங்கு கள், சமூகசேவை! எத்தனை பேருக்கு உதவி செய்கிற

பொறுப்பு! எத்தனை குடும்பங்கள்தான் அவள் மேல் ஆதாரப்பட்டிருக்கின்றன!

சமையல்காரனோடு சரசமாடுவதற்கு நேரத்தை மிச்சப்படுத்துவதற்காக அவனுக்குப் பாலில் தூக்க மருந்தை கலந்து தந்துவிடுவாள் ஆயா. அதனால் எப்பொழுது பார்த்தாலும் தூக்கக் கலக்கத்தோடு தள்ளாடிக் கொண்டிருந்ததால் டீச்சர் சரியாய் படிக்க வில்லை என்று புகாரிட, தந்தை கன்னத்தில் அடித்தது இப்பொழுதுதான் நடந்தாற்போல சுரீர் என்று உரைத்தது அவனுக்கு. பரிஷித் கன்னத்தைக் கையால் தடவிக் கொண்டே அந்த வீட்டில் தான் சிதறிவிட்டுப் போன பாலிய நினைவுகளை அசை போட்டுக் கொண்டிருந்தான்.

ஏன் அவ்வாறு தனக்கு எப்பொழுது பார்த்தாலும் மயக்கமாய் இருந்து வந்தது என்று அவனுக்குத் தெரியாது. பிறகு ஒரு நாள் ரங்கய்யன் தாத்தா ஆயாவைக் கையும் களவுமாய் பிடித்து ராமேஸ்வரியிடம் கொண்டு போய் நிறுத்திவிட்டு, "இந்தப் பாவி என்ன செய்கிறாள்னு பாருங்கம்மா" —என்று சொன்னது அவனுக்கு இன்னும் ஞாபகமிருக்கிறது.

அதற்குப் பிறகுகூட தாய் அவன்மீது சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. அந்த ஆயாவை வேலையிலிருந்து தள்ளி விட்டு இன்னொரு ஆயாவை வைத்தாள். அந்த ஆயாவுக்கோ எப்பொழுதும் கோபந்தான்.

தாயார் தந்தையோடு சேர்ந்து எப்பொழுது பார்த்தாலும் சமூக சேவை என்று ஊர் ஊராய்ச் சுற்றிக் கொண்டிருப்பாள். ஒரு நிமிஷம் கூட ஓய்விருக்காது அவருக்கு. தந்தையும் அவளோடு கூடப்போக வேண்டும். ஒருக்கால் அவர் வீட்டில் இருந்தாலும் யாராவது ஒரு பெண் சிநேகிதி அவரைத் தேடிக் கொண்டு வந்து விடுவாள். அந்த அறையின் கதவு காபிக்கும் டிபன்

களுக்கு மட்டுமே திறந்து கொள்ளுமே தவிர மீதி சமயங்களில் மூடியே இருக்கும். தாயாருக்குத் தன் உயர்ச் சுற்றலில்தான் கவனம். தந்தைக்கு குடித்துக் கும்மாளமடிப்பதில்தான் கவனம். எல்லாவற்றையும் விட மிக மோசமானதும் அருவருப்பானதும் என்னவென்றால் அம்மாவுடைய சிநேகிதிகள் தந்தையோடு சரசமாடுவதுதான்.

அது தெரிந்தும் அவள் உலுக்கி எடுக்க மாட்டாள். கணவனோடு சண்டை போடவேண்டுமானால் கூட அவளுக்கு நேரம் இருந்தால்தானே? அதனால் அவளுடைய விலைமதிப்பு வாய்ந்த பொன்னான நேரத்தில் அரை மணி நேரம் வீணாகிவிடுமே!

தங்க கப்பல் போன்ற வீடு. ஆனாலும் ஓரங்குலம் கூட இடம் மிச்சமில்லாதபடி வீடு முழுக்க வந்து போவோரின் கூட்டம்! உறவினர்களின் கூட்டம். உறவுக்காரப் பசங்கள் அவனோடு சண்டை போடுவார்கள். கேலி பண்ணுவார்கள். அழவைப்பார்கள். அவன் அவர்களோடு சண்டை போட்டு விட்டால் அவர்களுடைய தாய் தந்தையர் அம்மாவிடம் புகாரிடுவார்கள். அவள் உடனே அவனைக் கூப்பிட்டு காதைப் பிடித்துத் திருகுவாள். "நன்றாய் பழகக் கற்றுக் கொள்" என்பாள்.

போகப் போகத் தாயாரும் தகப்பனாரும் தாம் ஊருக்குப் போகும்போது, தன்னால் உறவுக்காரர்களுக்கு எங்கே அசௌகரியம் ஏற்பட்டு விடுமோ என்று பயந்து அவனை அழைத்துக் கொண்டு போய் பாட்டியிடம் விட்டுவிட்டுப் போவார்கள். அது இன்னும் நரகம். அவன் நிலை எரியும் வாணலியிலிருந்து அடுப்பிற்குள் விழுந்து விட்ட கதைதான். அவள் ஒரு அரக்கி. ஒரு நிமிஷம் சும்மாயிருக்க மாட்டாள்.

கார் அந்தப் பக்கமாய் விர்ரென்று போய்ச் சேர்ந்ததுமே அவள் இடுப்பில் கையை வைத்துக் கொண்டு தன் புராணத்தை அவிழ்த்துவிடத் தொடங்கி விடுவாள்.

''ஆ ஹா! தயாராயிட்டாயா? உங்கப்பாவுக்கு என்னைப் பார்க்க ஓய்வில்லை. ஆனால் நான் உன்னைப் பார்த்துக் கொண்டு தீரணும். இல்லையா? இப்ப ஞாபகத்துக்கு வந்துடுத்து இந்தக் கிழவி ஒருத்தி இருக்கிறது! உங்கம்மா என் மகனை வலையில் போட்டுக் கொண்டு எனக்கு ஆகாமல் செய்திட்டாள்டா! நீ ஒருத்தன் பிறந்துட்டாய் தலைச்சன் பிள்ளை! வா, சாப்பிட்டுத் தொலை. அவங்க எனை மூஞ்சிக்குக் கஞ்சித் தண்ணியை ஊற்றாமல் போனாலும் உன் மூஞ்சிக்கு நான் சோற்றைப் போட்டுத் தொலைக்கணும்டா.''

அவள் சமையலை ருசியாய்த்தான் செய்வாள். ஆனால் சாப்பாடு போடுவது மட்டும் மிக மோசம். தட்டில் சாதத்தையும் குழம்பையும் விசி எறிவாள். ''கொட்டிக் கொள். தின்னு தொலை'' என்பாள். அவனுக்குச் சாப்பாடு இறங்காது.

சில சமயம் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது கிட்டே வந்து உட்கார்ந்து அன்பொழுக நடித்தபடி— ''ஏண்டாப்பா! பரீ! உங்கம்மாவும் அப்பாவும் ஒத்துமையாய் அன்பாய் இருக்காங்களாடா?'' என்று கேட்பாள்.

அவள் மிக அன்பாய் 'அப்பா, அப்பா' என்று சொல்வதைக் கேட்டு அவன் மனம் பொங்கிவிடும். அவள் கேட்டதற்கெல்லாம் பதில் சொல்லிவிடுவான்.

''என்ன? ஒரு தடவைகூட சண்டை போட்டுக்க மாட்டாங்களா?'' துருவி கேட்பாள்.

''ஊஹூம்'' என்று சொன்னான் அவன்.

''வீட்டு அதிகாரமெல்லாம் உங்கம்மா வோடதுதான். எப்பவாவது உங்கப்பாவை ஆலோசனை கேட்டு நடப்பாளா?''

''என்னவோ, எனக்குத் தெரியாது.''

''அன்றைக்கு உங்கம்மாவின் பிறந்தநாள் நடந்ததாமே, உங்கப்பா என்ன தந்தார்டா?''

''அழகான நெக்லெஸ் பாட்டி? எவ்வளவு அழகாய் இருந்தது தெரியுமா!—அம்மா கழுத்தில் போட்டுக் கிட்ட போது ரொம்ப நன்றாயிருக்குன்னு ஃபிரெண்ட்ஸுங்க எல்லோரும் சொன்னாங்க.''

அவள் தலையே இரண்டாய்ப் பிளந்து விடும்போல அவன் தலையில் பட்டென்று ஒரு அடி கொடுத்தாள்.

''சோற்றை ஏண்டா இப்படிக் கீழே வாறியிறைக்கிறாய்,? கழுதை! உங்கப்பன் சொத்துன்னு நினைச்சாயோ? இங்கே இந்தக் குச்சு வீட்டில் ரெண்டு அறைக்கு வாடகை கொடுத்துக்கிட்டு தன்னந் தனியாய் வாழ்ந்துட்டிருக்கேன்டா. எனக்கு யார் இருக்காங்க? யாருமே இல்லை. நான் செத்தாலும் யாருக்கும் அக்கறையில்லை. எல்லோரும் சந்தோஷமாய் சுகமாய் இருக்காங்க. என் தலையில்தான் தெய்வம் இப்படி எழுதி லெச்சுடுத்து, லயிற்றைக்கட்டி வாயைக்கட்டி உங்கப்பனைக் காலேஜில் படிக்க வெச்சேன்டா பாவி! காதலாம் கத்திரிக்காயாம்! காதல் கல்யாணம்னுட்டு என்னிடம் சொல்லாமலேயே உங்கம்மாவை செய்துகிட்டான். என் மகனை ராஜாவாய் வளர்த்தேன். அங்கே போய் உங்கம்மா என்ன மருந்து வெச்சாளோ தெரியலை, அவளுக்கு சேவை செய்திட்டிருக்கான். நாயாய் கூட அழைச்சுட்டுப் போய் சுற்ற வைக்கிறாள். பலே சாமர்த்தியசாலின்னால் அவளைத்தான்டா சொல்லணும்! ஐயோ! ஐயோ! எங்களுக்கு இந்த அழிச்சாட்டியம் எல்லாம் தெரியாதுடா! எங்க புருஷன்கள் எங்களை அடிச்சு சாகடிப்பானுங்க. வீட்டில் உழைக்கிறதைத் தவிர வேறெதுவும் தெரியாது எனக்கு! ஒரு ஊர் தெரியாது, பேர் தெரியாது. ஒரு கோவில் குளங்கூட தெரியாது எனக்கு.''

அவள் ராகம் போட்டு புலம்பத் தொடங்கி விட்டால் அலன் விக்கித்துப் போய் பார்த்துக் கொண்டிருப்பான்.

"நெக்லெஸ் செய்து தந்தானாம்! நெக்லெஸ். செய்ய மாட்டானோ பின்னே? ஆசைப் பெண்டாட்டியாச்சே! எல்லாம் செய்வான். நாளைக்கு என் எலும்புகளைக் கூட மாலையாய் செய்து போட்டு விடுவான். துப்பில்லாத கோழை! அவனை வாயில்லாப்பூச்சியாக்கி, எனக்கு ஆகாமல் செய்திட்டாள் அவள். அடேய்! உங்கம்மா என் உசிரைக்கொண்டு போகப் போகிறாளடா! எப்பப் பார்த்தாலும் காரிலும் விமானத்திலும் ஊர் சுற்றிட்டிருக் கிறாளோனோ? படீரென்று ஏதாவது வெடித்துச் செத் தொழிவாள்."

யராயிருந்தாலும் சரி, தாயை ஏதாவது திட்டினால் அவனால் சகித்துக் கொள்ள முடியாது. சட்டென்று அங்கிருந்த அம்மிக்குழவியைக் கையிலெடுத்துக் கொண்டு, "எங்கம்மாவைத் திட்டுகிறாயா நீ?" —என்று அவள் தலையில் அடித்தான்.

பிறகு பெரிய ரகளையாகி விட்டது. அவளுக்குத் தலையில் பலமாக அடிபட்டு விட்டது. தந்தை வந்து அவனை நையப் புடைத்தார்.

"பெரியவங்க சின்னவங்கன்னு கூட பாக்காமல் அடிக்கலாமா?" என்று திட்டினார்.

வீட்டிற்கு அழைத்து வந்து அறைக்குள் போட்டுப் பூட்டி, இரண்டு நாட்கள் சாப்பாடு போடாமல் தண்டனை கொடுத்தார்.

அம்மாவின் சிநேகிதிகள் வந்து அம்மாவுக்கு இரக்கம் காட்டி— "இந்தக் காலத்துப் பசங்கள் இப்படித்தான் ரொம்பவும் வாய் நீளமாயிட்டாங்க," என்று பசங்களைப் பற்றி ஒருமணி நேரம் பேசித் தீர்த்தார்கள்.

அம்மா, உன்னைப் பாட்டி கொன்றுவிடுவேன்னு திட்டினாங்கம்மா. அதான நான் அடித்தேன். —என்று

ரமிடம் எடுத்துச் சொல்லச் சந்தர்ப்பமே கிடைக்க ல்லை.

மறுநாள் தாயும் தந்தையும் பம்பாய்க்கு கிளம்பிப் ாய்விட்டார்கள். மாடியறை ஜன்னல் வழியாய் அழுது தாண்டே பார்த்தான் அவன். அம்மா இனி திரும்பவும் ப்பொழுதாவதுதான் கண்ணில் படுவாள். அந்த னைவைக் கூட அவனால் தாங்கிக் கொள்ள முடிய ல்லை.

ரங்கய்யன் தாத்தா ஒருத்தனுக்குத்தான் அவன் மேல் ன்பு உண்டு. ஆனால் ஆயா அவனிடம் போக இவனை டமாட்டாள்.

ஒரு நாள் ரங்கய்யன் தாத்தா வரவில்லை. அதற்குப் றகு கண்ணில் படவேயில்லை. 'ரங்கய்யன் தாத்தா ன் வரவில்லை' என்று ஆயாவைக் கேட்டபோது ங்கய்யன் தாத்தா எங்கே இருக்கான் இப்பொழுது? தான் ஹார்ட் அட்டாக்கில் செத்துட்டானே!" என்று சான்னாள்.

அவன் தோட்டக்காரனுடன் சிநேகம் செய்து காண்டான். பூஞ்செடிகளுக்கு அவன் தண்ணீர் ற்றினால் தானும் கூட ஊற்றுவான். அவன் கையால் தாட்டக்காரன் வெள்ளை விருட்சிச் செடியை நட்டான். வன் சந்தோஷத்தால் ஓடியபோது கால் தடுக்கி விழுந்து டம்பெல்லாம் சேறாகிவிட்டது. அப்பொழுதுதான் ம்மா சிநேகிதிகளோடு காரிலிருந்து இறங்கி, லந்து காண்டிருந்தாள்.

அப்பாவிடம் பிற்பாடு— "இவன் அளவுக்கு மீறி லங்களோடு சுற்றி கெட்டுப் போயிட்டிருக்கான்" ன்று புகாரிட்டதை அவனும் கேட்டான். அவன் தாபாவில் படுத்துக் கொண்டிருந்தான். வெறுமே கண் ளை மூடிக்கொண்டு தூங்கிவிட்டதாய் எண்ணிக் காண்டு பேசிக் கொண்டிருந்தார்கள் அவர்கள். அலை லலுக்குக் கேட்டுக் கொண்டுதான் இருந்தன.

''இவனுக்கு ஒரு கெட்ட பழக்கம் வந்திருக்கிறது நம்ப வீட்டு விஷயத்தையெல்லாம் எல்லோருக்கும் போய் சொல்றான். நேற்று நெக்லஸ் விஷயத்தை அம்மாவிடம் சொல்லியிருக்கிறான். பார் இவன் புத்திகெட்ட தனத்தை.''

''அதான் நாலு அறை கொடுத்தேனே நான்?'' என்றாள் அம்மா.

''இங்கே இருந்தால் இன்னும் கெட்டுப் போயிடுவான். நமக்கோ நேரமே இல்லை. ஹாஸ்டலில் போட்டு விட்டால் நல்லது.''

''நானும் அப்படியேதான் நினைக்கிறேன்'' உடனே பப்ளிக் ஸ்கூல் ஒன்றில் ஹாஸ்டலில் சேர்த்து விட்டார்கள்.

தாய் இன்னும் தூரமாகிவிட்டாள். அவள் லீவு நாட்களில் ஏதாவது ஒரு நாள் வீட்டிற்கு வருவாள். அன்றைக்கு அம்மா வீட்டில் இருக்கமாட்டாள். ஒருக்கால் இருந்தாலும் அவள் ரொம்பவும் பிஸியாய் இருப்பாள். சாதாரணமாய் விசாரித்து விட்டுப் பிறகு தன் அறைக்குப் போய்விடுவாள்.

இதற்கு முன்னால் தாயைக் கண்ணாலாவது பார்த்து முடிந்தது. தொலைவிலிருந்து பார்த்தாலும் சந்தோஷமாய் இருக்கும். இப்பொழுது அதுவும் இல்லை. எப்பொழுதும் அவன் வேற்று மனிதர்களுக்கிடையே இருப்பது போலவே தான் இருக்கும்! மற்றவர்களுக்கு அவன் மீது 'ராமேஸ்வரியம்மாவின் மகன்' என்ற தனத்தால் வயிற்றெரிச்சல். அவள் எப்பொழுதாவது ஸ்கூலுக்கு வந்தால் ஸ்கூல் அதிகாரிகள் மதிப்போடு நடத்துவார்கள். இதைப் பார்த்து சகபையன்களுக்கு பொறாமையாயிருக்கும். ராமன் என்று ஒரு பையன் இருந்தான். அவனைப்பற்றிக் கேட்கவே வேண்டாம்.

அவன் தாய் தந்தையர்கள் பணக்காரர்கள். ஆனாலும் சமூகத்தில் பேரும் புகழும் பெற்றிருக்கவில்லை.

ஒருநாள் ராமன் இன்னொரு பையனிடம் அவனைச் சுட்டிக்காட்டி. இளப்பமாய்— ''இவங்க அம்மாவைப் பற்றி எங்கம்மா சொன்னாங்கடா. ரொம்ப ஊர் சுற்றி யாம். குலுங்கித் திரிகிறவங்களாம். ஒவ்வொருத்தரண்டையும் போய் பணத்தையும் பிடுங்கிக்குவாங்களாம்! அவன் இந்த வார்த்தையைக் கேட்டதுதான் தாமதம் ஒரே பாய்ச்சலாய் அவன் மீது பாய்ந்து, அவனைத் தரையில் தள்ளிவிட்டு, கழுத்தைப் பிடித்துத் திருகவே, இதர பையன்கள் வந்து பிரித்தார்கள். அதற்குள் வார்டன் வந்தேவிட்டார். அவர் உடனே அவனுக்கு பனிஷ்மென்ட் கொடுத்தார்.

மாலையில் தாய் வந்தாள். வரும்போதே எரிந்து விழுந்து கொண்டே வந்தாள்— ''நீ எங்கேயிருந்தாலும் எனக்கு மனநிம்மதியேயில்லாமல் செய்திட்டிருக்கிறாய். நான் இப்ப பம்பாயிலிருந்து வந்தேன். அங்கே நாளைக் காலையில் எனக்கு அர்ஜெண்ட் மீட்டிங் இருக்கு... எவ்வளவு தடவை சொல்லியிருக்கேன் உனக்கு? மற்றவங்களோடு மரியாதையாய் நடந்துக்கணும்னு! எங்கே கொண்டு போய்ச் சேர்த்தாலும் எனக்குப் பெரிய தலைவேதனையாய் தயாராகிக் கொண்டிருக்கிறாய்.''

''மம்மீ! அவனை நான் எதுக்காக அடிச்சேன் தெரியுமா?'' என்று சொல்ல வேண்டுமென்ற தவிப்பு, பரபரப்பு!

''ஷட் அப்'' கத்தினாள் அவள். ''நான் இதற்காக உனக்குத் தரப்போகிற பனிஷ்மென்ட் என்ன தெரியுமா? இந்தத் தடவை லீவுக்கு வீட்டுக்கே வரவிடப் போவ தில்லை!''

அவள் சங்கரனை நோக்கித் திரும்பி— 'சங்கரன்! ஹைதராபாத்தில் ஒரு ஹாஸ்டல் இருக்குன்னு சொன்னீங்க இல்லவா?''

''ஆமாம் மேடம். சில டீச்சர்கள் இப்படிப்பட்ட பொல்லாத பசங்களை வழிக்குக் கொண்டு வருவதற்கும், பயிற்சி தருவதற்கும் நடத்திவராங்க. ரொம்ப நல்ல ஹாஸ்டல்! அந்த டீச்சர்கள் எல்லாம் ரொம்பப் பெரிய மனுஷங்க'' என்றான்.

'பரிஷித்தை அதில் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்யுங்க உடனே.''

''அம்மா' அழும் குரலில் அழைத்தான்.

''என் பிளேனுக்கு டயமாயிடுத்து. நான் சாயந்திரத்திற்குள் பம்பாயில் இருக்கணும். உன்னால் எவ்வளவு பணதஷ்டம்னு பார்! நான் உன் வாத்தியாரிடம் போனில் மன்னிப்பு வேண்டிக் கொண்டேன்'' அவள் மளமளவென்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

இப்பொழுதே அவன் 'அம்மா வருவாள், வந்ததுமே அம்மாவிடம் நடந்ததையெல்லாம் சொல்லிவிட்டு நான் இங்கே ஆஸ்டலில் இருக்கப் போவதில்லை அம்மா, உன்னோடு வந்து விடுகிறேன். வீட்டிலேயே இருந்து படிக்கிறேன்' என்று சொல்ல வேண்டுமென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

ராமன் இதர பையன்களோடு சேர்ந்து அம்மாவிடம் கோள்மூட்டி இன்னும் அழவைத்துப் பழி வாங்கிக் கொண்டு விட்டான். இப்பொழுது சங்கரனும் கூட சேர்ந்து கொண்டு விட்டான்.

அம்மாவை மூச்சுவிடக் கூட விடமாட்டான் அவன். அவள் செய்ய வேண்டிய வேலைகளையும் சொல்ல வேண்டிய வேணடிய வார்த்தைகளையும், யோசிக்க ஆலோசனைகளையும் தானே எடுத்துக் கொடுத்துக் கொண்டிருப்பான்.

பரிஷித் பெட்டி படுக்கையோடு பரீட்சை ஆனதும் ஜதராபாத்திற்கு வந்து சேர்ந்தான். மெல்ல மெல்ல

புரியத் தொடங்கிற்று. சங்கரன் சொன்னதெல்லாம் பொய்யே. அது ஒரு போலிச் சங்கம். அவர்கள் சிலபேர் சேர்ந்து பசங்களுக்கு நல்ல பயிற்சியைக் கற்றுத் தருகிறோம் என்று சொல்லிக் கொண்டு ஒரு ஹாஸ்டலைத் தொடங்கி, பணக்காரப் பையன்களை மட்டுமே சேர்த்துக் கொண்டு, பணத்தைக் கறந்து கொண்டிருந்தார்கள். சாப்பாடு சரியாய் போடமாட்டார்கள். பசங்களைப்பற்றி பொருட்படுத்த மாட்டார்கள். கூதந்திரமாய் சுற்ற விட்டு விடுவார்கள்! தாய் தந்தையர்கள் வந்துவிட்டால் மட்டும் மிகவும் அன்பொழுக நடிப்பார்கள். அங்கே அந்தச் சூழ்நிலையே அவனுக்கு ஒத்துக் கொள்ளவில்லை.

'சங்கரன் ஒரு பொய்க்காரன்'... இங்கே இருக்கிற இந்த வாத்தியார் கூட சங்கரனைப் போன்ற போய்க் காரன்தான் அம்மா! எனக்கு இங்கே பிடிக்கவில்லை நான் வீட்டிற்கு வந்து விடுகிறேன்'' என்று கடிதம் எழுதினான். அவள் உடனே திட்டியபடி—' 'சங்கரனைப் போன்ற பெரிய மனுஷனை அப்படி அருவருப்பான வார்த்தைகளில் அவமரியாதைப்படுத்தியதற்குப் பிரசங்கம் தந்து விட்டு, அடங்கியிருக்கும்படி பதில் எழுதினாள். அக்கடிதத்தைக் கிழித்துத் தூள் தூளாக்கிக் காற்றில் பறக்க விட்டான். அங்கேயும் தகறாறு வந்து விட்டது. சொல்லாமல் கொள்ளாமல் ரயிலேறி வீட்டிற்கு வந்து விட்டான். தாய் ஊரிலில்லை. இந்த நாட்டிலேயே இல்லை. ஜெனீவாவில் ஏதோ மீட்டிங் இருந்ததால் போயிருக்கிறாளாம்.

பரிஷித்திற்கு விளையாட்டு அம்மை போட்டிருந்தது. பார்த்துக் கொள்ள யாரும் இல்லை. ஆயா ஊருக்குப் போய் விட்டாள். வீடு முழுவதும் யார் யாரோ இருந்தார்கள்.

உடம்பெல்லாம் தாபத்தைப்போல எரிச்சல். அம்மா அம்மா என்று ஒரே புலம்பல்! அழுகை. தாகம் எடுத்து

எழுந்து வந்தபோது யாருமே தண்ணீர் கொடுக்கவில்லை. அங்கே ஹாலிலேயே கீழே விழுந்து விட்டான்.

''அம்மா'' என்று அழுது கொண்டிருந்தபோது பார்த்தவர்கள் பயந்து போய் பின்னுக்கு ஓடிப்போய் ''ஐயோ! அம்மை போட்டிருக்கு. நம்ப குழந்தைதங் கனுக்கும் ஒட்டிக் கொண்டு விடப்போறதே!'' என்று சிலரும்—''அவங்க பாட்டியிடம் அனுப்பி வைத்துடலாம்'' என்று வேறு சிலரும் தீர்மானித்துக் கொண்டு ஆட்டோவை வரவழைத்து அதில் உட்காரச் சொல்லி அட்ரஸைச் சொன்னார்கள்.

வழியிலேயே தூங்கிப் போய் விட்டான். ஆட்டோக் காரன் எழுப்பியபோது எழுந்திருந்தான்.

கதவைத் தட்டியபோது பாட்டி வந்து திறந்தாள்.

''என்னடா இப்ப வந்து தொலைந்தாய்?'' என்று திட்டினாள்.

''ஜுரமாய் இருக்கு பாட்டீ.''

''என்னால் என்ன செய்ய முடியும்? உங்கம்மாவிடம் போ''—அவள் கதவைச் சாத்தியபோது ஆட்டோக்காரன் எரிந்து விழுந்தான். ''இந்தப் பையனைப் பாரும்மா, எப்படி இருக்கான்னு! நீங்க மனுஷியில்லையா? வா தம்பி, நீ வந்து உள்ளே படுத்துக்கோ'' உள்ளே படுக்க வைத்து விட்டுப் போய்விட்டன்.

அவள் ஜுரமாய் இருந்த அவனைப் பொருட்படுத்த வில்லை. அவளுக்கு அவனைப் பார்த்தால் தன் மகன் நினைவுக்கு வந்து ஆத்திரம் வரும். ''செத்து ஒழி'' என்று நிமிஷத்திற்குப் பத்து தடவை திட்டுவாள். வீட்டிற்குள் போட்டுப் பூட்டிவிட்டுக் கோவிலுக்குப் போய் விடுவாள். பரிஷித்திற்கு மிகப் பயமாய் இருக்கும். அறைச் சுவர் முழுக்க ''மம்மீ—டாடி ஐ லவ் யூ'' என்று

எழுதுவான். எப்படியோ ஒரு வழியாய் அம்மை நோய் தணிந்தது.

தாய் தந்தையர் ஜெனிவாவிலிருந்து திரும்பி வந்தார் கள். ஐதராபாத்திலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் வந்து விட்டதற்கு திரும்பவும் திட்டுக்கள்! ஏச்சுக்கள். அம்மாவின் சிநேகிதிகளின் இரக்கங்கள்.

''பாலம் ரமேஸ்வரிக்கு இதென்ன தலையெழுத்தோ! ஒரே மகன். சொன்ன சொல்லைக் கேட்க மாட்டான். அழவைத்துப் பிடுங்கித் தின்கிறான்.''

பிறகு அவனை ஊட்டியில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். பிறகு பெங்களூர். திரும்பவும் மெட்றாசில் இஞ்ஜினீரிங் காலேஜ். அப்பொழுதுதான் அவனுக்கு விஜய் பரிச்சியமானான். கார்கள் என்றால் அவனுக்குச் சிறுவயதிலிருந்தே பைத்தியந்தான். விஜய்க்கும் அதே போல்தான். இருவரும் ராலியில் பங்கெடுத்துக் கொண்டார்கள். மெட்றாஸ் மோட்டார் ஸ்போர்ட்ஸ் கிளப் பெம்பர் மட்டுமல்ல, ஜாயின்ட் செக்ரட்டரியும் ஆகிவிட்டான். ஸ்போர்ட்ஸ் கிளப்பின் ஆயுள் மெம்ப ராய் ஆனான். அப்பொழுதுதான் ராஜியோடு சிநேகம் ஏற்பட்டது. வாழ்க்கை நன்றாய் இருப்பது போலத்தான் தோன்றிற்று.

ராஜி ஒரு நாள், ''உங்கம்மாவைப் பற்றி...'' என்று அசிங்கமாய் போசினாள். ராஜியை அவன் அடிக்க வில்லை. பெண்ணாயிருந்ததால் சமாளித்துக் கொண்டான். ஆனால் அந்த நிமிஷத்திலிருந்து அவளோடு சிநேகத்தை விட்டொழித்தான்.

ராஜியின் தாய் தந்தையர் அவன் தாய்க்கு போன் செய்தார்கள், திருமணம் செய்து கொள்வதாய் ஆசை காட்டி மோசம் செய்து விட்டான் என்று. அவள் ஹாஸ்டலில் இருந்த அவனுக்குக் கடிதம் எழுதினாள்.

''நீ கடைசியில் இதைக் கூடத் தொடங்கி விட்டாயா? பெண்கள் மனதை மாற்றி விட இப்பொழுதிலிருந்தே ஆரம்பித்துவிட்டாய் போலிருக்கு! அப்படியென்றால் உன் உடம்பில் உங்கப்பாவின் ரத்தம் நன்றாய்தான் ஓடிட்டிருக்கு.''

அந்தக் கடிதம் அவன் மனதில் சூலமாய் தாக்கிற்று. அந்த வருத்தத்திலிருந்து வெகு நாட்களான பிறகு கூட அவனால் தேறிக் கொள்ள முடியவில்லை.

அப்பொழுதுதான் புதிதாய் பரிச்சியமானான் திலீப். ''எல்லா வருத்தங்களும் மாயமாகி விடும். இதைப் போட்டுக் கொள்'' என்று ஒரு பொடியைத் தந்தான். அவன் அதைப் போட்டுக் கொண்ட பிறகு வாழ்க்கையில் என்றுமில்லாத அளவிற்கு உல்லாசமாய் நன்றாய் இருப்ப தாய் தோன்றிற்று. பிற்பாடுதான் தெரிந்தது அது போதைப் பொருள் சம்பந்தப்பட்ட பொடி என்று. ஆனால் அவனுக்கு வெருப்பு ஏற்படவில்லை. இந்த வருத்தத்திலிருந்தும் தனிமையிலிருந்தும் தனக்கு விடுதலை கிடைத்து விட்டதாய் தோன்றிற்று. அது போதும். வருத்தம் என்பதே தெரியாத நிலை! பத்து வயதிலிருந்து தன் கழுத்தில் தொங்க விட்டுக் கொண்டிருந்த ஏதோ பளுவான மூட்டையை இறக்கி வைத்து விட்டாற் போல இருந்தது. லீவுகளில் வீட்டிற்குப் போவதை விட்டு விட்டான். அவனுக்கு இப்பொழுது ஒரு துணை கிடைத்து விட்டாற்போலிருந்தது.

தான் போதைப் பொருளுக்கு அடிமையாகிவிட்ட விஷயம் தெரிந்ததும் வீட்டில் இன்னும் ரகளை அதிகமாகி விட்டது. ஒரு முறை பலவந்தமாய் வீட்டிற்குக் கூட்டி வந்தார்கள். அப்பொழுதே அவனுக்கு இஞ்ஜெக்ஷன் குத்திக் கொள்ள நன்றாய் பழக்கப்பட்டு விட்டிருந்தது. அவன் இன்ஜக்ஷன் குத்திக் கொண்டிருந்தான். தாய் திட்டிக் கொண்டிருந்தாள். தந்தை கத்திக் கொண்டிருந்தார். அவனுக்கு இதொன்றும் தெரியவில்லை. அவர்கள் முகங்கள் விகாரமாய், பெரிய பெரிய மூக்குகளோடும், வாய்களோடும், கண்களோடும் தன்னை நெருங்கி வந்து கொண்டிருப்பது போலத் தோன்றிற்று.

மறுநாள் விழிப்பு வந்தபோது அவனை பாத்ரூமிற்குள் தள்ளிப் பூட்டியிருந்தார்கள். கதவைத் தட்டினான். கத்தினான். கதவை உடைத்தெறிவது போல மோதித் தள்ளியபோது தந்தை வந்து திறந்தார். அவன் உடம்பு தள்ளாடி விழுந்து கொண்டிருந்தது. அடுத்த அறையில் தாய் அழுது கொண்டிருந்தாள். அவன் நேராய் போய் கட்டிலில் உட்கார்ந்திருந்த அவள் காலடியில் சரிந்து விழுந்தான். வெறிபிடித்த தைரியம் வந்துவிட்டது. அவள் புடவைத் தலைப்பை இரு கைகளாலும் அழுத்த மாய் பிடித்துக் கொண்டான். ''மம்மீ! ஐ லவ் யூ! ஐ லவ் யூ!'' பெரிதாய் அழுது விட்டான்.

அங்கு நின்று கொண்டிருந்த சங்கரனும், அம்மாவைத் தேற்றிக் கொண்டிருந்த அவள் சிநேகிதிகளும் இதையெல் லாம் ஒரு நாடகக் காட்சியைப் போல வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒருத்தி சொன்னாள்— ''இவனுக்கு நல்ல பைத்தியந் தான் பிடித்திருக்கு. அந்தப் பைத்தியத்தில் அவனுக்குத் தாய் என்று கூட தெரியவில்லை. கால்களையும் கைகளை யும் கட்டிப் போட்டு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் விட்டுவிடுவது நல்லது.''

அதைக் கேட்டதும் அவன் ஒரே பாய்ச்சலாய் அவள் மீது தாவினான். ''என்ன சொன்னாய் ராட்சசீ! உனக்குத் தெரியுமா?'' அவளை நன்றாய் நையப்புடைத்துக் கொண்டிருந்த போது தாயும் தந்தையும் சங்கரனும் வந்து அவளை விடுவித்தனர். வேலையாள் ஒருத்தனுக்கு அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் அறையில் போட்டுவிட்டு வரும்படி உத்தரவிட்டார்கள்.

அவன் உடனே இஞ்ஜெக்ஷனைக் குத்திக் கொண்டான். இப்பொழுது சுகமாய் இருந்தது. வலி தெரியாத உலகத்தில் மனம் இழுபட்டுக் கொண்டிருந்தது.

பிறகு அம்மாவின் சிநேகிதிகள் எல்லோருமாய் சேர்ந்து அவனுக்குப் பைத்தியம் என்று பட்டம் கட்டி விட்டார்கள். அவனை ஆசுபத்திரியில் சேர்ப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள் அவன் அந்த வீட்டிலிருந்து தப்பித்துக் கொண்டு வெளியேறிவிட்டான். இனி ஜென்மத்திற்கும் அந்த வீட்டைக் கண்ணாலும் பார்க்கக் கூடாது, காலடி எடுத்து வைக்கவும் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டான்.

வீட்டைவிட்டு வெளியே வந்தவன் பின்னால் திரும்பிப் பார்த்தான். ''ஐ ஹேட் யூ மம்மி! ஐ ஹேட் யூ! நான் உனக்குத் தேவையில்லை. உனக்குக் கூட அவங்க தான் வேண்டும். ஐ ஹேட் யூ'' எரிச்சலுடன் எண்ணிக் கொண்டான்.

கைக்கடியாரத்தை விற்று விட்டு, அந்தப் பணத்தைக் கொண்டு கோவாவிற்குப் போய்விட்டான். அங்கே கொஞ்ச நாட்கள் இருந்த பிறகு அதுவும் பிடிக்கவில்லை. பணத்திற்காகப் படகுத் துறையில் கூலியாளாய் வேலை செய்தான். பீச் ரெஸ்டாரெண்ட்டில் சர்வராய் வேலை செய்தான். உடம்பு சரியில்லாமல் போயிற்று. கொஞ்சம் தேறிக் கொண்டான் சின்னச் சின்ன திருட்டுக்களைத் தொடங்கினான். ஒரு சில ட்ரக் அடிக்ட் சிநேகிதர்கள் கிடைத்தார்கள். கும்பலாய் சேர்ந்து ஊர் ஊராய் மாறத் தொடங்கினார்கள் பணம தேவையான பொழுதெல்லாம் ரயில்வே ஸ்டேஷனிலும், பஸ் ஸ்டாண்டிலும், கார்களைச் சுற்றிச் சுற்றி வந்தும் பிச்சையெடுக்கத் தொடங்கினார்கள். பிச்சையெடுக்கத் தொடங்கியதிலிருந்து பணத்திற்கு அவ்வளவு கஷ்டமாய் இருந்ததில்லை. சில சமயம் செத்துப் போகவேண்டும் போலிருக்கும். சகாக்கள் காப்பாற்றினார்கள்.

''எனக்கு யாருமே இல்லை. நான் யாருக்கும் தேவையில்லை'' என்று அவன் அழுதால்— ''அடேய் பையா! நமக்கு நாம் இருக்கிறோம். அது போதும். இன்னொருத்தர் எதுக்கு?''— என்று ஒருத்தன் சொன்னால், இன்னொருத்தன்— ''அடேய் பிரதர், நான் இருக்கேன். உனக்கு நம்மிருவருக்கும் இந்த வானம் இருக்கிறது. இந்த பூமி இருக்கிறது, காற்று இருக்கிறது'' என்று தேற்றுவான். அதெல்லாம் அந்த மயக்கத்தில் சொல்லும் வார்த்தைகள். பிறகு யார் என்ன சொன்னார்கள் என்றெல்லாம் யாருக்குமே ஞாபகமிருக்காது அந்த விதமாய் அவன் வாழ்க்கை ஒரு இருட்டுக் குகையாகிவிட்டது...

''பரிஷித்! வா உள்ளே'' சங்கரன் கத்தினான். பரிஷித்திற்கு ஏனோ திரும்பி ஓடிப்போய் விட வேண்டும் போலிருந்தது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பவும் இந்த வீட்டிற்குள் அடியெடுத்து வைத்திருக்கிறான். அவனைக் கைகளை நீட்டி யாரும் இழுத்து அணைத்துக் கொள்ள இந்த வீட்டிலிருந்து வரவில்லை. இந்த வீட்டில் எந்த மாறுதலும் இல்லை. இந்த வீடு எத்தனையோ பேருக்குப் புகலிடம் தந்திருக்கலாம். ஆனால் அவனை மட்டும் நடுத் தெருவிற்குத் தள்ளி நிறுத்தி லைத்து விட்டது. ஆனாலும் சரி, விநோதமாய் இந்த வீட்டின் மீது அவனுக்கு இன்னும் விருப்பம் இருக்கத்தான் செய்தது

சங்கரன் அதற்குள் வெளியே வந்தான்.

''வா வா! அம்மா குளிச்சிட்டிருக்காங்க. அப்பா கூப்பிடுகிறார்.''

அங்கே தந்தை கட்டிலில் படுத்திருந்தார்.

சங்கரன் ஜன்னல் திரைச் சீலையை இழுத்து விட்டு விட்டுச் சொன்னான். ''ரெண்டு வருஷத்துக்கு முன்னால் கார் ஆக்ஸிடெண்ட் ஆயிற்று. முதுகெலும்பில் அடிபட்டு விட்டது. கட்டிலைவிட்டு எழுந்திருக்க முடியாது''

அதற்குள் அவர் இரு கைகளையும் நீட்டினார். "பரிஷித்!" அந்த அழைப்பு ஓலமாய் இருந்தது. பரிஷித் வினாடி நேரம் அவரையே பார்த்தான். அம்முகத்தில் தனிமையின் கொடுமை! அமைதியின்மை! அவற்றின் அரக்கப் பிடிகளில் சிக்குண்டு சித்திரவதைக்கு ஆளாகிக் கொண்டிருந்த அவர் உள்ளம் அந்த இளைத்த கண்கள் மூலமாகவே தெரிந்தது.

"பரிஷித்" அவர் அழைத்த அழைப்பிற்கு அவனால் கிட்டே போகாமலிருக்க முடியவில்லை. போய் கட்டிலுக்குப் பக்கத்தில் தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டான். அவர் சின்னப்பையனைப் போல, அனைக்கிட்டே இழுத்துக் கொண்டு அழுது தீர்த்து விட்டார்.

"பரிஷித்! என்னை மன்னித்து விடு. நான் ரொம்பத் தப்புச் செய்திட்டேன். அதை உணரும் சமயத்தில் நீ தூரமாகிப் போய் விட்டாய். உன்னைத் தேடிட்டு வருவதற்குள் ளாகவே இந்த ஆக்ஸிடென்ட் ஆகியிட்டுது. என்னை மன்னித்துவிடு, மன்னித்து விடு" அவர் கண்களில் அன்றைக்கு பாட்டியின் கண்களில் தென்பட்ட அதே தனிமைத் துன்பம் தென்பட்டுக் கொண்டிருந்தது. உடல் நலமில்லாதது, தனிமை, அமைதியின்மை! அவர் தளர்ந்து போய் விட்டிருந்தார். "நீ என் கண்ணில் பட்டாயே அதே போதும்! இனி நான் செத்துப் போய் விட்டாலும் பரவாயில்லை. பரிஷித், உன் அம்மாவும் நானும் மாயா உலகத்தில் ஆழ்ந்து உன்னை இழந்து விட்டோம். எங்களை மன்னித்து விடு. நான் ரொம்பத் தப்பு செய்திட்டேன். உன்னைப் புரிஞ்சுக்காமல் போயிட்டேன்."

பரிஷித் மனதில் கடுமை மெல்ல மெல்ல இளகிப் போகத் தொடங்கிற்று. தந்தையை அணைத்துக் கொண்டான். "என்னால் அதிகநாள் உயிரோடிருக்க முடியாது. என்னை விட்டுவிட்டுப் போக மாட்டேன்னு வாக்களி."

"அப்பா!" பரிஷித்திற்குத் தொண்டை அடைத்தது. அவருடைய பச்சாத்தாபம் அவனுக்கு புரிந்து விட்டது.

அதற்குள் வெளியேயிருந்து "சங்கரன்" என்ற அழைப்பு கேட்டது. அவள் குரல்.

"இங்கே இருக்கேம்மா" சங்கரன் சட்டென்று வெளியே போனான்.

"வந்தானா?"

"ஆங்! வந்தானம்மா! அறையில் அப்பாவிடம் உட்கார்ந்திருக்கிறான்."

அவள் அறைக்குள் வந்தாள். வந்ததுமே மகனைப் பார்க்கவில்லை.

கணவன் பக்கமும் பார்க்கவில்லை. கணவனின் கட்டிலுக்கருகில் போய் கட்டில் விளிம்பில் தலையைச் சாய்த்துக் கொண்டு அழத் தொடங்கிவிட்டாள்.

"பரிஷித்! போ, போ, உங்கம்மாவை கிட்டே அணைத்துக் கொள்" என்றார் தந்தை.

பரிஷித்தால் போக முடியவில்லை.

"எனக்குத் தெரியுங்க. நான் அவனை அசிரத்தையாய் நடத்திட்டேன். என்னை அவன் மன்னிக்க மாட்டான்" அவள் அழுகை இன்னும் வலுத்தது.

"மம்மீ" பரிஷித் அவளிடம் போனான்.

"எனக்குத் தெரியாமல் போயிடுத்து. அதென்னவோ, அந்த சேவை, மீட்டிங் எல்லாந்தான் முக்கியம்னு நினைத்துட்டேன். என்ன சொல்றதுன்னே வாய் வரமாட்டேங்குது. உங்கப்பாவுக்கு ஆக்ஸிடென்ட் ஆன பிறகு என் கண்கள் திறந்து கொண்டன. நான் செய்த தப்பு என்னன்னு புரிந்துவிட்டது. பரிஷித்!— என்னை... என்னை" அவள் கோழையாய் பார்த்தாள்.

''அம்மா'' அவன் கிட்டே இழுத்து அணைத்துக் கொண்டான் தாயை.

''இப்ப அதைப்பற்றி யெல்லாம் பேச வேண்டாம்'' அவன் சின்னக் குழந்தையை அணைத்துக் கொள்ளும் தாயைப்போல அவளைத் தேற்றிக் கொண்டிருந்தான்.

கொஞ்ச நேரங்கழித்து அவள் தேம்பிக் கொண்டே சொன்னாள்— ''நீ வந்துட்டாய். எனக்கு இப்போது தைரியம் வந்துடுத்து. என் ஏக்கம் தீர்ந்து விட்டது. என்னைச் சுற்றியிருக்கிற இவங்கள்ளாம் கழுகாய் பிடுங்கித் தின்னுட்டிருக்காங்க என்னை'' என்றாள்.

●:○○○○:●

37

சாம்பவி ஜன்னலில் உட்கார்ந்து கொண்டு வெளியே மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த பசங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். அவர்கள்தான் எவ்வளவு நிர்மலமாய் சிரிக்கிறார்கள்.

பரிஷித் அவர்கள் வீட்டை விட்டுப்போய் சுமார் ஒருமாத காலம் ஆகிவிட்டது. அன்றைக்கு அவளும் அங்கிளும் பலவந்தமாய் அனுப்பி வைத்த பிறகு பரிஷித் திரும்பவும் மறுநாள் சாயந்திரமே திரும்பி வந்தான். ''நான் அங்கே கவனிக்க வேண்டிய வேலைகள் சில இருக்கின்றன. அவை முடிந்ததுமே வந்து விடுகிறேன்'' என்று பரபரப்புடன் போனவன் பிறகு கண்ணில் படவேயில்லை.

அதே வாரத்தில் சாம்பவிக்கு ''அரவணைப்பு இல்லத்தில்'' உத்யோகம் போய்விட்டது. சாம்பவி சமையல்காரனுடன் சேர்ந்து பணத்தை விழுங்கி விட்டதாகவும் பசங்களுக்குச் சரியாய் உணவு அளிக்கவில்லை என்றும் சொல்லி உத்யோகத்திலிருந்து தள்ளி விட்ட காகிதத்தைக் கையில் தந்தார்கள். சாம்பவிக்குத் தலை சுற்றிற்று.

சுமித்ராதேவிக்கு போன் செய்தபோது ஊரில் இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.

வீட்டிற்குத் திரும்பி வந்து மகாலிங்கத்திடம் சொன்னாள். ''வாட் ஈஸ் திஸ் நான்சென்ஸ்?'' என்றார் அவர்.

அவர் உடனே உடை மாற்றிக் கொண்டு அவசரமாய் சுமித்ராதேவியின் வீட்டிற்குப் போனார்.

அவர் ஆவேசத்தைப் பார்த்து விட்டு கூடவே சத்யாலையும் அனுப்பி வைத்தாள் சாம்பவி.

அவள் ஊரில்தான் இருந்தாளாம். ''மிஸ்டர் மகாலிங்கம். உத்யோகத்திலிருந்து நோட்டீஸ் கொடுக்காமலேயே நாங்கள் தள்ளி விட உரிமையுண்டுன்னு முன்கூட்டியே சொன்னோம்'' என்றாள் அவள்.

''நீங்களும் உங்கள் உத்யோகமும்! கோடு ஹெல்! இந்தச் சமையல்காரனுடன் சேர்ந்து பணத்தைச் சூறையாடி விட்டு பசங்களுக்குச் சரியாய் சாப்பாடு போடலைன்னு இதென்ன புகார்? அதை ருசுலாக்க முடியலைன்னால் உங்கள் அத்தனைப் பேர் கால், கைகளையும் உடைத்தெறிந்து விடுவேன்.''

''மிஸ்டர் மகாலிங்கம்! அனாவசியமாய் வார்த்தைகள் தடித்தால் மொதல்ல உங்களுக்குத்தான் அந்தக் கதி நேரும்.''

''சமையல்காரன் பணத்தை விழுங்கி விட்டதற்கு ருசு கிடைத்திருக்கிறது. இதோ சாட்சிகள்'' அவள் சில ரசீதுகளை விட்டெறிந்தாள்.

''அது எங்கள் சாம்பவி தானே பிடித்துத் தந்து உங்களுக்கு ரிபோர்ட் தந்தது''

''அது ரொம்ப சாமர்த்தியமாய் செய்திருக்கும் வேலை அதில் சாம்பவிக்குக் கூட பங்கு உண்டுன்னு சமையல் காரன் சொன்னான்.''

''அதை நீங்கள் நம்பிட்டீங்களா மேடம்?'' அவர் உலுக்கி எடுத்தார்.

''என் விஷயம் தேவையில்லை. இந்தக் கேசு ஒரு முடிவுக்கு வருகிறவரை எல்லோரையும் சஸ்பெண்ட் செய்திட்டோம். இனி பேசாதீங்க. போயிடுங்க?''

''மேடம்! நீங்களா இப்படிப் பேசறீங்க? சாம்பவியை நீங்கள் ஒரு மாதத்திற்கு முன்னாடிகூட எல்வளவு மெச்சினீங்க?''

''வீண் பிரசங்கம் செய்திட்டேன்னு இப்ப வருந்து கிறேன்.''

அவர் மேஜையை ஓங்கி குத்தி விட்டுச் சொன்னார்: ''இல்லை மேடம்! ஒரு நாள் நீங்களே வீணாய் சாம்பவியைச் சிக்கவைத்து விட்டோமேன்னு பச்சாதாபப் படப் போறீங்க.''

அவர் ஆவேசத்தோடு திரும்பி வந்து கொண்டிருக் கையில் சுமித்ரா தேவியின் தம்பி ரகசியத்தைச் சொல்லி விட்டான். ராதிகா அவங்க அம்மா போன் பண்ணிச் சொன்னாங்களாம். அவங்களுக்கு ராமேஸ்வரி அம்மா இந்தக் காரியத்தைச் செய்யச் சொல்லி செய்தி அனுப்பினாங்களாம்.''

''ராமேஸ்வரி அம்மாவா? அவங்க யாரு?'' அவர் கேட்டார்.

''நம்ப பரிஷித்தின் அம்மா'' சத்யா சொன்னார்.

''அவங்களா?'' அவர் வியப்படைந்தார்.

வீட்டிற்குத் திரும்பி வந்தார்கள். மகாலிங்கம் இதையெல்லாம் சொல்லவில்லை. ஆனால் சத்யாவால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

''நடந்ததென்னவோ நடந்து விட்டது. நீங்கள் இனி வருந்தாதீங்க அங்கிள்'' என்றாள் சாம்பவி.

வருந்த மாட்டேம்மா, வருந்த மாட்டேன்! வருந்தவே மாட்டேன். இந்த உலகத்தின் விஷயம் எனக்குத் தெரியாதா என்ன? மனிதன் மனிதப் பண்பைக் காட்டி விட்டானானால் கன்னத்தில் ஓங்கி அறைகிற காலம் இது! மோசடி, ஏமாற்றுவித்தை, சுய நலம் இவை இருக்கிறவங்க மட்டுந்தான் உருப்படறாங்கன்னு இப்பத்தான் தெரிந்தது. பரிஷித்திற்கு நான் மனிதப் பண்பைக் கற்றுக் கொடுத்து விட்டு அவங்கம்மாவிடம் அனுப்பி வைத்தேன். இதுதான் அவள் நமக்குத் தந்திருக்கிற வெகுமதி! திருட்டுப் பட்டத்தை வேறு சுமத்தி உத்யோகத்திலிருந்து நீங்கச் செய்திருக்கிறாள்.

''அங்கிள்! ஆவேசப்படாதீங்க. உங்களுக்கு பி. பி. வந்துவிடும்'' என்றாள் சாம்பவி.

பரிஷித் திரும்பி வருவான் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவன் வரவேயில்லை.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அவன் தந்தை இறந்து விட்டதாய் தெரிந்தது. மகாலிங்கம் கோபத்தைத் தணித்துக் கொண்டு பார்ப்பதற்குப் போனார். மாலையில் திரும்பி வந்தார்.

''பரிஷித் சந்தித்தானா?'' கேட்டாள் சாம்பவி.

''ஊஹூம். எத்தனையோ பேர் ஜனங்கள். எள் விழ எடமில்லை. அவன் உள்ளே எங்கேயோ அம்மாவுக்குப் பக்கத்தில் இருந்தான்.''

அவன் தந்தை இறந்து கூட இருபது நாட்களுக்கு மேல் ஆகிவிட்டன. பரிஷித் வரவில்லை. குறைந்த பட்சம் செய்திகூட சொல்லியனுப்பவில்லை. சந்திரன் சாம்ப விக்கு ஆசிரமத்தில் திரும்பவும் வேலை வாங்கித் தருவதாய் வீட்டிற்கு வந்து சொன்னான். சாம்பவி மறுத்து விட்டாள். மகாலிங்கம் கூட சாம்பவி இனி ஆசிரமத் திற்குள் அடியெடுத்து வைக்கக்கூடாது என்று சொல்லி விட்டார். அவன் ஏமாற்றத்துடன் போய்விட்டான். போகும் முன்னால் அவன் இன்னொன்றையும் சொல்லி விட்டுப் போனான்.

''பரிஷித்தின் தாய் காமஸ்வேரியும் ராதிகாவின் தாயும் நெருங்கிய சிநேகிதிகள். அவங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் செய்து வைத்து விடணும்னு இருக்காங்க. அதனால் சிநேகம்—உறவு ரெண்டும் கலந்து போகும்னு நினைக்கிறாங்க'' என்று சொன்னான். அதைக் கேட் டதுமே சாம்பவி சலனமில்லாமல் அப்படியே நின்று விட்டாள்.

''அது எப்படி நடந்துடும்னு நானும் பார்த்துடறேன்'' என்றார் மகாலிங்கம்.

அவர் திரும்பவும் பரிஷித்தைச் சந்திக்கப்போனார். திரும்பி வந்த அவர் முகத்தைட்பார்த்தபோது சாம்பவிக்கு பயமாயிருந்தது.

''என்னவாச்சு அங்கிள்?'' என்று கேட்டாள்.

''ஒன்றுமில்லை.''

''பரிஷித் தென்பட்டானா?''

''இல்லை பம்பாய்க்குப்போயிருக்கிறானாம்'' முற்றுப் புள்ளி வைத்தாற்போல் சொன்ன அவர் உடைமாற்றிக்

கொண்டு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தார். மார்பின் மேல் கையை வைத்து நீவிக்கொண்டே—''சாம்பவி! நீ இனி பரிஷித்தை மறந்துவிடுவது நல்லது'' என்றார். சாம்பவி பதில் பேசவில்லை. மௌனமாய் இருந்தாள். சமையலறைக்குள் போய் தேநீரைக் கலந்து கொண்டு வந்தாள். அவர் வாங்கிக்கொண்டே—''பாரும்மா, நான் எதையுமே காரணமில்லாமல் சொல்லிடமாட் டேன்னு உனக்குத் தெரியும் அல்லவா?''

''தெரியும் அங்கிள்.''

''இன்றைக்கு பரிஷித் இல்லை. அவங்க அம்மா வந்து என்னோடு பேசினாங்க. எனக்கும் பரிஷித்திற்கும் எந்த விதமான பரிச்சியம் என்று கேட்டாள். நடந்ததை யெல்லாம் சொன்னேன். பிறகு என்னை ஒரு வார்த்தை கேட்டாள்''— அவர் திரும்பவும் மார்பை நீவிக் கொண்டார்.

''என்ன சொன்னாள்?'' ஹீனஸ்வரத்தில் கேட்டாள் அவள்.

அவளுக்கும் அவள் மகனுக்குமிடையே வந்த மனஸ் தாபத்தை நான் கேஷ் செய்துக்கணும்னு பார்க்கக் கூடாதாம். அப்பொழுது என்னவோ மனஸ்தாபம் ஏற்பட்டது. பிரிந்து போனோம். இப்பொழுது அது போய் விட்டது. ஒன்று சேர்ந்து விட்டோம். உங்க ளுக்குக் கல்யாணமே ஆகவில்லையாதலால் குழந்தைகள் மேலுள்ள பாசம் எப்படிப்பட்டதுன்னு சொன்னாலும் புரியாது உங்களுக்கு. என் மகனை என்னிடமிருந்து பிரித்துவிடாதீங்க'' என்றாள்.

எனக்குக் கோபம் வந்து விட்டது. ''வீண் பேச்சுப் பேசாதீங்க மேடம்! இது நீங்கள் பிரசங்கம் பண்ணுகிற சபை இல்லை. பெற்றுவிட்டதால் குழந்தைகளாகி விட மாட்டார்கள். அவங்களை அன்பாய் வளர்க்க வேண்டுமே கவிர...'' என்றேன். எங்களிருவருக்குமிடையே வார்த்

தைகள் தடித்தன. அவள் என்னைப் பணத்திற்காக இரை போட்டிருக்கிறாய் என்றாள். ''மூடுவாயை, ஜாக்கிரதை'' என்றேன். வேலைக்காரர்கள் வந்து அப்பால் தள்ளினார்கள். ''இன்றைக்கு என் மகன் என்று சொல்லிக் கொள்கிறீங்களே நீங்கள், அந்த ஆள் உங்களுக்கு சாம்பவி போட்ட பிட்சை'' என்றேன்.

''அப்படி ஏன் சொன்னீங்க அங்கிள்?'' கலவரத்தோடு சொன்னாள் சாம்பவி.

பின்னே எப்படிச் சொல்றதும்மா? இன்னும் நிறையச் சொல்லணும் போலிருந்தது. ஆனால் அடக்கிக் கொண்டேன். என்னவானாலும் அவள் பரிஷித்தின் தாய்.....''

''சாம்பவி கீழே உட்கார்ந்து அவர் நாற்காலியின் பிடியின் மேல் தலையைச் சாய்த்துக் கொண்டாள். அவர் அவள் தலையைத் தடவிக் கொடுத்தார்.

''சாம்பவி! வரும்போது வழியெல்லாம் இதைப் பற்றியேதான் யோசிச்சிட்டிருந்தேன். அவளோடு பேசிய பிறகு நாம் இனி பரிஷித்தை மறந்து விடுவதே நல்லதுன்னு தோணுகிறது. முக்கியமாய் நீ! ஏன் என்றால் இனி அவன் நம்மோடு இங்கே இருப்பது என்பது நடக்காத காரியம். ஒருக்கால் இருந்தாலும் அவள் உயிரோடு விடமாட்டாள். அப்படிப்பட்ட மனுஷிதான் அவளும்! ஒருக்கால் உன்னை பரிஷித் அந்த வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போனாலும் உன்னால் ஒரு நிமிஷம் கூட அங்கே இருக்க முடியாது. அந்த வீட்டில் அவளுடைய அதிகாரம் அப்படிப்பட்டது. அவளுக்குக் கணவன் போய் விட்டான். கைக்கு அடக்கமாய் தன் மனுஷன் என்று ஒருத்தன் வேணும். அதிர்ஷ்டவசமாய் சரியான சமயத்திற்கு பரிஷித்தும் திரும்பிவந்து விட்டான். பரிஷித்தை இனி அவள் ஒரு நிமிஷம் கூட விடமாட்டாள். அவன் வாழ்க்கையை அவளே திட்டம் போட்டு

டுவாள். அவன் மறுத்தால் சித்திரவதை செய்வாள். ப்படிப்பட்ட மனுஷி அவள். அதனால் பரிஷித்தை றந்து விடுவதே மேல்''— என்றார் அவர்.

அன்றிரவு சாம்பவி தூங்கவில்லை. இத்தனை ளாய் வாசலில் ஏதாவது சின்ன சப்தம் கேட்டாலும் ரிஷித்தான் வருகிறான் என்றெண்ணிக் கொண்டு ஓடிப் பாய்ப் பார்ப்பாள். ஆனால் அவன் வரவில்லை. கடிதம் ட போடவில்லை.

அவன் கண்டிப்பாய் வருவான் என்ற உறுதியான ம்பிக்கை நாளுக்கு நாள் சிதறிக்கொண்டே வந்தது. வ்வொரு நிமிஷமும் அவன் ஞாபகத்தை அதிகரித்துக் காண்டேயிருந்தன. அறைக்குள் வந்தால் நிலைக் ண்ணாடி அவன் ஞாபகத்தை ஏற்படுத்திற்று. முன் றைக்கு வந்தால் அந்த சாய்வு நாற்காலி! அலமாரியில் ல்டு! கார்ராலி! இரவும் பகலுமாய் அவ்வாறு வேலை ய்ததெல்லாம் உண்மைதானா? அல்லது அது ஒரு னவா? கனவாயிருந்தால் அந்த ஷீல்ட் ஏது? தன் டம்பில் பாதியை ரம்பத்தால் அறுத்து விட்டாற்போல ருந்தது. அந்தச் சிரிப்புக்களும் அந்த சந்தோஷமும் ங்கே போய் மறைந்தன.

பரிஷித் தன்னோடு கூட்டிச் சென்று விட்டான்.

ஒரு தடவையாவது நேரில் வந்து விஷயம் இன்ன ன்று சொல்லியிருந்தால் அவள் என்னவாயிருந்தாலும் ழ்ச்சியோடு ஒப்புக் கொண்டிருப்பாளே!

சாம்பவியால் தாளமுடியாமல் போகவே தெருக் டியிலிருந்த கடைக்குப் போய் அவனுக்குப் போன் ய்தாள்.

''இல்லை. பம்பாய்க்குப் போயிருக்கிறான்'' ஓரே ல்.

அங்கிள் சொன்னது உண்மைதான்! அவனை மறந்து
போவதைத் தவிர வேறு வழியில்லை என்று தெரியும்
கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் வழிந்தது

அவன் எவ்வளவு தடவை திருமணம் செய்து
கொண்டு விடுவோம் என்று சொல்லி அவசரப்படுத்
யிருக்கிறான்! எந்தச் சனியன் தன் தலையில் உட்கார்
திருந்ததோ? வேண்டாம் என்று ஒத்தி போட்டாள்
சாம்பவிக்கு இப்பொழுது தோன்றத் தொடங்கிற்று. அ
சனி இல்லை, தம் வழிகள் பிரிந்துபோய் விடவேண்டு
என்று இருந்திருப்பதால் இவ்வாறு நடந்திருக்கும்!

ஒருக்கால் தன் நல்லதற்குத்தான் இவ்வாறு நடந்ததே
என்னவோ? கல்யாணம் ஆகியிருந்தால் இன்னு
எவ்வளவு கஷ்டமாகிவிட்டிருக்கும்? வெளியே எங்கேயே
ஸ்கூட்டர் ஹாரன் சப்தம் கேட்டது. சாம்பவியி
காலடியில் படுத்துக்கொண்டிருந்த புஞ்ஜி சரேலென்
எழுந்து, ஒரே பாய்ச்சலாய் வாசலைத்தாண்டி வெளி
ஓடிற்று. கொஞ்ச நேரத்தில் வாலைச் சுருட்டி
கொண்டே பழையபடியே வந்து சாம்பவியின் காலடி
படுத்துக்கொண்டது.

''பைத்தியமே! பரிஷித் வரானோ என்னவோன்
தானே தவிக்கிறாய் நீ? அவன் இனி வரமாட்டான்
எனக்குத் தெரியும். உனக்குப் புரியாது,'' என்றெண்ண
கொண்டாள்.

மகாலிங்கம் அவளையும் விட தளர்ந்து போய்
டார். எப்பொழுது பார்த்தாலும் அந்தச் சாய்வு நா
கூலியில் அமர்ந்து நிசப்தமாய் யோசித்துக் கொண்டி
பார். அவரிடம் எப்பொழுதும் இருந்துவரும்
கலகலப்பும், ஜோக்கடிப்பதும் எங்கே போயிற்று? பரி
போகும்போது அவ்விருவரிடமும் இருந்து
சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் கூட மூட்டைகட்
கொண்டு போய்விட்டானா?

அவனை மறந்து போவதே நல்லது என்றார்
தாலிங்கம். ஆனால் அது அவ்வளவு சுலபமா? நேற்று
ரை ஈருயிரும் ஒருடலுமாய் இருந்து, சேர்ந்து சாப்பிட்டு,
ர்ந்து சுற்றிவந்த ஆள் இன்று திடீரென்று மாயமாகி
ட்டான் என்றால் எப்படி அவளால் மறக்கமுடியும்?
ந்தக் கார் ராலியும், ஷெட்டில் இரவும் பகலுமாய்
லை செய்து வந்தது, அந்த ஆனந்தத்தைப் பகிர்ந்து
ண்டது இதெல்லாம் பொய் என்று எண்ணிக்கொள்
தவிட, இந்தச் சுவற்றில் தலையை மோதிக்கொண்டு
ந்த நினைவுகளே இல்லாமல் செத்து ஒழிவது மேல்.

ஒரு பக்கத்தில் மகாலிங்கத்தைப் பார்த்தால் அவளுக்கு
யத்தை கசக்கிப் பிழிந்தது தன் எதிர்காலத்தைப்
றி அவர் நினைத்துக் கொண்டிருந்ததெல்லாம் நீர்மேல்
திவைத்த எழுத்துக்கள் ஆகிவிட்டன. அவளுக்குச்
ப்பிடக்கூட பிடிக்கவில்லை. ஆனால் அங்கிளுக்காக
ரியமாய் இருப்பது போல நடித்து வந்தாள். அவரும்
ளைப் போலவே பரிஷித் மனதில் ஏற்படுத்திவிட்டுப்
ன காயத்தை ஊமையாய் தாங்கிக்கொண்டிருந்தார்.
ள் அங்கங்கு அப்படியே சமைந்து போய் உட்கார்ந்து
வாள். இனி வாழ்நாள் பூராவும் இதே போலத்தான்
ந்து போகுமோ?

அன்றிரவு படுத்த பிறகு சாம்பவி தன் மனதைத்
னை உலுக்கி எடுத்துக் கொண்டாள். நான் என்ன
ய்தேன்? பரிஷித்திற்கு ஊன்று கோலாய் இருந்தேன்.
ன் பழைய ஆளாய் மாறினான். தன் மனிதர்களிடம்
போய்ச் சேர்ந்து விட்டான். அதற்காக அவள்
ந்தப்படுவது அநியாயம் இல்லையா? நேற்று பேப்பரில்
ந்தும் அவன் தாயும் சேர்ந்து கவர்னரிடம் வெள்ள
ரண நிதிக்காக நன்கொடை தந்து கொண்டிருந்த
ட்டோ வெளிவந்தது. அவ்விருவரும் தாயும் மகனும்
லவா? வேண்டியவர்கள் மனஸ்தாபம் நீங்கி ஒன்றாகி
டார்கள்! வேற்று மனுஷியாய் அவள் தொலைவிலேயே

இருந்து விட்டாள். இது மிக சகஜம். ஆசிரமத்திலிருந்த
ார்கள் கூட அதே போலதான். சில சமயம் அவர்களுக்கு
வேண்டிய மனிதர்கள் வந்து அழைத்துக் கொண்டுபோய்
விடுவார்கள். தேவி இப்பொழுது நலமாகி விட்டாளாம்,
சந்திரன் வந்து பேபியை ஆசிரமத்திலிருந்து வீட்டிற்கு
அழைத்துச் சென்று விட்டான்.

பேபிக்கும் பரிஷித்திற்கும் என்ன வித்தியாசம்?

ஏன் இல்லை?

இருந்ததெல்லாம் அவள் மனத்திலுள்ள சுய நலந்தான்
பேபியின் பால் அவளுக்குச் சுயநலம் இல்லாததா
வருத்தம் தோன்றவில்லை. இன்னும் மகிழ்ச்சியடை
தாள் பரிஷித் தனக்கே சொந்தமாக வேண்டும் என்
சுயநலம் இருந்ததால்—அது நடக்கவில்லையே என்
வருத்தமாயிருக்கிறது. அவ்வளவுதான் வித்தியாசம்.

பரிஷித் உடல் நலமில்லாதபோது அவனுக்குக் ை
கொடுத்தபோது நீங்கள் என்னுடையவராக வேண்டு
என்று அவள் எந்த நிபந்தனையும் விதிக்கவில்லையே
அவன் அதற்காக வாக்களிக்கவும் இல்லை.

அவள் அவனுக்கு ஒரு சிநேகிதியாய் இருந்
கொள்ள வேண்டுமேயன்றி, அவன் மனக்கோவிலி
பிச்சை ஏந்துபவளாய் உருவாகக்கூடாது இப்பொழு
அவள் அதைத்தானே செய்து கொண்டிருக்கிறாள்.

சாம்பவி தனக்குள் பலவந்தமாய் தைரியத்
உண்டாக்கிக் கொண்டாள். உடம்பில் காயம்பட்டா
சில நாட்களில் காயம் ஆறிவிடும். ஆனால் மனதி
காயம் பட்டால் என்றுமே ஆறாதோ?

38

மகாலிங்கம் ஊரில் இல்லை. அவருக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் ஸ்டேட்ஸில் இருந்த தன் மகனிடம் போய் விடப் போகிறாராம். அவருக்குச் சொந்தமாய் இருந்த மெடிகல் ஷாப்பை உன்னால் பார்த்துக் கொள்ள முடியுமா என்று கடிதம் போட்டிருந்தார். மகாலிங்கத் திற்குக் கூட இந்த ஊரில் இருக்கப் பிடிக்கவில்லை. ''அது குதிர்ந்ததானால் நாம்ப பெங்களூருக்குப் போய் விடலாமா அம்மா?''—என்று கேட்டார்.

''உங்களிஷ்டம் அங்கிள்'' என்றாள் சாம்பவி ஜீவனில்லாமல்.

சாம்பவியைத் தனியாய் விட்டுவிட்டு ஊருக்குப் போகப் பிடிக்கவில்லை அவருக்கு. அவளையும் தன்னோடு வரச்சொன்னார். ஆனால் அவளுக்குப் பிடிக்கவில்லை.

''ரெண்டுமூணு நாள்தானே அங்கிள்? நீங்க போயிட்டு வாங்க'' என்றாள். அவர் விருப்பமில்லாமலேயே புறப் பட்டார்.

''என்னைப் பற்றிக் கவலைப்படாதீங்க அங்கிள். நான் ஒன்றும் சின்னப்பெண் இல்லை. வாழ்க்கையைப் பற்றி எனக்கு நன்றாய்த் தெரியும்'' என்றாள்.

சாம்பவி இப்பொழுது வீடியோ லைப்ரரியில் மகாலிங்கம் செய்து வந்த இடத்திலேயே வேலை செய்து

வந்தாள். அவரேதான் சாம்பவிக்கு அங்கே வேலை வாங்கித் தந்தார். இந்தச் சூழ்நிலையில் சாம்பவி தன் கண்ணெதிரே இருப்பதுதான் நல்லது என்று நினைத்தார் அவர்.

அன்றைக்கு செவ்வாய்க்கிழமை. வீடியோ லைப்ரெரிக்கு அன்று விடுமுறை. அங்கிள் கூட ஊரில் இல்லை. சாம்பவிக்கு சமையல் செய்யக்கூடத் தோன்றவில்லை. பேக்கரிக்குப் போய் பிரெட் வாங்கிக் கொண்டிருந்தாள். அதற்குள் பேக்கரிக்கு முன்னால் ஒரு கார் வந்து நின்றது.

அதிலிருந்து சந்திரன் இறங்கினான். கூடவே பேபியும் இருந்தாள். பேபி சாம்பவியைப் பார்த்துவிட்டு ஓடி வந்து கால்களைக் கட்டிக் கொண்டு ''அக்கா'' என்றாள். சந்திரன் முறுவலுடன் சொன்னான்— ''தினமும் உங்களிடம் வரணும்னு ஒரே ரகளை. மறக்கடிக்க முடியாமல் ரொம்பக் கஷ்டப்படுகிறேன். உங்கள் வீட்டிற்குப் போனோம். பூட்டியிருந்தது. வழியில் பேபி சாக்லெட் வேண்டும் என்றதால் இங்கே நிறுத்தினேன். அதிர்ஷ்டவசமாய் நீங்கள் தென்பட்டீங்க. ஐயாம் ஹாப்பி'' என்றான். எத்தனை நாட்களுக்குப் பிறகு பார்த்தாலும் அவன் நேற்றுப் பார்த்தது போலவே சுவாதீனத்துடன் பழகுவான்.

''வாங்க, வீட்டில் இறக்கிவிட்டு விடுகிறேன்''— என்றான் அவன்.

''இல்லை. நான் இதற்குள் வீட்டிற்குப் போகமாட்டேன். வெளியே வேலையாய் போயிட்டு வருகிறேன்'' என்றாள்.

அவன் கொஞ்சம் பொறுத்துச் சொன்னான். ''உங்களுக்குத் தெரியுமா இந்த விஷயம்? பரிஷித்—ராதிகாவின் கல்யாணத்தைப்பற்றி? சுமித்ராதேவி நேற்றைக்குச் சொன்னாங்க.''

''எனக்குத் தெரியாது'' தலையைத் தாழ்த்திக் கொண்டாள். அக்கண்களில் தென்பட்ட உணர்ச்சியை அவன் பார்ப்பதை அவள் விரும்பவில்லை.

''உங்களுக்கு பரிஷித்தின் மேல் இருக்கிற ஆசை இன்னும் போகலை போலிருக்கு! அவன் ராமேஸ்வரி அம்மாவோடு அடுத்த வாரம் நெதர்லாண்ட்ஸ் போகப் போவதாய் கேள்விப்பட்டேன்''

''நான் போறேன், வேலையிருக்கு'' அவள் வெளியே நடந்தாள். அவள் கேட்காத, விரும்பாத, உற்சாகம் காட்டாத விவரங்களை ஏன் அவ்வாறு சொல்லுகிறான் அவன்?

''வாங்க, எனக்கு இப்ப வேலை இல்லை. நீங்கள் எங்கே இறங்கணும்னு சொல்றீங்களோ அங்கே இறக்கி விட்டு விடுகிறேன்'' என்றான் அவளைத் தொடர்ந்து நடந்து வந்து.

''வா, அக்கா போகலாம்'' பேபி கெஞ்சினாள்.

அம்மூவரும் வெளியே வந்து கொண்டிருக்கையில் அங்கே ஒரு வெள்ளை மாருதி கார் வந்து நின்றது. அதில் டிரைவர் சீட்டிலிருந்து பரிஷித் இறங்கினான். பக்கத்து சீட்டிலிருந்து ராதிகா கூட இறங்கினாள்.

அவன் கையைப் பிடித்துத் கொண்டு அவன் மேல் உராய்ந்து கொண்டு, ஒட்டினாற்போல் நடந்து கொண்டே—செல்லமாய், ''பரிஷித்! எனக்கு ஐஸ் கிரீம் வேணும்'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள். பரிஷித் அப்பொழுதுதான் சாம்பவியைப் பார்த்தான்.

சந்திரன். சாம்பவி, பேபி மூவரும் ஒரு குடும்பத்தைப் போல நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

பரிஷித் சாம்பவியிடம் வந்தான்.

சந்திரன் அவனைப் பார்த்ததுமே, ''ஹலோ'' என்றான்.

''ஹலோ'' என்று பதிலளித்த பரிஷித் சாம்பவியை நோக்கித் திரும்பினான்.

அதற்குள் சாம்பவியின் கண்கள் ஒரு வினாடி பரிஷித்தின் கையைத் தன் இருகைகளாலும் பிடித்துக் கொண்டிருந்த ராதிகாவின் கைகளைப் பார்த்து விட்டன.

சாம்பவிக்கு அதற்குள் தலை சுற்றுவது போலாகி விட்டது. பரிஷித் கூப்பிட்டது அவள் காதில் விழவில்லை.

''நாம்ப போவோமா?'' சந்திரனைப் பார்த்துக் கேட்டாள் அவள்.

''ஷ்யூர். ஓகே. பரிஷித்—ராதிகா பை வரோம்''—என்றான் சந்திரன். ராதிகா கையை ஆட்டினாள். இருவரும் வந்து காரில் உட்கார்ந்து கொண்டார்கள். சந்திரன் காரை ஓட்டிக் கொண்டே சொன்னான்—''நான் சொன்னது பொய்யில்லைன்னு இப்பவாவது தெரிந்ததில்லையா? பரிஷித் மேல் வைத்திருக்கும் எண்ணங்களை விட்டுவிடுவது நல்லது. உங்களுக்குத் தெரியுமா சாம்பவி, நான் தேவிக்கு டைவர்ஸ் தந்துடப் போறேன். அடிக்கடி அவள் செய்ற ரகளையும், அந்த ஆவேசமும், அந்தச் சண்டையும், என் நரம்புகளை யெல்லாம் தளரச் செய்கின்றன. இன்னும் ஆறு மாதம் அவளோடு குடித்தனம் நடத்தினால் உனக்குப் பைத்தியமே பிடித்துடும்னு சொல்லிட்டார் எங்க டாக்டர். நான் டைவர்ஸ் தந்துடப் போறேன்னு சொன்ன பிறகுதான் தேவி வழிக்கு வந்தாள். பேபியைப் பார்த்துக் கொள் கிறேன் என்றும் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வரச் சொல்லியும் ஒப்புக் கொண்டாள். ஆனால் என் மனம் உடைந்து விட்டது! நான் ஒரு வியாபாரி. என் வியா பாரத் தொல்லைகளுக்கு—'' அவன் கையை நீட்டி சாம்பவியின் கையைப் பிடித்துக் கொண்டான். ''உன்னைப் போன்ற மனைவி இருந்தால் மிகச் சந்தோஷ

மாய் இருக்கும். தேவிக்கு டைவர்ஸ் கொடுத்துவிடப் போவது உறுதி, டைவர்ஸ் தொல்லைகள் எல்லாம் முடிந்துவிட்ட பிறகு உன்னிடம் கல்யாண விஷயத்தை எடுக்கலாம்னு இருந்தேன்.''

கார் எந்தப் பக்கமாய் போகவேண்டும் என்று சொன் னாள் சாம்பவி.

''இதென்ன? இது உங்கள் வீடில்லையா?'' என்றான்.

''ஆமாம்.''

''வேறெங்கேயே போகணும்னு சொன்னீங்களே.''

''ஆமாம் மனதை மாற்றிக் கொண்டுவிட்டேன்!'' அவன் சாம்பவியை வீட்டிற்கு முன்னால் இறக்கிவிட் டான். அவன் காரைவிட்டு இறங்கிவரப்போனபொழுது தடுத்துவிட்டாள். ''மன்னிச்சுக்குங்க. எனக்கு உடம்பு சரியாயில்லை. இன்னொருமுறை எப்பவாவது...'' என்று கைகளைக் கூப்பினாள்.

அவன் சாம்பவியின் முகத்தைப் பார்த்தான். அந்த முகம் உண்மையிலேயே வாடிப்போய் களையிழந் திருந்தது.

''ஓ. கே ஷ்யூர். நான் திரும்பவும் வியாழனன்று வருகிறேன். ஓகே! டேக் யுவர் டைம்'' அவன் போக முற்பட்டவன் நின்று, காரிலிருந்து தலையை வெளியே நீட்டி—''சாம்பவி, நான் சொன்னதைப்பற்றி யோசித்துப் பார்ப்பாய் அல்லவா?'' என்றான்.

சாம்பவி பதிலுக்கு இன்னொரு தடலை கைகளைக் கூப்பினாள். பேபி கையை ஆட்டினாள். கார் போய் விட்டது.

சாம்பவி பூட்டைத் திறந்து கொண்டு வீட்டிற்குள் வந்தாள். எதிரே துள்ளிக் குதித்துக் கொண்டு புஞ்சி வரவில்லை. அங்கே அதன் பால் குடிக்கும் கிண்ணம்

அப்படியே இருந்தது. அது உட்கார்ந்து கொள்ளும் நாற்காலி காலியாய் இருந்தது.

சாம்பவிக்கு நிசப்தமாய் ஓவென்று அழுதுகொண்டிருந்தாற்போலிருந்த அந்த வீட்டைப் பார்த்தபோது சட்டென்று துக்கம் பொங்கிக்கொண்டு வரத்தொடங்கிற்று.

அதற்குள் காலடி சப்தம் கேட்டது. சாம்பவி சட்டென்று புடவைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். காலடி சப்தம் நெருங்கி வந்துகொண்டிருந்தது. இதென்னது? சந்திரன் போகவில்லையா? போனாற்போல போய்விட்டு உள்ளே வந்துவிட்டானே, இதென்ன? திரும்பிப் பார்த்தாள். எதிரே பரிஷித் நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததுமே சாம்பவியின் முகம் இன்னும் களையிழந்து விட்டது.

அவன் மிகக் கடுமையாய்—கேலியாய் சொன்னான். ''என்ன அப்படி ஓடிவந்து விட்டாய்? ஏன் அவ்வளவு தளர்ந்து போயிட்டாய்? ராதிகாவை என்னோடு பார்த்தது பொறாமையாய் இருந்ததா?''

சாம்பவியின் கண்கள் படபடத்தன. அவன் எடுத்து வீசிய சூலம் போன்ற வார்த்தைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு மனம் எங்கோ மாறுமூலைக்குத் தாவிப் போய்க்கொண்டிருந்தது. இரவும் பகலுமாய் எரும்பு ஊர்ந்த சப்தத்தைக் கேட்டாலும் கூட அவன்தான் வருகிறான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் வந்துவிட்டான். இதோ தன்னிடம் அன்போடு பேசியிருக்கும் வார்த்தைகள் இவை!

அவன் வேண்டுமென்றே இன்னும் கேலியாய்ச் சொன்னான்—''மொத்தத்தில் நீயும் ஒரு பெண்தான் என்பதை நிரூபித்து விட்டாய். இப்படிப்பட்ட சுபாவம் கொண்டவர்களையே தான் வெறுப்பேன். கேட்டாயா? உங்கு

பெண்களின் போக்கே ஏன் இவ்வளவு நீச்சமாய் இருக்கிறது! ஒரு பெண்ணைப் பார்த்தால் இன்னொருத்தி ஏன் இவ்வளவு பொறாமைப்படுகிறாள்? தன் சகப்பெண் என்ற கௌரவம் கூட இல்லாமல் ஒரு திருடியைப் பார்ப்பது போல பார்க்கிறாளே, ஏன்? நீ ராதிகாவைப் பார்த்தாய் பார், அது ராதிகாவுக்கு இல்லை, எனக்குத் தான் அவமானம்! கேட்டாயா? நீ என்னை இன்ஸல்ட் செய்கிறாய். இன்றைக்கு என் கண்களைத் திறந்து விட்டாய். நீயும் எல்லோரையும் போன்றவள்தான். எனக்கு உன்னைப் பார்த்தால் அருவருப்பாய் இருக்கிறது. உன் சொத்துக்களையெல்லாம் ஏதோ திருடிவிட்டாற் போல—சோர்வாய்—வருத்தமாய்'' அவன் சரேலென்று திரும்பிப் போய் விட்டான்.

சாம்பவியின் உடம்பிலிருந்து உயிர் பறந்துபோய் விட்டாற் போலிருந்தது. யாரை யார் இன்ஸல்ட் செய்து கொண்டிருக்கிறார்கள்?

ராதிகாவை அவள் திருடியைப் போலவா பார்த்தாள்? அவளுக்கு அதனால் என்ன லாபம்?

சாம்பவியின் கண்கள் சூனியத்தைப் பார்த்துக்கொண்டிருந்தன. மனதில் அவமானத் தீ குப்பென்று பரவிச் சூழ்ந்தது. என்னவென்று எண்ணிக் கொண்டிருக்கிறான் அவன்? யாரோடு பேசுகிறோம் என்று மறந்து போய் விட்டானா? இன்னும் ஒரு நிமிஷம் அவன் இங்கே நின்றிருந்தானானால் தெரிந்து போயிருக்கும். வீட்டிற்கு வந்து அவமானப்படுத்தும் உரிமையும் அதிகாரமும் அவனுக்குத் தன் மேல் ஏது? சாம்பவி சிலையாய் நின்று கொண்டிருந்தாள்.

எவ்வளவு நேரந்தான் ஆயிற்றோ தெரியாது. பின்னால் காலடி சப்தம் கேட்டது. சூனியத்தை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்த சாம்பவி இயந்திரமாய் இந்தப் பக்கம் திரும்பினாள். பரிஷித் உள்ளே வந்தான்.

அவன் இரு கைகளையும் நீட்டிக்கொண்டே கிட்டே வந்தபடி சொன்னான்—''சாம்பவி, ஐயாம் சாரி. சத்யா சொன்னார். புஞ்ஜி காருக்கடியில் விழுந்து செத்து விட்டதாம். எனக்குத் தெரியாது'' என்று கிட்டே வந்த போது சாம்பவி சட்டென்று ஓரடி பின்வாங்கி தொலைவில் போய் நின்று கொண்டாள் ஆள் காட்டி விரலைக் காட்டி—''போய் விடுங்கள். இங்கே இன்னும் ஒரு நிமிஷம் இருந்தாலும் இந்தச்சுவற்றில் தலையை மோதிக் கொண்டு செத்துப் போயிடுவேன் நான்.'' சாம்பவியின் கண்களில் சந்தேகத் தீ கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்தது.

அவன் அங்கேயே நின்று விட்டான். ஒரு வினாடி விக்கித்துப் போனவனாய் பார்த்தான்.

''போய் விடுங்கள்'' சாம்பவி பெரிதாய் கத்தினாள்.

அவன் திரும்பி வாசலை நோக்கிப் போய் விட்டான். வாசலைத் தாண்டிப் போகவில்லை. அங்கிருந்த கதவுகளைச் சாத்தித் தாழிட்டு விட்டுத் திரும்பினான், இந்தப் பக்கமாய்.

''சாம்பவி, ப்ளீஸ் நான் சொல்றதைக் கேள்.''

''கேட்க முடியாது'' திரும்பவும் கத்தினாள்

''கேட்டுத் தீரணும்'' அவன் கிட்டே வந்தான் இம்முறை அவன் காலடிகளை உறுதியாய் எடுத்து வைத்துக் கொண்டிருந்தான். சாம்பவி அவனை விட்டு தொலைவிற்குப் போனாள். அவன் ஜேபியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துக் காட்டி—'' சாம்பவி? ப்ளீஸ்! நான் உனக்குக் கடிதம் எழுதினேன். அன்றைக்கு நான் வந்த போது வீடு பூட்டியிருந்தது. ராஜம்மாவிடம் தந்து உன்னிடம் கொடுக்கச் சொன்னேன். அன்றைக்கு உன்னைப் பார்க்க முடியலை. அவள் அன்று சாயந்திரம் ஊருக்குப் போயிட்டாளாம். அவள் மகன் மறந்து

போயிட்டானாம். நான் கேட்டபோது இதோ தந்தான். இதைப் படி.. எனக்கு ஏன் கோபம் வந்ததுன்னு புரிந்து விடும்.''

''நான் படிக்க மாட்டேன். என்னை அருவருத்துக் கொள்கிறவங்களை விட்டு நான் தொலைவில்தான் இருப்பேன்''—சாம்பவி முடிக்கக்கூடவில்லை.

''ப்ளீஸ் சாம்பவி'' அவன் கிட்டே வந்து விட்டான்.

''சாம்பவி சரேலென்று திரும்பி அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொள்ளப் போனாள். அவன் காலைக் குறுக்காய் வைத்து, அவள் கையைப் பிடித்துத் தடுத்து விட்டான்.

இருவருக்குமிடையே உடல் பலத்தை யெல்லாம் பயன் படுத்தியவாறு போராட்டம் நிகழ்ந்தது.

கடைசியில் எப்படியோ ஒரு வழியாய் அவன் அவளைக் கைகளால் சிறைப்படுத்திக் கொண்டான். சாம்பவி பலத்தையெல்லாம் பிரயோகித்து அவன் மார்பில் கையை வைத்துத் தள்ளினாள். அவன் பின்னுக்கு விழுந்தான்.

அதிர்ஷ்டவசமாய் பின்னாடி கட்டில் இருந்தது. கீழே விழுந்திருந்தால் அவன் தலை பிளந்து போயிருக்கும். அவன் கைகள் அவளை விடவில்லை. கிட்டே இழுத்துக் கொண்டேயிருந்தன. கட்டில் மீது குறுக்காய் விழுந்த பரிஷித் தன் மேல் வந்து விழுந்த சாம்பவியை இருக்கமாய் சிறைபடுத்திக் கொண்டான்,

''ப்ளீஸ் சாம்பவி'' என்று மார்பில் அவள் தலையைச் சாய்த்துக் கொண்டான்.

சாம்பவி அவனிடமிருந்து விடுவித்துக் கொள்வ தற்காக அவன் கேசங்களை இரு கைகளாலும் பற்றி இழுத்தாள். ''சாம்பவி! ப்ளீஸ்'' அவன் குரல் குழைவாய்

வந்தது. அவன் கன்னங்களில் மாறி மாறி அடித்தாள். அவன் வாயைத் திறக்கவில்லை. அவன் தோளில் உள்ளங் கைகளால் ஓங்கிக் குத்தினாள். அவன் பொறுமையாய் அதைப் பொறுத்துக் கொண்டானே தவிர எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ''ஐயாம் சாரீ, ஐயாம் சாரீ'' குரல் கம்மச் சொன்னான்.

''உங்களைக் கண்டாலே எனக்கு வெருப்பாய் இருக்கு'' கத்தினாள்

''ஐ லவ் யூ! ஐ லவ் யூ!'' அன்பொழுக வெளிவந்தன அவன் பதில். அவன் கைகள்மட்டும் அவளை விடவில்லை.

ஆதரவில்லாதவளாகி விட்ட சாம்பவிக்கு அழுகை வந்து விட்டது. ஒரு அலையாய் தொடங்கி இறுதியில் பெரும் வெள்ளமாய் மாறிவிட்டது! அவன் கைகள் அவளைக் கிட்டே இழுத்து அணைத்துக் கொண்டன. மெதுவாய் அவளைத் தன்னோடு நெருக்கமாய் பிணைத்துக் கொண்டான். அவன் மனமும் உடலும் இரண்டும் 'நான்—நீ' என்ற வேற்றுமை கிடையாது என்று அவள் மனத்திற்கும் உடலுக்கும் எடுத்துச் சொல்லி கொண்டிருந்தன—புரியும் படியாய்.

* * *

ஏறக் குறைய ஒருமணி நேரம் கழிந்தது.

அவன் இடுப்பைச் சுற்றிலும் கைகளைப் பிணைத்துக் கொண்டு, அவன் அனைப்பில் கட்டுண்டு போயிருந்தாள் சாம்பவி. அவன் போன பிறகு நடந்ததையெல்லாம் அவனுக்குச் சொன்னாள். மகாலிங்கம் நீ பரிஷித்தை மறந்து விடுவதே நல்லது என்று சொன்னதையும் சொன்னாள்.

வியர்வையில் நனைந்து முகத்தோடு ஒட்டிக் கொண்டிருந்த அவள் கேசங்களைக் கோதி விட்டுக் கொண்டே

அவன் சொன்னான்—''அப்பா திடீரென்று போய் விட்டதால் என்னால் உடனே வரமுடியலை. சொத்து சம்பந்தமான விவகாரங்களை சரிசெய்வதாகவும், சங்கரனை அந்த வீட்டிலிருந்து துரத்திவிடுவதாகவும், அந்த விட்டை விட்டுப் போகமாட்டேன் என்றும் அப்பாவுக்குக் கடைசி சமயத்தில் வாக்களித்திருந்தேன் நான். அங்கே அடியெடுத்து வைத்தபிறகு என் நிலைமை கூட்டிற்குள் நுழைந்து விட்டாற்போலவே ஆயிற்று. சாப்பிடக்கூட ஓய்வில்லாதபடி ஒரே வேலை. பரபரப்பு வேலைகள். இந்த ஊருக்கும் அந்த ஊருக்குமாய் அலைவதும், போனில் உரையாடுவதும் போதும் போதும் என்றாகிவிட்டது. ஒரு முறை ஆசிரமத்திற்குப் போன் செய்தேன். நீ வேலையை விட்டுவிட்டதாய் சொன்னார்கள். எனக்குப் புரியவில்லை. வீட்டிற்கு வந்தால் நீ இல்லை. கடிதம் எழுதித் தந்துவிட்டுப் போனேன். சுமித்ராதேவி, நீ சந்திரனின் தூண்டுதலால் வேலையை விட்டுவிட்டாய் என்றும், அவன் தன் மனைவியை டைவர்ஸ் செய்துவிடப் போகிறான் என்றும் உனக்காக ஸ்பெஷலாய் பம்பாயில் பிஸினெஸ் தொடங்கியிருக்கிறான் என்றும், நீங்கள் திருமணம் செய்துகொண்டு அங்கே செட்டில் ஆகவிருக்கிறீர்கள் என்றும் சொன்னாள். நான் அதை நம்பவில்லை. உனக்குக் கடிதத்தில் கூட எழுதினேன்—நான் டில்லிக்குப் போகப் போவதாகவும் பத்து நாட்களில் திரும்பிவருவேன் என்றும் அங்கே போன் செய்யனும் என்றும் சொல்லி போன் நெம்பரையும் எழுதினேன். நீ எனக்குப் போன் செய்யவில்லை. அங்கிருந்து நாக்பூருக்கும் பம்பாய்க்கும் போகவேண்டியிருந்தது. பெங்களூரில் கூட ஏதோ வேலை. முடிவில் ஒருநாள் இங்கே வந்து திரும்பவும் அன்று மாலையில் ஐதராபாத்திற்குப் போகப்புறப்பட்டு—டிரைவரிடம் உன்னையும் அங்கிளையும் கூட்டிட்டுவரச்சொல்லி அனுப்பினேன். அங்கிள் 'எங்களைப்பற்றி மறந்துவிடு' என்று கடிதம் எழுதி அனுப்பினார். எனக்கு ஒன்றும் புரியவேயில்லை. இங்கே வந்து பேசிவிட்டுப் போக நேரம்

இல்லை. அன்றைக்குப் பிரயாணம் கேன்சலாகிவிட்டது. ஐதராபாத்தில் அந்த பார்ட்டியைத் திரும்பவும் சந்திக்க முடியாது. அவசரம், தவிப்பு, முடிந்த வரையில் சிக்கிரமாய் அவ்வேலையைச் செய்துவிட்டு ரிலீஃப் ஆகிவிட வேண்டும் என்ற பரபரப்பு. அங்கே இருந்துவந்த தொல்லைகள், பணத்தொந்தரவுகள், லாயர்கள் ஓ காட்! அதான் சொல்லிட்டேனே! அது ஒரு சிலந்திக்கூடுன்னு! பாட்டியின் வீட்டுச் சுவற்றில் நான் ஜூர வேதனையோடு அம்மா—அப்பா எனறு எழுதியிருந்ததையெல்லாம் உன்னை அழைத்துக்கொண்டுபோய்க் காட்ட வேண்டும் என்றெண்ணியிருந்தேன். இன்னும் என்னென்னவோ எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் நீ சொன்னதைக் கேட்டபிறகு என் தலை சுற்றுகிறது. எங்கம்மா அங்கிலோடு பேசிய விஷயம் எனக்குத் தெரியவே தெரியாது. உத்யோகத்திலிருந்து கூட உன்னை அவங்க தள்ளிவிட்ட விஷயமும் எனக்குத் தெரியாது'' என்றான்.

''எனக்கும் அங்கிளுக்கும் பைத்தியமே பிடித்து விட்டது. இந்த ஊரை விட்டே போயிடலாம்னு இருந்தோம்'' என்றாள்.

அவன் உடனே சாம்பவியை மார்போடு இழுத்து அணைத்துக் கொண்டான். இரு கைகளாலும் முகத்தைத் தூக்கிக் கண்களையே பார்த்தபடி ''தாங்க் காட்! வேறெந்த ஆபத்தும் ஏற்படாமல் போச்சே! நாம் ஒன்று சேர்ந்து விட்டோம் அதற்குள். சாம்பவி, உனக்குத் தெரியுமா? அங்கு எனக்கு ஒவ்வொரு நிமிடமும் உன்னைப் பற்றிய நினைவுதான் வந்து கொண்டிருக்கும். என் வீட்டிறகு நான் எப்பொழுது திரும்பிப் போவேனோன்னு இருக்கும்.''

அவன் கழுத்தில் கருப்புக் கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்த அணுமார் டாலரைக் காட்டி— ''இதொன்றுதான் உன் ஞாபகமாய் என்னிடம் இருந்தது. இதைக் கையால்

தொட்டால் உனக்கருகில் இருப்பது போலவே இருக்கும். உன் மார்பில் நான் முகத்தைப் புதைத்துக் கொண்டாற் போலவே உணர்ந்து கொண்டிருந்தேன். இதையே வேறு யாராவது சொல்லியிருந்தால் 'இதென்ன முட்டாள் தனம்?' —என்று சிரித்திருப்பேன்...'' என்று சாம்பவியின் முகத்திற்கருகில் குனிந்து உதடுகளில் அழுத்தமாய் முத்தமிட்டான்.

* * *

அடுத்த ஒரு மணி நேரத்தில்—

பரிஷித் மேஜைக்கு முன்னால் உட்கார்ந்திருந்தான். சாம்பவி அவன் மடியில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். சாம்பவியின் கையில் தேநீர் கோப்பை இருந்தது. அதை அவன் வாயில் வைத்து ஒரு விழுங்கு அவன் குடித்தால் மற்றொரு விழுங்கு அவள் குடித்துக் கொண்டிருந்தாள்.

அவன் கடிதம் எழுதிக் கொண்டிருந்தான். பரிஷித்தின் முகம் இப்பொழுது மிக அமைதியாய் இருந்தது. அக்கடிதத்தை எந்த பரபரப்பும் ஆவேசமும் இல்லாமல் மிக நிதானமாய் எழுதிக் கொண்டிருந்தான். உண்மையை நிலை நாட்டுவதில் மனத்துணிச்சலோடும் நம்பிக்கையோடும் சற்றும் தயங்காமல் அடுத்தவருக்கு எழுதிக் கொண்டிருந்தாற்போல இருந்தது.

அவன் எழுதிக் கொண்டிருந்தான்—

''மம்மீ!''

''நானும் சாம்பவியும் திருமணம் செய்து கொள்ளப் போகிறோம். எனக்குப் புனர்ஜென்மம் கொடுத்த சாம்பவியை என்னிடமிருந்து பிரிக்க வேண்டுமென்று எனக்குத் தெரியாமல் முயன்று, நீ சற்றும் மாறவில்லையென்றும், என்னைப் பற்றிக்

கொஞ்சமும் ஆலோசித்துப் பார்க்கவில்லை என்றும் குரூவாக்கி விட்டாய். தாங்க்யூ! நீ பாறிவிட்டாய். என்றெண்ணி, உனக்கு ஒரு அவகாசத்தைத் தரவேண்டு மென்று முயன்று கொண்டிருந்த என் கண்கள் எனக்குத் தீராத நஷ்டத்தை ஏற்படுத்தித் தருவதற்குள்ளாகவே விழித்துக் கொண்டு என்னைக் காப்பாற்றி விட்டன.

நீ சிறுவயதில் என்னைப் பற்றி யோசிக்கவில்லை. மரியாதை—புகழ் இவற்றிலேயே மூழ்கிப் போய் விட்டிருந்தாய். பல ஆண்டுகள் கழிந்தன. இப்பொழுதாவது உனக்கு மனிதர்களின் மதிப்பும் வேண்டியவர்களின் அருமையும் தெரிந்திருக்கும் என்று எதிர்பார்த்தேன். அது தவறுதான்! என்னை உனக்கருகில் இருக்க வேண்டும் என்று விரும்பினாய். உண்மைதான். ஆனால் எதற்கு? நான் மகனாய் இல்லை! எனக்குத் தாயாய்! நாம் நமக்கே தெரியாமல் இழந்து போய்விட்ட பந்தத்தைத் திரும்பவும் திருத்தி சரியாய் அமைத்துக் கொள்வதற்காக இல்லை! உன் வாழ்க்கையில் சங்கரன் ஒரு தலைவலியாய் மாறி விட்டான். அவனை அப்புறப்படுத்திவிட்ட பிறகு உனக்கு யாராவது ஒரு ஆள் பக்கபலமாய் இருக்க வேண்டும். அது நான்தான். அதனால்தான் எனக்குத் தெரியாமல் என் மனதைப் புரிந்துகொள்ளாமல் ராதிகாவோடு என் திருமணத்தை நடத்தி வைத்துவிட வேண்டும் என்றும் சாம்பவியை தொலைவிற்குப் பிரித்து வைத்துவிட வேண்டும் என்றும் முயற்சித்தாய். திரும்பவும் என்னை ஒரு மனிதனாய் மாற்றி உனக்கு முன்னால் அனுப்பி வைத்திருக்கும் சாம்பவிக்கு நீ நன்றி செலுத்த மறந்துவிட்டாய்.

நீ மாறவில்லை அம்மா! சிறுவயதில் உன்னைப் பார்த்து எனக்கு மிகவும் துக்கம் வரும். ஆவேசம் வரும். இப்பொழுது எதுவும் ஏற்படுதில்லை. அவர்களின் இஷ்டம்போல் அவரவர்கள் வாழ்க்கை என்று தோன்றுகிறது. அந்தப் பேரும் புகழும் அந்தக் கானல்நீரைத்


தொடர்ந்து ஓடும் ஓட்டமும் உனக்கு மிகவும் பிடித்த மானவை. அதுதான் வாழ்க்கை என்றெண்ணி விட்டாய். அதற்காக உன்னை நான் விமரிசிக்கவில்லை. பாசம் இல்லாததற்காக உன்னைப் பற்றி தப்புச் சொல்லவும் இல்லை. ஆனால் அந்தச் சந்தடியில் உன் மகனைப்பற்றி மறந்துபோய் விட்டாயே, அதுதான் எனக்கு வருத்தமாய் இருக்கிறது.

நாம் யாரை நேசிக்கிறோமோ, யாரிடம் நெருக்கமாய் இருக்க வேண்டும் என்று நினைக்கிறோமோ, அவர்களுக்கு நம்மைப்பற்றி யோசிப்பதற்கு டைம் இருக்காது என்றும், நம்மைப் பற்றிய நினைவே இருக்காது என்றும் தெரிந்தால் அந்த ஆள் மட்டும் என்ன செய்வான்? சில நாட்கள் வருந்துவான். தளர்ந்து போவான்! பிறகு அந்த நபரை விட்டு தொலைவிற்குப் போய்விடுவான். நானும் அதையேதான் செய்து கொண்டிருக்கிறேன். இன்னொரு முறை உனக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். உன் மேல் எனக்கு எந்தக் கோபமும் இல்லை. உன் வாழ்க்கையின் வேகத்தை நான் அறிவேன். இதில் சிலர் மனதை இழந்து மரக்கட்டைகளாகி விடுவார்கள். அவர்களைத் தப்புச் சொல்லி லாபமில்லை. இக்காலத்தில் மனிதனை எதிர்நோக்கியிருக்கும் தவிப்பும் ஆர்வமும் அப்படிப் பட்டவை.

நானும் சாம்பவியும் திருமணம் செய்து கொள்ளப் போகிறோம். நீ இந்தக் கானல்நீரை விட்டு விட்டு, ராமேஸ்வரியாய் இல்லை ஒரு சாதாரணத் தாயாய் வந்தால் உங்களை நாங்கள் என்றும் நேசிப்போம், கௌரவிப்போம். இதைவிட வேறென்ன சொல்ல முடியும் அம்மா என்னால்? நான் உன்னை துவேஷித்து, வெறுத்து ஒதுக்காமல், உன்னைப் புரிந்துகொண்டு தொலைவில் இருந்துகொள்ள விரும்புகிறேன். எனக்குத் தெரியும் உனக்கு நான் ஏமாற்றத்தை உண்டாக்கி

விட்டேன் என்று! என்னைப் புரிந்துகொள்வாயோ, கோபித்துக் கொள்வாயோ, ஆவேசப்படுவாயோ அது உன் இஷ்டம்! இந்த உலகத்தில் ஆணை நல்லவனாக்கவும் பைத்தியமடிக்கவும் பெண் ஒருத்தியால்தான் முடியும் என்று எண்ணுகிறேன்.

கஷ்டமானாலும், சுகமானாலும், வருத்தமானாலும், ஆனந்தமானாலும் எதுவாயிருந்தாலும் சாம்பவியோடு தான் எனக்கு ஆனந்தம். ஏனெனில் என் மனம் அவளுக்கு மட்டுந்தான் தெரியுமாதலால்! அவள் நிழலில் ஒருநாளும் 'தனிமை' என்ற அரக்கனோடு நான் போராட வேண்டியிருக்காது ஆதலால்! வாழ்க்கையில் கணவன்—மனைவி தாய்—தந்தையர்—சிநேகிதர்கள் என்றபலமான உணர்ச்சியின் பிணைப்பிற்கு இந்த ''ஒருத்தருக்கொருத்தர் துணையாய் இருப்பது'' என்ற பாவனைதான் அடிப்படை வெற்றிக்குக் காரணம் என்று நினைக்கிறேன்—உன் பரிஷித்.



எண்டமூரி வீரேந்திரநாத்

சுசீலா கனகதுர்கா எழுதிய நாவல்கள்

பிரியாத நிழல்	36 00
வஜ்ர கவசம்	42 00
நம்பிக்கை வென்றது	45 00
உன்னைவிட மாட்டேன்	58 00
மூன்று முடிச்சுகள்	38 00
அவள் செதுக்கிய சிற்பம்	27 00
முள்பாதை	80 00
லேடீஸ் ஹாஸ்டல்	48 00
ஜென்ம பந்தம்	32 00
வித்தியாசமான தண்டனை	34 00
இ. பி. கோ. 84	35 00
பூவரசம்பூ	27 00
கார்த்திகை தீபம்	32 00

இன்னும் 23 நிமிடம்	32	00
ராஜமுத்திரை	34	00
விடிவெள்ளி	38	00
விலகிய மேகம்	20	00
இதுதான் கடைசி நேரம்	31	00
நச்சு வளையம்	46	00
பர்ணசாலை	35	00
அக்கினிப் பிரவேசம்	50	00
மனைவி குணவதி சத்துரு	40	00
பனிமலை	44	00
மூன்றாம் ஆள்	21	00
கண்சிமிட்டும் விண்மீன்கள்	31	00
மௌனப் போராட்டம்	30	00
சிவதாண்டவம்	46	00
பாரீஸில் விபரீதம்	19	00
புஷ்பாஞ்சலி	30	00

○ ○ ○